# சங்கப் பனுவல்:
# கற்றல், கற்பித்தல் முறைகள்

சென்னைப் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்காக
அளிக்கப்பெறும் ஆய்வேடு


ஆய்வாளர்
**ம.உமாமகேஸ்வரி,**
எம்.ஏ., எம்.பில்., எம்.எட்., எம்.பில்.,

நெறியாளர்
முனைவர்.ப.டேவிட் பிரபாகர்



தமிழ்த்துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி,
தாம்பரம், சென்னை—600 059
நவம்பர் - 2017

**டாக்டர். ப . டேவிட் பிரபாகர்,**
**இணைப் பேராசிரியர் - தமிழ்த்துறை,**
சென்னைக் கிறித்தவக் கல்லூரி,
தாம்பரம், சென்னை–600 059.

## ***நெறியாளர் சான்றிதழ்***

**சங்கப் பனுவல்: கற்றல், கற்பித்தல் முறைகள்** என்னும் தலைப்பில் அமைந்துள்ள இந்த ஆய்வேடு ம.உமாமகேஸ்வரி என்பவரால் சென்னைப் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்காக உருவாக்கப்பட்டது. இந்த ஆய்வேடு சென்னைக் கிறித்தவ கல்லூரி தமிழ்த்துறையில் ஆய்வு செய்த காலத்தில் ஆய்வாளரின் சொந்த முயற்சியால் உருவானது என்றும் இந்த ஆய்வு இதற்கு முன் வேறெந்த வகையான ஆய்வுப் பட்டத்திற்கும் அளிக்கப்படவில்லை என்றும் சான்றளிக்கின்றேன்.

இடம் - தாம்பரம் (ப.டேவிட் பிரபாகர்)

நாள் - மேற்பார்வையாளர் கையொப்பம்

துறைத்தலைவர் பரிந்துரை

**ம.உமாமகேஸ்வரி, எம்.ஏ., எம்.பில்., எம்.எட்., எம்.பில்.,**
**முனைவர் பட்ட ஆய்வாளர் - தமிழ்,**
சென்னைக் கிறித்தவக் கல்லூரி,
தாம்பரம், சென்னை–600 059.

## ***ஆய்வாளர் உறுதிமொழி***

**சங்கப் பனுவல்: கற்றல், கற்பித்தல் முறைகள்** என்னும் தலைப்பில் அமைந்துள்ள இந்த ஆய்வேடு என்னால் (ம.உமாமகேஸ்வரி) சென்னைப் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்காக உருவாக்கப்பட்டது. இந்த ஆய்வேடு சென்னைக் கிறித்தவ கல்லூரி தமிழ்த்துறையில் ஆய்வு செய்த காலத்தில் என் சொந்த முயற்சியால் உருவானது என்றும் இந்த ஆய்வு இதற்கு முன் வேறெந்த வகையான ஆய்வுப் பட்டத்திற்கும் அளிக்கப்படவில்லை என்றும் உறுதியளிக்கின்றேன்.

ஆய்வாளர் கையொப்பம்

# நன்றியுரை

அனைத்தும் தன்னுள் அடக்கி, என்றும் மாறா இளமையோடு காட்சியளிக்கும் **என் தமிழ் அன்னைக்கு** என் முதல் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய இந்த முனைவர் பட்ட ஆய்விற்கு வாய்ப்பு அளித்து என் ஆய்வு உருவாகக் காரணமாக இருந்த **சென்னைக் கிறித்துவக் கல்லூரி முதல்வர், முனைவர். இர.வி.அலெக்சாண்டர் ஏசுதாசன்** அவர்களுக்கு என்னுடைய முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய இந்த முனைவர் பட்ட ஆய்வு சிறப்பாக அமைய எனக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்த **சென்னைக் கிறித்துவக் கல்லூரி, தமிழ்த்துறைத் தலைவர், முனைவர். ஞான சந்திர ஜான்சன்** அவர்களுக்கு என்னுடைய இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது முனைவர் பட்ட ஆய்விற்கு வாய்ப்பளித்து, இந்த ஆய்வினைத் தொடங்கியது முதல் உருவாக்கி முடிக்கும் வரை எனக்கு உறுதுணையாய் இருந்து, எனக்கு பலவகையில் வழிகாட்டி, இந்த முனைவர் பட்டத்திற்கு அடித்தளமாகவும் ஆதாரமாகவும் விளங்கும், எனது அன்பிற்கும் மரியாதைக்குமுரிய நெறியாளர் **சென்னைக் கிறித்துவக் கல்லூரி, இணைப்பேராசிரியர், முனைவர்.ப. டேவிட் பிரபாகர்** அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னை இந்த நிலைக்கு உயர்த்தி, என்னுடைய முனைவர் பட்டத்திற்கு வேராக இருந்து, என்னை ஊக்குவித்த **எனது அன்பு கணவர் திரு.ர.ராஜேஷ்குமார்** அவர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆய்வினைச் செய்து முடிக்கும் வரையில், பல இன்னல்களை எனக்காக ஏற்றுக் கொண்டு, எனக்கு உதவி செய்த **எனது மகள்கள் செல்வி ரா.உ. தர்ஷினி மற்றும் செல்வி ரா.உ. தனிஷ்கா** அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த ஆய்வின் பின்புலமாக இருந்து, எனக்கு பலவகையில், பல நேரங்களில் உதவி செய்து, என்னை ஊக்குவித்த, **எனது உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைத்து நல்உள்ளங்களுக்கும்** என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# உள்ளடக்கம்


| இயல் | ஆய்வுத்தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | ஆய்வு அறிமுகம் | 1 |
| 1 | பள்ளிக்கல்வியில் சங்க இலக்கியங்கள் | 6 |
| 2 | சங்க இலக்கியங்கள்: கற்றல் கற்பித்தல் முறைகள் | 61 |
| 3 | சங்க இலக்கியங்களைக் கற்றல், கற்பித்தல் - களஆய்வு மதிப்பீடு | 137 |
| | நிறைவுரை | 197 |
| | துணைநூல்கள் | 203 |
| | பின்னிணைப்புகள் | 213 |

1. வினாநிரல்
2. மாதிரிக்கூறுகளின் அளவுகள்
3. வெளியிட்ட கட்டுரைகளின் நகல்கள்
4. சோதனைக் கணக்கீடுகளின் விபரம்

## சுருக்கக் குறியீடுகள்

| | | |
|---|---|---|
| அக. | - | அகநானூறு |
| அகப் | - | அகப்பொருள் |
| பரி. | - | பரிபாடல் |
| புற. | - | புறநானூறு |
| கலி. | - | கலித்தொகை |
| குறு. | - | குறுந்தொகை |
| தொல். | - | தொல்காப்பியம் |
| ஐங். | - | ஐங்குறுநூறு |
| ப. | - | பக்கம் |
| பக். | - | பக்கங்கள் |
| பா.நூ. | - | பாடநூல் |
| ச.ப. | - | சங்கப் பனுவல் |
| மேலது. | - | மேலே குறிப்பிட்ட நூல் |

.

## *ஆய்வு அறிமுகம்*

தமிழ் மொழிக் கல்வியின் மேம்பாடு குறித்து சிந்திப்பதும் ஆராய்வதும் தமிழ் வளர்ச்சிக்கு இன்றியமையாதவை. தமிழ் மொழிப் பாடத்தில் செய்யுள் இலக்கியம் உயிர் நிலையான பகுதியாகும். எனவே ஒவ்வொரு வகுப்புக்கும் அந்தந்த வகுப்பு நிலைக்கேற்ற செய்யுள் பகுதிகள் தேர்ந்தெடுக்கப் பெற்று பாடமாக வைக்கப்பெற்றுள்ளன.

தமிழில் பழமையான இலக்கியமாகக் கருதப்படுவது சங்க கால இலக்கியங்களே ஆகும். இத்தகைய பழமையான, செறிவு மிகுந்த செய்யுள்களை மாணவர்கள் கற்பதன் மூலம், தமிழ்க் கல்வியில் சிறந்த மேம்பாட்டை அடைய முடியும். எனவே, கற்றலில் ஈடுபடும் மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் சங்க இலக்கியங்கள் பற்றிய ஆழ்ந்த அறிவைப் பெற்றிருப்பதோடு மட்டுமல்லாமல், அவற்றைக் கற்பிக்கும் நோக்கங்களையும் முறைகளையும் அறிந்திருத்தல் வேண்டும்.

இந்த வகையில் மாணவர்கள் மேற்கண்ட இலக்கை அடைவதற்கு, ஒவ்வொரு வகுப்பிலும், இடம்பெறும் சங்க இலக்கியப் பாடல்கள், அவற்றை ஆசிரியர்கள் கற்பித்தலுக்கு மேற்கொள்ளும் முறைகள், மாணவர்களின் ஈடுபாடு ஆகியவற்றை ஆய்ந்தறிய வேண்டியது நமது கடமையாகும்.

### ஆய்வு தலைப்பு

சங்கப் பனுவல்: கற்றல், கற்பித்தல் முறைகள்

### ஆய்வின் தேவை

சங்க இலக்கியங்கள் பல்வேறு கோணங்களில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. ஆயினும், சங்க இலக்கியப் பாடல்கள் குறித்து கற்றல் கற்பித்தல் நோக்கில் எந்த ஆய்வும் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை என்பதால் இவ்வாய்வுத் தலைப்பு தெரிவு செய்யப்பட்டது.

### ஆய்வின் நோக்கம்

சங்க இலக்கியப் பாடல்களை மாணவர்கள் முழுமையாகக் கற்பதற்கு, அவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். எனவே, சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள், சங்க இலக்கியங்களைச் சரியான கருத்துச் செறிவோடு கற்பிக்கின்றனரா? இன்றைய மாணவர்களுக்கு ஏற்றவாறு

கற்பித்தல் முறைகளைப் பின்பற்றுகின்றனரா? அவை மாணவர்களின் ஏற்புக்கு உகந்ததாக உள்ளதா? ஆகிய கேள்விகள் எழுகின்றன. எனவே, சங்க இலக்கியப் பனுவல்கள் குறித்த கற்றல், கற்பித்தல் முறைகளைக் கண்டறியும் நோக்கில் இந்த ஆய்வானது நடத்தப்பட்டுள்ளது.

**ஆய்வு வரையறை**

தமிழகச் சூழலில் சங்க இலக்கியப் பாடல்கள் 6ஆம் வகுப்பிலிருந்து மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன. எனவே, 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையுள்ள தமிழ்ப் பாடநூல்கள் இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பள்ளி, வகுப்பு, வயது, அனுபவம், பள்ளி அமைவிடம் ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு, அவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் வழி, சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் நோக்கம், கற்பிக்கும் முறைகள், துணைக்கருவிகளின் பயன்பாடு, மதிப்பீடு செய்தல், கற்றல் வெளிப்பாடு முதலியனவற்றை ஆராய்ந்து வெளிப்படுத்துவதை இவ்வாய்வு வரையறையாகக் கொள்கிறது.

**ஆய்வுத் தரவு**

ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பள்ளிப் பாடநூல்களில் இடம்பெற்றுள்ள சங்கப் பாடல்களின் வருகை, பகிர்வு, நோக்கம், பயிற்சிகள் ஆகியன பற்றிய தரவுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

ஆய்வுத் தலைப்புக்கு ஏற்ற தரவுகளைத் திரட்ட விளக்க-நோக்க அடிப்படைத் தேர்வு முறையில் வினா நிரல் பயன்படுத்தப்பட்டது. இதில் பள்ளிக்கல்வியில் சங்கப் பனுவல்களைக் கற்றல் கற்பித்தல் நோக்கில் ஆய்வாளரால் உருவாக்கப்பட்ட 50 வினாக்கள் இடம்பெற்றுள்ளன. வினா நிரல் ஆம்/இல்லை என்ற முறையில் விடையளிக்கும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது.

**ஆய்வு முறை**

6 முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள பாடநூலில் இடம்பெற்றுள்ள சங்க இலக்கியப் பனுவல்கள் உள்ளடக்கப் பகுப்பாய்வு அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மேலும், கற்றல் கோட்பாடுகள், உத்திகள், கற்பித்தலில் அறிந்திருக்க வேண்டிய பொதுப்பண்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் சங்க இலக்கியங்களின் கற்றல் கற்பித்தல் முறைகள் ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளன.

தகவலாளிகளிடமிருந்து வினாநிரல் மூலம் பெறப்பட்ட விடைகளை ஆசிரியர்களின் பின்புலம் மற்றும் கற்பித்தல் முறைகளோடு தொடர்புபடுத்தி புள்ளியியல் முறையில் கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இக்கணக்கீட்டில் மாறுபாட்டுப் பகுப்பாய்வு (ANOVA) முறையும் ‘t’ வகைச் சோதனை முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. (பார்க்க: பின்னிணைப்பு-4)

**ஆய்வுப் பகுப்பு**

இவ்வாய்வு ஆய்வு முன்னுரை, ஆய்வு முடிவுரை நீங்கலாகப் பின்வரும் மூன்று இயல்களைக் கொண்டுள்ளது.

**இயல் - 1 : பள்ளிக் கல்வியில் சங்க இலக்கியங்கள்**

**இயல் - 2 : சங்க இலக்கியங்கள்: கற்றல், கற்பித்தல் முறைகள்**

**இயல் - 3 : சங்க இலக்கியங்கள் கற்பித்தல் முறைகள் மதிப்பீடு**

**ஆய்வு முன்னுரை** ஆய்வின் இன்றியமையாமை, ஆய்வின் நோக்கம், ஆய்வின் வரையறை, ஆய்வுத் தரவு, ஆய்வு முறை, ஆய்வுப் பகுப்பு ஆகியவற்றைக் கொண்டதாக அமைகிறது.

**பள்ளிக்கல்வியில் சங்க இலக்கியங்கள்** என்ற தலைப்பில் அமைந்த முதல் இயலில், இலக்கியக் கல்வியின் வளர்ச்சியும் பள்ளிக் கல்வியில் இலக்கியங்களின் பங்களிப்பும் விளக்கப்பட்டுள்ளன. பின்பு, சங்க இலக்கியங்கள் பள்ளிப் பாடநூல்களில் இடம்பெறுவதன் இன்றியமையாமையும் நோக்கங்களும் விளக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து இன்றைய பள்ளிக் கல்வியில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள தமிழ்ப் பாடநூல்களில் உள்ள சங்க இலக்கியங்கள் இடம்பெற்றுள்ள விகிதம், அமைப்புமுறை, ஆகியன ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளன. பின்பு, பாடநூலில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு பாடலும் பல்வேறு பண்புக்கூறுகளின் அடிப்படையில் ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளது. அதில், பாடலின் பன்முகக்கூறுகள், பாடலின் விளக்கம், பாடலின் விழுமங்கள், பாடலுக்கான பழகுசெயல்கள், பாடல் இடம்பெற்றதன் நோக்கம், கற்றல் பொருளின் தரம், பாடலுக்கும் இணைப்பாடங்களுக்கும் உள்ள தொடர்பு, பாடல் தொடர்பான விளக்கம் ஆகிய தலைப்புகளின் கீழ் விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன. பின்பு, 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்புவரை இடம்பெற்றுள்ள சங்கப்பனுவல்களைப் பற்றிய ஆய்வாளரின் கருத்துகளும் வகுப்பு வாரியாக மதிப்பீடு செய்யப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

**சங்க இலக்கியங்கள்: கற்றல், கற்பித்தல் முறைகள்** என்ற தலைப்பில் அமைந்த இரண்டாவது இயலில் சங்க இலக்கியங்களைக் கற்பித்தல் முறைகள் பற்றி விளக்கப்பட்டுள்ளன. இதில் சங்க இலக்கியங்களைக் கற்பித்தலில் அறிந்திருக்க வேண்டிய அடிப்படைச் செய்திகள் என்ற தலைப்பில், அகம் புறத்தைப் பொருளாக் கொண்டிருத்தல், அகத்திணைப் பாடல்களின் மரபுகள், புறத்திணைப் பாடல்களின் மரபுகள், பன்முகக்கூறுகள் மற்றும் உத்திகள், யாப்பியல் கூறுகள், சொற்செறிவும் பொருட்செறிவும், தனிநிலைச் செய்யுட்களாக அமைதல் என்ற துணைத் தலைப்புகளின் கீழ் விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

**சங்க இலக்கியப் பாடல்களில் கற்பிக்க வேண்டிய முக்கிய கூறுகள்** என்ற தலைப்பில் இலக்கியங்களின் உரிய ஓசை, பொருள் உணர்ச்சிக்கேற்ற குரல் ஏற்றத்தாழ்வு, சரியாக ஒலிக்க இயலாத சொற்களுக்குப் பயிற்சி, இலக்கியங்களுக்குரிய சொற்களைப் பிரித்துப் படித்தல், சொல்லாட்சித்திறன், இலக்கியக் கூறுகள், இலக்கியங்களின் விழுமியங்கள், தொடர்புடைய பிற பாடல்களை அறிமுகப்படுத்துதல் என்ற துணைத் தலைப்புகளின் கீழ் விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

**சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் உத்திகள்** என்ற தலைப்பில் பாடப்பொருளுக்கு ஏற்றவாறு ஆர்வப்படுத்துதல், பகுதியிலிருந்து முழுமைக்குச் செல்லல், முழுமையிலிருந்து பகுதிக்குச் செல்லல், துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல், இசையுடன் பாடுதல், குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்தல், நடித்துக் காட்டுதல், மாணாக்கரைப் பங்கெடுக்கச் செய்தல், ஒப்புமைப்படுத்திக் கற்பித்தல், நினைவூட்டல், தொடர்புடைய செய்திகள், புராண நிகழ்வுகள், வரலாறுகள் ஆகியவற்றைக் கூறுதல், எளிய படங்கள் வரைந்து விளக்குதல், விளையாட்டு முறையில் கற்கத் தூண்டுதல், நாட்டுநடப்புச் செய்திகளைத் தொடர்புபடுத்துதல், பள்ளிச் சூழலில் அமைந்துள்ள பொருள்களைப் பயன்படுத்துதல், அறிந்ததிலிருந்து அறியாததற்குச் செல்லுதல், எளிமையிலிருந்து அருமைக்கு செல்லுதல், தெளிவிலிருந்து சிக்கலுக்குச் செல்லுதல், தொடர்புடைய நூல்களைப் படிக்கச் செய்தல் என்ற துணைத் தலைப்புகளின் கீழ் விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

மேலும், கற்பித்தல் கோட்பாடுகளின் அடிப்படையில் கற்பிக்கும் உத்திகளும், கற்பித்தலில் ஆசிரியரின் பங்கு, சவால்கள் மற்றும் சிக்கல்கள் விளக்கப்பட்டுள்ளன.

**சங்க இலக்கியங்கள்: கற்பித்தல் முறைகள் மதிப்பீடு** என்ற தலைப்பில் உள்ள மூன்றாவது இயலில் தகவலாளிகளிடமிருந்து வினாநிரல் வாயிலாகப் பெறப்பட்ட தகவல்களைப் பள்ளி, அமைவிடம், கற்பிக்கும் வகுப்பு, பாலினம், வயது, அனுபவம்,

பயிற்று மொழி ஆகியவற்றின் அடிப்படையில் பகுத்தாராய்ந்து, அதன் மூலம் பெறப்பட்ட உண்மைகள் ஆராய்ந்து விவாதிக்கப்பட்டுள்ளது. கற்பித்தலின் நோக்கம், பாடத்தைத் தொடங்குதல், பாடவளர்ச்சியை மேம்படுத்தும் திறன், இலக்கணம் கற்பித்தல், கரும்பலகைப் பயன்பாடு, துணைக்கருவிகள் பயன்படுத்துதல், வினாக்கள் கேட்டல், மாணவர் விடையளிக்கும் தன்மை, மதிப்பீடு செய்தல், தொடர்பணி கொடுத்தல், கற்றல் வெளிப்பாடு, சங்கப்பனுவல்கள் கற்பித்தலின் சிறப்பம்சங்கள், ஆகிய தலைப்புகளின் கீழ் விவாதிக்கப்பட்டு, அதற்கான காரணங்களும் விளக்கப்பட்டுள்ளன. மேலும் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ்ப்பாடநூலில் உள்ள சங்கப்பனுவல் பற்றி ஆசிரியர்களின் கருத்துகள் கேட்டறியப் பட்டு, வகுப்பு வாரியாகக் கருத்துகள் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கியம் கற்பித்தல் தொடர்பான கணக்கீடுகளின் மூலம் பெறப்பட்ட முடிவுகளைக் கொண்டு, பல்வேறு வகையில் விவாதங்கள் எழுப்பப்பட்டு, அதன் வழி சங்கஇலக்கியங்கள் கற்றல் கற்பித்தலுக்கான வழிமுறைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

**ஆய்வு முடிவுரையில்** ஆய்வின் தொகுப்புரை, ஆய்வின் மூலம் பெறப்பட்ட செய்திகள், கற்றலை மேம்படுத்தும் வழிமுறைகள், தொடர் ஆய்வுக்கான களங்கள் ஆகியன இடம்பெற்றுள்ளன.

இதனைத் தொடர்ந்து, துணைநூற்பட்டியல், ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்ட வினாநிரல், கணக்கீடுகள், வரைபடங்கள், அட்டவணைகள் தேவையான பின்னிணைப்புகள் ஆகியன இடம்பெறுகின்றன.

## பள்ளிக் கல்வியில் சங்க இலக்கியங்கள்

1.1 முன்னுரை

1.2 இலக்கியக் கல்வி

1.3 பள்ளிக்கல்வியில் இலக்கியங்கள்

1.4 பள்ளிக்கல்வியில் சங்க இலக்கியங்கள்

- 1.4.1 அமைப்பும் பகிர்வும்
- 1.4.2 இடம்பெற்ற பாடல் மற்றும் அமைவிடம்
- 1.4.3 பாடல் காட்சிப்படுத்தப்பட்டுள்ள முறை
- 1.4.4 பாடலின் பன்முகக்கூறுகள்
- 1.4.5 பாடலின் விளக்கம்
- 1.4.6 பாடலின் விழுமியங்கள்
- 1.4.7 பாடலுக்கான பழகுசெயல்கள்
- 1.4.8 பாடல் இடம்பெற்றதன் நோக்கம்
- 1.4.9 பாடலுக்கும் இணைப்பாடங்களுக்கும் உள்ள தொடர்பு
- 1.4.10 பாடல் தொடர்புடைய விளக்கங்கள்

1.5 ஆறு மற்றும் ஏழாம் வகுப்புப் பாடநூலில் இடம்பெறும் சங்கப் பாடல்கள் - மதிப்பீடு

1.6 ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புப் பாடநூலில் இடம்பெறும் சங்கப் பாடல்கள் - மதிப்பீடு

1.7 பதினொன்று மற்றும் பன்னிரண்டாம் வகுப்புப் பாடநூலில் இடம்பெறும் சங்கப் பாடல்கள் - மதிப்பீடு

1.8 முடிவுரை

## 1.1 முன்னுரை

வாழ்வில் மனிதர் கண்ட ஆழ்ந்த அனுபவத்தையும் பேருண்மைகளையும் வெளியிடுவது இலக்கியம். முற்காலத்தில் மக்கள் தங்கள் வாழ்வின் வாய்ப்பு, சூழ்நிலை, நிகழ்ச்சியின் போது எவ்வாறு நடந்து கொண்டனர் என்பதையும் அறிவிக்கும் அனுபவக் கருவூலம் இலக்கியம். வாழ்ந்து காட்டும் வாழ்க்கையை சொற்களால் கூறுவதே இலக்கியம். இதையே, **'சான்றோர்களின் பட்டறிவால் முகிழ்த்த சிறந்த செய்யுள்களை இலக்கியமாகத் தமிழ்மொழி கொண்டுள்ளது'**[1] என்று முனைவர். பா. வீரப்பன் கூறுகிறார். தமிழ் இலக்கிய நூல்கள் அனைத்தும் மனித சமூகம் பெற வேண்டிய சிறந்த பண்புகளை வலியுறுத்துகின்றனவாக இருக்கின்றன.

**'இலக்கியங்கள் மக்களுடைய வாழ்க்கைக்குத் துணை செய்யக்கூடிய குறிக்கோளாக இருக்க வேண்டும்'**[2] என்று சாமி.சிதம்பரனார் கூறுகிறார். இத்தகைய இலக்கியங்களில் உயர்வானதாகக் கருதப்படுவது சங்க இலக்கியங்கள். சங்க இலக்கியங்களை மாணவர்களுக்குக் கற்பிப்பதன் மூலம், அவர்களைச் சமுதாயத்திற்கு ஏற்ற ஒரு சிறந்த நன்மகனாக உருவாக்கவும், அவர்களுடைய மொழித்திறன்களை மேம்படுத்தவும் முடியும்.

## 1.2 இலக்கியக் கல்வி

· கல்வி நிறுவனங்களும், சென்னைப் பல்கலைக் கழகமும் உருப்பெற்ற பின்னர், ஏட்டுச்சுவடிகள் படிப்படியாக மறைந்து அச்சிடப்பட்ட நூல்கள் பரவலாக வெளிவரத் தொடங்கின. பாடத்திட்ட உருவாக்கம் முறைப்படுத்தப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக இலக்கிய நூல்கள் அனைவர் கையிலும் தவழும் நிலை உருவானது. அத்துடன், ஒரு நூல் முழுமையையும் மாதக் கணக்கில் தொடர்ந்து கற்கும் முறைக்கு மாறாகத் தேர்ந்தெடுத்த பகுதிகளை மட்டும், கால அட்டவணைகளில் குறிப்பிடப்பட்ட நேரத்தில் மட்டுமே கற்கும் முறை அறிமுகமானது.

சமய எல்லையைத் தாண்டி பல்வேறு இலக்கியங்களைப் பயில்வதும், அவற்றைப் பிற இலக்கியங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் அணுகுமுறையும் நடைமுறைக்கு வந்தன. மனப்பாடக்கல்வியின் முக்கியத்துவம் குறையத் தொடங்கியது. செய்யுள்களின் செல்வாக்குக் குறைந்து உரைநடை வளர்ச்சியுற்றது. நாவல், சிறுகதை, கட்டுரை என்ற புதிய வகைகள் அறிமுகமாகி

வளர்ச்சியடையத் தொடங்கின. உரையுடன் கூடிய இலக்கியப் பனுவல்களும், அகரவரிசையில் அமைந்த அகராதிகளும், அச்சு வடிவில் கிடைக்கத் தொடங்கிய பின்னர் இலக்கியங்களை மனப்பாடம் செய்யும் முறை மறைந்தது. காலப்போக்கில் ஆய்வாளர்களின் பயன்பாட்டிற்குரியதாக மட்டும் இலக்கியங்கள் மாறின. எல்லாவற்றிற்கும் மேலாக சமய மற்றும் சாதி நோக்கிலான அணுகுமுறையில் இருந்து இலக்கியம் விடுபட்டது. அத்துடன் பதவுரை, பொழிப்புரை கூறுவதுடன் நின்றுவிடாமல் சமூகக் கண்ணோட்டத்துடனும் ஒப்பியல் நோக்கிலும் இலக்கியங்களை அணுகும் முறை அறிமுகமானது. இவை தமிழ் இலக்கியம் கற்பிக்கும் முறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி முறையாகும்.

**“தாய்மொழிக் கல்வியின் பழைய இலக்கியப் பாடங்கள் பிரச்சினை மையங்களுள் ஒன்றாக இருந்து வந்துள்ளது. பண்பாட்டுத் தொடர்ச்சி மரபுப் பேணுவகை என்பவற்றுக்கான நவீன காலத்துக்கும் முற்பட்ட பாடங்களையே படிப்பிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்தப் பாடங்கள் அவற்றின் காலம் காரணமாக மாணவருக்கு எளிதில் விளங்க முடியாத சொற்களைக் கொண்டனவாகவே அமைந்துள்ளன. இந்தப் பிரச்சினையைப் புறங்காணும் முறையில் நாம் பின்வரும் விளக்க முறையினை மேற்கொண்டு வந்துள்ளோம். பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை முதலில் பதங்களின் கருத்தினை அறிந்து, பின்னர் அக்கருத்தினை இலக்கண நிலைப்படம் கொண்டு காட்டி, அப்பாடல் முழுவதையும் ஒரு வாக்கியம் அல்லது தொடராக்கி, அதற்கு மேல் அந்தப் பாடத்தின் பொருளை விளக்க முனைதலே நம்மிடையே இலக்கியப் பயிற்றுவித்தலாகக் கொள்ளப்பட்டு வந்துள்ளது. குழந்தை, சிறுவர் மட்டத்தில் பெரும்பாலும் பதவுரை, பொழிப்புரையுடனே விளக்கம் முடிந்து விடுவதுண்டு. மாணவர்கள் ஒரு மொழியின் பண்பாட்டை அறிந்து கொள்வதற்கான மிகச் சுலபமான வாயில் அந்த மொழியின் இலக்கியமேயாகும். ஆனால், இலக்கியம் கற்றல் என்பது அதை அனுபவிக்க வழிவகுப்பதாகும். அதனைத் தொடர்ந்து அந்த அனுபவத்தை விளக்கும் ஆற்றலையும் அந்த அனுபவம் ஏற்படுவதற்கான காரணிகளை அறிந்து கொள்வதற்கான திறனையும் பயிற்றுவித்தலாகும்.”** [3] என்று கார்த்திகேசு சிவத்தம்பி கூறுகிறார்.

### 1.3 பள்ளிக்கல்வியில் இலக்கியங்கள்

பள்ளிப்பாடத்தில் செய்யுள் பகுதியும் இலக்கியங்கள் எனக் கொள்ளப்படுகின்றன. தற்காலத்தில் உரைநடையும் பகுதியும் இடம்பெறுகின்றன. இலக்கியங்கள் எவ்வடிவிலிருப்பினும் அவை மொழித்திறன் வளர்ச்சிக்குத் துணைபுரிவனவாகும். **“மனித குல சமுதாயத்தின் ஓர் அங்கமாய், அதனோடு இணைந்தும் முரண்பட்டும் மோதியும் இசைந்தும் குறிப்பிட்ட சூழலில் வாழ்கிறவன் மனிதன். மனித குலத்தில் தானும் ஒருவனாய் வாழும் அவன் வாழ்க்கை நடைமுறைகளின் காரணமாக அமையும் உணர்வு நிலையில் ஒரு வெளிப்பாடாக இலக்கியத்தைத் தோற்றுவிக்கிறான்.”**[4] என்று தி.சு.நடராசன் கூறுகிறார்.

இலக்கியங்களின் தலையாய நோக்கம் பண்புகளை வளர்த்தலாகும், பண்புகளை வளர்க்கும் இலக்கியம், அவற்றைப் பதிப்பதோடு சிறந்த பொழுதுபோக்கு ஊடகமாகவும் திகழ்கின்றன. இலக்கிய நயமுணர் திறன் பண்பு வளர்ச்சிக்கும் மனமகிழ்விற்கும் வழிவகுக்கின்றன. எனவே, இலக்கியங்கள் பள்ளிப் பாடத்தில் அரிய கல்வி நோக்கங்களைக் கொண்டனவாகத் திகழ்கின்றன. **“வாழ்வில் உண்மையின் அடிப்படையில் அமைதலோடு வாழ்க்கையின் உள்ளீடான நெறிமுறைகளையும் உணர்த்த வேண்டுவது இலக்கியத்தின் கடமை”.**[5]

ஒழுக்க வாழ்க்கை வாழ்வோரையும் வாழ்க்கையைச் செம்மையாக அமைத்துக் கொள்வோரையுமே கல்வி கற்றோர் என உலகம் பாராட்டுகின்றது. எழுதப் படிக்கத் தெரிந்தோரைக் கல்வி அறிவுடையோராக மாற்றுவதில் இலக்கியங்கள் சிறந்த இடம் பெறுகின்றன. நீதி நெறிகளை மக்களுக்குக் கூறுவதில் அறநூல்கள் ஆசிரியரைப்போலவும் கதைகள் நண்பரைப் போலவும் இதிகாசங்கள் அன்பு மனைவியரைப் போலவும் விளங்குகின்றன என்று வட நூற்செய்யுள் ஒன்று கூறுகின்றது. **“இலக்கியம் படைத்த கவிஞர்கள் பரந்துபட்ட மானுட வாழ்க்கை அனுபவத்தையும் நடுநிலை உணர்வுகளையும் சிறந்த பொருளைப் பற்றிய ஆழ்ந்த அறிவையும் அவர்கள் காலத்தில் நிலவும் சூழ்நிலைகளையும் பதிவு செய்து சென்றுள்ளனர். படைப்பாளன் தன்னை உணர்ச்சிவயப்படுத்திய பொருளை, நிகழ்வை அதே உணர்வோடு நமக்குக் காட்டும் வடிவமே இலக்கியம்”.**[6] எனவே, அறநூல்களையும் கதைகளையும் காவியங்களையும் நன்முறையில் பயன்படுத்திச் சிறந்த கருத்துகளையும் அறவழிகளையும் அறிந்து வாழ உதவும் வண்ணம் கற்பிக்க, இலக்கியங்கள்

நமக்குப் பெரிதும் பயன்படுகின்றன. சுருங்கக் கூறின் மாணவர்களின் மனத்தைக் கவர்ந்து இனிமையும் எளிமையும் கொண்டு, அரிய உண்மைகளைக் கற்பனை நயத்துடன் கூறிக் காலத்தை வென்று நிற்பது இலக்கியம் என்று கூறினால் ஓரளவு அதன் தன்மையை வரையறை செய்ததாகும். **“இலக்கியம் ஒவ்வொரு நிலையிலும் நம்மை வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி நம்முள்ளம் முழுமையையும் கவர்ந்து உலகின் அழகையும் உண்மைப் பொருளையும் உணரச் செய்கிறது”.** [7]

### 1.3.1 சங்க இலக்கியத்தின் இன்றியமையாமை

சங்க இலக்கியம் வீட்டு வாழ்க்கையைப் பற்றியும் (அகம்), நாட்டு வாழ்க்கையைப் பற்றியும் (புறம்) பேசுகின்ற நூல். மனித வாழ்க்கைக்கு வேண்டியன எல்லாம் சங்க இலக்கியத்தில் உள்ளன. உயர்ந்த எண்ணங்கள் உள்ளத்தில் விதைக்கப்படும் போது, அவை சிறந்த செயல்களையும் செய்யத் தூண்டும். எழுத்தாற்றல், வாளின் ஆற்றலைக் காட்டிலும் சிறந்தது என்ற ஆங்கிலப் பழமொழிக்கேற்ப, சங்க இலக்கியங்கள் ஆற்றல் உடையவை. மனிதர்களை வழிப்படுத்துபவை.

சங்க காலத்தில் போர்கள் மிகுதியாக நிகழ்ந்தன. அரசர்கள், சிற்றரசர்கள் ஒருவொருக்கொருவர் சண்டையிட்டனர். ஒற்றுமையின்மையே நிலவியது. ஆனாலும், உயர்ந்த எண்ணங்கள் இருந்தன. அவை அனைத்திலும் பொது நலமான சிந்தனைகளே மிகுந்து இருந்தன.

**“சமுதாய வாழ்க்கையை மட்டுமன்றி வாழ்வின் பல்வேறு முக்கியக் கூறுகளான பண்பாடு, வழிபாடு, சமயம் முதலியவற்றை எடுத்துக் கூறும் தன்மைபெற்றவை தமிழர்கள் படைத்தளித்த சங்கப் பாடல்கள். இத்தகுதியை முழுமையாகப் பெறுவதோடு, அதனைக் கருத்தில் கொண்டு தமிழரின் பண்டைய வாழ்வை எடுத்துரைப்பன சங்கப் பாடல்கள். அகம், புறம் எனப் பிரிக்கப்பெற்ற பாடல்கள் தமிழரின் பண்பாடு, சமயம், வழிபாடு போன்ற வாழ்வியல் கூறுகளை முன்னிறுத்துகின்றன என்னும் கருத்திற்கு இரண்டாம் கருத்தில்லை.”** [8] என்கிறார் அறிவு நம்பி.

இவ்வாறு சங்கப் பாடல்கள் அனைத்தும் கருத்து வளம் நிரம்பியவை. பிறர் உள்ளத்தைப் புண்படுத்தாத நிலையில் அமைந்தவை. குறிப்புப் பொருள் மிக்கவை. வாழ்க்கையை உயரச்செய்யவும் நல்ல எண்ணங்களை விதைக்கவும் சங்க இலக்கியங்கள் துணைபுரிகின்றன. அத்தகைய இலக்கியத்தை இன்றைய

மாணவர்களும் இளைஞர்களும் கற்பதன் மூலம் அவர்களது எதிர்கால வாழ்வு சிறப்புடையதாக அமையும். மாணவர்கள் தமிழ்மொழியின் தொன்மையையும் பழஞ்சொற்களையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பும் ஏற்படுகிறது. பண்டைக் கால தமிழ் மன்னர்களின் அற உணர்வு, வீரம், கொடை, ஆட்சிச் சிறப்பு, கல்விப் பெருமை முதலியவற்றையும் புலவர்களின் பெருமிதம், கவித்திறன், ஆட்சிமதிப்பு, முதலியவற்றையும் மக்களின் வாழ்க்கை முறை, உறவு முறை, நாகரிகம், விவசாயம் செய்த முறை, உணவு முறை, நாட்டுப்பற்று, போர்த்திறம், ஒற்றுமையுணர்வு போன்றவற்றையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகிறது. இலக்கியத்தை எளிய நடையில் கற்பித்தால் மாணவர்கள் அதை நன்றாகப் புரிந்து கொண்டு கற்பார்கள். மாணவர்களின் கேட்டல், படித்தல், பேசுதல், எழுதுதல் போன்ற அடிப்படைத் திறன்களை மெருகூட்டுவதற்குச் சங்க இலக்கியங்கள் பயன்படுகின்றன. தமிழ் மொழியின் மேன்மையினையும் மொழியின் செறிவையும், இலக்கண நுட்பங்களையும் அறிந்து கொள்வதால் மொழியின் மீது முழு ஈடுபாட்டை அடைய முடியும்.

அக்கால மக்களின் வாழ்க்கை முறைகளைக் கற்று அதன் மூலம் வாழ்க்கையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற விதிமுறைகளையும் சந்திக்கும் பிரச்சனைகளைச் சமாளிக்கும் கூர்மையையும் மாணவர்களிடத்தில் வளர்ப்பதற்கு இலக்கியங்களும் அதில் இடம்பெறும் கதாபாத்திரங்களும் மாணவர்களுக்கு உதவுகின்றன. அக்கால மன்னர்களின் திறமை, வீரம், போர்முறை போன்றவற்றை அறிந்து கொள்வதால், நாட்டுப்பற்றும் தனி மனித வீரமும் தனி மனித ஒழுக்கமும் மாணவர்களிடத்தில் நன்கு வளரும். அக்காலப் புலவர்கள் சங்கப் பாடல்களைப் பாடியதன் நோக்கத்தை அறிவதன் மூலம் அழகுணர்ச்சியும் கற்பனையாற்றலையும் மாணவர்களிடத்தில் வளர்க்க முடியும்.

**“சங்கப் பாடல்களில் அரசு, அரசன் பற்றிப் பாடுகிற போது அரசனின் வீரம், போர்த்திறம், பரம்பரை, வெற்றி, முறையான ஆட்சி, நடுநிலை பிறழாது தண்டம் செய்தல், முறையாகப் பாகம் பெறுதல், ஈகை புரிதல், தாய்போலக் குடிகாத்தல், பொருள் ஈட்டல், வேளாண்மையைப் பெருக்குதல், புகழ் ஈட்டல், இன்ப வாழ்க்கை, புலவர் முதலானோரைப் பேணுதல், சான்றோர் சொல் கேட்டல் ஆகிய கருத்துகள் திரும்பத் திரும்பக் கூறப்படுகின்றன”**[9] என்று ராஜ் கௌதமன் கூறுகின்றார்.

சங்கப் பாடல்களை அதிக அளவில் படிக்க வைப்பதன் மூலம், சொற்களஞ்சியத்தைப் பெருக்கி அதை சரியான நேரத்தில் கையாளவும் அனைத்துத் துறைகளிலும் மொழியைப் பக்குவமாக பயன்படுத்தும் திறனும் கேட்பதைப் புரிந்து கொள்வதோடு, அதற்கு தக்க விதத்தில் பதில் அளிக்கவும் கவிதை புனையும் ஆற்றலும் மாணவர்களுக்கு வளரும்.

### 1.4 பள்ளிக்கல்வியில் சங்க இலக்கியங்கள்

பள்ளிக்கல்வியில் செய்யுட்பகுதியிலுள்ள பாடல்களை இலக்கியங்கள், கவிதைகள், அருட்பாடல்கள் என மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஒவ்வொன்றையும் கற்பிக்கும்பொழுது, அவற்றின் கற்பித்தல் நோக்கங்கள் பாடலைப் பொறுத்து வேறு வேறாக அமையும்.

இலக்கியங்களைக் கற்பித்தலின் தலையாய நோக்கங்கள் இலக்கிய இன்பம் பெறுதல், பண்பாடு வளர்த்தல், படைப்பாற்றல் வளர்த்தல் ஆகியன ஆகும். இந்நோக்கங்களே கற்றல் வெளியீடுகள், மாணாக்கர் பெற வேண்டிய வாழ்வுசார் திறன்கள் ஆகும். **“சங்க இலக்கியத்தில் இயற்கையானது வாழ்க்கையின் பின்னணிப் பொருளாகவே சித்திரிக்கப்பட்டுள்ளது. இயற்கையின் இயல்பு அமையாத சங்கப் பாடல்களே இல்லை என்று கூறுமளவிற்குச் சங்க இலக்கியங்கள் முழுவதும் இயற்கையின் ஆட்சி காணப்படுகிறது”.** [10] மேலும் **“ஒரு நாட்டின் பண்பட்ட மரபுகளைக் கட்டிக்காக்கும் காவலராயும் வாழ்வுக்குக் கரையமைத்து ஒழுங்குப்படுத்தும் பொறுப்பினராயும் விளங்குவோர் கற்றறிந்த சான்றோர்களேயாவர். இதனை நன்குணர்ந்த சங்ககால சமூகம் புலவர்கட்கு மிகப்பெரிய சிறப்பளித்தது.”** [11] எனவே, **“சங்க இலக்கிய பாடுபொருள்கள் உலகில் என்றும் நிலைத்து நிற்கும் வண்ணம் உயர்ந்ததாகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளாகவும் வாழ்வுடன் ஒன்றியதாகவும் விழுப்ப உணர்வுடையது என்று சொல்லும் வண்ணம் அமைந்துள்ளன”** [12]

இலக்கியப் பாடல்களில் ஒவ்வொரு பாடல்களும் ஒவ்வொரு நோக்கங்களைக் கொண்டிருக்கும். அறக்கருத்துகளை வலியுறுத்தும் பாடல்களில் கருத்துணர் ஆற்றலை வளர்த்தல் நோக்கமாய் அமையும். உவமை அமைந்திருக்கும் பாடல்களில் உவமையைப் பொருளொடு பொருத்திக் காட்டுதல் சிறப்பிடம் பெறும். அகப்பாடலாயின் அகஉணர்வை ஊட்டல், உணர்ச்சியோடு ஒன்றச் செய்தல் நோக்கமாய் அமையும். கவிதைகளாயின் இலக்கியப்பற்று

உண்டாக்கல், உணர்ச்சியைத் தூண்டுதல், சுவையுணராற்றல் வளர்த்தல், கற்பனையாற்றல் வளர்த்தல் ஆகியன நோக்கங்களாய் அமையும். மேலும் நாட்டுப் பற்று மொழிப்பற்று வளர்த்தலும் பண்பு வளர்த்தலும் சிறப்பிடம் பெறும். சில பாடல்களில் புலவர்கள் தம் கருத்துகளை கவிதைநயம் தோன்றக் கூறியிருத்தல் கூடும். அப்பொழுது கருத்து உணர்த்தலும் நயம் உணர்த்தலும் நோக்கங்களாய் அமையும்.

**“பள்ளியில் இலக்கியக் கல்வியால் மொழியின் அருமை பெருமைகளை மாணவர்களுக்குக் கற்பித்தலோடு அம்மொழி பல்வேறு வகைகளில் பயன்படும் முறை பற்றியும், கற்பித்து அம்மொழி பயன்படும் தொடர்களில் சொற்களின் கருத்தாழத்தைக் காட்டி மொழிப்பற்றை வளர்க்க முடியும்”.**[13]

பள்ளிக் கல்வியில் இடம்பெறும் சங்க இலக்கியப் பாடல்களை ஆராயும் அடிப்படைக் கூறுகளின் விளக்கங்களைப் பின்வருமாறு காணலாம்.

சங்க இலக்கியப் பனுவல்களை மாணவர்கள் தன்னார்வத்துடன் படிக்க வேண்டும் என்பதே நமது முக்கிய நோக்கம். ஆசிரியர்கள் இதை நோக்கமாகக் கொண்டே மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். மாணவர்களுக்குச் சங்க இலக்கியங்களை அறிமுகப்படுத்துவதில் பாடநூல்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அதனால் பாடநூலில் சங்க இலக்கியங்கள் எவ்வாறு இடம்பெற்றுள்ளன? எங்கு இடம்பெற்றுள்ளன? எந்தெந்தப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன? பாடல்கள் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளன? போன்ற பல செய்திகளை நாம் ஆராய்வது இன்றியமையாததாகும். **“ஒரு பாடத்தின் மீது விருப்பும் வெறுப்பும் தோன்றுவதற்கு முக்கியக்காரணம் அந்தப் பாடம், பாடநூலில் விளக்கப்பட்டுள்ள முறை முக்கிய பங்காற்றுகிறது”**[18] என்று பொன்னுசாமி அவர்கள் கூறுகின்றார். அவ்வகையில் ஒவ்வொரு வகுப்பிலும் பாடநூலில் இடம்பெறும் பாடல்கள் விளக்கப்பட்டுள்ள முறைகளை ஆராய்வது சிறந்ததாக அமையும்.

**“மாணவரின் அறிவு நிலை, பொருளுணரும் திறன், மனப்பான்மை, கவர்ச்சி ஆகியவற்றிற்கேற்ப பாடநூலில் இலக்கியப்பகுதிகள் இடம்பெற்றிருக்க வேண்டும்”**[19] என்ற பேராசிரியர் கணபதி அவர்களின் கூற்றுக்கிணங்க பாடநூலில் சங்க இலக்கியப்பாடல் இடம்பெற்ற அளவை பாடப்பொருள் மற்றும் செய்யுள் பகுதியோடு ஒப்பிட்டு அதன் விகித முறையைக் கணக்கிடுதல் வேண்டும்.

ஒவ்வொரு வகுப்பிலும் மாணவனின் மனநிலைக்கேற்பவும் கற்றல் தரத்திற்கேற்பவும் பாடலைத் தேர்ந்தெடுத்து கொடுத்திருந்தால் மட்டுமே, இலக்கியம் கற்பித்தலில் விருப்பம் ஏற்படும். அந்த வகையில், ஒவ்வொரு வகுப்பிலும் எந்த நூலிலிருந்து எந்தப் பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது? பாடலின் ஆசிரியர் யார்? என்பதையும் அறிந்து கொள்வது அவசியம். அதன் மூலம் மட்டுமே மாணவர்களின் கற்றல் மற்றும் கற்பித்தலை மேலும் ஆராய்ந்தறிய முடியும்.

இன்றைய பாடத்திட்டத்தின்படி, வெளியிடப்பட்டுள்ள தமிழ்ப் பாடநூலில் பாடங்கள் இயல் வாரியாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு இயலிலும் செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம் அனைத்திற்கும் இடம் அளிக்கப்பட்டுள்ளன. மேலும், கொடுக்கப்பட்டிருக்கும் இயல்களை மூன்றாகப் பிரித்து, முப்பருவ முறையில் மாணவர்கள் படிக்கும் நிலை பின்பற்றப்பட்டு வருகிறது. எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல் பாடநூலில் எந்த இயலில், எங்கு இடம்பெற்றுள்ளது? என்பதைக் கண்டுணர்வது இன்றியமையாததாகும்.

**“நமது பள்ளிக் கல்விக்கான ஏற்பாடு பாடங்களை மையமாகக் கொண்டு அமைந்திருந்ததே தவிர, கல்வி பெறும் குழந்தைகளைக் கருத்தில் கொண்டு அமைக்கப்படவில்லை. இவர்களது தேவைகளும் கவர்ச்சிகளும் பெருமளவு புறக்கணிக்கப்பட்டன”** [20] என்ற கணபதி அவர்களின் கூற்று, தற்போது உள்ள சமச்சீர்க்கல்வி பாடத்திட்டத்தில் பொய்யாக்கப்பட்டுள்ளது. இன்றைய பாடநூல் மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப வண்ணமயமாகவும் கவர்ச்சிகரமாகவும் அச்சிடப்பட்டுள்ளது. எனவே, சங்க இலக்கியப் பாடல் இந்த புதிய பாடத்திட்டத்தில் எத்தகைய சிறப்பியல்புடன் அச்சிடப்பட்டுள்ளன? எவ்வாறு மாணவர்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன? காட்சிப்படுத்தப்பட்டுள்ள விதம் மாணவர்களைக் கவரும் வண்ணம் உள்ளதா? இதனால் சங்க இலக்கியத்தில் மாணவர்களுக்கு ஆர்வம் ஏற்படுமா? இந்த அச்சுமுறை ஆசிரியர்களின் கற்பித்தலுக்கு உதவுகிறதா? என்பதைக் கண்டறிதல் வேண்டும்.

**“கற்றலானது மாணவர்களின் தேவைகளினின்று எழுவதாகும். அவர்களது ஆற்றலுக்குகந்ததாகவே அது அமைவதாகும்”** [21] என்று கணபதி அவர்கள் கூறுகின்றார். எனவே, பாடத்திட்டத்தில் அறிமுகமாகி பிற்காலத்தில் வாழ்க்கையோடு இரண்டறக் கலக்கப் போகிற சங்க இலக்கியத்திலிருந்து, எத்தகைய பாடல்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது? அது மாணவர்களின்

கற்றல் திறனுக்கு ஏற்ற வகையில் உள்ளதா? வகுப்பின் நிலைக்கேற்ப பாடல் அடிகளின் எண்ணிக்கை உள்ளதா? என்பதை ஆராய வேண்டியது முக்கிய அம்சமாகும்.

**"உலக மொழிகள் அனைத்திலும் பழைய மொழி நடைக்கும் இன்றைய மொழி நடைக்குமிடையே பெருத்த வேறுபாடுகள் காணப்படுகின்றன"**[22] தினமும் புதிய சொற்களைக் கண்டறிந்து, அதற்கு பொருள் தேடிக் கொண்டிருக்கும் மொழிகள் மத்தியில், பிறப்பிலேயே பல அரிய பழஞ்சொற்கள் பலவற்றைக் கொண்டிருந்தும் அவற்றைப் பயன்படுத்தாமலேயே, அதற்கான பொருளையும் மறந்த நிலையில், பல சொற்கள் வழக்கொழிந்து போன நிலை நம் தமிழ் மொழியில் உண்டு. சங்க இலக்கியம் 2000 ஆண்டுகள் பழமையானது. எனவே, சங்க இலக்கியத்தில் பழந்தமிழ் நடையில், அருஞ்சொற்கள் கொண்ட பாடல்கள் அமைகின்றன. இதில், மாணவர்களுக்குத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்படும் பாடல்களில் எவ்வகையான சொற்கள் இடம்பெறுகின்றன? அவை மாணவர்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் உள்ளதா? அருஞ்சொற்களாய் இருந்தால் அதற்கான பொருள் வழங்கப்பட்டுள்ளதா? ஆகியவற்றைப் பற்றி ஆராய்வது அவசியமாகிறது.

**"சங்கப் பாடல்கள் பொருளாலும் அளவாலும் தரத்தாலும் நிகரற்று விளங்கக் கூடிய சிறப்படைந்து, இலக்கண இலக்கியம் எனும் இருபெரும் கிளைகளாகத் தழைத்து நிற்பது. ஐவகை நிலத்து ஐந்திணை ஒழுக்கங்களையும் தாங்கி நிற்பவை".**[23] சங்கப் பாடல்களுக்கே உரிய தனித்தன்மையை விளக்கும் வகையில் ஒவ்வொரு பாக்களும் அவற்றிற்கே உரிய திணை, துறை, பா, கூற்று போன்ற பல்வேறு கூறுகளைப் பெற்று கற்றோருக்கு இனிமை பயக்கக் கூடியது. இந்தத் தன்னியல்புகளை உணர்ந்து படித்தால் மட்டுமே சங்கப் பாடல்கள் முழுமையான உணர்வைப் பெற முடியும். பள்ளிக்கல்வியில் அறிமுகப்படுத்தப்படும் சங்கப் பாடல்களை மற்ற செய்யுள்களிலிருந்து வேறுபடுத்தி தனித்துக் காட்ட உதவுவதே சங்க இலக்கியங்களின் இந்தப் பன்முகக் கூறுகளேயாகும். சங்க இலக்கியத்தின் தனித்தன்மையை, இந்தப் பன்முகக் கூறுகளின் வழியாக முழுமையாக உணர முடியும். எனவே, பாடநூலில் கொடுக்கப்பட்டிருக்கும் சங்கப் பாடலின் பன்முகக் கூறுகள் குறிக்கப்பட்டுள்ளதா? குறிக்கப்பட்டிருப்பின் அவை தெளிவாக விளக்கப்பட்டுள்ளதா? அதை மாணவர்கள் உணரும் வகையிலும் படிக்கும் வகையிலும் உள்ளதா? என்பவற்றைக் குறித்து கண்டுணர்வது அவசியமாகிறது.

பொதுவாகவே சங்கப் பாடல்கள் முழுவதும் தொன்மையான மொழி நடை காணப்படுவதால், அவற்றைப் படித்துணர்வதற்கு மாணவர்களுக்கு ஆசிரியரின் துணை கட்டாயம் தேவைப்படும். **“சங்கப் பாடல்களில் புலவனின் உள்ளத்துணர்ச்சி இயல்பாகவே படிகின்றது. அவனது உணர்ச்சியைச் செய்யுள் படிப்போர்க்கும் புலப்படுத்துதல் வேண்டும்.”**[24] சங்கப் பாடல்கள் முழுவதும், உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து பண்டைய மக்களின் வாழ்வுணர்வுகளை எடுத்தியம்புவதாக அமைந்துள்ளதால், பாடலைப் படிக்கும் போது புலவர் கூற வந்த உணர்வுகளைச் சரியான முறையில் உள்கிரகித்து, படித்தால் மட்டுமே, பாடலின் முழு விளக்கத்தைப் பெற முடியும். எனவே, பாடலுடன் சேர்ந்து அதன் விளக்கமும் பாடநூலில் இருக்க வேண்டியது திண்ணம். எனவே, பாடநூலில் இடம்பெற்றிருக்கும் ஒவ்வொரு பாடலுக்கும் எவ்வாறு விளக்கம் கொடுத்துள்ளனர்? பாடலின் விளக்கம் உணர்வுகளை எடுத்தியம்புகிறதா? பாடலின் விளக்கம் கொடுத்துள்ள மொழி நடை, மாணவர்களின் வயதிற்கும் வகுப்பிற்கும் கற்றல் திறனுக்கும் ஏற்ற வகையில் அமைந்துள்ளதா? அவற்றை மாணவர்கள் படிப்பதில் ஆர்வம் காட்டுகின்றனரா? ஆகியவற்றைப் பற்றி ஆராய்வது அவசியமாகும்.

சங்கப் பாடல்கள் ஒவ்வொன்றிலும், சமுதாய உணர்வு மிகுந்து காணப்படும். அக்கால பண்டைய மக்களின் வாழ்க்கை உணர்வுகளையும் நாட்டு உணர்வுகளையும் அகம் புறம் என்ற இரு பிரிவால் விளக்குவதால், இன்றைய மாணவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து விழுமியங்களையும் சங்கப் பாடல்கள் மூலம் நம்மால் பெற முடியும். **“சங்க இலக்கியங்கள் சமுதாயத்தில் உயர்ந்தவர்களையே தலைமக்களாகக் கொண்டு படைக்கப்படும் பண்பினது. இத்தலைமக்கள் உயர்ந்த பண்புகளைக் கொண்ட விழுமிய பாத்திரங்களாகவே இடம்பெறுவர். இத்தலைமக்கள் தவிர மற்ற பாத்திரங்களும் தேர்ந்தெடுத்து படைக்கப்படுவர்.”**[25] இதனால், இவ்வகையான இலக்கியங்களை மாணவர்கள் படிக்கும் போது அவர்களிடம் உயர்ந்த விழுமியங்கள் மனதில் பதிவதோடு, அதைப் பின்பற்றவும் தொடங்குவர். எனவே, பாடநூலில் இடம்பெற்றிருக்கும் பாடலின் மூலம் மாணவர்கள் எத்தகைய விழுமியத்தைப் பெறுகிறார்கள்? அவர்களுக்கு அந்த விழுமியம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளதா? கொடுக்கப்பட்டிருக்கும் பாடலின் விழுமியம் மாணவர்களின் வயதிற்கும் வகுப்பிற்கும் ஏற்றதாக அமைந்துள்ளதா? என்பதை கண்டறிய வேண்டும்.

சங்கப் பாடல்கள் மாணவர்களின் வயதிற்கேற்ப பாடநூலில் கொடுக்கப்பட்டாலும், அவர்கள் அதைப் படித்துணர்ந்துள்ளனரா? என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். எனவே, பொதுவாக எல்லாப் பாடங்களுக்கும் தேவைப்படும் பயிற்சிகளும் பழகு செயல்களும் சங்கப் பாடல்களுக்குத் தேவைப்படுகிறது. **"ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் கற்பிக்கப்பட்ட பாட பொருளை மாணவர் நன்கு அறிந்துள்ளனரா எனத் தேர்ந்தறியக் கொடுக்கப்படும் வினாக்கள் பயிற்சிகள் எனப்படும். பாடம் கற்பித்த பின்னர், பன்முறைப் பயிற்சி, வினா எனப் பல வகையில் எழுப்பப்படும் வினாக்கள் இந்தப் பயிற்சியில் அடங்கும்".**[26] இது போன்ற பயிற்சிகள் பெரும்பாலும் பாடநூலிலேயே வழங்கப்படுவது உண்டு. இவ்வகையில், தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்டிருக்கும் சங்கப் பாடலுக்குப் பயிற்சிகள் மற்றும் பழகுசெயல்கள் எங்கு? எவ்வாறு கொடுக்கப்பட்டுள்ளன? பழகு செயலில் எந்தத் திறனுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது? அது மாணவர்களின் மொழித்திறனை வளர்க்கும் விதத்தில் அமைந்துள்ளதா? பயிற்சியில் சங்கப் பாடல்களை மாணவர்கள் கற்பதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதா? அதன் விழுமியங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதா? என்பதைப் பற்றியும் ஆராய்ந்தறிவது முக்கியமானதாகும்.

பள்ளிக் கல்வியில் இடம்பெறும் ஒவ்வொரு பாடப்பொருளும் மாணவர்களிடம் ஏதேனும் ஒரு திறனை வளர்க்கும் நோக்கில் மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கும். அதிலும், உயர்வான விழுமங்களோடு இயற்றப்பட்டிருக்கும் சங்க இலக்கியப் பாடல்களைக் கொடுக்கும் போது அதன் மூலம் மாணவர்களுக்கு மொழி சார்ந்த திறன்களையும் வாழ்வுசார்ந்த திறன்களையும் வழங்கும் நோக்கில் மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கும். **"செய்யுள் பகுதியின் தலையான நோக்கங்கள் இலக்கிய இன்பம் பெறுதல், பண்பாடு வளர்த்தல், படைப்பாற்றல் வளர்த்தல் ஆகியவையாகும். இந்நோக்கங்களே கற்றல் வெளியீடுகள், மாணாக்கர் பெற வேண்டிய வாழ்வுசார் திறன்கள் ஆகும்."**[27] ஒவ்வொரு வகுப்பிலும் இடம்பெறும் சங்கப் பாடல்களும் எந்த நோக்கத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன? நோக்கம் குறிப்பிடப்பட்டுள்ளதா? நோக்கம் மாணவர்களின் வயதிற்கும் வகுப்பிற்கும் ஏற்றதாக அமைகிறதா? என்பனவற்றை ஆராய்வது அவசியமாகிறது.

சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பிப்பதன் மூலம், மாணவர்களிடம் மொழியுணர்வையும் நாட்டுணர்வையும் இலக்கிய உணர்வையும் வளர்ப்பதே

கற்றலின் மதீப்பிடாக இருக்க முடியும். **“செய்யுள் கல்வியால் மொழியின் அருமை பெருமைகளை மாணவர்களுக்குக் கற்பித்தலோடு, அம்மொழி பல்வேறு வகைகளில் பயன்படும் முறை பற்றியும் கற்பித்து, அம்மொழி பயன்படும் தொடர்களில் சொற்களின் கருத்தாழத்தைக் காட்டி மொழிப்பற்றை வளர்ப்பதே தரமான கற்றலாகும்.”[28]** பல விழுமங்களையும் இலக்கியச் சுவையையும் கொண்டு விளங்கும் சங்கப் பாடல்களை, மாணர்வகளுக்குச் சிறந்த கற்றல் தரத்துடன் வழங்குகின்றனரா? தரமான கற்றலுக்கேற்ற வகையில் சங்கப் பாடல் பாடநூலில் வழங்கப்பட்டுள்ளதா? என்பதை அறிந்து கொள்வதும் அவசியமாகிறது.

இன்றைய பாடத்திட்டத்தில் இயல் வாரியாகப் பிரிக்கப்பட்டு ஒரு குழுப்பாடமுறை பின்பற்றப்பட்டு வருகிறது. அந்த வகையில், இதில் ஏதேனும் ஒரு இயலில் சங்கப் பாடல் இடம்பிடித்திருப்பதின் பொருட்டு, அதனுடன் இணையாக என்னென்னப் பாடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன? கொடுக்கப்பட்ட பாடங்களுக்கும் சங்கப் பாடலுக்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதா? தொடர்பு இருப்பின் அந்தத் தொடர்பு எந்த வகையில் சங்க இலக்கியக் கற்பித்தலுக்கு உதவுகிறது? இதனால் சங்க இலக்கியக் கற்பித்தல் மற்றும் கற்றலுக்கு ஏதேனும் பயன் உண்டா? என்பனவற்றைப் பற்றி ஆராய்ந்து கொள்வதும் இன்றியமையாததாகும்.

இது தவிர, பாடநூலில் கொடுக்கப்பட்டிருக்கும் சங்கப் பாடலின் மூலம் மாணவர்களுக்கு சங்க இலக்கியம் கற்பதில் ஆர்வம் ஏற்படுமா? ஆர்வம் ஏற்படும் அளவிற்கு இலக்கியம் பற்றிய தகவல்கள் பாடநூலில் வழங்கப்பட்டுள்ளதா? பாடல் பற்றியும் அதன் நூல் மற்றும் ஆசிரியர் பற்றியும் அல்லது இலக்கியம் பற்றிய தகவல்கள் பற்றியும் பாடநூலில் வழங்கப்பட்டுள்ளதா? என்பதையும் ஆராய்ந்தறிதல் வேண்டும்.

### 1.4.1 அமைப்பும் பகிர்வும்

நடைமுறையில் பின்பற்றப்படும் பாடத்திட்டத்திற்கேற்ப பாடநூல்களில் சங்க இலக்கியப் பனுவல்கள் இடம்பெறும் விகிதம் வேறுபடுகிறது. சங்க இலக்கியப்பனுவல்கள் இன்றைய பள்ளிக் கல்வியில் 6ஆம் வகுப்பிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்ந்து, ஒவ்வொரு வகுப்பிலும் சங்க இலக்கியப்பாடல்கள் இடம்பெறும் விகிதமானது அதிகரிக்கிறது.

**"பள்ளிக்கால அட்டவணையில் கற்பிப்பதற்கு அதிக நேரம் ஒதுக்கப்பட்டுள்ள மொழியை முதல் மொழி என்றும் அதைவிடக் குறைவாக நேரம் ஒதுக்கப்பட்டுள்ள மொழியை இரண்டாம் மொழி என்றும் அதைவிட இன்னும் குறைவாக நேரம் ஒதுக்கப்பட்டுள்ள மொழியினை மூன்றாம் மொழி என்றும் பொதுவாகச் சொல்லுகிறோம்"**[14] என்று மா.சு.திருமலை கூறுகின்றார். எப்படியாயினும் மொழிவகுப்பின் மூலமாக மாணவர்கள் தங்கள் கற்றலை மேம்படுத்த முடியும். வெளி உலகின் கேள்விகளுக்கு விடை கண்டறிய முடியும். மேலும், மொழி வகுப்பு என்பது நீதி வகுப்பாகக் கருதப்படுகிறது. இன்றைய மாணவர்களின் நற்பண்புகளை வளர்க்கும் பணியை மொழி வகுப்புகளே ஏற்கிறது. எனவே, தமிழ்ப் பாடநூல்கள் மாணவர்களின் கற்றல் நிலைக்கேற்ப செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம், கட்டுரை எனப் பல பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதில் இலக்கியப் பாடல்கள் செய்யுள் பகுதியில் மட்டுமே இடம்பெற முடியும்.

தமிழ்ப் பாடநூல்களில் முதல் பெரும்பகுதியைச் செய்யுள் மற்றும் உரைநடைக்கும் இதரப் பகுதியை இலக்கணம், துணைப்பாடம் மற்றும் கட்டுரை ஆகியவற்றிற்கும் சரியான விகிதத்தில் பிரித்து மாணவர்களுக்குக் கற்பிப்பதே இன்றைய நடைமுறையில் உள்ள கல்வி ஏற்பாட்டின் சாராம்சமாகும். **"பாடப்பொருள் கொள்கையிலிருந்தும் கற்றல் மற்றும் கற்பித்தலுடன் தொடர்புடைய நீண்ட அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டே சோதனை முடிவுகளிலிருந்து உளவியல் கோட்பாடுகளுடன் உருவாக்கப்படுகின்றன"**[17]. இவ்வாறு, பிரிக்கும் போது நான்கில் ஒரு பங்கு விகிதம் மட்டுமே செய்யுள் பகுதியாகப் பிரிக்கப்படுகிறது. செய்யுளில் இடம்பெற வேண்டிய நூல்கள் எனக் கணக்கிடும்போது எண்ணற்ற நீதி நூல்கள், தொடர்நிலைச் செய்யுள்கள், வழிபாட்டுப் பாடல்கள், இலக்கிய நூல்கள் எனப் பலவகை நூல்கள் உள்ளன. அனைத்து வகையான பாடல்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் பொருட்டு மாணவர்கள் கற்றல் நிலைக்கேற்ப அனைத்து வகையான பாடல்களும் இடம்பெறும் இந்தச் செய்யுள் பகுதியில் சங்க இலக்கியப் பாடல்களுக்கும் ஒரு குறிப்பிட்ட இடம் ஒதுக்கப்படுகிறது.


**"நமது பாடப்புத்தகத் தேர்வில் நாம் மரபு நிலையிலிருந்து தளநிலை மாற்றம் எதனையும் செய்யவில்லை என்பது கண்கூடு. தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தை அறிமுகம் செய்தலும் பிரதான நோக்காக இருக்கின்றது என்பது உண்மையே. ஆனால், இந்த அறிமுகத்துக்கான தெரிவில் காணப்படும் வீச்சு**

**மிகவும் குறுகியதாகவே இருக்கிறது. சங்கச் செய்யுள் தெரிவிலும் அற இலக்கியங்களின் தெரிவிலும் தொடர்நிலைச் செய்யுளின் தெரிவிலும் கடந்த 60-70 வருடகாலப் பகுதியில் எவ்வித அடிப்படை மாற்றமும் இருப்பதனைக் காணமுடியாது"**[15] என்று கார்த்திகேசு. சிவத்தம்பி கூறுகின்றார்.


அவ்வகையில், ஒதுக்கப்பட்ட விகிதத்திற்கு ஏற்ப சங்கப் பாடல்கள், வகுப்பு வாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாடநூல் ஆசிரியர்களின் ஆலோசனைகளின் படியும் மாணவர்களின் வயது மற்றும் வளர்ச்சிக்கு ஏற்றபடியும் சங்க இலக்கியப்பாடல்கள் பள்ளிக்கல்வியில் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு பாடலையும் தொடர்ந்து பாடலின் பொருள், ஆசிரியரின் குறிப்பு, நூலின் குறிப்பு, பாடல் சம்பந்தப்பட்ட பயிற்சிகள் ஆகியவை இடம்பெறுகின்றன.

பாடநூல் எழுதும் ஆசிரியர் எந்த வகுப்பிற்கு எழுதுகிறாரோ, அந்த வகுப்பு மாணவனின் அறிவுத் திறன், முன்னறிவு, அவர்கள் வாழும் சூழ்நிலை போன்றவற்றையும் அந்த வயது மாணவர்களின் உளவியல் பண்புகள், கற்றல் வேகம், சமூகத்தின் எதிர்பார்ப்புகள் போன்றவற்றையும் மனதில் கொண்டு அவர்களுக்கு ஏற்ற சங்க இலக்கியப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்துப் பாடநூலில் சேர்க்கின்றனர். சங்க இலக்கியப் பாடல்களைப் பாடநூலில் சேர்க்கும் பணியை மேற்கொள்ளும் ஆசிரியர் குழுவினர் சங்க இலக்கியங்களை நன்கு கற்றவராகவும் மாணவர்களை நன்கு புரிந்து கொண்டவராகவும் சங்க இலக்கியங்களைத் தேர்ந்தெடுப்பதில் பயிற்சிப் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

**"பயனுள்ள ஒரு கல்வி ஏற்பாடு, அனுபவங்கள் செயல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அமையும்"** [16]. தமிழ்ப்பாடநூலில் செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம் அனைத்தும் அதற்கேற்ற விகித முறைப்படி பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது, செய்யுள் 40% உரைநடை, இலக்கணம். துணைப்பாடம் ஆகியவை தலா 20% என்ற முறையில் பிரிக்கப்பட்டுள்ளது. இதில், மற்ற பிரிவுகளைக் காட்டிலும் செய்யுளுக்கு அதிகமான விகிதப்பிரிவு ஒதுக்கப்பட்டுள்ளது. ஏனெனில், பல வகையான செய்யுட்கள் இருப்பதாலும் அனைத்திலும் மாணவர்கள் திறன் பெறவேண்டும் என்பதாலும் இந்த அதிகபட்ச விகிதப்பிரிவு கொடுக்கப்பட்டுள்ளது.





எனினும், செய்யுள் பகுதியில் சங்க இலக்கியச் செய்யுட்கள் ஒன்று அல்லது இரண்டு மட்டுமே இடம்பெற்றுள்ளன. அதன் விகித முறைப்படி சங்க இலக்கிய செய்யுள் 10% அல்லது 20%மும் மற்ற செய்யுள்கள் மீதமுள்ள சதவீதம் அதாவது 90% அல்லது 80% என்ற விகிதத்தில் இடம்பெற்றுள்ளன. 6, 7 மற்றும் 9ஆம் வகுப்பு முதல் ஆம் வகுப்பு வரை மேற்கண்ட விகித முறை இடம்பெற்றுள்ளன. மற்ற வகுப்புகளில் 2 அல்லது 3 விகிதங்கள் வேறுபடுகின்றன. 8ஆம் வகுப்பில் சங்க இலக்கியப் பாடல்களே இடம்பெறாததால் விகிதப்பிரிவு இல்லை.




சங்க இலக்கியப் பாடல்கள் இன்றைய பள்ளிக் கல்வியில் 6ஆம் வகுப்பிலிருந்து மட்டுமே அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்ந்து, ஒவ்வொரு வகுப்பிலும் சங்க இலக்கியப்பாடல்கள் இடம்பெறும் விகிதமானது அதிகரிக்கிறது. அதாவது 6 மற்றும் 7ஆம் வகுப்பு பாடநூல்களில் ஒரே ஒரு சங்கப் புறப்பாடல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பின்பு, எட்டாம் வகுப்பில் சங்கப் பாடல் எதுவும் இடம்பெறவில்லை. இதற்கான காரணமும் குறிப்பிடப்படவில்லை. அடுத்து 9 மற்றும் 10ஆம் வகுப்பு பாடநூல்களில் சங்கப் பாடல் அகம் மற்றும் புறம் இரண்டும் கலந்து மொத்தம் மூன்று பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அடுத்து மேல்நிலைக்கல்வியான 11 மற்றும் 12ஆம் வகுப்பு பாடநூல்களில் சங்கப் பாடல்களுக்கென்று ஒரு தனிப்பட்ட பிரிவு ஒதுக்கப்பட்டு, அதில் சங்கப்

**பள்ளிக்கல்வியில் இடம்பெறும் சங்கப் பனுவல்களின் எண்ணிக்கை**





பாடல்கள் அகம் மற்றும் புறம் இரண்டும் கலந்து மொத்தம் மூன்று மற்றும் ஐந்து என்ற எண்ணிக்கையில் இடம்பெறுகின்றன.

இவ்வாறாக, பள்ளிக் கல்விகளில் சங்கப் பாடல்கள் முழுவதுமாக 6ஆம் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு வரை உள்ள 6 வருடங்களில், மொத்தம் 15 பாடல்கள் மட்டுமே இடம்பெறுகின்றன. இந்த 15 பாடல்களின் மூலம் மட்டுமே மாணவர்களிடம் சங்க இலக்கியத்தில் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நிலையில், அந்த பாடல்களுக்கான விளக்கங்கள் பாடநூலில் இடம்பெற்றிருக்கும் முறையினையும் ஆராய்வது இன்றியமையாததாகிறது.

6ஆம் வகுப்பில் இடம்பெறும் சங்கப் பாடலானது புறப்பாடலாகும். எனவே, சங்கப் பாடல்களை மாணவர்களின் வயதிற்கும் கற்றல் திறனுக்கும் ஏற்ப புறப்பாடலாக அறிமுகப்படுத்தப்பட்டு 7ஆம் வகுப்பிலும் அது தொடர்கிறது. பின்பு, 9 மற்றும் 10ஆம் வகுப்பில் அகப்பாடலானது அறிமுகப்பட்டு, புறம் மற்றும் அகப்பாடல்கள் கலந்து வழங்கப்படுகிறது. இதனிடையில் 8ஆம் வகுப்பில் ஒரு சங்கப் பாடல்கூட இடம்பெறாமல் இருப்பது செய்யுட்பிரிவில் சங்கப் பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்பதைக் காட்டுகிறது. மேலும், இந்த சங்கப் பாடல்கள் இடம்பெற்றிருக்கும் முறை, விளக்கம், அமைப்பு என்று எந்த வகையிலும் சங்கப் பாடல் என்பதற்கான முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. சங்கப் பாடல்களுக்கே உரித்தான திணை, துறை போன்ற முக்கிய பன்முகக்கூறுகளின் அறிமுகமோ அல்லது விளக்கமோ, பாடலின் காரணமோ அல்லது கதைச் சுருக்கமோ எதுவும் வழங்கப்படவில்லை.

அடுத்ததாக, மேல்நிலைக்கல்வியான 11 மற்றும் 12ஆம் வகுப்பில் இடம்பெறும் சங்கப் பாடல்கள் சங்க இலக்கியங்கள் என்ற தலைப்பில் தனித்தன்மையோடு, அகம் மற்றும் புறப்பாடல்கள் என்று அவற்றின் விளக்கம், அமைப்பு, முக்கியப் பன்முகக்கூறுகள் என்று எல்லாவகையிலும் சங்கப் பாடல்களுக்கான முக்கியத்துவத்தோடு வழங்கப்பட்டுள்ளன. எனினும், கடந்த

ஆண்டு வரை சங்கப் பாடல்களுக்கான எந்த முக்கியத்துவத்தையும் அறியாத மாணவர்களுக்கு, இந்த விளக்கங்கள் ஆர்வத்தை ஏற்படுத்துவதைக் காட்டிலும்,





கற்றல் சுமையையே ஏற்படுத்தும்.

இதில், நாம் உற்றுநோக்க வேண்டிய ஒரு செய்தி, 11 மற்றும் 12ஆம் வகுப்பு பாடநூல்கள் தமிழக அரசால் காலங்காலமாக வடிவமைக்கப்பட்டு கொடுக்கப்படும் பாடநூலாகும். எனவே, அந்த பாடநூல்களில் சங்க இலக்கியத்திற்கான முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், 6 முதல் 10ஆம் வகுப்பு வரை உள்ள பாடநூல்கள், சில ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்ட சமச்சீர்க்கல்வி என்ற பாடத்திட்டத்தால் உருவாக்கப்பட்ட பாடநூலாகும். எனவே, இந்த பாடநூல்களில் சங்க இலக்கியங்களுக்கான முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. இந்த சமச்சீர்க்கல்வி பாடநூல் வருவதற்கு முன்பு வரை உள்ள தமிழ்ப்பாடநூல்களில் சங்க இலக்கியப் பாடல்களின் அறிமுகம், அமைப்பு, விளக்கம் மற்றும் பன்முகக்கூறு என அனைத்து நிலையிலும் மாணவர்களின் கற்றல் திறனுக்கேற்ப தகுந்த விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், அன்றைய தமிழ்ப்பாடநூல்களில் 9ஆம் வகுப்பிலிருந்தே சங்கப் பாடல்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. அதற்கு முன்பு, வரை சங்கப் பாடல்களை மாணவர்களுக்கு அறிமுகம் செய்யவில்லை.

இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது, மாணவர்களுக்கு சங்க இலக்கியப் பாடல்களை முதலில் இருந்தே அறிமுகம் செய்யவேண்டும் என்ற நன்நோக்கத்தோடு சங்கப் பாடல்கள் 6ஆம் வகுப்பிலிருந்தே் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று கொண்டாலும், நடுவில் 8 ஆம் வகுப்பில் சங்கப் பாடலுக்கென்று ஒரு இடத்தை ஒதுக்காமல் இருப்பது கேள்விக்குறியாகவே உள்ளது.


**6 முதல் 9ஆம் வகுப்பு பாடநூலில் சங்கப்பனுவல் பகிர்வு**

பாடநூலில் சங்க இலக்கிய செய்யுள்கள் 10% மற்ற செய்யுள்கள் 90% என்ற விகிதத்தில் இடம்பெற்றுள்ளன. அதாவது, பாடநூலில் ஒரே ஒரு சங்க இலக்கியப்பாடல் மட்டுமே இடம்பெற்றுள்ளது.




**10ஆம் வகுப்பு பாடநூலில் சங்கப்பனுவல் பகிர்வு**


பாடநூலில் சங்க இலக்கிய செய்யுள்கள் 17% மற்ற செய்யுள்கள் 83% என்ற அளவில் இடம்பெற்றுள்ளது. அதாவது, பாடநூலில் 3 சங்க இலக்கியப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன.




**11 மற்றும் 12ஆம் வகுப்புப் பாடநூலில் சங்கப்பனுவல் பகிர்வு**

பாடநூலில் இரண்டு பிரிவுகள் உள்ளன. செய்யுள் மற்றும் உரைநடை அடங்கிய நூல் தாள் - 1 ஆகும். இலக்கணம் மற்றும் துணைப்பாடம் அடங்கிய நூல் தாள் - 2 ஆகும். அனைத்துப் பாடப்பகுதிகளும் அதற்கேற்ற விகித முறைப்படி பிரிக்கப்பட்டு தனித்தனிப் பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ளன. அதாவது, தாள் - 1 பாடநூலில் செய்யுள் 65%, உரைநடை 35%, தாள் - 2

பாடநூலில் இலக்கணம் 45%, துணைப்பாடம் 40% மற்றும் மொழிப்பயிற்சி 15% என வகுக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் செய்யுள் 35%, உரைநடை 15%, இலக்கணம் 23%, துணைப்பாடம் 20% மற்றும் மொழிப்பயிற்சி 7% என்ற முறையில் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் செய்யுள் பகுதியில் 7 பகுதியில் 1 பகுதி சங்க இலக்கியங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் விகித முறைப்படி சங்க இலக்கியச் செய்யுள்கள் 14% மற்ற செய்யுள்கள் 86% என்ற பிரிவில் இடம்பெற்றுள்ளது. அதாவது, பாடநூலில் சங்க இலக்கியப் பிரிவில் 3 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.




### 1.4.2 இடம்பெற்ற பனுவல் மற்றும் அமைவிடம்

6 முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள பெரும்பாலான பாடல்கள் தமிழர்களின் வரலாறு, பண்பாடு போன்ற புறப்பொருள் பற்றிய செய்திகளை மட்டும் எடுத்துரைக்கும் புறநானூறு நூலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அதைத் தொடர்ந்து கலித்தொகை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, ஆகிய நூல்களிலிருந்தும் அகம் மற்றும் புறம் பாடல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

**6ஆம் வகுப்பு**

நாடாகு ஒன்றோ; காடாகு ஒன்றோ;
அவலாகு ஒன்றோ; மிசையாகு ஒன்றோ;
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை; வாழிய நிலனே! (புற.187)

மாணவர்களுக்கு நன்கு அறிமுகமான பெண் கவிஞரான ஔவையார் பாடிய பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. பாடநூலில் ஆறாவது இயலில் முதல் செய்யுளாக இப்பாடல் இடம்பெற்றுள்ளது.

**7ஆம் வகுப்பு**

நெல்லும் உயிரன்றே; நீரும் உயி ரன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;
அதனால் யான்உயிர் என்பது அறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே. (புற.186)

அக்காலப் புலவர்களின் பெருமைகளைப் பற்றி மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை என்ற அரசனால் கவரி வீசப்பட்ட பெருமைக்குரிய மோசிகீரனார் அவர்கள் பாடிய பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மேலும், அவர் பெருமையும் குறிப்பிடப்பட்டுள்ளது. பாடநூலில் இரண்டாவது இயலில் முதல் செய்யுளாக இப்பாடல் இடம்பெற்றுள்ளது.

**9ஆம் வகுப்பு**

தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓர்ஒக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்போம் எனினே தப்புந பலவே. (பாடல் 1) (புற.189)

மதுரைக் கணக்காயர் மகனார் நக்கீரனார் அவர்கள் பாடிய பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மேலும், அவர் பெருமையும் குறிப்பிடப்பட்டுள்ளது. பாடநூலில் மூன்றாவது இயலில் முதல் செய்யுளாக இப்பாடல் இடம்பெற்றுள்ளது.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே (பாடல் 2) (குறு.3)

இதில், முதன் முதலாக அகப்பாடல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, குறுந்தொகை நூலிலிருந்து சங்கப் பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தலைவி கூற்றுப் பகுதிப் பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் சங்க

இலக்கியங்கள் அக்காலத்தில் வாழ்ந்து புலவர் பலரால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பாகும். அதற்கேற்ப இந்தப் பாடப்பகுதியில் இடம்பெற்ற பாடலின் ஆசிரியர் பூரிக்கோ ஆவார். அவரைப் பற்றிய செய்திகள் நமக்குக் கிடைக்காத காரணத்தால் அவரைப் பற்றிய செய்திகள் கொடுக்கப்படவில்லை. அதற்குக் காரணமும் கூறப்பட்டுள்ளது. பாடநூலில் மூன்றாவது இயலில் இரண்டாவது செய்யுளாக இப்பாடல் இடம்பெற்றுள்ளது.

**10ஆம் வகுப்பு**

அரிகால் மாறிய மங்கண் அகல்வயல்
மறுகால் உழுத ஈரச் செறுவின்
வித்தொடு சென்ற வட்டி பற்பல
மீனொடு பெயரும் யாணர் ஊர
நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வமென் பதுவே. (பாடல் 1) (புற.210)

நானூறு பாடல்கள் கொண்ட புறநானூறு நூலிலிருந்து இருநூற்றுப் பத்தாவது பாடல் பாடப்பகுதிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்நூலில் ஐந்திணைக்குமான பாடல்கள் உள்ளன. ஐந்திணைகளைப் பற்றி பாடல் இயற்றிய பெருமைக்குரியவர் மிளைகிழான் நல்வேட்டனார் இப்பாடலின் ஆசிரியர் ஆவார். மிளை என்னும் ஊரில் பிறந்தவராதலால், மிளைகிழான் என்று பெயர் பெற்ற தகவல் கூறப்பட்டுள்ளது. ஆசிரியர் பற்றிய அதிகமான குறிப்புகள் கொடுக்கப்படவில்லை. இருப்பினும், அவர் எழுதிய பாடல்களைப் பற்றிய செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளது. பாடநூலில் நான்காவது இயலில் முதல் செய்யுளாக இப்பாடல் இடம்பெற்றுள்ளது.

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைப்படச் சேய ஆயினும் தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை
ஒருவழித் தோன்றி யாங்கு என்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப

சாலார் சாலால் பாலர் ஆகுபவே. (பாடல் - 2) (புற.218)

கோப்பெருஞ்சோழனின் இறப்பைக் குறித்து வருந்தி எழுதிய பாடல் ஆகும். அக்காலப் புலவர்களின் பெருமைகளைப் பற்றியும் நட்பின் பெருமையை மாணவர்கள் அறியும் வண்ணம், பிசிராந்தையார், கோப்பெருஞ்சோழனின் நட்பினை எடுத்துக் காட்டும் வண்ணம், கோப்பெருஞ்சோழனின் அவைக்களப்புலவர்களுள் ஒருவரான் கண்ணகனார் அவர்கள் பாடியப் பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மேலும், அவர் இந்தப் பாடலை எழுதியதற்கான சூழ்நிலையும் கொடுக்கப்பட்டுள்ளது. பாடநூலில் நான்காவது இயலில் இரண்டாவது செய்யுளாக இப்பாடல் இடம்பெற்றுள்ளது.

ஆற்றுதல் என்பதுஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடுஅறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல் (பாடல் 3) (கலி.133)

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாக, நாடகப் பாங்கில் அமைந்து, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐம்பெரும்பிரிவுகளை உடைய, துள்ளல் ஓசையினைக் கொண்டு படிப்பவரின் உள்ளத்தினைக் கொள்ளைக் கொள்ளும் பாடல்களைக் கொண்ட, ‘கற்றறிந்தார் ஏத்தும் கலி’’ எனத் தமிழ்ச் சான்றோர்களால் சிறப்பித்துக் கூறப்படும் கலித்தொகை நூலிலிருந்து பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே புறப்பாடல் பற்றிய செய்திகளை மாணவர்கள் அதிகம் அறிந்துள்ளதால், கலித்தொகை நூலில் இடம்பெற்ற அகப்பாடலில் உள்ள புறம் பற்றிய செய்திகள் கொண்ட அடிகள் மட்டும் பாடமாகத் தேர்ந்தெடுத்து வழங்கப்பட்டுள்ளது. சங்க காலத்தில் வாழ்ந்த நல்லந்துவனார் என்னும் புலவர் பாடிய பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்களில் பெரும்பான்மையான பாடல்களைப் பாடிய ஆசிரியரின் குறிப்புகள் நமக்குக் கிடைக்கவில்லை. அந்த வகையில் இந்தப் பாடலை எழுதிய நல்லந்துவனார் அவர்களின் பெயரைத்தவிர வேறு எந்த செய்தியும் நமக்குக் கிடைக்கவில்லை. பாடநூலில் ஒன்பதாவது இயலில் முதல் செய்யுளாக இப்பாடல் இடம்பெற்றுள்ளது.

**11 ஆம் வகுப்பு**

அறுகுளத் துகுத்து மகல்வயற் பொழிந்தும்
உறுமிடத் தூதவா துவர்நில மூட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்கால் பேகன்
கொடைமடம் படுத லல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே (பாடல் 1) (புற.142)

புறநானூறு நூலிலிருந்து சங்கப் பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. வரலாற்றுக் குறிப்புகளைப் பாடல்களுள் பொதிந்து வைத்துப் பாடுவதில் வல்லவரான பரணர் இயற்றிய பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. கபிலர் போல் மிக்க புகழுடன் வாழ்ந்தவர். இவர் பதிற்றுப்பத்தில் ஐந்தாம்பத்து பாடிக் கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவனிடம் உம்பற்காட்டு வாரியையும் அவன் மகன் குட்டுவன் சேரலையும் பரிசிலாகப் பெற்றவர். தாள் - 1 பாடநூலில் செய்யுள் பகுதியில் இரண்டாவது பிரிவாகத் தொகைநூல்கள் என்னும் தலைப்பில் சங்கப் பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் முதல் பாடலாகப் புறநானூறுப் பாடல் கொடுக்கப்பட்டுள்ளது.

ஓங்குமலைச் சிலம்பில் பிடவுடன் மலர்ந்த
வேங்கை வெறித்தழை வேறுவகுத் தன்ன
ஊன்பொதி அவிழாக் கோட்டுகிர்க் குருளை
மூன்றுடன் ஈன்ற முடங்கர் நிழத்த
துறுகல் விடரளைப் பிணவுப்பசி கூர்ந்தெனப்
பொறிகிளர் உழுவைப் போழ்வாய் ஏற்றை
அறுகோட்டு உழைமான் ஆண்குரல் ஓர்க்கும்
நெறிபடு கவலை நிரம்பா நீளிடை
வெள்ளி வீதியைப் போல நன்றுஞ்
செலவயர்ந் திசினால் யானே பலபுலந்து
உண்ணா உயக்கமொடு உயிர்செலச் சாஅய்த்
தோளும் தொல்கவின் தொலைய நாளும்
பிரிந்தோர் பெயர்வுக் கிரங்கி
மருந்துபிறி தின்மையின் இருந்துவினை இலனே (பாடல் 2) (அக.147)

அன்பின் ஐந்திணையாக இருக்கும் திணைப்பாடல்களுக்கு இலக்கணமாய்த் திகழும் பாடல்களைக் கொண்டதாக விளங்கும் நூலாகவும் நெடுந்தொகை என்று

பெருமையுடன் வழங்கும் அளவிற்கு நெடிய அடிகளைக் கொண்ட பாடல்களை அமைந்தவையுமான அகநானூறு நூலிலிருந்து சங்கப் பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சங்ககாலப் பெண்பாற்புலவருள் சிறந்து விளங்கியவரும் அதியமான் நெடுமானஞ்சி என்னும் குறுநில மன்னனுடன் ஆழ்ந்த நட்பு கொண்டவரும் அம்மன்னனின் அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவரும் நீண்டநாள் வாழச் செய்யும் அமிர்தத்தை ஒத்ததோர் அரிய நெல்லிக்கனியை அதியமானிடம் இருந்து பெற்றவருமான ஔவையார் பாடிய பாடல் தேர்ந்தெடுத்து வழங்கப்பட்டுள்ளது. தாள் - 1 பாடநூலில் செய்யுள் பகுதியில் இரண்டாவது பிரிவாகத் தொகைநூல்கள் என்னும் தலைப்பில் சங்கப் பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் இரண்டாவது பாடலாக அகநானூற்றுப் பாடல் கொடுக்கப்பட்டுள்ளது.

எரிமருள் வேங்கை யிருந்த தோகை
இழையணி மடந்தையிற் றோன்று நாட!
இனிதுசெய் தனையா நுந்தை வாழியர்
நன்மனை வதுவை யயரவிவள்
பின்னிருங் கூந்தன் மலரணிந் தோயே (பாடல் 3) (ஐங்.127)

குறுகிய பாடல் அடிகளைக் கொண்ட குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஒவ்வொரு திணையிலும் திணைக்கு 100 பாடல்கள் வீதம் 500 பாடல்களைக் கொண்ட ஐங்குறுநூறு நூலிலிருந்து சங்கப் பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சங்ககாலப் புலவருள் சிறந்து விளங்கியவரும் ‘புலனழுக் கற்ற அந்தணாளன்’ என்று புகழப்பட்டவரும் வள்ளல் பாரியின் அவைக்களப் புலவராக விளங்கியவரும் பாரி மீது அளவற்ற அன்பு கொண்டவருமான கபிலர் பாடிய பாடல் தேர்ந்தெடுத்து வழங்கப்பட்டுள்ளது. தாள் - 1 பாடநூலில் செய்யுள் பகுதியில் இரண்டாவது பிரிவாகத் தொகைநூல்கள் என்னும் தலைப்பில் சங்கப் பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் மூன்றாவது பாடலாக அகநானூற்றுப் பாடல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 12 ஆம் வகுப்பு

பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்கவிர் மாதோ

நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமி னதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே. (பாடல் 1) (புற.195)

புறநானூற்று நூலிலிருந்து சங்கப் பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சங்ககாலப் புலவர்களில் மேன்மையாக வாழ்ந்தவரும் சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரலிரும் பொறையைப் புகழ்ந்து பாடியவரும், குறுந்தொகையிலும் திருவள்ளுவமாலையிலும் பாடல் பாடியவருமான நரிவெரூஉத் தலையார் பாடிய பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தாள் - 1 பாடநூலில் செய்யுள் பகுதியில் இரண்டாவது பிரிவாகத் தொகைநூல்கள் என்னும் தலைப்பில் சங்கப் பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் முதல் பாடலாகப் புறநானூற்றுப் பாடல் கொடுக்கப்பட்டுள்ளது.

பசைபடுபச்சை நெய்தோய்த் தன்ன
சேயுயர் சினைய மாச்சிறைப் பறவை
பகலுறை முதுமரம் புலம்பப் போகி
முகைவாய் திறந்த நகைவாய் முல்லை
கடிமகள் கதுப்பின் நாறிக் கொடிமிசை
வண்டினந் தவிர்க்குந்த தண்பதக் காலை
வரினும் வாரா ராயினும் ஆண்டவர்க்கு
இனிதுகொல் வாழி தோழி யெனத்தன்
பல்லிதழ் மழைக்கண் நல்லகம் சிவப்ப
அருந்துய ருடைள் அவளென விரும்பிப்
பாணன் வந்தனன் தூதே: நீயும்
புல்லார் புரவி வல்விரைந்து பூட்டி
நெடுந்தேர் ஊர்மதி வலவ
முடிந்தன்று அம்மநாம் முன்னிய வினையே. (பாடல் 2) (அக.156)

அன்பின் ஐந்திணையாக இருக்கும் திணைப்பாடல்களுக்கு இலக்கணமாய்த் திகழும் பாடல்களைக் கொண்டதாக விளங்கும் நூலாகவும் நெடுந்தொகை என்று பெருமையுடன் வழங்கும் அளவிற்கு நெடிய அடிகளைக் கொண்ட பாடல்கள் அமைந்தவையுமான அகநானூற்று நூலிலிருந்து சங்கப் பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சங்ககாலப் புலவர்களுள் ஒருவரான மதுரை மள்ளனார் பாடிய பாடல் தேர்ந்தெடுத்து வழங்கப்பட்டுள்ளது. அவரைப் பற்றிய

வேறு எந்தச் செய்தியும் கொடுக்கப்படவில்லை. தாள் - 1 பாடநூலில் செய்யுள் பகுதியில் இரண்டாவது பிரிவாகத் தொகைநூல்கள் என்னும் தலைப்பில் சங்கப் பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் இரண்டாவது பாடலாக அகநானூற்றுப் பாடல் கொடுக்கப்பட்டுள்ளது.

இறவுப்புறத் தன்ன பிணர்படு தடவுமுதற்
சுறவுக்கோட் டன்ன முள்ளிலைத் தாழை
பெருங்களிற்று மருப்பின் அன்ன வரும்புமுதிர்பு
நன்மா னுழையின் வேறுபடத் தோன்றி
வழவுக்களங் கமழும் உரவுநீர்ச் சேர்ப்ப!
இனமணி நெடுந்தேர் பாக னியக்கச்
செலீ இய சேறி யாயின் இவளே
வருவை யாகிய சின்னாள்
வாழா ளாதல்நற் கறிந்தனை சென்மே. (பாடல் 3) (நற்.109)

அன்பின் ஐந்திணையாக இருக்கும் திணைப்பாடல்களுக்கு இலக்கணமாய்த் திகழும் பாடல்களைக் கொண்டதாக விளங்கும் நூலாகவும் நெடுந்தொகை என்று பெருமையுடன் வழங்கும் அளவிற்கு நெடிய அடிகளைக் கொண்ட பாடல்களைக் கொண்டதும் எட்டுத்தொகை நூல்களிலேயே நல்ல என்னும் புனைப் பெயரும் பெற்றதுமான நற்றிணை நூலிலிருந்து சங்கப் பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சங்ககாலப் பெண்பாற்புலவர்களுள் ஒருவரும் 'பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணை'யென கூறப்படுபவரும் உறையூர் வேண்மான் வெளியன் தித்தன் என்னும் சோழ மன்னனின் மகன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி அவர்கள் தன் தந்தையோடு பகைத்துக் கொண்டு தனித்திருந்து வறுமையில் புல்லரிசிக் கூழுண்டு வாழ்ந்த போதும் மல்லன் என்பவனை போரில் வெற்றி கொண்டதைக் கண்டு அவன் வீரத்தின் மீது கொண்ட காதலால் அவனையே மணம் முடிக்க வேண்டும் என விரும்பிப் பாடல் எழுதியவருமான நக்கண்ணையார் எழுதிய பாடல் தேர்ந்தெடுத்து வழங்கப்பட்டுள்ளது. அவரைப் பற்றிய வேறு எந்தச் செய்தியும் கொடுக்கப்படவில்லை. தாள் - 1 பாடநூலில் செய்யுள் பகுதியில் இரண்டாவது பிரிவாகத் தொகைநூல்கள் என்னும் தலைப்பில் சங்கப் பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் மூன்றாவது பாடலாக நற்றிணைப் பாடல் கொடுக்கப்பட்டுள்ளது.

யாரு மில்லை தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால

ஒழுகுநீ ராரல் பார்க்கும்
குருகு முண்டுதான் மணந்த ஞான்றே (பாடல் 4) (குறு.95)

ஆசிரியப்பாக்களால் தொகுக்கப் பெற்ற அகத்திணைப் பாடல்களைக் கொண்டதும் எட்டுத்தொகை நூல்களிலேயே நான்கடிச் சிறுமையும் எட்டடிப் பெருமையும் உடைய பாடல்களைக் கொண்ட குறுந்தொகை நூலிலிருந்து சங்கப் பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சங்ககாலப் புலவர்களிலேயே மிகவும் சிறந்தவராகக் கவி பாடுவதில் வல்லவராகப் புகழப்படுபவரும் கடையேழு வள்ளல்களுள் ஒருவராக வாழ்ந்த பாரியை உயிர்த் தோழனாகக் கொண்டவரும் பாரியின் அவைக்களப் புலவராக விளங்கியவரும் குறிஞ்சித் திணைப் பாடல்கள் பாடுவதில் வல்லவரும் 'வாய்மொழிக் கபிலன்' என்று நக்கீரரால் புகழப்பட்டவரும் 'நல்லிசைக் கபிலன்' என்று பெருங்குன்றூர்க் கிழாரும் 'வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்' என்று பொருந்தில் இளங்கீரனாரும் ''புலனழுக்கற்ற அந்தணாளன்', 'பொய்யா நாவிற் கபிலன்' என மாறோக்கத்து நப்பசலையாரும் புகழ்ந்து பாடியுள்ள கபிலரால் எழுதப்பட்ட பாடல் தேர்ந்தெடுத்து வழங்கப்பட்டுள்ளது. தாள் - 1 பாடநூலில் செய்யுள் பகுதியில் இரண்டாவது பிரிவாகத் தொகைநூல்கள் என்னும் தலைப்பில் சங்கப் பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் நான்காம் பாடலாகப் குறுந்தொகைப் பாடல் கொடுக்கப்பட்டுள்ளது.

மறுவில தூவிச் சிறுகருங் காக்கை
அன்புடை மரபினின் கிளையோ டாரப்
பச்சூன் பெய்த பைந்நிண வல்சி
வெஞ்சின விறல்வேற் காளையொ
டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே. (பாடல் 5) (ஐங்.176)

அகவற்பாக்களால் தொகுக்கப்பெற்ற பாடல்களைக் கொண்ட, எட்டுத்தொகை நூல்களிலேயே குறைந்த அடிகளைக் கொண்ட பாடல்களைக் கொண்ட ஐங்குநுறூறு நூலிலிருந்து சங்கப் பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சங்ககாலப் புலவர்களிலேயே மிகவும் சிறந்தவராகவும் தன் பெயரிலேயே மரூஉ மொழியைக் கொண்டவரும் மேலைக் கடற்கரைப் பகுதியில் வாழ்ந்தவரும் பெரும்பாலன பாலைத்திணைப் பாடல்களைப் பாடியவருமான ஓதலாந்தையார் பாடிய பாடல் தேர்ந்தெடுத்து வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர் குறிப்பில் முக்கியச் செய்திகள் மட்டும் வழங்கப்பட்டுள்ளன. தாள் - 1 பாடநூலில் செய்யுள் பகுதியில் இரண்டாவது பிரிவாகத் தொகைநூல்கள் என்னும் தலைப்பில் சங்கப்

பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் நான்காம் பாடலாக ஐங்குறுநூற்றுப் பாடல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 1.4.3 பாடல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ள முறை

### 6 முதல் 10ஆம் வகுப்பு

சங்க இலக்கியப் பாடலை முழுமையான ஈடுபாட்டுடன் படிக்க வேண்டும் என்பதற்காக, மாணவர்கள் நன்கு அறிந்து படிக்கும் அளவிலான செய்யுட்களே பாடநூலில் இடம்பெற்றுள்ளன. பாடல்கள் வண்ணப்பெட்டியில் கொடுக்கப்பட்டுள்ளன. அனைத்து புறநானூற்றுப் பாடல்களும் மனப்பாடம் செய்யக்கூடிய செய்யுள் என்பதைக் காட்டும் வகையில் பாடல்கள் நட்சத்திரக் குறியிட்டுக் காட்டப்பட்டுள்ளன. பாடலும் தலைப்பும் வெவ்வேறு வண்ணங்களில் கவர்ச்சியுடையதாக அமைக்கப்பட்டுள்ளன.

சங்கப் பாடல்கள் இடம்பெறும் பக்கங்கள் வண்ணமயமாக இருப்பதாலும், பாடல்கள் எளிமையான சொற்களையும் கொண்டு இருப்பதாலும் மாணவர்கள் சங்கப் பாடலைப் படிப்பதில் ஆர்வம் காட்டும் வாய்ப்பு உள்ளது. சங்கப் பாடலைக் காட்டிலும் பாடலின் பொருள் மிக எளிமையாக உள்ளதால், பாடலைக்காட்டிலும் பொருளைப் படித்தால் போதும் என்று மாணவர்கள் விட்டுவிடவும் வாய்ப்பு உள்ளது.

மாணவர்களின் கற்றல் திறனுக்கு ஏற்றவாறு பாடலின் அருஞ்சொற்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் மற்றவர்கள் உணர்வதற்குக் கடினமாக சொல்வளமிக்க சங்க இலக்கியப் பாடல்களிலிருந்து, மாணவர்களின் வகுப்பு, மொழித்திறனுக்கு ஏற்றவாறு தனித் தனிச் சொற்களைக் கொண்ட பாடல்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. பழஞ்சொற்கள் கொண்ட பாடலாக இருந்தாலும் மாணவர்கள் படித்தல் திறனுக்கு ஏற்றவகையில் பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மாணவர்கள் ஆசிரியரின் துணையோடு பாடலைப் படித்தால் கற்றல்திறன் மேலும் கூடும் அளவிற்குப் பாடலின் நடை அமைந்துள்ளது. இப்பாடல்களில் அவல், மிசை, அறிகை, தானை, துஞ்சான், துய்ப்போம், அரி, செறு, துகிர், தொடை, அலந்தவர், புணர்ந்தார் போன்ற அருஞ்சொற்கள் இடம்பெற்றுள்ளன.

### 11மற்றும் 12ஆம் வகுப்பு

மாணவர்களின் வளர்ச்சியை மனதில்கொண்டு, பாடப்புத்தகங்களில் எந்தவித வண்ணமோ, கவர்ச்சியோ கொடுக்கப்படவில்லை. சங்கப் பாடல் படித்த அனுபவம் மாணவர்களுக்கு இருப்பதால் பாடநூலில் இருக்கும் சங்கப் பாடலைப் படிப்பதில் ஆர்வம் காட்டும் வாய்ப்பு உள்ளது. சங்கப் பாடல்கள் இயல்பான முறையில் இடம்பெற்றிருப்பதாலும் பாடலின் பொருள் எந்த இடத்திலும் கொடுக்கப்படாத காரணத்தாலும் பாடலைத் தனிப்பட்ட முறையில் எடுத்துப்படிக்கும் ஆர்வம் குறையும் வாய்ப்பு உள்ளது. மேலும், பெரும்பாலும் மதிப்பெண்களை மட்டுமே மனதில் கொண்டு மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் படித்து வருவதால், பாடலைக்காட்டிலும் பொருளைப் படித்தால் போதும் என்று மாணவர்கள் விட்டுவிடவும் வாய்ப்பு உள்ளது.

மாணவர்களின் கற்றல் திறனுக்கு ஏற்றவாறும் மாணவர்களுக்குச் சங்கப் பாடல்களில் ஏற்கனவே அனுபவம் இருப்பதாலும் எளிமை என்பதற்கு ஒரு படி மேலான வகையில் பாடலின் அருஞ்சொற்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு ஏற்கனவே சங்கப் பாடல்கள் கற்பதில் அனுபவம் இருப்பதால், பழஞ்சொற்கள் கொண்ட பாடலாக மாணவர்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மாணவர்கள் படித்தல் திறனுக்கு ஏற்றவகையில் அருஞ்சொற்பொருட்கள் உடனுக்குடன் கொடுக்கப்பட்டுள்ளன.

சென்ற வருடம் வரை வண்ணமயமான புத்தகப் பக்கங்களில் சங்கப் பாடல்களைப் படித்துவிட்டு, இந்த வருடம் மிகச் சாதாரணமாக இடம்பெறும் சங்கப் பாடல்களில் மாணவர்களுக்கு ஆர்வம் ஏற்படுவது சற்றுக் கடினம். பெரும்பாலும் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் அறிவியல் மற்றும் கணிதப் பாடங்களில் அதிக ஆர்வம் காட்டுவதால், பொதுவாக மொழிப்பாடங்களை மதிப்பெண் பெறுவதற்காக மட்டும் படிப்பதால், சங்கப் பாடல் படிப்பதில் மாணவர்களிடம் ஆர்வம் குறைவாகவே இருக்கும்.

### 1.4.4 பாடலின் பன்முகக்கூறுகள்

6 முதல் 10ஆம் வகுப்பு வரை ஒரே மாதிரியான தனித்தன்மை கொண்ட புறப்பாடல்களே பெரும்பாலும் இடம்பெறுவதால் அவற்றின் பன்முகக்கூறுகள் பொதுவானவையாகவே உள்ளன.

**திணை**

6 மற்றும் 7ஆம் வகுப்பு பாடநூல்களில் வெட்சி முதல் பாடாண் இறுதியாகத் தொல்காப்பியனார் கூறும் புறத்திணைகளுள் கூறப்படாத செய்திகளையும் அகத்திணைகளுக்குப் பொதுவான செய்திகளையும் கூறும் பொதுவியல் திணையைக் கொண்ட பாடல்களாகவே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ஆனால், திணை பற்றிய குறிப்போ அல்லது விளக்கமோ பாடநூலில் எந்த இடத்திலும் கொடுக்கப்படவில்லை. மாணவர்களுக்குத் திணை பற்றிய அறிமுகம் கூட செய்யப்படவில்லை.

பொதுவாக அகப்பாடல்கள் அனைத்தும் அன்பின் ஐந்திணை என சிறப்பித்து வழங்கப்படும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை ஆகிய ஐந்து திணைகளுள் ஏதேனும் ஒன்று பயின்று வரும் பாடலாகவே இருக்கும். 9ஆம் வகுப்பில் 'மலையும் மலைசார்ந்த இடங்களும்' இளம் பருவத்தாரிடையே 'புணர்தல் புணர்தல் நிமித்தமும்' செலவும் அவர்களுக்கிடையே தம் உணர்வை எடுத்துக் கூறுவதற்குப் பொருந்துவனவாக அமையும் குறிஞ்சித்திணையும் 10ஆம் வகுப்பில் 'கடல் கடல்சார்ந்த இடங்களும்' மீன்வளம் நாடி கடலிலே திமில் ஏறி தொழிலுக்குச் சென்ற ஆடவர் வீடு திரும்பாத பொழுதான, 'இரங்கல் இரங்கல் நிமித்தமும்' கொண்ட நெய்தல் திணை மற்றும் தனக்கென்று தனி நிலம் கொள்ளாமல், முல்லையும் முறைமையில் திரிந்து நல்லியல்பு இழந்து நடுந்துயர் உறுத்துப்பாலை என்பதோர் படிவம் கொள்ளும்' என சிலப்பதிகாரம் கூறுவதும் காதலர் இடையே 'பிரிவும் பிரிதல் நிமித்தமும்' ஆக பெருந்துயருக்கு உரித்தாகும் பாலைத்திணை பயின்று வரும் பாடல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. பாடலின் திணை குறித்துக் காட்டப்பட்டுள்ளது. ஆனால், திணையின் விளக்கம் கொடுக்கப்படவில்லை.

11ஆம் வகுப்பில் ஒரு மன்னனது புகழ், வலிமை, வள்ளன்மை, அருள் முதலானவற்றை ஆய்ந்து கூறக்கூடியதும் பாடப்படுகின்ற ஆண்மகனது ஒழுகலாற்றைக் கூறக் கூடியதுமான பாடாண் திணையைக் கொண்ட பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. திணை விளக்கம் முறையாகவும் தெளிவாகவும் விளக்கப்பட்டுள்ளது. அடுத்து மலைப்பகுதியில் தனித்து வேட்டைக்குச் செல்லும் இளைஞனும் புனம் காத்து நிற்கும் கன்னியும் ஒருவரை ஒருவர் கண்டு காதலுற்று, ஒன்றுபடுவதற்கு ஏற்ற நிலத்தையும் இந்தத்துணிவிற்கு ஏற்ற

வாழ்வியலும் அமைந்த குறிஞ்சித்திணையைக் கொண்ட பாடலில் திணை குறித்து விளக்கம் கொடுக்கப்படவில்லை.

12ஆம் வகுப்பில் வெட்சி முதல் பாடாண் இறுதியாகத் தொல்காப்பியனார் கூறும் புறத்திணைகளுள் கூறப்படாத செய்திகளையும் அகத்திணைகளுக்குப் பொதுவான செய்திகளையும் கூறும் பொதுவியல் திணையைக் கொண்ட பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. திணை விளக்கமும் முறையாகவும் தெளிவாகவும் விளக்கப்பட்டுள்ளது. அடுத்து, கூதிர்காலம் மற்றும் முன்பனிக் காலத்தை பெரும்பொழுதுகளாகவும் யாமத்தைச் சிறுபொழுதாகவும் கொண்ட குறிஞ்சித்திணையில் 2 பாடல்களும், கூதிர், முன்பனி, வேனில், பின்பனி, முல்லை, கார் ஆகிய ஆறு பருவங்களையும் பெரும்பொழுதாகவும், எற்பாட்டை சிறுபொழுதாகவும் கொண்ட நெய்தல் திணையில் 1 பாடலும், வேனில் மற்றும் பின்பனிக் காலத்தைப் பெரும்பொழுதாகவும் நண்பகலைச் சிறுபொழுதாகவும் கொண்ட பாலைத்திணையில் 1 பாடலும் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. திணை குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் திணை குறித்து விளக்கம் கொடுக்கப்படவில்லை.

**துறை**

எரிந்தி லங்கு சடைமுடி முனிவர்

புரிந்து கண்ட பொருள் மொழிந் தன்று’ என்று புறப்பொருள் வெண்பாமாலையால் வழங்கப் பெறுவதும் துறவியராகிய மெய்யுணர்ந்தோர் கண்ட பொருள் இதுவென அதன் இயல்பை உணர்த்தும் பொருண்மொழிக் காஞ்சித் துறை கொண்ட பாடல்களாகவே 6 முதல் 12ஆம் வகுப்பு வரை வழங்கப்பட்டுள்ளன. ஆனால், துறை பற்றிய குறிப்போ அல்லது விளக்கமோ 6 முதல் 10 வரை உள்ள வகுப்புகளில் எந்த இடத்திலும் கொடுக்கப்படவில்லை. மாணவர்களுக்கு துறைப் பற்றிய அறிமுகம் கூட செய்யப்படவில்லை. 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் மட்டுமே இந்த விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

அகப்பாடல்களில் பெரும்பாலும் தலைவன், தலைவி மற்றும் தோழி ஆகியோருக்கு இடையே நடைபெற்ற உரையாடல்களே பாடல்களாக இடம்பெற்றுள்ளதால், பாடலின் சூழ்நிலை, பேசியவர் யார்? கேட்பவர் யார்? என்பதைப் பொறுத்துத் துறையானது தீர்மானிக்கப்படுகிறது. 9ஆம் வகுப்பில் தலைமகன் சிறைப்புறமாக, அவன் வரைந்து கொள்வது வேண்டி, தோழி இயற்பழித்த வழி, தலைமகள் இயற்பட மொழிந்தது என்னும் துறையைக்

கொண்ட பாடலும் 10ஆம் வகுப்பில் தோழி தலைமகன் சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது என்னும் துறையைக் கொண்ட பாடலும், வடக்கிருந்து உயிர்துறக்கும் இயல்பை வெளிப்படுத்தும் கையறுநிலை துறையைக் கொண்ட பாடலும் இஃது வரைவுடம் பட்டோர்க் கடாவல் வேண்டினும்' என்பதனால் தலைவன் தெருளாதவனைத் தெருட்டி வரைவு கடாயது என்னும் துறையைக் கொண்ட பாடலும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், துறை பற்றிய குறிப்போ அல்லது விளக்கமோ பாடநூலில் எந்த இடத்திலும் கொடுக்கப்படவில்லை. மாணவர்களுக்குத் துறை பற்றிய அறிமுகம் கூட செய்யப்படவில்லை.

11 ஆம் வகுப்பில் ஒரு வேந்தனின் எதிர் சென்று அவன் தன்மையைக் கூறிப் புகழ்வதாக அமையக் கூடிய இயன்மொழி வாழ்த்துத் துறையைக் கொண்ட பாடலும் செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது என்னும் துறையும் வதுவை செல்லா நின்றுழித் தலைமகற்குத் தோழி கூறியது என்னும் துறையும் பயின்று வரும் பாடல்கள் தேர்ந்தெடுத்து வழங்கப்பட்டுள்ளன. துறை விளக்கமும் பாடலுக்கு அடுத்தபடியாகவே தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

12ஆம் வகுப்பில் வினைமுற்றிய தலைவன் தேர்பாகற்குச் சொல்லியது என்னும் துறை பயின்று வரும் பாடலும், புணர்ந்து நீங்கிய தலைவனைத் தோழி வரைவு கடாவியது என்னும் துறை பயின்று வரும் பாடலும் வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது என்னும் துறை பயின்று வரும் பாடலும் உடன் போகிய தலைமகள் மீண்டுவருதற் பொருட்டுத் தாய் காகத்திற்கு பாராய்க்கடன் உரைத்த நற்றாய் கூற்று என்னும் துறை பயின்று வரும் பாடலும் தேர்ந்தெடுத்து வழங்கப்பட்டுள்ளன. பாடலின் திணையும் அடுத்து துறையும் குறித்துக் காட்டப்பட்டுள்ளது. துறையின் விளக்கமும் மாணவர்களுக்குப் புரியும் வகையில் மிக நேர்த்தியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

**கூற்று:**

அகத்திணைப் பாடல்களின் சிறப்பாகத் திகழும் தலைவன், தலைவி மற்றும் தோழி கூற்றுகளே அகப்பாடல்களின் நுட்பத்தை படிப்பவர்க்கு சிறப்பாக எடுத்துரைக்கும். பொதுவாக அகப்பாடல்கள் முழுவதும் தலைவன், தலைவி மற்றும் தோழி என்ற உறவுமுறைகள் மட்டுமே இடம்பெறுமே தவிர, மாறாக யாருடைய பெயரும் குறிப்பிடாமல் எழுதப்பட்டிருப்பது அக்காலப் புலவர்களின் மதிநுட்பத்தைக் காட்டுகிறது. 9 ஆம் வகுப்பில் தலைவிக் கூற்றும் 10ஆம்

வகுப்பில் தோழிக் கூற்றில் 2 பாடல்களும் 11ஆம் வகுப்பில் தோழிக்கூற்றில் 2 பாடலும் 12ஆம் வகுப்பில் தலைவன் கூற்றில் 1 பாடலும் புணர்ந்து நீங்கிய தலைவன் தன்னைத் திருமணம் செய்வது குறித்துத் தோழியிடம் தலைவி கூறிய தலைவி கூற்றில் 1 பாடலும் புணர்ந்து நீங்கிய தலைவனைத் தோழி வரைவு கடாயது என்னும் கூற்றில் 1 பாடலும், தலைவி தலைவனோடு உடன்போக்குச் சென்றுவிட்டதை அறிந்த பின்னர் தலைவி மீது பேரன்பு கொண்ட நற்றாய் தன் மகள் தன் கணவனோடு திரும்பி வர வேண்டும் என எண்ணி நன்னிமித்தமாக காக்கை கரையும் படி இரந்து கேட்கும் நற்றாய் கூற்றில் 1 பாடலும் இடம்பெற்றுள்ளன. ஆனால், இதற்கான விளக்கம் பாடநூலில் குறிப்பிடப்படவில்லை. மேலும், கூற்று என்பதன் விளக்கமும் குறிப்பிடப்படவில்லை.

**பா வகை**

பெரும்பாலும் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள பாடல்கள் வெண்பாவுக்குரிய பொது இலக்கணங்களைப் பெற்று நான்கு அடிகளால் அமைவதும் இரண்டாம் அடியின் ஈற்றுச் சீர் தனிச் சொல்லாகவும் அவ்வடி முதற்சீரின் எதுகைக்கேற்ப எதுகை பெற்று வருவதுமான நேரிசை ஆசிரியப்பா வகைப் பாடல்களாகவும் பயின்று வருகிறது. 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் பாவகை, பாடலின் விளக்கத்தில் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால், பாவின் விளக்கம் கொடுக்கப்படவில்லை.

**இறைச்சி**

11ஆம் வகுப்பில் பெண்புலியின் பசிக்கு இரங்கி உழைமானின் குரலை உற்றுக் கேட்கும் ஆண்புலி வழங்கும் சுரம் என்றதால் நம் தலைவரும் நமது துன்ப நோய்க்கு இரங்கி விரைய வருவார் என்ற இறைச்சிப் பொருள் பாடலில் பயின்று வந்துள்ளது. ஆனால், பாடலில் இடம்பெறும் இறைச்சி விளக்கப்பட்டுள்ளதே தவிர, இறைச்சி என்பதன் விளக்கம் எங்கும் கொடுக்கப்படவில்லை.

12ஆம் வகுப்பில் ‘அன்புடை மரபின் நின் கிளையொடார வல்சி தருகுவென்’ என்னும் பொருட்குப் புறத்தே, தலைவனும் தலைவியும் மீண்டுவரின் நான் அவர்களுக்கு என் இல்லத்தின்கண் திருமண விழா எடுத்து என் அன்பிற்குரிய சுற்றத்தாருடன் மகிழ்ந்திருப்பேன் என்று நற்றாய் கூறுவதாக

இறைச்சிப் பொருள் தோன்றிற்று என்று பாடலில் உள்ள இறைச்சி பற்றிய விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இறைச்சி என்பதன் தனிப்பட்ட விளக்கம் கொடுக்கப்படவில்லை.

**உள்ளுறை உவமம்**

11ஆம் வகுப்பில் வதுவையில் தலைவிக்கு மலரணியக் கண்ட தோழி இவ்வாறாம்படி அன்றே சூட்டினாள் எனச்சொல்லியவாறாம்.

மலர்ந்த வேங்கைக்கண் இருந்த தோகை

பொன்னணி மடந்தையில் தோன்றும் நாட – என்றது

தலைவனே, நின் உறவினர் இன்று தலைவிக்குத் திருமணம் கருதிப் பூச்சூட்டிச் சிறப்புச் செய்தனர். நீயோ அவளோடு பழகியிருந்த நாள்களிலேயே அவளுக்கு மணமகட்கோலம் போல அழகு செய்து மகிழ்ந்திருந்தனை' என்று உள்ளுறை உவமம் பாடலில் பயின்று வந்துள்ளது. ஆனால், பாடலில் இடம்பெறும் உள்ளுறை உவமம் விளக்கப்பட்டுள்ளதே தவிர, உள்ளுறை உவமம் என்பதன் விளக்கம் எங்கும் கொடுக்கப்படவில்லை.

12ஆம் வகுப்பில் தலைவி தலைவன் மீது கொண்ட காதலில் முதிர்ந்து, தன் சுற்றத்தாரிடமிருந்து வேறுபட்டுத் தலைவனுடன் அவன் இல்லத்தில் இல்லறம் நிகழ்த்தும் செவ்வியினைப் பெற்று விட்டாள் என்ற உள்ளுறை உவமம் பாடலில் இடம்பெற்றுள்ளது. இதனால் தலைவன் தலைவியை விரைந்து மணம் செய்து கொள்ளல் இன்றியமையாதது என்பது குறிப்பால் உணர்த்தப்படுகிறது. இந்த உள்ளுறை உவமத்தின் விளக்கம் உடனுக்குடன் மிகவும் தெளிவாக மாணவர்கள் விளங்கும் வண்ணம் கொடுக்கப்பட்டுள்ளது.

### 1.4.5 பாடலின் விளக்கம்

6 முதல் 10ஆம் வகுப்பில் பாடல் கொடுக்கப்பட்டதற்கு அடுத்தப் படியாகவே, பாடலின் பொருளும் கொடுக்கப்பட்டுள்ளது. அடிக்கு அடி பொருள் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சொற்களுக்கும் பொருள் கொடுக்கப்பட்டது மட்டுமல்லாமல், பாடல் முழுவதும் பொருள் விளங்குமாறு உரைநடைப்படுத்தியும் பொருள் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியரின் துணையின்றி மாணவர்கள் தானாகவே படித்துப் பொருள் விளங்கும்படி பொருள்

விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. பாடலின் அடிகளை மட்டும் விளக்கும் வகையில் மிகச் சரியான பொருள் விளக்கம் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், கற்றலின் நோக்கம், பாடலின் பின்கதை மற்றும் பாடல் ஆசிரியரால் எழுதப்பட்டதன் காரணம் போன்றவை கொடுக்கப்படவில்லை. பாடலின் உள்நோக்கம் சம்பந்தப்பட்ட விளக்கங்கள் கொடுக்கப்படவில்லை. ஆனால், அந்தப் பாடல் சம்பந்தப்பட்ட அதிகப்படியான விளக்கங்கள் கொடுக்கப்படவில்லை. கூற்று என்ற சொல்லும் அறிமுகப்படுத்தப்படவில்லை. உரிப்பொருள் மற்றும் கருப்பொருள் சம்பந்தமான எந்த செய்திகளும் தெரிவிக்கப்படவில்லை.

11 மற்றும் 12ஆம் வகுப்பில் பாடல் கொடுக்கப்பட்ட பகுதியில் பாடலின் பொருள் எந்த வகையிலும் கொடுக்கப்படவில்லை. பழஞ்சொற்களுக்கு அருஞ்சொற்பொருள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றைக் கொண்டு பாடலின் பொருள் புரிந்து கொள்ளுதல் மாணவர்களின் தனிப்பட்ட திறமையால் இயலாத காரியம் ஆகும். ஆசிரியரின் துணையின்றி மாணவர்கள் இப்பாடலைப் படிப்பது சாத்தியமாகாது. இதனால், பாடலைத் தனிப்பட்ட முறையில் படிப்பதில் ஆர்வம் ஏற்படும் வாய்ப்பு மிகக் குறைவு. பாடலைக் காட்டிலும் பாடலின் பொருள் மிகவும் நேர்த்தியாக அமைந்தாலும் அதை விளக்கும் வகையில் எந்த ஒரு விளக்கமும் வழங்கப்படவில்லை. பாடலின் பொருளை மாணவர்களுக்கு புரிய வைக்கும் அனைத்து வழிகளும் ஆசிரியர் ஒருவரை மட்டுமே சார்ந்துள்ளதால், ஆசிரியரின் கற்பித்தல் சரியாக இருப்பின் பாடல் கொடுக்கப்பட்டதன் முக்கியத்துவம் அனைத்தும் நிறைவேறும். இதற்கு மாறாக, ஆசிரியரின் கற்பித்தலில் ஏதேனும் குறை இருப்பின் மாணவர்களிடம் இந்த கற்றல் அடைவு மற்றும் கற்றல் பொருளின் தரம் குறைவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது. மேலும், 12ஆம் வகுப்பில் ‘தோழி! தண்பதக்காலை நம் காதலர் வரினும் வாராராயினு ஆண்டு அவர்க்கு இனிதுகொல்’என்று கூறித் தன் கண் சிவப்ப அருந்துயருடையாள் நின் தலைவி, என்று பாணன் தூது வந்தனன். வலவ! வினையும் முடிந்தன்று: நீயும் தேர் விரைந்து ஊர்மதி என்ற முடிபு பாடலில் இடம்பெற்றுள்ளது. இந்த முடிபின் விளக்கம் உடனுக்குடன் மிகவும் தெளிவாக மாணவர்கள் விளங்கும் வண்ணம் கொடுக்கப்பட்டுள்ளது.

### 1.4.6 பாடலின் விழுமியங்கள்

6ஆம் வகுப்பில் பாடலின் மூலம் மாணவர்கள், நாட்டுப்பற்று, நன்மக்களாய் வாழ்வதன் நோக்கம், நாட்டில் மக்கள் வாழும் முறை, மக்களின் பண்பாடு, போன்ற மிகச்சிறந்த கற்றல் விழுமியங்கள் பெறும் அளவில் இப்பாடல் அமையப்பட்டுள்ளது.

7ஆம் வகுப்பில் அரசனின் கடமையைப் பற்றியும், நாட்டுமக்களுக்கு மன்னன் மீது உள்ள நம்பிக்கையைப் பற்றியும் விளக்குவதால், அக்கால மன்னர்களின் மேன்மையை அறிய முடிகிறது.

9ஆம் வகுப்பில் அரசனின் பெருமை எதில் அடங்கியுள்ளது என்பது பற்றியும் நாட்டின் வளம் எவ்வாறு ஒரு மன்னனைப் பெருமைப்படுத்துகிறது என்பது பற்றியும் அக்காலப் பெண்கள் எப்படிப்பட்ட ஆண்மகனை விரும்பினார்கள் என்றும் அறிவதன் மூலம் மாணவர்கள் ஒரு மன்னனின் பண்புநலன்கள் பற்றியும் அதனால் அவர்களுக்கு ஏற்படும் மேன்மையைப் பற்றியும் அறிய முடிகிறது.

10ஆம் வகுப்பில் அரசனின் நட்பின் ஆழத்தைப் பற்றியும் புலவர்களுக்கு மன்னர்கள் கொடுத்த மேலான இடத்தைப் பற்றியும் புலவர்கள் மன்னர்கள் மீது வைத்திருந்த மரியாதையைப் பற்றியும் அறியும் வகையில் பாடல் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்து, இல்வாழ்க்கை என்பதன் பொருள், அன்புடையோர் எப்படி வாழ வேண்டும்? பண்பு எனப்படுவது எது? அன்பு எனப்படுவது எது? அறிவு எனப்படுவது எது? நெருக்கம் எனப்படுவது எது? நிறைவு எனப்படுவது எது? நீதிமுறைமை எனப்படுவது எது? பொறுமை எனப்படுவது எது? என்ற செய்திகளைப் பற்றியும் மனிதமாண்பு, வாழ்க்கையின் நோக்கங்கள் போன்ற உயர்ந்த விழுமியங்கள் அனைத்தும் வளர்க்கும் வகையில் பாடல் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

11 மற்றும் 12ஆம் வகுப்பில் உள்ள பாடல்கள் அக்கால மன்னர்களின் மேன்மையையும் தலைவன் தலைவி உறவு முறை பற்றியும் தோழி என்பவளின் முக்கியத்துவம் பற்றியும் விளக்குவதால் அக்கால மக்களின் வாழ்க்கை முறையையும் அறிய முடிகிறது.

6 முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள பாடநூல்களில், நாட்டு மன்னனின் கடமை, நாட்டுப்பற்று, நன்மக்களாய் வாழ்வதன் நோக்கம், நாட்டில் மக்கள் வாழும் முறை, மக்களின் பண்பாடு, செல்வத்தை நாம் பயன்படுத்தும் முறை,

அக்கால மக்களின் ஈகைத் திறன், பண்பாடு, போர்த்திறம், நாட்டு மன்னனால் நாட்டு மக்கள் பெறும் பயன் போன்ற மிகச்சிறந்த கற்றல் விழுமியங்கள், அக்காலத்தில் மக்கள் மன்னன் மீது கொண்ட மதிப்பு, நட்பு என்றால் என்ன? நட்பின் இலக்கணம், நட்பினால் ஏற்படும் இணக்கம், நட்பின் பயன்பாடு, இல்வாழ்க்கை என்பதன் பொருள், அன்பு மற்றும் பண்பு ஆகியவற்றின் வேறுபாடு, நீதிமுறைமை, பொறுமை, தலைவன் என்பவனின் குணநலன்கள், தலைவன் தலைவி உறவுமுறை, ஆகியவற்றின் இலக்கணம், அன்பு என்றால் என்ன? பண்பு என்றால் என்ன? முறை என்றால் என்ன? நிறை என்றால் என்ன? பொறை என்றால் என்ன? போற்றுதல் என்றால் என்ன? ஆற்றுதல் என்றால் என்ன? போன்ற வினாக்களுக்கெல்லாம் விடையாக சோழன் நல்லுருத்திரன் கொடுத்த செய்திகள், போன்ற மிகச்சிறந்த கற்றல் விழுமியங்கள் பெறும் அளவில் அனைத்துப் பாடல்களும் தேர்ந்தெடுத்து அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த அனைத்து விழுமியங்களும் தனிப்பட்ட முறையில் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. ஆசிரியரின் தனிப்பட்ட கற்பித்தலின் மூலமே மாணவர்கள் இந்த விழுமங்களை உணர முடியும். இல்லையெனில், கற்றல் பொருளின் தரம் குறைய வாய்ப்புள்ளது.

### 1.4.7 பாடலுக்கான பழகுசெயல்கள்

6ஆம் வகுப்பில் சங்கப் பாடலுக்கான பழகு செயல்கள் உடனுக்குடன் தனிப்பட்ட முறையில் வழங்கப்படவில்லை. மாறாக, அதன் இணைப்பாடங்களுடன் இயல் முடிவில் கொடுக்கப்பட்டுள்ளது. பாடலின் ஆழ்ந்த பொருளை மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் வினாக்கள் கேட்கப்படவில்லை. மாறாக, பாடலின் விளக்கத்தைக் கூறும் வகையில் எளிமையான வினாக்கள் மட்டுமே கேட்கப்பட்டுள்ளன. அவையும், சங்கப் பாடலுக்கென தனிப்பட்ட முறையில் கேட்கப்படவில்லை. அந்த இயல் முழுவதும், உள்ள பாடங்களுக்கு மொத்தமாகவே வினாக்கள் கேட்கப்பட்டுள்ளன.

7 முதல் 10ஆம் வகுப்பில் சங்கப் பாடலுக்கான பழகு செயல்கள் உடனுக்குடன் அடுத்தப் பக்கத்திலேயே தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்டுள்ளது. பாடலின் உள்ளார்ந்த பொருளை மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் வினாக்கள் கேட்கப்படவில்லை. மாறாக, பாடலின் விளக்கத்தைக் கூறும் வகையில் எளிமையான வினாக்கள் மட்டுமே கேட்கப்பட்டுள்ளன. நூற்குறிப்பையும் ஆசிரியர் குறிப்பையும் எழுதச் சொல்லி வினாக்கள் கேட்கப்பட்டுள்ளன. சங்கப் பாடல் தொடர்பாக தொடர் பணிகள்

எதுவும் பாடநூலில் குறிக்கப்படவில்லை. சங்க இலக்கிய செய்யுள் ஆர்வத்தை வளர்க்கும் வகையில் எந்த ஒரு வினாவும் கேட்கப்படவில்லை. செய்யுள் விளக்க வகை அடிப்படையில் மட்டுமே அனைத்து வினாக்களும் கேட்கப்பட்டுள்ளன.

10ஆம் வகுப்பில் மற்ற வகுப்பிலிருந்து சற்று மாறுபட்டுப் பழஞ்சொற்களுக்கு பொருள் அறிந்து கொள்ளும் வகையில் சில வினாக்கள் கேட்கப்பட்டுள்ளது. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களை அகம், புறம், அகப்புறம் என வகைப்படுத்துமாறு செயல்திட்டம் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்கள் சங்கப் பாடல்களைத் தேடிப் படிக்கும் வாய்ப்பு உள்ளது. ஆனால், இந்தத் தொடர் பணியைச் சரியான முறையில் மாணவர்களிடம் கொண்டு சேர்த்தால் மட்டுமே இது சாத்தியமாகும். இது, ஆசிரியரின் தனிப்பட்ட ஊக்கமுறையினாலும் செயல்பாட்டினாலும் நிகழ வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

11 மற்றும் 12ஆம் வகுப்பில் சங்கப் பாடலுக்கான பழகு செயல்கள் மொத்தமாக அனைத்து பாடல்களுக்கும் சேர்த்து அடுத்தப் பக்கத்தில் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், சங்க இலக்கிய செய்யுள் ஆர்வத்தை வளர்க்கும் வகையில் எந்த ஒரு வினாவும் கேட்கப்படவில்லை. செய்யுள் விளக்க வகை அடிப்படையில் மட்டுமே அனைத்து வினாக்களும் கேட்கப்பட்டுள்ளன. பாடலின் ஆழ்ந்த பொருளை மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் அதிகமான வினாக்கள் கேட்கப்படவில்லை. மாறாக, பாடலின் விளக்கத்தைக் கூறும் வகையில் எளிமையான வினாக்கள் மட்டுமே கேட்கப்பட்டுள்ளன.

### 1.4.8 பாடல் இடம் பெற்றதன் நோக்கம்

விழுமங்களை மனதில் பதிய வைத்து நடத்தையில் மாற்றம் ஏற்படுத்துவது கல்வியின் நோக்கமாகும். பலவகைப்பட்ட விழுமங்களைப் பதிப்பதற்கு சங்க இலக்கியப் பாடல்கள் பெரிதும் உறுதுணையாவதைக் கல்விக் கொள்கைகளும் கல்வி வல்லுநர்களும் எடுத்துக் காட்டியுள்ளனர். 6ஆம் வகுப்பில் மாணவர்களிடம் உயர்வான விழுமியங்களான நாட்டுப் பற்று, தேசப்பற்று, மனிதமாண்பு போன்றவை வளர்க்கும் வகையில் பாடல் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. 7ஆம் வகுப்பில் மாணவர்களுக்கு மன்னனின் முக்கியத்துவமும் நாட்டுப்பற்றும் மனிதர்கள் பிறந்ததன் நோக்கமும் வாழ்க்கையில் நல்லவர்களாக வாழ வேண்டும் என்ற சமூக விழுமம் வளர்க்கும் நோக்கில் பாடல் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

9ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மன்னனின் முக்கியத்துவமும் நாட்டுப்பற்றும் செல்வத்தை நாம் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் மனிதர்கள் பிறந்ததன் நோக்கமும் வாழ்க்கையில் நல்லவர்களாக வாழ வேண்டும் என்ற சமூக விழுமமும் வளர்க்கும் நோக்கில் பாடல் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அகப்பாடல்கள் முழுவதும் அக்காலத்தில் மக்களிடத்தில் அன்பு மற்றும் காதல் பற்றி எழுதப்பட்டது. 9ஆம் வகுப்பில் மாணவர்களுக்கு முதன்முதலாக அகப்பாடல் அறிமுகப்படுத்தப்படுவதால், புறப்பாடல் போன்றே இருக்கும் ஒரு அகப்பாடல் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது, இடம் பெறும் பாடல் மூலம் தலைவனின் பெருமையை கூறுவது போலவே ஒரு நாட்டின் பெருமைக் கூறப்படுகிறது. இதன் மூலம் மாணவர்களுக்கு ஒரு நாட்டு மன்னனின் முக்கியத்துவமும் நாட்டுப்பற்றும் மன்னனால் நாடு அடையும் புகழும் அதன் மூலம் அவன் குணநலத்தைக் கணக்கிடும் வழக்கத்தையும், வாழ்க்கையில் நல்லவர்களாக வாழ வேண்டும் என்ற சமூக விழுமமும் வளர்க்கும் நோக்கில்˙ பாடல் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அக்கால மக்களின் தொழில்களைப் பற்றியும், அதனை மேற்கொண்ட முறையினைப்பற்றியும் செல்வத்தின் உண்மையான சிறப்பு எது? அந்தச் செல்வத்தைப் பயன்படுத்தும் முறை பற்றியும், மென்மையான பண்பு எது? அதைப் பற்றிய சான்றோரின் கருத்து மற்றும் நட்பின் முக்கியத்துவத்தையும் ஒரு மன்னன் மற்றும் ஒரு புலவருக்கு இடையே உள்ள நட்பின் ஆழத்தையும் அதனால் அவர் உயிர் துறக்கவும் தயாராக இருந்த மேலான குணத்தையும் அம்மாமன்னனின் குணநலன்கள் பற்றியும் அதன் மூலம் நாம் எவ்வாறு நட்புக் கொள்ள வேண்டும் என்றும் இல்வாழ்க்கை, பண்பு, அன்பு, அறிவு, நெருக்கம், நிறைவு, நீதி, பொறுமை ஆகியவற்றின் விளக்கங்களையும் அதற்கான உதாரணங்களையும் மனிதர்கள் பிறந்ததன் நோக்கமும் வாழ்க்கையில் நல்லவர்களாக வாழ வேண்டும் என்ற சமூக விழுமமும் வளர்க்கும் நோக்கில் பாடல்கள் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

11ஆம் வகுப்பில் உள்ள முதல் பாடல் மூலம் மாணவர்கள் அக்கால மன்னர்களின் மேன்மை, அவர்களது புகழ், ஈகைத் திறன், வீரம், வாழ்ந்த விதம், மக்களைப் பேணிய விதம் போன்ற பல நல்ல ஆண்மகனின் ஒழுகலாறுகளைக் கற்பதன் மூலம் அவர்களிடமும் இதே போன்ற பல நல்ல குணநலன்களை வளர்க்கும் நோக்கிலும் 2ஆம் பாடல் மூலம் மாணவர்கள் அக்கால மக்கள் ஒருவர் மீது ஒருவர் கொண்ட அன்பு, தோழி என்பவரின் முக்கியத்துவம், தலைவி

தலைவனைப் பிரிந்து படும் துன்பம் போன்ற பலதரப்பட்ட அகவாழ்க்கை சம்பந்த செய்திகளை நன்முறையில் மாணவர்கள் உணர்ந்து வளரும் வகையில் பல நல்ல குணநலன்களை வளர்க்கும் நோக்கிலும் 3ஆம் பாடல் மூலம் மாணவர்கள் அக்கால மக்கள் ஒருவர் மீது ஒருவர் கொண்ட அன்பு, தோழி என்பவரின் முக்கியத்துவம், தலைவி தலைவனைப் பிரிந்து படும் துன்பம் போன்ற பலதரப்பட்ட அகவாழ்க்கை சம்பந்தப்பட்ட செய்திகளை நன்முறையில் மாணவர்கள் உணர்ந்து வளரும் வகையில் பல நல்ல குணநலன்களை வளர்க்கும் நோக்கிலும் தேர்ந்தெடுத்து வழங்கப்பட்டுள்ளது.

12ஆம் வகுப்பில் இடம் பெறும் பாடல்கள் மூலம் மாணவர்கள் அக்கால மன்னர்களின் மேன்மை, அவர்களது புகழ், ஈகைத் திறன், வீரம், வாழ்ந்த விதம், மக்களைப் பேணிய விதம் போன்ற பல நல்ல ஆண்மகனின் ஒழுகலாறுகளைக் கற்பதன் மூலம் அவர்களிடமும் இதே போன்ற பல நல்ல குணநலன்களை வளர்த்தல், அக்கால மக்கள் ஒருவர் மீது ஒருவர் கொண்ட அன்பு, தோழி என்பவரின் முக்கியத்துவம், தலைவி தலைவனைப் பிரிந்து படும் துன்பம், தோழி என்பவரின் முக்கியத்துவம், தலைவி தலைவனைப் பிரிந்து படும் துன்பம், தலைவன் தலைவியின் உறவுமுறை, தலைவன் மீது தலைவி வைத்துள்ள நம்பிக்கை, காதல், பிணைப்பு, தலைவி தலைவனுடன் உடன்போக்கு சென்றுவிட்ட பிறகு தாயின் தவிப்பு போன்ற பலதரப்பட்ட அகவாழ்க்கை சம்பந்தப்பட்டச் செய்திகளை நன்முறையில் மாணவர்கள் உணர்ந்து வளரும் வகையில் பல நல்ல குணநலன்களை வளர்க்கும் நோக்கில் பாடல்கள் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆனால், பாடநூலில் பாடல் இடம்பெறும் பகுதியில், பாடல் கற்பிக்கப்படுவதற்கான நோக்கம் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

### 1.4.9. பாடலுக்கும் இணைப்பாடங்களுக்கும் உள்ள தொடர்பு

தமிழ் பாடநூல்களில் உள்ள அனைத்துப் பாடங்களும் இயல் வாரியாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு இயலில் ஒரு செய்யுள், ஒரு உரைநடை, ஒரு துணைப்பாடம், ஒரு இலக்கணம் என்ற வகையில் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒரு இயலில் கொடுக்கப்படும் செய்யுள், உரைநடை, இலக்கணம் மற்றும் துணைப்பாடம் ஆகியவை பெரும்பாலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையாதாகவே அமைக்கப்படும்.

6ஆம் வகுப்பில் பாடல் இடம்பெற்றிருக்கும் ஆறாவது இயலிலும் இந்த ஒற்றுமை காணப்படுகிறது. சங்க இலக்கியப்பாடலின் பொருளுக்கு ஏற்ற வகையிலே உடன் ஒரு விழிப்புணர்வு பாடலும் அந்தப் பாடலின் பொருளுக்கு ஏற்றவாறு வாழ்ந்து காட்டிய ஒரு தியாகியின் பண்புநலன்களை விவரிக்கும் வகையில் ஒரு உரைநடையும் அந்த பொருளைத் தொடர்ந்து வருமாறு துணைப்பாடக் கதையும் அமைந்துள்ளது.

7ஆம் வகுப்பில் பாடல் இடம்பெற்றிருக்கும் இரண்டாவது இயலில், தொடர்ந்து இரண்டு செய்யுள்கள் இடம்பெற்றுள்ளன. இரண்டுமே சங்க இலக்கிய செய்யுள்கள் ஆகும். சங்க இலக்கியப் பாடல்கள் இரண்டுமே உள்நோக்க அடிப்படையில் இணையாக உள்ளன. ஆனால், உரைநடையும் துணைப்பாடமும் இதற்கு சம்பந்தப்பட்டதாக இல்லை.

9ஆம் வகுப்பில் பாடல் இடம்பெற்றிருக்கும் மூன்றாவது இயலில் தொடர்ந்து மூன்று செய்யுள் பகுதிகளும், ஒரு உரைநடையும் ஒரு துணைப்பாடமும் ஒரு இலக்கணமும் இடம்பெற்றுள்ளன. முதல் இரண்டுமே சங்க இலக்கியச் செய்யுள்கள் ஆகும். ஆனாலும், அவை இரண்டிற்கும் இடையே எந்த வித ஒற்றுமையும் இல்லை. மேலும், அந்த இயலில் இடம்பெற்றிருக்கும் எந்த ஒரு பாடத்திற்கும் எந்த விதத்திலும் ஒற்றுமை இல்லை. உரைநடையும் துணைப்பாடமும் இதற்குச் சம்பந்தப்பட்டதாக இல்லை.

10ஆம் வகுப்பில் பாடல் இடம்பெற்றிருக்கும் இரண்டாவது இயலில் தொடர்ந்து மூன்று செய்யுள் பகுதிகளும் ஒரு உரைநடையும் ஒரு துணைப்பாடமும் ஒரு இலக்கணமும் இடம்பெற்றுள்ளன. முதல் இரண்டுமே சங்க இலக்கிய செய்யுள்கள் ஆகும். இவை இரண்டிற்கும் இடையே நேரடியான ஒற்றுமை எதுவும் இல்லை. ஆனால், உட்கருத்து அடிப்படையில் ஓரளவு ஒற்றுமையைக் காணமுடிகிறது. மற்றபடி இவை இரண்டிற்கும் இடையே எந்த வித ஒற்றுமையும் இல்லை. மேலும், அந்த இயலில் இடம்பெற்றிருக்கும் எந்த ஒரு பாடத்திற்கும் எந்த விதத்திலும் ஒற்றுமை இல்லை. மேலும், உரைநடையும், துணைப்பாடமும் கூட ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டதாக இல்லை.

10ஆம் வகுப்பில் 3ஆம் பாடல் இடம்பெற்றிருக்கும் ஒன்பதாவது இயலில் தொடர்ந்து மூன்று செய்யுள் பகுதிகளும் ஒரு உரைநடையும் ஒரு துணைப்பாடமும் ஒரு இலக்கணமும் இடம்பெற்றுள்ளன. முதல் செய்யுள் சங்க இலக்கியச் செய்யுள் ஆகும். ஆனாலும், இவற்றிற்கு இடையே எந்த வித

ஒற்றுமையும் இல்லை. மேலும், அந்த இயலில் இடம்பெற்றிருக்கும் எந்த ஒரு பாடத்திற்கும் எந்த விதத்திலும் ஒற்றுமை இல்லை. உரைநடையும் துணைப்பாடமும் கூட இதற்குச் சம்பந்தப்பட்டதாக இல்லை.

11ஆம் வகுப்பில் பாடல் இடம்பெற்றிருக்கும் இரண்டாவது இயல் தொகை நூல்களுக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் தொடர்ந்து மூன்று சங்கப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவை மூன்று பாடல்களுக்கும் இடையே நேரடியான ஒற்றுமை எதுவும் இல்லை. ஆனால், உட்கருத்து அடிப்படையில் ஓரளவு ஒற்றுமையைக் காணமுடிகிறது. மற்றபடி இந்த மூன்று பாடல்களுக்கும் இடையே எந்த வித ஒற்றுமையும் இல்லை. முதல் பாடல் புறப்பொருள் பற்றியதாகவும், மற்ற இரண்டு பாடல்களும் அகப்பொருள் பற்றியதாகவும் அமைந்துள்ளது.

12ஆம் வகுப்பில் பாடல் இடம்பெற்றிருக்கும் இரண்டாவது இயல் தொகை நூல்களுக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் தொடர்ந்து ஐந்து சங்கப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்த ஐந்து பாடல்களுக்கும் இடையே நேரடியான ஒற்றுமை எதுவும் இல்லை. ஆனால், உட்கருத்து அடிப்படையில் ஓரளவு ஒற்றுமையைக் காணமுடிகிறது. மற்றபடி இந்த ஐந்து பாடல்களுக்கும் இடையே எந்த வித ஒற்றுமையும் இல்லை. முதல் பாடல் புறப்பொருள் பற்றியதாகவும் மற்றப் பாடல்கள் அகப்பொருள் பற்றியதாகவும் அமைந்துள்ளது.

### 1.4.10 பாடல் தொடர்புடைய விளக்கங்கள்

6 முதல் 10ஆம் வகுப்பு வரை கொடுக்கப்பட்டுள்ள 4 முதல் 9 அடி பாடல் மூலம் மாணவர்கள் சங்க இலக்கியங்களைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்வது கடினம். 6ஆம் வகுப்பில் நூற்குறிப்பு பற்றிய தகவல்களும் ஆசிரியர் குறிப்பு பற்றிய தகவல்களும் மாணவர்களின் வகுப்பு நிலைக்கேற்ப மிகவும் குறைவாகவே கொடுக்கப்பட்டுள்ளது.

7ஆம் வகுப்பிலிருந்து நூற்குறிப்பு சற்று விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் குறிப்பிலும் அக்கால புலவர்களின் மேன்மையை விளக்குமாறு செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், நூற்குறிப்பும் ஆசிரியர் குறிப்பும் நன்முறையில் விளக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் பெருமைக்குரிய காரணமும் விளக்கப்பட்டுள்ளது.

9 மற்றும் 10ஆம் வகுப்பில் அகத்திணைகள் பற்றிய செய்திகள் மாணவர்கள் அறிந்து கொள்ளுமாறு செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளது. நூற்குறிப்பு சற்று விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் குறிப்பிலும் அக்கால புலவர்களின் மேன்மை, மன்னர்களின் மேன்மை, நட்பின் மேன்மை ஆகியவற்றை விளக்கும் வகையில் உள்ள செய்திகளின் மூலம் சங்க இலக்கியங்களின் தனித்தன்மையை அறியும் வாய்ப்பு உள்ளது.

11 மற்றும் 12ஆம் வகுப்பில் சங்கப் பாடல்களின் ஆசிரியர் குறிப்பில் அதிக விளக்கங்கள் இல்லை. ஆசிரியரின் பெயர் மற்றும் பாடிய பாடல்களின் எண்ணிக்கை மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், திணை மற்றும் நூலின் ஓசை மற்றும் கருத்தாழம் பற்றி விளக்கும் வகையில் உள்ள செய்திகளின் மூலம் சங்க இலக்கியங்களின் தனித்தன்மையை அறியும் வாய்ப்பு உள்ளது. மாணவர்கள் பாடலின் பொருளை புரிந்து கொள்ளும் வகையில் எளிதான சொற்களைக் கொண்டு விளக்கப்பட்டுள்ளது. பாடலின் பொது விளக்கம் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கான சூழ்நிலையை விளக்கும் வகையில் எந்த ஒரு எடுத்துக்காட்டும் கொடுக்கப்படவில்லை. பொதுவாக சங்க இலக்கியப்பாடல்கள் தொன்மையான தமிழ் நடையைக் கொண்டது. இருப்பினும், மாணவர்களின் வகுப்பு, மொழித்திறன் ஆகியவற்றை மனதில் கொண்டு எளிய தனித்தனி சீர்களைக் கொண்ட பாடலாகவும் அவர்களுக்குப் புரியும் வண்ணம் நல்ல கருத்து கொண்ட பாடலாகவும் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. பாடலில் பழஞ்சொற்களில் எந்த மாற்றமும் இல்லை. அத்தகைய பழஞ்சொற்களுக்கான பொருள் விளக்கம் பாடலுக்கு அடுத்து கொடுக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஆறு மற்றும் ஏழாம் வகுப்புப் பாடநூலில் இடம்பெறும் சங்கப் பனுவல்கள்: மதிப்பீடு

சங்கப் பாடல் முதன் முறையில் அறிமுகப்படுத்துவதற்கான எந்த ஒரு குறிப்பும் வழங்கப்படவில்லை. அதனால், மாணவர்களுக்குச் சங்கப் பாடல் பற்றிய எந்த ஒரு எதிர்பார்ப்பும் இருக்க வாய்ப்பில்லை.

மேலும், மற்றச் செய்யுள்களுக்கும் சங்கப் பாடலுக்கும் புத்தகப் பதிப்பைப் பொறுத்தவரை எந்த ஒரு வேறுபாடும் இல்லை. அதனால், சங்க இலக்கியத்திற்கே உரிய தனித்தன்மையை மாணவர்கள் தெரிந்துகொள்ள எந்த வாய்ப்பும் இல்லை.

புறநானூற்றுப் பாடல் மட்டுமே இடம்பெற்றுள்ள நிலையில், சங்கப் பாடல்களில் உள்ள முக்கியப் பிரிவுகளான அகம் மற்றும் புறம் பற்றிய எந்த ஒரு விளக்கமோ அல்லது அறிமுகமோ கொடுக்கப்படவில்லை. அதனால், மாணவர்கள் புறம் என்பதற்கான தனித்தன்மையை அறிய வாய்ப்பில்லை.

சங்ககாலப் பாடல்கள் பெரும்பாலும் மன்னனைப் பற்றி அமைந்திருந்தாலும் மன்னர்களின் பண்புகள் மற்றும் மாண்புகள் பற்றி எந்த ஒரு குறிப்பும் இல்லை. ஆசிரியர்கள் கற்பித்தலுக்கு ஏற்ற வகையில் எந்த ஒரு குறிப்பும் வழங்கப்படாத நிலையில், ஆசிரியர்கள் தனது தனிப்பட்ட விருப்பத்தின் அடிப்படையில் மட்டுமே இந்தச் செய்திகளைக் கற்பிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, இன்றுள்ள கல்வி நடைமுறையில் அனைத்து ஆசிரியர்களும் இதைச் செய்வார்களா? என்பது சந்தேகத்திற்குரியச் செயலாகும்.

சங்ககாலப் புறப்பாடல்கள் பெரும்பாலும் போர்கள், படைகள் பற்றியும், ஆயிரம் பேரைக் கொன்றவனை மட்டுமே சிறந்த வீரானாகக் கருதுவது போன்ற செய்திகள் பற்றியும் அமைவதால், மாணவர்களிடத்தில் இதைக் கொண்டு சேர்க்கும் போது அது வன்முறையைத் தூண்டுவதாக அல்லாமல், அவர்கள் அதிலுள்ள வீரத்தின் தனித்தன்மையை மட்டும் புரிந்து கொள்ளும் வகையில் விளக்குதல் வேண்டும். இந்த விளக்குதல் முறைக்கு ஆசிரியர்கள் தனது தனிப்பட்ட கற்பித்தல் திறனைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது.

சங்கப் பாடல்களில் இடம்பெறும் பழந்தமிழர்களின் வாழ்க்கை முறை இன்றுள்ள வாழ்க்கை முறைக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருப்பதால், ஆசிரியர் இதனைக் கற்பிக்கும் போது, மாணவர்களிடம் பல்வேறு வகையான சந்தேகங்கள் எழ வாய்ப்புள்ளது. அதனை, முற்றிலும் தீர்க்கும் வகையில் ஆசிரியரின் கற்பித்தல் இருக்க வேண்டியது அவசியம். இல்லையெனில், இந்தச் சங்ககால செய்திகள் அனைத்தும் மாணவர்களிடத்தில் வெறும் செய்திகளாகவோ அல்லது கட்டுக்கதைகளாக சென்று சேரும் பட்சத்தில், மாணவர்களுக்குச் சங்கப் பாடல்கள் மீதுள்ள ஆர்வம் வெகுவாகக் குறைய வாய்ப்புள்ளது.

சங்ககாலப் புலவர்கள் பாடல் இயற்றியதன் காரணத்தையும் பாடல் இயற்றப்பட்ட சூழ்நிலையையும் பற்றிய செய்திகள் பாடநூலின் எந்த இடத்திலும் கொடுக்கப்படாத நிலையில், இதனை ஆசிரியர் அவருடைய தனிப்பட்ட விருப்பத்தின் அடிப்படையில் மட்டுமே விளக்கும் சூழ்நிலை உள்ளது. எனவே, மாணவர்களிடம் சங்ககாலப் புலவர்களின் பண்புகள் பற்றிய செய்திகள், சங்கச்

செய்திகளாக அல்லாமல், இன்றைய ஆசிரியரால் வழங்கப்படும் செய்திகளாக மட்டுமே சென்று சேர்கின்றன. அதனால், இந்தச் செய்திகளின் உண்மையில் ஏற்ற இறக்கங்கள் உண்டாவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

பெரும்பாலும், புதுக்கவிதைகள் வலுப்பெற்று வருகின்றன இக்காலக்கட்டங்களில் சொற்களஞ்சியப் பெருக்கத்தோடு, பழஞ்சொற்களை மிகுதியாகக் கொண்டிருக்கும் சங்கப் பாடல்களை, மாணவர்கள் விரும்பும் வகையில் அவர்களுக்கு விளக்குவதற்கு, ஆசிரியர்கள் பல்வேறு கற்பித்தல் முறைகளைப் பின்பற்ற வேண்டிய அவசியம் உள்ளது. இல்லையெனில், சங்கப் பாடல்களைக் கற்பித்தல் என்பது முழுமையடையாமல் போய்விடும் வாய்ப்புள்ளது.

பெரும்பாலும், கற்றல் கற்பித்தல் என்பதை நாம் தேர்வுகளை வைத்தே மதிப்பிடுகிறோம். அந்த வகையில் சங்கப் பாடல்கள் மாணவர்கள் மனதில் எந்த அளவில் இடம்பெற்றுள்ளது என்பதைக் கண்டறியும் வகையில் எந்தத் தேர்வுமுறையும் இல்லை. பெரும்பாலும், தேர்வுகளில் சங்கப் பாடல் சம்பந்தப்பட்ட வினாக்கள், பாடலின் பொருளை அல்லது ஆசிரியர் குறிப்பை விளக்கமுறையில் எழுதும் வகையிலேயே அமைகின்றன. அதனால், சங்கப் பாடல்களுக்கே உள்ள பல தனித்தன்மைகளைக் காட்டிலும், பாடலின் பொருளை விளக்கி, அதை மாணவர்கள் தேர்வில் எழுதுவதற்கே கல்வி நிறுவனங்கள் முக்கியத்துவம் அளிக்கின்றன. ஆசிரியர்களும் எந்த எதிர்பார்ப்புமின்றி, இதைக் கடமையாகச் செய்கின்றனர். இந்த நிலையில், சங்கப் பாடல்களை மாணவர்கள் மீண்டும் படித்தல் என்பது நிகழாச் செயலாகிவிடுகிறது.

சங்கப் பாடல்கள் ஒவ்வொன்றிற்கும் பின்கதை, முன்கதை, கதைக்காரணம், பாடல் எழுதப்பட்ட சூழ்நிலை, பாடல் எழுதப்பட்டதற்கான காரணம், யார்? யாருக்காக? எப்பொழுது? எந்த நேரத்தில் பாடப்பட்டது? என்று பலவிதமான பன்முகக்கூறுகளை சங்கப் பாடல்கள் பெற்றிருந்தாலும், பாடநூலில் இந்தச் செய்திகள் எங்கும் குறிப்பிடாத நிலையில், ஆசிரியர்கள் இதை விளக்குவதில் ஏற்றஇறக்கங்கள் இருக்க வாய்ப்புண்டு. எனவே, மாணவர்களிடத்தில் பாடலின் சரியான நோக்கத்தினைக் கொண்டு சேர்க்க முடியாமல் போக வாய்ப்புள்ளது.

பழந்தமிழர்கள் வாழ்ந்த வாழ்க்கையை இன்று கற்பனையாக மட்டுமே கொண்டு வர முடியுமே தவிர, இவற்றை எடுத்தியம்புவதற்கோ அல்லது

ஒளிக்காட்சியாகக் காண்பிப்பதற்கோ எந்த ஒரு துணைக்கருவியும் இல்லாத நிலையில், அனைத்து ஆசிரியர்களாலும் இந்த கற்பனைத் திறன் வரும் அளவிற்குக் கற்பித்தலை நிகழ்த்துதல் என்பது சாத்தியமாகாது. எனவே, சங்கப் பாடல்களில் வரும் பழந்தமிழர்கள் வாழ்க்கை முறை, ஒரு கதையாக மட்டுமே மாணவர்களின் மனதில் சென்று சேர்கிறது. இதனால், சங்கப் பாடல்களின் மேன்மையை மாணவர்களிடத்தில் ஏற்படுத்துவது கடினமாகும்.

மாணவன் எவ்வளவு கற்றிருக்கிறான் என்பதை மதிப்பிடத் தேர்வு நடத்திய காலம் போய், மதிப்பெண் வாங்குவதற்காகத் தேர்வு வைப்பதும் தேர்வு வைப்பதற்காக பாடம் நடத்துவதுமான சூழ்நிலை இன்று உள்ளது. எனவே, ஒவ்வொரு குறிப்பிட்ட அளவு பாடம் நடத்துவதற்கும் குறிப்பிட்ட கால அளவு வழங்கப்படுகிறது. இந்தக் கால அளவில் தேர்வுக்கான அனைத்துப் பாடங்களையும் முடிக்க வேண்டும். கல்வி நிறுவனங்களின் விதிமுறைகளையும் கடைபிடிக்க வேண்டும் என்ற நெருக்கடியில், ஆசிரியர்களின் கற்பித்தல் நிகழ்கிறது. எனவே, சங்கப் பாடல்களை விரும்பிக் கற்பிக்க வேண்டும் என நினைக்கும் ஆசிரியர்களும் நேரப் பற்றாக்குறை என்ற காரணத்தால், மற்ற பாடங்களில் ஒன்றாக சங்கப் பாடல்களையும் கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

எட்டாம் வகுப்புப் பாடநூலில் செய்யுள் பகுதிக்குத் தேவையான அளவு இடஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்கிறது. இருப்பினும், அதில் குறிப்பிட்ட அளவு ஒரு சங்க இலக்கியப் பாடலும் வழங்கப்படவில்லை. அதற்கான காரணமும் வழங்கப்படவில்லை.

பாடநூலில் மொத்தம் 9 இயல்கள் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு இயலிலும் 2 செய்யுள் பாடல்கள் 1 உரைநடைப் பகுதி, 1துணைப்பாடம் மற்றும் 1 இலக்கணம் என்று சரியான முறையில் பிரிக்கப்பட்டுள்ளன. எனவே, ஒரு இயலுக்கும் 2 செய்யுள் பாடல்கள் வீதம் மொத்தம் 18 செய்யுள் பாடல்கள் இடம்பெறுகின்றன. 18 பாடல்களைத் தேர்ந்தெடுத்த பாடக்குழுவினர், அதில் ஒரு சங்கப் பாடலையும் தேர்ந்தெடுக்காகததற்கான காரணம் தெரியவில்லை. ஒவ்வொரு வகுப்பு பாடநூலையும் தயாரிக்கும் போது, அந்தக் குழுத் தலைவர்களால், பல விவாதங்களுக்குட்பட்ட பின்னரே ஒவ்வொரு பாடமும் பாடலும் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இவை, பின்னர் கல்வித்திட்டங்களுக்கு ஏற்ப வரிசைப்படுத்தப்பட்டு பாடநூலாகத் தயாரிக்கப்படுகிறது. எனில், ஒவ்வொரு வகுப்பிற்கும் எந்தப் பாடமும் இலக்கணமும் செய்யுள்களும் மறுபதிப்பாகாமல், ஒவ்வொரு வகுப்பிற்கும் ஏற்ப வழங்கப்படுவதில், பல விவாதங்கள் நடைபெறும்.

உளவியில் ரீதியின் அடிப்படையில், 12 முதல் 16 வயதிற்குள்தான் குழந்தைகள் குமரப் பருவத்திற்கான வயதில் அடியெடுத்து வைக்கின்றனர். இந்நிலையில், அகம் மற்றும் புறம் பற்றியும் அன்பு பற்றிய அடிப்படைப் பண்புகளையும் நற்பண்புகளைப் பற்றியும் வாழ்வின் நெறிகளைப் பற்றியும் நல்ல பழக்கவழக்கங்களைப் பற்றியும் நம் நாட்டின் பண்பாடு, கலாச்சாரம் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. ஒவ்வொரு வகுப்பில் உள்ள பாடங்களுக்கும் அடுத்தடுத்து வரும் வகுப்பில் உள்ள பாடங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. அந்தத் தொடர்பில் படிநிலையைக் கூட்டும் அளவிலேயே ஒவ்வொரு வகுப்பிலும் பாடங்கள் தேர்ந்தெடுத்து வழங்கப்படுகிறது. எனில், 6 மற்றும் 7ஆம் வகுப்பிலும் சங்க இலக்கியப் பாடல்கள் இடம்பெற்றிருக்கிறது. அடுத்து வரும் 9ஆம் வகுப்பிலும் சங்க இலக்கியப் பாடல்கள் அதனதன் படிநிலைக்கேற்ப வழங்கப்பட்டுள்ளது. இதனிடையில், 8ஆம் வகுப்பில் சங்க இலக்கியப் பாடல் பாடநூலில் இடம்பெறாதது சிந்திக்கக் கூடிய செய்தியாகும்.

### 1.6 ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புப் பாடநூலில் இடம்பெறும் சங்கப்பனுவல்கள்: மதிப்பீடு

ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு மாணவர்கள், உளவியல் விதிப்படி, சுயவளர்ச்சி நிலையில் இருப்பதால், பொதுவாக படித்தல் என்பதில் நாட்டம் குறைவாகவே காணப்படுவர். இதனால், மாணவர்களிடம் பல வழிமுறைகளில் நல்ல குணங்களை வளர்ப்பது ஆசிரியரின் முக்கியமான பணியாகும்.

இதுவரை சங்கப் பாடல்களில் புறத்திணைப் பாடல்களை மட்டும் கற்றுணர்ந்த மாணவர்களுக்கு, முதன்முறையாக அகத்திணை அறிமுகப்படுத்தப்படுகிறது. எனவே, பெரும்பாலும் ஆசிரியர்கள், அகத்திணை என்பதனைச் சரியான வகையில் விளக்கத் தெரியாததாலும் மாணவர்கள் கேட்கும் சந்தேகங்களுக்குப் பயந்தும் அகத்திணை என்பதன் பொருளை, ஒரு உரைநடைப் பொருளாக மேலோட்டாமான விளக்கத்தை மட்டும் கொடுத்து விடுகின்றனர். எனவே, அகத்திணைப் பாடல்களுக்கே உரிய தனித்தன்மையை மாணவர்கள் அறிய முடியாமல் போகிறது.

சங்கப் பாடல்களுக்கு மட்டுமே உரியதாக திகழ்கின்ற திணை மற்றும் துறைகளைப் பற்றிய அறிமுகக் குறிப்புகூட வழங்கப்படாத நிலையில், ஆசிரியர்கள் அதை விளக்குதல் என்பது அவர்களின் தனிப்பட்ட விருப்பத்தின்

அடிப்படையில் அமைகிறது. இதனால், அனைத்து ஆசிரியர்களும் இதை விளக்குவது என்பது சாத்தியமாகாது. எனவே, மாணவர்கள் சங்கப் பாடல்களையும், மற்ற செய்யுள் பகுதியுடன் சேர்த்து தேர்வுக்காகப் படிக்கும் சூழ்நிலை மட்டுமே ஏற்படுகிறது.

அகத்திணைப் பாடல்கள் அனைத்துமே தலைவன், தலைவி அல்லது தோழி போன்றோரின் கூற்றாக அமையும். அந்த வகையில், நம் பாடநூல்களிலும் தலைவி மற்றும் தோழி கூற்றுகளாகப் பாடல்கள் இடம்பெற்றிருந்தாலும், கூற்று என்பதன் சரியான பொருளோ அல்லது விளக்கமோ வழங்கப்படவில்லை. அதனால், கூற்று என்பதன் பொருளை ஆசிரியர் கற்பித்தாலன்றி மாணவர்கள் அறிய வாய்ப்பில்லை.

புறத்திணைப் பாடல்களைக் கற்கும் போது மாணவர்களுக்கு பழந்தமிழர்களைப் பற்றி இருந்த எண்ணங்கள், அகத்திணைப் பாடல்களைக் கற்கும் போதும் வேறுபடாமல் இருக்க வேண்டும். எனவே, பழந்தமிழர்களின் வாழ்க்கைமுறைகளைக் கற்பிக்கும் போது ஆசிரியர் கையாண்ட கற்பித்தல் முறைகளுக்கும் அகத்திணைப் பாடல்களைக் கற்பிக்கும் போது ஆசிரியர் கையாளும் கற்பித்தல் முறைகளுக்கும் வேறுபாடுகள் இருக்க வேண்டும். இல்லையெனில், மாணவர்களுக்கு இதுவரை கற்ற அனைத்து சங்கப் பாடல்கள் பற்றியும் எதிர்மறையான கண்ணோட்டம் ஏற்பட வாய்ப்புண்டு.

சங்கப் பாடல்களில் தோழிக்குக் கொடுக்கும் சிறப்பான இடம் பற்றியும் தலைவி தலைவன் மீது கொண்டுள்ள நம்பிக்கை பற்றியும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் எடுத்தியம்புவதில் ஏதேனும் குறைகள் இருந்தாலோ, அல்லது அதைப் பற்றி மாணவர்களுக்கு எழும் சந்தேகங்களைத் தீர்க்கும் வகையில் அவரது கற்பித்தல் அமையவில்லை என்றாலோ மாணவர்களுக்குச் சங்கப் பாடல்கள் மீது எதிர்மறையான கண்ணோட்டம் ஏற்படும் வாய்ப்புண்டு.

சங்கப் பாடல்கள் என்பது இரு பெரும் பிரிவுகளைக் கொண்டது. அதாவது, எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு என்பனவாகும். இந்தச் செய்தியானது பாடநூலின் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. எனவே, இந்த சங்கப் பாடல்களின் பிரிவை, ஆசிரியர்கள் கற்பித்தாலன்றி மாணவர்கள் அறிய வாய்ப்பில்லை. ஆசிரியர்கள், அவர்களின் பணி நெருக்கடியில் கூறத் தவறினாலும் மாணவர்கள் சங்கப் பாடல்களின் பிரிவு, விளக்கம், காரணம்

ஆகியவற்றை அறியாமல், ஒரு தேர்வுக்கான பொருளாகவே படிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

சங்க கால அரசர்கள், போர்த்திறம், வாழ்க்கைமுறை ஆகியவற்றைப் பற்றி அதிகப்படியான சந்தேகங்கள் இந்த வயதில் மாணவர்களுக்கு எழும் வாய்ப்புள்ளது. அதனைத் தீர்க்கும் அளவிற்குப் பாடநூலில் எந்த விளக்கங்களும் இல்லாதக் காரணத்தால், இதன் முழுப் பொறுப்பும் ஆசிரியர்களையே சாரும். எனவே, ஆசிரியர்கள் பாடநூலை மட்டும் சார்ந்து கற்பிக்காது, அதைச் சார்ந்த பல நூல்களைக் கற்று மாணவர்களின் சந்தேகங்களைத் தீர்க்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இதில் ஏதேனும் குறைகள் இருப்பின், மாணவர்களுக்கு சங்கப் பாடல்கள் மீதான ஈடுபாடு குறையும் வாய்ப்புள்ளது.

மேற்குறிப்பிட்ட சில கருத்துக்களுக்கு ஏற்ப ஆசிரியர்கள் சங்கப் பாடல்களைக் கற்பித்தால் மட்டுமே, மாணவர்களுக்கு சங்கப் பாடல்கள் கற்பதில் ஆர்வம் ஏற்படும். அவ்வாறு, ஆர்வம் ஏற்பட்டாலும் சங்கப் பாடல்களில் இடம்பெறும் பழஞ்சொற்களின் பொருள் அறிதல் என்பதில் ஆர்வத்தை ஏற்படுத்துவதும் ஆசிரியரின் கடமையாகும். ஏனெனில், அனைத்துச் சொற்களுக்கும் பொருள் விளக்கம் பாடநூலில் கொடுக்கப்படவில்லை. மேலும், கொடுத்திருக்கும் சில சொற்களின் பொருள் விளக்கத்தை மட்டும் வைத்து, பாடலின் பொருளை அறிவது சற்றுக் கடினமாகும். எனவே, ஆசிரியர் சங்கப் பாடல்களைப் படித்துப் பொருளுணரும் முறையை மாணவர்களுக்குக் கற்பித்தல் வேண்டும்.

சங்கப் பாடல்களில் இடம்பெறும் தலைவன், தலைவி மற்றும் தோழி ஆகியோருக்கு இடையேயுள்ள உறவு முறை பாடநூலின் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. இந்த நிலையில், பாடலைப் படித்து அதன் விளக்கத்தைக் கொடுக்கும் ஆசிரியர், அவர்களின் உறவுமுறைகளைப் பற்றி நிச்சயம் விளக்க வேண்டும். ஆனால், மாணவர்களிடம் எழும்பும் அதிகப்படியான கேள்விகளைத் தவிர்ப்பதற்காக, இந்த உறவுமுறை விளக்கங்களை வழங்குவதில்லை. அதனால், மாணவர்கள் அகத்திணைப் பாடல்களை உள்ளுணர்வோடு படிப்பதில் ஆர்வம் குறையும் வாய்ப்புள்ளது.

பொதுவாக, எந்த ஆசிரியரும் மாணவர்களைச் சங்கப் பாடல்களை மனனம் செய்யச் சொல்லி வற்புறுத்துவதில்லை. பாடநூலின் திட்டப்படியும்

மாணவர்கள் சங்கப் பாடலை மனனம் செய்வதற்கு வாய்ப்பில்லை. எனவே, மாணவர்கள் சங்கப் பாடல்களை கற்கும் அந்த நேரத்தோடு, அதை விட்டுவிட்டு உரைநடை விளக்கத்திற்கே முதன்மையை வழங்குகின்றனர்.

## 1.7 பதினொன்று மற்றும் பன்னிரண்டாம் வகுப்புப் பாடநூலில் இடம்பெறும் சங்கப்பனுவல்கள்: மதிப்பீடு

சென்ற வகுப்பு வரை திணை மற்றும் துறைகளுக்கான விளக்கம் பாடநூலில் கொடுக்கப்படாத காரணத்தால், பல மாணவர்களுக்கு இதைப் பற்றிய அறிமுகம் இருக்காது. எனவே, இப்பாடநூலில் திணை மற்றும் துறைகளின் விளக்கம் கொடுத்திருந்தாலும் அது மாணவர்களுக்கு ஒரு கற்றல் சுமையாகவே இருக்கும். மேலும், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கு திணைத் துறைகளை எந்த ஒரு அறிமுகமும் இல்லாமல் கற்பிப்பது சற்று சிரமமானதாக கருதப்படும். எனினும், தொடக்க வகுப்பிலிருந்தே ஆசிரியர்கள் கற்பித்தலில் பாடநூலையும் மீறி இந்த திணை, துறைகளை அறிமுகம் செய்திருப்பின் மாணவர்கள் கற்றலில் மேம்பாடுகள் இருக்கும்.

திணைகளின் விளக்கம் பாடநூலிலேயே கொடுத்திருப்பதால், ஆசிரியர்கள் அதை விளக்க வேண்டியது அவசியமாகும். இருப்பினும், திணைகளின் கருப்பொருள்களுக்கு முக்கியத்துவம் அளித்து கற்பிக்க வேண்டியது ஆசிரியர்களின் கற்பித்தல் சார்ந்ததாக மட்டுமே உள்ளது.

உரிப் பொருள்கள் மற்றும் அதன் பொருள் விளக்கங்கள் பாடநூலில் கொடுக்கவில்லை. அதனால், ஆசிரியர்கள் தன் தனிப்பட்ட கற்பித்தலின் மூலமே மாணவர்களுக்கு அவற்றை விளக்க வேண்டும். பெரும்பாலும், ஆசிரியர்கள் மேல்நிலை மாணவர்களுக்குத் தமிழ்ப் பாடத்தில் நாட்டம் குறைவு என்ற முடிவுடன் கற்பித்தலால், விருப்பத்துடன் படிக்கும் மாணவர்களுக்கும் கற்றல் குறைபாடு ஏற்படுகிறது.

மேலும், மேல்நிலை மாணவர்கள் பெரும்பாலும் தன்னுடைய எதிர்கால தொழில் வருமானத்தைக் கருத்தில் கொண்டு, அறிவியல் பாடங்களில் நாட்டம் அதிகம் செலுத்துவதாலும் கல்வி நிறுவனங்கள் மற்றும் நடைமுறைக் கல்வித் திட்டங்களும் மேல்நிலையில் தமிழ்ப் பாடத்தையே ஒரு சுமைப் பாடமாகக் கருதும் சூழ்நிலையில், சங்கப் பாடல்களுக்கெனத் தனிப்பட்ட கற்பித்தல் நேரத்தை ஒதுக்குவதில்லை. எனவே, மாணவர்களும், ஆசிரியர்களும் தமிழ்ப்

பாடத்தை மதிப்பெண் நோக்கிற்காகவே படிக்கும் சூழ்நிலையில், சங்கப் பாடல்களின் அனைத்துப் பல்வேறு சிறப்பம்சங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும் அதை முழுமையாகக் கற்றுணரும் வகையில் வாய்ப்புகள் இல்லாமல் போகிறது.

தேர்வில் மதிப்பெண் பெறவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் படிக்கும் மாணவர்களுக்கு, எந்தப் பாடத்தையும் முழுமையாகக் கற்றுணர வேண்டும் என்ற எண்ணம் வருவதில்லை. அதனால், சங்கப் பாடல்களிலும் விளக்க உரைநடைகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அல்லது பாடலின் மையக் கருத்தை மட்டும் புரிந்து கொண்டு அதற்கேற்ப சொந்த நடையில் எழுதத் தயாராகி விடுகின்றனர். இதனால், சங்கப் பாடல்களின் ஒரு அடியைக் கூடப் படிக்காமல், இரண்டு வருடப் படிப்பை முடிக்கும் மாணவர்களின் மத்தியில், சங்கப் பாடல்களை மனனமாகச் சொல்லுதல் என்பது எட்டாக் கனியாக உள்ளது.

மேலும், மாணவர்களுக்கு சங்கப் பாடலின் முக்கியத்துவமும் அது இடம்பெற்ற நூலின் சிறப்பும் அந்தப் பாடலை எழுதிய ஆசிரியரின் குறிப்புகளும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படுவதில்லை. இந்த நிலையில், ஏற்கனவே புத்தகத்தில் உரைநடைப் பகுதியாகக் கொடுத்துள்ள நூற்குறிப்பு மற்றும் ஆசிரியர் குறிப்புகளை மீண்டும் ஆசிரியர்கள் கற்பிப்பதில், மாணவர்களுக்கு உடன்பாடு இல்லை. மேலும், மாணவர்கள் அனைத்தையும் மதிப்பெண்ணுக்காகக் குருட்டுப்பாடம் என்ற பெயரில் மனனம் செய்யத் தயாராக இருக்கின்றனர். எனவே, மனனம் செய்ததைத் தேர்வில் எழுத்து வடிவமாகக் கொண்டு வந்தவுடன் கடமை முடிந்ததாக எண்ணும் போது, அவர்கள் படித்த அனைத்துச் செய்திகளும் ஒரு செய்தியாகவே மறைந்து விடுகிறது.

சங்கப் பாடல்களின் அடிகளைப் படிக்கவே தயாராக இல்லாத மாணவர்களிடம், அதிலுள்ள இலக்கணங்களைக் கொண்டு சேர்ப்பது சற்று கடினமாக காரியம் ஆகும். இருப்பினும், ஆசிரியர்களின் சிறப்பான கற்பித்தலின் மூலம், மாணவர்களிடம் அந்த இலக்கணங்களைப் பற்றிய ஆர்வத்தை எழுப்ப முடியும். அதுவும், அதற்கான ஈடுபாட்டைக் கொணரும் வகையில் தொடக்கக் காலத்தில் இருந்தே பாடநூல் குறிப்புகள் அமைய வேண்டும். நேரடியாக, இலக்கணச் செய்திகளை நாம் மேல்நிலையில் தொடங்கும் போது, ஆசிரியர்கள் சிறப்பாகக் கற்பித்தாலும் அந்த ஈடுபாட்டை வரவழைக்கும் அளவிற்கு நேரமில்லாமல் போகிறது.

பொதுவாக, மேல்நிலை மாணவர்களிடம் வீரமும் எழுச்சியும் எதையும் எதிர்க்கும் குணமும் அதற்காக விரைவில் வன்முறையில் ஈடுபடும் குணமும் நிறைந்து காணப்படுவர் என்பது உளவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், சங்கப் பாடல்களில் புறச்செய்திகளாக விளங்கும் போர்ச் செய்திகளையும் அரசரின் வீரங்களையும் பழந்தமிழர்களின் வீரச்சான்றுகளையும் வெகுவாக விளக்கும் போது, அது மாணவர்கள் மனதில் வன்முறை எண்ணத்தை மேலும் தூண்டுவதாக ஆசிரியர்களும் கல்வி நிறுவனங்களும் கருதுவதற்கு வாய்ப்புண்டு. இதனால், சங்கப் பாடல் செய்திகளை மாணவர்களிடத்தில் முழுமையாகச் சென்று சேர்ப்பதில் தடை ஏற்படுகிறது.

பெரும்பாலும், மாணவர்களின் நலனைச் சார்ந்தே, இன்றைய கல்வி நிறுவனங்கள் செயல்படுவதால், ஆசிரியர்களும் கல்வி நிறுவனங்களின் விதிகளைக் கடைபிடிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. எனவே, ஆசிரியரின் தனிப்பட்ட கற்பித்தல் திறனை முழுமையாகப் பயன்படுத்த முடியாமல் போகிறது. அதனால், பெரும்பாலும் சங்கப் பாடலின் பன்முகக்கூறுகளைக் காட்டிலும் பாடலின் கருத்துக்கும் விளக்கத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்து, மாணவர்களைத் தேர்வுக்குத் தயார் செய்கின்றனர்.

பெரும்பாலும், சங்கப் பாடல்களில் இடம்பெறும் முதல் கருப்பொருள்களுக்கும் இன்றைய வாழ்க்கை நடைமுறைக்கும் நிறைய வேறுபாடுகள் இருப்பதால், இதைக் கற்பிக்கும் போது, மாணவர்களிடம் பலவிதமான சந்தேகங்கள் எழ வாய்ப்புள்ளது. இவற்றை, ஆசிரியர்கள் விளக்கும் வகையில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பின், மாணவர்களின் கற்றலிலும் அதற்கான விளைவு ஏற்படும்.

மேலும், சங்கப் பாடல்களில் இடம்பெறும் முக்கிய இலக்கணக் கூறுகளான வண்ணம், தூக்கு, உள்ளுறை, இறைச்சி போன்றவற்றில் இன்றுள்ள ஆசிரியர்களுக்கே பலருக்கும் சந்தேகங்கள் இருப்பதால், அவர்கள் அதை மாணவர்களுக்குக் கற்பிப்பதில் தெளிவு இல்லாமல் போய்விடுகிறது. இதனால், மாணவர்களுக்கும் சங்கப் பாடலில் கற்பதில் தெளிவில்லாமல் போகிறது. எனவே, ஆசிரியர் திறன் மேம்பாட்டுக்கான பணியிடைப் பயிற்சி அவசியம்.

பொதுவாக, ஆங்கிலத்தையே பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பதால், மாணவர்களுக்குப் பழஞ்சொற்களஞ்சியம் குறைவாக இருக்கும். அதனால், சங்கப் பாடலில் உள்ள மொழிநடையை மாணவர்கள் புரிந்து கொள்வது சற்று கடினமாக

இருக்கிறது. ஆசிரியரின் துணையின்றி, மாணவர்கள் சங்கப் பாடல்களைப் படித்துணர முடியாத காரணத்தால், மாணவர்கள் சங்ககாலப் பாடல்களின் மொழி நடையை வெறுக்கின்றனர். இதுவே, இன்றைய மாணவர்களிடம் சங்கப் பாடல்கள் பற்றிய ஆர்வம் குறைய காரணமாகின்றது.

## 1.8 முடிவுரை

இவ்வியலில், பள்ளிக்கல்வியில் சங்க இலக்கியங்களின் இன்றியமையாமை குறித்தும், பள்ளிக்கல்வியில் இடம்பெறும் சங்கப் பாடல்களின் விகிதம், அமைப்பு, இடம்பெற்ற பாடல், அமைவிடம், காட்சிப்படுத்தப்பட்டுள்ள முறை, பாடலின் பன்முகக்கூறுகள் இடம்பெற்றுள்ள முறை, பாடலின் விளக்கம், விழுமியங்கள், பழகுசெயல்கள், இடம்பெற்றதன் நோக்கம், பாடலுக்கும் இணைப் பாடங்களுக்கும் இடையே உள்ள தொடர்பு, பாடல் தொடர்புடைய விளக்கங்கள் ஆகிய தலைப்புகளின் கீழ் விளக்கங்கள் அமைந்துள்ளன. அடுத்து, 6 முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள பாடநூல்களில் இடம்பெறும் சங்கப் பாடல்களைப் பற்றிய ஆய்வாளரின் கருத்துகள், 6 மற்றும் 7ஆம் வகுப்பு, 9 மற்றும் 10ஆம் வகுப்பு மற்றும் 11 மற்றும் 12ஆம் வகுப்பு என்ற பிரிவுகளின் கீழ் இடம்பெற்றுள்ளன. இவ்வகையில், பள்ளிக்கல்வியில் இடம்பெறும் சங்கப் பாடல்களை ஆய்வாளர் தன் சுய மதிப்பீட்டின் அடிப்படையில் ஆராய்ந்து கொடுத்த இந்த கருத்துக்களானது ஆய்வுக் கருவியை உருவாக்க உதவியாக இருந்தது. இந்த ஆய்வுக் கருவியைக் கொண்டு இந்த ஆய்வை நடத்திச் செல்லும் வழிமுறைகளும் செயல்முறைகளும் உறுதிப்படுத்தப்பட்டன.

இவ்வாய்வின் அடுத்த இயலில், சங்க இலக்கியங்களைக் கற்பித்தல் முறைகள் என்ற தலைப்பில் இடம்பெறுகிறது. இதில் சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தேவையான செய்திகள் விவாதிக்கப்படுகின்றன. அவை, சங்க இலக்கியங்களைப் பற்றி அறிந்திருக்க வேண்டிய பொதுப்பண்புகள், சங்க இலக்கியங்களில் கற்பிக்க வேண்டிய முக்கியக் கூறுகள், சங்க இலக்கியங்களை கற்பிக்கும் உத்திகள், கற்பித்தல் கோட்பாடுகளின்படி கற்பித்தல் உத்திகள், சங்க இலக்கியம் கற்பித்தலை மேம்படுத்தும் வழிமுறைகள், ஆசிரியர்களின் பங்கு, ஆகிய தலைப்புகளின் அடிப்படையில் செய்திகள் இடம்பெறுகின்றன.

**அடிக்குறிப்புகள்**

1. பா.வீரப்பன், **உயர்நிலை தமிழ்கற்பித்தல் புதிய அணுகுமுறைகள்,** ப.9
2. சாமி சிதம்பரனார், **இலக்கியம் என்றால் என்ன?,** ப.3
3. கார்த்திக்கேசு சிவத்தம்பி, **தமிழ்க் கற்பித்தலில் உன்னதம் ஆசிரியர் பங்கு,** ப.48
4. தி.சு. நடராஜன், **திறனாய்வுக்கலை,** ப.50
5. ஆ.கணேசன், இலக்கிய தென்றல், ப.40
6. **மேலது**, ப.41
7. **மேலது**, ப.42
8. அ.அறிவுநம்பி, **கம்பரின் அறிவியல்,** ப.6
9. ராஜ் கௌதமன், **அறம் அதிகாரம்,** ப.198
10. செ.சாரதாம்பாள், சங்கச் செவ்வியல், ப.235
11. **மேலது**, ப.264
12. **மேலது**, ப.150
13. மா.சு.திருமலை, **தமிழ் கற்பித்தல் (அ) மொழிக் கற்பித்தல் ,** ப.10
14. **மேலது**, ப.11
15. கார்த்திக்கேசு சிவத்தம்பி, மேலது, ப.48
16. வி.கணபதி, **நற்றமிழ் கற்பிக்கும் முறைகள்,** ப.267
17. என்.இராஜேஷ்வரி, **கலைத்திட்ட செயல்பாட்டின் கோட்பாடுகள்,** ப.44
18. மு.பொன்னுசாமி, **சங்க இலக்கியத்தில் மெய்ப்பாட்டு இயக்கம்,** ப.1
19. வி.கணபதி, மேலது, ப.275
20. **மேலது**, ப.269
21. **மேலது**, ப.269
22. இரா.சந்திரசேகரன்,**சங்க இலக்கியங்களைக் கற்பித்தல்-கற்றலில் புதிய உத்திகள்,** ப.9
23. சு.தமிழ்வேலு, **சங்க இலக்கிய ஆய்வுகள்,** ப.3
24. மு.பொன்னுசாமி, **சங்க இலக்கியத்தில் மெய்ப்பாட்டு இயக்கம்,** ப.2
25. செ.சாராதாம்பாள், **சங்கச் செவ்வியல்,** ப.235
26. வி.கணபதி , மேலது, ப.264
27. மா.சு. திருமலை, மேலது, ப.63
28. **மேலது**, ப.67

## சங்க இலக்கியங்கள்: கற்றல் கற்பித்தல் முறைகள்

**2.1 சங்க இலக்கியங்களைக் கற்றல் கற்பித்தல்**

**2.2 சங்க இலக்கியங்களின் பொதுப் பண்புகள்**

2.2.1 அகம் புறத்தைப் பொருளாகக் கொண்டிருத்தல்

2.2.2 அகத்திணைப் பாடல்களின் மரபுகள்

2.2.3 புறத்திணைப் பாடல்களின் மரபுகள்

2.2.4 பன்முகக் கூறுகள் மற்றும் உத்திகள்

2.2.5 யாப்பியல் கூறுகள்

2.2.6 சொற்செறிவும் பொருட்செறிவும்

2.2.7 தனிநிலைச் செய்யுட்களாக அமைதல்

**2.3 சங்க இலக்கியங்களில் கற்பிக்க வேண்டிய முக்கியக் கூறுகள்**

2.3.1 இலக்கியங்களுக்கே உரிய ஓசை நயம்

2.3.2 பொருள் உணர்ச்சிக்கேற்ற குரல் ஏற்றத்தாழ்வு

2.3.3 சரியாக ஒலிக்க இயலாத சொற்களுக்குப் பயிற்சி

2.3.4 சொல்லாட்சித் திறன்

2.3.5 இலக்கியங்களுக்குரிய சொற்களைப் பிரித்துப் படித்தல்

2.3.6 இலக்கியச் சொற்களைத் தொடர்களில் அமைத்தல்

2.3.7 இலக்கியக் கூறுகள்

2.3.8 இலக்கியங்களின் விழுமியங்கள்

2.3.9 தொடர்புடைய பிற பாடல்களை அறிமுகப்படுத்தல்

**2.4 சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் உத்திகள்**

2.4.1 பாடப்பொருளுக்கு ஏற்றவாறு ஆர்வப்படுத்துதல்

2.4.2 பகுதியிலிருந்து முழுமைக்குச் செல்லல்

2.4.3 முழுமையிலிருந்து பகுதிக்குச் செல்லல்

2.4.4 துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல்

2.4.5 இசையுடன் பாடுதல்

2.4.6 குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்தல்

2.4.7 நடித்துக் காட்டுதல்

2.4.8 மாணாக்கரைப் பங்கெடுக்கச் செய்தல்

2.4.9 ஒப்புமைப்படுத்திக் கற்பித்தல்

2.4.10 நினைவூட்டுதல்

2.4.11 தொடர்புடைய செய்திகள், புராண நிகழ்வுகள், வரலாறுகள்

ஆகியவற்றைக் கூறுதல்

2.4.12 எளிய படங்கள் வரைந்து விளக்குதல்

2.4.13 விளையாட்டு முறையில் கற்கத் தூண்டுதல்

2.4.14 நாட்டுநடப்புச் செய்திகளைத் தொடர்புபடுத்திக் கூறுதல்

2.4.15 பள்ளிச் சூழலில் அமைந்துள்ள பொருள்களைப் பயன்படுத்தல்

2.4.16 அறிந்ததிலிருந்து அறியாததற்குச் செல்லுதல்

2.4.17 எளிமையிலிருந்து அருமைக்குச் செல்லுதல்

2.4.18 தெளிவிலிருந்து சிக்கலுக்குச் செல்லுதல்

2.4.19 தொடர்புடைய நூல்களைப் படிக்கச் செய்தல்

2.5 கற்றல் கோட்பாடுகளின் அடிப்படையில் சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் உத்திகள்

2.6 சங்க இலக்கியங்களை கற்பிக்க மேலும் சில வழிமுறைகள்

2.7 சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதில் ஆசிரியரின் பங்கு

2.8 சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதில் உள்ள சிக்கல்கள்

2.9 முடிவுரை

## சங்க இலக்கியங்கள்: கற்றல் கற்பித்தல் முறைகள்

### 2.1 சங்க இலக்கியங்களைக் கற்றல் கற்பித்தல்

கற்காலம் தொடங்கி தமிழினம் இடையறாத வரலாற்றைக் கொண்டு விளங்குகிறது. தமிழர்கள் வாழ்ந்த வாழ்க்கையும் அவர்தம் வாழ்வை எதிரொலிக்கும் இலக்கியங்களும் நம்மை வியப்பினில் ஆழத்துகின்றன. சங்க இலக்கியங்கள் திணை அடிப்படையில் அமைந்த தனித்துவம் வாய்ந்த இலக்கிய மரபைக் கொண்டவை.

அத்தகைய சங்ககால இலக்கியம், நுண்மாண் நுழைபுலம் மிக்க சான்றோர்களின் பட்டறிவினால் விளைந்த விழுமிய கருத்துக்களை நல்குவதால், படிப்போரது உள்ளம் பண்பட உதவுகிறது. பல்லாண்டுகளுக்குமுன் ஒரு இதழில் பேராசிரியர் சரவண ஆறுமுக முதலியார் 'தமிழ்மொழி இலக்கிய நோக்கம்' என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி இங்கு குறிப்பிடத்தக்கது.

**"உலகத்தில் நாம் பல்வேறு மக்களோடு பழகும்போது, வயிற்றுப் பிழைப்புக்காக பல துறைகளிலும் கிடந்துழன்று, ஓடி ஆடித் திரிந்து உழைத்து அலுத்துப் போகும் போது தோன்றக்கூடிய வெறுப்பை இலக்கியங்கள் போக்கவல்லன. சிற்றினஞ்சேர்தல், மடி, வீண்காலப் போக்கு, பயனில் சொல் பாராட்டுதல் முதலிய பல குறைகளை நீக்கி. அவற்றினிடத்தில் பெரியோர் கேண்மை, மடியின்மை, காலத்தைப் பயனுறப் போக்கல், பயனுள் சொல் பாராட்டுதல் முதலிய பல நிறைகளை நிறுவ வல்லது இலக்கியப் படிப்பு. பரந்த நோக்கமும் விரிந்த பார்வையும் நல்கும்"[1].**

அற நூல்கள் அனைத்தும் சிறந்த நடத்தை முறைகளைத் தக்க உவமைகள் மூலம் விளக்கிக் கூறுகின்றன. இலக்கியங்கள் நல்லவனவற்றின் நன்மையையும் தீயனவற்றின் தீமையையும் கதைகள் மூலம் எடுத்துக் கூறுகின்றன. சங்க கால நூல்கள் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய உயர் பண்புகளை விரித்துரைக்கின்றன.

சங்க இலக்கியம், இடைக்கால இலக்கியம், தற்கால இலக்கியம் இவற்றிற்கிடையே காணப்படும் சொல் மாறுபாடுகளையும் சொல் பரிமாணங்கள் மற்றும் திரிபு (மாறுபாடு) ஆகியவற்றை நன்றாக விளக்கிக்

கூறுதல் வேண்டும். இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடியாக விளங்கி சமூகத்தின் பல்வேறு பண்பாட்டுக்கூறுகளைப் பதிவு செய்து இளைய தலைமுறைக்கு வழங்கி வருகிறது. எனவே, இதனை பொழுது போக்கிற்காகக் கற்காமல் வாழ்வியலுக்காகக் கற்க வேண்டும்.

பாடநூலில் கொடுக்கப்பட்ட பனுவல்கள், எந்த அடிப்படையில் அமைந்துள்ளன? ஏன் மனப்பாடம் செய்யவேண்டியதாக அமைந்துள்ளது? எளிமை கருதியா, உவமை கருதியா, ஓசை கருதியா, பொருளின் உயர்வு கருதியா, அடிகள் குறைந்திருப்பதாலா, பொருளின் உயர்வு கருதியா, ஆசிரியருடைய அல்லது நூலினுடைய சிறப்பு அப்பாட்டில் இருக்கிறது என்பதாலா, இக்காலத்துக்கு பொருந்துகிற செய்தி என்பதாலா, அரசியல் கொள்கையின் அடிப்படையிலா அல்லது கவிதை அடிப்படையிலா என்பதை அறிந்து கற்பிக்க வேண்டும்.

செய்யுள்களிலும் இலக்கியப் பனுவல்கள் மட்டுமே அக்கால மக்களின் வாழ்க்கை நெறிமுறை, பண்பாடு, கலாச்சாரம், வீரம், நாட்டுப்பற்று, காதல், குடும்பம், நட்பு போன்ற அனைத்து வாழ்க்கைத் தேவைகளும் அடங்கிய பனுவல்களைக் கொண்டது. எனவே, இன்றைய மாணவர்களின் மனநிலைக்கு ஏற்ற பல செய்திகளை இலக்கியங்கள் தன்னகத்தே வைத்துள்ளது. இந்த இலக்கியச் செய்யுள்களை மாணவர்கள் சரியான சூழலில் திட்டமிட்டுக் கற்கும் போது, ஒவ்வொரு மாணவனும் இலக்கியத்தின்பால் ஈர்க்கப்பட்டு, அதன் மூலம் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும். ஆனால், இவை அனைத்தும் மாணவர்களிடம் சரியான முறையில் சென்றடைவது ஆசிரியர்களின் கற்பித்தல் என்ற ஒரு புள்ளியில் இணைகின்றது. எனவே, ஆசிரியரின் கற்பித்தலானது மற்ற எல்லா செயல்களைக் காட்டிலும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. எனவே, இலக்கியங்களைக் கற்பித்தல் எப்படி இருக்கிறது? என ஆராய்வது நமது கடமையாகும்.

### 2.2 சங்க இலக்கியங்களின் பொதுப் பண்புகள்

**“தமிழிலக்கிய வரலாற்றுப் பாதையில் கிடைத்துள்ள முதல் மைல்கல் சங்க இலக்கியம். அன்று தொடங்கி இன்று வரையுள்ள இலக்கியங்கள் பலவற்றிலும் சங்க இலக்கியங்கள் செல்வாக்கு பரவலாக உணரப்படுகிறது. இந்தச் செல்வாக்கின் அடித்தளம் என்பது மாணவர்களுக்கு உணர்த்தப்படல் வேண்டும்”** [2]

இத்தகைய மரபுகளையும் செவ்விலக்கியச் சீர்மைகளையும் உணர்ந்து கொள்வதற்கு ஓரளவு மன முதிர்ச்சி தேவைப்படுகிறது. மாணவர்களால் தற்கால இலக்கியங்களில் உள்ளந்தோய்ந்து நிற்க முடிகின்ற அளவு சங்க இலக்கியங்களை எளிமையாக அணுக முடிவதில்லை. சங்க இலக்கியத்தை அணுகுவதில் உள்ள சிக்கல்களைத் தீர்த்து, அவர்களுக்கு நன்முறையில் சங்க இலக்கியங்களைக் கற்பிக்க வேண்டிய கடமை ஆசிரியர்களுக்கு உண்டு. எனவே, சங்க இலக்கியங்களைப் பற்றிய சிறப்புகளையும் நுணுக்கங்களையும் நுண்மாண் உணர்வுகளையும் முழுமையாக அறிந்து கொள்ள வேண்டிய பொறுப்பில் ஆசிரியர்கள் உள்ளனர். எனவே, சங்க இலக்கியங்களைக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் பொதுவாக, சங்க இலக்கியங்களின் பண்புகளைப் பற்றி அறிந்து கொள்வது இன்றியமையாதாகிறது.

### 2.2.1. அகம் புறத்தைப் பொருளாகக் கொண்டிருத்தல்

பகல், இரவு என பொழுதுகளுக்கு இரண்டு வண்ணங்கள் இருப்பது போல், வாழ்க்கைக்கும் இரண்டு வண்ணங்கள் உண்டு. அவைதாம் அகம். புறம் என்பன. அகம், புறம் என்ற இரண்டு வண்ணங்களின் கலவையாகத்தான் வாழ்க்கை அமைகிறது. இதையே அன்றைய தமிழ்ச் சமூகம் கொண்டாடியது. வாழ்வின் அனுபவங்களை இலக்கியங்களாய் பெயர்த்தெடுத்த புலவர்களும் ஆற்றுக்குக் கரை போடுவது போல, அன்றைய மக்களின் வாழ்க்கை அனுபவங்களை அகம் சார்ந்தும் புறம் சார்ந்தும் பிரித்து, நமக்கான இலக்கியங்களாகக் கொடுத்து வியப்புற வைத்துள்ளனர். அக, புற இலக்கியங்களைப் படைக்கும் போது எப்படிப் படைக்க வேண்டும்? எதை எதைக் கருத்தில் கொள்ள வேண்டும்? என்பதற்கும் விரிவாக விதிகள் வகுத்து வியப்பூட்டியர்வகள் நம் முன்னோர்கள். புற இலக்கியங்களைப் படைக்கும் போது நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறே பாடலாம். அதே சமயம் அக இலக்கியங்களைப் படைக்கும் போது, நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறே சொல்ல முடியாது. அதை நாடக பாவனைகளோடு உலகியல் வழக்கத்தைத் தழுவி உலக ஒழுங்கியல் நெறிகளைப் பின்தொடர்ந்து, பாட்டுடை நாயகர்களை அடையாளப்படுத்தாமல் படைக்க வேண்டும். இப்படி ஒரு நனி நாகரிகத்தை அன்றே கைக்கொண்டிருக்கிறது நம் சங்க இலக்கியங்கள். மேலும் பகுத்தறிவுக்குப் புறம்பான கற்பனையான எந்த ஒரு நிகழ்வையும் சங்க இலக்கியங்களில் காண இயலாது. உள்ளதை உள்ளவாறு கூறுவதோடு,

அதைப் படிப்பவர் உணர்ந்து அனுபவிக்கும் வண்ணம் இயற்றப்பட்டுள்ளது சங்ககாலப் புலவர்களின் திறமையைக் காட்டுகிறது. சங்ககாலப் புலவர்கள் ஓரினத்தவர்களும் அல்லர்; ஓரிடத்தவர்களும் அல்லர்; ஒரே காலத்தவரும் அல்லர். ஆயினும் சங்க இலக்கியங்களுக்கே உரிய தனித்தன்மை மாறாமல் அனைத்துப் பாடல்களும் சிறப்புற அமைந்துள்ளமை வியப்புக்குரியதாகும். சங்க காலத்தில் ஆண்பால் புலவர்கள் மட்டுமல்லாமல் ஔவையார், காக்கைபாடினியார், வெள்ளிவீதியார், நட்செள்ளையார் முதலிய பெண்பால் புலவர்களும் சிறந்த கவிதைகள் இயற்றியிருப்பது அக்காலக் கல்வியின் முயற்சியினையும் பெண் மற்றும் பெண்கல்வியின் பெருமையையும் காட்டுகின்றன. மேலும், அக்காலத்தில் சங்க இலக்கியப்பாடல்களைப் புலவர்கள் மட்டுமன்றி மன்னர்களும் இயற்றியுள்ளனர். இதனால், தமிழ் இலக்கியங்களின் மீதும் இலக்கியங்களின் வளர்ச்சியின் மீதும் சங்ககால மக்கள் கொண்ட ஈடுபாட்டை அறிய முடிகிறது. சங்க இலக்கியங்களின் ஒவ்வொரு பாடலிலும் தமிழ் மக்களின் அக்கால வாழ்க்கை முறைமையும் நிகழ்வுகளும் அவர்களின் நாகரிகங்களும் மிக அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. அதனுடன் ஆழ்ந்த கருத்துகளை நமக்கு எடுத்தியம்புவதோடு, புலவர்களின் கற்பனைத் திறத்தையும் நாம் அறியுமாறு அமைந்துள்ளது. எனினும், புறத்திணைப் பாடல்களைக் காட்டிலும் அகத்திணைப் பாடல்களுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

அகம் புறம் என்ற இரு பிரிவுகளில் நம் வாழ்க்கையின் அனைத்து பரிமாணங்களையும் அடக்கிவிட முடியும். இத்தகைய, சங்கப் பாடல்களை மாணவர்கள் கற்றுணர்வதன் மூலம், எங்கு, எப்படி நடந்து கொள்ள வேண்டும்? என்ற நனிநாகரிகத்தை மாணவர்கள் தானாகவே கற்றுக் கொள்வதோடு, வாழ்க்கையின் முக்கியமான அம்சங்களையும் கற்றுக் கொள்கின்றனர்.

### 2.2.2. அகத்திணைப்பாடல்களின் மரபுகள்

அக உணர்வுகளை விளக்கும் முதல் இலக்கியம் சங்க இலக்கியங்கள் ஆகும். ஒருவனும் ஒருத்தியும் தமக்குள்ளே கண்டு காதலிப்பதும் காதலைத் தோழி மூலம் செவிலித்தாய், நற்றாய் ஆகியோருக்கு மெல்லத் தெரியப்படுத்துவதும் அக்காலத்தில் வழக்கத்தில் இருந்துள்ளன. இவ்வாறு காதலைத் தெரியப்படுத்துவதற்கு அறத்தொடு

நிற்றல் என்ற பெயரும் உண்டு. பெற்றோர் திருமணத்திற்கு ஒத்துக் கொள்ளாத சூழலில் காதலனும் காதலியும் ஊரை விட்டு வெளியூர் சென்று விடுதல் உண்டு. இதற்கு உடன்போக்கு என்று பெயர். அக்காலத்தில் காதலித்த பெண்ணை மணந்து அவளோடு இன்பத்துடன் வாழ்ந்து வரும் தலைமகன் வேறு பெண்களை நாடிச் செல்வதும் பழக்கமாக இருந்துள்ளது. அகப்பாடல்கள் பெரும்பாலும் கற்பனைப் பாடல்களாக இருந்தாலும் அக்கால மக்களின் காதல் வாழ்க்கையை முழுமையாக எடுத்துரைக்கின்றன. இவ்வாறு அகப்பாடல்கள் காதலோடு, அதனோடு தொடர்புடைய உணர்வுகளும் நுட்பமும் ஆழமும் நிறைந்தவை. இவை களவொழுக்கம், இச்செறித்தல், கழங்கு பார்த்தல், கட்டுக்கேட்டல், அறத்தோடு நிற்றல், மடலேறுதல், உடன்போக்கு, கற்பு வாழ்க்கை, பரத்தையிற்பிரிவு போன்ற துறைகளின் கீழ் பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

**“சங்க இலக்கியமான அக இலக்கியங்களில் எந்தவொரு தனிப்பெயரும் கதை மாந்தர்களுக்காக காணப்படுவதில்லை. சங்க இலக்கியங்களில் மாந்தர்கள் முக்கியமல்ல. உணர்வுகளே முக்கியம்”** [3]. திருமணத்திற்கு முன்னர் தலைவன் தலைவி ஆகியோரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் களவு வாழ்க்கை எனப்படும். திருமணத்திற்கு பின்பு வரும் வாழ்க்கை கற்பு வாழ்க்கை எனப்படும். குழந்தைப் பருவம், மழலைப் பருவம், சிறார் பருவம் ஆகிய நிலைகளைக் கடந்து பதின்மப் பருவத்தைத் தொடும் ஒருவரின் உடல் இனப்பெருக்கத்திற்கான பக்குவத்தையும் முதிர்ச்சியையும் அடைகிறது. அப்போது ஒருவருக்கு அடுத்த பாலினத்தைச் சேர்ந்த ஒருவர் மீது ஈர்ப்பு ஏற்படுகிறது. அப்போது, அவரைப் பார்க்கவும் அவருடன் பேசவும் பழகவும் ஒரு ஆர்வம் உருவாகும். அப்படி உருவாகும் ஆர்வத்தைத் தடுக்க ஒரு காப்புணர்வு ஒவ்வொருவரின் எண்ணத்திலும் தோன்றும். இதுவே அக ஒழுக்கம் என்பர். இந்த ஒழுக்க நெறிகளையே பாடல்களாக பண்டைய புலவர்கள் பாடியுள்ளனர். தலைவன் தலைவியின் களவு, கற்பு, அதனால் வாழ்வில் ஏற்படும் உணர்வுகளை எடுத்தியம்புவது அக இலக்கியம் ஆகும். அக இலக்கியத்தின் பொருள் தனியொரு மனிதனின் உணர்வுகள் அல்ல. பொதுவான மனிதர்களின் உணர்வுகளே. சங்க இலக்கியங்களை நுணுகி ஆராய்ந்தால் இந்த உண்மை புலப்படும். அன்பின் பரிமாணத்தைக் காட்டுவது. காதலின் அகலம், உயரம் பற்றிக் கூறுவது. எக்காலத்திலும் விரும்பத்தக்க உணர்வுகளைக் கொண்டு விளக்குவது ஆகும். முன்பின் அறிமுகமில்லாத

ஆணும் பெண்ணும் எதிர்பட்டு, சந்தித்து, மனம் கலந்து மகிழ்வதையும் அவர்கள் இருவரும் பிரிவால் வாடுவதையும் அவர்களின் உணர்வுகளையும் நம்மால் மறைத்துக் கூற இயலாது. அதே நேரத்தில், தலைவன் யார்? தலைவி யார்? என்பதையும் வெளிப்படையாகவும் கூற இயலாது என்பதை நன்கு உணர்ந்த நம் சான்றோர்கள், அகம் சார்ந்த நிகழ்வுகளைப் பாடும் போது பாட்டுடை நாயகர், நாயகிகளின் பெயரைச் சுட்டாது, தலைவன் தலைவி என்று பொதுவாக உணர்த்திப் பாடுகின்றனர். **“தனி ஒருவன் அல்லது தனி ஒருத்தியின் நல்ல தீய காதற் களங்களையெல்லாம் வரன் முறையாகத் தொகுத்து மொழிவது அகத்திணையில்லை. மாந்தரிடமும் நிகழும் பல்வேறு காதல் நிகழ்ச்சிகளில் நல்லன என்று தேர்ந்து மேற்கொண்ட தனிக்கூறல் ஒழுக்கங்களைப் புனையும் வரம்புடையது அகத்திணை”** [4]. ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையில் நிகழும் காதலும் காதல் சார்ந்த நிகழ்வுகளும் அவர்களுக்கு மட்டுமே உரித்தானதாகாது. மாறாக, அது ஒரு பொது உணர்வு. இந்த காதல் உணர்வுகளைப் படிக்கும் அனைவரும் அனுபவிக்க முடியும். இவற்றை வெளிப்படையாகக் கூறாமல் உலகியல் முறைப்படி மறைமுகமாகவும் அனைவரும் அனுபவிக்கும் வண்ணமும் பாட வேண்டும். சங்க கால மக்களின் வாழ்க்கையை உள்ளூற உணர்ந்து, அதை அப்படியே நமக்குத் தெரிவிக்கவும் நினைத்து அதே நேரத்தில் தலைவன் தலைவியையும் நேரடியாகச் சுட்டிக்காட்டாமலும் வாழ்க்கை நிகழ்வுகளை எடுத்தியம்புகின்றனர். ஏனெனில், அன்பு, காதல் போன்ற உணர்வுகள் ஒரு தனிமனிதனின் உணர்வாக முடிந்து விடமுடியாது. இது ஒரு பொதுவான உணர்வு. கருவும் கலையாக்கமும் கொண்டு உணர்வு பொங்கும் மனித அனுபவத்தைக் கூறும் கவிதை. புறப்பாடல்களைக் காட்டிலும் அகப்பாடல்களில் அதிகமான உத்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெரும்பாலும் சங்கப்பாடல்களுக்கே உரித்தான திணை, துறை, பா, கூற்று, உள்ளுறை, இறைச்சி போன்ற அனைத்து உத்திகளும் அகப்பாடல்களிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், அகப்பாடல் எடுத்துரைப்பில் மிக முக்கியப் பங்காற்றுவது முதல், கரு, உரிப்பொருட்கள் ஆகும். அகப்பாடல் முழுவதும் பெரும்பாலும், உரையாடல்களே காணப்படுகின்றன. தலைவன், தலைவி, தோழி போன்ற பாத்திரங்களே முக்கிய இடம்பெறுகின்றன. இதனையே, **“கவிதை, கொள்கை என்ற தளநிலை நின்று நோக்கும் போது அகத்துக்கும்**

**புறத்துக்குமிடையே பாடுபவர் நிலையில் வேறுபாடு உண்டு. அகம் ஒரு பாத்திரத்தின் கூற்றாக அமையும். இது ஒரு முக்கியமான வேறுபாடு ஆகும்''** [5]. அகப்பாடல்கள் முழுவதும் உணர்வு வெளிப்பாட்டை மையமாகக் கொண்ட பாடல்கள் ஆகும்.

### 2.2.3 புறத்திணைப் பாடல்களின் மரபுகள்

புறப் படைப்பாக ஒரு மாமன்னனின் வீரத்தைப் பாடும் காலத்தில், அவன் யார்? எந்த நாட்டு மன்னன்? யாரோடு போரில் வென்றவன்? அவன் வெற்றி எத்தகையது? என்றெல்லாம் வெளிப்படையாகப் பாடலாம்; தோல்வியுற்றவனையும் அடையாளப்படுத்தலாம். ஏனெனில், போர்க்களத்தில் கிடைக்கிற வெற்றி, தோல்வி அம்பலத்தில் அரங்கேறும் நிகழ்ச்சி; பொதுவியல் நடப்பு. இதற்கு யாதொரு திரையும் சுவரும் தேவையில்லை. ஏனெனில், அது தனி மனிதனின் வாழ்க்கை நிகழ்வுகளை எடுத்தியம்புவது. மேலும், பண்டைக் கால அரச வாழ்க்கையை புறத்திணைப் பாடல்கள் நமக்கு எடுத்தியம்புகிறது. பண்டைத் தமிழகத்தை ஆண்ட 15 பாண்டிய மன்னர்களையும் 18 சோழ வேந்தர்களையும் 18 சேர அரசர்களையும் சிறப்பித்துக் கூறுகிறது. இமயவரம்பன், சேரன் செங்குட்டுவன், பாண்டியன் நெடுஞ்செழியன், சோழன் கரிகாலன் ஆகிய சிறப்புமிக்க பேரரசர்களின் பெருமைகளைக் கூறுவது புறத்திணைப்பாடல்கள். மேலும் பழனியை ஆண்ட பேகன், பறம்புமலையை ஆண்ட பாரி, குதிரை மலையை ஆண்ட அதியமான், கொல்லி மலையை ஆண்ட ஓரி, பொதியை மலையை ஆண்ட நள்ளி, கோடை மலையை ஆண்ட கடிய நெடுவேட்டுவன் போன்ற மன்னர்களின் வீரத்தையும் வெற்றிப் பெருமிதத்தையும் விளக்குவது புறத்திணைப் பாடல்கள் ஆகும். மேலும், பண்டைய மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளையும் மக்களின் தலைவர்களான மன்னர்களை மக்கள் போற்றிய முறைப் பற்றியும் மக்களுக்காகவும் மக்கள் நலனுக்காகவும் மன்னர்கள் செய்த ஆட்சித் திறமையையும் மக்கள் வாழ்வு முறைகளையும் கொடை, வீரம் போன்ற தனி மனித விழுமிய உணர்வுகளையும் தன்னுள் அடக்கியது. **''ஒரு சமுதாயத்தின் உண்மை நிலையினை நாம் அறிய வேண்டுமெனில் அச்சமுதாயத்தின் நம்பிக்கை, பழக்க வழக்கங்களை நாம் ஆய்வு செய்ய வேண்டும். அச்சமுதாயத்தின் கால ஓட்டத்தில் உருவாக்கப்படுகின்ற இலக்கியங்களில் அச்சமுதாயத்தின் வெளிப்பாடாக பல்வேறு பழக்க**

**வழக்கங்கள் பரவலாகப் பதியப்படுகின்றன.”** [6] இந்தக் கூற்றுக்குச் சங்க இலக்கிய புறப்பாடல்களே சான்றாக அமைகின்றன. நாட்டு அரசர்களுக்குப் புலவர்கள் மதிப்புக் கொடுக்கும் பொருட்டு, அவர்களுடைய வீரம், கொடை, ஆட்சித்திறமை, நட்பு போன்றவற்றைக் கொண்டு புகழ்ந்து பாடல்கள் எழுதினர். அதே நேரத்தில், புலவர்களையும், அரசர்கள் மதிக்க மறந்து விடவில்லை. புலவர்களைப் புரவலர்கள் மிகுதியாக மதித்தனர். புலவர்கள் விடைபெறும் போது, புரவலர்களாகிய அரசர்கள், ஏழடிப் பின் சென்று வழியனுப்பினர். அதோடு நான்கு குதிரைகள் பூட்டிய தேரில் வழியனுப்பினர். தார்க்குச்சியில் ஆணி இருந்தால் குதிரைகளின் வேகத்தைப் புலவர்களால் அடக்க முடியாது என்பதால், தார்க்குச்சியில் உள்ள ஆணியை நீக்கிவிட்டு தார்க்கம்பைக் கொடுத்து வழியனுப்பினர். இவ்வாறு கல்வி, வீரம், செல்வம், பதவி என்று வாழ்க்கையில் உயர்ந்ததாக மதிக்கப்படும் அனைத்தும் அக்காலத்தில் சமமாகப் புகழ்ந்து பாடப்பட்டது என்பதற்குச் சான்று இந்த புறப்பாடல்களே ஆகும். எனவே, புறத்திணைப் பாடல்கள் அனைத்தும் புலவர்கள் கூற்றாக அமைந்திருக்கிறது. பொது வாழ்வில் காணப்படும் வீரம், கல்வி, கொடை, புகழ் முதலானவையும் அதன் நிலையாமை குறித்தனவும் புறப்பாடல்களில் இடம்பெறும். இந்தப் பொதுக்கூறுகள் அனைத்தையும் விளக்குவதற்குப் புலவர்கள் பெரும்பாலும் அரசர்களைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டே பாடியுள்ளனர். எனினும் அரசர்கள் என்பதால் அவர்களைப் போற்றி மட்டுமே பாடவேண்டும் என்ற போக்கைப் பின்பற்றவில்லை.

புறப்பாடல்கள் பெரும்பாலும் கற்பனையாகப் பாடப்படவில்லை. இரு அரசர்களுக்கிடையே நடந்த போர்களும் பாடப்பட்டுள்ளன. அரசர்களுக்கிடையே நடந்த போரை புலவர்கள் தடுத்து நிறுத்தியது பற்றியும் பாடப்பட்டுள்ளது. அரசர்கள் புலவர்களுக்கு கொடுத்த மரியாதை நிமித்தமும் கூறப்பட்டுள்ளது. புறப்பாடல்களில் இயற்கைக்கு மீறிய செய்திகள் எதுவும் கூறப்படவில்லை. சங்க கால வரலாற்றைத் தொகுப்பதற்குப் புறப்பாடல்கள் துணைநிற்கின்றன.

**2.2.4 பன்முகக்கூறுகள் மற்றும் உத்திகள்**

**திணை**

அகப்பாடல்களும் புறப்பாடல்களும் மக்களின் வாழ்க்கை முறையையும் வாழும் முறையையும் எடுத்தியம்புவன. இதில் கூறப்படும் உணர்வுகளைப் பொறுத்தும் வாழ்க்கை முறைகளைப் பொறுத்தும் நிகழ்வு நடைபெறும் இடத்தைப் பொறுத்தும் ஒவ்வொரு பாடலுக்கும் பல பிரிவுகள் உள்ளன. அவை திணை, துறை, கூற்று, முதல், கரு, உரிப்பொருட்கள் என்று பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாடலுக்கும் உயிரூட்டுவனவாக உள்ளன. இதன் மூலம் படிப்பவர்களுக்கு அப்பாடலுக்கான சூழ்நிலை மிக எளிமையாக விளங்குவதோடு, பாடலுக்கான உணர்வை அவர்களால் பெறமுடியும்.

திணை என்பது ஒழுக்கம், வாழ்க்கை நெறி என்பதைக் குறிக்கும். ஒழுகுதல் என்பது நன்னெறிகளோடு வாழ்தல் என்பதைக் குறிக்கும். இதிலிருந்து ஒழுக்கம் என்ற சொல் பெறப்பட்டது. இவ்வாறு நல்ல ஒழுக்கத்துடன் வாழும் நெறியை தமிழர்கள் அகத்திணை புறத்திணை என்று இரண்டாகப் பிரித்தனர். திணை என்பதற்கு இடம், வீடு, குலம், ஒழுக்கம், பிரிவு என்று பல பொருள் உண்டு. இலக்கியங்களில் திணை என்பது ஒழுக்கம், பிரிவு என்றே பொருள் கொள்ளப்படுகிறது. புறத்திணை பாடல்களுக்கும் அகத்திணை பாடல்களுக்கும் ஒரே எண்ணிக்கையில் திணைகள் இடம்பெற்றுள்ளன. ஆனால், அவற்றின் மையக்கருத்துக்கு ஏற்ப வெவ்வேறு வகையாகப் பெயரிடப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன.

**அகம்**

ஆண் மற்றும் பெண்ணின் சொந்த வாழ்க்கையைச் சார்ந்த உணர்வுகள், எண்ணங்கள், செயல்கள் ஆகியவை அக ஒழுக்கங்கள். இயற்கையைச் சார்ந்து வாழ்ந்த அக்கால மக்களின் அகப்புற வாழ்க்கையின் குறியீடுகளாக அமைந்தவையும் பூக்களே ஆகும். எனவே, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற பூக்களின் பெயர்களே நிகழ்வுகளைக் குறிக்கின்றன. இதனுடன் சேர்ந்து, கைக்கிளை மற்றும் பெருந்திணை ஆகியனவும் அகத்திணைகளாகும். இவற்றுள், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை ஆகியவை மட்டுமே சிறந்த திணைகளாகக் கொண்டு அன்பின் ஐந்திணையாக வழங்கப்படுகின்றன. நற்றிணை, ஐங்குறுநூறு, அகநானூறு ஆகிய தொகுப்புகளில் உள்ள பாடல்கள் அனைத்தும், இவற்றில் ஏதேனும் ஒரு திணையில்தான் அமைந்திருக்கும்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற திணைகள் முறையே கூடல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் ஆகிய அனைத்தும் மலை, காடு, வயல், கடல், சுரம் எனும் இயற்கைப் பிண்ணனியில் நிகழ்வதாகக் குறிக்கப்பட்டுள்ளன. தலைவனும் தலைவியும் இன்பத்தின் தோற்றமாகப் புணர்ச்சியை வெளிப்படுத்துவது குறிஞ்சி, அப்புணர்ச்சியால் அன்பைத் தளரவிடாது அகத்தில் கொள்ளுதல் முல்லை, அதன்பின்பு அவ்வன்பின் நிலைபேற்றைக் குறிக்கக் பிரிவது பாலை, இந்த பிரிவின் பயனாய் ஊடலும், கூடலும் ஏற்படுவது மருதம், இந்தப் பேரின்பத்தை அடையும் வழியைக் குறிப்பது நெய்தல் என அகப்பாடல்களில் திணைகள் நிகழ்வுக்கேற்றவாறு பிரிக்கப்பட்டுள்ளது. இந்தத் திணையில் ஒவ்வொரு நிகழ்வுகளும் பல்வேறு காட்சிகளையும் பிரிவுகளையும் கொண்டுள்ளது. அதைப்பொருத்து ஒவ்வொரு பிரிவையும் எடுத்தியம்புவது துறை எனப்படுகிறது. மேலும், இந்த நிகழ்வுகள் நிகழும் காலத்தையும் அந்தந்தத் திணைக்கு ஏற்றவாறு பிரித்துக் காட்ட பெரும்பொழுது, சிறுபொழுது போன்ற காலங்கள் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இந்தப் பாடல்கள் ஒவ்வொன்றும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற பிரிவுகளின் கீழும் பகுத்தாளப்பட்டுள்ளன. திணைப் பாகுபாடு, துறைப் பாகுபாடு, காலப் பாகுபாடு, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற பாகுபாடு போன்று அகத்திணை பாடல்கள் பிரித்தாளப்பட்டிருந்தாலும், அகத்திணைக் கூறுகள், பண்டைத்தமிழர் மரபுகளை ஒட்டியே அனைத்துப் பாடல்களும் பாடப்பட்டுள்ளன பாராட்டுதற்குரியது.

**புறம்**

மக்களின் வாழ்க்கை முறையில் புறவுலகைச் சார்ந்த சிந்தனைகள் புறத்திணையாக அமையும். புறப்பாடல்களின் திணைகள் போர்முறைகளைக் கொண்டே பிரிக்கப்படுகின்றன. மன்னர்கள் போர்புரிந்ததையும் வெற்றி பெற்றதையும் விவரிக்கும் ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு திணையாகப் பிரிக்கப்படுகின்றன. அக்கால மக்கள் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்ததால் அவர்களின் வாழ்க்கை பிரிவுகளையும் மலர்களின் பெயர்களே குறிக்கின்றன. அதாவது, வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை, என்ற எட்டுப் பிரிவுகளாக பகுத்தனர். காலப்போக்கில் புறத்திணைகள் பன்னிரண்டாகப் பிரிக்கப்பட்டது. பண்டைக் காலத்தில் அரசர்கள் போரில் அறநெறியைப் கையாண்டவர்கள். ஒரு

நாட்டைக் கையாள அரசன் முதலில் பகைநாட்டின் பசுக்களைக் கவர்வான். இம்முயற்சி வெட்சித்திணை எனப்படும். இம்முயற்சியில் பகை நாட்டு வீரர் வெட்சிவீரரின் முயற்சியைத் தடுப்பர். தடுக்கும் முயற்சி கரந்தைத் திணை எனப்படும். இவ்வாறு பகை நாட்டின் மீது படையெடுப்பதை வஞ்சித்திணை எனவும், அப்படையெடுப்பை எதிர்த்து நிற்றல் காஞ்சித்திணை எனவும், கோட்டையை முற்றுகையிடல் உழிஞைத்திணை எனவும், கோட்டையுள் இருந்து எதிர்த்தல் நொச்சித்திணை எனவும், கோட்டை வெளியில் நடக்கும் போர் தும்பைத்திணை எனவும், போரில் வெற்றிபெறுதல் வாகைத்திணை எனவும், போரில் வெற்றிபெற்ற அரசரை பாராட்டுதல் பாடாண் திணை எனவும், இதுவரை குறிப்பிட்ட திணைகளுள் கூறாத செய்திகளைக் கூறுதல் பொதுவியல் திணை எனவும் அழைப்பர். மேலும், தலைவன் தலைவி இடையில் ஏற்படும் ஒருதலைக்காதலின் புறக்கருத்துகளை அறிவித்தல் கைக்கிளை எனப்படும். இது ஆண்பாற் கைக்கிளை, பெண்பாற் கைக்கிளை என இருவகைப்படும். இறுதியாக, இருபாலரிடத்தும் தோன்றும் பொருந்தாக் காதலைக் குறிப்பது பெருந்திணை என்பர். இவ்வாறு ஒவ்வொரு நிகழ்வும் ஒவ்வொரு திணைகளாகப் பிரித்துக் காட்டப்பட்டிருக்கும். இந்த ஒவ்வொரு திணையும் பல கூறுகளைக் கொண்டது. இக்கூறுகள் ஒவ்வொன்றும் துறைகள் எனப்படும். இவ்வாறு புறப்பாடல்கள், பன்னிரண்டு திணைகளாலும் பல்வேறு துறைகளாலும் பல்வேறு புலவர்களாலும் காலத்தாலும் பிரிக்கப்பட்டிருந்தாலும் போர் சார்ந்து போரைப்பற்றிய செய்திகள், அரசர்கள் பற்றிய செய்திகள் என்ற நோக்கில் எந்தவித பாகுபாடுமின்றி மிக நேர்த்தியான செய்திகளைப் புலவர்கள் எடுத்துரைத்திருப்பது பாராட்டுதற்குரியது.

**துறை**

திணை என்பதில் ஒரு சிறு பகுதியே துறை எனப்படும். துறை என்றால் இடம், ஒழுங்கு, உதவி என்று பலபொருள் பெற்று தேவைக்கேற்ப பயன்படுத்தப்பட்டுள்ளது. மனிதனின் அகவாழ்வை ஒரு ஆற்றுக்கு ஒப்பிடுவதாகக் கொள்வோம். ஆற்றை நாம் எந்த இடத்திலும் கடப்பதில்லை. ஆனால் சில குறிப்பிட்ட இடங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைத் தனித்தனி பயன்பாட்டுக்கு உட்படுத்துகிறோம். ஆற்றுக்குள் இறங்கும் அந்த இடங்களைத் துறை என்று அழைக்கிறோம். அவ்வாறு, படித்துறை, குளியல் துறை, உண் துறை, சலவைத் துறை என பல பெயர்களில் அழைக்கிறோம்.

இதைப் போலவே, அகப்பாடல்களிலும் எந்தெந்தப் பொருள்களில் பாடலாம் என்பதைப் பாடலாசிரியர்கள் வகுத்துப் பாடியுள்ளனர். அவற்றைப் பாடலுக்கான துறை என்கிறோம். சங்கப்பாடல்கள் ஒவ்வொன்றுக்கும் திணை துறை உண்டு. அதாவது, அது எந்த ஒழுக்கத்தைப் பற்றியது? எந்தக் கருத்தைப் பற்றியது? என்று கூறுவதாகும். பொதுவாக பாடல் எந்த நோக்கத்தில் பாடப்பட்டுள்ளதோ அதுவே பாடலின் துறையாகக் கொள்ளப்படும். இவ்வாறு புறப்பாடலான புறநானூற்றில் மட்டுமே 67 துறைகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு செய்யுளின் கருத்து, நிகழ்வுக்கு ஏற்ப துறைகள் பெயரிடப்பட்டுள்ளதால், துறைகள் எண்ணிக்கையில் அதிகம் உள்ளன.

**கூற்று**

அகப்பாடல்கள் என்பது பல்வேறு சூழல்களைக் கொண்டது. ஒவ்வொரு சூழலிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் நிகழும். அவ்வாறு நிகழும் நிகழ்ச்சிகள் பலவற்றை ஒருங்கு சேர்த்து அகப்பாடலில் பாடுதல் இயலாது. குறிப்பிட்ட ஒரு சூழலில் குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை மட்டுமே அகப்பாடலில் பாட முடியும். அந்நிகழ்ச்சியைப் புலவர்கள் பாடலில் அமைத்துப் பாடும் போது தாம் கூறுவது போல பாடாமல், அகப்பாடல் நிகழ்வுகளைக் கூறுவதற்கென்றே பல மாந்தர்களைப் படைத்தனர். அவர்கள் கூறுமாறே நிகழ்ச்சிகள் பாடப்பெற்றன. அந்நிகழ்வுகளில் ஒருவர் கூறுவதாகவும், ஒருவர் கேட்பதுமாக பாடப்பெற்றன. இவ்வாறு வரையறுத்த மரபுகளைக் கூற்று என்பர். இம்மரபுகளின் வழி நின்று பாடல் அமைத்துப் பாடும் போது, அப்பாடல் ஒரு சிறிய நாடகமாக அமைந்து படிப்பவருக்கு இன்பம் சேர்க்கும். அவ்வாறு கூற்றில் இடம்பெறும் மாந்தர்கள், களவியல் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவர்கள் என்றும், கற்பியல் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவர்கள் என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். தலைவன், தலைவி, தோழி, செவிலி, பார்ப்பான், பாங்கன் ஆகிய ஆறு மாந்தர்களும் களவியல் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவர்கள் ஆவர். பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் ஆகிய ஆறு மாந்தர்களுடன், மேற்குறிப்பிட்ட ஆறு மாந்தர்களுடன் சேர்ந்து மொத்தம் பன்னிரண்டு மாந்தர்களும் கற்பியல் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவர்கள் ஆவர். இவ்வாறு இந்த மாந்தர்கள் கூறுவது போல அகப்பாடல்கள் பாடப்பெற்றுள்ளன.

இந்தக் கூற்று ஒருவர் மட்டும் உரையாடுதல், இருவர் தங்களுக்குள் உரையாடுதல் என இருவகையாகப் பிரிக்கப்படுகிறது. இதில் அகப்பாடல்களில் பெரும்பாலும் ஒருவர் மட்டும் உரையாடுதல் வகை கூற்றே இடம்பெறுகிறது. அதாவது மாந்தர் ஒருவர் பேச மற்றொருவர் கேட்குமாறு அமையும் உரையாடல்களே பெரும்பாலும் அகப்பாடல்களில் இடம்பெற்றுள்ளன. இருவர் தம்முள் மாறி மாறி உரையாடுவது போன்ற கூற்றுகள் அகப்பாடல்களில் கலித்தொகையில் மட்டுமே அமைந்துள்ளன. மற்ற அகப்பாடல்களில் இவ்வகைக் கூற்றுகள் ஒன்றுகூட இடம்பெறவில்லை. கலித்தொகையில் தலைவன்-தலைவி கூற்று, தலைவி – தோழி கூற்று, தோழி-தலைவன் கூற்று என்றவாறு அனைத்துப் பாடல்களும் உரையாடல்களாகவே அமைந்துள்ளன. இப்படி இருவரும் மாறி மாறி உரையாடும் இந்தப் பாடல்கள் படிப்பவரின் கண்முன் ஒரு நாடகமாகவே அரங்கேறி விடுகின்றன. இவ்வாறே, ஒருவர் மட்டும் உரையாடுதல் வகை கூற்று என்பது தலைவன், தலைவி, தோழி முதலிய யாராவது ஒருவருடைய உரையாடலாக மட்டும் அமைந்து வருவதாகும். இதனை ஒரு மாந்தர் கூற்று என்பர். இது முன்னிலை மொழி மற்றும் முன்னிலைப் புறமொழி என இருவகைப்படுகிறது. இதில், எதிர்புறம் இருந்து கேட்பவர், வேறு ஒரு மாந்தராகவோ அல்லது கூற்று நிகழ்த்துபவரின் மனசாட்சியாகவோ அல்லது அஃறிணைப் பொருளாகவோ இருக்கலாம். இதில் அஃறிணைப் பொருட்களாக ஞாயிறு, திங்கள், மரம், பறவை, அறிவு, விலங்கு போன்றவை இடம்பெறுகின்றன. இவ்வாறு சங்க காலத்தில் அகப்பாடல்கள் பாடியவர்கள் இந்த ஒருவர் மாந்தர் கூற்றில் மூன்று முறைகளைக் கையாண்டுள்ளனர். அதாவது ஒருவர் வேறு ஒருவர் கேட்குமாறு கூறுதல், ஒருவர் அவருடைய மனம் (மனசாட்சி) கேட்குமாறு கூறுதல் மற்றும் ஒருவர் அஃறிணைப் பொருள் கேட்குமாறு கூறுதல். இதில் ஒருவர் வேறு ஒருவர் கேட்குமாறு கூறுதல் என்ற வகைக் கூற்றுகளே பெரும்பாலும் இடம்பெறுகின்றன. இதில் ஒருவர் சொல்வதை வேறொருவர் எதிரில் இருந்து கேட்பார். எனவே இது முன்னிலை மொழி எனப்படுகிறது. மேலும், இந்த ஒரு மாந்தர் கூற்றில் மேலும் மூன்று வகைகள் உள்ளன. அவை, ஒருவர் வேறு ஒருவருக்குக் கூறுவது போல மற்றொருவரிடம் கூறுதல், ஒருவர் தன் மனதிடம் பேசுவது போல வேறு ஒருவருக்குக் கூறுதல் மற்றும் ஒருவர் அஃறிணைப் பொருளுடன் பேசுவது போல வேறு ஒருவருக்குக் கூறுதல். இதிலும் முதல் முறையிலேயே பெரும்பாலான பாடல்கள் இடம்பெறுகின்றன. ஆனால் இத்தகு கூற்றில் மூன்று

மாந்தர்கள் இடம்பெறுவர். இந்த வகைக் கூற்றில் ஒருவர் பேசுவார். இருவர் கேட்பார். கூற்றை நிகழ்த்துபவர் ஒருவரை அழைத்துப் பேசுவார். ஆனால், கூற்று நிகழ்த்துபவரின் நோக்கம் தன் கூற்றை எதிரில் இருப்பவர் கேட்க வேண்டும் என்பதற்காக அல்ல. மாறாக அங்கு இருக்கும் மூன்றாமவர் கேட்க வேண்டும் என்பதற்காக மட்டுமே. இதில் மூன்றாமவர் அருகிலோ அல்லது சற்றுத் தொலைவிலோ இருந்து கூற்றைக் கேட்பார். எனவே இவ்வகைக் கூற்று முன்னிலை புறமொழி எனப்படுகிறது. இம்முறையில் அமைந்த பாடல்களில் கூற்று நிகழ்த்துபவர் தமது கருத்தை பெரும்பாலும் குறிப்பாக மட்டுமே புலப்படுத்துவார். கேட்பவரும் அக்குறிப்பை தெளிவாக உணர்ந்து கொள்ளும் ஆற்றல் உடையவராக விளங்குவார். இவ்வாறு முன்னிலை மொழி மற்றும் முன்னிலைப் புறமொழி ஆகிய இருவகைக் கூற்றிலும் பேசுபவருக்கு எதிர் பேச்சு எதுவும் இராது.

## முதல், கரு, உரிப் பொருட்கள்

சங்கப்பாடல் எடுத்துரைப்பில் மிக முக்கியமாகக் கருதப்படுவது முதல், கரு, உரிப் பொருட்களே ஆகும். பெரும்பாலும் இவை அகப்பாடல்களிலேயே இடம்பெறுகின்றன. இவற்றின் சிறப்பும் இதன் வரிசையிலேயே அமைந்துள்ளது. அதாவது, முதற்பொருளை வைத்தே பாடலின் திணை குறிக்கப்படும். முதற்பொருள் இல்லாவிட்டால், கருப்பொருளைப் பொருத்தது திணை. அதுவும் இல்லாவிட்டால், உரிப்பொருளை வைத்து திணையைக் குறிப்பர். இவ்வாறு, அகப்பாடலைப் பொருத்தமட்டில் முதற்பொருள், கருப்பொருளைக் காட்டிலும் உரிப்பொருளுக்கு இருக்கும் முக்கியத்துவத்தை அறியலாம். ஒரு அகப்பாடலில், முதற்பொருள், கருப்பொருள் இல்லாமல் போகலாம். ஆனால் உரிப்பொருள் இல்லாவிட்டால் அது அகப்பாடலாகாது. முதற்பொருளானது திணை, நிலம், பொழுது என வகைப்படுத்தப்படுகிறது. கருப்பொருளானது தெய்வம், மக்கள், நிலம், பறவை, விலங்கு என வகைப்படுத்தப்படுகிறது. சங்கப்பாடல்களில் பாடலின் சூழ்நிலையைப் பொறுத்து முதலில் உரிப்பொருளே அறியப்படுகிறது. உரிப்பொருளை விளக்கும் பொருட்டே அந்நிலத்தின் முதற்பொருள் மற்றும் கருப்பொருள் ஆகியவை விளக்கப்படுகின்றன.

பாடலின் முதற்பொருளானது நிகழ்வு நடைபெறும் இடம், பொழுது ஆகியவற்றைப் பொறுத்து அமைகிறது. நிலத்தை நானிலம் என்று கூறுவது

மரபு. அவை, மலையும் மலை சார்ந்த இடமுமான குறிஞ்சி, காடும் காடு சார்ந்த இடமுமான முல்லை, வயலும் வயல் சார்ந்த இடமுமான மருதம், கடலும் கடல் சார்ந்த இடமுமான நெய்தல் ஆகிய நான்கும் ஆகும். கோடை வெம்மையால் வளம் திரிந்து நீரின்றி வறண்டு தோன்றும் குறிஞ்சியையும் முல்லையையும் பாலை என்பர். அந்தந்த நிலத்திற்கு ஏற்ப அந்தந்தப் பூக்களே சிறப்பாக உள்ளன. அடுத்து ஒவ்வொரு நிலத்திற்கு ஏற்ப பொழுதுகளும் குறிக்கப்பட்டுள்ளன. ஒரு ஆண்டை மழைக்காலம், கோடைக்காலம், குளிர்காலம், பனிக்காலம் என நான்கு பிரிவுகளாக பிரித்து பகுத்திருப்பது போல, நம் முன்னோர் ஒரு ஆண்டை கார்காலம், கூதிர்காலம், பனிக்காலம், வேனிற்காலம் எனப்பிரித்தனர். ஆனால், தமிழகப் பகுதியில் கார்காலம் எனப்படும் மழைக்காலமும், கூதிர்காலம் எனப்படும் குளிர்காலமும் வெகுசில மாதங்களே நீடிக்க, பனிக்காலமும், வேனில் காலமும் நீண்ட காலம் தொடர்வதைக் கண்ட நம் முன்னோர், பனிக்காலத்தை முன்பனிக்காலம், பின்பனிக்காலம் என்றும் வேனில் காலத்தை இளவேனில்காலம், முதுவேனில் காலம் என்றும் இரண்டாகப் பிரித்தனர். இந்த கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் ஆகிய ஆறு காலங்களையும் பெரும்பொழுதாகக் குறித்தனர். நாம் ஒரு நாளை 24 மணிநேரமாகப் பிரித்திருக்கிறோம். அதுபோல, நம் முன்னோர் ஒரு நாளை காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை என்று ஆறு பொழுதுகளாகப் பிரித்தனர். இவையே, சிறுபொழுதுகள் எனப்படும்.

கருப்பொருளானது பாடலைப் புலவர் பயன்படுத்தியிருக்கும் இயல்பு முறை, உவமை, உள்ளுறை ஆகியவற்றைப் பொருத்து விளக்கப்படுகிறது. இதனையே, **“முதற்பொருள் அடிப்படையாய் இருக்கின்றது. கருப்பொருள் பின்னணி அமைக்கின்றது. காதலர் மகிழ்ச்சிக்கு உரிய உரிப்பொருள் கொலுவிருக்கின்றது”**[7] என்று மு.வரதராசன் கூறுகிறார். இந்தக் கருப்பொருளானது, ஒவ்வொரு நிலத்தில் வாழும் மக்கள், வணங்கும் தெய்வம், அவர்களின் உணவுமுறை, விலங்கு, பறவை, பூ, மரம், ஊர், நீர் எடுக்கும் இடம், யாழ், பறை, பண், தொழில் பற்றிய செய்திகளை எடுத்துரைக்கும். ஒவ்வொரு நிலத்திற்கும் கருவாக வளர்ந்தவையே கருவெனப்படும் நிலமும் பொழுதும் ஆகிய இரண்டோடும் கருப்பொருள் பின்னி பிணைந்துள்ளது. பாடலில் மனித மறு உணர்ச்சிதான் முதல் தேவை. இதற்குப் பின்னணியாக வருவது முதற்பொருளும் கருப்பொருளுமாகும்.

உரிப்பொருள் என்பது பாடலுக்குரிய பாடுபொருள், பாட்டுடைத் தலைவனின் மனநிலையைப் பொருத்தது. இந்த மாந்தரின் மனநிலையை ஐந்து வகையாகப் பிரிப்பர். அதாவது, பருவம் வந்த ஆணும் பெண்ணும் விரும்பி பழகும் முதல் நிலை. இது அதிக நாட்கள் தொடர்வதில்லை. காதலைக் கடந்து இல்லற வாழ்க்கையைத் தொடங்குதல். இதில் பொருள் ஈட்டுவதற்காக தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதல். பின் வாழ்க்கையில் வளம் பெற்று, பிள்ளைச் செல்வங்களோடு வாழும் போது பலவிதப் பூசல்கள் ஏற்பட்டு அதைத் தலைவன் தீர்த்து வைத்தல். இதன் நடுவில் சில நேரங்களில் உயிர் இழப்புகள் ஏற்படும். அதுவும், தலைவன் தலைவி ஆகியோரின் இழப்பு மற்றொருவருக்கு நீங்காத் துயரத்தை ஏற்படுத்தும். இவ்வாறு தலைவன், தலைவி குறிஞ்சி நிலத்தில் பழகும் முதல்நிலை புணர்தல் புணர்தல் நிமித்தமுமாகும். முல்லை நிலத்தில் மணம் முடித்து வாழும் நிலை இருத்தல் இருத்தல் நிமித்தமுமாகும். பின் பொருள் ஈட்டுவதற்காக தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதலைப் பாலைநிலமாகச் சித்திரித்து இருத்தல் பிரிதல் பிரிதல் நிமித்தமுமாகும். பின் மருத நிலத்தில் பூசல் ஏற்பட்டு, ஊடலில் இணைதல் ஊடல் ஊடல் நிமித்தமுமாகும். தலைவன் தலைவி இழப்பை காட்டுவதை நெய்தல் நிலத்தில் இரங்கல் இரங்கல் நிமித்தமுமாகக் காட்டப்படுகிறது. இவ்வாறு உரிப்பொருள் அகப்பாடலில் உயிரான பொருள். பாடலில் கூறப்படும் செய்தி என்ன என்பதை நமக்குக் காட்டுவது உரிப்பொருளாகும். பாடலில் உரிப்பொருள் இருந்தாலே போதும் அதைக்கொண்டு திணை முதல் அனைத்தையும் கண்டு கொள்ள முடியும்.

**உள்ளுறை உவமம்**

உள்ளுறை உவமம் என்பது தமிழ் இலக்கியப் பாடல்களில் மிகச் சிறப்பானது. மாந்தர்களின் நுட்பமான குறிப்பினை எடுத்துரைப்பதற்காக சங்கப் புலவர்கள் கண்டெடுத்த ஒரு நாகரீக வழி உள்ளுறை உவமம் ஆகும். எனினும், இந்த உள்ளுறை உவமமானது மிக வலுவான கட்டுப்பாடுகளை உடையது. அகப்பொருளான ஐந்து திணைகளில் மட்டும் பயன்படுத்தப்படும். ஆனால், கருப்பொருள் என்னும் பெயருடன் இயற்கையாகக் காட்டப்படுவதாகும். வெளிப்பார்வைக்கு, மரம், செடி, கொடி, மரம், பறவை, விலங்குகள் கூறுவது போல் இருக்கும். இவ்வாறு, அக நிகழ்ச்சிகளை வெளிப்படையாக எடுத்துக் கூறாமல், இலை மறைவு காய் மறைவாக

எடுத்தியம்புவதற்காகப் புலவர்கள் கையாண்ட உத்தியே உள்ளுறை உவமமாகும். இதன் மூலம் மாந்தர்களின் எண்ணத்தை இலக்கியத்தை படிப்போர் உணரும் வண்ணம் நயம்பட எடுத்துரைப்பர். இந்த இடங்களில் காணப்படும் காட்சிகள், இயற்கைப் பொருட்கள் அனைத்தும், மாந்தர்களின் மன உணர்வுகளை விளக்கும் கருவிகளாகவே செயல்படுகின்றன. மேலும் உள்ளுறை என்னும் சொல்லை உள்+உறை எனப் பிரிக்கலாம். அதாவது பாடலில் உள் கருத்துகள் மறைந்து வருவதைக் குறிக்கிறது. அவ்வாறு மறைந்து நிற்கும் கருத்துக்குப் பயன்படுத்தப்படும் இயற்கைப் பொருட்களையே உவமம் என்கிறோம். இவ்வாறு அகப்பொருள் செய்திகளை, கருப்பொருளை மையமாகக் கொண்டு, வெளிப்படையாகக் கூறாமல், அதைத் தொடர்ந்த வேறு ஒரு செய்தியை மறைமுகமாகக் கூறி விளக்குதல் உள்ளுறை உவமம் எனப்படும்.

**இறைச்சி**

இறைச்சி என்னும் சொல் ‘இறு’ என்னும் சொல்லின் பொருளில் வருகிறது. இதற்குத் ‘தங்குதல்’ என்று பொருள். கவிஞர்கள் தாம் கூறும் சொற்களுக்கு அடைமொழியாக எந்தப் பொருளைக் காட்டுகிறார்களோ, அதனை உணர்ந்து கொள்ளும் நுட்பம் ‘இறைச்சி’ எனப்படும். உள்ளுறை உவமத்திற்கும் இறைச்சிக்கும் கோடு போட்ட எல்லை கிடையாது. இரண்டும் ஒரேமாதிரியான விளக்கம்தான் என்றாலும் பொருள் அளவில் சிறிய வேறுபாடு உண்டு. சில பாடல்களில் இடம்பெறும் நுட்பம் உள்ளுறை உவமமா? அல்லது இறைச்சியா? என்பதில் இன்று வரையில் கருத்து வேறுபாடுகள் உண்டு. உள்ளுறையைப் போலவே இறைச்சிக்கும் கருப்பொருளே அடிப்படையாக அமைகின்றது. ஒரு சொல்லின் பொருள், அதனுடைய குறிப்புப் பொருள், இது இரண்டிற்கும் மேலாக ஒரு நுட்பமான பொருள் விளங்குமாயின் அதுவே இறைச்சி எனப்படும். சங்ககாலப் புலவர்கள் அக உணர்வை மறைமுகமாக குறிப்பாக உணர்த்த உள்ளுறை உவமம், இறைச்சி ஆகிய உத்திகளைக் கையாண்டனர். இவற்றைக் குறிப்புப் பொருள் உத்தி என்றும் அழைப்பர். வெளிப்படையாகத் தெரியும் ஒரு பொருளோடு வேறொரு பொருள் உணர்த்தி வருவது உள்ளுறை உவமம் ஆகும். இவை இரண்டும் மட்டுமல்லாது மேலும் ஒரு நுட்பமான பொருளை உணர்த்துவதானால் அது இறைச்சி எனப்படும். சங்கப் புலவர்கள் தம்

கருத்தை நேரடியாகக் கூறாமல் மறைமுகமாக கூறுவதற்காகவே இது போன்ற உத்திகளைக் கையாண்டுள்ளனர்.

**உத்திகள்**

செய்யுள்களில் இன்றளவும் செறிவும் தொன்மையும் பெற்று விளங்குவதாகப் போற்றப்படுவது சங்க இலக்கியப்பாடல்கள் மட்டுமே. இதற்குக் காரணம், சங்க இலக்கியங்களை எழுதிய புலவர்கள் பயன்படுத்திய உத்திகளேயாகும். சங்க இலக்கியப் புலவர்களின் அடிப்படையில் உத்திகளைப் பகுத்துக் காணும் பொழுது ஒரு புலவனுக்குரிய பண்பு எனக் குறிப்பிட்டுச் சுட்டும் வகையில் பண்புகள் காணப் பெறவில்லை. படைப்புத் தன்மையில் அனைவரது பாடல்களும் ஒரே தன்மையாகக் காணப்படுகின்றன. புலவர்கள் இலக்கியம் படைப்பதற்கெனத் தனிக் கொள்கைகளை வகுத்துக் கொண்டு அவற்றினடிப்படையில் பாடல்களை யாத்த அக்காலத் தன்மை வியப்புக்குரியது. **“ஓர் இலக்கியத்தைப் படிக்கும் போது யாரோ ஒருவர் நமக்கு எடுத்துச் சொல்வது போல் உணர்கிறோம். இலக்கியப் பாத்திரங்கள் பேசுவன அல்லாமல் பின்னால் இருந்து ஒருவர் பேசுவது போல் உணர்கிறோம். அது படைப்பாளனின் குரல். அக்குரலின் வெளிப்பாடே நமது உணர்ச்சியையும் தூண்டுகிறது.”** [8] இதற்குக் காரணம் பாடலில் பயன்படுத்திய உத்திகளேயாகும். சங்க இலக்கியத்தில் பயன்படுத்திய உத்திகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை தொடர்நிலை உத்திகள், வருணணை உத்திகள் மற்றும் பொருளமைப்பு உத்திகள். இதில் தொடர்நிலை உத்திகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். குறிப்பு பொருளையும் உணர்வு நிலையையும் விளக்கும் உத்திகள் மற்றும் குறிப்பு பொருளையும் வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும் உத்திகள் என்பனவாகும். பாடலில் இடம்பெறும், ஒலிக்குறிப்புச் சொற்கள், தனித்தன்மை வாய்ந்த சொல்லாட்சிகள், எதிர்மறைச் சொல்லுணர்வு, சொற்பொருளுணர்வு மாற்றம், புதிர்ச் சொற்கள், குறியீட்டுச் சொற்கள், இரட்டுற மொழிதல் ஆகியவை குறிப்புப் பொருளையும் உணர்வு நிலையையும் விளக்கும் உத்திகள் வகையிலும் பாடலில் இடம்பெறும் வினைமுற்றுத் தொடர்கள், வினையெச்சத் தொடர்கள், உம்மைத் தொடர்கள், தொடரமைப்பு, தொடர் மடக்குத் தொடர்கள், பொருள் மயக்கத் தொடர்கள், மரபுத் தொடர்கள், அந்தாதித்

தொடரமைப்புகள் ஆகியவை குறிப்புப் பொருளையும் வெளிப்படையாக பொருள் உணர்த்தும் வகையிலும் பிரிக்கப்படுகின்றன. இவை இரண்டும் சேர்த்து தொடர்நிலை உத்திகளாகக் கொள்ளப்படுகின்றன. அடுத்து வருணனை உத்திகளும் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்படுகின்றன. அதாவது வெளிப்படையாகப் பொருள் உணர்த்துபவை மற்றும் குறிப்பாகப் பொருள் உணர்த்துபவை. பாடலில் இடம்பெறும் உவமை, உருவகம், மிகை வருணனை, பின்புல வருணனை, உருவக்காட்சி வருணனை மற்றும் பொருள் மடக்கு வருணனை ஆகியவை வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும் வகையிலும் பாடலில் இடம்பெறும் இறைச்சி, உள்ளுறை, படிமக்காட்சி, தொகுநிலைக்கிளவி, இனமொழி, குறிப்பெச்சம், இகழ்ச்சிக்குறிப்பு, மற்றும் குறிப்புமுரண் ஆகியவை குறிப்பாகப் பொருள் உணர்த்தும் வருணனை உத்தியிலும் கொள்ளப்படும். இதில் இறைச்சி, உள்ளுறை, படிமக்காட்சி, தொகுநிலைக்கிளவி ஆகியவை அகப்பாடல்கள் சார்ந்தும், இனமொழி, குறிப்பெச்சம் ஆகியவை புறப்பாடல்கள் சார்ந்தும், குறிப்பெச்சம், இகழ்ச்சிக் குறிப்பு மற்றும் குறிப்பு முரண் ஆகியவை அகம்புறம் சார்ந்தும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அடுத்து பொருளமைப்பு உத்திகளில் ஆற்றுப்படுத்தும் முறை, முன்னிலைப்படுத்தும் முறை, நிகழ்ந்தது நினைத்தல் முறை, நிகழ்வது நினைத்தல் முறை, நிகழ இருப்பது நினைத்தல் முறை, நிகழ்ந்தது கூறல் முறை, சார்ந்தது கூறல் முறை மற்றும் கனவு கூறல் முறை ஆகிய முறைகள் உள்ளன. மேலும் பாடலின் தொடக்கம், முடிவு, யாப்பமைப்பு, பாடலின் நீண்ட அமைப்பு ஆகியவற்றிலும் தனிப்பட்ட உத்திகள் அமைத்து பாடப்பட்டுள்ளன. இவ்வாறு சங்கப்பாடல்களில் சிறப்பான உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. அதிலும் புறம் சார்ந்த பாடல்களைக் காட்டிலும் அகம் சார்ந்த பாடல்களில் மட்டுமே அதிகமான உத்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இது போன்று சங்கப்பாடல்கள் ஒவ்வொன்றிலும் பல்வேறு உத்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை அறிந்து பாடலைப் படித்தால் மட்டுமே பாடலின் செறிவை அறிய முடியும். மேலும், பொதுவாகச் சங்க இலக்கியப் பாடல்களில், கீழ்க்கண்ட உத்திகளைப் புலவர்கள் பயன்படுத்தாமல் இருந்தததில்லை. அவையாவன, பொருளைச் சுருக்கமாகவும் செறிவாகவும் வெளிப்படுத்த வேண்டும். நுட்பமான முறைகளைக் கையாள வேண்டும். பாடுபொருளுக்கும் வெளிப்பாட்டு முறைக்கும் ஒருமைப்பாடு அமைய

வேண்டும். பாடலில் எதனையும் வெற்றாகத் தொகுத்தல் கூடாது. சிறுசிறு தொடரமைப்புகள், இடைச்சொற்கள், ஒலிக்குறிப்புச் சொற்கள், விளிச்சொற்கள், அடைச்சொற்கள், சொல் மடக்கு, தொடர் மடக்கு, உவமை, உள்ளுறை உவமம், தொகுநிலைக் கிளவி ஆகியவற்றை அடிப்படை உத்திகளாகக் கொண்டே ஒவ்வொருப் பாடலையும் பாடியுள்ளனர்.

### 2.2.5 யாப்பியல் கூறுகள்

சங்க இலக்கியங்களில் பெரும்பாலும், அகவல் என்று சொல்லப்படுகிற ஆசிரியப்பா அதிகம் இடம்பெறுகிறது. வஞ்சிப்பா இடையிடையே சில பாடல்களில் மட்டும் இடம்பெறுகிறது. அகவல் என்பது அழைத்தல் எனப் பொருள்படும். அதாவது, மற்றவர்களை அகவிக் கூறும் பண்பைக் கொண்டு வரும் பாடல்கள் அகவல் ஓசை கொண்டது என்பர். தாங்கள் கருதியவாறு வரையாது கூறும் பண்பு இந்த அகவல் ஓசையில் உள்ளது. பூர்வீக பாடலுக்கும் இந்த அகவல் ஓசை வரும். சாதாரண மக்களின் பேச்சு வழக்கிலுள்ள மொழி நடையினையும் ஓசைப் பண்பினையும் கொண்ட பழையப் பாடல்களிலிருந்து வளர்ச்சியுற்று, ஆசிரியப்பாவிலும் இப்பண்புகள் செறிந்து காணப்படுகின்றன. வீரம் பொருந்திய ஆட்டம் கொண்ட பாடல்களும் தூங்கலோசை பெற்று வரும் பாடல்களும் வஞ்சிப்பாவில் அமைந்துள்ளது. இதில் தூங்கலோசை என்பது போரிலே வீரத்துடன் மடிந்தவர்களின் குருதியைத் தொட்டு, பேய் மகளிர் பறையினது ஓசைக்கு ஆடுவதைக் குறிக்கும். இந்த வஞ்சிப்பா சங்கப் பாடல்களின் சில இடங்களில் மட்டுமே இடம்பெறுகின்றன. வஞ்சிப்பா அகவல் என்று சொல்லப்படுகிற ஆசிரியப்பாவின் ஓர் உட்பகுப்பே ஆகும். அகவலடிகளுடன் இடம்பெறும் வஞ்சியடிகள் வேறுபட்ட ஓசையைத் தருமாதலால், வஞ்சிப்பாவாகக் கொள்ளப்படுகிறது. நீண்ட அகவலடிகளுக்கு மாறாகச் சிறிய தூங்கலோசை அடிகள் பாடலுக்கு அழகு சேர்ப்பதாக இருப்பதால் இந்தக் கலப்பு இருந்திருக்கலாம். மேலும், சங்கப் பாடல்களில் வீரம், வேகம் போன்ற பண்புகளை புலப்படுத்த வஞ்சியடிகள் உதவுகின்றன. சங்க இலக்கியங்களில் கலித்தொகை மட்டுமே கலிப்பாவால் ஆனது. இயற்றமிழ் பாவுடன் இசை கலந்தால் அது கலிப்பாவாகக் கொள்ளப்படுகிறது. இருப்பினும், சங்க இலக்கியப் பாடல்களில் கலித்தொகை மற்றும் பரிபாடலில் சிலப்பகுதிகள் தவிர, மீதி உள்ள அனைத்து சங்கப்பாடல்களிலும் பெரும்பகுதியை அகவற்பாவே ஆட்கொண்டுள்ளது.

### 2.2.6. சொற்செறிவும் பொருட்செறிவும்

தமிழ் மொழியின் காலத்தைக் கொண்டு அதன் தூய்மையை நம்மால் மதிப்பிட முடியும். தற்காலத்தில் மட்டுமே தமிழ் மொழியில் பல மொழிச் சொற்களின் கலப்படம் மிகுந்து காணப்படுகிறது. தமிழ் மொழியில், தொல்காப்பியம் முதல் இலக்கண நூல் என்ற பெருமையும், சங்க இலக்கியம் முதல் இலக்கிய நூல் என்ற பெருமையும், பெறுகின்றன. சங்க இலக்கியம் உலக இலக்கியங்களின் இமயம். சங்க இலக்கியம் தோன்றிய காலத்தில் உலக மொழி இலக்கியங்களில் சங்க இலக்கியம் போன்ற பாடல்கள் தோன்றவில்லை. சங்க இலக்கியம் தமிழர் இலக்கியங்களுக்கு அடிப்படையாகவும் வாழ்க்கைக்கு அடிப்படையாகவும் உள்ளதோடு, தமிழ் மொழியின் மேன்மைக்கும் தொன்மைக்கும் அடிப்படையாகத் திகழ்கிறது. மேலும், சங்க இலக்கியத்தில் உள்ள பாடல்களில் பெரும்பாலான பாடல்களைப் பாடியவர் கவிஞர் கபிலர் ஆவார். கபிலரின் மொழிநடையை வைத்தே சங்க இலக்கியத்தின் மொழிநடையை அறிந்து கொள்ளலாம். **‘சங்க இலக்கியத்தில் பயன்படுத்திய பல சொற்கள் இன்று வழக்கத்திலிருந்து மறைந்து விட்டது. சங்க இலக்கியப் பாடல்களை, தமிழ் படிக்கின்றவர்கள், அதாவது, வித்துவான், புலவர், முதுகலை பட்டப்படிப்பு படிக்கின்றவர்கள் மட்டும் படிப்பதற்காக உள்ளது’[10].** அந்த வகையில், சங்க இலக்கியப் பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் அந்த அளவிற்குத் தொன்மை வாய்ந்ததாக உள்ளது. ஆனால், இன்று தமிழ் படிக்கின்றவர்களும் முதுகலைப் படிக்கின்றவர்களும் கூட சங்கப்பாடல்களைப் படிக்கக் கடினப்படுகின்றனர். எனவே, இக்காலத்தில் உள்ள அனைவரும் படிக்க வேண்டும் என்பதற்காகவே அதை எளிமைப் படுத்தி பல அச்சுகள் வெளிவந்துள்ளன. ஆனாலும், சொற்களில் எந்த மாற்றமும் இல்லாமல், சொற்களுக்கிடையே உள்ள புணர்ச்சி விதிகள் மட்டுமே நீக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது. பெரும்பாலும், அந்த வகையான பாடல்களே பள்ளிகளிலும் பயன்படுத்தப்படுகிறது. புதிய சொற்களைக் கண்டறியும் நோக்கில் இருக்கும் பல மொழிகளோடு ஒப்பிடுகையில், எண்ணிலடங்கா பாடல்களில் பெரும்பாலும் தூய தமிழ்ச்சொற்கள் இடம்பெறுகின்றன. அவற்றை மாணவர்கள் படிப்பதன் மூலம் அவர்களின் சொற்களஞ்சியத்திறன் மேம்படும். அதன் மூலம் தமிழின் தொன்மையையும் பழமையையும் அறிந்து கொள்ள முடியும்.

சங்கப்பாடல்களில் பல சிறப்புகளில் இன்றியமையாதது சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதாகும். சங்க இலக்கியத்தில் இடம்பெறும் எந்த ஒரு செய்தியும் தனி ஒரு மனிதனுக்காகவோ அல்லது குறிப்பிட்ட ஒரு பகுதியினருக்காகவோ எழுதப்பட்டது அல்ல. மாறாக, சங்க இலக்கியங்கள் உலகில் உள்ள அனைவருக்காகவும் எழுதப்பட்டது. தமிழ் இலக்கியத்திற்கு அடிப்படையாகவும் வாழ்க்கைக்கு அடிப்படையாகவும் திகழும் சங்க இலக்கியங்கள் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் இரண்டறக் கலந்து இன்றும் வாழ்வதற்கு காரணம் அதன் எளிய வடிவமைப்பேயாகும். சங்க இலக்கியங்களில் மூன்று அடிகளிலிருந்து 782 அடிகள் வரை படிப்படியாக உணரும் வகையில் பாடல்கள் உள்ளன. எளிதில் விளக்கமுடியாத கடினமானச் செய்திகளைக் கூட, மிகக் குறைந்த சொற்களைக் கொண்டு எளிதாக விளக்கும் தன்மை சங்க இலக்கியங்களில் மட்டுமே உள்ளது. சங்க இலக்கியப் பாடல்கள் தமிழ் படித்தவர்கள், வித்துவான்கள், புலவர்கள் மட்டுமே படிப்பதாக இருந்தது என்ற நிலைமாறி, இன்று கற்றோர் யாவரும் சங்க இலக்கியங்களைப் படித்துப் புரிந்து கொள்ளும் அளவிற்கு எளிமைப்படுத்தியும் வழங்கப்பட்டுள்ளன. எனவே, சங்க இலக்கியங்களை தமிழர் அனைவரும், அதாவது அடிப்படைக் கல்வியறிவு கொண்டவர்களும் படித்து புரிந்து கொள்ளும் நிலையில் சொற்கள் எளிமையாகவும் அதே நேரத்தில் தெளிவாகவும் உள்ளது. சங்க இலக்கியத்தில் உள்ள அகப்பாடல் செய்திகளையும் புறப்பாடல் செய்திகளையும் மிகச் சிறப்பாக, எளிமையாக எவரும் புரியும் வண்ணம் விளக்கப்பட்டிருக்கும். பொதுவாக, அகம் சார்ந்த செய்திகளை, படிப்போர்க்கு விளங்கும் வகையில் எழுத நிறைய சொற்கள் தேவைப்படும். ஆனால், குறைந்த சொற்களைக் கொண்டு மிகச் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது புலவர்களின் அறிவுத் திறமையைக் காட்டுகிறது. இவ்வாறு **‘சங்ககாலப் புலவர்கள் இனிய இலக்கியங்களை இன்றும் போற்றிப் புகழும் வகையில் இயற்றியுள்ளனர். இவர்கள் இன்றைய உலகப் பெரும்புலவர்களோடு ஒப்பிடத்தக்க புலமையும் பெருமையும் உடையவர்கள். இவர்கள் கல்வியறிவின்பாற்பட்ட தகுதியால் அமைச்சர்களாகவும் தூதுவர்களாகவும் ஆளுநர்களாகவும் மெய்யுணர்வாளர்களாகவும் மக்கள் துயர்போக்கும் சான்றோர்களாகவும் பிறர்க்கென வாழும் பெரியோர்களாகவும் வாழ்ந்து நாட்டுத் தொண்டும் மொழித் தொண்டும் மக்கள் தொண்டும் ஆற்றியுள்ளனர்’[9].**

### 2.2.7 தனிநிலைச் செய்யுட்களாக அமைதல்.

சங்க இலக்கியங்களில் மொத்தம் 2387 பாடல்கள் உள்ளன. அதில் 1877 அகப்பாடல்களும் 510 புறப்பாடல்களும் உள்ளன. இவை 473 புலவர்களால் எழுதப்பட்டது. இதில் ஒவ்வொரு புலவர்களும் வெவ்வேறு காலங்களில் பாடப்பட்ட பாடல்கள் இருந்தாலும், எல்லாப் பாடல்களும் ஒரே தன்மை உடையதாகவும், ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாகவும் இருப்பது இதன் சிறப்பாகும். சங்க இலக்கியங்களில் புலவர்கள் ஒவ்வொரு பாடலுக்கும் பயன்படுத்தும் சிறப்பியல்புகளைக் காணும்போது, புலவர்களின் காலங்களில் மட்டுமே வேறுபாடு உள்ளதே தவிர, பாடல்களில் தன்மையில் எந்த வேறுபாடுகளும் இல்லை. அனைவரது பாடல்களும் ஒரே தன்மையாகக் காணப்படுகின்றன. இலக்கியம் படைப்பதற்கென்று தனிக் கொள்கைகளை வகுத்துக் கொண்டு, அதனடிப்படையிலே, வெவ்வேறு காலங்களிலும் ஒரே தன்மையுடன் பாடல்களைப் படைத்துள்ள புலவர்களின் உத்தி பாராட்டுதற்குரியது. இந்தப் பாடல்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக இருந்தாலும் தனித்தனிப் பாடல்களாகக் கொண்டு பாடநூலில் படிக்கும் போதும் அதன் பண்பில் சிறு குறையுமின்றி சிறப்புடன் அமைவது சங்க இலக்கியப் பாடல்களின் மற்றுமொரு சிறப்பாகும். அதனால், இதில் எந்த ஒரு பாட்டையும் தனியாக படித்தாலும், அதன் சிறப்பு குறையாமல், முழுமையான நிறைவோடு படிக்க இயலும்.

## 2.3 சங்க இலக்கியத்தில் கற்பிக்க வேண்டிய முக்கியக் கூறுகள்

### 2.3.1 இலக்கியங்களுக்கே உரிய ஓசை நயம்

இலக்கியச் செய்யுள்கள் ஒரு வரையறைக்குட்பட்டுப் பாடப்படுகின்றன. கருத்துகளைச் சொல்லுகிற முறையால் அவை உரைநடையினின்றும் வேறுபடுகின்றன. நயம்படச் சொல்லப்படுவதால் அவை மக்கள் மனதை ஈர்க்கின்றன. அந்நயத்தை உணர்ந்து போற்றிப் பயிற்றுதல் வேண்டும். சங்க இலக்கியங்களில் பெரும்பாலும் அகவல் ஓசை உள்ள ஆசிரியப்பாவும், சில இடங்களில் தூங்கலோசை உள்ள வஞ்சியப்பாவும் இடம்பெற்றுள்ளன. பாடத்திட்டத்தில் இடம்பெறும் பாடல்களில் அமைந்துள்ள ஓசையை அறிந்து அதை மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். பாடல்களில், இந்த பா வகையினாலும், பயன்படுத்தப்பட்டிருக்கும் வல்லின, மெல்லின எழுத்துக்களாலும் ஒலிநயம் ஏற்படும். எனவே, பாடலில் உள்ள எதுகை,

மோனை, ஒலி ஆகியவற்றை மாணவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். புலவர்கள், சில இடங்களில் சொற்களை வல்லினமாக்கியும் மெல்லினமாக்கியும் தொகுத்தும் விரித்தும் நயம் அமையும்படிப் பாடுவர். இந்த வகையில், **'இலக்கியச் செய்யுள்கள் அழகிய வடிவம் உடையது. ஒலிநயம் உடையது. எதுகை, மோனை முதலியனவும் அமைந்து உணர்ச்சியின் வெளிப்பாடாகத் தோன்றுவது. கற்பனை நயம் பொருந்தி விளங்குவது. படிக்குந்தோறும் இன்பத்தையளிப்பது'**[12]**.** இவற்றை மாணவர்கள் உணரச் செய்ய வேண்டும். கவிஞர் தாம் உணர்ந்ததையும் தம் அனுபவத்தையும் உணர்வதற்கேற்ற செஞ்சொற்களைப் பயன்படுத்துவர். மிக எளிய சொல்லும் அவர் பயன்படுத்தும் விதத்தால் நயம் பொருந்தியதாகும். சொற்களை அமைத்தலில் ஒலிநயம் தோன்றும். எதுகையும் மோனையும் இயைபும் முரணும் அமைந்து படிப்பதற்கு இன்பம் தரும். மொழி ஆசிரியர் இந்நயங்களைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் மாணவரிடம் இலக்கியச் சுவை உணராற்றலை வளர்க்கலாம்.

வல்லின, மெல்லின எழுத்துக்களின் ஒலி நயத்தினை உணர்வதுடன், மாறி மாறி அடியெடுத்து வைத்து நடக்கும் தாள அமைதியுடைய ஒலி நயத்தையும் பா நயத்தையும் பாடல்களை வாய்விட்டுப் படிப்பதால் மட்டுமே உணர முடியும் என்பதை மாணவர்களுக்கு விளக்க வேண்டும். இயல்பாகவும் வலிந்தும் அமையும் இந்த ஒலிநயங்கள் படிப்பதற்கு இன்பம் தருவதை ஆசிரியர் பாடலை வாய்விட்டுப் படித்தலின் மூலம் உணரச் செய்யலாம். மாணவர்கள் பாடலை வாய்விட்டு படிப்பதால் மட்டுமே பாடலின் முழுமையான அழகை உணர முடியும் என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். இதற்கு, ஆசிரியர் முதலில் பாடலை உரிய ஓசையுடன் மாணவர்களுக்குப் படித்துக் காட்ட வேண்டும். மேலும், மீண்டும் அவர்களைப் படிக்கச் செய்யவும் வேண்டும். இதனையே, பேராசிரியர் கணபதி அவர்கள் **'செய்யுளைச் சந்தத்தோடு மூன்று முறை ஆசிரியர் படித்துக் காட்டி, பின்னர் மாணவரைக் குழுவாகவும் தனித்தனியாகவும் அதே சந்தத்தில் படிக்கச் செய்தல் வேண்டும்.'**[13] என்கிறார்.

### 2.3.2 இலக்கியங்களுக்குரிய சொற்களைப் பிரித்துப் படித்தல்

சங்க இலக்கியப் பாடல்கள் மிகவும் தொன்மை வாய்ந்ததாகவும் தமிழ் கற்றுணர்ந்தவர்களால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும் அளவிற்கு

சொற்களஞ்சியம் மிக்கவையாகவும் இருக்கும். இதில் பல சொற்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து, பாடலின் ஓசைக்காகவும் இசைக்காகவும் விதிக்காகவும் அழகிற்காகவும் தேவைக்காகவும் புணர்ச்சி விதிகளுடன் கலந்து பாடப்பட்டிருக்கும். அவற்றை மாணவர்கள் தாமாகப் படித்துப் பொருளுணர்தல் என்பது சற்றுக் கடினமான செயலாகும். எனவே, ஆசிரியர்கள் பாடலில் உள்ள சொற்களைப் புணர்ச்சி விதிகளிலிருந்து பிரித்து தனித்தனிச் சொல்லாக்கிப் படித்துக் காட்டுதல் இன்றியமையாததாகும். இவ்வாறு, **‘படித்துக் காட்டி விளக்கும் போது ஒவ்வொரு சொல்லின் பொருளையும் மாணவர்கள் அறிந்து கொள்வதோடு சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக்கொள்ளும் வாய்ப்பும் ஏற்படும்’** [14] இதனால், சங்கப்பாடல்களைத் தனிப்பட்ட முறையில் எடுத்துப் படிக்கும் ஆர்வமும் ஏற்படும். தற்போது, பெரும்பாலும் பள்ளிகளில் கொடுக்கப்பட்டிருக்கும் சங்கப்பாடல்கள் புணர்ச்சி விதிகள் நீக்கப்பட்டு, தனித்தனிச் சொல்லாக உள்ள பாடல்களாகவே வழங்கப்படுகின்றன. இருப்பினும், மாணவர்கள் அதைச் சரியான ஏற்றத்தாழ்வுடன், சரியான உச்சரிப்புடன் படிப்பதற்கு ஆசிரியர்கள் உதவுதல் வேண்டும். ஆசிரியர்கள் பாடலைப் படித்துக்காட்டி மாணவர்களை மீண்டும் படிக்கச் செய்தல் வேண்டும்.

உலக இலக்கியங்களில் கால வேறுபாட்டிற்கு ஏற்ப அந்தந்த காலக் கட்டத்திற்கு ஏற்ற வகையில், சொல்லிலும் பொருளிலும், சில மாற்றங்களைக் கொண்டு வருவது இயல்பு. சங்க இலக்கியத்தின் பொருளைக் கற்றறிந்த புலவர்களைத் தவிர மற்றவர்கள் உணர்வது அவ்வளவு எளிது அல்ல. இதனைப் பலாப்பழத்திற்கு உவமையாகக் கூறுவர். அதாவது, பலாப்பழத்தை ஒருவர் கையிலே கொடுத்தால் அதை அப்படியே உண்ண முடியாது. முதலில் முள்ளுடைய தோலை நீக்க வேண்டும். அதற்குக் கூர்மையான வெட்டுக்கத்தி வேண்டும். பிறகு, அதன் உள் தோலில் உள்ள தசைத் துண்டுகளில் உள்ள பிசின் போன்ற பொருளை நீக்க வேண்டும். அதன் பிறகுதான், சுவையைச் சுவைத்து உண்ண முடியும். அவ்வாறு **‘சங்க இலக்கியத்திலுள்ள ஓர் பாடலை உணர வேண்டுமெனில் அதற்கு இலக்கியப் புலமை வேண்டும். உரை ஆசிரியர்களின் துணை வேண்டும். அவ்வளவு கடினமான இலக்கியத்தை மாணவர்கள் உணரும் வகையில் எளிய வகையில் கற்பிக்க வேண்டும். எனவே, சங்கப்பாடல்களில் உள்ள ஒவ்வொரு சொல்லையும் தனித்தனியாகப் படித்துப் பொருளை விளக்கி**

**அப்பொருள் விளக்கும் கருத்துகளையும் விளக்குதல் வேண்டும்'**[15] மேலும், புலவர்கள் பாடலில் ஒவ்வொரு பொருளையும் பயன்படுத்தியிருக்கும் சிறப்பு பற்றியும் தேவை பற்றியும் விளக்க வேண்டும். சங்கப் பாடல்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் பல சொற்கள் இன்று வழக்கத்தில் இல்லாமல் இருப்பதால், அந்தச் சொற்களை மாணவர்கள் மீண்டும் பயன்படுத்தும் வகையில் அந்தச் சொற்களை விளக்க வேண்டியது ஆசிரியரின் கடமையாகும்.

**ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே;**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;**
**வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;**
**நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே;**
**ஒளிறு வாள் அருஞ் சமம் முருக்கி,**
**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.. (புற.312)**

என்ற புறநானூற்று பாடலில் இடம்பெறும் ஈன்று புறந்தருதல் என்ற சொல் ஒரு தாயைக் குறிக்கிறது. ஏனெனில், ஈனுதல் என்பது பெற்றெடுத்தல் எனப் பொருள்படும். ஈன்று புறந்தருதல் என்றால் நம்மை பெற்று இவ்வுலகிற்காக வழங்குவது நமது தாய். இவ்வுலகம் என்பது நாட்டைக் குறிக்கும். போர்கள் மிகுந்திருந்த சூழலில், வீரர்கள் தங்களுடைய வாழ்க்கையையே நாட்டிற்காக அர்ப்பணித்தனர். அவ்வாறு நாட்டிற்கு ஒருவனைப் பெற்றெடுத்தல் தாயுடைய கடமை என்பதையே இவ்வரிகள் நமக்குச் சுட்டுகிறது. இதை மாணவர்களுக்கு விளக்கமாக எடுத்துரைக்க வேண்டும்.

இது போன்று செய்யுளில் பயன்படுத்தப்படும் பொருட்செறிவுள்ள சொற்களை முழுமையாக விளக்க வேண்டும். இதனால், மாணவர்களின் சொல்லாட்சித்திறன் மேம்படும். இவ்வாறு சங்கப்பாடல்களில் உள்ள சொற்களையும் சொற்கள் பயன்படுத்தியுள்ள கருத்துகளின் உத்திகளையும் மாணவர்கள் அறிந்து கொள்வதன் மூலம், சங்கப்பாடல்களை மீண்டும் மீண்டும் படிப்பதில் மாணவர்கள் ஆர்வம் ஏற்படும்.

### 2.3.3 சொல்லாட்சித் திறன்

இலக்கியத்தைப் படிப்பதன் மூலம் ஒருவர் சொல்வளம் பெறுவதோடு அச்சொற்களைப் பயன்படுத்திப் பேசும் முறையையும் அறிதல் கூடும். என்ன சொல்வது என்பதோடு எப்படிச் சொல்வது என்பதனையும் எடுத்துக்காட்டுவது

இலக்கியமாகும். ஒரு செயலைச் செய்து முடித்து வந்து அதனைப் பற்றிக் கூறும்பொழுது தொடங்கிய நேரத்திலிருந்து நிகழ்ச்சிகளை நிரல்படக்கூறாது – முக்கியச் செய்தியினை முதலில் கூற வேண்டும். இவ்வாறு, செய்தியைக் கூறும் பொழுது கேட்பவர் எதனை எதிர்பார்ப்பாரோ அதனைக் கூற நமக்கு அறிவிப்பது இலக்கியமாகும். சங்கப்பாடல்களில் புலவர்கள் சொல்ல வந்த செய்தியைச் சுருங்கச் சொல்லி விளங்கவைப்பதில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். எந்த சொல்லை, எங்கு, எவ்வளவு நேர்த்தியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதை அறிந்திருந்தனர். மேலும், சங்கப்பாடலில் இடம்பெற்றிருக்கும் சொற்களை அறிந்து கொள்வதால் சொற்களஞ்சியம் பெருகும் வாய்ப்புகள் அதிகம். தேவைக்கேற்ப, சொற்களைப் பயன்படுத்தி சொல்ல வந்த செய்தியை மிக நுட்பமாகவும் அழகாகவும் ஆழமாகவும் விளக்கினர். **'சங்கப்பாடல்களில் உள்ள கருத்துகளின் ஆழத்திற்கும், அழகிற்கும் முக்கியக் காரணமாகத் திகழ்வது அதில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களின் அழகேயாகும். சங்கப்புலவர்கள் மதி நுட்பத்தை இந்த சொல் பயன்பாட்டை வைத்தே கணக்கிடலாம்.'** [16] நேரடியாகச் சொல்ல வேண்டிய செய்திகளை நேரடியாகவும் மறைத்துச் சொல்ல வேண்டிய செய்திகளை மறைத்தும் புகழ்ந்து சொல்ல வேண்டிய செய்திகளை புகழ்ந்தும் வெளிப்படையாகக் கூற முடியாத செய்திகளை இலை மறைவு காய் மறைவாகவும் விளக்குவதில் சங்கப் புலவர்கள் திறமை ஒப்பற்றது. இன்றைய மாணவர்கள், இத்தகைய சிறப்புமிக்க புலவர்கள் எழுதிய பாடல்களைப் படிப்பதன் மூலம் அவர்களுக்கும் சொற்களைப் பயன்படுத்தும் முறையும், சொற்களின் தேவையைப் பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பும் ஏற்படும். இதனால், ஒரு செய்தியைப் பிறருக்கு எவ்வாறு சுருங்கச் சொல்லி விளக்க வேண்டும் என்ற உத்தியை மாணவர்கள் கற்றுக் கொள்ளும் வாய்ப்பும் ஏற்படும். இதனால், அவர்களின் சொல்லாட்சித் திறன் மேம்படும்.

மொழியின் அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அனைத்துக்கும் இன்றியமையாது தேவைப்படுவது சொற்களஞ்சியம். அதாவது, **'தெரியாத புதிய வார்த்தைகளும் அறியாத செய்திகளும் மற்றும் நுட்பமான விளக்கங்களும் படிப்பவர்களுக்குத் தாம் படிப்பதைப் புரிந்து கொள்வதில் பிரச்சினையைத் தோற்றுவிக்கின்றன.'** [17] எனவே, பல சொற்களையும் அதன் பொருளையும் அறிந்திருப்பது இன்றியமையாததாகும். அவ்விதச் சொல்வளம் பெறுவதற்கு இலக்கியம்

பெருந்துணையாக அமையும். உயிர்களைப் படைக்கும் பிரம்மாவையும் நூல்களைப் படைக்கும் புலவரையும் ஒப்பிடத் தொடங்கிய புலவர் ஒருவர், ‘கலைமகள் வாழ்க்கை முகத்தது எனினும் மலரவன் வண்தமிழோர்க்கு ஒவ்வான்’ எனப் பாடுகிறார். புலவரை வண்தமிழோர் - செழுமையான சொல்வளமுடையவர் என்று குறிப்பிடுகிறார். எனவே, அவர்தம் பாடல்களைப் படிப்பதாலும் மனப்பாடம் செய்வதாலும் சொற்களஞ்சியம் பெருகும்.

இவ்வாறு சொற்களஞ்சியம் பெருகுவதால் ஒருவருடைய மொழியின் பேச்சு நடையும் எழுத்து நடையும் சிறக்கும். இவ்வாறு, இலக்கியம் மொழிக்கல்வியில் சொற்களஞ்சியம் பெருகுவதற்கும் எழுத்து நடை, பேச்சு நடை சிறப்பதற்கும் வழி வகுக்கின்றது.

### 2.3.4 இலக்கியக் கூறுகள்

கவிஞர்கள் சில இடங்களில் சொற்களை வல்லினமாக்கியும் மெல்லினமாக்கியும் தொகுத்தும் விரித்தும் எதுகை அமையும் படியும் பாடலில் முதலெழுத்துக்களை ஒன்றுள்ளேனும் பலவற்றினுள்ளேனும் ஒலியமைப்பால் ஒன்றுக்கொன்று ஒன்றி வருமாறு மோனை அமையும் படியும் செய்வர். இவ்வாறு இயல்பாகவும் வலிந்தும் அமைக்கும் இவ்வெதுகை மற்றும் மோனை படிப்பதற்கு இன்பம் தரும். தமிழ்ப் பாடல்கள் பலவற்றிலும் இந்த எதுகை மற்றும் மோனை நயத்தினைக் காணலாம். இதனை, மாணவருக்குச் சுட்டிக்காட்ட வேண்டும். அப்போதுதான், பாடலின் நயத்துடன் பாடலைப் படிப்பதில் ஆர்வம் ஏற்படும்.

மேலும், கவிஞர்கள் பாடலின் பொருளுக்கு மற்றும் நடைக்கு ஏற்ப அதில் பயன்படுத்தியுள்ள சொற்களைக் கொண்டு பாடலின் பா வகைகளைப் பிரிக்கலாம். இதில், வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சியப்பா, கலிப்பா என்ற நால்வகைப் பாக்கள் உண்டு. பாடலின் ஓசையைப் பொருத்து இந்த பா வகைகள் பிரிக்கப்படுகின்றன. பா வகையைத் தெரிந்து பாடலைப் படித்தால் மட்டுமே பாடலின் ஓசையை அறிந்து சரியான ஏற்றத்தாழ்வுடன் படிக்க இயலும். எனவே, மாணவர்களுக்கு இந்த ஓசையை அறியச் செய்தல் இன்றியமையாததாகும்.

சங்க இலக்கியப் பாடலுக்கே உரியதான தனித்தன்மையாகக் கருதப்படும் திணை, துறைகளைப் பற்றிய விளக்கங்களை மாணவர்கள்

அறியச் செய்ய வேண்டும். சங்க இலக்கியப் பாடல்கள், பாடப்பட்ட சூழ்நிலை, காலம், பாடுபொருள் ஆகியவற்றைப் பொருத்து இந்தத் திணை, துறைகளில் வேறுபாடுகள் ஏற்படுகிறது. இந்த திணை, துறைகளை கற்பிப்பதன் மூலம், சங்கப் பாடல்களின் தனித்தன்மைகளை மாணவர்கள் அறிந்து கொள்ளும் வாய்ப்புண்டு. இதன் மூலம், சங்கப்பாடல்களின் நுட்பங்களை அறிந்து மேலும் மேலும் சங்கப்பாடல்களைப் படிப்பதில் மாணவர்களுக்கு ஆர்வம் ஏற்படும். எனவே, சங்கப் பாடல் கற்பித்தலில் இந்த திணை, துறை கற்பித்தல் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

### 2.3.5. பொருள் உணர்ச்சிக்கேற்ற குரல் ஏற்றத் தாழ்வு

சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் போது ஆசிரியர்கள் அதைப் படித்து பொருளுணர்த்தியும், பாடல்களில் இடம்பெறும் சொற்களுக்குப் பொருள் விளக்கம் கொடுத்தும் அதில் இடம்பெற்றிருக்கும் சொற்களின் சிறப்புகளையும் விளக்கி பாடலைப் படித்துக் காட்டியும் கற்பிப்பது முக்கியமானதாகும். அதே போல், பாடலைப் படித்துக் காட்டுவதில் முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒன்று, பாடத்தைப் படித்துக் காட்டும்போது ஆசிரியர் பயன்படுத்தும் குரல் ஏற்றத் தாழ்வாகும். பாடலின் உள் நோக்கத்தை மனதில் கொண்டு அதற்கேற்ப பாடலில் இடம்பெறும் சொற்களுக்கிடையே ஏற்ற இறக்கத்துடன் பாடலை மாணவர்களுக்குப் படித்துக்காட்டி அவர்களை மீண்டும் அதேபோல் படிக்க ஊக்குவிக்க வேண்டியது ஆசிரியரின் கடமையாகும்.

### 2.3.6. சரியாக ஒலிக்க இயலாத சொற்களுக்குப் பயிற்சி

பொதுவாக ஆசிரியர்கள் சங்க இலக்கியப் பாடல்களை மாணவர்களுக்குப் படிக்கக் கற்றுத் தரும்போது, அதை மீண்டும் மீண்டும் மொத்தமாகப் படிக்கச் செய்தலே இயல்பான முறையாகும். இந்த முறையில், மாணவர்கள் கடினமான சரியாக ஒலிக்க முடியாத சொற்களை வகுப்பில் குழுவாகச் சொல்லும் போது, தவறாக உச்சரிப்பதற்கும் சொற்களில் கவனம் செலுத்தாமல் மாற்றிச் சொல்வதற்கும் வாய்ப்புகள் அதிகம். எனவே, ஆசிரியர் மாணவர்களுக்குச் சங்கப்பாடல்களைப் படிக்கக் கற்றுத் தரும்போது, கூடுமானவரையில் தனித்தனியாக மாணவர்களைக் கவனிப்பது இன்றியமையாததாகும். மேலும், அவ்வாறு கவனித்து மாணவர்களால் சரியாக ஒலிக்க இயலாத சொற்களுக்குத் தனிப்பட்ட முறையில் பயிற்சிகள்

அளித்து அதைக் கூறச் செய்ய வேண்டும். இந்தப் பயிற்சிகளை இலக்கியம் கற்பிக்கும் போது மட்டும் செய்யாமல் எல்லா கற்பித்தல் வகுப்புகளிலும் நா நெகிழ் பயிற்சி, நா பிறழ் பயிற்சி வாக்கியங்களைக் கொடுத்து பயிற்சி அளிக்கலாம். நா நெகிழ் பயிற்சி என்பது ஒரே மாதிரி ஓசையுடைய சொற்களே மீண்டும் மீண்டும் அமையுமாறு வாக்கியங்களைத் தயார் செய்து, அதை வேகமாகவும் பிழையின்றியும் படிக்கப் பயிற்சி அளித்தல் ஆகும். நா பிறழ் பயிற்சி என்பது, ஒரு சொல்லே மீண்டும் மீண்டும் அமையுமாறு வாக்கியங்களை அமைத்து, அதை வேகமாகவும் பிழையின்றியும் பேச பயிற்சி அளித்தல் ஆகும். இதனால், மாணவர்களின் பேச்சுத்திறன் கூடுவதோடு எந்த ஒரு கடின சொற்களையும் எளிதாக ஆட்கொள்கின்றனர். பின்பு, அந்தச் சொற்களை வழக்கில் பயன்படுத்தவும் தயாராகி விடுவர். இதனால், இலக்கியங்களைப் படிக்கும் போது அதில் உள்ள கடினச் சொற்களை படிக்கும் போதும் இலக்கியப் பாடல்களை இசையோடு பாடும் போதும் எந்த ஒரு தடங்கலும் இல்லாமல் இருக்கும். ஒலிப்புப் பிழை என்பது மாணவர்களின் தொடக்க வகுப்பில் கற்பிக்க வேண்டியது என்ற எண்ணம் நம்மில் பலருக்கு உள்ளது. அதனால், இலக்கியங்களைக் கற்பிக்கும் போது நாம் இதில் அதிக கவனம் செலுத்துவது இல்லை. எனவே, வகுப்பு வித்தியாசமின்றி, எழுத்து பிறப்பு முறையையும் ஒலிப்பு முறையையும் மாணவர்களுக்கு கற்றுத்தர ஆசிரியர்கள் தயாராக இருக்க வேண்டும்.

### 2.3.7 இலக்கியச் சொற்களைத் தொடர்களில் அமைத்தல்

இலக்கியப் பனுவல்களில் இடம்பெறும் பழஞ்சொற்களை மாணவர்களுக்குப் படித்துக் காட்டி பொருள் விளங்க வைப்பதோடு மட்டுமல்லாமல் அதை மாணவர்கள் தொடர்ந்து பயன்படுத்த ஊக்கப்படுத்த வேண்டும். கற்றுக் கொண்ட பழஞ்சொற்களைத் தொடர்ந்து அவர்கள் எழுதும் சொற்றொடர்களில் பயன்படுத்துமாறு ஊக்குவிப்பதோடு அவ்வாறு பயன்படுத்தி இருந்தால் அதற்காகப் பாராட்டவும் செய்ய வேண்டும். இவ்வாறு, தொடர்ந்து மாணவர்களின் படைப்புத் திறன் மற்றும் எழுதுதல் திறனில் இந்த பழஞ்சொற்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்புகளை வழங்குவதோடு அதை மாணவர்கள் தொடர்ந்து பயன்படுத்தும் விதத்தில் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். மேலும், இலக்கியத்தில் காணும் பழஞ்சொற்களை வரிசைப்படுத்தி அதன் பொருளோடு அகராதி ஒன்றையும் தயார் செய்ய ஊக்குவிக்கலாம். இலக்கியத்தின் மூலம் மாணவர்கள் கற்கும் சொற்களை வரிசைப்படுத்தி,

எழுதி வகுப்பறையில் மாணவர்களின் கண்களில் படுமாறு ஒட்டலாம். இதனால், அந்தச் சொற்களை மாணவர்கள் மீண்டும் மீண்டும் காணும் வாய்ப்பு ஏற்படும். பின்பு, அந்தச் சொற்களை மாணவர்களின் மனதில் நீங்கா இடம்பெறுவதோடு அவர்களுடைய எழுத்துப்பணியில் தானாகவே இந்தச் சொற்கள் இரண்டறக் கலக்கும் வாய்ப்பும் உண்டு. இவ்வாறு பழஞ்சொற்களை அதிகமாக மாணவர்கள் படித்தும் பழகியும் வருவதால் இலக்கியப் பாடல்களை ஆசிரியர்களின் துணையின்றி மாணவர்களால் படிக்க முடியும். இதனால், இலக்கியப் பாடல்களின் மீது உள்ள வேற்றுமையுணர்வும் ஐய உணர்வும் நீங்கி மேலும் இலக்கியப் பாடல்களைத் தேடிப் படிப்பர்.

### 2.3.8. தொடர்புடைய பிற பாடல்களை அறிமுகப்படுத்தல்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய காலத்துத் தமிழில் மோசிகீரனார் என்ற புறநானூற்றுப் புலவர் ஒருவர் மிகச் சிறந்த பாடல் ஒன்றை இயற்றியுள்ளார். அப்பாடல் இன்றும் எல்லா நாட்டவரும் எல்லா ஆட்சியாளரும் நன்கு உணர்ந்து பார்க்க வேண்டிய பாடல் அது.

**‘நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே;**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**
**அதனால் யான் உயிர் என்பது அறிகை**
**வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே’ (புற.187)**

ஒரு நாட்டின் குடிமக்கள் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டுமெனில், அங்கே நெல்லும் அதாவது சிறப்பான நெல்விளைச்சல் இல்லையென்றாலும், உயிர் வாழ்வதற்குத் தேவையான குடிநீரும் சிறப்புடன் அமையவில்லையென்றாலும் பரவாயில்லை. மன்னன் செங்கோல் பிறழாமல் சிறப்புடன் விளங்கி நல்லாட்சியை மக்களுக்கு வழங்க வேண்டும். அதுவே, அந்நாட்டு மக்களுக்குச் சிறப்பாகும் என்று கூறப்பட்டுள்ளது.

இதனை மாணவர்களுக்கு எளிதில் விளங்குமாறு கூற வேண்டுமெனில் மக்களாட்சியில் மக்கள் எவ்வாறு சுதந்திரமாக வாழவேண்டுமென விரும்புகிறார்கள் என்பதை நடைமுறைகளைக் கொண்டு விளக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, நாட்டுக்குப் பதிலாக வீட்டை எடுத்துக் கொள்ள வேண்டும். நாடுதான் வீடு. வீடுதான் நாடு என்றுகூற வேண்டும். நாட்டுக்குத் தலைவன் மன்னன். வீட்டுக்குத் தலைவன் அதாவது வீட்டை ஆள்பவன் தந்தை. ஒரு

தந்தை சரியில்லையென்றால் அந்த வீட்டில் எத்தகைய நலம் இருந்தும் அதனால் பயன் எதுவும் கிடையாது.

ஒரு தந்தை தன் மகனுக்கு மூன்று வேளையும் நன்றாக உணவு வழங்குகிறார். உடைகள் வாங்கித் தருகிறார். எல்லாம் நன்றாக செய்கிறார். ஆனால், தினமும் இரவில் குடித்துவிட்டு வந்த அடிக்கிறார். இப்போது சொல்லுங்கள். அந்தத் தந்தையின் மீது இந்த மகனுக்கு அன்பு இருக்குமா? அந்த தந்தையால் அந்தக் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்குமா? என்பதை எண்ணிப் பாருங்கள். இதே நிலைதான் நாட்டிலும் ஏற்பட்டும் என்பதை விளக்கினால் மேற்கண்ட புறநானூற்றுப் பாடல் மிகவும் எளிதில் மனதில் பதியும் என்பதில் ஐயமில்லை. மேலும் இதைத் தொடரந்து, இந்த உலகம் இருப்பதற்குக் காரணம், பலருக்கும் கொடுத்து வாழ்வதுதான். தனியாக உண்பதே இல்லை. வெறுப்போ, சினமோ வாழ்க்கையில் இல்லை. சோர்வு இல்லை. கருமமே கண்ணாக இருந்து தூங்குவதும் இல்லை. பிறர் பழி சொல்லிவிடுவார்களோ என்று அஞ்சிப் புகழ் தருகின்ற காரியத்தை மட்டும் செய்வர். அதற்காக உயிரையும் கொடுப்பவர். பழி என்றால் உலகத்தையே பெறுவதாயினும் அதைச் செய்வதில்லை. அவர்கள் தமக்காக வாழ்வதில்லை. பிறர்க்காக வாழ்ந்தார்கள்; வாழ்வார்கள். அவ்வாறு வாழ்கின்ற மாந்தர் இருப்பதால்தான், இந்த உலகமே இருக்கிறது என்று விளக்கும் பின்வரும் பாடலை தொடர்புபடுத்திக் கூறலாம்.

**‘உண்டால் அம்ம, இவ் உலகம் - இந்திரர்**
**அமிழ்தம் இயைவது ஆயினும், ‘இனிது’ எனத்**
**தமியர் உண்டலும் இலரே முனிவு இலர்**
**துஞ்சலம் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சி**
**புகழ் எனில் உயிரும் கொடுக்குவர் பழி எனில்**
**உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்**
**அன்ன மாட்சி அனையர் ஆகிய**
**தமக்கு என முயலா நோன் தாள்**
**பிறர்க்குஎன முயலுநர் உண்மை யானே’ (புற.182)**

‘தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்’ என்பது குறள். அதாவது இலக்கியத்தை பயிற்றுவிக்கும் போது அதன் இனிய சுவையை நாம் எவ்வாறு உணருகின்றோமோ அதே

இன்பத்தைக் கற்பவர்கள் உணருகின்ற வகையில் நாம் அதைப் பயிற்றுதல் வேண்டும்.

யாம் பெற்ற இன்பம் பெறு இவ்வையகம் என்பது போல், இலக்கிய நுகர்ச்சியை அறியச் செய்தல் வேண்டும். சங்க இலக்கியங்கள் பாடல்களை அறம், பொருள், இன்பம் என்னும் நீதியை உள்ளடக்கிய கவிதைகளைப் பயிற்றுவிக்கும் போது ஒன்றி உணர்ந்து பயிற்றுவித்தால் மாணவர்களின் உள்ளத்தில் பதியும்.

ஆசிரியரின் இலக்கணம் நன்னூலில் குறிப்பிடப்பட்டது போல, கலைபயில தெளிவு ஆசிரியருக்கு இருத்தல் வேண்டும். இலக்கியத்தை நடத்துகின்ற போது, அதனோடு தொடர்புடைய செய்திகளைப் பல்வேறு இலக்கியங்களிலிருந்தும் எடுத்துக்காட்டிக் கூறுதல் நலம் பயக்கும்.

### 2.3.9 விழுமியங்களை அறியச் செய்தல்

சங்கப்பாடல்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு காலங்களில் எழுதப்பட்டிருந்தாலும் ஒவ்வொரு பாடலும், ஏதேனும் ஒரு காரணத்திற்காகவும் நிகழ்வுக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. அந்தக் காரணத்தையும் நிகழ்வையும் உற்று ஆராய்ந்தால், அதன் மூலம் நம் வாழ்விற்குத் தேவையான அம்சங்களை நம்மால் பெற முடியும். வருங்காலத் தலைமுறையினரிடம் பண்பாட்டையும் பண்பையும் வளர்ப்பதில் முக்கியப் பங்கை வகிக்கும் ஆசிரியர்கள், சங்கப் பாடல்களைப் படித்து பொருள் விளக்கி மாணவர்களைப் படிக்க வைப்பத்துடன் மட்டுமல்லாமல் கொடுக்கப்பட்ட பாடல் பாடப்பட்டதன் காரணம் என்ன? பிண்ணனி என்ன? என்பதை முழுமையாக அறிந்து, அதை மாணவர்களுக்கு எடுத்தியம்புவதோடு அதன் மூலம் பெறப்படும் விழுமியத்தையும் மாணவர்களை அறியச் செய்ய வேண்டும். மேலும், அதை வாழ்வில் பின்பற்றவும் ஊக்குவிக்க வேண்டும். சங்கப்பாடல்கள் அனைத்துமே வாழ்வியலோடு தொடர்புடையவை. புறப்பாடல்களில் புறவாழ்க்கைக்கு ஏற்ற விழுமியங்களும் அகப்பாடல்களில் அக வாழ்க்கைக்கு ஏற்ற விழுமியங்களும் நிறைந்து காணப்படுகின்றன. ஆனால், இவற்றை ஆசிரியர் மாணவர்களுக்குப் புரியும் வண்ணம் எடுத்துரைக்க வேண்டியது இன்றியமையாதது. சங்கப்பாடல்கள் ஒவ்வொன்றும் ஏதேனும் நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்டிருக்கும். அப்பாடல்களை மேலோட்டமாகப் படித்தால் அந்த நிகழ்வை மட்டுமே அறிந்து கொள்ள முடியும். மாறாகப் பாடல்களை

ஆழ்ந்து படிப்பதன் மூலம் அந்நிகழ்வை ஒட்டிய பின்புலச் செய்திகளை நாம் அறிந்து கொள்ள முடியும். அந்த பின்புலச்செய்திகளே வாழ்க்கை விழுமியங்களாகும். எனவே, அவற்றை மாணவர்கள் உணர்ந்து படிக்கும் வண்ணம் சங்க இலக்கியப் பாடல்களை விளக்குதல் வேண்டும். இதனால், எதிர்காலத்தில் நன்மக்களாக வாழ்வதற்கு மாணவர்களைத் தயார் செய்ய முடியும்.

### 2.4 சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் உத்திகள்

கற்பித்தல் என்பது ஒவ்வொரு ஆசிரியரின் தனிப்பட்ட திறமையைப் பொருத்தது. கற்பித்தல் ஒரே மாதிரியாக அமைவதை மாணவர்கள் விரும்புவதில்லை. கற்பித்தலில் ஏற்படும் மாற்றங்களும் புதுமைகளுமே மாணவர்களிடம் கற்றலில் ஈடுபாட்டை ஏற்படுத்தும். அவ்வகையில், கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் சவாலாக அமையும் சங்கப்பாடல்களைக் கற்பிக்கும் போது, ஆசிரியர்களின் தனிப்பட்ட திறனுடன் சில உத்திகளும் சேர்ந்து அமைவது இன்றியமையாததாகும்.

### 2.4.1. பாடப்பொருளுக்கு ஏற்றவாறு ஆர்வப்படுத்துதல்

ஒரு பாடத்தைக் கற்பிக்கும் முன் பாடம் மாணவர் மனத்தில் பதியவும் மாணவர்களுடைய கவனத்தைப் பாடத்தின்பால் ஈர்க்கவும் மேற்கொள்கின்ற ஒரு முயற்சியே கற்பித்தல் சூழல் எனப்படும். இதனை, ஆசிரியர் செம்மையாகவும் சிறப்பாகவும் சுருக்கமாகவும் செய்து முடிக்க வேண்டும். இந்தப் பகுதியில் நடத்தப்போகும் பாடலின் தலைப்பைக் கரும்பலகையில் எழுதியோ அல்லது நடத்தப்போகும் பாடலின் நூல் விளக்கம், ஆசிரியர், முன் கதை, பாடல் தொடர்பான சுவையான நிகழ்ச்சி போன்ற பகுதிகளை நயமுற குறிப்பிட்டு, பின்னர் பாடலைத் துவங்கலாம். சங்கப்பாடல்கள் அனைத்தும் கவிஞரின் உணர்ச்சியின் அடிப்படையில் தோன்றியவை. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் உருபெற்றிருக்கும். எனவே, அச்சூழ்நிலையை விளக்கிப் பாடலைக் கற்பித்தால் மாணவர்கள் ஆர்வமுடன் கவனிப்பர். மாணவர்களுக்கு ஏற்கனவே அறிமுகமான விருப்பமான கவிஞரால் பாடல் எழுதப்பட்டிருப்பின், ஆசிரியரின் வரலாற்றை அல்லது சிறப்புகளைக் கூறிக் கற்பித்தலைத் தொடங்கலாம். கற்பிக்கவிருக்கின்ற பாடலின் கருத்தினையறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தையெழுப்பிப் பின்னர்ப் பாடலைக் கற்பிக்கத் தொடங்குதலே சிறந்தது. அதற்கான சூழ்நிலையை,

ஒவ்வொரு ஆசிரியரும் தன்னுடைய திறனால் உருவாக்கி பின்னர் கற்பித்தலைத் தொடங்குதலே உகந்தது. இதனால், மாணவர்கள் கற்பிக்கவிருக்கும் பாடலை முழுமையாக கவனிப்பதுடன் பாடலாசிரியரின் உணர்வைச் சரியாக உள்வாங்கிக் கொள்வர். முழுக் கற்பித்தலுக்கு அடித்தளமாக அமைவது இந்த முதல் நிலை. தற்காலத்தில் இல்லாத ஒரு சங்க காலச் சூழலை மாணவர்களின் கண்முன் தோன்றச் செய்வது அசாதாரணமான செயலாகும். ஆனால், சங்கப் பாடல்களின் பின்னணிச் சூழலை உள்வாங்கி, அதை ஆசிரியர் சரியான வகையில் எடுத்தியம்பும்போது இப்பணி மிக எளிதானதாக மாறிவிடுகிறது. எனவே, பாடப்பொருளுக்கு ஏற்றவாறு மாணவனை ஆர்வப்படுத்தினால் மட்டுமே பாடப்பொருள் முழுமையாக மாணவர்களிடத்தில் சென்று சேரும். உதாரணமாக, ஆறாம் வகுப்பில் இடம்பெறும் புறநானூற்றுப் பாடலான, **‘நாடாகு ஒன்றோ, காடாகு ஒன்றோ’** என்ற பாடலைத் தொடங்குவதற்கு முன்பு பின்வருமாறு திட்டமிடலாம். மேற்கண்ட பாடலை எழுதியவர் ஔவையார். கவிஞர் ஔவையார் குழந்தைகளுக்கு மிகவும் அறிமுகமானவர். ஆனாலும், ஔவையாரின் கதையை குழந்தைகள் அனைவரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அதனால், அவர் கதையை அல்லது வாழ்க்கை நிகழ்வுகளைக் கூறிப் பாடத்தைத் தொடங்கும் போது மாணவர்களிடத்தில் கற்றல் ஈடுபாடு ஏற்படும். அதன் மூலம் பாடலின் விளக்கத்தையும் அறிந்து கொள்ளவதில் ஆர்வம் காட்டுவர். இவ்வாறு, ஆசிரியர், பாடலைக் கற்பித்தலைக் காட்டிலும் கற்பித்தல் தொடங்குவதற்கு முன் செய்யும் ஆர்வமூட்டல் செயல் மிகவும் இன்றியமையாதது.

### 2.4.2. பகுதியிலிருந்து முழுமைக்குச் செல்லல்

சங்க இலக்கியங்களைப் பொருத்தவரையில் எந்த ஒரு பாடப்பொருளும் குறுகிய நோக்கில் அல்லாது பரந்துபட்ட நோக்கத்தில் மட்டுமே அமைக்கப்பட்டிருக்கும். அவ்வகையில் கொடுக்கப்பட்ட சங்கப்பனுவல் குறைந்த அடிகளைக் கொண்டதாக இருந்தாலும், அந்த பாடல் உணர்த்தும் பொருள், எடுக்கப்பட்ட நூல் என்று பார்க்கும்போது அது மிகவும் அகன்றதாக இருக்கும். எனவே, பாடநூலில் உள்ள பாடப்பகுதியை அதன் பின்புலத்தோடு உணர்த்துவதன் மூலமே, மாணவர்கள் பாடப்பொருள் தொடர்பான அனைத்து செய்திகளையும் அறிந்து கொள்ள முடியும். பாடநூலில் ஒரு சங்கப்பனுவல் தொடர்பான அனைத்து செய்திகளையும்

கொடுப்பது என்பது சாத்தியமாகாது. இருப்பினும், கொடுக்கப்பட்ட கூறுகளைக் கொண்டு அது தொடர்பான அனைத்துச் செய்திகளையும் மாணவர்களுக்கு வழங்குவது ஒரு ஆசிரியரின் கடமையாகும். பாடநூலில் அமைந்திருக்கும் சங்கப்பனுவலின் பொருளை மட்டும் விளக்குவதனால் மாணவர்களின் கற்றல் முழுமையடையாது. எனவே, சங்கப் பனுவலை ஆசிரியர் விளக்கும் போது, அது தொடர்பான அனைத்துச் செய்திகளையும் விளக்குவது இன்றியமையாதாகிறது. மாணவர்கள் பாடப்பொருள் என்னும் புவியிலிருந்து பரந்துபட்ட வானத்தைப் பற்றி அறிய உதவும் தொலைநோக்கியாக ஆசிரியர்கள் செயல்பட வேண்டும். உதாரணமாக, 10ஆம் வகுப்பில் இடம்பெறும் **'பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய'** என்ற புறநானூற்றுப் பாடலை விளக்கும் போது அந்தப் பாடலின் விளக்கத்தை மட்டும் கூறுவது முழுமையாகாது. அதனுடன் சேர்த்து, கோப்பெருஞ்சோழனின் இயல்புகள், கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையாருக்கும் இடையே இருந்த நட்பு, இந்தப் பாடலை எழுதிய புலவர் கணக்கனாருக்கும் கோப்பெருஞ்சோழனுக்கும் இருந்த தொடர்பு போன்ற செய்திகளையும் மாணவர்களுக்கு எடுத்தியம்புவதன் மூலம் பாடல் பாடப்பட்டதன் சூழ்நிலையை முழுமையாக மாணவர்கள் உணர்வர். இவ்வாறு கற்பிக்கும் போது மட்டுமே, சங்க இலக்கியங்களின் ஒவ்வொரு பாடலுக்கும் உள்ள தனித்தன்மையை மாணவர்கள் உணர முடியும். இவ்வாறு, ஒரு புலவரின் பாடலை விளக்கும் போது, புலவரின் திறமையையும் நோக்கத்தையும் மாணவர்கள் அறியும் வண்ணம் கற்பித்தல் வேண்டும். அதனால், மாணவர்கள் குறிப்பிட்ட புலவரின் பாடல்களை மேற்கொண்டுத் தேடிப் படிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் கற்பித்தல் அமைய வேண்டும். சங்கப்பாடல்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு புலவர்களால் வெவ்வேறு சூழ்நிலைகளில் எழுதப்பட்ட பாடல்களாகும். அவ்வாறு, பல தனிப்பட்ட பாடல்களை எழுதப்பட்ட முறைகளுக்கேற்ப தொகுக்கப்பட்ட தொகுப்பே சங்கப்பாடல்கள் ஆகும். எனவே, பாடநூலில் இடம்பெற்றிருக்கும் ஒரே ஒரு சங்கப்பாடலை மட்டும் மனதில் வைத்துக்கொண்டு கற்பிக்காமல் அதைத் தொடர்ந்து மாணவர்கள் சங்கப்பாடல்களைப் படிப்பதில் ஆர்வத்தை ஏற்படுத்துமாறு கற்பிக்க வேண்டும். சங்கப்பாடல்கள் அனைத்தும் நிகழ்ச்சி பின்னணி கொண்ட பாடல்களாக இருப்பதால், பாடநூலில் கொடுக்கப்பட்ட நிகழ்ச்சிக்கு முன் பின் நிகழ்ச்சிகளுக்குரிய பாடல்களை மாணவர்கள்

தேடிப்படிக்கும் வகையில் அது தொடர்பான அனைத்து தகவல்களையும் மாணவர்களுக்குக் கற்பித்தல் மூலம் வழங்குதல் வேண்டும்.

### 2.4.3 முழுமையிலிருந்து பகுதிக்குச் செல்லல்

கற்பித்தல் என்பது ஒரு மதிப்பெண் கூறாக அல்லாது, மாணவனைப் பண்படுத்தும் ஒரு ஊடகமாக திகழ வேண்டும். மொழிப்பாடம் என்பது ஒரு நீதிப்பாடமாக கருதப்படுகிறது. இதில், கொடுக்கப்பட்டிருக்கும் பாடங்கள் அனைத்தும் மாணவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான விழுமியங்கள் நிறைந்ததாகவே இருக்கும். ஆசிரியர் பாடத்தைக் கற்பிக்கும் போது பாடப்பொருளைக் கற்பதனால் மாணவர்கள் பெறப்போகும் விழுமியங்களை உணர்த்தும் வண்ணம் கற்பிக்க வேண்டும். இந்தப் பாடத்தைப் படிப்பது நம் எதிர்கால வாழ்க்கைக்கு எவ்வளவு இன்றியமையாதது என்ற எண்ணம் மாணவர்கள் மனதில் ஏற்படுமாறு கற்பித்தல் அமைய வேண்டும். பாடத்தின் மூலம் விளக்கப்படும் நற்பண்புகளை மாணவர்கள் ஏற்கும் வண்ணம் கற்பித்தல் அமைய வேண்டும். நற்பண்புகளுக்கு மாறான பண்புகளை மாணவர்கள் கொண்டிருந்தாலும் கற்பித்தலுக்கு பின்னர் அதை உணர்ந்து மாற நினைக்கும் அளவிற்கு கற்பித்தல் அமைய வேண்டும். உதாரணமாக, 9ஆம் வகுப்பில் இடம்பெற்றிருக்கும் **'ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்'** என்ற கலித்தொகைப் பாடலைக் கற்பிக்கும் போது, முதலில் பாடல் இடம்பெற்ற நூலான கலித்தொகையின் சிறப்புகளை எடுத்துரைக்க வேண்டும். எட்டுத்தொகை நூல்களுள் செய்யுள் அமைப்பால் பெயர் பெற்ற இரண்டு நூல்கள் கலித்தொகை மற்றும் பரிபாடல் ஆகும். இதையே,

**நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்**
**கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்**
**உரியதாகும் என்மனார் புலவர் (தொல்.999)**


என்று கலித்தொகை மற்றும் பரிபாடல் நூல்களை தொல்காப்பியம் பாராட்டுவதைக் குறித்து விளக்க வேண்டும். இத்தனை பெருமைகள் கொண்ட ஒரு நூலில் உள்ள ஒரு பாடலைத்தான் நாம் இப்போது கற்கப் போகிறோம் என்ற சிந்தனையை மாணவர்கள் மனதில் விதைத்து பின் கற்பித்தலைத் தொடங்க வேண்டும். இதனால் மாணவர்கள் சங்க இலக்கியங்களின் பெருமிதங்களை அறிந்து கற்கும் வாய்ப்புண்டு. இவ்வாறு, பாடநூலில்

இடம்பெறும் சங்கப்பாடலை மாணவர்கள் படிக்கும் பொழுது தனிப்பட்ட ஒரு பாடலைப் படிக்கும் எண்ணம் தோன்றாமல் ஆயிரக்கணக்கில் சிறந்த விழுமியங்களைக் கொண்ட பாடல்களின் தொகுப்பான சங்கப்பாடல்களில் ஒன்றைப் படிக்கப் போகிறோம் என்ற எண்ணத்தை மாணவர்கள் மனதில் விதைக்க வேண்டும். அதற்கு, சங்கப்பாடல்களின் சிறப்புகளை முதலில் எடுத்துரைத்து பின்னரே பாடநூலில் உள்ள பாடலை விளக்க முற்பட வேண்டும். அகப்பாடல், புறப்பாடல் என்று நேர்த்தியாக அமைப்பு முறையை வகுப்பிற்கு ஏற்ற வகையில் தெளிவாக விளக்க வேண்டும். இத்தனை சிறப்புகளைக் கொண்ட ஒரு பகுப்பிலிருந்து நாம் பாடல் கற்கப் போகிறோம் என்ற எண்ணமே மாணவர்களிடத்தில் அந்தப் பாடலின் சிறப்பைக் கொண்டு சேர்க்கும். திணை, துறை போன்ற செய்திகள் பாடநூலில் இல்லாவிட்டாலும், அவற்றைப் பற்றிய செய்திகளை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவது கூடுதல் கவனத்தை ஏற்படுத்தும். இத்தனை சிறப்புகளைக் கொண்ட சங்க இலக்கியத்தின் அறிமுகமே கற்பிக்கப் போகும் சங்கப்பாடலுக்கு ஆர்வமூட்டும் செயலாக அமைந்து விடும்.

### 2.4.4. துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல்

ஆசிரியரின் கற்பித்தல் என்பது பெரும்பாலும் ஆசிரியர் பேசி மாணவர்கள் கேட்கும் நிலையிலேயே அமைகிறது. அதைத் தொடர்ந்து, ஆசிரியர் தனது கற்பித்தலை மேம்படுத்தும் வகையில் பயன்படுத்தும் சில பொருட்களே துணைக்கருவிகள் எனப்படும். இவ்வாறு ஆசிரியர் பயன்படுத்தும் துணைக்கருவிகளின் மூலம் மாணவர்களின் கற்றல் சிறப்புற அமையும். பொதுவாக மாணவனின் கற்றலில் கேட்டல் 100% எனில் நினைவு கொள்வது 20% ஆகவும் காணல் 100% எனில் நினைவு கொள்வது 30% ஆகவும் கேட்டலும் காணலும் 100% எனில் நினைவு கொள்வது 50% ஆகவும் பேசுவது 100% எனில் நினைவு கொள்வது 80% ஆகவும் பேசுவதும் செயல்படுவதும் 100% எனில் நினைவு கொள்வது 90% ஆகவும் அமைகிறது.

ஆசிரியர்கள் பயன்படுத்தும் பல்வேறு கற்பித்தலுக்கான கருவிகள், பொருள்கள் ஆகியவற்றின் பயன் அளவினைக் கருத்தில் கொண்டு எட்கார்டேல் என்னும் கல்வியாளர் இவற்றை ஒரு கூம்பு வடிவில் சித்திரித்துள்ளார்.




கூம்பின் உச்சியில் குறிக்கப்படுவது மிகக் குறைந்த பயனை அளிப்பதாகவும் கூம்பின் அடித்தளத்தில் குறிக்கப்படுவது மிக அதிகப் பயனை அளிப்பதாகவும் உள்ளது. உச்சியிலிருந்து கூம்பின் அடித்தளத்திற்குச் செல்லச் செல்ல, குறிப்பிட்டுள்ள கற்பித்தல் பொருள்கள் முறைகள் ஆகியவற்றின் பயன் அதிகரித்துக் கொண்டு செல்லும்.

எனவே, ஆசிரியர்கள் கற்பித்தலில் பேசுவதைக் காட்டிலும் காட்சிக் கேள்வி துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல் மாணவர்களை செயலாற்றச் செய்தல் போன்ற பல்வேறு முறைகளைக் கையாளலாம்.

கற்பித்தலின் நோக்கம், பாடக்கருத்துகளின் தன்மை, கற்போனது பின்னணி அறிவு, முதிர்ச்சி ஆகியவற்றின் நிலை, கற்பித்தலுக்கு ஒதுக்கப்பட்டுள்ள காலம், பல்வேறு கருவிகளைப் பயன்படுத்துவதில் ஆசிரியரின் திறமை மற்றும் வகுப்பறை வசதிகள் போன்றவற்றைப் பொறுத்து துணைக்கருவிகளைப் பயன்படுத்துவதில் வேறுபாடுகள் இருக்கலாம். சங்கப் பனுவல்களைக் கற்பிக்கும் போது ஆசிரியர்கள் பெரும்பாலும் கரும்பலகையை மட்டுமே துணைக்கருவிகளாகப் பயன்படுத்துவர். இதனால், மாணவர்களின் கற்றலைக் காட்டிலும் மற்ற துணைக்கருவிகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் கற்றல் மேன்மையானதாக இருக்கும். சங்கப் பாடல்களைக் கற்பிக்கும் அந்தப் பாடல்களை ஒரு வரைபடத் தாளில் எழுதிச் சென்று கற்பிக்கலாம். இதனால், பாடலை சீர்பிரித்து

படித்துக்காட்டுவது எளிதாக இருக்கும். மேலும், பாடநூலில் உள்ளது போல் எழுதாமல் நேரடியாக சீர்பிரித்தே பாடலை எழுதிச் செல்வது மிக உதவியாக இருக்கும். அதுபோல, சங்கப் பாடல்களை இசையுடன் பாடி ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்து, மாணவர்களைக் கேட்கச் செய்யலாம். இதனால், பாடல் மாணவர்கள் மனதில் எளிதில் பதியும் வாய்ப்பு உண்டு. பாடல் தொடர்பான படங்களையோ அல்லது பாடல் ஆசிரியரின் படங்களையோ காட்டலாம்.

கணினியில் ஈடுபாடு உள்ள ஆசிரியர்களாக இருந்தால் கற்பித்தலில் கணிணியைப் பயன்படுத்தலாம். கணினியுடன் கூடிய கற்றலுக்கு மாணவர்களிடத்தில் நல்ல வரவேற்பு உண்டு. ஏனெனில், காணலும் கேட்டலும் இணைந்து கற்பிக்கும் போது மாணவர்கள் ஆர்வத்துடன் கற்கின்றனர். தொழில்நுட்பங்களுடன் இணைந்து கற்பிக்கும் போது அதை மாணவர்கள் வழிமொழிகின்றனர். இன்றைய தொழில்நுட்ப உலகில், சங்க இலக்கிய நிகழ்வுகளை நேரடியாக மாணவர்களிடத்தில் கொண்டு சேர்ப்பதற்கு கணினி மிகவும் உறுதுணையாக இருக்கும்.

மாணவர்களுக்கு வயது மற்றும் அறிவுக்கு ஏற்றவாறு சங்கப்பாடல்களைக் கணினியில் படங்களாகத் திரையிடலாம். அல்லது பல்வேறு வலைதளங்களின் உதவியுடன் உயிரூட்ட படங்களாகவும் திரையிடலாம். இதனால், ஆசிரியரின் வேலை வகுப்பறையில் குறைவதோடு மாணவர்களும் பாடங்களை எளிதில் புரிந்து கொள்வர். இன்றைய சூழ்நிலையில், சங்கப்பாடல்கள் தொடர்பான பல படங்கள், செய்திகள், காணொலிகள் போன்றவற்றை நாம் வலைதளங்களின் மூலம் பெற முடியும். அவற்றை படவீழ்த்தியின் உதவியுடன் நாம் மாணவர்களுக்குக் காட்டலாம். தமிழ் இலக்கியங்கள் பற்றி பேச்சு, பட்டிமன்றம், இலக்கிய உரை போன்றவற்றையும் பதிவிறக்கம் செய்து காண்பிக்கலாம். இதனால், கற்றலில் மாணவர்கள் விருப்பத்துடன் ஈடுபடுவர்.

துணைக்கருவிகள் ஆசிரியர்களால் உருவாக்கப்படுவதாகவும் தேடப்படுவதாகவும் உள்ளது. அதற்கு நேரச்செலவும் பொருட்செலவும் செய்ய வேண்டியுள்ளது. அதனால் துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல் கடினம் என்ற எண்ணமும் சில ஆசிரியர்களிடத்தில் உண்டு. துணைக்கருவிகள் என்பது கற்பிப்பதற்கு உதவும் கருவிகளேயன்றி, கற்பித்தல் என்பது

ஆசிரியர்களால் மட்டுமே நிகழ்த்தக்கூடிய அரிய செயல் என்பதை ஆசிரியர்கள் உணர வேண்டும். எனவே, வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்ற பொன்மொழிக்கேற்ப, மேற்கண்ட துணைக்கருவிகள் இல்லையெனினும், ஆசிரியரின் தனிப்பட்ட திறமையினால் கற்பித்தலைச் சிறப்பிக்க முடியும். ஆசிரியர்கள் பாடலைப் படித்துக் காட்டி மாணவர்களை உடனே படிக்கச் செய்யலாம். இசையுடன் பாடக் கூடிய பாடலாக இருந்தால் முன்னதாகவே மாணவர்களை இசையுடன் பாட பயிற்சியளித்து வகுப்பறையில் பாட வைக்கலாம். சங்கப் பாடல் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பவர்களுக்குப் பரிசுகள் வழங்கி வலுவூட்டலாம். இதுபோன்று, ஆசிரியரின் கற்பித்தலுக்கு மாணவனையே துணைக்கருவியாகப் பயன்படுத்தலாம். இது குறித்த விளக்கங்களை பின்வருமாறு காணலாம்.

### 2.4.5 இசையுடன் பாடுதல்

இசை என்பது நம் வாழ்வில் இரண்டற கலந்த ஒன்றாகும். பிறப்பில் தாலாட்டுப் பாடல் கேட்க ஆரம்பித்து, வாழ்வில் எல்லாப் பகுதியிலும் இசையானது நம் வாழ்வில் ஒன்றாக இருந்து வருகிறது. இசையுடன் கூடிய பாடல்கள் நம் மனதில் மிகச் சுலபமாக இடம்பிடித்து விடுவதோடு நீங்கா இடத்தையும் பெற்றுவிடுகிறது. எனவே, பெரும்பாலும் பள்ளிகளில் அனைத்து வகுப்பிலும் இசையுடன் கூடிய காணொலிக் காட்சிகளைக் காண்பித்து கற்பிப்பது அதிகரித்து வருகிறது. இதில், பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இருந்தே, இசையுடன் பாடல்களைப் பாடி மாணவர்களுக்குப் பாடம் கற்பித்த பெருமை நம் தமிழ் மொழிக்கு உண்டு. மற்ற பாடங்களைக் காட்டிலும், தமிழ் பாடத்தில் இந்த இசையானது இன்றியமையாததாகத் திகழ்கிறது. இயல்பாக உரைநடைப் பகுதியைக் கற்பித்தலுக்கும் செய்யுள் பகுதியைக் கற்பித்தலுக்கும் இடையே உள்ள தனித்தன்மையை வேறுபடுத்திக் காண்பிப்பது இசையே ஆகும். இதன் மூலம் மட்டுமே மாணவர்களிடத்தில் செய்யுள் கற்பித்தலில் ஈடுபாட்டை வரவழைக்க முடியும். உதாரணமாக, 6 மற்றும் 7ஆம் வகுப்பில் இடம்பெறும் சங்க இலக்கியப் பாடல்கள் இரண்டுமே ஒரே மாதிரியான இசையை அமைத்துப் பாடக் கூடிய பாடலாக அமைந்துள்ளது. எனவே, 6ஆம் வகுப்பில் உள்ள பாடலை இசையமைத்து ஒரு புதிய ராகத்தில் பாடிக் கற்று தேர்ந்தால், 7ஆம் வகுப்பில் அதே ராகத்தை வைத்து அப்பாடலை மாணவர்களே பாடக்கூடிய வாய்ப்பு கிடைக்கும். இவ்வாறு, சங்க இலக்கியச் செய்யுள்களைக் கற்பிப்பதற்குரிய

சூழ்நிலையமைத்தப் பின்னர், அதனை முதன் முதல் அறிமுகப்படுத்தும்போது இசையுடன் பாடுதல் சிறந்தது. உரைநடையைப் படிப்பது போல் படித்தால் சொற்களின் ஒலி நயத்தினை மாணவர்கள் உணர முடியாது. இசையுடன் பாடுதலில் தகுந்த திறமை தமக்கில்லையென ஆசிரியர் கருதினால் சீர் பிரித்துச் சந்த அமைப்போடு குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்துக் காட்ட வேண்டும். அல்லது இசையுடன் பாடப்பட்ட ஒலிநாடாக் கருவிகளைப் பயன்படுத்தலாம். இசையுடன் கூடிய காணொலிகளையும் பயன்படுத்தலாம். வசதியிருப்பின் மாணவர்களில் ஒருவரைப் பாடச் செய்து ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்து வகுப்புக்குக் கொண்டு வந்து அனைத்து மாணவர்களையும் கேட்கச் செய்யலாம். அப்பொழுதான் உரைநடையினின்றும் அது வேறுபட்டது என்பதனை மாணவர்கள் உணர்வர். இவ்வாறு இரண்டு மூன்று தடவைகள் படித்தல் அல்லது பாடுதல் நன்று. பின்னர், பாடலில் உள்ள கடும் புணர்ச்சிச் சொற்களைப் பிரித்தும் பொருள் விளங்கும் பகுதியில் நிறுத்தியும் படித்துக் காட்டுதல் வேண்டும். சங்கப்பாடல்கள் அனைத்தையும் இவ்வாறு இசை பாடுதல் என்பது சாத்தியமாகாது என்றாலும் பரிபாடல், கலித்தொகை போன்ற பாடல்களை இசையுடன் அமைத்துப் பாடி நடத்துதல் சிறந்தது. **தமிழ்பாக்கள் ஓசை நயம் கொண்டவை. அந்தந்தப் பாக்களுக்கு உரிய ஓசையோடு அவற்றைப் படிக்க வேண்டும். ஆகவே, ஆசிரியர் செய்யுளை இனிய இசை நயத்தோடு படித்துக் காட்டி பின் பாடிக் காட்டி பாடலின் சந்தத்தை அறியச் செய்ய வேண்டும்”**[18] செய்யுளின் கருத்தையும், நயத்தினையும் மாணவர்கள் நன்குணர்ந்த பின்னர் மீண்டும் இசையுடன் பாடிக் காட்டுதல் வேண்டும். மாணவர்களையும் தொடர்ந்து பாடச் செய்தல் வேண்டும். பின்பு அவர்கள் தாமே படித்துப் பாடி மகிழ்வர்.

### 2.4.6 குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்தல்

கற்பிக்கவிருக்கின்ற பாடலின் கருத்தினையறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தையெழுப்பும் அளவிற்கு, ஆசிரியர் அந்தப் பாடலை நன்முறையில் படித்தோ அல்லது பாடியோ காட்ட வேண்டும். ஆனால், இந்த செயல்முறையில் பாடலின் நயம் எவ்விதத்திலும் குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். மாறாக, உரைநடையைப் படிப்பது போல் படித்தால், சொற்களின் ஒலி நயத்தினை மாணவர்களால் உணர முடியாது. இதில், சங்கப்பாடலின் ஓசை, பொருள், எதுகை, மோனை, பா, அணி ஆகிய அனைத்தையும் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

இவை அனைத்தையும் ஆசிரியர் மனதில் கொண்டு பாடலைச் சீர் பிரித்துச் சந்த அமைப்போடு குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்துக் காட்ட வேண்டும். அப்பொழுதுதான், மற்ற செய்யுள் பாடல்களிலிருந்து சங்கப்பாடல் எவ்வளவு வேறுபட்டிருக்கிறது, தனித்தன்மை பெற்றுள்ளது என்பதை மாணவர்கள் உணர முடியும். இந்த திறமை தன்னிடம் இல்லை என ஆசிரியர் கருதினால், மூத்த ஆசிரியர்களைப் படிக்கச் சொல்லிக் கேட்டு அந்த முறையைப் பின்பற்றலாம். இவ்வாறு இரண்டு மூன்று முறை படித்தல் நன்று. பின்னர் பாடலில் உள்ள கடும் புணர்ச்சி விதிகளுக்குட்பட்ட சொற்களைப் பிரித்தும் பொருள் விளங்கும் பகுதியை விளக்கியும் படித்துக் காட்டுதல் வேண்டும். எனினும், குரல் ஏற்றத்தாழ்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பொருட்டு, பாடலைச் சொல்லாகப் பிரித்துப் படித்து விளக்கம் சொல்வதையே முதன்மையான வேலையாகக் கொள்ளுதல் கூடாது. **“பண்டைக்கால முறைப்படி சொல் சொல்லாகப் பிரித்து உரை கூறுவதும், பின்பு அச்சொற்பொருள் அனைத்தையும் சேர்த்துப் பொழிப்புரை கூறுவதும் சிறந்தவையல்ல. செய்யுளின் கருத்துணர்தலுக்கு இவை தேவை எனினும், பதவுரை பொழிப்புரை கூறுவதை மட்டும் முதன்மையாகக் கருதாமல், பாடலின் மற்ற உணர்ச்சிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் பொருட்டு கற்பித்தல் வேண்டும்”** [19]**.** எனவே, பாடலின் கருத்துணர்தல், நயம் அறிதல், சுவையுணர் திறன் வளர்த்தல், உணர்ச்சியில் ஒன்றுபடுதல், படித்து படித்து மகிழ்தல் போன்ற நோக்கங்கள் நிறைவேறும் வண்ணம் கற்பித்தல் வேண்டும். மாணவர்களுக்குப் படிக்கும் முறையைக் கற்பித்தலோடு, குறிப்பிட்ட பாடலில் இடம்பெறும் கடினஒலிப்புச் சொற்களை ஆசிரியர் ஒலித்துக் காட்டி, மாணவர்களை மீண்டும் மீண்டும் ஒலிக்கச் சொல்லிக் கேட்க வேண்டும். நேரமிருப்பின் ஒவ்வொரு மாணவர்களையும் தனித்தனியாகப் படிக்கச் சொல்லி திருத்தலாம். அல்லது ஒலிப்புப் பிழை ஏற்படும் மாணவர்களை மட்டும் படிக்கச் சொல்லித் திருத்தலாம். இதனால், மாணவர்கள் ஒலிப்புப் பிழையின்றிப் படித்துப் பாடலின் பொருளை அறிந்து கொள்வர்.

இன்றைய மாணவர்களில் பெரும்பாலானவர்களிடம் படிக்கும் போது ஒலிப்புப் பிழை ஏற்படுகிறது. இதனால், படிப்பதில் பிழை ஏற்பட்டு பொருள் அறிவதில் குழப்பம் ஏற்படுகிறது. இதனால், படிப்பதில் ஆர்வம் குறைகிறது. மேலும், சங்கப்பாடல்களில் பழஞ்சொற்களும் கடினஒலிப்புச் சொற்களும் மிகுந்து காணப்படுவதால், ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எழுத்துகள்

பிறக்கும் முறையையும் வாயில் எழுத்துகள் நுழைந்து ஒலிக்கும் முறையையும் கற்பிப்பது அவசியமாகிறது. பெரும்பாலும், தொடக்க வகுப்புகளில் மட்டும் இந்தப் பயிற்சியை மேற்கொண்டு பின் கைவிட்டுவிடுகின்றனர். ஆனால், வகுப்புகள் கூடும் அளவிற்கு மாணவர்களின் படித்தல் பயிற்சியும் அதிகரிக்கிறது. இதனால், எந்த வகுப்பாக இருந்தாலும், ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எழுத்துகள் பிறக்கும் இடங்களையும், ஒலிக்கும் முறையையும் மீண்டும் மீண்டும் கற்பித்தல் அல்லது நினைவூட்டுதல் இன்றியமையாதாகும். இதனால், மாணவர்கள் தடுமாறி செய்யும் ஒலிப்புப் பிழைகளும் குறையும் வாய்ப்புண்டு.

### 2.4.7. நடித்துக் காட்டுதல்

சங்க இலக்கியப் பாடல்கள் ஒவ்வொன்றும் நிகழ்ச்சியின் அடிப்படையில் தோன்றிய பாடல்கள் ஆகும். கவிஞரின் ஒரு குறிப்பிட்ட உணர்ச்சியில் உருப்பெற்றிருக்கும். அச்சூழ்நிலையையும் உணர்ச்சியையும் நேரடியாக மாணவர்கள் உணரும் வகையில் அந்தப் பாடல்களைக் கற்பித்தால் மட்டுமே சங்க இலக்கியப் பாடல்களின் தனித்தன்மையை மாணவர்கள் முழுமையாக உணர முடியும். அதற்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட பாடலைக் கவிஞர் எந்தச் சூழ்நிலையில் பாடினாரோ அந்தச் சூழ்நிலைக்கு மாணவர்களைக் கொண்டு சேர்க்க வேண்டும். சங்க இலக்கியப்பாடல்கள் அனைத்தும் கூற்றாகவோ, அல்லது உணர்ச்சியை வெளிப்படுத்துவனவாகவோ அமையும். அகப்பாடல்கள் தனிக்கூற்றாகக் கொண்ட நாடகங்களாக அமையும். மேலும், கலித்தொகைப் பாடல்கள் முழுதும் நாடகங்களாகவே அமையும் பொருட்டு, ஆசிரியர்கள் அவற்றை வாசிப்பதோடு நின்று விடாமல், அந்த கதை மாந்தராகவே மாறி, அந்த கருத்தைக் கூறலாம். அல்லது, பாடம் நடத்திய பின்னர், மாணவர்களுடன் சேர்ந்து அதை நாடகமாக நடத்தலாம். இவ்வாறு, சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பதற்கு இந்த உத்தி மிகச்சிறந்தாகக் கருதப்படுகிறது. இவ்வாறு, ஆசிரியர் கவிஞராகவோ, அல்லது பாடல் பாடப்பட்ட சூழ்நிலையில் உள்ள முக்கிய கதாபாத்திரமாகவோ தனது நிலையை மாற்றி அதற்கேற்ப முழு மனதுடன் பாடலைப் படித்துக் காட்ட வேண்டும். அப்பொழுதுதான், மாணவர்களிடம் முழுமையான ஈடுபாட்டை ஏற்படுத்த முடியும். இதற்கு ஆசியரியரின் நடித்தல் திறன் முக்கிய பங்கு வகிக்கும். ஆசிரியர்களின் நடிப்புத்திறனே சங்கப்பாடலை முழுமையாக மாணவர்களிடத்தில் கொண்டு சேர்க்கும்.

நடிக்கும் திறன் இல்லை என நினைப்பவர்கள் மாணவர்களிலேயே ஒரு சில மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, சூழ்நிலையை விளக்கி அதற்கேற்ப நடிக்கச் சொல்லி ஆசிரியர்கள் அதற்கேற்ப குரல் எழுப்பி பாடலை விளக்கலாம். இது ஒரு சிறந்த முறையாகும். பொதுவாக இம்முறை எல்லா சங்க இலக்கியப் பாடல்களுக்கும் பொருந்தும். இம்முறையைக் கையாள்வதின் மூலம் மாணவர்களுக்குச் சங்க இலக்கியப் பாடல்களில் மட்டுமல்லாது சங்க காலச் சூழ்நிலைகளின் மீதும் ஈடுபாடு ஏற்பட வாய்ப்புண்டு.

### 2.4.8 மாணாக்கரைப் பங்கெடுக்கச் செய்தல்

சங்கப் பாடல்கள் கற்பித்தலின் முழு வெற்றி மாணவர்களை மட்டுமே சார்ந்துள்ளது. எனவே, பெரும்பாலும் மாணவர்களை ஈடுபடுத்தும் பொருட்டே நமது கற்பித்தல் இருக்க வேண்டும். சங்கப்பாடல்களைக் கற்பித்தலில் பயன்படுத்தும் நடித்தல், பாடுதல், பேசுதல் போன்ற உத்திகளுக்கு மாணவர்களில் திறன் மிகுந்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்து கற்பித்தலுக்கு முன்னதாகவே பயிற்சி கொடுத்து வகுப்பில் கற்பித்தலில் அவர்களை பேச வைத்தோ, நடிக்க வைத்தோ கற்பிக்கலாம். இதனால், மாணவர்களுக்கு அதிக ஆர்வம் ஏற்படும். அல்லது கற்பித்தலுக்குப் பின், மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து சங்கப்பாடலின் சூழ்நிலையை நாடகமாக நடித்து பாடலைப் பாடிக் காட்டச் சொல்லலாம். இதனால், சங்கப்பாடல்களின் சூழ்நிலையை மாணவர்கள் நன்கு புரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். பொதுவாகவே பள்ளிகளில் ஆசிரியர்கள் சங்கப்பாடல்களைக் கற்பிக்கும் போது, மாணவர்களின் சிந்தனைக்கு மட்டுமே வேலை ஒதுக்கப்படுகிறது. இதற்கு மாறாக, மாணவர்களின் புலன்களுக்கும் வேலைகளை ஒதுக்க வேண்டும். சங்கப்பாடல்களைக் கற்பிக்கும் போது, பாடலில் இடம்பெறும் பழஞ்சொற்களை மாணவர்களை அடிக்கோடிடச் செய்யலாம். பழஞ்சொற்களுக்கு மீது அதற்கான பொருளை எழுதச் சொல்லலாம். சீர்பிரித்து படிக்கும் போது அதற்கான இடங்களில் கோடிடச் செய்யலாம். கரும்பலகையில் எழுதவோ அல்லது வரையவோ செய்ய மாணவர்களையே பயன்படுத்தலாம். கற்றலுக்குப்பின் மாணவர்களையே அவர்களுடைய சொந்த சிந்தனையில் மனவரைபடம் அல்லது கருத்து வரைபடம் வரையச் சொல்லலாம். பாடலுக்கேற்ற சூழ்நிலையை விளக்கி, மாணவர்களை நாடகமாக நடிக்க வைக்கலாம். இவ்வாறு, கற்பித்தலின் போது ஆசிரியர் தனித்து செயல்படாமல் மாணவர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

இதனால், மாணவர்கள் முழு ஈடுபாட்டுடன் கற்றலில் ஈடுபடுவர். ஆசிரியரின் வேலைப் பளுவும் குறையும். மேலும், கற்பித்து முடித்த பின்னர், மாணவர்களுக்கு வீட்டு வேலைக் கொடுக்கும் போது, பண்டையக் கால முறைப்படி, பாடலைப் பார்த்து எழுதுவதாகவோ வினாக்களுக்கு விடை எழுதுவதாகவோ அமையாமல் பாடலுக்கேற்ற கருத்துப்படம், மனவரைபடம், விளக்கப்படம் வரைதல், அல்லது பாடலுக்கேற்ற நயமுள்ள தொடர்கள், எதுகைத் தொடர்கள், மையக் கருத்து தொடர்கள் எழுதுதல், அல்லது பாடல் சம்பந்தப்பட்ட வேறு பாடல்களைக் கண்டறிதல் போன்று அமையலாம். இந்த வேலைகளை அனைத்து மாணவர்களுக்கும் சமமாகக் கொடுக்காமல் அவரவர் திறமைக்கேற்ப தனித்தோ அல்லது குழுவாகவோ வெவ்வேறு வேலைகளைச் செய்ய அனுமதி வழங்கலாம். **'தெளிவு, வேகம் பெற வீட்டுப்பயிற்சி உதவவல்லது. தன்னம்பிக்கையும் வளரும் படித்தல் மற்றும் எழுதுதல் திறன் வளரும்'** [20]. தன்னுடைய விருப்பப்படி செய்வதால் மாணவர்களுக்குச் செயலின் மீது தனிப்பட்ட ஈடுபாடு ஏற்படும். இதனால், சங்கப்பாடல்களைக் கற்பது மட்டுமல்லாமல் மேலும் பாடல்களைத் திரட்டிப் படிப்பதிலும் ஆர்வம் ஏற்பட வழி வகுக்கும்.

### 2.4.9. நினைவூட்டுதல்

சங்கப்பாடல்கள் பெரும்பாலும் கருத்தால், ஓசையால், பொருளால், கதை மாந்தர்களால், புலவர்களால் ஒன்றுபட்டு இருப்பதை நம்மால் காணமுடிகிறது. இந்நிலையில், மாணவர்களுக்கு சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் போது, கற்பிக்கவிருக்கும் பாடல் தொடர்பான செய்திகளையோ, பாடல்களையோ மாணவர்கள் ஏற்கனவே அறிந்திருக்கும் வாய்ப்பு இருப்பின், அதை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் நினைவூட்டுதல் இன்றியமையாததாகும். உதாரணமாக, பொருட்சுவையோ அல்லது சொற்சுவையோ உள்ள பாடலைக் கற்பிக்கும் போது, அதே போல சுவை கொண்ட பாடல்களை நினைவூட்ட வேண்டும். அந்த வகையான பாடல்களை மாணவர்கள் முன் வகுப்பிலோ அல்லது வேறு பகுதியிலோ படித்திருக்கும் வாய்ப்புண்டு. இவ்வகையில், 6ஆம் வகுப்பில் இடம்பெறும் சங்க இலக்கியப்பாடலும் 7ஆம் வகுப்பில் இடம்பெறும் சங்க இலக்கியப் பாடலும் இசையால், கருத்தால், படிக்கும் திறனால் பெருமளவில் ஒன்றுபட்டு வருவதை நாம் பார்க்க முடிகிறது. இந்நிலையில் அதை நாம் நினைவூட்டும் போது, அந்தச் சுவையின் சிறப்பை

மாணவர்கள் அறிந்து கொள்வார்கள். இதனால், சங்கப்பாடல்களின் சிறப்பை நன்கு உணர முடியும். மேலும், ஏற்கனவே படித்த பாடல்களை நினைவுக்கூறும் போது, அதே ஆர்வத்தில் இப்போது கற்கவிருக்கும் பாடலிலும் ஒரு ஈடுபாடு ஏற்படும். இதனால், ஆசிரியருக்கும் கற்பித்தல் சுலபமானதாக இருக்கும். அதுபோல, தற்போது கற்கவிருக்கும் பாடலோடு அல்லது கருத்தோடு ஒத்த பாடல்களையோ அல்லது செய்திகளையோ அல்லது கருத்துகளையோ மாணவர்கள் ஏற்கனவே படித்திருக்கும் வாய்ப்பிருப்பின் அதை நினைவூட்டுதல் வேண்டும். மேலும், புறப்பாடல்கள் மற்றும் அகப்பாடல்கள் பற்றிய பொதுக் கருத்துகளை ஒவ்வொரு வகுப்பிலும் நினைவூட்டல் இன்றியமையாததாகும். ஏற்கனவே படித்திருப்பார்கள் என்ற நம்பிக்கையில் விட்டுவிடாமல் அதை மீண்டும் நினைவூட்டுதல் கற்பித்தல் சிறக்க வழிவகுக்கும்.

### 2.4.10. ஒப்புமைப்படுத்திக் கற்பித்தல்

சங்கப்பாடல்கள் அனைத்தும் ஏதோ ஒரு சூழ்நிலையைப் பின்பற்றி வருவதால், இது போன்ற சூழ்நிலைகளையும் இன்றைய வாழ்க்கை முறையோடு ஒப்பிட்டு பாடல்களை நடத்த வேண்டும். பெரும்பாலும், தலைவன், தலைவியாக வரும் கதாபாத்திரங்களை மாணவர்களிடம் திரையிடும் போது, தலைவனைத் தந்தையாகவும் தலைவியைத் தாயாகவும் பாவித்துக் காட்சிப்படுத்தும் போது, பாடலின் கருத்தில் இருந்து மாணவர்களை வெளியேற விடாமல், கற்றலில் முழுமனதைச் செலுத்த முடியும். பாடநூலில் இடம்பெறும் சங்கப்பாடலுக்கும் பாடநூலில் இடம்பெறும் வேறு ஏதேனும் பாடத்திற்கும் ஏதேனும் சிறு ஒப்புமை இருந்தாலும் அதை மிகைப்படுத்திக் கற்பிக்க வேண்டும். இதனால், மாணவர்கள் சம்பந்தப்பட்ட பாடத்தைப் படிக்கும் போதும் சங்கப்பாடலின் நினைவு ஏற்படும். சங்க இலக்கியப் பாடல்கள் அனைத்தும் ஒரு பண்புநலனையோ, ஒரு நிகழ்ச்சியையோ, ஒரு கருத்தையோ மையப்படுத்திப் பாடல்களாக இருக்கும். அவ்வாறு கற்பிக்கும் போது, அரசனின் மேன்மையை விளக்கும் புறநானூற்றுச் செய்யுளாக இருந்தால் அரசனைத் தலைவனாகப் பாவித்து நம் நாட்டில் வாழ்ந்த மிகச் சிறந்த தலைவர்களைக் கருத்துக்கு ஏற்ப ஒப்புமைப் படுத்திக் கற்பிக்கலாம். நிகழ்ச்சிகள் தொடர்பான செய்திகளாக இருந்தால், அதனோடு தொடர்புடைய செய்திகளை ஒப்புமைப்படுத்திக் கற்பிக்கலாம். உதாரணமாக, 6ஆம் வகுப்பில் இடம்பெறும் சங்க இலக்கியப்

பாடல்களைத் தொடர்ந்து கொடுக்கப்பட்டிருக்கும் உரைநடையும் துணைப்பாடமும் தொடர்புடைய பாடங்களாகவே அமைந்துள்ளன. இவற்றை மாணவர்களுக்கு எடுத்தியம்பி கற்பித்தல் வேண்டும். இதனால், சங்க இலக்கியப் பாடங்களைப் பிற பாடங்களுடன் அவர்களே ஒப்புமைப்படுத்தி படிப்பதில் ஆர்வம் ஏற்படும். இதனால் கற்பனைத் திறன் அதிகரிக்கும். சங்கப்பாடல்களோடு மட்டுமல்லாமல், பாடல்களின் கருத்துகளோடு ஒட்டியிருக்கும் வேறு சில பாடல்கள், கதைகள், கருத்துகள், நிகழ்வுகள், செய்திகள் போன்றவற்றை ஒப்புமைப்படுத்தி கற்பித்தல் இன்றியமையாதது. இவ்வாறு ஒப்புமைப்படுத்திக் கற்பிக்கும் போது சங்கப்பாடல்களின் கருத்துகளை ஆழமாக உணர்ந்து கற்பர். இதனால், சங்கப்பாடலின் மீது ஒரு ஈடுபாடு ஏற்படுவதோடு, மேலும் சங்கப்பாடல்களைத் தேடிப் படிக்கவும் படிக்கும் கதைகள், கருத்துகள், செய்திகள், பார்க்கும் நிகழ்வுகளோடு, தான் படித்த சங்கப்பாடல்களை இணைத்துப் பார்க்கும் எண்ணமும் ஏற்படும். பின்பு, சங்கப்பாடல்கள் மாணவர்களின் வாழ்வோடு இரண்டற கலந்துவிடும்.


### 2.4.11 தொடர்புடைய செய்திகள், புராண நிகழ்வுகள், வரலாறுகள் ஆகியவற்றைக் கூறுதல்

சங்கப்பாடல்களில் இடம்பெறும் அரசர் மற்றும் புலவர்களைப் பற்றிக் கற்பிக்கும் போது, பாடலில் இடம்பெறும் செய்திகளை மட்டும் கூறாமல் அதில் இடம்பெறும் கதாபாத்திரங்களைப் பற்றிய பல செய்திகளை மாணவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். மேலும், சங்கப்பாடல் இடம்பெற்றிருக்கும் சூழ்நிலையை மட்டும் குறிப்பிடாமல், அதற்கு முன்பின் உள்ள சூழ்நிலைகளையும் மாணவர்களுக்குத் தெரிவிப்பது அவசியமாகும். எல்லா சங்க இலக்கியப் பாடல்களும் ஏதேனும் ஒரு பின்னணியைக் கொண்டே பாடப்பட்டிருக்கும். அதனால், பாடல் பாடப்பட்ட புலவர்களின் வரலாறு, சங்க இலக்கியத்தில் இடம்பெறும் மன்னர்களைப் பற்றிய செய்திகள், போன்றவற்றை அறிந்திருத்தல் இன்றியமையாதது. உதாரணமாக, 11ஆம் வகுப்பில் இடம்பெறும் **'ஓங்குமலைச் சிலம்பில் பிடவுடன் மலர்ந்த'** என்ற பாடலைக் கற்பிக்கும் போது, அப்பாடலை எழுதிய ஔவையாரைப் பற்றி விளக்கும்போது, அதியமான் நெல்லிக்கனி வழங்கிய நிகழ்ச்சியையும் அதியமானுக்கும் ஔவையாருக்கும் இடையே இருந்த நட்பின் மேன்மையையும் விளக்கலாம். அப்பாடல் அகநானூறு நூலில்

இருந்து இடம்பெற்றுள்ளது. அதனால், அந்நூல் அன்பின் ஐந்திணைகளின் இலக்கணமாக திகழ்வதைப் பற்றியும் நெடுந்தொகை என்று அழைக்கப்படும் பெருமையையும் மணவாழ்க்கையாகவும் மனை வாழ்க்கையாகவும் பெறும் சிறப்பு பற்றியும் விளக்குவது சிறந்ததாக இருக்கும். மேலும், சங்கப்பாடல் எழுதப்பட்ட காலம் மற்றும் வரலாற்றைப் பற்றியும் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு தெரிவிக்கும் தகவல்களில் ஆசிரியர் தெளிவுடன் இருப்பது அவசியமாகும். ஏனெனில், இதில் மாணவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை உடனுக்குடன் தெளிவுபடுத்த வேண்டியது ஆசிரியரின் கடமையாகக் கருதப்படுகிறது. இதில் ஏதேனும் தடுமாற்றம் ஏற்படின் மாணவர்களுக்கு ஆசிரியர் மீது மட்டுமல்லாது, சங்கப்பாடல்களின் மீதும் நம்பிக்கை குறைய வாய்ப்புள்ளது. எனவே, ஆசிரியர்கள் கொடுக்கப்பட்ட பாடநூலில் இடம்பெறும் சங்கப்பாடல்கள் மட்டுமல்லாமல் அது தொடர்புடைய பல பாடல்கள், செய்திகள், வரலாற்று நிகழ்வுகள் ஆகியவற்றை அறிந்து வைத்திருத்தல் சிறந்தது. மேலும், பாடக் கற்பித்தலுக்குத் தயாராகும் போது, அவற்றை எந்த முறையில் மாணவர்களிடத்தில் கொண்டு சேர்க்க முடியும். எப்படி கொண்டு சேர்க்க முடியும் என்பதையும் முன்கூட்டியே சிந்தித்து தயார் செய்து கொள்ளுதல் நல்லது.


### 2.4.12. எளிய படங்கள் வரைதல்

ஆசிரியர்கள் சங்கப்பாடல்களைக் கற்பிக்கும் போது, மாணவர்களின் எண்ணம் சிதைவுறாமல் காப்பது இன்றியமையாததாகும். ஏனெனில், மாணவர்களின் ஈடுபாடு முழுமையாக இருந்தால் மட்டுமே கற்பித்தல் சிறப்படையும். எனவே, ஆசிரியர்கள் மாணவர்களின் எதிர்பார்ப்பைத் தூண்டும் வகையில் கற்றலில் மாற்றங்களைச் செய்துகொண்டே இருக்க வேண்டும். சங்கப்பாடல்களைக் கற்பிக்கும் போது, அதில் வரும் அரசர், புலவர் போன்றவர்களின் பெயர்களை எழுதுவதற்கும் நூல்களின் பெயர்களை எழுதுவதற்கும் கரும்பலகையைப் பயன்படுத்துவது இயல்பாகும். இதிலிருந்து சற்று விலகி, பாடலில் இடம்பெறும் சொற்களுக்கு ஏற்றவாறு படங்கள் வரையவும் கரும்பலகையைப் பயன்படுத்தலாம். மரம், ஆயுதம், மலை, போன்ற சிறு படங்களையும் பாடலுக்கேற்றவாறு வரையலாம். உதாரணத்திற்கு புன்னைமரம் என்ற சொல் இடம்பெறும் போது புன்னைமரம் என்ற சொல்லை மட்டும் எழுதாமல் இணையாக ஒரு மரம் படத்தையும் வரையலாம்.




புன்னைமரம்

இது போன்று மயில், மலை, அரண்மனை, அரசன் போன்ற சிறுசிறு படங்களை வாய்மொழியாக மட்டுமல்லாமல் கரும்பலகையிலும் வரையலாம்.



தலைவன் தலைவி என்று சொற்களால் கூறுவதைக் காட்டிலும், தலைவனையும் தலைவியையும் சிறு சிறு பொம்மைகளாக வரைந்து, அவர்களுடைய உரையாடல்களை மேகக்குறியீட்டினுள் எழுதலாம்.




சிந்தனை எளியதாக இருந்தாலும் அது மாணவர்களிடத்தில் கற்பித்தலில் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தும். மேலும், பாடலின் பொருளுக்கேற்றவாறு மனவரைபடம், கருத்துப்படம் ஆகியவையும் வரையலாம். ஆனால் ஒவ்வொரு வகுப்பிலும் மனவரைபடத்தின் வடிவத்தில் வேறுபாடுகள் இருப்பது நல்லது. இதனால், படிப்பதும் எளிமையடையும். கற்பதிலும் ஆர்வம் ஏற்படும். சிந்தனை சிதைவடையாமல் இருக்கும்.

### 2.4.13 விளையாட்டு முறையில் கற்கத் தூண்டுதல்

பொதுவாக, பள்ளியின் தொடக்க நிலை வகுப்புகளில் விளையாட்டு முறைக் கற்பித்தலை அதிக அளவில் பயன்படுத்துவார்கள். பின்பு, வகுப்புகள் கூடும் அளவிற்கு விளையாட்டு முறைக் கற்பித்தலும் குறைந்து

வருகிறது. இருப்பினும், குழந்தைகளுக்கு விளையாட்டு முறைக் கற்பித்தலில் உள்ள ஆர்வம் குறைவதில்லை. எனவே, இந்த விளையாட்டு முறைக் கற்பித்தலை மாணவர்கள் அதிகம் விரும்புகின்றனர். அதனால், விளையாட்டு முறையில் கற்பித்தலை கருத்துடனும் நம்பிக்கையுடனும் திறமையுடன் கையாண்டால் நல்ல பயனை எதிர்பார்க்கலாம். மற்ற கற்பித்தல் முறைகளைக் காட்டிலும், இந்த விளையாட்டு முறைக் கற்பித்தலை நாம் பயன்படுத்தும் போது மாணவர்கள் அதீத விருப்பத்துடன் கற்றலில் ஈடுபடுவர். **"மாணாக்கர்தம் திறமைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப, ஆசிரியர்கள் பல மொழி விளையாட்டுகளை அமைத்து மாணாக்கர் சொற்களஞ்சியத்தையும் மொழித் திறனையும் வளர்த்தல் வேண்டும்."[21]** சங்கப்பாடல்களைக் கற்பிக்கும் போது, மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, சங்கப்பாடல்களில் உள்ள பழஞ்சொற்களுக்குப் பொருள் எழுதச் சொல்லலாம். அதிக சொற்களுக்குப் பொருள் எழுதிய குழுவினரைப் பாராட்டலாம். இதே போன்று, பாடலில் இடம்பெறும் ஒரே ஓசையுடைய சொற்கள், ஒரே எழுத்தில் தொடங்கும் சொற்கள், எதுகைச் சொற்கள், மோனைச் சொற்கள் போன்றவற்றையும் எழுதச் சொல்லலாம். கற்பித்தல் முடித்தபின், பாடலின் சூழ்நிலையை நாடகமாக நடித்துக் காட்டச் சொல்லி, சிறப்பாக நடித்த குழுவினரைப் பாராட்டலாம். பாடலையும் பாடல் சம்பந்தப்பட்ட செய்திகளையும் படித்து வரச் சொல்லி பின், இரு குழுவாகப் பிரித்து வினாடி-வினா போன்ற நிகழ்ச்சியை நடத்தி கேள்விகள் கேட்டு, வெற்றி பெற்ற குழுவினரை அறிவிக்கலாம். இதே போன்று, பாடலை சரியான குரல் ஏற்ற இறக்கத்துடன் படித்துக்காட்டுதல், பாடலுக்கு விளக்கம் கூறுதல், பாடலில் இடம்பெறும் முக்கிய சுவைகள், செய்திகளை எடுத்துக் கூறுதல் போன்ற பல வகைகளில் போட்டிகளை வைத்து அதன் மூலம் மாணவர்களை கற்பித்தலில் மேம்படுத்தலாம்.


### 2.4.14 நாட்டுநடப்புச் செய்திகளை அறிந்து கூறுதல்


ஆசிரியர்கள் நாட்டு நடப்பு மற்றும் அன்றாட செய்திகளை உடனுக்குடன் அறிந்து வைத்திருப்பது அவசியமாகும். அறிந்து வைத்திருப்பது மட்டுமல்லாமல், சங்கப்பாடல்களைக் கற்பிக்கும் போது அந்தப் பாடலுக்கு ஏற்ற செய்திகளைக் கலந்து கற்பிக்க வேண்டும். மேலும், இன்றைய நாட்களில் நடந்த நிகழ்ச்சிகளுக்கு ஏற்றவாறு ஏதேனும்

சங்கப்பாடல்கள் இருப்பின் அதையும் மாணவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இதனால், ஆசிரியர்களின் மீது மாணவர்களுக்கு மிகுந்த நம்பிக்கை ஏற்படுவதுடன், சங்கப் பாடல்கள் படிப்பதிலும் மிகுந்த ஆர்வம் ஏற்படும். சங்கப்பாடல் என்பதால், தமிழ் பாடம் சம்பந்தப்பட்ட செய்திகளை மட்டும் கூறாமல் மாறாக, அதோடு சம்பந்தப்பட்ட அறிவியல், பொது அறிவு, விளையாட்டு போன்ற செய்திகளையும் இடையிடையே கற்பித்தலுக்கு ஏற்ப கூறலாம். இவ்வறிவு தமிழாசிரியரிடம் பொதுவாக ஏற்படக்கூடிய தாழ்வு மனப்பான்மை உணர்ச்சியைப் போக்கும். ஆசிரியர்கள், அவ்வப்போது தொலைக்காட்சிகள் பார்த்தல், செய்திதாள்கள் படித்தல், சிறந்த சொற்பொழிவுகள் கேட்டல், நூல்கள் படித்தல் போன்ற செயல்களின் மூலம் தம் பொது அறிவை வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

### 2.4.15. பள்ளிச் சூழலில் அமைந்துள்ள பொருள்களைப் பயன்படுத்தல்

சங்கப்பாடல்களைக் கற்பிக்கும் போது சூழ்நிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தினால் மாணவர்கள் கற்றலில் ஆர்வம் ஏற்படும். எப்போதும் போல், வகுப்பில் மட்டும் ஆசிரியர் பாடம் நடத்துவதை மாணவர்கள் விரும்புவதில்லை. பொதுவாக, இன்றைய மாணவர்கள் கணினித் திரையில் பாடம் நடத்துவதை விரும்புகின்றனர். எனவே, சங்கப்பாடலுக்கு ஏற்ற படப்பதிவுகளை மாணவர்களுக்குக் கணினித் திரையில் போட்டுக் காட்டலாம். இதனால், கற்றல் மாற்றம் நிகழ்ந்து, மாணவர்கள் கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபடுவர். மேலும், மாணவர்களை மகிழ்ச்சியூட்டும் வகையில் சங்கப் பாடல்களின் சூழ்நிலைக்கு ஏற்ப பள்ளியில் உள்ள இடங்களில் வகுப்பறையை மாற்றி, பாடலைக் கற்பிக்கலாம்.





சங்க இலக்கியப் பாடலில் மரத்தின் அடியில் நின்று தலைவன் தலைவி பேசுவதான சூழல் இருப்பின், அன்றைய வகுப்பறைச் சூழலுக்கு பள்ளிகளில் உள்ள மரத்தடிகளைக் கூட இதற்காகப் பயன்படுத்தலாம். இதனால், பள்ளியின் பால் பற்றுதல் ஏற்படுவதோடு கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபடுவர். சங்கப்பாடல் சம்பந்தப்பட்ட நூல்களைப் பள்ளி நூலகத்தில் இருந்து எடுத்து மாணவர்களைப் படிப்பதற்கு ஊக்குவிக்கலாம். இதற்கு, தமிழ் பாடவேளையையும் பயன்படுத்தலாம். இவ்வாறு, பள்ளிகளிலேயே கிடைக்கும் சூழ்நிலைகள் மற்றும் பொருட்கள் போன்றவற்றைக் கற்பித்தலுக்குப் பயன்படுத்த பழக வேண்டும்.

### 2.4.16. அறிந்ததிலிருந்து அறியாததற்குச் செல்லுதல்

இயல்பாகவே, சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பிக்கும் போது, ஆசிரியர்கள் முதலிலேயே சங்கப்பாடல்களை அறிமுகம் செய்வதைத் தவிர்க்க வேண்டும். சங்கப்பாடல்களைக் கற்பிக்கத் தொடங்கும் முன், பாடலுக்குச் சம்பந்தப்பட்ட செய்திகளைப் பற்றி மாணவர்களிடம் கலந்துரையாட வேண்டும். பின்பு, அந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து படிப்படியாக சங்க இலக்கியப் பாடல் கற்பித்தலுக்கு மாணவர்களை அழைத்து வருதல் வேண்டும். உதாரணமாக, 12ஆம் வகுப்பில் **‘இறவுப்புறத் தன்ன பிணர்படு தடவுமுதற்’** எனத் தொடங்கும் நக்கண்ணையார் பாடிய பாடலை நடத்தும் போது பெண்பால் புலவர்களில் ஒருவரான நக்கண்ணையாரை மாணவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அதனால், பெண்பாற் புலவர்களில் ஒருவரான ஔவையாரைப் பற்றி மாணவர்களிடத்தில் கேட்டு, அதன்பால் மாணவர்களை ஈர்த்து, அதைத் தொடர்ந்து நக்கண்ணையார் பற்றியும் அவருடைய வாழ்க்கை நிகழ்வுகளையும் எடுத்துக் கூறி, அதன்பின் அவர் பாடிய பாடலைக் கற்பிக்கும் போது மாணவர்களிடத்தில் கற்றலில் ஈடுபாட்டை வரவழைக்க முடியும். இவ்வாறு, நன்கு தெரிந்த ஒரு செய்தியை மாணவர்களிடம் பேசும் போது, அவர்களுக்குள் ஊக்கம் ஏற்பட்டு கற்கவிருக்கும் சங்கப் பாடலில் தெளிவடைகின்றனர். அதன்பின்னர், நாம் கற்பித்தலைத் தொடங்குவது நம் கற்பித்தலை எளிமையாக்குகிறது.

### 2.4.17 எளிமையிலிருந்து அருமைக்குச் செல்லுதல்

பெரும்பாலும், சங்க இலக்கியப் பாடல்கள் பல அருமையான செய்திகளைத் தன்னுள் கொண்டிருந்தாலும், அதைப் படித்துணர்ந்து கொள்வதற்காக மாணவர்களைத் தயார்படுத்த வேண்டியது ஆசிரியரின் கடமையாகும். இவ்வகையில் முன் தலைப்பில் கூறியது போல் தெரிந்த செய்தியை மாணவர்களிடத்தில் தொடங்கும் போது, அதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது ஆசிரியர் தொடங்கும் செய்தி மாணவர்களுக்கு எளிமையானதாகவும் விரும்பத்தக்கதாகவும் இருக்க வேண்டும் என்பதாகும். பாடலுக்கு மட்டும் தொடர்பு இருந்தால் போதுமென்று, மாணவர்களின் விருப்பமற்ற செய்தியையோ அல்லது தேவையற்ற செய்தியையோ முன் கற்பித்தலுக்குத் தொடங்குவது கற்றலை மேம்படுத்தாது. சங்கப்பாடல்களில் இடம்பெறும் மன்னர்களைப் பற்றியும் அவர்களின் போர்த்திறமைகளைப் பற்றியும் மாணவர்களுக்கு விளக்கும் போது, சேர சோழ மன்னர்களையும் அவர்களின் திறமைகளையும் கற்பனையால் மாணவர்களிடத்தில் கொண்டுவர வேண்டும் என்று கட்டாயத்தை விடுத்து, மாணவர்களுக்கு விருப்பாமான நன்கு அறிந்திருக்கக் கூடிய சில செய்திகளை மாணவர்களுக்குக் கூறலாம். உதாரணமாக, சமீபத்தில் வெளியாகிய ‘பாகுபலி’ என்ற திரைப்படத்தின் மூலம் மாணவர்கள் அரசர்கள், அவர்களின் திறமைகள், போர்த்திறம், கட்டுப்பாடு, வெற்றி, தோல்வி போன்ற அனைத்துச் செய்திகளையும் அறிய முடியும். அப்போது, மாணவர்களுக்கு அது போன்ற திரைப்படங்களையும் உதாரணமாகக் கூறலாம். எல்லையுடன் கூடிய இந்த உதாரணத்தால் மாணவர்கள் எளிதில் பாடங்களைப் புரிந்துகொள்ளும் வாய்ப்பு கிடைக்கும். இவ்வாறு, மாணவர்கள் விரும்பக்கூடியவாறு படத்துணுக்குகள், விளையாட்டுச் செய்திகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், சமீபத்திய நிகழ்ச்சிகள் போன்ற எளிமையான, பிரபலமான செய்திகளைக் கற்பித்தலுக்குப் பயன்படுத்துவது இன்றியமையாதாக இருக்கும்.

### 2.4.18. தெளிவிலிருந்து சிக்கலுக்குச் செல்லுதல்

சங்கப்பாடல்களில் பல செய்திகள் உள்ளுறையாகவும் மறைமுகமாகவும் விளக்கப்பட்டிருக்கும். இதனை ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் புரியும் வகையில் தெரிவிப்பது உன்னதம். இதற்கு

மாணவர்கள் தெளிந்த மனதுடன், கற்றலுக்கான உற்சாகத்துடன் இருப்பது அவசியம். இவ்வகையில், மேற்கண்ட இரு தலைப்புகளில் கூறியது போல முன் கற்பித்தலுக்குச் செய்திகளைக் கூறும்போது, மாணவர்கள் உடனுக்குடன் பதிலளித்து அடுத்த செய்திக்குச் செல்லும் வகையில் நமது வினாக்களோ அல்லது கலந்துரையாடலோ அமைய வேண்டும். அப்போதுதான், மாணவர்கள் ஆசிரியர் குறிப்பிட்ட செய்தியைத் தொடர்ந்து கற்பித்தலுக்கும் நுழைய முடியும். இல்லையெனில், சற்று அதிக வினாக்கள் எழும்பும் அளவிற்கோ, சிந்திக்கும் அளவிற்கோ முன் கற்பித்தல் செய்திகள் அமைந்தால், மாணவர்கள் முன் கற்பித்தல் செய்திகளைப்பற்றியே அதிகம் சிந்திக்கவும் பேசவும் ஆரம்பித்து விடுவர். பின்பு, அதனைத் தொடர்ந்து அவர்களை சங்கப்பாடல் கற்பித்தலுக்குக் கொண்டு வருவது சற்று கடினமாக மாறிவிடும். உதாரணமாக, மேற்குறிப்பிட்டபடி திரைப்படத்தைப் பற்றி மாணவர்களிடம் கேட்பதாக இருந்தால் தேவையான சிறு செய்திகளை மட்டும் கேட்டு, உடனுக்குடன் பாடம் தொடர்பான வினாக்களைக் கேட்க வேண்டும். சமீபத்தில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றி மாணவர்களிடத்தில் கேட்பதாக இருந்தால், உடனுக்குடன் பாடம் தொடர்பான செய்திகளையும் கூற வேண்டும். மாணவர்களுக்கு இதனிடையில் சிந்திப்பதற்கோ, பேசுவதற்கோ அதிக நேரம் ஒதுக்குவதானால் கற்பித்தலில் சிக்கல் ஏற்படும். இதனால், நாம் முன் கற்பித்தல் செய்தியைத் தேர்ந்தெடுக்கும் போது, அது நாம் கற்பிக்கவிருக்கும் சங்கப்பாடலுக்கும் உகந்ததாகவும் அதே நேரத்தில் மாணவர்களுக்குத் தெரிந்த எளிய செய்தியாகவும் இருப்பதும் இன்றியமையாததாகும்.

### 2.4.19. தொடர்புடைய நூல்களைப் படிக்கச் செய்தல்

சங்கப்பாடல்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருப்பதால், பாடநூலில் இடம்பெறும் சங்கப்பாடலைக் கற்பிக்க அதன் முன் பின் பாடல்களை எடுத்தியம்புவது அவசியமாகிறது. சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் போது, சங்க இலக்கிய நூல்களைப் பற்றி முன்னதாக எடுத்துரைத்து அது தொடர்பான செய்திகளைச் சேகரிக்கச் சொல்லலாம். எட்டுத்தொகை நூல்களைப் பற்றிக் கூறுவதானால், எட்டுத்தொகை நூல்கள் என்னென்ன? என்ற ஒரு கேள்வியை மாணவர்கள் முன் வைத்து, அதற்கான தேடுதலில் அவர்களை ஈடுபடுத்துதல் வேண்டும். பதிணென்கீழ்க்கணக்கு நூல்கள் என்னென்ன? என்ற தேடுதலை ஏற்படுத்த வேண்டும். ஆசிரியர்

நேரடியாக நூல்களின் பெயர்களை மாணவர்களுக்கு அறிவிப்பதைக் காட்டிலும், இதுபோன்ற தேடுதலுக்குப் பிறகு, மாணவர்களின் சந்தேகங்களைத் தீர்க்கும் வகையில் ஆசிரியரின் கருத்துகள் அமைய வேண்டும். இதனால், மாணவர்கள் இது தொடர்பான நூல்களைப் படிக்கும் வாய்ப்பு ஏற்படும். இந்நிலையில் ஆசிரியர்கள் சங்க இலக்கியப் பாடல்களுக்கும் அது தொடர்பான பாடல்களுக்கும் தேவையான குறிப்புகளைக் கொடுத்து, அதை மாணவர்களே கண்டறியும் வகையில் பல நூல்களைப் படிப்பதற்கு ஊக்குவிக்க வேண்டும். அதாவது, கற்கவிருக்கும் சங்கப்பாடலின் சூழ்நிலை, மூலநூல், ஆசிரியர், பாடல் இடம்பெற்ற நூல் போன்ற செய்திகளை மாணவர்களிடம் கூறி, பாடலின் முன் பின் பாடல்களைக் கண்டறியச் செய்யலாம். அதன் சூழ்நிலையை விளக்கவும் சொல்லலாம். இதற்கு, மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயல்பட வைக்கலாம். பள்ளி நூலகத்தையும் பயன்படுத்தலாம். இவ்வாறு செய்வதன் மூலம் மாணவர்கள் சங்கப்பாடல் சம்பந்தப்பட்ட நூல்களை அதிகம் படிக்கும் வாய்ப்பு ஏற்படும். இதனால், மேலும் நூல்களைத் தேடித் தேர்ந்தெடுத்துப் படிக்கும் பழக்கம் ஏற்படும். படித்தல் திறன் மேம்படும்.

இவ்வாறு பல உத்திகளைப் பயன்படுத்திச் சங்க இலக்கியப் பாடல்களைப் படிப்பதில் மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவது இக்கால ஆசிரியர்களின் முதன்மையான கடமையாகும். ஆனால், இவை மட்டும் முடிவாகாது. ஆசிரியர்கள் அவரவர் திறமை, நேரம், பொருள் பயன்பாடு, பள்ளியின் ஒத்துழைப்பு ஆகியவற்றிற்கேற்ப, இன்னும் பல உத்திகளைப் பெருக்கி சங்க இலக்கியக் கற்றலைச் செழிக்கச் செய்வது ஆசிரியரின் கடமையாகும்.

## 2.5 கற்றல் கோட்பாடுகளின் அடிப்படையில் சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் உத்திகள்

கற்றல், கற்பித்தல் சார்ந்து பலவகைக் கோட்பாடுகள் கல்வியலாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய கோட்பாடுகளைக் கருத்தில் கொண்டு சங்க இலக்கியங்களைக் கற்பிப்பது மாணவர்களுக்குப் பயனுள்ளதாக அமையும். அவ்வகையில் ஒரு சில கற்றல் கோட்பாடுகளைச் சங்க இலக்கியக் கற்பித்தலுக்குப் பயன்படுத்த முடியும்.

**முழுமைக் காட்சி (Gestalt) என்ற விதிப்படி 'கெஸ்டால்ட்' என்னும் ஜெர்மன்சொல் 'முழுமையான அமைப்பு' அல்லது 'முழுமைக் கோலம்' என்று பொருள்படும். முழுமைக் காட்சிக் கோட்பாட்டின்படி, 'முழுமை' என்பது பகுதிகளின் தொகுப்பை விட அதிகமானது. பகுதிகளைத் தனித்தனியே ஆராயும் போது பொருளற்றுத் தோன்றலாம். ஆனால், எல்லாப் பகுதிகளையும் ஒரு சேரப் பார்க்கும் போது பொருளுடையதாகத் தோன்றும்."** [26]

சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பிக்கும் போது, அவற்றில் காணப்படும் திணை, துறை, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் போன்ற செய்திகளைத் தனித்தனியே கற்பிக்கும் போது, சிரமமாகவோ அல்லது கற்றல் சுமையாகவோ தோன்றலாம். ஆனால், அவை அனைத்தையும் இணைத்து சங்க இலக்கியப்பாடல் ஒன்றில் காணும் போது அதன் உயிரோட்டம் வெளிப்படும். இதனை, மாணவர்கள் அறியும் வண்ணம் எடுத்துரைக்க வேண்டும். ஆசிரியர்கள் பாடலின் திணை, துறை போன்ற கூறுகளைத் தனித்தனியே கற்பிக்காமல் பாடலோடு இணைந்து அதன் முக்கியத்துவத்தை விளக்குதல் வேண்டும். அவ்வாறு விளக்கும் போது சங்க இலக்கியப் பாடலின் முழுமையை மாணவர்கள் அறிய முடியும். உதாரணமாக, பாடநூலில் 12ஆம் வகுப்பில் இடம்பெறும் அகப்பாடலான

**பசைபடுபச்சை நெய்தோய்த் தன்ன**
**சேயுயர் சினைய மாச்சிறைப் பறவை**
**பகலுறை முதுமரம் புலம்பப் போகி**
**முகைவாய் திறந்த நகைவாய் முல்லை**
**கடிமகள் கதுப்பின் நாறிக் கொடிமிசை**
**வண்டினந் தவிர்க்குந்த தண்பதக் காலை**
**வரினும் வாரா ராயினும் ஆண்டவர்க்கு**
**இனிதுகொல் வாழி தோழி யெனத்தன்**
**பல்லிதழ் மழைக்கண் நல்லகம் சிவப்ப**
**அருந்துய ருடைள் அவளென விரும்பிப்**
**பாணன் வந்தனன் தூதே: நீயும்**
**புல்லார் புரவி வல்விரைந்து பூட்டி**
**நெடுந்தேர் ஊர்மதி வலவ**
**முடிந்தன்று அம்மநாம் முன்னிய வினையே. (அக.246)**

என்ற பாடலை விளக்கும் போது, தலைவி தலைவனுக்காக காத்திருப்பதால் இது இருத்தல் இருத்தல் நிமித்தமான பாடல். அதனால் இது முல்லைத்திணையில் வரும் உரிப்பொருளைக் கொண்டுள்ளது. முல்லை நிலம் என்பதால் காடும் காடு சார்ந்த இடத்தை முதற்பொருளாகவும், அதைத் தொடர்ந்து வரும் செய்திகளைக் கருப்பொருளாகவும் கொண்டு இப்பாடல் அமைகிறது. மாலைக்காலத்தில் தலைவன் வருகையை எதிர்பார்த்துத் தலைவி வீட்டில் தனித்துத் துயருடன் ஆற்றியிருக்கிறாள் என்ற செய்திகளைக் கூறிய பின் பாடலின் விளக்கத்தைக் கற்பிக்க வேண்டும். இவ்வாறு பாடலின் கருத்தை விளக்குவதற்கு முன்பே பாடலின் பன்முகக் கூறுகளையும் விளக்கி அதன் மூலம் பாடலை விளக்கினால், அப்பாடலின் முழுமையை மாணவர்களால் உணர முடியும். இவ்வாறு சங்கப்பாடல்களில் உள்ள பகுதிகளைத் தனித்தனியாகக் கற்பிக்காமல், அனைத்தும் சங்கப்பாடலின் ஒரு தொகுதியே என்பதை மாணவர்கள் அறியும் வண்ணம் விளக்குவதற்கு இந்தக் கோட்பாடு சிறந்ததாக அமைகிறது.

**உட்காட்சி வழிக்கற்றல் (Insight Learning) என்ற விதியானது அறிதிறனுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. பெறப்பட்ட விவரங்களிலிருந்து இதுவரை அறியப்படாத புதிய தொடர்புகளைத் திடீரென உணர்தலே ‘உட்காட்சி’ என்னும் உளச் செயலாகும். உட்காட்சி வழிக்கற்றலில் நமது புலன்காட்சிப் புலத்தை முறைப்படுத்திச் சீரமைப்பதன் மூலம் இதுவரை நமக்குத் தெரிந்திராத புதிய தொடர்புகளையும், அனுபவங்களையும் திடீரென உணர்ந்து, பிரச்சனைக்குரிய தீர்வைப் பெறுதல் நடைபெறுகிறது.”** [27]

இக்கோட்பாட்டின்படி, இலக்கியங்களை ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது, மாணவர்களிடத்தில் எழும் திடீர் சந்தேகங்களுக்கு ஆசிரியர் விடை கூறுவதன் மூலம் ஆசிரியரின் கற்பித்தலில் சுயநம்பிக்கை கிடைக்கிறது. மாணவனின் வினாவிற்கு, விடை தெரியாத பட்சத்தில் அதற்கான விடையைக் கண்டறிந்து மாணவனுக்கு விளக்குவதன் மூலம் ஆசியரின் கற்பித்தலில் மாணவனுக்கு நம்பிக்கை பிறக்கிறது. அந்த ஆசிரியரும் மாணவனின் வினாவால் ஒரு புதிய செய்தியை அறிந்து கொள்ளும் சூழ்நிலை ஏற்படும்.

சங்க இலக்கியப் பாடல்களை மாணவர்களுக்கு விளக்கும் போது, புறநானூறு செய்யுளாக இருப்பின் அரசன், போர்த்திறம், புலவர்கள், புகழ், தொடர்பான பலவிதமான சந்தேகங்கள் மாணவர்களிடையே எழும். அதே போல் அகநானூறு செய்யுளாக இருப்பின் தலைவன், தலைவி, தோழி, காதல், நட்பு போன்றவை தொடர்பான பலவிதமான சந்தேகங்கள் மாணவர்களிடையே எழும். இவ்வகையான சந்தேகக் கேள்விகள் ஒரே மாதிரியாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. மேலும், மாணவர்களுக்கு ஆசிரியர்கள் பாடம் நடத்துவதைப் பொறுத்து, வினாக்களில் வேறுபாடுகள் ஏற்படுகின்றன. அவ்வாறு மாணவர்கள் கேட்கும் வினாக்களுக்கு உடனடியான பதிலை ஆசிரியரால் மட்டுமே வழங்க முடியும். இவ்வாறு ஆசிரியர் விளக்கும் இந்த விளக்கங்களால் ஆசிரியரின் கற்பித்தலில் மாணவர்களுக்குத் திருப்தி ஏற்படும். மேலும், மாணவர்கள் கேட்கும் வினாக்களை உடனுக்குடன் விளக்குவதால் ஆசிரியர் கற்பிக்க வேண்டிய பாடலின் பொருளை விரைவாக மாணவர்கள் அறிந்து கொள்ள வாய்ப்பும் உண்டு. மேலும், மாணவர்கள் தன்னுடைய கேள்விகளின் மூலம், அப்பாடல் தொடர்பான பல புதிய செய்திகளை அறிந்து கொள்ளும் முனைவர். அவற்றை ஆசிரியர்கள் சரியாக விளக்கினால் அதனால் சங்க இலக்கியங்கள் பற்றிய பல செய்திகளை மாணவர்கள் அறிந்து கொள்ள முடியும். ஆனால், மாணவர்களின் இந்த வினாக்களுக்கு ஆசிரியரால் பதில் அளிக்க முடியவில்லை என்றாலோ, ஆசிரியர் அளிக்கும் விடையில் மாணவர்களுக்கு திருப்தி இல்லை என்றாலோ அதனால் கற்பித்தல் பாதிக்கக் கூடும். எனவே, ஆசிரியர்கள் சங்க இலக்கியங்கள் பற்றி எல்லா செய்திகளையும் அறிந்திருக்க வேண்டியது இன்றியமையாததாகும். பாடநூலில் உள்ள பாடலை மட்டும் கற்பிக்கும் நோக்கில் ஆசிரியர்கள் தயாராகாமல், அதைத் தொடர்ந்து மாணவர்கள் கேட்கும் அனைத்து சங்க இலக்கியம் தொடர்பான செய்திகளையும் விளக்கும் வகையில் ஆசிரியர்கள் கற்பித்தலுக்குத் தயாராக வேண்டும். எனவே, சங்க இலக்கியக் கற்பித்தலில் இந்தக் கோட்பாட்டினை மனதில் கொண்டு கற்பித்தல் அவசியமாகிறது.

**தார்ண்டைக்கின் முயன்று தவறிக்கற்றல் (Thorndike’s Trial and Error Learning) என்ற விதிப்படி ‘‘எந்த ஒரு செயலினையும் கற்றுக் கொள்ளும் போது பல தடவை முயன்று பல தவறுகளைப் புரிந்து, பின்னர் பயிற்சியின் காரணமாகத் தவறின்றி சரியாகக் கற்றுக் கொள்வதே முயன்று**

**தவறிக் கற்றல் ஆகும். 'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்' என்பதே தார்ண்டைக்கின் நம்பிக்கை."**[22] இந்த வகையில் தார்ண்டைக் மூன்று கற்றல் விதிகளை முன்மொழிந்தார். அவையாவன. ஆயத்த விதி, பயிற்சி விதி மற்றும் விளைவு விதி.

**ஆயத்த விதியின் படி,** ஆசிரியர் பாடப்பொருளைக் கற்பிக்க முற்படுவதற்கு முன் மாணவர்களை ஆயத்தப்படுத்த வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டுகிறது. முன் வகுப்புகளில் கற்பிக்கப்பட்ட தொடர்புடைய பாடங்களை நினைவு கூர்வதன் மூலமும் புதிய பாடப்பொருளைக் கற்பதற்கான ஊக்கத்தை ஆசிரியர் மாணவர்களிடம் தூண்ட முடியும். சிறப்புப் பயிற்சிகளுக்காக மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது, அவர்களின் ஆயத்த நிலையை அறிய நாட்டச் சோதனைகள், ஆர்வப் பட்டியல் ஆகியவைகளைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை இக்கற்றல் விதி நமக்கு எடுத்துரைக்கின்றது.

**பயிற்சி விதியின் படி,** மாணவர்களுக்கு எதைக் கற்பித்த பின்பும் மாணவர்களுக்கு அது தொடர்பான பயிற்சியை போதுமான அளவு கொடுக்க வேண்டும். அதாவது கற்றவற்றை அடிக்கடி நினைவு கூர்தல் வேண்டும். தொடர்ந்து பயிற்சியளிப்பதோடு கூட, பயிற்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் தேர்ச்சி நிலை பற்றிய பின்னூட்டம் மாணவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். தீய பழக்கங்களை நடைபெற விடாமல் செய்வதன் மூலம், அவை, சிறுக சிறுக வலுவிழந்து நாளடைவில் மறைந்து விடும்.

**விளைவு விதியின் படி,** பரிசும் பாராட்டும் கற்றலை மேம்படுத்துவதால், வகுப்பறைக் கற்பித்தலில் இவைகளை ஆசிரியர் பொருத்தமாகப் பயன்படுத்த வேண்டும். கூடியவரை தண்டனையைத் தவிர்த்தல் நல்லது. அதாவது, வெற்றி, மென்மேலும் வெற்றிக்கு இட்டுச் செல்வதால் ஆசிரியர் வீட்டு ஒப்படைப்புகள் அளிக்கும்போது சுலபமானவற்றிலிருந்து கடினமானவைகளை நோக்கி அமையும் வண்ணம் வரிசைப்படுத்தி அளிக்க வேண்டும். அப்போதுதான், ஆரம்ப வேலைகளில் அனைவரும் சுலபமாக வெற்றி பெற்று மிகுந்த தன்னம்பிக்கையுடன் முன்னேறிச் செல்வர். ஆரம்பத்திலேயே தோல்வியடைய நேர்ந்தால் மாணவர்கள் தொடர்ந்து முயற்சி செய்ய மாட்டார்கள்.

**அதே போல் பாவ்லோவின் ஆக்க நிலையிறுத்தம் (Bhawlaw's Classical Conditioning) விதிப்படி 'ஆக்கநிலையிறுத்தம் தொடர்பாக ஐந்து விதிகளை பாவ்லோவ் வெளியிட்டுள்ளார். அவை உருவாதல் விதி, ஆக்கநிலையிறுத்தம் அழிந்துபோதல், பொதுமைப்படுத்துதல், வேறுபடுத்தி அறிதல், இரண்டாம் ஆக்கநிலையிறுத்தம் ஆகும்.'** [23]

**உருவாதல் விதிப்படி,** கற்றலுக்கு முன் கற்றலுக்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அது, இயற்கையாக அமையாவிடினும், செயற்கையான முறையிலாவது கற்றல் சூழ்நிலையை உருவாக்கினால் மட்டுமே கற்றலுக்கான மனப்பான்மை மாணவர்களிடத்தில் ஏற்படும்.

சங்க இலக்கியப் பாடல்களுக்கான கற்றல் சூழ்நிலையை உருவாக்கிய பின்னரே கற்பித்தலைத் தொடங்குதல் வேண்டும். சங்க இலக்கியங்களின் அக்காலச் சூழ்நிலையை இன்றைய காலக்கட்டத்தில் உருவாக்குதல் என்பது சற்று சிரமமான செயலாக இருந்தாலும், மாணவர்களிடத்தில் கேட்கப்படும் கேள்விகள், வகுப்பறைச் செயல்பாடு, கற்பிக்கும் இடம் ஆகியவற்றைப் பொருத்து கற்றல் சூழ்நிலையை உருவாக்கலாம். உதாரணமாக,

**கழியக் காதலர் ஆயினும், சான்றோர்**
**பழியொடு வரூஉம் இன்பம் வெ.்.கார்; (அக.112)**

என்ற பாடலைக் கற்பிப்பதாகக் கொண்டால், மாணவர்களிடையே திருமணம் பற்றியும் அதன் செயல்பாடுகள் பற்றியும் கேட்டறியலாம். தமிழரின் திருமண முறை பற்றிய செய்திகளைக் கூறிப் பின்னர் இப்பாடலின் விளக்கத்தைக் கூறலாம். இவ்வாறு கற்றலுக்கான சூழலை ஏற்படுத்த முடியும்.

**ஆக்கநிலையிறுத்தம் விதிப்படி,** கற்றல் சூழ்நிலையை முன்னே தீர்மானித்து மாணவர்களிடத்தில் வெற்றிகரமாகக் கொணர்ந்த பின்னர், அதையொட்டி கற்பித்தலானது வலுவானதாக அமையுமாறு கற்பித்தல் வேண்டும். இல்லையெனில், எவ்வளவு சிறந்த கற்றல் சூழ்நிலையை உருவாக்கினாலும் அதற்கான பயனில்லாமல் போய்விடும்.

இவ்வகையில் சங்கப்பாடலைக் கற்பிப்பதற்கான சூழ்நிலையை எவ்வாறு உருவாக்குதல் வேண்டும் ஆசிரியர் முன்கூட்டியே திட்டமிட்டுச்

செயல்படல் வேண்டும். இவ்வாறு ஒரு கற்றல் சூழ்நிலையை உருவாக்கும் போது, மாணவர்களிடத்தில் எப்படிப்பட்ட வினாக்கள் எழும்பும். அவ்வாறான வினாக்களுக்கு எவ்வாறு பதில் அளித்தல் வேண்டும் என்ற திட்டமும் ஆசிரியரால் செயல்படுத்தப்பட வேண்டும். உதாரணமாக, மேற்குறிப்பிட்ட பாடலில் திருமணத்தைப் பற்றி மாணவர்களிடத்தில் கேட்கும் போது, அவர்களுடைய பதில்களையும் அடுத்து வரும் வினாக்களையும் தான் கற்பிக்கவிருக்கும் சங்க இலக்கியப் பாடலுக்குத் தொடர்பானதாக மாற்றுவது ஆசிரியரின் திறமையாகும்.

**பொதுமைப்படுத்துதல் விதிப்படி,** கொடுக்கப்பட்ட கற்றல் சூழ்நிலையையும் பாடப்பொருளையும் தொடர்புபடுத்துதல் வேண்டும். அப்போது, மாணவர்கள் பாடப்பொருளோடு இரண்டறக் கலந்து கற்றலானது சிறப்படையும். இவ்வகையில், ஆசிரியர் கற்பிக்கவிருக்கும் சங்க இலக்கியப் பாடலையும் அதற்காக ஆசிரியர் உருவாக்கிய கற்றல் சூழ்நிலையையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்த வேண்டும். மாணவர்களிடம் கேட்கப்படும் வினாக்களாலும் ஆசிரியர்கள் அளிக்கும் பதில்களாலும் கற்பித்தலானது பாடப்பொருளை விட்டு விலகும் சூழ்நிலை உண்டு. எனவே, ஆசிரியர் தன்னுடைய பாடப்பொருளுக்குக் கற்றல் சூழ்நிலையையும் தொடர்புபடுத்துமாறு அடுத்தடுத்து வினாக்கள் கேட்க வேண்டும். அதனால், மாணவர்கள் பாடப்பொருளுடன் இரண்டறக் கலந்து கற்கும் வாய்ப்பு ஏற்படும்.

இதையே, **“ஜட் 1908-இல்தான் நடத்திய சோதனைகளின் அடிப்படையில் இக்கோட்பாட்டை முன் வைத்தார். இக்கோட்பாட்டின்படி, பயிற்சி மாற்றம் நிகழ குறிப்பிட்ட அனுபவங்களிலிருந்தோ, கற்கும் பாடங்களிலிருந்தோ, அவற்றில் பதிந்துள்ள பொது விதிகளைக் கண்டறிதல் அவசியம்” [28] என்று பொதுமைப்படுத்தல் (Theory of Generalisation) விதியில் விளக்குகிறார்.**

இதன்படி, பள்ளிப் படிப்பானது வாழ்க்கைக்குப் பயன்படும் வகையில் இருக்க வேண்டும். அப்படியானால், மாணவர்களுக்குப் பல நல்ல செய்திகளைக் கூறுவதன் மூலம் நன்மக்களாய் உருவாக்க முடியும். இது போன்ற, செய்திகளை மொழிப்பாடத்தின் மூலமாக மட்டுமே கொடுக்க முடியும். அதுவும், சங்கப்பாடல்களில் உள்ள பாடல்கள் மூலம், பழந்தமிழர்களின் வாழ்க்கை முறையினை மாணவர்கள் உணர்ந்தாலே

போதும். வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துச் செய்திகளும் கிடைத்துவிடும். உதாரணமாக,

**ஆடுஆமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்**
**கோடை அவ்வளி குழலிசை ஆகப்**
**பாடுஇன் அரவிப் பனிநீர் இன்இசைத்**
**தோடுஅமை முழவின் துதைகரல் ஆகக்**
**கணக்கலை இகுக்கும் கடுங்குரற் தூம்பொடு,**
**மலைப்பூஞ் சாரல் வண்டுயாழ் ஆக,**
**இன்பல் இமிழ்இசை கேட்டுக் கலிசிறந்து,**
**மந்தி நல்அவை மருள்வன நோக்கக்**
**கழைவளர் அடுக்கத்து, இயலிஆ டுமயில்**
**நனவுப்புகு விறலியின் தோன்றும் நாடன் (அக.82)**

என்ற பாடலை விளக்கும் போது, மாணவர்களிடத்தில் இயற்கைக் காட்சிகள் தொடர்பான கேள்விகளைக் கேட்டு அதன் மூலம் வரும் விடைகளை இப்பாடலோடு தொடர்புபடுத்தி விளக்கும் போது கற்பித்தல் இயல்பாகவும் சுலபமாகவும் நடைபெறும். மேலும், இது போன்ற பாடல்களைக் கற்பிக்கும் போது இவ்விதிகள் மிகவும் ஏற்புடையதாக உள்ளது.

**வேறுபடுத்தி அறிதல் விதிப்படி**, எல்லாவிதமான பாடப்பொருளுக்கும் ஒரேமாதிரியான கற்றல் சூழலை, ஊக்குவிப்பைப் பயன்படுத்தாமல், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு பாடப்பொருளுக்கும் வெவ்வேறு விதமான கற்றல் சூழ்நிலை நிலை அல்லது ஊக்குவிப்பை வழங்க வேண்டும்.

பாடநூலில் பெரும்பாலும், புறநானூற்றுப் பாடல்கள் இடம்பெறுகின்றன. அகப்பாடலாக இருந்தாலும் பெரும்பாலும் புறம் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. இச்சூழ்நிலையில் ஆசிரியர்கள் அனைத்து பாடல்களிலும் அரசனின் பெருமைகளையும், மேன்மைகளையும் விளக்கும் சூழ்நிலை உள்ளது. அதனால், எல்லா வகுப்பிலும் ஆசிரியர் ஒரே மாதிரியான கற்றல் சூழ்நிலையையோ, ஊக்குவிப்பையோ, கேள்விகளையோ பயன்படுத்துதல் கூடாது. இது மாணவர்களிடத்தில் சலிப்பை ஏற்படுத்தும். மேலும், வெவ்வேறு வகுப்பாக இருந்தாலும் மாணவர்கள் ஒருவருக்கொருவர் பேசும் பொழுது வகுப்பறைச் சூழலைப் பற்றி கலந்துரையாடும் வாய்ப்புகள் அதிகம். அவ்வாறு கலந்துரையாடும் போது அவர்கள் அறிந்த அதே ஊக்குவிப்பு செயலை

ஆசிரியர் பின்பற்றும் போது, அதனால் பாடத்தின் மீதும் ஆசிரியர் மீதும் மாணவர்களுக்கு நம்பிக்கையின்மை ஏற்படும் வாய்ப்பு உண்டு. எனவே, அரசன் பற்றிய செய்திகளை மாணவர்களுக்கு எடுத்தியம்பும் போது, புறநானூற்றுப் பாடலைப் பொருள், பாடிய புலவர், பாடப்பட்ட அரசர், கொடுக்கப்பட்ட விழுமியங்கள் ஆகியவற்றைப் பொருத்து கற்பித்தல் செயல்பாடுகளில் வேறுபாடுகளைக் காட்டலாம். இதனால், மாணவர்களுக்குப் புதிய சங்க இலக்கியப் பாடலைப் படிக்கும் ஆர்வம் ஏற்படும்.

**இரண்டாம் ஆக்க நிலையிறுத்தம் விதிப்படி**, பாடப்பொருளுக்காக நாம் உருவாக்கிய கற்றல் சூழலால் மாணவன் பாடப்பொருளின் விளக்கங்களை அறிவதோடு, பாடப்பொருட்களையும் மீறி அது சம்பந்தப்பட்ட செய்திகளை அறிந்து கொள்வதற்கு ஆர்வம் கொள்ளுமாறு நமது கற்பித்தல் அமைய வேண்டும்.

இவ்விதியானது நமது சங்க இலக்கியக் கற்பித்தலுக்கு இன்றியமையாததாகும். பாடநூலில் இருக்கும் சங்கப்பாடல்களைக் கற்பித்தால் போதும் என்ற சூழ்நிலை உள்ள இன்றைய நிலையில் இந்த விதியை விவாதிப்பது இன்றியமையாததாகும். பாடநூலில் உள்ள சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பிப்பதன் மூலமும் அதன் கருத்துகளை ஆசிரியர்கள் எடுத்தியம்பும் முறையிலும் சங்கப்பாடலின் தனித்தன்மையை மாணவர்களுக்குக் கட்டாயம் விளக்குதல் வேண்டும். பாடநூலில் உள்ள சங்க இலக்கியப் பாடல்களை விளக்கும் போது, அது தொடர்பான பாடல்களையும் அவை உள்ள நூல்களையும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் அறிமுகப்படுத்துதல் வேண்டும். மேலும், பாடநூலைத் தவிர பிற சங்க இலக்கியம் தொடர்பான நூல்களைப் படிப்பதில் மாணவர்களை ஆர்வமூட்டுதல் வேண்டும். இதன் மூலம் மாணவர்களுக்கு அதைத் தொடர்ந்து மேலும் பல சங்க இலக்கியப் பாடல்களைப் படிப்பதில் ஆர்வம் ஏற்பட வேண்டும். எனவே, ஆசிரியர்கள் இவ்விதியை மனதில் கொண்டு சங்க இலக்கியங்களைக் கற்பிக்க வேண்டும்.

**ஸ்கின்னரின் செயல்படு ஆக்கநிலையிறுத்தம் (Skinner’s operant conditioning) ‘‘ஓர் உயிரி பல்வேறு துலங்கல்களை வெளியிடும்போது, அவைகளில் நாம் விரும்பும் ஒரு குறிப்பிட்ட துலங்கல் தோன்றும் போது உடனடியாகப் பாராட்டுதல் அல்லது பரிசளித்தல் போன்ற**

**வலுவூட்டியை அளித்தால், அந்தக் குறிப்பிட்ட துலங்கல் திரும்பத் திரும்ப தோன்றி அதுவே பழக்கமாக மாறிவிடும். எனவே, நாம் விரும்பும் துலங்கலை வலுவூட்டி நடத்தையாக ஆக்குதல் என்பதே ஸ்க்கின்னரின் செயல்படு ஆக்கநிலையிறுத்தத்தின் அடிப்படை சாரமாகும்"** [24]

இக்கோட்பாட்டின் படி, இலக்கியங்களைக் கற்பிக்க நாம் புதுமையான கற்றல் சூழ்நிலையை உருவாக்கிக் கற்பிக்கும் போதும் மாணவர்களிடத்தில் ஏற்படும் சிந்திக்கும் திறனைப் பாராட்டி பரிசுகள் வழங்கும் போதும் இது போன்ற செயல்கள் தொடர்ந்து நடந்தேறி வரும்போது ஒரு நேரத்தில் மாணவர்களிடம் இலக்கியம் பற்றிய இந்தச் சிந்தனை பழக்கமாகவே மாறி தொடர்ந்து இலக்கியங்களைப் படிக்கும் நிலை ஏற்படும் வாய்ப்புண்டு. இலக்கியம் கற்பித்தலில் கொடுக்கப்படும் பரிசுகளானது இலக்கியங்களின் மேலும் கற்றலுக்காக வழங்கப்பட வேண்டும். புதிய இலக்கியப் பாடல்களை மாணவர்கள் கண்டறிதல், சங்க இலக்கியங்கள் பற்றிய செய்திகளை மற்ற நூல்களிலிருந்து சேகரித்தல், பாடநூலில் உள்ள சங்க இலக்கியப் பாடலை மனனமாக சொல்லுதல், குறிப்பிட்ட புலவர்களின் வேறு சில பாடல்களைக் கண்டறிதல், பாடலின் கருத்துகளைத் தொகுத்தல், பாடல் மூலம் பெறப்படும் செய்தியைத் தொகுத்தல், பாடல் மூலம் மாணவர்கள் பெற்ற விழுமியங்களைத் தொகுத்தல் போன்ற செயல்பாடுகளுக்கு மாணவர்களுக்கு வலுவூட்டிகளை வழங்கலாம். இதனால், சங்க இலக்கியப் பாடலை மேலும் கற்கும் ஆர்வம் மாணவர்களிடத்தில் ஏற்படும். இவ்வாறு, தொடர்ந்து வாழ்த்துகளையும் வலுவூட்டிகளையும் சங்க இலக்கியம் கற்பித்தலுக்கு மாணவர்களுக்கு வழங்கும் போது சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பதில் ஆர்வம் ஏற்பட்டு பாடநூலைத் தவிர்த்து மேலும் செய்திகளை அறிந்து கொள்ள ஆர்வம் காட்டுவர். இவ்வாறு வலுவூட்டிகளைப் பயன்படுத்தும் இந்த விதியை சங்க இலக்கியக் கற்பித்தலுக்குப் பயன்படுத்த முடியும்.

**"கற்பித்தலைத் தனியாள் வேற்றுமைகளுக்கு ஏற்ப மாற்றியமைத்தல் திட்டமிட்டுக் கற்றல் அல்லது நிரல்வழிக் கற்றல் யுக்தி, கற்பித்தல் எந்திரங்கள், கணினி கொண்டு கற்பித்தல் ஆகியவைகளின் அடிப்படை ஸ்கின்னரின் செயல்படு ஆக்கநிறுத்தக் கோட்பாடாகும்."** [25]

இவ்விதிப்படி, தொடர்ந்து இலக்கியங்களைக் கற்பிக்க ஆசிரியர் பயன்படுத்தும் புதுமையான முறைகள், மாணவர்களிடம் தொடர்ந்து சென்று

சேரும் போது, ஆசிரியர் மற்றும் மாணவர்கள் அதாவது கற்றல் மற்றும் கற்பித்தல் என்ற இரு நிலைகளிலும் இந்தப் பயிற்சிகள் ஒரு நிலையான பழக்கமாக மாறி, இலக்கியங்களைக் கற்பிக்கும் ஆசிரியரின் திறமை மேம்படுவதோடு இலக்கியங்களைப் படிக்கும் மாணவர்களின் கற்றல் திறனும் மேம்படும்.

சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் போது ஆசிரியர்கள் துணைக்கருவிகளைப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு, துணைக்கருவிகளின் உதவியுடன் கற்பிப்பதையே இவ்விதி உணர்த்துகிறது. சங்கப்பாடல்களுக்கு ஏற்ற வகையில் வரைபடங்கள் வரைந்து எடுத்துச் செல்லலாம். அந்த வரைபடத்தில் பாடலின் புலவர், பாடப்பெற்ற மன்னன், பாடல், பாடலின் கருத்து, பாடலில் உள்ள சொற்களின் பொருள் போன்றவை இடம்பெறலாம். மேலும், திட்டமிட்டுக் கற்றல் என்ற புதிய உத்தியைச் சங்க இலக்கியக் கற்பித்தலுக்குப் பயன்படுத்தலாம். சங்க இலக்கியப் பாடலைக் கற்பித்த பின்னர், அதுக் குறித்த குறிப்பிட்ட வினாக்களை அட்டைகளாகவோ அல்லது சிறு தாள்களாகவோ தயார் செய்து கொள்ள வேண்டும். பின்பு, அதை மாணவர்களிடத்தில் கொடுத்து விடைகளை அறிந்து கொள்ளச் செய்தல் வேண்டும். இதனால், படித்த செய்திகளை மாணவர்கள் மீண்டும் அறிந்து கொள்ள முடியும். ஏதேனும், சந்தேகங்கள் இருந்தாலும் இந்த பயிற்சியின் போது தெளிவு பெறுவர். இவ்வாறு திட்டமிட்டுக் கற்றலானது சங்க இலக்கிய கற்றலுக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும். மேலும் கணினியைச் சங்க இலக்கியக் கற்பித்தலுக்குப் பயன்படுத்துதல் இன்றியமையாததாக கருதப்படுகிறது. வலைதளங்களின் மூலம் படப்பதிவுகளை இறக்கி மாணவர்களுக்குக் காட்டலாம். சங்க இலக்கியம் தொடர்பான செய்திகளைக் கணிணியில் பதிவேற்றி கற்பித்தலுக்கு இடையில் காட்டலாம். மேலும், சங்க இலக்கியப் பாடல்களை இசையுடன் பாடி ஒலிபெருக்கியில் கேட்கச் செய்யலாம்.

**கெஸ்டால்ட் கொள்கையினரது ‘தொடர்புமாற்றம்’ (Theory of Tranposition) என்ற விதிப்படி ‘‘கற்றல் மாற்றம் என்பது பலவற்றிற்குள்ள தொடர்பு ஒற்றுமைகளைக் கண்டறிந்து, இவ்வறிவைப் புதுநிலைகளில் பயன்படுத்தக்கூடிய திறனைப் பொறுத்திருக்கிறது என்று கெஸ்டால்ட் கொள்கையினர் கருதுகின்றனர். பொருளுணர்ந்து கற்றால்தான் பயிற்சி**

**மாற்றம் எழுமே தவிர நெட்டுருச் செய்தால் நிகழாது என்றும் இவர்கள் சோதனைகள் மூலம் கண்டறிந்தனர். 'ஒரு நிலைமையில் காணப்படும் பண்புகளை வேறொரு நிலைமைக்கு மாற்றுதல் பயிற்சி மாற்றத்தின் அடிப்படையாகும் என்றும் கெஸ்டால்ட் அறிஞர்கள் கருதுகின்றனர்."** [29]

இக்கோட்பாடானது, இன்றைய சூழ்நிலையில் சங்க இலக்கியக் கற்பித்தலுக்கு மிகவும் ஏற்புடையதாக அமைகிறது. மாணவர்கள் எதையும் பொருளுணராமல் மனனம் செய்வதால் அவர்களின் எண்ணத்தில் எந்த மாற்றமும் நிகழாது. எனவே, சங்கப் பாடல்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அதைப் பற்றிய அனைத்து விளக்கங்களையும் மாணவர்கள் உணரும் வண்ணம் கற்பித்தல் இன்றியமையாததாகிறது. சங்கப் பாடல்களை அதன் தனித்தன்மையோடு பொருளுணர்ந்து படிக்க மாணவர்களைப் பழக்குதல் வேண்டும். அவ்வாறு, படித்தால் மட்டுமே மேலும் பல சங்க இலக்கியப்பாடல்களைப் படிப்பதற்கு அது உறுதுணையாக இருக்கும்.

**பேக்லியின் குறிக்கோள் (Bagley's Theory of Ideals) என்ற விதிப்படி 'கற்க நாம் கையாளும் முறைகளைக் குறிக்கோள் நிலைக்கு உயர்த்தினால், நாம் எதைக் கற்கத் தொடங்கினாலும் இவை நமக்குப் பயன்படும்' என்று பேக்லி கருதுகிறார். குறிக்கோள்கள் கற்றலில் கற்போரது முழு ஈடுபாட்டிற்கு வழிவகுக்கின்றன.** [30]

எடுத்துக்காட்டாக, ஒழுங்காகச் செய்தல் என்னும் முறையை ஏதோ ஒரு காரியத்தைச் செய்யும்போது மட்டும் மேற்கொள்ள வேண்டிய முறை என்று எண்ணாமல் ஒரு குறிக்கோளாக அதைக் கொள்வேமேயானால், எக்காரியத்தை மேற்கொண்டாலும் நம்மையறியாமலேயே அதனை ஒழுங்காகக் செய்து முடிக்கத் தோன்றும்.

சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பிக்க எத்தனை வழிமுறைகளைக் கையாண்டாலும் ஆசிரியரின் ஈடுபாடு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. எனவே, சங்க இலக்கியப் பாடல்களை மாணவர்களிடத்தில் கொண்டு சேர்ப்பதை ஆசிரியர்கள் இலக்காகக் கொண்டால் மட்டுமே மேற்கண்ட அனைத்து வழிமுறைகளும் சாத்தியமாகும். எனவே, தேர்வுக்காகவோ அல்லது கடமைக்காகவோ சங்க இலக்கியங்களை மாணவர்களுக்குக் கற்பிக்காமல் உள்ளார்ந்த மனநிறைவோடு கற்பிக்க வேண்டும்.

## 2.6 சங்க இலக்கியங்களை கற்பிக்க மேலும் சில வழிமுறைகள்

இலக்கியம் கற்பித்தல் என்ற தொடர் இலக்கியத்தில் கற்பித்தல், இலக்கியத்தைக் கற்பித்தல் என்ற இரண்டு பொருள்களில் கையாளப்படுகின்றது. இலக்கியத்தில் கற்பித்தல் எனும்போது இலக்கியம் ஓர் ஊடகமாகவும் இலக்கியத்தைக் கற்பித்தல் எனும்போது மொழி ஒரு பாடப் பொருளாகவும் அமைகின்றது. தமிழாசிரியர்களின் முதன்மையான பணி இலக்கியத்தைக் கற்பிப்பதே. இலக்கியத்தைக் கற்பிப்பது என்பது வெறுமனே இலக்கியத்தின் இலக்கண விதிகளை, இலக்கிய அமைப்பினைக் கற்பிப்பது மட்டுமன்று. இலக்கியத்தை அதன் பயன்பாட்டு நோக்கில் தொடர்பாடல் கருவியாகப் பயன்படுத்தும் நுணுக்கங்களைக் கற்பிப்பதும் மற்றுமோர் இன்றியமையாத நோக்கமும் உண்டு. அது, இலக்கியம் பேசும் இனத்தை, இனத்தின் வரலாற்றை இனத்தின் பண்பாட்டைக் கற்பது என்பதுமாகும்.

தொல்காப்பியர் காலம் தொட்டு இருபத்தைந்து நூற்றாண்டுகளைக் கடந்து தமிழ்க்கல்வி இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் புதிய சவால்களை எதிர்கொண்டு நிற்கின்றது. இலக்கிய இலக்கணக் கல்வியே தமிழ்க்கல்வி. மனப்பாடம் செய்வதே வெற்றிகரமான கற்கும் முறை என்றிருந்த தமிழ்க்கல்வி வரலாற்றில் இந்நூற்றாண்டின் இணையமும் பல்லூடகமும் பல புதிய கதவுகளைத் திறந்து வைத்துள்ளன. சுவர்களுக்குள் கட்டுப்பட்டிருந்த வகுப்பறைகள் மறைந்து உலகத்தையே வகுப்பறையாக மாற்றிய பெருமை இணையத்திற்குண்டு.

**சித்திரப்பாவையின் அத்தகவு அடங்கிச்**
**செவி வாயாக நெஞ்சு களனாகக்**
**கேட்டவை கேட்டவை விடாது உள்ளத்தமைத்து (நன்னூல்)**

பாடம் கேட்ட மாணவன் உயிர்பெற்று இயக்கத்திலிருந்து ஐம்புலன்களாலும் கற்கும் காலம் கனிந்து விட்டது. தமிழாசிரியர்கள் இலக்கிய இலக்கணக் கொள்கலன்களாக இருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்த காலங்கள் பழங்கதையாகி, நவீன அறிவியல் தொழில் நுட்பத் தேர்ச்சியும் உலகு தழுவிய விசாலப் பார்வையும் கொண்டவர்களாகப் புதிய அவதாரம் எடுத்துள்ளனர்.

கற்பித்தல் என்பது ஒரு கலை. அதிலும் இலக்கியம் கற்பித்தல் என்பதனைத் தனிப்பட்ட ஒவ்வோர் ஆசிரியரின் செய்நேர்த்தியோடு கூடிய

கலையாகவே நாம் கருதுதல் வேண்டும். மொழியாசிரியர் தம் பணியின் தொடக்க காலங்களில் தாம் கற்றுக்கொண்ட ஏதோ ஓர் அணுகுமுறையில் இலக்கியக் கல்வியைத் தொடங்கினாலும் தம் பணியில் அனுபவ முதிர்வு ஏற்பட ஏற்படத் தமக்கான ஒரு கற்பித்தல் அணுகுமுறையினைத் தாமே உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். இத்தகு புதிய அணுகுமுறை அவரவர்க்கு வாய்த்த வகுப்பறைச் சூழல்களின் அடிப்படையில் உருவாக வேண்டும். இலக்கியம் கற்பித்தலின் வெற்றிகரமான பழைய அணுகுமுறைகள் பலவும் தனிப்பட்ட ஆசிரியர்கள் சிலரால் உருவாக்கப்பட்டவைகளே என்பதனையும் நினைவில் கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

ஓவியக் கலைஞனோ, சிற்பக் கலைஞனோ, இசைக் கலைஞனோ எந்த ஒரு கலைஞனும் தன் கலைத்திறமைக்குத் தேவைப்படும் சில அறிவியல் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு தன் கலையை வளர்த்துக் கொண்டாலும் அக்கலைஞனின் வெற்றி அவனது தனிப்பட்ட செய்நேர்த்தியிலும் படைப்பாற்றலிலும்தான் முழுமை பெறுகிறது. அதேபோல் ஆசிரியனும் ஒரு கலைஞனே. அவனது வகுப்பறை ஒரு கலைக்கூடமே. அவனது கற்பித்தல் ஒரு கலை வெளிப்பாடே. ஆசிரியனின் வெற்றியும் அவனது தனிப்பட்ட கற்பித்தல் நேர்த்தியிலும் தகுதியான மாணவர்களை உருவாக்கும் படைப்பாற்றலிலும்தான் முழுமை பெறுகிறது. கற்பித்தல் செய்நேர்த்தி என்பது ஆசிரியரின் ஈடுபாட்டோடு தொடர்புடையது. எத்தனை மேடைகளில் பாடியிருந்தாலும் நடனமாடியிருந்தாலும் அன்றைக்குத்தான் முதல்முறையாக மேடையேறும் கலைஞர்களைப் போல் பாடகர்களும் நடனக் கலைஞர்களும் சாதகம் செய்தோ ஒத்திகை பார்த்தோ தங்களைத் தயார் செய்து கொள்வதைப் போல் ஆசிரியர்களும் ஒவ்வொரு நாளும் கற்பிக்க வகுப்பறைக்குச் செல்வதற்கு முன் முன் தயாரிப்பில் ஈடுபட்டு ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இத்தகைய ஈடுபாடே ஆசிரியர்களின் வெற்றிக்கு முதல்படி.

### 2.7 சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதில் ஆசிரியரின் பங்கு

ஆசிரியருக்கான ஒரு சிறந்த கற்பிக்கும் கருவி பாடநூல். ஆசிரியர் நூலிலுள்ள சங்க இலக்கியப் பாடல்கள் மட்டுமல்லாது, அதனுடன் தொடர்புடைய பிற கருத்துகளையும் கூற வேண்டும். சங்க இலக்கியங்களைக் கற்பிக்க பாடநூலினை ஒரு கருவியாகப் பயன்படுத்த

வேண்டுமேயன்றி பாடநூலை மட்டும் சார்ந்து சங்க இலக்கியங்களை கற்பிக்கக் கூடாது. சங்க இலக்கியங்கள் மாணவர்கள் மனதில் ஆழமாக சென்றடைவதற்கான பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ளதைக் காட்டிலும் சங்க இலக்கியங்கள் பற்றிய அதிகப்படியான செய்திகளை மாணவர்களுக்கு எடுத்தியம்புவதை கடமையாகக் கருத வேண்டும். சங்க இலக்கியப் பாடல்களை மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது அவற்றில் காய்தல், உவத்தலின்றி, வேறு எவ்விதப் பிரச்சினைக்கும் இடம் கொடாமல் புறவயத்தன்மையோடு கற்பித்தல் அவசியமாகும். சங்க இலக்கியப் பாடல்கள், ஒவ்வொரு வகுப்பிற்கும் ஏற்ற வகையில் பாடத்திட்டத்தினையொட்டி தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்டிருப்பதற்கான காரணத்தை ஆசிரியர்கள் உணர்ந்து கற்பிக்க வேண்டும். சங்க இலக்கியப் பாடல்களைப் படித்துக் கற்பிக்கத் தயாராகும் ஆசிரியர் தம்மை மாணவர் நிலையில் வைத்து மாணவர்களுக்குப் புரியும் வகையில் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும். சங்க இலக்கியங்களைப் படிப்பதற்கு முக்கியமான இலக்கண அறிவை மாணவர்களிடம் வளர்ப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். மனப்பாடம் செய்தல் என்ற பண்டையோர் திறமையின் இன்றியமையாமையை மாணவர்களுக்கு எடுத்தியம்பி அவர்களுக்கு மனனம் செய்யும் திறமையை வளர்த்தல் வேண்டும். ஆசிரியரும் மாணாக்கருடன் உடன் இருந்து பயில்வதற்குத் தயாராக இருக்க வேண்டும். அப்போதுதான், ஆசிரியர்களிடம் மாணவர்களுக்கு நம்பிக்கை ஏற்படும். மனப்பாடம் செய்த பகுதிகளின் சொல்லும் பொருளும் எப்போதும் உள்ளத்திலும் காதிலும் ஒலித்துக் கொண்டிருக்க வேண்டுமெனில், அவற்றை அவ்வப்போது நினைவுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டும். கற்றலை இன்பம் தரும் செயலாக மாற்ற வேண்டும். மாணவர் பேசவும் தம் கருத்தை எடுத்துக்கூறவும் வாய்ப்புகளைத் தர வேண்டும்.

## 2.8 சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதில் உள்ள சிக்கல்கள்

சங்க இலக்கியப் பாடல்கள் இயற்கையோடு ஒன்றிணைந்துப் பாடப்பட்டவை. சங்க இலக்கியங்களின் வாழ்வியல் பின்புலங்கள் பாடலின் தனித்தன்மையை எடுத்தியம்புவதாக உள்ளன. இக்காலச் சூழ்நிலையில் சங்க இலக்கியப் பாடலுக்கேற்ற இயற்கை சூழ்நிலையையோ, வாழ்வியல் கூறுகளையோடு மாணவர்களிடத்தில் காட்சிப்படுத்துதல் என்பது சிரமாமான

செயலாக உள்ளது. அக்கால மாந்தர்களின் சூழ்நிலையை இன்றைய மாணவர்களிடத்தில் காட்சிபடுத்துவது பெரிய இலக்காக உள்ளது. இன்றைய மாணவர்கள் எந்த ஒரு செய்தியையும் ஆராய்ச்சியின் வெளிப்பாடாகவே நம்பும் சூழ்நிலையில், சங்க இலக்கியங்கள் பற்றிய ஆதாரங்கள், புத்ததகமாக மட்டுமே உள்ளது. இதனால், மாணவர்களிடம் சங்க இலக்கியங்கள் மீது நம்பிக்கை வரவழைப்பது சற்று கடினமாக உள்ளது. இன்றைய நடைமுறையில் இருக்கும் தமிழ் சொற்களுக்கும் சங்க இலக்கிய தமிழ்ச்சொற்களுக்கும் மிகுந்த வேறுபாடு உள்ளதால், சங்க இலக்கியங்களின் மீது ஆர்வம் ஏற்படுவது கடினம். தமிழில் வழக்கில் உள்ள சொற்களைக் கற்பதற்கே மாணவர்கள் சிரமப்படும் சூழ்நிலையில், வழக்கிழந்த சொற்கள் அதிகம் உள்ள சங்க இலக்கியப் பாடல்களைக் கற்கும் போது விரைவில் சோர்வடைந்து விடுகின்றனர். பெரும்பாலும், சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பிக்கும் போது, ஆசிரியர்கள் சங்க இலக்கிய நிகழ்வுகளுக்கும் விளக்கங்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதால் சங்கப்பாடல்களில் அதிகக் கவனம் செலுத்த முடிவதில்லை. இன்றைய கல்விச் சூழ்நிலை மதிப்பெண்ணுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக அமைவதால், வினாத்தாள்களுக்கு ஏற்றவகையில் சங்க இலக்கியங்களையும் ஒரு மதிப்பெண் கூறாகக் கொண்டு ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. அதனால், சங்க இலக்கியங்களின் தனித்தன்மை மாணவர்களிடத்தில் சென்று சேருவதில்லை. மேலும், தமிழ்ப் பாடத்திற்குரிய பாடவேளையில் பாடங்கள் அனைத்தையும் குறித்த நேரத்தில் முடிக்க வேண்டிய கட்டாயத்தில் ஆசிரியர்கள் செயல்படுவதால், அவர்கள் செய்ய நினைக்கும் சில புதுமை நிறைந்த கற்பித்தலுக்கு நேரமில்லாமல் போகிறது. மேலும், பல பள்ளிகளில் நிர்ணயிக்கப்படும் பல கட்டுப்பாடுகளை மீறி ஆசிரியர்களால் கற்பித்தலில் தேவையான உத்திகளைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலையும் ஏற்படுகிறது. சங்க இலக்கியங்கள் என்பது பெரும்பாலும், மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் ஆசிரியர்களுக்கும் ஒரு சவாலான ஒரு பாடமாக இருப்பதால், ஆசிரியர்களின் அனுமதியோடு மாணவர்கள் அதை ஒதுக்கிவிடும் சூழ்நிலையும் ஏற்படுகிறது. இன்று தனியார் பள்ளிகளும் ஆங்கில வழிப் பள்ளிகளும் அதிகமாகிவிட்ட சூழ்நிலையில், தமிழின் தரம் குறைந்து வருவதோடு தமிழ் மீது மாணவர்களுக்கு உள்ள ஆர்வமும் குறைந்து வருகிறது. இச்சூழ்நிலையில் சங்க இலக்கியங்களின் தனித்தமிழை மாணவர்கள் கற்பது கட்டாயப்படுத்த வேண்டிய ஒன்றாக

உள்ளது. இதனால், மாணவர்களுக்கு சங்க இலக்கியங்களின் மீது மிக எளிதாக வெறுப்பு ஏற்பட்டு விடுகிறது. தமிழ் மற்றும் தமிழ் சார்ந்த போட்டிகள், மன்றங்கள், செய்திகள் போன்றவற்றிலும் தமிழ் செய்யுள்களான திருக்குறள் போன்றவற்றிற்கு இடம் அளிக்கப்படுகிறதே தவிர, சங்க இலக்கியங்களுக்கு இடம் அளிக்கப்படுவதில்லை. அதனால், மாணவர்கள் சங்க இலக்கியம் படிப்பதற்கான அவசியம் இல்லை என எண்ணும் சூழ்நிலை ஏற்படுகிறது. இக்காலங்களில் சமகால இலக்கியங்களுக்கு கிடைக்கும் முக்கியத்துவமும் ஈடுபாடும் சங்க இலக்கியங்களுக்குக் கிடைப்பதில்லை. சங்க இலக்கியத்தில் உள்ள சூழலுக்கும் தற்கால சூழலுக்கும் மிகுந்த வேறுபாடு உள்ளதால், மாணவர்கள் அக்கால சூழ்நிலையை ஏற்க வேண்டிய கட்டாயம் இல்லை என எண்ணுகின்றனர்.

## 2.9. முடிவுரை

இவ்வியலில், சங்க இலக்கியங்களில் அறிந்திருக்க வேண்டிய பொதுப்பண்புகள் என்ற தலைப்பில், அகம் புறத்தைப் பொருளாகக் கொண்டிருத்தல், அகத்திணைப் பாடல்களின் மரபுகள், புறத்திணைப் பாடல்களின் மரபுகள், பன்முகக் கூறுகள் மற்றும் உத்திகள், சொற்செறிவும் பொருட்செறிவும், அகவல் வஞ்சி யாப்புகளைக் கொண்டிருத்தல், தனிநிலைச் செய்யுட்களாக அமைதல் ஆகிய துணைத் தலைப்புகளின் கீழ் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. அடுத்து, சங்க இலக்கியங்களில் கற்பிக்க வேண்டிய முக்கியக் கூறுகள் என்ற தலைப்பின் கீழ், இலக்கியங்களுக்கே உரிய ஓசை நயம், இலக்கியங்களுக்குரிய சொற்களைப் பிரித்துப் படித்தல், இலக்கியங்களின் சொற்செறிவு பொருட்செறிவு, சொல்லாட்சித்திறன், எதுகை, மோனை, திணை, துறை போன்ற இலக்கியக் கூறுகள், பொருள் உணர்ச்சிக்கேற்ற குரல் ஏற்றத்தாழ்வு, நாநெகிழ் நாபிறழ் பயிற்சி, இலக்கியச் சொற்களைத் தொடர்களாக்குதல், கருத்தால் ஒத்த பிற பாடல்கள், இலக்கியங்களின் விழுமியங்கள் ஆகிய துணைத் தலைப்புகளின் கீழ் செய்திகள் ஆராயப்பட்டுள்ளன. அடுத்து, சங்க இலக்கியங்களை கற்பிக்கும் உத்திகள் என்ற தலைப்பின் கீழ், பாடப்பொருளுக்கு ஏற்றவாறு ஆர்வப்படுத்துதல், பகுதியிலிருந்து முழுமைக்கு செல்லல், முழுமையிலிருந்து பகுதிக்குச் செல்லல், துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல், இசையுடன் பாடுதல், நடித்துக் காட்டுதல், குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்தல், மாணாக்கரைப் பங்கெடுக்கச் செய்தல், நினைவூட்டுதல், ஒப்புமைப்படுத்திக்

கற்பித்தல், தொடர்புடைய செய்திகள், நிகழ்வுகள், வரலாறுகள் ஆகியவற்றைக் கூறுதல், எளிய படங்கள் வரைதல், மாணவர்-புலன்களுக்குப் பயிற்சி அளித்தல், விளையாட்டு முறையில் கற்கத் தூண்டுதல், நாட்டுநடப்புச் செய்திகளை அறிந்து கூறுதல், பள்ளிச் சூழலில் அமைந்துள்ள பொருட்களைப் பயன்படுத்தல், அறிந்ததிலிருந்து அறியாததற்குச் செல்லுதல், எளிமையிலிருந்து அருமைக்குச் செல்லுதல், தெளிவிலிருந்து சிக்கலுக்குச் செல்லுதல், தொடர்புடைய நூல்களைப் படிக்கச் செய்தல் ஆகிய துணைத் தலைப்புகளின் கீழ் கருத்துகள் கொடுக்கப்பட்டுள்ளன. அடுத்து, கற்பித்தல் கோட்பாடுகளின் அடிப்படையில் சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் உத்திகள் என்ற தலைப்பில், தார்ண்டைக்கின் முயன்று தவறிக் கற்றல் கோட்பாடு, பாவ்லோவின் ஆக்க நிலையிறுத்தக் கோட்பாடு, ஸ்கின்னரின் செயல்பாடு ஆக்க நிலையிறுத்தக் கோட்பாடு, கற்றல் - கற்பித்தலில் ஏற்பட்ட மாற்றம், முழுமைக்காட்சிக் கோட்பாடு, உட்காட்சி வழிக்கற்றல், பொதுமைப்படுத்துதல் கோட்பாடு, கெஸ்டால்ட் தொடர்புமாற்றக் கோட்பாடு, பேக்லியின் குறிக்கோள் கோட்பாடு ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் சங்க இலக்கியங்களைக் கற்பித்தல் முறைகள் விளக்கப்பட்டுள்ளன. அதன் பின்பு, சங்க இலக்கியங்களை கற்பிக்க மேலும் சில வழிமுறைகள், சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதில் ஆசிரியரின் பங்கு, சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதில் உள்ள சிக்கல்கள் ஆகிய தலைப்புகளின் கீழும் கருத்துகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**சங்க இலக்கியங்கள்: கற்பித்தல் முறைகள் மதிப்பீடு** என்ற தலைப்பில் உள்ள மூன்றாவது இயலில் தகவலாளிகளிடமிருந்து வினாநிரல் வாயிலாகப் பெறப்பட்ட தகவல்களை பள்ளி, அமைவிடம், கற்பிக்கும் வகுப்பு, பாலினம், வயது, அனுபவம், பயிற்று மொழி ஆகியவற்றின் அடிப்படையில் பகுத்தாராய்ந்து, அதன் மூலம் பெறப்பட்ட உண்மைகள் ஆராய்ந்து விவாதிக்கப்படுகின்றன.

**அடிக் குறிப்புகள்**

1. சரவண ஆறுமுக முதலியார், **தமிழ்மொழியின் இலக்கிய நோக்கம்**, ப.53
2. இரா.சந்திரசேகரன், **சங்க இலக்கியங்களைக் கற்பித்தல் - கற்றலில் புதிய உத்திகள்**, ப.38
3. கடிகாசலம், சிவகாமி, **சங்க இலக்கியம்**,, ப.62
4. மு. வரதராசன், **பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை**, ப.10
5. கடிகாசலம், சிவகாமி, **சங்க இலக்கியம்**, ப.47
6. க. காந்தி, **தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்** - அணிந்துரைப் பகுதி
7. மு. வரதராசன், **பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை**, ப.18
8. சி.இலக்குவனார், **இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்**, ப.144
9. சி.இலக்குவனார், **இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்,** ப.144
10. ச.மெய்யப்பன், **சங்க இலக்கியம்,** ப.10
11. ரா.சீனிவாசன், **சங்க இலக்கியத்தில் உவமைகள்**, ப.63
12. வி.கணபதி, **நற்றமிழ் கற்பிக்கும் முறைகள்**, ப.154
13. **மேலது,** ப.169
14. **மேலது**, ப.153
15. **மேலது**, ப.169
16. கடிகாசலம், சிவகாமி, **சங்க இலக்கியம்**, ப.56
17. இரா.சந்திரசேகரன், **சங்க இலக்கியங்களைக் கற்பித்தல் - கற்றலில் புதிய உத்திகள்**, ப.36
18. வி.கணபதி, **நற்றமிழ் கற்பிக்கும் முறைகள்**, ப.164
19. **மேலது,** ப.164
20. இரத்தினசபாபதி.பி, **தமிழ் கற்க.. கற்பிக்க..**,ப.96
21. அண்ணாமலை, **தமிழின் புதிய தேவைகளின் பார்வையில் தமிழ் கற்பித்தல்** - இணையக் கட்டுரை (www.keetru.com)
22. நாகராஜன், **கல்வி உளவியல்**, ப.149
23. **மேலது,** ப.157
24. **மேலது,** ப.162
25. **மேலது,** ப.163
26. **மேலது,** ப.166
27. **மேலது,** ப.167
28. **மேலது,** ப.180
29. **மேலது,** ப.181
30. **மேலது,** ப.182

## சங்க இலக்கியங்களைக் கற்றல், கற்பித்தல் - களஆய்வு மதிப்பீடு

3.1 முன்னுரை

3.2 கற்பித்தலின் நோக்கம்

3.3 பாடத்தைத் தொடங்குதல்

3.4 கற்றலைத் தொடர்ந்து மேம்படுத்துதல்

3.5 இலக்கணம் கற்பித்தல்

3.6 கரும்பலகைப் பயன்பாடு

3.7 துணைக்கருவிகள் பயன்படுத்துதல்

3.8 வினாக்கள் கேட்டல்

3.9 மாணவர்கள் விடையளிக்கும் தன்மை

3.10 மதிப்பீடு செய்தல்

3.11 தொடர்பணி கொடுத்தல்

3.12 கற்றல் வெளிப்பாடு

3.13 சங்கப் பனுவல்கள் கற்பித்தலின் சிறப்பம்சங்கள்

3.14 6 மற்றும் 7ஆம் வகுப்பு: ஆசிரியர்களின் கருத்துகள்

3.15 9 மற்றும் 10ஆம் வகுப்பு: ஆசிரியர்களின் கருத்துகள்

3.16 11 மற்றும் 12ஆம் வகுப்பு: ஆசிரியர்களின் கருத்துகள்

3.17 ஆசிரியர்களின் கருத்துகள் : மதிப்பீடு

3.18 முடிவுரை

## 3.1 முன்னுரை

இவ்வியல் வரையறுக்கப்பட்ட வினாநிரல் வாயிலாகக் களஆய்வில் திரட்டப்பட்ட தரவுகளைப் பகுத்தாய்ந்து விளக்குகிறது.


இவ்வாய்வுக்கான வினாநிரல், சங்க இலக்கியங்களை மாணவர்களுக்குக் கற்பிப்பதன் நோக்கம், கற்பித்தல் முறைகள், துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல், மதிப்பீடு, கற்றல் வெளிப்பாடு போன்றவை தொடர்பாக ஆசிரியர்களின் கருத்துகளைத் திரட்டும் வகையில் உருவாக்கப்பட்டது. இந்த வினாநிரல் விடைகளைத் தகவலாளர்கள் ஆம் அல்லது இல்லை எனக் குறிப்பிடும் வகையில் அமைக்கப்பட்டது. இதில் ஒவ்வொரு பிரிவிலும் 5 வினாக்கள் கொண்ட 12 பிரிவுகளில் அமைந்துள்ள 60 வினாக்கள் இடம்பெற்றுள்ளன. மேலும், இவ்வினாநிரல் சில பொதுவான வினாக்களைக் கொண்டிருப்பதோடு வகுப்பு நிலை சார்ந்து சில சிறப்பு வினாக்களையும் கொண்டுள்ளன. இவ்வகையில் மொத்தம் 95 வினாக்கள் அமைந்துள்ளன. இந்த வினாநிரல் வழி பெறப்பட்ட தரவுகள் பல்வேறு கற்றல் - கற்பித்தல் கூறுகளை, பள்ளி அமைவிடம், பயிற்று மொழி, ஆசிரியரின் வயது, பால், அனுபவம் போன்ற காரணிகளையும் உள்ளடக்கி ஆய்ந்து வெளிப்படுத்துகிறது..

பெறப்பட்ட தரவுகள், புள்ளிவிவரப் பகுப்பாய்வு, பகுப்பாய்வு அட்டவணைகள், பகுப்பாய்வு முடிவின் வரைபடங்கள், கருதுகோள்களைச் சோதித்தல், விவாதங்கள் ஆகிய முறைகளில் பகுக்கப்பட்டன. பகுத்தாய்ந்த விவரங்களிலிருந்து அவற்றிற்கிடையே உள்ள தொடர்பு கெழுவின் அளவு, சராசரி, திட்டவிலக்கம், ஆகியவை முதலில் பெறப்பட்டு அதன் அடிப்படையில் t-யின் மதிப்பு, மாறுபாட்டுப் பகுப்பாய்வின் மதிப்பு ஆகியன கண்டுபிடிக்கப்பெற்று ஆய்வுக்கான கருத்துகள் பரிந்துரைக்கப்படுகின்றன. புள்ளி விவரங்கள் தொடர்பான வரைபடங்களும் ஆங்காங்கே தேவைக்கேற்ப கொடுக்கப்பட்டுள்ளன. முழுமையான விவரங்கள் பின்னிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளன.

## 3.2 கற்பித்தலின் நோக்கம்

**‘ஒரு மொழிப்பாடத்தை மாணவன் படிக்கும் போது அந்தப் பாடத்திலிருந்து அவன் மொத்தமாகப் பெறும் மொழி அறிவுத் திறனோடு அப்பாடத்தைப் படித்தால் பெறும் செய்தி – பயன் - அடைவு எதுவோ அதுவே பொது நோக்கமாகும்.’**[1] **மாணவன் ஒரு பாடத்தைப் படிப்பதால் பெறும் பயனின் உட்கூறுகளோடு அந்தப் பாடத்திலிருந்து அறிந்து கொள்ளும் அரிய புதுச் சொற்கள், இலக்கணக் குறிப்புக்கான சொற்கள் முதலியவை பற்றி அறிவதே சிறப்பு நோக்கம்.’**[2] எந்த

ஒரு செயலுக்கும் நோக்கம் என்பது மிக முக்கியமானதாகும். நோக்கம் இல்லாத செயல் வெற்றி இலக்கை அடையமுடியாது. இது கற்பித்தலுக்கும் பொருந்தும். **பள்ளியைத் தோட்டமாகவும் ஆசிரியரைத் தோட்டக்காரராகவும் குழந்தைகளைத் தோட்டத்தில் உள்ள சிறு செடிகளாகவும் கருதி, பள்ளியில் மனிதப் பயிர்கள் வளர்ச்சி அடையும் போதுதான் ஆசிரியர் இவற்றை நன்கு கவனித்து கருத்துடன் போற்றி வளர்க்க முடியும்.'**[3] எனவே, சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அதன் நோக்கத்தை அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். **'செய்யுள் பாடங்களைக் கற்பிக்கும் நோக்கங்களை உணர்ந்து, அந்த நோக்கங்கள் நிறைவேறும் வண்ணம் கற்பித்தல் வேண்டும்.'** [4] ஆகவே, இலக்கியங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அதன் நோக்கங்களை எந்த அளவிற்கு அறிந்திருக்கின்றனர், அந்த நோக்கங்களை மனதில் கொண்டு கற்பித்தலை எவ்வாறு நிகழ்த்துகின்றனர் என்பதை அறிந்துகொள்ளும் பொருட்டு வினாத்தாளில் கற்பித்தலின் நோக்கம் என்னும் தலைப்பில் சங்க இலக்கியங்கள் கற்பிப்பதின் அவசியங்கள் குறித்து மொத்தம் 5 வினாக்கள் கேட்கப்பட்டன. இதில், மொழிக்கல்வியில் செய்யுளின் இன்றியமையாமை, சங்க இலக்கியங்களின் தேவை, சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதன் மூலம் மாணவர்களிடம் உள்ள கற்றல் மேம்பாடு ஆகியவற்றைக் குறித்தும் வினாக்கள் எழுப்பப்பட்டன. கொடுக்கப்பட்ட வினாக்களுக்குத் தகவலாளர்களிடமிருந்து கிடைத்த தகவல்கள் கணக்கீடுகளுக்கு உட்படுத்தப்பட்டு, கருத்துகளுக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் பற்றிய விவரங்களும் அதற்கான காரணங்களும் விளக்கப்பட்டுள்ளன.




**மொழிக்கல்வியில் செய்யுள்** பகுதி **இன்றியமையாதது** என்ற கருத்தை அரசு உதவிபெறும் பள்ளியில் உள்ள ஆசிரியர்கள் பலரும் ஏற்கின்றனர்.

தமிழ்வழியில் கற்கும் மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களும் கிராமங்களில் உள்ள ஆசிரியர்களும் ஓரளவிற்கு ஏற்கின்றனர். மேலும் இந்தக் கருத்தைப் வயது, பால், பள்ளி வகையில் கணக்கிடும் போது, கிராமத்தில் உள்ள ஆசிரியர்களும் 33 முதல் 45 வயது வரை உள்ள ஆசிரியர்களும் 6 முதல் 10 வருடம் அனுபவமுள்ள ஆசிரியர்களும் பெண் ஆசிரியர்களும் பெரும்பான்மையான ஆதரவைத் தெரிவித்துள்ளனர். இவ்வாறானக் கருத்துகளைப் பெறுவதற்கு பின்வருவன காரணங்களாக அமையலாம்.

தமிழ்வழியில் கற்கும் மாணவர்கள், செய்யுளின் தனித்தன்மையை உணர்ந்து படிப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. அதனால் அவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் செய்யுளின் மேன்மையை மாணவர்களுக்குக் கற்பிக்கும் வாய்ப்பு கிடைக்கும். ஆங்கில வழியில் கற்கும் மாணவர்களின் மொழியின் தரம் குறைவதைக் கண்டு அவர்களை மேம்படுத்தும் எண்ணம் கொண்டு இருக்கலாம்.

தமிழ்வழியில் கற்பிப்பதால் செய்யுள் கற்பிப்பதற்கென்று தனிப்பட்ட சிரமம் ஏதும் இருக்க வாய்ப்பில்லை. பொதுவாக கிராமங்களில் தமிழ்மொழிக்கு முக்கியத்துவம் வழங்குவதால் செய்யுள் பகுதியை விரும்பிப் படிப்பதற்கு வாய்ப்பு உண்டு.

11 மற்றும் 12ஆம் வகுப்பில் மொழிப்பாடத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதைக் காட்டிலும் கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களுக்கு முக்கியத்துவம் வழங்குவதால் ஆசிரியர்களுக்குக் கற்பித்தல் ஆர்வம் குறைந்து காணப்படலாம். அதனால், கற்பித்தல் நோக்கங்களை அறிந்திருந்தும் அதை நிறைவேற்றுவதில் ஆர்வக் குறைவு ஏற்பட்டிருக்கலாம். செய்யுள் பகுதியில் உள்ள பல்வேறு பன்முகக் கூறுகளைக் கற்பிப்பதில் அவர்களுக்குச் சிரமம் இருந்திருக்கக்கூடும்.

**செய்யுள் பகுதியில் சங்க இலக்கியச் செய்யுள்களைக் கற்பிப்பது இன்றியமையாதது** என்ற கருத்துக்கு அரசு உதவிபெறும் ஆசிரியர்கள் பெரும்பான்மையாக இசைவு தெரிவித்துள்ளனர். மாநகரத்தில் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் இக்கருத்தை ஏற்கவில்லை. மேலும் இந்தக் கருத்தைக் பால், வயது அடிப்படையில் கணக்கிடும் போது, 46 முதல் 58 வயது வரை உள்ள ஆசிரியர்களும் 10 வருடத்திற்கு மேல் அனுபவமுள்ள ஆசிரியர்களும் பெண் ஆசிரியர்களும் தமிழ்வழியில் கற்கும் மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களும் பெருமளவில் ஆதரவைத் தெரிவிக்க பின்வருவன காரணங்களாக அமையலாம்.

அரசு உதவிபெறும் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் சங்க இலக்கியங்களின் மேன்மையை அறிந்து கற்பிக்கும் வாய்ப்பு உண்டு. 9 மற்றும் 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத்தேர்வை முன்னிட்டு அனைத்துப் பாடங்களிலும் முக்கியத்துவம் வழங்குவதைப் போல இதற்கும் முக்கியத்துவம் வழங்கலாம்.

கிராமங்களில் உள்ள சுற்றுச்சூழல்களின் சாயல்களை இலக்கிய நிகழ்வுகளோடு ஒப்பிட்டுக் காட்ட முடியும். சங்க இலக்கியம் கற்பிப்பதற்கு வயது மற்றும் அனுபவம் முக்கியக் காரணமாக அமைகிறது. அதனால் அவர்களால் முழுமையான கற்பித்தலை நிகழ்த்த முடிகிறது.

சில ஆசிரியர்களால் இலக்கியச் சூழலை மிக நேர்த்தியாகப் படம் பிடித்துக் காண்பிக்க முடியும் என்பதால் மாணவர்களுடன் இரண்டறக் கலந்து கற்பிப்பதில் திறமைமிக்கவர்களாக இருந்திருக்கலாம்.

**சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதன் மூலம் மாணவர்களின் சொற்களஞ்சியத் திறன் மேம்படும்** என்ற கருத்துக்கு 6 முதல் 10 வருடம் அனுபவமுள்ள ஆசிரியர்கள் தங்களது ஏற்புடைமையை தெரிவித்துள்ளனர். 20 முதல் 32 வயதுள்ள ஆசிரியர்கள் அவ்வாறு தெரிவிக்கவில்லை. மேலும் இந்தக் கருத்தைப் பள்ளி, கற்பிக்கும் வகுப்பு அடிப்படையில் கணக்கிடும் போது, அரசு உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களும் 6 மற்றும் 7ஆம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களும் கிராமத்தில் உள்ள ஆசிரியர்களும் பெண் ஆசிரியர்களும் ஓரளவு இசைவைத் தெரிவித்ததற்குப் பின்வருவன காரணங்களாக அமையலாம்.

தமிழ்வழியில் பயிலும் மாணவர்களுக்குத் தமிழில் எழுதும் வாய்ப்பு அதிகம் உண்டு என்பதாலும் கருத்துகளைப் பெரும்பாலும் சொந்தநடையில் எழுதுவதற்கான முயற்சிகள் மேற்கொள்வதாலும் இலக்கியத்தில் இடம்பெறும் சொற்களைப் பயன்படுத்துகின்றனர்.

9 முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்கள் பொதுத்தேர்வில் அதிகக் கவனம் செலுத்துவதால் இதில் ஆர்வம் குறைவதாகக் கருதலாம். அனுபவம் அதிகம் உள்ள ஆசிரியர்கள், மாணவர்களின் கற்றலில் பல வேறுபாடுகளைக் கண்டிருப்பர். எனவே, அதற்கேற்றவாறு கற்பித்தல் நிகழ்த்துவதில் வல்லவர்களாக இருக்கிறார்கள்.

பொதுவாக, இளம் வயது மாணவர்கள் ஆசிரியர்கள் சொல்படி கேட்டு நடப்பர். வயது முதிர்ந்த மாணவர்கள், பருவமாற்றத்தின் காரணமாக அவ்வாறு நடக்க வாய்ப்பில்லை. இதனால், அவ்வகை மாணவர்களிடத்தில் சொற்களஞ்சியப் பெருக்கத்தை அறியவோ அல்லது வளர்க்கவோ வாய்ப்புகள் இன்றி போகலாம்.

ஆங்கில வழியில் கற்கும் மாணவர்கள் அடிப்படைத் தமிழ்ச்சொற்களைக் கற்பதையே கடினமாக எண்ணுவர். இந்நிலையில், பனுவல்களில் இடம்பெறும் தமிழ்ச்சொற்களில் ஆர்வம் ஏற்படுத்துவது சற்றுக் கடினம். மேலும், மாணவர்களின் சொற்களஞ்சியத் திறனைப் பெருக்கி அதை வெளிக்கொணர்ந்தாலும் அதை ஊக்கப்படுத்தும் விதத்தில் தேர்வுகளில் வினாக்களோ அல்லது மதிப்பெண்களோ தனிப்பட்ட முறையில் வழங்கப்படுவதில்லை. அதனால், சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக் கொள்வதில் மாணவர்கள் விருப்பம் காட்டுவதில்லை. தெரிந்த சொற்களை மாணவர்கள் பிழையின்றி எழுதினாலே போதும் என்ற நோக்கில் ஆசிரியர்களும் செயல்படலாம்.

**செய்யுள் பகுதியில் உள்ள சங்க இலக்கியங்களுக்கும் மற்ற செய்யுள்களுக்கும் உள்ள வேறுபாட்டை மாணவர்களுக்குக் கற்பித்தல்** என்ற உத்திக்கு 46 வயது முதல் 58 வயது வரை உள்ள ஆசிரியர்கள் பெருமளவில் ஆதரவைத் தெரிவித்துள்ளனர். நகரத்தில் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஓரளவிற்குக் கருத்தோடு உடன்படுகின்றனர். மேலும் இந்தக் கருத்தை பள்ளி, அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசுப் பள்ளி ஆசிரியர்களும் 11 மற்றும் 12ஆம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களும் 6 முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் இக்கருத்தைத் தெரிவு செய்துள்ளனர். இதற்குப் பின்வருவன காரணங்களாக அமையலாம்.

அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் தமிழ் மொழியின் மேன்மையை முழுமையாக உணர்ந்து, அதை மாணவர்களிடத்தில் முழுமையாகக் கொண்டு சேர்க்க வேண்டும் என எண்ணலாம்.

பெரும்பாலும் நகரங்களில் தனியார் பள்ளிகளே அதிகம் காணப்படுகின்றன. அது போன்ற பள்ளிகளில் மொழிப் பாடங்களுக்குக் கொடுக்கப்படும் நேரம் குறைவாக இருப்பதால் தமிழ்ப் பாடத்தை நடத்துவதற்கே ஆசிரியர்கள் சிரமங்களை சந்திக்கின்றனர். இதில், இந்த வேறுபாடுகளை விளக்குவது தேவையற்றது என கருதலாம்.

அனுபவம் நிறைந்த ஆசிரியர்கள் அதிக ஆண்டுகள் ஒரே இடத்தில் பணிபுரிவதால் அந்தந்த பள்ளிச்சூழ்நிலைக்கு ஏற்ப திட்டமிட்டு, மாணவர்களுக்குத் தாங்கள் கூற விரும்புவதை சரியாக எடுத்தியம்புவதற்கான வாய்ப்புகள் உண்டு.

இலக்கியங்காட்டும் வாழ்வியல் பின்புலங்கள் கிராமங்களோடு அதிகம் ஒன்றுபட்டு காணப்படுவதால், அதற்கான முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு எடுத்துரைப்பதற்கு அதிக வாய்ப்புகள் உண்டு.

அனுபவம் மற்றும் வயதில் குறைந்த ஆசிரியர்கள் இலக்கியங்களின் முக்கியத்துவம் பற்றி விளக்கும் ஆர்வம் இன்றி இருக்கலாம். அனுபவம் மற்றும் வயதில் முதிர்ந்த ஆசிரியர்கள் இலக்கியங்களின் முக்கியத்துவத்தை அறிந்திருந்தாலும் இன்றைய சூழ்நிலையில் அதை எடுத்துரைப்பதற்கு அவசியம் இல்லை என எண்ணியிருக்கலாம்.

ஆசிரியர்கள் எந்தச் சூழ்நிலையிலும் மாணவர்களின் நற்பண்புகளிலும் நல்வளர்ச்சியில் சற்று ஈடுபாடு கொண்டவராக இருப்பர். அதனால், சங்க இலக்கியத்தின் தனித்தன்மையை எடுத்துரைப்பதை சிறந்ததாகக் கருதலாம்.

ஆங்கில வழியில் பயிலும் மாணவர்கள் செய்யுள் பாடங்கள் கற்பதை சற்றுக் கடினமாகக் கருதுவதால் இந்த வேறுபாடுகளை எடுத்துரைப்பது மேலும் அவர்களின் பயத்தை அதிகரிப்பதாக இருக்கும் எனக் கருதியிருக்கலாம்.

தமிழ் வழியில் பயிலும் மாணவர்கள், செய்யுளில் இடம்பெறும் சொற்களில் ஏற்படும் வேறுபாட்டை உணர்ந்து அவர்களே அதற்கான வேறுபாட்டைக் கேட்கும் வாய்ப்புகள் உண்டு. அதனால், மாணவர்களுக்கு ஆசிரியர்கள் விளக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

**சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதன் மூலம் மாணவர்களுக்குச் சங்க இலக்கியப் புத்தகங்களைப் படிப்பதில் ஆர்வம் ஏற்படும்** என்ற கருத்துக்கு தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்கள் பொதுவான ஏற்புடைமையை அளித்துள்ளனர். ஆனால், 20 வயது முதல் 32 வயது வரை உள்ள ஆசிரியர்கள் இக்கருத்தை மறுத்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தை பள்ளி, அமைவிடம் அடிப்படையில் கணக்கிடும் போது அரசு பள்ளி ஆசிரியர்களும் நகரத்தில் உள்ள ஆசிரியர்களும் 6 முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் இக்கருத்திற்கு ஓரளவிற்கு ஏற்றுள்ளனர். இதற்கு பின்வருவனவற்றைக் காரணங்களாகக் கருதலாம்.

ஆங்கில வழியில் படிக்கும் மாணவர்களுக்கு தமிழில் படித்தல் திறன் சற்றுக் குறைவாக இருப்பதால், பழஞ்சொற்களுடன் கூடிய இலக்கியம் படிப்பதில், அவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவது சற்று கடினம்.

ஆசிரியர்கள் இன்றைய சூழ்நிலையில் உள்ள ஆங்கில மொழியின் வளர்ச்சியை நன்கு அறிவர். எனவே, இன்றைய காலகட்டத்தில் மாணவர்கள்

தமிழ் மொழியைப் பிழையின்றி படித்து எழுதினாலே போதும் என்ற நோக்கிலேயே கற்பித்தலை நிகழ்த்தலாம்.

அரசு பள்ளிகளில் தமிழ் கற்பித்தலுக்கு நேரம் அதிகம் கிடைப்பதால், மாணவர்களிடம் தமிழ் பாடத்தில் ஈடுபாட்டை வரவழைக்கும் வகையில் இலக்கியக் கதைகளைக் கூறி அதன் மூலம் இலக்கிய ஆர்வத்தைத் தூண்டலாம்.

6 மற்றும் 7ஆம் வகுப்பு மாணவர்களிடம் இலக்கிய கதைகளைக் கேட்பதில் இருக்கும் ஆர்வம், அந்த புத்தகங்களைப் படிப்பதில் வருவதில்லை. அம்மாணவர்களின் வயது இதற்கு ஒரு காரணமாக அமையலாம்.

11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் மொழிப் பாடத்தைக் காட்டிலும் கணிதம் மற்றும் அறிவியல் பாடத்தில் உள்ள ஆர்வத்தாலும் மதிப்பெண் எடுப்பதில் உள்ள ஆர்வத்தாலும், பாடப் புத்தகத்தைத் தவிர வேறு எந்தப் புத்தகத்தையும் படிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை.

சில கிராமங்களில் மாணவர்களுக்கு விருப்பம் இருந்தாலும், இலக்கிய புத்தகங்களைத் தேடிப் படிக்கும் அளவுக்கு நூலகம் போன்ற வசதிகள் இல்லாததால் ஆசிரியர்கள் இதில் விருப்பம் செலுத்தாமல் இருக்கலாம்.

மாநகரப் பள்ளிகளில் உள்ள தனியார் பள்ளிகளில் படிப்பதற்கு ஏற்ற வசதிகள் இருந்தாலும் அங்குள்ள பள்ளி நூலகங்களில் ஆங்கிலப் புத்தகங்களே மிகுந்து காணப்படுவதால், ஆசிரியர்களால் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்க முடியாமல் போகிறது.


அனுபவம் மற்றும் வயது முதிர்ந்த ஆசிரியர்கள் மாணவர்களின் படித்தல் திறனை அறிந்து, அதற்கேற்ற இலக்கிய புத்தகங்களைத் தேர்ந்தெடுத்துப் படிப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கத் தயாராக இருக்கின்றனர். இருப்பினும், மாணவர்களிடத்தில் இதற்கான ஆர்வம் குறைந்து காணப்படும் போது அதைத் தொடர்வதற்கு வாய்ப்பில்லாமல் போகிறது.

வேலையை வைத்து கணக்கிட்டுப் பார்க்கும் போது, இன்றைய பொது வாழ்வில் மாணவர்கள் தொடர்ந்து பல சிறப்பு வகுப்புகளுக்குச் செல்வதாலும் நேரமின்மையினாலும் புத்தகம் படிப்பதில் ஆர்வம் குறைந்து காணப்படுகின்றனர்.

### 3.3 பாடத்தைத் தொடங்குதல்

எந்த ஒரு செயலாக இருப்பினும் தொடக்கம் தெளிவானதாக அமையுமானால் அதனால் முடிவும் வெற்றியாகவே அமையும். **‘நடத்தப்போகும்**

**பகுதியின் தலைப்பைக் கரும்பலகையில் எழுதியோ அல்லது நடத்தப்போகும் நூல் பற்றியும் நூலாசிரியர் பற்றியும் கேள்வி கேட்டோ விளக்கியோ பாடத்தைத் தொடங்கலாம். கற்பிக்கப்போகும் பாடம் மாணவர் மனத்தில் பதியவும் மாணவர்களுடைய கவனத்தைப் பாடத்தின் பால் ஈர்க்கவும் மேற்கொள்கின்ற முயற்சியே இது**[5]. இவ்வகையில், சங்க இலக்கியப் பாடல்களை எவ்வாறு தொடங்குதல் வேண்டும் என்ற தெளிவை ஆசிரியர்கள் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும். மேலும், இதைப்பற்றி ஆசிரியர்களின் கருத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, பாடத்தைத் தொடங்குதல் என்னும் தலைப்பில் சங்க இலக்கியங்களை பள்ளிக் கல்வியில் எவ்வாறு தொடங்கலாம் என்பது குறித்த 5 வினாக்கள் ஆசிரியர்களிடம் கேட்கப்பட்டது. இதில், சங்க இலக்கியத்தைத் தொடங்கும் போது அதற்கான சூழ்நிலையை உருவாக்குதல், பாடலின் பின்னணியைக் கூறுதல், பாடலில் இடம்பெறும் நிகழ்ச்சியைக் கூறுதல், பாடலை இசையுடன் பாடுதல், பாடலாசிரியரின் வரலாற்றைக் கூறுதல் ஆகியவற்றைக் குறித்து வினாக்கள் எழுப்பப்பட்டன. கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு தகவலாளர்களிடமிருந்து கிடைத்த தகவல்கள் கணக்கீடுகளுக்கு உட்படுத்தப்பட்டு, கருத்துகளுக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் பற்றிய விவரங்களும், அதற்கான காரணங்களும் விளக்கப்பட்டுள்ளது.




**சங்க இலக்கியச் செய்யுள்களைத் தொடங்கும் போது அதற்கான கற்றல் சூழ்நிலையை உருவாக்கிக் கற்பித்தல் வேண்டும்** என்ற உண்மைக்கு பெரும்பாலான ஆசிரியர்கள் ஆதரவைத் தெரிவித்திருந்தாலும் அரசுப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் எதிர்நிலையில் உள்ளனர். மேலும் இந்தக் கருத்தை கற்பிக்கும் வகுப்பு, பயிற்று மொழி ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடும்

போது, கிராமத்தில் உள்ள ஆசிரியர்களும் 6 - 10 வருடம் அனுபவமுள்ள ஆசிரியர்களும் ஆண் ஆசிரியர்களும் ஆங்கில வழியில் கற்பிக்கும் ஆசிரியர்களும் இக்கருத்தைக் குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஏற்றுக்கொண்டதன் காரணங்களாக பின்வரும் கருத்துகளைக் கொள்ளலாம்.

சங்க இலக்கியங்களில் இடம்பெறும் சூழல்கள் பெரும்பாலும் கிராமங்களில் மிகுந்துக் காணப்படுகின்றன. எனவே. மாணவர்களுக்கு அச்சூழ்நிலையைக் காட்சிப்படுத்துதல் எளிமையாகும். நகரங்களில் அந்தச் சூழல்களைக் கண்டறிவதில் சிரமம் இருப்பதால் அதை மாணவர்களுக்கு காட்சிப்படுத்துவதிலும் சிரமம் இருக்கும்.

சில ஆசிரியர்கள் எந்த வகுப்பாக இருந்தாலும் புதுமை நோக்கத்துடன் கற்பிக்க முற்படுவர். இருப்பினும், அனுபவத்தின் மூலமே கற்பித்தலில் மேன்மை பெறுவர். சிறிது அனுபவம் பெற்ற பிறகு எந்தப் பாடத்தை எவ்வாறு தொடங்க வேண்டும் என்பதில் தெளிவு பிறக்கும்.

அதிக அனுபவம் உள்ள ஆசிரியர்கள் பல வருடங்களாகக் கற்பித்தலை நிகழ்த்துவதாலும் பலவிதமான மாணவர்களைக் கண்டிருப்பதாலும் கற்பிப்பதில் சலிப்பு ஏற்பட்டிருக்கலாம்.

தமிழ் வழியில் கற்கும் மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள், தமிழ் பாடத்திற்கென தனிப்பட்ட ஈடுபாட்டை மாணவர்களிடத்தில் ஏற்படுத்தும் அவசியம் இல்லாமல் போகலாம். அதனால், ஆங்கில வழியில் கற்கும் மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள், மாணவர்களிடத்தில் ஈடுபாட்டை வரவழைக்க வேண்டும் என்ற நோக்கில் பல வழிகளை கையாளுகின்றனர்.

**சங்க இலக்கியச் செய்யுள்களைத் தொடங்கும் முன் பின்னணிச் செய்திகளைக் கூறித் தொடங்குதல்** என்ற கருத்தை 46 முதல் 58 வயதுள்ள ஆசிரியர்களே பெரும்பான்மையாக ஏற்றுள்ளனர். ஆனால் தனியார் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் இக்கருத்திற்கு எதிர்நிலையில் உள்ளனர். மேலும் இந்தக் கருத்தைப் பால், அமைவிடம் அடிப்படையில் கணக்கிடும் போது, நகரத்தில் உள்ள ஆசிரியர்களும் 10 வருடத்திற்கு மேல் அனுபவமுள்ள ஆசிரியர்களும் ஆண் ஆசிரியர்களும் ஆங்கில வழியில் கற்கும் மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களும் இக்கருத்தை ஏற்றுக்கொண்டதன் காரணத்தை பின்வருமாறு கணிக்கலாம்.

சங்கப் பாடல்களின் பின்னணிச் செய்திகளைக் கூற வேண்டுமெனில், ஆசிரியருக்குச் சங்க இலக்கியங்களில் ஆழ்ந்த அறிவு இருக்க வேண்டும். இந்த ஆழ்ந்த அறிவானது கல்வியினால் மட்டுமல்லாது அனுபவத்தினாலும் பெறக்

கூடியது. எனவே, அனைத்து ஆசிரியர்களும் இதைப் பின்பற்றுவது சற்றுக் கடினம்.

தனியார் பள்ளிகள் அனைத்தும் ஆங்கில மொழியையே பயிற்று மொழியாகக் கொண்டு கற்பிப்பதால் தமிழுக்கு அதிக முக்கியத்துவம் வழங்க முடிவதில்லை. மாணவர்களுக்கு தமிழை எழுதவும் படிக்கவும் தெரிந்தால் மட்டுமே போதும் என்ற நோக்கில் கற்பித்தல் நிகழ்வதால், இக்கருத்திற்கான ஆதரவை எதிர்பார்க்க முடியவில்லை.

சில ஆசிரியர்கள் தங்கள் புலமையை வளர்த்துக் கொள்வதற்கோ அல்லது பொழுதுபோக்கிற்காகவோ, பல புத்தகங்களை வாசிப்பதற்கு அதிக நேரத்தை ஒதுக்குகின்றனர். இதனால், பல செய்திகளைத் தெரிந்து கொண்டு அதை மாணவர்களுக்கும் எடுத்துரைக்கின்றனர்.

**சங்க இலக்கியப் பாடல்களில் இடம்பெறும் நிகழ்ச்சிகளைக் கூறித் தொடங்குதல்** என்ற பொருண்மையை கிராமத்தில் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் தெரிவு செய்துள்ளனர். ஆனால், 46 முதல் 58 வயது வரை உள்ள ஆசிரியர்கள் இக்கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும் இந்தக் கருத்தைப் பால், அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசுப் பள்ளி ஆசிரியர்களும் 6 முதல் 10 வருடம் அனுபவமுள்ள ஆசிரியர்களும் ஆண் ஆசிரியர்களும் தமிழ்வழியில் கற்பிக்கும் ஆசிரியர்களும் இசைவு தெரிவித்திருப்பதன் காரணத்தைப் பின்வருமாறு கணிக்கலாம்.

பள்ளிகளில் அனைத்துப் பாடங்களும் நேரத்தோடு முடித்தாக வேண்டும் என்ற கட்டாயத்தில் அனைத்து ஆசிரியர்களும் பாடம் எடுக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. அதனால், பல நேரங்களில் சொல்ல வந்த செய்திகளைச் சொல்லாமலே பாடத்தை முடித்து விடுவதாகக் கொள்ளலாம்.

ஆங்கிலத்தை பயிற்றுமொழியாக எடுத்துப் படிப்பதால் பல மாணவர்களுக்குத் தமிழ் கடினமான பாடங்களில் ஒன்றாக மாறிவிட்டது. அதனால், அது சம்பந்தப்பட்டச் செய்திகளை அறிந்துகொள்வதில் வெறுப்பு ஏற்படலாம்.

நேரத் தட்டுப்பாடு, பல பாடங்களைக் கற்பித்தல் போன்றவை உள்ள இன்றைய கல்விச் சூழலில் சங்கப்பாடல்களைப் படித்து பொருள் விளக்கினால் போதும் என்ற வகையில் மட்டுமே கற்பித்தல் நிகழ்வதாகக் கொள்ளலாம்.

அனைத்து ஆசிரியர்களும் தமிழை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வத்தில் மட்டுமே கற்பித்தலை நிகழ்த்துகின்றனர். ஆனால், அடுத்து அவர்களுக்குக்

கிடைக்கும் எதிர்மறை அனுபவத்தாலும், நிர்வாகத்தின் உந்துதலாலும் மாணவர்களின் விருப்பமின்மையினாலும் அந்த முயற்சிகளைச் சிறிது சிறிதாகக் கைவிட்டு விட நேரலாம்.

தனியார் பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளைக் காட்டிலும் அரசுப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்குத் தமிழ்க் கற்பித்தலுக்கு அதிக நேரம் கிடைப்பதால், மாணவர்களுக்கு இலக்கியச் செய்திகளை முழுமையாக எடுத்துக் கூறும் வாய்ப்புண்டு.

தனியார் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மாணவர்கள் பல பாடங்களைக் கற்பதால் இந்த முழுமையான கற்பித்தலுக்கு நேரமில்லாமல் போகலாம்.

**இலக்கியப் பாடல்களை இசையோடு பாடித் தொடங்குதல்** என்ற முறைக்கு 11 மற்றும் 12ஆம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்கள் அதிகப்படியான இசைவைத் தெரிவித்துள்ளனர். எனினும், தமிழ் வழியில் கற்பிக்கும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களிடம் இந்த ஆதரவு கிடைக்கவில்லை. மேலும், இந்தக் கருத்தை பள்ளி, அமைவிடம் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசு பள்ளி ஆசிரியர்களும் நகரத்தில் உள்ள ஆசிரியர்களும் 6 - 10 வருடம் அனுபவமுள்ள ஆசிரியர்களும் ஆண் ஆசிரியர்களும் ஓரளவிற்கு கருத்தோடு உடன்படுவதன் காரணத்தைப் பின்வருமாறு கணிக்கலாம்.

ஆசிரியர்கள் பெருமளவில் செய்யுள் பாடல்களை இசையுடன் பாடி கற்பிப்பதில் வல்லவர்களாக இருக்கலாம். ஆனாலும், தமிழ் வழியில் கற்கும் மாணவர்கள் இதை விரும்பாததாலும் பாடிக் கற்பிக்கும் ஆசிரியர்களை விமர்சிப்பதாலும் ஆசிரியர்கள் பாடிக் கற்பிப்பதை தற்போது கைவிட்டு இருக்கலாம்.

சில ஆசிரியர்கள் பாடுவதில் திறமை குறைந்தவர்களாக இருப்பதால் பாடிக் கற்பித்தலை விரும்புவதில்லை. பாடலுக்கேற்ற சரியான இசையையோ அல்லது தாளத்தையோ அறியாத காரணத்தாலும் இதைத் தவிர்த்து இருந்திருக்கக்கூடும்.

கற்பித்தலில் பல தொழில்நுட்பங்கள் வந்தவிட்ட சூழலில் இது போன்ற கற்பித்தலை மாணவர்கள் விரும்புவதில்லை.

**ஆசிரியரின் வரலாற்றைக் கூறிப் பாடலைத் தொடங்குதல்** என்ற கருத்துக்கு அரசுப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களும் ஆங்கில மொழியைப் பயிற்றுமொழியாகக் கற்பிக்கும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களும்

பெருமளவில் இசைவு தெரிவித்துள்ளனர். 33 முதல் 45 வயது வரை உள்ள ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் இந்தக் கருத்தை கற்பிக்கும் வகுப்பு அமைவிடம் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசுப் பள்ளி ஆசிரியர்களும் நகரத்தில் உள்ள ஆசிரியர்களும் 6 - 10 வருடம் அனுபவமுள்ள ஆசிரியர்களும் ஆண் ஆசிரியர்களும் உடன்பாட்டு நிலையில் உள்ளனர். அதற்கான காரணங்களைப் பின்வருமாறு கணிக்கலாம்.

அனைத்து ஆசிரியர்களும் பெரும்பாலும் இந்த அணுகுமுறையைப் பயன்படுத்துகின்றனர். பாடப்புத்தகத்தில் உள்ள ஆசிரியர் குறிப்பைக் கூறிப் பாடத்தைத் தொடங்குவதையே நோக்கமாகக் கொண்டு செயல்படுவதாகக் கொள்ளலாம்.

புதிதாகக் கற்பித்தலைத் தொடங்குபவரும் இந்த வகைக் கற்பித்தலை எந்த வித முன்னேற்பாடுமின்றி செயல்படுத்த முடியும் என்பதால் இந்த வகைக் கற்பித்தலை அதிகம் விரும்புவதாகக் கொள்ளலாம்.


அனுபவத்தில் சிறந்த ஆசிரியர்கள் சங்கப் புலவர்களின் வரலாறுகளை நன்கு அறிந்திருப்பதாலும் இதன் மூலம் மாணவர்களுக்குப் பல செய்திகளை எடுத்தியம்புவதாலும் இந்த வகைக் கற்பித்தலைப் பரிந்துரை செய்யலாம்.

அரசு பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குக் கற்பித்தல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் வசதிகள் குறைந்து காணப்படுவதால் இந்த வகைக் கற்பித்தல் சுலபம் எனக் கருதியிருக்கலாம்..

### 3.4 பாடத்தைத் தொடர்ந்து மேம்படுத்துதல்

சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பிக்கத் தொடங்கியப் பின், அதை எப்படி வழிநடத்திச் செல்கிறார்களோ அதைப் பொறுத்தே மாணவர்களுக்கு சங்க இலக்கியத்தில் ஆர்வ மிகுதி ஏற்படும். ஆசிரியர்களின் இந்தக் கற்பித்தலே மாணவர்களை மீண்டும் மீண்டும் சங்க இலக்கிங்களைப் படிப்பதில் ஈடுபாட்டை ஏற்படுத்தும். **'செய்யுள் கல்வியால் மொழியின் அருமை பெருமைகளை மாணவர்களுக்குக் கற்பித்தலோடு அம்மொழி பல்வேறு வகைகளில் பயன்படும் முறை பற்றியும் கற்பித்து அம்மொழி பயன்படும் தொடர்களில் சொற்களின் கருத்தாழத்தைக் காட்டி மொழிப்பற்றை வளர்க்க முடியும்'.** [6] எனவே, பாடத்தை எவ்வாறு வழிநடத்திச் செல்லுதல் வேண்டும் என்பது குறித்து 5 வினாக்கள் கேட்கப்பட்டன. அதில், பாடலில் சொற்களுக்கு அருஞ்சொற்பொருள் கூறுதல், பாடலைப் படித்துக் காட்டுதல், பாடலில் உள்ள உணர்ச்சியை புரிய வைத்தல், பாடலின் கருத்தைக் கூறுதல், பாடலை உரைநடைப்படுத்தி விளக்குதல்

ஆகியவற்றைக் குறித்து வினாக்கள் எழுப்பப்பட்டன. கொடுக்கப்பட்ட வினாக்களுக்குத் தகவலாளர்களிடமிருந்து கிடைத்த தகவல்கள் கணக்கீடுகளுக்கு உட்படுத்தப்பட்டு, கருத்துகளுக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் பற்றிய விவரங்களும், அதற்கான காரணங்களும் விளக்கப்பட்டுள்ளது.




**ஒவ்வொரு சொற்களுக்கும் அருஞ்சொற்பொருள் கூறிப் பாடலை நடத்துதல்** என்ற கருத்துக்கு நகரத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள் பெருமளவில் இசைவு தெரிவித்துள்ளனர். 46 முதல் 58 வயது வரை உள்ள ஆசிரியர்கள் குறைந்தபட்ச அளவே ஆதரவு தெரிவித்துள்ளனர். மேலும், இந்தக் கருத்தைப் பள்ளி, அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசுப் பள்ளி ஆசிரியர்களும் 1 முதல் 5 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் ஆண் ஆசிரியர்களும் தமிழ் மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் ஏற்றுக்கொள்வதற்குப் பின்வரும் கருத்துகள் காரணமாக அமையலாம்.

நகரத்தில் பயிலும் மாணவர்களுக்குத் தமிழின் இயல்பான சொற்களுக்கே பொருள் தெரியாமல் இருக்கும் சூழல் நிலவுவதால், சங்க இலக்கியத்தில் இடம்பெறும் பழஞ்சொற்களின் பொருளை ஒவ்வொன்றாகக் கூறுவது கட்டாயமாகக் கருதப்படுகிறது.

அனுபவத்தில் சிறந்த ஆசிரியர்களுக்கு மாணவர்களிடம் எதிர்பார்ப்புகள் அதிகம் இருப்பதாலும் பாடல் தொடர்பான செய்திகளைக் கூறும் புலமை இருப்பதாலும் பொருள் கூறி விளக்குதல் என்ற கருத்தை மட்டும் கொண்டு கற்பித்தலை நிகழ்த்த விரும்பாமல் இருக்கலாம்.

சில ஆசிரியர்களுக்குப் பொருள் கூறி விளக்குதல் என்பது மிகவும் சுலபமானதாகவும் அதே நேரத்தில் எந்த வித முன்னேற்பாடும் இன்றி, உடனடியாகக் கற்பிக்கக் கூடிய ஒரு வழியாகவும் இது அமைவதால், இந்த முறை கற்பித்தலை அதிகம் விரும்புவதாகக் கொள்ளலாம்.

11 மற்றும் 12ஆம் வகுப்பில் உள்ள சங்கப் பாடல்களுக்குரிய சொல்லின் பொருள் உடனுக்குடன் புத்தகத்தில் வழங்கப்படவில்லை. ஆனால் 6, 7, 9 மற்றும் 10ஆம் வகுப்புகளில் இந்த பொருள் விளக்கமானது உடனுக்குடன் புத்தகத்தில் வழங்கப்பட்டுள்ளதால், அந்த வகுப்புகளைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இது மிகவும் சுலபமானதாக கருதப்படுகிறது.

**பாடலை மீண்டும் மீண்டும் படித்துக் காட்டுதல்** என்ற கருத்தை 9 மற்றும் 10ஆம் வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பொதுவாக ஏற்கின்றனர். எனினும், தனியார் பள்ளியில் உள்ள ஆசிரியர்கள் மிகக் குறைந்த அளவு ஆதரவையும் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தை பள்ளி, பால் அடிப்படையில் கணக்கிடும் போது, நகரத்தில் உள்ள ஆசிரியர்களும் ஆண் ஆசிரியர்களும் தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதைப் பின்வருமாறு கணிக்கலாம்.

சில பள்ளியில் உள்ள ஆசிரியர்களுக்கு நிர்வாகத்தின் உந்துதலாலும் கற்றல் சிறக்க வேண்டும் என்ற கட்டாயத்தினாலும் பாடலை மாணவர்களுக்கு மீண்டும் மீண்டும் படித்துக்காட்ட வேண்டிய சூழல் உள்ளது.

தனியார் பள்ளியில் உள்ள மாணவர்களைத் தேர்வுக்கு மட்டும் படிக்க வைத்தால் போதும் என்ற நிலையினாலும், தேர்வுக்குரிய வினாத் தாள்களை ஆசிரியர்களே தயாரிப்பதாலும் சங்க இலக்கியச் செய்யுள் வினாக்களை தேர்வு வினாத் தாளில் தவிர்க்கும் சூழ்நிலையும் ஏற்படுகிறது. அதனால், பாடப்பிரிவை முடிக்கும் பொருட்டு கற்பித்தல் நிகழ்வதால், இந்த முறை கற்பித்தலுக்கு முக்கியத்துவம் கிடைப்பதில்லை எனக் கொள்ளலாம்.

வயது முதிர்ந்த ஆசிரியர்களுக்குச் சங்க இலக்கியப் பாடல்களைப் படிப்பதில் புலமை இருப்பதால், அதை அவர்கள் மாணவர்களுக்கு எளிதில் படித்துக்காட்டி, மீண்டும் படிக்க வைத்துவிடுவதாகக் கொள்ளலாம்.

சில ஆசிரியர்கள் சங்க இலக்கியப் பாடல்களில் உள்ள சொற்களைச் சீர்ப்பிரித்து படிப்பதில் சிரமம் இருப்பதாக உணர்கின்றனர். இதனால், அதை ஒரு முறை படித்து கற்பித்தப்பின்னர், மீண்டும் அதைப் படித்துக் காட்டுவதில் ஆர்வம் காட்டுவதில்லை.

சிரமம் ஏதும் இன்றி பாடலை ஒன்று இரண்டு முறை படித்துக்காட்டி, மாணவர்களைப் படிக்கச் செய்தால் கற்பித்தல் நிகழ்ந்ததாக கருதப்படும் என்பதால் ஆசிரியர்கள் இந்த முறையைப் பின்பற்ற வாய்ப்பு உண்டு.

**பாடலின் கருத்தை முதலில் கூறிய பின் பாடலைப் படித்துக் காட்டுதல்** என்ற முறையை கிராமத்தில் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் பெரும்பான்மையாக ஏற்கின்றனர். 46 முதல் 58 வயது வரை உள்ள ஆசிரியர்கள் குறைந்த அளவே ஆதரவைத் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தை பள்ளி, அமைவிடம் அடிப்படையில் கணக்கிடும் போது, தனியார் பள்ளி ஆசிரியர்களும் 6 முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் ஆண் ஆசிரியர்களும் தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் ஓரளவிற்கு உடன்படுகின்றனர் என்பதற்குக் கீழ்க்கண்டவற்றைக் காரணங்களாகக் கொள்ளலாம்.

சில மாணவர்கள் தமிழ் வரலாற்றின் மீது ஆர்வம் கொண்டர்களாகவும், வாழ்க்கை நிகழ்வுகளை அறிந்து கொள்வதில் ஆர்வம் உள்ளவர்களாகவும் இருப்பதால், பாடலைக் காட்டிலும் பாடலின் கருத்தை அறிவதில் ஆர்வம் செலுத்தலாம்.

ஆசிரியர்கள் தமிழ் மொழியின் இலக்கியங்களின் மீது உள்ள ஆர்வத்தால் முதலில் பாடலைக் கற்பிப்பதில் ஆர்வம் காட்டினாலும் அதனுடன் கருத்தைக் கூறுவதிலும் முக்கியத்துவம் காட்டுகின்றனர்.

தனியார் பள்ளிகளில் மாணவர்கள் தமிழ்ப் பாடத்தை இரண்டாம் மொழியாகப் படிப்பதாலும் ஆங்கில மொழிக்கு முக்கியத்துவம் அளிப்பதாலும் தமிழ் மொழியின் இலக்கிய நடையில் விருப்பம் குறைவாக உள்ளதாகக் கருதலாம்.

மதிப்பெண்ணை அடிப்படையாகக் கொண்டு படிக்கும் போது, வினாக்களுக்கு விடை படித்தால் போதும் என்ற நிலையில், பாடலின் கருத்தை உணர்ந்தால், வாக்கியமாக எழுதி விடுவார்கள் என்ற எண்ணத்தில் ஆசிரியர்கள் இந்த முறையைக் கையாளலாம்.

9 மற்றும் 10ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் மொழிப்பாடத்தில் உரைநடைப் பகுதியையே பெரிதும் விரும்புகின்றனர். மேலும், சங்கப்பாடல்களில் இருக்கும் தனித்தமிழை ஒரு பாரமாகக் கருதலாம். எனவே, அவர்களை ஊக்கப்படுத்தும் பொருட்டு, கருத்தைக் கூறிப் பின்னர் விளக்கலாம். அதன் மூலம் மாணவர்கள் கருத்தைப் புரிந்து கொண்ட பின்பு பாடலை விளக்குவதாகக் கணிக்கலாம்.

இன்றைய மாணவர்கள் பாடலைக் காட்டிலும் பாடலின் கருத்துக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர். பாடலின் கருத்துகளே தேர்வு எழுதுவதில் பயன்படும் என்றும் கருதுகின்றனர். எனவே, ஆசிரியர்களும் மாணவர்களின் மனநிலையைப் பொறுத்துப் பாடலின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கலாம்.

ஆசிரியர்கள் மாணவர்களிடம் நண்பர்களாகப் பழக வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால், மாணவர்கள் விருப்பத்திற்கே கற்பித்தலானது நடைபெறுகிறது. எனவே, ஆசிரியர்கள் இம்முறை கற்பித்தலை நாடுகின்றனர்.

ஆங்கில மொழியை பயிற்று மொழியாகக் கொண்டு கற்கும் மாணவர்களைக் காட்டிலும், தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கற்கும் மாணவர்கள் தமிழ்க் கற்றலில் அதிகப்படியான தன்னம்பிக்கையுடன் சொந்த நடையில் எழுத தயாராக இருப்பர். அதனால், சங்கப்பாடலைக் காட்டிலும் கருத்தைத் தெரிந்து கொண்டால் அதைத் தொடர்ந்து அந்தக் கருத்தைப் பத்திகளாக எழுதுவதில் எந்தச் சிரமமும் இருக்காது. இதையே மாணவர்களும் விரும்புவதால், அவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இம்முறையை பின்பற்றலாம்.

**பாடலில் உள்ள உணர்ச்சியை மாணவர்கள் அறியும் வண்ணம் குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்துக் காட்டுதல்** என்ற கருத்துக்கு 6 முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்கள் பெரும்பான்மையான வகையில் இசைவு தெரிவித்துள்ளனர். ஆண் ஆசிரியர்கள் குறைந்த பட்ச அளவில் ஆதரவைத் தெரிவித்துள்ளனர். மேலும், இந்தக் கருத்தை அனுபவம், அமைவிடம் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசுப் பள்ளி ஆசிரியர்களும் நகரத்தில் உள்ள ஆசிரியர்களும் தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டதன் காரணத்தைப் பின்வருமாறு கணிக்கலாம்.

இசையுடன் பாடிக் கற்பித்தல் என்பது இன்று வழக்கத்தில் இருந்து குறைந்து விட்டதால் ஆசிரியர்கள் பாடுவதற்குப் பதிலாக, பாடலை நல்ல குரல் ஏற்றத் தாழ்வுடனும் படித்துக் காட்டுவதில் ஆர்வம் காட்டலாம். ஆனால், பாடல்களை இசையுடன் பாடிக் கற்பித்தலுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் இம்முறையை விரும்புவதில்லை.

பாடலுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து, சத்தமாகப் படித்து நடத்துவதில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் விருப்பம் இல்லாமல்

இருக்கலாம். அதனால், குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்துக் காட்டும் கருத்துக்கு ஆதரவைத் தெரிவிக்காமல் இருந்திருக்கலாம்.

அரசு பள்ளியில் உள்ள மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள், மாணவர்களின் கற்றல் தரத்தைப் பொறுத்து அவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக இவ்வகைக் கற்பித்தலில் ஈடுபடுவதுண்டு.

6 மற்றும் 7ஆம் வகுப்பில் இருந்துதான் சங்க இலக்கியங்கள் அறிமுகப் படுத்தப்படுகின்றன. எனவே, ஆசிரியர்கள் இப்பாடல்களை மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது சீர் பிரித்து படிக்கக் கற்றுத் தரும் பொருட்டு குரல் ஏற்றத் தாழ்வுடன் படித்துக் காட்டலாம்.

நகரத்தில் உள்ள பள்ளிகள் பெரும்பாலும் ஆங்கில வழிக் கல்வியாக இருப்பதால், மாணவர்கள் படித்தல் திறனை மேம்படுத்தும் பொருட்டு பாடல்களை குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்துக் காட்டுவதில் ஆர்வம் காட்டலாம்.

தமிழ் மொழி வழிக் கல்வியில் படிக்கும் மாணவர்களும், தமிழ் மொழியின் பழஞ்சொற்கள் பலவற்றை அறியாமல் இருப்பதால், சங்கப்பாடல்களில் உள்ள தமிழ்ச் சொற்களை அறியும் பொருட்டு இவ்வகைக் கற்றலை மேற்கொள்வதாகக் கொள்ளலாம்.

**பாடலின் பொருள் விளங்கும்படி உரைநடைப்படுத்தி விளக்குதல்** என்ற கருத்துக்கு அனைத்து ஆசிரியர்களும் பொதுவாக இசைவுத் தெரிவித்துள்ளனர். எனினும், 11 மற்றும் 12ஆம் வகுப்புக் கற்பிக்கும் ஆசிரியர்கள் எண்ணிக்கையில் குறைந்த அளவே ஆதரவைத் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தை பள்ளி அமைவிடம் அடிப்படையில் கணக்கிடும் போது, தனியார் பள்ளி ஆசிரியர்களும் 20 முதல் 32 வயதுள்ள ஆசிரியர்களும் 1 முதல் 5 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் கிராமத்தில் உள்ள ஆசிரியர்களும் பெண் ஆசிரியர்களும் பெருமளவில் ஏற்பதற்கு பின்வரும் கருத்துகளைக் காரணங்களாகக் கொள்ளலாம்.

தமிழ் வழிக் கல்வியில் படிக்கும் மாணவர்கள், தமிழ்ப் பாடம் படிக்க வேண்டும் என்பதற்காக தனிப்பட்ட எந்த ஒரு முயற்சியும் எடுப்பதில்லை. தமிழில் சுயமாக எழுதும் ஆற்றல் இருப்பதால், எந்தக் கருத்தையும் தேவைக்கேற்ப வெளிப்படுத்தும் திறமையைப் பெற்றுள்ளனர். அதனால், செய்யுள் பாடமாக இருந்தாலும், அதனை உரைநடைப்படுத்திச் விளக்கும் போது அதை அப்படியே மனதில் பதியவைத்துக் கொண்டு, தேர்வு நேரத்தில் அதைப் பயன்படுத்திக் கொள்வதாக எண்ணி அவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இவ்வகைக் கற்பித்தலுக்கு பெரும்பான்மையாக ஆதரவு தெரிவித்திருக்கக் கூடும்.

11 மற்றும் 12ஆம் வகுப்பில் அறிவியல் மற்றும் கணிதப் பாடத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவம் மொழிப்பாடத்திற்கு வழங்கப்படுவதில்லை. இதனால், மொழிப்பாடத்திற்கான கற்பித்தல் நேரம் மிகக் குறைவு. இந்த நேரத்திற்குள் பாடத்தை முடிக்க வேண்டும் என்ற நோக்கில் செல்லும் ஆசிரியர்களுக்கு, அதை மீண்டும் உரைநடைப்படுத்திச் சொல்வதற்கு நேரமில்லாமல் போகிறது. மேலும், சங்க இலக்கியப் பாடல்களுக்காகத் தனிப்பட்ட முறையில் ஆர்வம் செலுத்த மாணவர்கள் தயார் நிலையில் இல்லாத போது, இந்த கருத்தும் அவர்களுக்கு ஏற்புடையதாக இல்லை என அறியமுடிகிறது.

சங்க இலக்கியப் பாடல்களில் உள்ள பழஞ்சொற்களைத் தனித்தனியாக விளக்குவதை விட, அதை அப்படியே ஒரு உரைநடையாகவோ அல்லது பத்தியாகவோ மாணவர்களுக்கு விளக்கும் போது, அதை அவர்கள் எளிதில் புரிந்து கொண்டு தேர்வில் எழுதிவிடுவர். இதனால், தனியார் பள்ளி ஆசிரியர்கள் இக்கருத்துக்கு ஆதரவு தெரிவித்திருக்கலாம்.

இன்றைய ஆசிரியர்களின் நோக்கம் மாணவர்களின் மதிப்பெண்ணைப் பொருத்து அமைவதால், தேர்வு நோக்கத்தின் அடிப்படையிலேயே கற்பித்தலும் நடைபெறுகிறது. இதனால், எந்த செய்யுள் பகுதியாக இருந்தாலும் அதை உரைநடைப்படுத்தி சொல்லும் போது, மாணவர்கள் அதை எளிதாகத் தேர்வில் எழுதிவிடுவர். இதனால், ஆசிரியர்கள் பெரும்பாலும் இம்முறையைப் பின்பற்றுகின்றனர்.


மாணவர்கள் தமிழில் படிப்பதற்கும் எழுதுவதற்கும் திறமையுடையவர்களாக இருந்தாலும், வாக்கியங்கள் மற்றும் பத்திகள் அமைப்பதில் சற்றுத் தடுமாறுகின்றனர். இதனைக் களையும் பொருட்டு பாடலை உரைநடையாக மாற்றி கூறும் முறையைப் பின்பற்றி வருவதாகக் கணிக்கலாம்.

ஆசிரியர்கள் பாடலைக் கற்பித்த பின்னர், அதைச் சார்ந்த வினாக்களுக்கு விடையளிக்கும் போது, அதை உரைநடைப்படுத்திக் கூறுவதால் அது மாணவர்களுக்கு எளிதில் புரியும் வாய்ப்புள்ளது. எனவே, இச்செயலில் ஆசிரியர்கள் அதிக ஆர்வம் செலுத்துவதாகக் கொள்ளலாம்.

### 3.5 இலக்கணம் கற்பித்தல்

சங்க இலக்கியங்களில் உள்ள இன்பத்தைக் கூட்டுவதற்கு முக்கிய பங்காற்றுவது அதில் உள்ள இலக்கணக் கூறுகளே ஆகும். எனவே, இலக்கியங்களைக் கற்பிக்கும் போது அதில் உள்ள இலக்கணங்களை அறிந்து கொள்வது மட்டுமல்லாமல், மாணவர்களுக்கு அவற்றைத் தெளிவாக விளக்குதலும் அவசியமாகிறது. எனவே, இலக்கணம் கற்பித்தலைக் குறித்து 5

வினாக்கள் கேட்கப்பட்டன. அதில், இலக்கியங்களில் உள்ள உவமைகளை விளக்குதல், சங்கப்பாடல்களில் உள்ள சொற்சுவையையும் கற்பனை நயத்தையும் விளக்குதல், சிலேடை நயம் உள்ள பாடல்களை விளக்கும் போது விதிவருமுறையைப் பின்பற்றுதல், இலக்கணக் கூறுகளை பொது இலக்கணத்தோடு தொடர்புப்படுத்துதல் ஆகியவற்றைக் குறித்து வினாக்கள் எழுப்பப்பட்டன. கொடுக்கப்பட்ட வினாக்களுக்குத் தகவலாளர்களிடமிருந்து கிடைத்த தகவல்கள் கணக்கீடுகளுக்கு உட்படுத்தப்பட்டு, கருத்துகளுக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் பற்றிய விவரங்களும் அதற்கான காரணங்களும் விளக்கப்பட்டுள்ளன.




**சங்க இலக்கியங்களில் உள்ள உவமைகளை விளக்குதல்** என்ற கருத்துக்கு 10 வருடங்களுக்கு மேல் அனுபவமுள்ள ஆசிரியர்கள் மிகுதியாக ஏற்றுள்ளனர். மேலும் இந்தக் கருத்தை பள்ளி, பால் அடிப்படையில் கணக்கிடும் போது, தனியார் பள்ளி ஆசிரியர்களும் 9 மற்றும் 10ஆம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களும் ஆண் ஆசிரியர்களும் 46 முதல் 58 வயதுள்ள ஆசிரியர்களும் மாநகரத்தில் உள்ள ஆசிரியர்களும் இசைவு தெரிவித்துள்ளனர் என்பதைப் பின்வரும் காரணங்களால் அறிய முடிகிறது.

சங்க இலக்கியப் பாடல்கள் தனித்தமிழில் காணப்படுவது அதன் சிறப்பாகும். இன்றைய ஆசிரியர்கள் பலர் இலக்கியப் பாடல்களைப் படித்து, விளக்கினாலும் அதன் உட்பொருளைச் சரியாக அறிந்து விளக்குவதில் சற்று தடுமாற்றத்தை அடைவதாகக் கணிக்கலாம்.

அனுபவத்தில் மூத்த ஆசிரியர்கள் எந்தப் பாடலாக இருந்தாலும், அதில் பயன்படுத்தப்பட்டிருக்கும் உவமைகளையும் பொருளையும் அறிந்து, அதை விளக்கி மாணவர்களுக்குக் கற்பிப்பதில் ஆர்வம் காட்டலாம்.

ஆங்கில வழியில் கற்கும் மாணவர்களுக்கு, சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பிப்பதில் ஆசிரியர்கள் இடர்களைச் சந்திக்க நேரிடலாம். அதனால், பாடல்களின் விளக்கத்தை மட்டும் தெரிவித்தால் போதும் என்ற நிலைக்குத் தள்ளப்படுவதாகக் கொள்ளலாம். இதையும் மீறி, பாடலிலுள்ள உவமைகளைக் கற்பித்தாலும் அதை மாணவர்கள் முழுமையாக ஏற்காத சூழ்நிலை ஏற்படுவதாகக் கணிக்கமுடிகிறது.

ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் தமிழ் மொழியின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறும் பொருட்டு, தமிழ் இலக்கியங்களின் தனித்தன்மையை விளக்கும் பொருட்டும் அதில் உள்ள உவமைகள் போன்ற நுட்பமான செய்திகளை ஆசிரியர்கள் விளக்குவதில் ஆர்வம் காட்டலாம்.

இன்றைய மாணவர்கள், தமிழ் மொழியைக் கற்பது கடினம் என நினைத்து அதிலிருந்து விலகி நிற்கின்றனர். பின்பு, தமிழின் இனிமையை உணர்ந்து தமிழ் படிக்கும் ஆர்வம் அவர்களை எட்டும் போது அவர்கள் 9ஆம் வகுப்பை நெருங்கி விடுகின்றனர். எனவே, அதன்பின்பு தமிழின் தனிச்சிறப்பை அறியும் பொருட்டு 9 மற்றும் 10ஆம் வகுப்பு மாணவர்கள் சங்கப்பாடல்களில் அதிக ஆர்வத்துடன் கேள்விகள் கேட்பதால், இந்த உவமைகளை நன்கு விளக்கும் வாய்ப்பு ஆசிரியர்களுக்கு கிடைக்கிறது.

ஏற்கனவே கூறியது போல ஆசிரியர்கள் மாணவர்களிடம் நண்பர்களைப் போல பழகுவதால் எளிதில் அவர்களுடைய ஐயங்களையோ அல்லது தேவைகளையோ கேட்டுத் தெரிந்து கொள்வதால் உவமைகளை விளக்குவது மிக எளிதாக இருக்கலாம்.

அனுபவத்தில் மூத்த ஆசிரியர்கள் தமிழ் பற்றியும் சங்க இலக்கியங்கள் பற்றியும் உள்ள செய்திகளை அதிகம் அறிந்திருப்பதால் உடனுக்குடன் அதனை விளக்குவதற்கு ஆர்வம் காட்டுவதாகக் கொள்ளலாம்.

இன்றைய மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் ஆராய்ச்சியின் அடிப்படையில் மட்டுமே ஏற்றுக் கொள்ளும் குணம் கொண்டவர்களாக உள்ளனர். அதனால், சங்க இலக்கியப் பாடல்களில் வரும் ஒவ்வொரு சொற்களுக்கு விளக்கம் தேட முற்படும் போது, இந்த உவமைகளைச் சரியான பொருளுடன் விளக்குவது ஆசிரியர்களுக்குக் கட்டாயமாக இருந்திருக்கக் கூடும்.

**சங்கப் பாடல்களில் உள்ள சொற்சுவையையும் கற்பனை நயத்தையும் விளக்குதல்** என்ற கருத்தை 9 மற்றும் 10ஆம் வகுப்புக் கற்பிக்கும் ஆசிரியர்கள் தெரிவு செய்துள்ளனர். ஆங்கில மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்கள் குறைந்தபட்ட ஆதரவைத் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தைப் பால், பள்ளி அடிப்படையில் கணக்கிடும் போது, அரசுப் பள்ளி ஆசிரியர்களும் ஆண் ஆசிரியர்களும் 46 முதல் 58 வயதுள்ள ஆசிரியர்களும் 10 வருடத்திற்கு மேல் அனுபவமுள்ள ஆசிரியர்களும் நகரத்தில் உள்ள ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இதனைப் பின்வரும் காரணங்களைக் கொண்டு விளக்கலாம்.

தமிழ் வழிக் கல்வியில் படிக்கும் மாணவர்களுக்குத் தமிழ்ப் படிப்பதில் ஆர்வம் இருப்பதால் சொற்சுவை, பொருட்சுவை போன்றவற்றைப் பற்றிய விளக்கங்களை ஆர்வத்துடன் கேட்கலாம்.

அனுபவத்தில் மூத்த ஆசிரியர்கள் தமிழ் இலக்கியப் பாடல்களில் உள்ள சொற்சுவை பொருட்சுவைகளை நன்கு அறிந்து, அதை மாணவர்களுக்கு விளக்குவதில் ஆர்வம் காட்டலாம்.

ஆசிரியர்களிடம், நடுநிலை மற்றும் மேல்நிலை மாணவர்கள் அதிக நட்புடன் பழகுவதால் எளிதில் அவர்களுடைய ஐயங்களையோ அல்லது தேவைகளையோ கேட்டுத் தெரிந்து கொள்வதால், சொற்சுவை மற்றும் பொருட்சுவை உள்ள சொற்களை விளக்குவது மிக எளிதாக இருக்கலாம்.

நகரத்தில் உள்ள மாணவர்கள் ஆங்கில வழியில் பயின்றாலும், தமிழ் மீது உள்ள ஆர்வத்தாலும் தமிழ் படிக்க வேண்டும் என்ற பெற்றோர்களின் ஊக்குவிப்பாலும் இது போன்ற புதிய நயமிக்க சொற்களைக் கற்பதில் ஆர்வம் காட்டலாம்.

**சிலேடை நயம் உள்ள பாடல்களை விளக்கும் போது விதிவருமுறையை பின்பற்றுதல்** என்ற கருத்துக்குப் பெரும்பாலான ஆசிரியர்கள் உடன்பாட்டு நிலையில் பதில் அளித்து உள்ளனர். எனினும் நகரத்தில் உள்ள ஆசிரியர்கள் மிகக்குறைவான ஆதரவைத் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தை வயது, பயிற்றுமொழி அடிப்படையில் கணக்கிடும் போது, அரசு உதவிப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களும் ஆண் ஆசிரியர்களும் 6 முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் அதிகமாக ஏற்றுள்ளனர். இதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறலாம்.

சிலேடை என்பது தமிழ் செய்யுளின் தனிப்பட்ட சிறப்பான நயமாகும். இவற்றை மாணவர்களுக்கு விளக்கும் போது, முதலில் எடுத்துக்காட்டுகளை விளக்கி, பின்பு ஏன் இந்தப் பாடல் பாடப்பட்டுள்ளது எனக் காரணத்தைக் கூறும் முறை அனைத்து ஆசிரியர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**பாடலில் உள்ள இலக்கணக் கூறுகளைப் பொது இலக்கணத்தோடு தொடர்புபடுத்துதல்** என்ற கருத்துக்கு தனியார் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் பெருமளவில் ஆதரவைத் தெரிவித்துள்ளனர். கிராமத்தில் உள்ள ஆசிரியர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தை அனுபவம், வயது அடிப்படையில் கணக்கிடும் போது, பெண் ஆசிரியர்களும் 46 முதல் 58 வயதுள்ள ஆசிரியர்களும் 6 முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் ஆங்கில மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதற்குக் கீழ்வரும் காரணங்களைக் கணிக்கலாம்.

தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தமிழ் மொழியை தெளிவாகப் படிக்கவும் பிழையின்றி எழுதவும் சிரமப்படுகின்றனர். இந்நிலையில் இலக்கணத்தை அவர்களுக்கு நேரடியாக கற்பிப்பதால், அவர்களுக்கு இலக்கணத்தின் மீது உள்ள ஆர்வம் மேலும் குறையும் வாய்ப்பு உள்ளது. எனவே, செய்யுள் கற்பித்தலின் போது வரும், இலக்கணங்களை பொது இலக்கணத்தோடு தொடர்புபடுத்தி கற்பிக்கின்றனர். அனைத்து தரப்பினருக்கும் இது நன்மை தரக்கூடியதாக இருக்கிறது.

ஆசிரியர்கள் இலக்கியப் பாடல்களைக் கற்பிக்கும்போது, இலக்கணத்தைச் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் இல்லை எனக் கருதலாம். மாறாக, இலக்கியப் பாடல்களின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கலாம். அவற்றை இலக்கணத்தோடு ஒப்பிடும் போது, பாடலின் கருத்து மாணவர்களிடத்தில் சென்றடைவதில் குறைபாடு ஏற்படுவதாகக் கருதுவதால் இக்கருத்துக்கு மறுப்பு தெரிவித்திருக்கலாம்.

6 மற்றும் 7ஆம் வகுப்பில் மாணவர்களுக்குச் சங்க இலக்கியங்கள் அறிமுகப்பாடல்களாக இருப்பதாலும் அதன் நுட்பங்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்பதாலும் பாடலுக்கு இடையே இலக்கணத்தை நினைவக்கூர்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.


அனுபவத்தில் வயதில் முதியவர்கள் தமிழ் மொழியின் பற்றுதலை மாணவர்களிடத்தில் உருவாக்க வேண்டும் என்பதற்காகவும் தமிழ் மொழியின்

சிறப்புகளை மாணவர்களுக்கு உணர்த்த வேண்டும் என்பதற்காகவும் இலக்கணங்களை இணைத்தே கற்பிப்பதை விரும்புகின்றனர்.

ஆங்கில வழியில் பயிலும் மாணவர்களுக்கு தனியே இலக்கணம் என்பதை பாடமாகக் கற்பித்தால் அதனால் அவர்களுக்குக் கற்றல் சுமை ஏற்படுகிறது என்பதால் பாடல் நடத்தும் போது இருக்கும் இலக்கணங்களைப் பொது இலக்கணத்தோடு இணைத்துக் கற்பித்தல் சிறப்பாகக் கருதப்படுகிறது.

### 3.6 கரும்பலகைப் பயன்பாடு

**‘நடத்தப்போகும் பகுதியின் தலைப்பைக் கரும்பலகையில் எழுதியோ அல்லது நடத்தப்போகும் நூல் பற்றியும் நூலாசிரியர் பற்றியும் கேள்வி கேட்டோ விளக்கியோ பாடத்தைத் தொடங்கலாம். கற்பிக்கப்போகும் பாடம் மாணவர் மனத்தில் பதியவும் மாணவர்களுடைய கவனத்தைப் பாடத்தின் பால் ஈர்க்கவும் மேற்கொள்கின்ற முயற்சியே இது’**[7] அன்று முதல் இன்று வரை கற்பித்தல் உபகரணங்களில் கரும்பலகை முக்கியமான ஒன்றாகத் திகழ்கிறது. **‘காதால் கேட்பதைவிடக் கண்ணால் பார்ப்பது செய்தியை மனத்தில் நன்கு பதிய உதவுவதால் ஆசிரியர் கரும்பலகையைப் பயன்படுத்துதல் வேண்டும்’.**[8] இதனைச் சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் கற்பித்தலைச் சிறப்பாக்கி விடமுடியும். எனவே, இலக்கியங்களைக் கற்பிக்கும் கரும்பலகைப் பயன்பாட்டினை விளக்கும் வகையில் 5 வினாக்கள் கேட்கப்பட்டன. அதில், தொடர்களைப் பிரித்து எழுததுல், சொற்பொருள் எழுதுதல், இலக்கியத்தின் பெயர் மற்றும் ஆசிரியரின் வரலாற்றுக் குறிப்புகள் எழுதுதல், பாடலின் தலைப்பு, கருத்துகளை எழுதுதல், சங்கப்பாடல் அடிகளை எழுதுதல், கருத்துப்படம் வரைதல் ஆகியவற்றைக் குறித்து வினாக்கள் எழுப்பப்பட்டன. கொடுக்கப்பட்ட வினாக்களுக்குத் தகவலாளர்களிடமிருந்து கிடைத்த தகவல்கள் கணக்கீடுகளுக்கு உட்படுத்தப்பட்டு, கருத்துகளுக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் பற்றிய விவரங்களும் அதற்கான காரணங்களும் விளக்கப்பட்டுள்ளன.



**தொடர்களைப் பிரித்து எழுதவும், சொற்பொருள் கூறவும் கரும்பலகையைப் பயன்படுத்துதல்** என்ற கருத்துக்கு 46 முதல் 58 வயதுள்ள ஆசிரியர்கள் பெருமளவில் இசைவு தெரிவித்துள்ளனர். பெண் ஆசிரியர்கள் ஓரளவிற்கு இசைவைத் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தை பள்ளி, அமைவிடம் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களும் மாநகரத்தில் உள்ள ஆசிரியர்களும் தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் ஓரளவிற்கு ஏற்கின்றனர்.

**இலக்கியப்பாடல் மற்றும் ஆசிரியரின் பெயர், வரலாற்றைக் கூறும் போது கரும்பலகையைப் பயன்படுத்துதல்** என்ற கருத்துக்கு அரசுப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் பெரும்பான்மையாக ஏற்கின்றனர். நகரத்தில் உள்ள ஆசிரியர்கள் குறைவான ஆதரவைத் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தை கற்பிக்கும் வகுப்பு, அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது, 6 மற்றும் 7ஆம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களும் 6 முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் இக்கருத்தோடு உடன்படுகின்றனர்.

**சங்கப்பாடலின் தலைப்பை எழுதவும், கருத்துகளை எழுதவும் கரும்பலகையைப் பயன்படுத்துதல்** என்ற கருத்துக்கு பெருமளவில் பெண் ஆசிரியர்கள் உடன்படுகின்றனர். எனினும், 20 முதல் 32 வயதுள்ள ஆசிரியர்கள் மிகக் குறைந்த அளவில் இசைவைத் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தை அனுபவம், பள்ளி அடிப்படையில் கணக்கிடும் போது தனியார் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களும் 6 முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் கிராமங்களில் உள்ள ஆசிரியர்களும் கருத்தைத் தெரிவு செய்துள்ளனர்.

**சங்கப்பாடல் கற்பித்தலில் படங்கள் வரைய கரும்பலகையைப் பயன்படுத்துதல்** என்ற கருத்தை 6 முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்கள் மிகுதியான ஆதரவைத் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தை பள்ளி, வயது அடிப்படையில் கணக்கிடும் போது, அரசுப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களும் 33 முதல் 45 வயதுள்ள ஆசிரியர்களும் மாநகரத்தில் உள்ள ஆசிரியர்களும் தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் பெரும்பான்மையாக ஏற்றுள்ளனர்.

**சங்கப்பாடல் அடிகளைக் கரும்பலகையில் எழுதுதல்** என்ற கருத்தை பெரும்பாலான ஆசிரியர்கள் ஏற்றுள்ளனர். 20 முதல் 32வயதுள்ள ஆசிரியர்கள் மறுப்பு தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தைப் பயிற்றுமொழி பால் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசுப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களும்


பெண் ஆசிரியர்களும் நகரத்தில் உள்ள ஆசிரியர்களும் மிகுதியாக ஆதரவைத் தெரிவித்துள்ளனர். மேற்கண்ட ஆசிரியர்களின் கருத்துகளுக்கு பின்வருவன காரணங்களாக அமையலாம்.

கரும்பலகை என்பது பசுமைமாறா துணைக்கருவியாகக் கற்பித்தலில் திகழ்கிறது. கரும்பலகை பயன்பாட்டிற்குப் பொதுவாக அனைத்து ஆசிரியர்களின் ஆதரவும் அதிகப்படியாகத்தான் உள்ளது. இருப்பினும், அதைப் பயன்படுத்தும் முறையில் சில வேறுபாடுகள் காணப்படுகிறது. தற்போது, காணொலிக் காட்சிகளும் படங்களும் கணிணி பயன்பாடும் அதிகரித்து உள்ள சூழ்நிலையில் இவற்றை பயன்படுத்தும் வசதி உள்ளவர்களின் கரும்பலகைப் பயன்பாட்டிற்கும் இது போன்ற வசதி அல்லாத பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களின் கரும்பலகைப் பயன்பாட்டிற்கும் மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது. இருப்பினும், அனைவருமே கரும்பலகை பயன்பாட்டிற்கு, ஏதேனும் ஒரு வகையில் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.

### 3.7 துணைக்கருவிகள் பயன்படுத்துதல் (கணிணி, …)

**‘கருத்து விளக்கம் பெறுவதற்கு மொழியில் விளக்குவது மட்டும் சில நேரங்களில் போதுமானதாக அமைவதில்லை. துணைக்கருவிகள் கற்பிப்பிற்குத் துணையாக அமைவதோடு கற்றல் செயல்களுக்கும் துணையாக அமைகின்றன’.**[9] கற்பித்தல் உபகரணங்கள் காலத்திற்கேற்றவாறு விரிவடைந்தும் தொழில் நுட்பத்திற்கேற்றவாறு வளர்ந்தும் வருகிறது. **‘பாடத்துக்குத் தேவையான துணைக்கருவிகளை தயார் செய்து உரிய இடத்தில் பயன்படுத்திப் பாடத்தை நடத்துதல் வேண்டும்’**[10] மாணவர்களின் கற்றல் ஆர்வம், புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய கற்பித்தலைச் சார்ந்தே உள்ளது. எனவே, கற்பித்தலில் துணைக்கருவிகளின் பயன்பாட்டைக் குறித்து ஆய்வது இன்றியமையாததாகும். ஆதலால், சங்கப்பாடல் கற்பித்தலில் துணைக்கருவிகள் பெறும் இடம் குறித்து அறிவதற்காக 5 வினாக்கள் கேட்கப்பட்டன. அதில், துணைக்கருவிகள் பயன்படுத்துவதன் அவசியம், கற்பனை படங்கள் வரைந்து எடுத்துச் செல்லுதல், சங்கப்பாடலை ஒலிப்பதிவு நாடாவில் கேட்கச் செய்தல், கற்பித்தலுக்கு கணிப்பொறியைப் பயன்படுத்துதல், மனவரைபடம், வரைபடத்தாள், மற்றும் படங்கள் பயன்படுத்துவதன் அவசியம் ஆகியவற்றைக் குறித்து வினாக்கள் எழுப்பப்பட்டன. கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு தகவலாளர்களிடமிருந்து கிடைத்த தகவல்கள் கணக்கீடுகளுக்கு உட்படுத்தப்பட்டு, கருத்துகளுக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் பற்றிய விவரங்களும், அதற்கான காரணங்களும் விளக்கப்பட்டுள்ளது.

## துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல்




**சங்கப்பாடல் கற்பிக்கத் துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல் அவசியம்** என்ற கருத்தை 10 வருடத்திற்கு மேல் அனுபவமுள்ள ஆசிரியர்கள் பெரும்பான்மையாக ஏற்றுக் கொண்டுள்ளனர். 33 முதல் 45 வயதுள்ள ஆசிரியர்கள் மறுத்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தை கற்பிக்கும் வகுப்பு, பால் அடிப்படையில் கணக்கிடும் போது, தனியார் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களும் 9 மற்றும் 10ஆம் வகுப்புக் கற்பிக்கும் ஆசிரியர்களும் பெண் ஆசிரியர்களும் தெரிவு செய்துள்ளனர்.

**சங்கப்பாடலுக்கேற்ற படங்களைக் கற்பனையாக வரைந்து எடுத்துச் செல்லுதல்** என்ற கருத்துக்கு தனியார் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் இசைவு தெரிவித்துள்ளனர். நகரத்தில் உள்ள ஆசிரியர்கள் மறுப்பு தெரிவித்துள்ளனர். மேலும் பால், அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது, 6 மற்றும் 7ஆம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களும் பெண் ஆசிரியர்களும் 20 முதல் 32 வயதுள்ள ஆசிரியர்களும் 1 முதல் 5 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் இக்கருத்துக்கு எதிர்நிலையில் உள்ளனர்.

**சங்கப்பாடலை நல்ல இசையுடன் பாடி ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்து மாணவர்களைக் கேட்கச் செய்தல்** என்ற கருத்துக்கு தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்கள் அதிகமான ஆதரவைத் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தை பள்ளி, அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசு உதவிபெறும் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களும் 6 முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் கிராமத்தில் உள்ள

ஆசிரியர்களும் தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் மறுப்புத் தெரிவிக்கின்றனர்.

**சங்கப்பாடல்களைக் கற்பிக்க கணிப்பொறியைப் பயன்படுத்துதல்** என்ற கருத்தை 33 முதல் 45 வயதுள்ள ஆசிரியர்கள் பெருமளவில் ஏற்கின்றனர். நகரத்தில் உள்ள ஆசிரியர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஏற்கின்றனர். மேலும் இந்தக் கருத்தை பள்ளி, பால், அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது அரசுப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களும் பெண் ஆசிரியர்களும் 1 முதல் 5 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் பெருமளவு இசைவைத் தெரிவித்துள்ளனர்.

**பிற பாடங்களுக்குப் பயன்படுத்தும், வரைபடத்தாள், மனவரைபடம் ஆகியவற்றைச் சங்க இலக்கியக் கற்பித்தலுக்கும் பயன்படுத்துதல்** என்ற கருத்துக்குக் கிராமங்களில் உள்ள ஆசிரியர்கள் பெருமளவில் ஏற்கின்றனர். ஆங்கில மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்கள் எதிர்நிலையில் பதில் அளித்து உள்ளனர். மேலும் இந்தக் கருத்தைப் பள்ளி கற்பிக்கும் வகுப்பின் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசு உதவிபெறும் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களும் 9 மற்றும் 10ஆம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களும் கருத்தோடு உடன்படுகின்றனர்.

ஆசிரியர்களின் இவ்வகையான கருத்துகளுக்கு பின்வருவனவற்றைக் காரணமாகக் கொள்ளலாம்.

இன்றுள்ள துணைக்கருவிகளின் வளர்ச்சியையும் அதன் பயன்களையும் கற்பித்தலில் அனுபவம் உள்ளவர்களால் அறிந்து கொள்ள முடிகிறது. அதனால் கற்பித்தலில் அனுபவம் உள்ள ஆசிரியர்கள் துணைக்கருவிகளின் பயன்பாட்டிற்கு முக்கியத்துவம் தந்திருக்கலாம்.

இருப்பினும், இன்றுள்ள தொழில்நுட்பங்களின் உதவியால் உருவாக்கப்படும் துணைக்கருவிகளைத் தயாரிக்கப் போதுமான நேரமின்மையினாலும் திறமையின்மையினாலும் மற்றவர்களை எதிர்பார்த்துக் காத்திருக்கும் சூழ்நிலையும் ஏற்படுகிறது. இதனால், இதிலிருந்து விலகி இருக்க வேண்டும் எனவும் சில ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

பெரும்பாலும் நகரத்தில் உள்ள பள்ளிகள் மற்றும் ஆங்கில வழியில் கற்பிக்கும் பள்ளிகள் அனைத்தும் தனியார் பள்ளிகளாகவே உள்ளன. தனியார் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் துணைக்கருவிகளோடு கற்பிக்க வேண்டும்

என்பது கட்டாயமாகக் கருதப்படுகிறது. அதனால், துணைக்கருவிகளை பயன்படுத்துவதில் அவர்கள் ஆர்வத்தைக் காட்டுகின்றனர்.

9 மற்றும் 10 வகுப்பு மாணவர்கள் தொழில் நுட்பத்தில் சிறந்து விளங்குவதால், துணைக்கருவிகளைப் பயன்படுத்துவதில் மாணவர்களையும் ஈடுபடுத்த முடியும் என்பதாலும் மாணவர்களே துணைக்கருவிகளை உருவாக்கி கற்பித்தலை நிகழ்த்த முடியும் என்பதாலும் இம்முறை நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

படம் வரைதல், அலங்கார வேலை செய்தல் போன்ற கற்பித்தலுக்கு அப்பாற்பட்ட சில வேலைகளில் பெண்கள் ஆண்களைக் காட்டிலும் ஆர்வம் செலுத்துவதால் துணைக் கருவிகள் தயாரிப்பது பெண்களுக்கு எளிதானதாக இருக்கலாம்.


இன்றைய சூழ்நிலையில் கற்பித்தல் என்பது கற்றல் அடைவைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது. இதனால் மாணவர்கள் மனவரைபடம், வரைபடத்தாள் போன்றவற்றைப் பயன்படுத்தும் போது ஏற்படும் கற்றல் அடைவின் வேறுபாட்டை அனைத்து ஆசிரியர்களும் உணர்ந்துள்ளனர்.

இன்றைய பள்ளி நடைமுறைகளில் பெரும்பாலும் கணினிப் பயன்பாட்டில் வந்துள்ளது. இன்று தனியார் பள்ளிகள் பலவற்றில் அனைத்தும் கணினியின் வழியில் நடைபெறுகிறது. இதனால் கற்பித்தலின் போது காணொலிக் காட்சிகளைக் காண்பிக்கவும் ஒலிப்பதிவுகளை ஒலிக்கவும் படங்கள் காண்பிக்கவும் கணினிகளை அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். கற்பித்தலில் கணினியைப் பயன்படுத்தும் கருத்துக்கு அனைத்து ஆசிரியர்களிடத்திலும் நல்ல ஆதரவே கிடைத்துள்ளது. இருப்பினும், கணினி பயன்படுத்துவதில் திறமை குறைந்த ஆசிரியர்கள் இதற்கு சற்று எதிர்மாறாக இசைவு தெரிவித்துள்ளனர்.

### 3.8 வினாக்கள் கேட்டல்

**'ஆசிரியர் கற்பித்தல் செயலின்போது மாணவர்களுடைய கற்றல் திறனை அறிய பயன்படுத்தும் உபகரணம் வினாவாகும்'**[11] கற்பித்தலின் போது உடனுக்குடன் வினாக்கள் கேட்பதால் மட்டுமே, மாணவர்களின் கற்றல் அடைவை அறிந்து கொள்ள முடியும். வகுப்பறையில் கலந்துரையாடல் கற்பித்தலுக்கு இந்த முறை மிகவும் சிறந்ததாகும். எனவே, கற்பித்தலின் போது இடையிடையே வினாக்கள் கேட்பது குறித்து, ஆசிரியர்களின் கருத்துகளை அறிந்து கொள்வதற்காக 5 வினாக்கள் கேட்கப்பட்டன. அதில், சங்கப் பாடல்களைக் கற்பிக்கும் போது, எப்போது வினாக்கள் கேட்பது? எப்படிப்பட்ட

வினாக்கள் கேட்பது? எவ்வாறு கேட்பது? எந்தப் பகுதியில் இருந்து கேட்பது? ஆகியவற்றைக் குறித்து வினாக்கள் எழுப்பப்பட்டன. கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு தகவலாளர்களிடமிருந்து கிடைத்த தகவல்கள் கணக்கீடுகளுக்கு உட்படுத்தப்பட்டு, கருத்துகளுக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் பற்றிய விவரங்களும், அதற்கான காரணங்களும் விளக்கப்பட்டுள்ளது.




**சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் போது இடையிடையே வினாக்கள் கேட்டல்** என்ற கருத்தைப் பெருமளவில் ஆசிரியர்கள் ஏற்கின்றனர். 20 முதல் 32 வயதுள்ள ஆசிரியர்கள் குறைந்த பட்ச அளவில் ஆதரவைத் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தை பால். பள்ளி, அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசுப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களும் பெண் ஆசிரியர்களும் 6 முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் கிராமங்களில் உள்ள ஆசிரியர்களும் ஆங்கில மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டுக் கற்பிக்கும் ஆசிரியர்களும் கருத்துக்கு உடன்படுகின்றனர்.

**மனப்பாடப் பகுதி மட்டுமல்லாமல் மற்ற சங்கப் பாடல்களிலிருந்தும் வினாக்கள் கேட்டல்** என்ற கருத்தை பெருமளவில் பெண் ஆசிரியர்கள் ஏற்றுள்ளனர். 6 முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்கள் எதிர்நிலையில் உள்ளனர். மேலும் இந்தக் கருத்தைப் பள்ளி, பால், அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது, தனியார் பள்ளி ஆசிரியர்களும் 6 மற்றும் 7ஆம் வகுப்புக் கற்பிக்கும் ஆசிரியர்களும் மாநகரத்தில் உள்ள ஆசிரியர்களும் தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் கருத்தோடு உடன்படுகின்றனர்.

**சங்கப்பாடல் அடிகளைப் பிழையில்லாமல் எழுதும் வகையில் வினாக்கள் கேட்டல்** என்ற கருத்துக்கு 46 முதல் 58 வயதுள்ள ஆசிரியர்கள் பெரும்பான்மையான அளவில் ஆதரவைத் தெரிவித்துள்ளனர். ஆனால், ஆண் ஆசிரியர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளனர். மேலும், இந்தக் கருத்தை பள்ளி, பால் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசு உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களும் 9 மற்றும் 10ஆம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களும் 6 முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் நகரத்தில் உள்ள ஆசிரியர்களும் ஓரளவிற்கு இசைவு தெரிவித்துள்ளனர்.

**வினாக்கள் கேட்கும் போது இலக்கியக் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தல்** என்ற நிலைபாட்டிற்கு நகரத்தில் உள்ள ஆசிரியர்கள் பெருமளவில் ஆதரவைத் தெரிவித்துள்ளனர். தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்கள் இக்கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும் இந்தக் கருத்தை அனுபவம், கற்பிக்கும் வகுப்பு அடிப்படையில் கணக்கிடும் போது, 6 மற்றும் 7ஆம் வகுப்புக் கற்பிக்கும் ஆசிரியர்களும் 33 முதல் 45 வயதுள்ள ஆசிரியர்களும் 10 வருடங்களுக்கு மேல் அனுபவமுள்ள ஆசிரியர்களும் பெருமளவு ஏற்கின்றனர்.

**சங்கப்பாடல் அடிகளைப் பிழையின்றி கூறச் சொல்லுதல்** என்ற கருத்துக்கு அரசுப் பள்ளி ஆசிரியர்கள் பெரும்பான்மையான அளவில் இசைவைத் தெரிவித்துள்ளனர். 33 முதல் 45 வயதுள்ள ஆசிரியர்கள் குறைந்த அளவில் உடன்பட்டுள்ளனர். மேலும் இந்தக் கருத்தைப் பால், அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது, பெண் ஆசிரியர்களும் 1 முதல் 5 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் நகரத்தில் உள்ள ஆசிரியர்களும் ஆங்கில மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் கருத்துக்கு உடன்படுகின்றனர். ஆசிரியர்களின் கருத்தில் ஏற்படும் இந்த வேறுபாட்டிற்கு கீழ்வரும் கருத்துகளைக் காரணமாகக் கொள்ளலாம்.

கற்பித்தலின் போது இடையிடையே வினாக்கள் கேட்பது காலங்காலமாக கற்பித்தலில் நிகழும் ஒரு செயலாகும். இதனால் மாணவர்களின் கவனம் சிதைவடையாமல் கற்றலில் முழு ஈடுபாட்டைச் செலுத்த முடியும். சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பிக்கும் போது இடையிடையே வினாக்கள் கேட்கும் கருத்திற்குப் பெரும்பான்மையாக அனைத்து ஆசிரியர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர். இருப்பினும், எண்ணிக்கையின் அடிப்படையில் ஆசிரியர்களின் கருத்துக் கணிப்பில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.

செய்யுள் பகுதி மனப்பாடப் பகுதியாக இருப்பின் ஆசிரியர்கள் கேள்வி கேட்பது கட்டாயம் நடைபெறும். ஆனால், சங்கப் பாடல்கள் அனைத்தும்

மனப்பாடப் பகுதியாக இருப்பதில்லை. எனவே, சில ஆசிரியர்கள் பாடத்தின் பொருளை மட்டும் விளக்குவதால், கேள்விகளும் பொருளைச் சார்ந்தே அமைகின்றன. பாடலைச் சார்ந்து அமைவதில்லை. இதனால் ஆசிரியர்களின் கருத்துக் கணிப்பில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தனியார் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மனப்பாடச் செய்யுளுக்கே முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இந்நிலையில் சங்கப் பாடல்களை எழுத வைத்தல் என்பது சற்றுக் கடினமானதாகும். எனவே, அனுபவமிக்க ஆசிரியர்கள், வயதில் மூத்த ஆசிரியர்கள் சங்கப் பாடல்களை மனனமாக சொல்வதை மற்றும் எழுதுவதை ஆதரித்தாலும் மற்ற ஆசிரியர்கள் இதிலிருந்து சற்று விலகிக் காணப்படுகிறார்கள். 9 மற்றும் 10 வகுப்புகளில் வினாத்தாளில் கேட்கப்படும் கேள்விகளைப் பொறுத்தே கற்பித்தலானது நிகழ்கிறது. இருப்பினும், சங்கப்பாடல்களைச் சொல்ல வைப்பதிலும் எழுத வைப்பதிலும் ஒரு சில ஆசிரியர்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.


மாணவர்களிடம் வினாக்கள் கேட்கும் இலக்கியத்தின் கருத்துகளுக்கு உட்பட்ட வினாக்களைக் கேட்டால், அதனால் இலக்கியத்தின் மீது ஒரு ஈடுபாடு மாணவர்களுக்கு ஏற்படும். இதன் மூலம் அவர்களின் இலக்கிய ஆர்வம் கூடி அதிகப்படியான இலக்கிய நூல்களை படிக்கும் ஆர்வம் ஏற்படும். எனவே இக்கருத்துக்கு நகரத்தில் உள்ள ஆசிரியர்கள் அதிகப்படியான ஆதரவைத் தெரிவித்துள்ளனர். எனினும், தமிழ் வழிக் கல்வி பயிலும் மாணவர்கள் இந்த முறையில் ஆர்வம் செலுத்துவதில்லை. சொந்த நடையில் எழுதும் போது கருத்தில் ஓரளவு ஒற்றுமையிருந்தால் போதும் என எண்ணுகின்றனர். அதையும் மீறி, கருத்தை ஆழப்படுத்தும் போது, சங்க இலக்கியங்களை வெறுக்கத் தொடங்கி விடுகின்றனர். அதனால், தமிழ் வழி பயிலும் மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இந்த கருத்திற்கு அதிக ஆதரவினை வழங்கவில்லை.

### 3.9 தமிழ்ப் பாடத் தேர்வில் சங்கப் பனுவல்களுக்கு மாணவர்கள் பதில் அளித்த விதம்

சங்கப்பாடல்களின் கற்பித்தலானது தேர்வில் மாணவர்கள் அளிக்கும் விடைகளிலேயே முடிவடைகிறது. சங்கப்பாடல்கள் சம்பந்தப்பட்ட வினாக்களை மாணவர்களைத் தேர்வு நேரங்களில் ஆட்கொள்ளும் விதம் பற்றியும் மாணவர்களின் சங்கப்பாடல் சம்பந்தப்பட்ட விடைகளை ஆசிரியர்கள் கையாளும் விதம் மற்றும் மதிப்பெண் கொடுக்கும் முறை ஆகியவற்றைப் பற்றியும் அறிய வேண்டியது அவசியமாகும். எனவே, தேர்வு முறைகளைப் பற்றி 5 வினாக்கள் கேட்கப்பட்டன. அதில், தேர்வில் சங்கப்பனுவல் சம்பந்தப்பட்ட வினாக்கள் கேட்கும் முறை, மாணவர்கள் தேர்வுகளில் சங்கப்பனுவல் சம்பந்தமான

வினாக்களுக்கு விடையளிக்கும் முறை, மதிப்பிடும் முறை ஆகியவற்றைக் குறித்து வினாக்கள் எழுப்பப்பட்டன. கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு தகவலாளர்களிடமிருந்து கிடைத்த தகவல்கள் கணக்கீடுகளுக்கு உட்படுத்தப்பட்டு, கருத்துகளுக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் பற்றிய விவரங்களும், அதற்கான காரணங்களும் விளக்கப்பட்டுள்ளது.

**மாணவர்கள் விடையளிக்கும் தன்மை**




**தேர்வில் சங்கப் பனுவல் சம்பந்தப்பட்ட கேள்விகளை மாணவர்கள் தவிர்த்து விடுகின்றனர்** என்ற கருத்துக்கு 33 முதல் 45 வயதுள்ள ஆசிரியர்கள் அதிக அளவில் இசைவுத் தெரிவித்துள்ளனர். 6 மற்றும் 7ஆம் வகுப்புக் கற்பிக்கும் ஆசிரியர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தைப் பள்ளி, பால், அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசுப் பள்ளி ஆசிரியர்களும் பெண் ஆசிரியர்களும் 1 முதல் 5 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் நகரத்தில் உள்ள ஆசிரியர்களும் தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் அதிக அளவில் கருத்துக்கு உடன்படுகின்றனர்.

**சங்கப்பனுவல் சம்பந்தப்பட்ட விளக்கமுறை வினாக்களுக்கு மட்டுமே மாணவர்கள் விடையளிக்கின்றனர்** என்ற கருத்தைக் கிராமத்தில் உள்ள ஆசிரியர்கள் ஏற்றுள்ளனர். 6 மற்றும் 7ஆம் வகுப்புப் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஏற்கவில்லை. மேலும் இந்தக் கருத்தைப் பள்ளி, கற்பிக்கும் வகுப்பு, பால் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசு உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களும் 9 மற்றும் 10ஆம் வகுப்புக் கற்பிக்கும் ஆசிரியர்களும் ஆண் ஆசிரியர்களும் 6

முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் மிகுதியாக ஏற்றுள்ளனர்.

**சங்கப்பனுவல் சம்பந்தப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கும் போது அதன் மையக்கருத்து மாறாமல் இருக்கிறது** என்ற கருத்துக்கு 9 மற்றும் 10ஆம் வகுப்புக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பெரும்பான்மையாக ஏற்புத் தெரிவித்துள்ளனர். பெண் ஆசிரியர்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். மேலும் இந்தக் கருத்தை பள்ளி, வயது, அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது, தனியார் பள்ளி ஆசிரியர்களும் 20 முதல் 32 வயதுள்ள ஆசிரியர்களும் 1 முதல் 5 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் கருத்தோடு உடன்படுகின்றனர்.

**சங்கப்பாடல்களில் இலக்கணம் சம்பந்தப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கின்றனர்** என்ற கருத்துக்கு 1 முதல் 5 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்கள் பெருமளவில் இசைவுத் தெரிவித்துள்ளனர். நகரத்தில் உள்ள ஆசிரியர்கள் குறைந்த அளவில் ஆதரவைத் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தைப் பள்ளி, கற்பிக்கும் வகுப்பு, பால் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசுப் பள்ளி ஆசிரியர்களும் 6 மற்றும் 7ஆம் வகுப்புக் கற்பிக்கும் ஆசிரியர்களும் ஆண் ஆசிரியர்களும் அதிகப்படியாக ஏற்றுள்ளனர்.


**சங்கப்பனுவல்களை அடிபிறழாமல் எழுதச் சொல்லி கேட்கும் வினாக்களுக்கு சரியான விடையளிக்கின்றனர்** என்ற கருத்துக்கு 46 வயது முதல் 58 வயதுள்ள ஆசிரியர்கள் அதிகமான உடன்படுகின்றனர். ஆண் ஆசிரியர்கள் குறைவான ஆதரவைத் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தைப் பள்ளி, அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசுப் பள்ளி ஆசிரியர்களும் 1 முதல் 5 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் நகரத்தில் உள்ள ஆசிரியர்களும் ஆங்கில மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் பெருமளவில் இசைவைத் தெரிவித்துள்ளனர். இதற்கான காரணங்களாக பின்வருவனவற்றைக் கருதலாம்.

தமிழ்ப் பாடநூல்களில் சங்க இலக்கியப் பாடல்கள் இடம்பெறும் விகிதாச்சார அடிப்படையில் மட்டுமே வினாக்கள் தேர்வுகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றன. எனவே, பெரும்பாலும் சங்க இலக்கியம் தொடர்பாக வினாக்கள் மிகக் குறைந்த அளவில் இடம்பெறுகின்றன. இதிலும் மாணவர்கள் இவ்வினாக்களை தவிர்த்து விடுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். வினாக்களுக்கு விடை எழுதும் மாணவர்களும், பத்தி வினாக்களாகவோ அல்லது விளக்கமுறை வினாக்களாகவோ இருந்தால் மட்டுமே அதை ஏற்றுக் கொள்கின்றனர். பாடலை எழுதுவதாகவோ, சங்கப்பனுவல்களைக் கூறுவதாகவோ, சங்கப் பனுவல்களின் இலக்கணம் விளக்கும் குறிப்பு வினாக்களோ வினாத்தாளில் இடம்பெறுவதில்லை.

அதனால், மாணவர்களும் அந்த நோக்கில் தேர்வுகளுக்குக் கற்பதும் இல்லை. எனவே, இது போன்ற வினாக்கள் இருந்தால் நன்மை அளிக்கும் என்ற ஆர்வத்தில் ஆசிரியர்கள் இக்கருத்துகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இருப்பினும் மாணவர்களிடம் இந்த ஈடுபாடு முழுமையாகக் கிடைக்குமா என்ற நோக்கில் சில ஆசிரியர்கள் இக்கருத்துகளுக்கு முழுமையான ஆதரவை தெரிவிக்கவில்லை.

### 3.10 மதிப்பீடு செய்தல்

**'ஆசிரியரின் உரைகல்லாக விளங்குவது மதிப்பீடு. மாணவனின் கற்றல் அளவை, நிலையை அளக்க உதவும் அளவுகோலாகச் செயல்படுகிறது'**[12] தேர்வுகள் மாணவர்களின் கற்றல் அடைவை எடுத்துக்காட்டும் சிறந்த ஆயுதம். இதில் மிக முக்கியப்பங்கு வகிப்பது மதிப்பீடு. மதிப்பீட்டின் மூலம் ஒரு ஆசிரியரின் கற்பித்தல் பலம், மாணவர்களின் கற்றல் அடைவு இரண்டையும் தீர்மானிக்க முடியும். எனவே, மதிப்பீட்டில் எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும், எவற்றை? எப்படி? மதிப்பீடு செய்ய வேண்டும் என்று ஆய்வது என்பது குறித்து 5 வினாக்கள் கேட்கப்பட்டன. அதில், படித்தல் திறனுக்கு மதிப்பளித்தல், இலக்கிய வளத்திற்குக் கொடுக்கும் மதிப்பு, மனனம் செய்தல், ஒப்புவித்தல், சொற்களஞ்சியத் திறன், தொடர்பணி ஆகியவற்றிற்கு மதிப்பீடு வழங்குதல் போன்றவற்றைக் குறித்து வினாக்கள் எழுப்பப்பட்டன. கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு தகவலாளர்களிடமிருந்து கிடைத்த தகவல்கள் கணக்கீடுகளுக்கு உட்படுத்தப்பட்டு, கருத்துகளுக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் பற்றிய விவரங்களும், அதற்கான காரணங்களும் விளக்கப்பட்டுள்ளது.



**மதிப்பீடலில் படித்தல் திறனுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்** என்ற கருத்துக்கு தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்கள் பெருமளவில் ஆதரவைத் தெரிவித்துள்ளனர். மேலும், இந்தக் கருத்தைக் குறிப்பிட்ட பிரிவுகளின் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசு உதவிபெறும் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களும் ஆண் ஆசிரியர்களும் 6 முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் கிராமத்தில் உள்ள ஆசிரியர்களும் இக்கருத்துக்கு இசைவு தெரிவித்ததிற்கான காரணங்களைப் பின்வருமாறு கணிக்கலாம்.

படித்தல் திறனுக்கு மதிப்பெண் ஒரு பகுதியை ஒதுக்குவது இன்று வழக்கத்தில் இருந்தாலும், அந்த படித்தல் திறன் என்பது உரைநடை பகுதிக்கு பிரிக்கப்பட்டுள்ளதே தவிர, செய்யுள் பகுதிக்கு அல்ல. முன்பருவ பள்ளிகளில் மொழிப்பயிற்சிக்குப் பெரும்பாலும் பாடல்களையே பயன்படுத்துகின்றனர். ஆனால், மொழி வளம் அடைந்தவுடன் உரைநடைகளுக்கே முக்கியத்துவம் வழங்குகின்றனர். இருப்பினும், மதிப்பீடு என்பது கல்வி கொள்கைகளைக் கொண்டு, அதன் விதிமுறைகளின் படியே பிரிக்கப்படுகிறது.

இந்த நிலையில் தமிழ் வழியில் பயிலும் மாணவர்கள் உரைநடைப் படித்தலில் திறன் பெற்றிருப்பதால் இலக்கியங்களைப் படிப்பதற்கு அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

சற்று அனுபவம் உள்ள ஆசிரியர்களும் கிராமத்தில் உள்ள ஆசிரியர்களும் மாணவர்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மேலும், பல தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களே அவர்களுக்கான வினாத்தாளை உருவாக்குவதால் மதிப்பீட்டில் மாற்றங்கள் செய்ய வாய்ப்புகள் இருப்பதால் இக்கருத்தை ஆதரித்துள்ளனர். மற்ற ஆசிரியர்கள் சற்று பின் வாங்கியுள்ளனர்.

**இலக்கியத்திற்குரிய கருத்து சரியாக இருந்து வாக்கியம் பிழையாக இருந்தால் மதிப்பு வழங்குதல்** என்ற கருத்தைப் பெண் ஆசிரியர்கள் பெருமளவில் ஏற்கின்றனர். கிராமத்தில் உள்ள ஆசிரியர்கள் குறைந்தபட்ச அளவில் இசைவைத் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தை அனுபவம் பள்ளி அடிப்படையில் கணக்கிடும் போது, அரசுப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களும் 10 வருடத்திற்கு மேல் அனுபவமுள்ள ஆசிரியர்களும் ஆங்கில

மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் கருத்தக்கு உடன்படுகின்றனர். இதற்குப் பின்வருவனவற்றைக் காரணங்களாகக் கருதலாம்.

இலக்கியத்தை எழுதினாலும் மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதனால் பிழை இருந்தால் அதற்கு எப்படி மதிப்பெண் வழங்க முடியும் என்ற நோக்கில் கிராமத்தில் உள்ள ஆசிரியர்கள் இந்தக் கருத்திற்கு மிகக் குறைந்த அளவே ஆதரவு தெரிவித்துள்ளனர்.

வாக்கியங்கள் முழுமையாக இருந்தால் மட்டுமே கருத்துகள் செறிவாக இருக்க முடியும் என்ற கருத்தை மையப்படுத்தி, ஆசிரியர்கள் பெரும்பாலும் மேற்கண்ட கருத்துக்கு குறைவான ஆதரவையே தெரிவித்துள்ளனர்.

9 மற்றும் 10ஆம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்கள் பொதுத் தேர்வுக்கு மாணவர்களை தயார் செய்வதாலும், மதிப்பெண் நோக்கில் மாணவர்களுக்கு கற்பிப்பதாலும், வாக்கியப் பிழைகளைக் காட்டிலும் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கில் இக்கருத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஆசிரியர்கள் இக்கால மாணவர்களின் மனநிலையையும் கற்றல் திறனையும் நன்கு அறிந்திருப்பதாலும் மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் இக்கருத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அனுபவம் மிகுந்த ஆசிரியர்கள் மாணவர்களின் வளர்ச்சியையும் இன்றைய மாணவர்களிடத்தில் உள்ள கற்றல் அடைவையும் அன்றைய மாணவர்களிடத்தில் இருந்த கற்றல் அடைவையும் ஒப்பிட்டுப் பார்த்து இக்கருத்துக்கு ஆதரவு தெரிவித்திருக்கலாம்.

ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களின் வாக்கியப் பிழைகளை நன்கு அறிவர். எனவே, மாணவர்களின் மொழிவளத்தை மேம்படுத்தும் பொருட்டும், மாணவர்களின் கற்றல் சுமையைக் கருத்தில் கொண்டும் இக்கருத்துக்கு ஆதரவு தெரிவித்திருப்பர்.

**சங்கப்பாடலை மனனம் செய்து ஒப்புவித்தால் சிறப்பு மதிப்பெண் வழங்குதல்** என்ற கருத்துக்கு 6 மற்றும் 7ஆம் வகுப்புக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பெருமளவில் இசைவு தெரிவிக்கின்றனர். ஆனால், ஆண் ஆசிரியர்கள் எதிர்நிலையில் உள்ளனர். மேலும் இந்தக் கருத்தை அனுபவம் பள்ளி அமைவிடம் அடிப்படையில் கணக்கிடும் போது, தனியார் பள்ளி ஆசிரியர்களும் 20 முதல் 32 வயதுள்ள ஆசிரியர்களும் 6 முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் கிராமத்தில் உள்ள ஆசிரியர்களும் பெருமளவில் ஏற்பைத் தெரிவித்துள்ளனர். பின்வரும் கருத்துகளை இதற்குக் காரணமாகக் கொள்ளலாம்.

சங்க இலக்கியங்களை அறிமுகப்படுத்தும் நிலையில், 6 மற்றும் 7ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஒப்புவித்தலுக்காக சிறப்பு மதிப்பெண் வழங்குவது அவர்களின் சங்க இலக்கிய கற்பித்தலுக்கு ஒரு உந்துதலாக அமையும் என்ற நோக்கில் அதிகப்படியான ஆதரவைத் தெரிவித்துள்ளனர். இருப்பினும், மனனம் செய்தல் என்பதை ஊக்குவித்தால், எழுதுதல் திறனில் குறைவு ஏற்பட்டு விடுமோ என்ற ஐயத்தில் சில ஆசிரியர்கள் குறைவான ஆதரவையே தெரிவித்துள்ளனர்.

தனியார் பள்ளிகள் பெரும்பாலும், மத்திய கல்வி அல்லது பன்னாட்டுக் கல்வி முறையைப் பயன்படுத்துவதால், அவற்றிற்கான தேர்வு அடிப்படையில் இம்முறையிலான வாய்மொழித்தேர்வு மதிப்பெண் ஒரு பிரிவு உள்ள நிலையில், தனியார் பள்ளி ஆசிரியர்கள் இக்கருத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மேலும், பாடங்களை எழுதி மதிப்பெண் எடுக்கும் முறையுடன் சேர்ந்து, பாடங்களை மனனம் செய்து பாடுவதில் மாணவர்களுக்கு மதிப்பெண் வழங்குவதால், அனைத்து மாணவர்களும் நன்மதிப்பெண் பெறுவதற்கான வாய்ப்புகள் உண்டு. எனினும், இவற்றிற்குக் கால அவகாசம் தேவைப்படும் என்பதாலும், ஒவ்வொரு மாணவனையும் தனித்தனியாக அழைத்துத் தேர்வு நடத்தும் வசதிகள் இல்லாத காரணத்தாலும், மதிப்பெண்ணில் ஒருசார்பு மதிப்பெண் அமைவதற்கான வாய்ப்புகள் இருப்பதாலும் பலர் இக்கருத்திற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.

**மாணவர்கள் சங்கப்பாடல்களில் இடம்பெறும் அருஞ்சொற்களை வாக்கியத்தில் பயன்படுத்தினால் சிறப்பு மதிப்பெண் வழங்குதல்** என்ற கருத்துக்கு 1 முதல் 5 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்கள் மிகுதியான இசைவைத் தெரிவித்துள்ளனர். மாநகரத்தில் உள்ள ஆசிரியர்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். மேலும் இந்தக் கருத்தை பள்ளி, பால் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசு உதவிபெறும் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களும் ஆண் ஆசிரியர்களும் 46 முதல் 58 வயதுள்ள ஆசிரியர்களும் தமிழ் மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் குறைந்த அளவில் ஏற்றுள்ளனர் என்பதிற்கு பின்வருவன காரணங்களாக அமையலாம்.

மொழியில் திறமையுள்ளவர், மொழியில் ஈடுபாடுள்ளவர்கள் போன்றவர்கள்கூட தாம் அமைக்கும் வாக்கியங்களில் அவர்களுக்கே உரிய ஒரு குறிப்பிட்ட சொற்தொகுப்புகளையே மீண்டும் மீண்டும் பயன்படுத்துவர். அவர்கள் பயன்படுத்தும் சொற்களை எண்ணிக்கையிட்டு கூறிவிட முடியும். இந்நிலையில், மாணவர்களின் சுய வாக்கியத்தில் சங்க இலக்கியங்களில் இடம்பெறும் சொற்கள் இடம்பெறுதல் என்பது ஆசிரியரின் முழு ஊக்கத்தினால் மட்டுமே முடியும். அவ்வாறு, மாணவர்கள் இலக்கியச் சொற்களை உள்வாங்கி அதை சரியான

இடங்களில் பயன்படுத்தும் போது, அதற்காகச் சிறப்பு மதிப்பெண் வழங்குதல், பாராட்டுதல், பாராட்டுக் குறியீடு தருதல் போன்றவை மாணவர்களை மேலும், மேலும் சங்க இலக்கியங்களைப் படிப்பதற்கான ஆர்வத்தை ஏற்படுத்தும். எனவே, இக்கருத்திற்கு ஆசிரியர்கள் பலர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மாணவர்களின் சொற்களஞ்சியப் பெருக்கம் தற்போது குறைந்து வருவதாலும் கலைச்சொற்களையே மாணவர்கள் பெரும்பாலும் நாடுவதாலும் மாணவர்கள் பிழையின்றி வாக்கியம் அமைப்பதற்கு செய்யும் கற்பித்தலே அதிக சுமையாக இருப்பதாலும் இந்நிலையில் மாணவர்களுக்கு இலக்கியச் சொற்களையும் கொண்டு வாக்கியத்தில் அமைத்தல் என்பது சற்று கடினம் என்று எண்ணி சில ஆசிரியர்கள் இக்கருத்துக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.


**மாணவர்களுக்கு வழங்கப்படும் கூடுதல் திட்டப்பணிகளில் அவர்தம் படைப்பாற்றல் வெளிப்பட்டால் சிறப்பு மதிப்பெண் வழங்குதல்** என்ற கருத்தை நகரத்தில் உள்ள ஆசிரியர்கள் பெரும்பான்மையாக ஏற்கின்றனர். 11 மற்றும் 12ஆம் வகுப்புக் கற்பிக்கும் ஆசிரியர்கள் எதிர்நிலையில் உள்ளனர். மேலும், இந்தக் கருத்தைப் பள்ளி, பால், அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது, தனியார் பள்ளி ஆசிரியர்களும் ஆண் ஆசிரியர்களும் 1 முதல் 5 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் மிகுதியான ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

இன்றைய பாடத்திட்டத்தில் செயல்பாடுகளுக்கென தனி மதிப்பெண் வழங்கும் வாய்ப்பு அதிகம் உள்ளது. இந்நிலையில், அவர்கள் செய்யும் படைப்பாற்றலில் சங்க இலக்கிய கருத்துகள் வெளிப்படுமாயின், அதற்காக மாணவர்களைப் பாராட்டுவது ஆசிரியரின் கடமையாகும். இவ்வகையில், நகரத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு இந்த வாய்ப்பு அதிகம் என்பதால், இக்கருத்துக்கு அதிக அளவு ஆதரவு தெரிவித்துள்ளனர். இருப்பினும், 11 மற்றும் 12ஆம் வகுப்புப் படிக்கும் மாணவர்களிடத்தில் இதை எதிர்பார்க்க முடியாது என்பதால், ஆதரவு குறைவாக உள்ளது. மேலும், தனியார் பள்ளி ஆசிரியர்கள், ஆங்கில மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்ட ஆசிரியர்கள் அனைவரும் இக்கருத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

### 3.11 தொடர்பணி கொடுத்தல்

**‘வகுப்பில் கற்ற பாடப்பகுதியை நினைவு கொண்டு மனத்தில் பதியச் செய்வதற்காகத் தரும் பயிற்சியே தொடர்பணி’**[13] கற்பித்தல் என்பது ஒரு நேரத்தில் முடிவதல்ல. அது ஒரு தொடர் நிகழ்ச்சி. ‘**வீட்டு வேலை கொடுப்பதன் மூலம் மாணவர்கள் எழுத்துப் பயிற்சி பெறுவர். மனப்பாட ஆற்றல் வளரும்.**

**எனவே, வீட்டு வேலை அளித்தல் வேண்டும்.’** [14] இந்த வகையில் கற்பித்தலுக்கு இடையே உள்ள இடைவெளி நேரத்திற்கு பாலமாக அமைவது தொடர்பணிகளே ஆகும். தொடர்பணிகள் மூலம் மாணவர்களிடம் கற்பித்தல் தொடர்பான சிந்தனையைத் தூண்ட முடியும். எனவே, தொடர்பணிகள் எவ்வாறு அமைய வேண்டும்? என்பதை ஆராயும் நோக்கில் 5 வினாக்கள் கேட்கப்பட்டன. அதில், சங்கப்பாடல் எழுதி வருதல், வெவ்வேறு சங்கப்பாடல்களைக் கண்டறிதல், படைப்பாற்றல் வளர்த்தல், இலக்கிய உணர்வுகளை வளர்க்கும் வகையில் கொடுக்கும் தொடர்பணி ஆகியவற்றைக் குறித்து வினாக்கள் எழுப்பப்பட்டன. கொடுக்கப்பட்ட வினாக்களுக்குத் தகவலாளர்களிடமிருந்து கிடைத்த தகவல்கள் கணக்கீடுகளுக்கு உட்படுத்தப்பட்டு, கருத்துகளுக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் பற்றிய விவரங்களும் அதற்கான காரணங்களும் விளக்கப்பட்டுள்ளது.




**பாடநூலைத் தவிர்த்து வேறு ஏதேனும் சங்கப்பாடலைக் கண்டறிந்து படித்து வருமாறு தொடர்பணி வழங்குதல்** என்ற கருத்தைத் தனியார் பள்ளி ஆசிரியர்கள் அதிக அளவில் ஏற்றுள்ளனர். 20 முதல் 32 வயதுள்ள ஆசிரியர்கள் குறைந்த அளவில் ஆதரவைத் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தை பால், அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது, ஆண் ஆசிரியர்களும் 6 முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் கிராமத்தில் உள்ள ஆசிரியர்களும் இக்கருத்தோடு உடன்படுகின்றனர்.

**இலக்கியங்களின் கருத்துணர்தல், நயம் உணர்தல் அடிப்படையில் தொடர்பணி வழங்குதல்** என்ற கருத்தை நகரத்தில் உள்ள ஆசிரியர்கள் பெருமளவில் ஏற்கின்றனர். 10 வருடத்திற்கு மேல் அனுபவமுள்ள ஆசிரியர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் ஆதரவைத் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தை பள்ளி, கற்பிக்கும் வகுப்பு அடிப்படையில் கணக்கிடும் போது, அரசுப்

பள்ளி ஆசிரியர்களும் 6 முதல் 7ஆம் வகுப்புக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களும் பெண் ஆசிரியர்களும் 20 முதல் 32 வயதுள்ள ஆசிரியர்களும் ஓரளவிற்கு ஏற்றுள்ளனர்.

**இலக்கியப்பாடல்களின் மன வரைபடம், வினாக்கள், அருஞ்சொற்பொருள் ஆகியவற்றை மனனம் செய்யச் சொல்லி தொடர்பணி வழங்குதல்** என்ற கருத்துக்கு 11 மற்றும் 12ஆம் வகுப்புக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பெரும்பான்மையாக ஆதரவைத் தெரிவித்துள்ளனர். தனியார் பள்ளி ஆசிரியர்கள் எதிர்நிலையில் உள்ளனர். மேலும், இந்தக் கருத்தை பால், வயது. அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது, ஆண் ஆசிரியர்களும் 33 முதல் 45 வயதுள்ள ஆசிரியர்களும் 1 முதல் 5 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் ஏற்றுள்ளனர்.

**மாணவர்களின் இலக்கியப் படைப்பாற்றலை வளர்க்கும் வகையில் தொடர்பணி வழங்குதல்** என்ற கருத்துக்குப் பெரும்பாலான ஆசிரியர்கள் ஏற்புத் தெரிவித்துள்ளனர். ஆங்கில மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டுக் கற்பிக்கும் ஆசிரியர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தை பள்ளி, பால், அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசு உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களும் பெண் ஆசிரியர்களும் 6 முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் கிராமத்தில் உள்ள ஆசிரியர்களும் இசைவு தெரிவித்துள்ளனர்.


**சங்கப்பாடலை மனனம் செய்து எழுதி வருமாறு தொடர்பணி வழங்குதல்** என்ற கருத்திற்கு 46 முதல் 58 வயது வரை உள்ள ஆசிரியர்கள் மிகுதியான அளவில் ஏற்புத் தெரிவித்துள்ளனர். 1 முதல் 5 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். மேலும், இந்தக் கருத்தைப் பள்ளி, பால், அமைவிடம் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசுப் பள்ளி ஆசிரியர்களும் ஆண் ஆசிரியர்களும் நகரத்தில் உள்ள ஆசிரியர்களும் இக்கருத்துக்கு உடன்படுகின்றனர். ஆசிரியர்களின் இந்த கருத்துக்கணப்பிற்குப் பின்வரும் கருத்துகள் காரணமாக அமையலாம்.

தொடர்பணி வழங்குதல் என்பது தமிழ் மொழிப் பாடத்தைப் பொறுத்தவரையில் வினா விடைகளை எழுதி வருவதாகவும், கட்டுரைகளை எழுதி வருவதாகவும் அமையும் இச்சூழ்நிலையில் சங்க இலக்கியப் பாடல்களுக்கும் அதுவே தொடர்கிறது. இந்நிலையில், பாடம் தொடர்பான வேறு சங்க இலக்கியப் பாடல்களை மாணவர்களைப் படித்து வரச் செய்தல், பாடலை மனனம் செய்து எழுதி வருதல், போன்ற தொடர்பணிகளுக்கு ஆசிரியர்கள் பெருமளவு ஆதரவு தெரிவித்துள்ளனர். மாணவர்களின் தொடர்பணியில் சற்று

வேறுபாடுகள் இருக்க வேண்டும் என்று கருதுபவர்கள் இக்கருத்துகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். மேலும், இவ்வகையில் தொடர்பணிகள் வழங்குவதற்கு வசதிகள் இல்லை மற்றும் மாணவர்களிடத்தில் கற்றல் அடைவு குறைவாக இருப்பதால், இது போன்ற தொடர்பணிகள் கொடுப்பது சற்று கடினம் என்று கருதுபவர்கள் இக்கருத்துக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.

### 3.12 கற்றல் வெளிப்பாடு

**மாணவர்கள் தாங்களே கருத்துகளை அறிந்து கொள்ளும் வகையில் சிறுசிறு கற்றல் செயல்களாகவும் பாடத்தினைக் கொண்டு செல்ல வேண்டும். மாணவர்கள் பெற வேண்டிய பல்வேறு திறன்களையும் இங்கு வரையறை செய்து கொள்ள வேண்டும்’** [15]. மொழிப்பாடம் என்பது மாணவர்களின் நற்குணங்களை வளர்ப்பதாகும். இதில் சங்கப்பாடல்கள் மாணவர்களுக்கு வாழும் முறையை கற்பிக்கக்கூடியது. இதில் உள்ள செய்திகளை மாணவர்கள் அறிந்து கொள்வது ஆசிரியர்களின் கற்பித்தலில் அடங்கியுள்ளது. எனவே, சங்கப்பாடல் கற்பிப்பதால் ஏற்படும் வெளிப்பாட்டை ஆசிரியர்கள் அறிந்தால் மட்டுமே, மாணவர்களுக்கு விளக்க முடியும். எனவே, கற்றல் வெளிப்பாடு குறித்து ஆசிரியர்கள் கருத்துகளைக் கேட்டறிய 5 வினாக்கள் கேட்கப்பட்டன. அதில், சங்க இலக்கியக் கற்பித்தல் மாணவர்களின் அன்றாட வாழ்வில் பயன்படும், சங்க இலக்கியங்களைப் படிப்பதில் ஆர்வம் ஏற்படும், சொற்களஞ்சியத்திறன் மேம்படும், பண்பாடு, பாரம்பரியம், நாட்டுப்பற்று வளர்த்தல் ஆகியவற்றைக் குறித்து வினாக்கள் எழுப்பப்பட்டன. கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு தகவலாளர்களிடமிருந்து கிடைத்த தகவல்கள் கணக்கீடுகளுக்கு உட்படுத்தப்பட்டு, கருத்துகளுக்கு ஆதரவு தெரிவித்தவர்களின் சதவீதம் பின்வரும் அட்டவணையில் விளக்கப்பட்டுள்ளது.




**சங்க இலக்கியப் பாடல்கள் மாணவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் பயன்படும் வகையில் உள்ளது** என்ற கருத்துக்கு 20 முதல் 32 வயதுள்ள ஆசிரியர்கள் பெருமளவில் ஆதரவைத் தெரிவித்துள்ளனர். ஆனால், பெண் ஆசிரியர்கள் இக்கருத்தை மறுக்கின்றனர். மேலும் இந்தக் கருத்தை பால், அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசுப் பள்ளி ஆசிரியர்களும் 9 மற்றும் 10ஆம் வகுப்புக் கற்பிக்கும் ஆசிரியர்களும் 1 முதல் 5 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் மாநகரத்தில் உள்ள ஆசிரியர்களும் ஏற்பு தெரிவித்துள்ளனர்.

**சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பிப்பதால், மாணவர்களுக்கு மேலும் சங்க இலக்கியப் பாடல்களைத் தேடிக் கற்பதில் ஆர்வம் ஏற்படுகிறது** என்ற கருத்துக்குப் பெண் ஆசிரியர்கள் மிகுதியாக ஏற்றுள்ளனர். கிராமத்தில் உள்ள ஆசிரியர்கள் ஏற்கவில்லை. மேலும் இந்தக் கருத்தைப் பள்ளி, அமைவிடம், அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது, தனியார் பள்ளி ஆசிரியர்களும் 6 முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் இசைவு தெரிவித்துள்ளனர்.

**சங்க இலக்கியப் பாடல்கள் உயர்ந்த பண்பாட்டினை மாணவர்களிடம் வளர்க்கிறது** என்ற கருத்துக்கு 33 முதல் 45 வயதுள்ள ஆசிரியர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஆதரவு தெரிவித்துள்ளனர். பெண் ஆசிரியர்கள் மறுப்பு தெரிவித்துள்ளனர். மேலும், இந்தக் கருத்தை பள்ளி, கற்பிக்கும் வகுப்பு, அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசுப் பள்ளி ஆசிரியர்களும் 6 முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் கிராமத்தில் உள்ள

ஆசிரியர்களும் தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் மிகுதியான ஏற்புடைமையைத் தெரிவித்துள்ளனர்.

**சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பதன் மூலம் அவர்களின் சொற்களஞ்சியத் திறன் மேம்படும்** என்ற கருத்துக்கு 10 வருடத்திற்கு மேல் அனுபவமுள்ள ஆசிரியர்கள் ஏற்பு தெரிவித்துள்ளனர். நகரத்தில் உள்ள ஆசிரியர்கள் ஏற்கவில்லை. மேலும் பள்ளி, பால், அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசுப் பள்ளி ஆசிரியர்களும் 9 மற்றும் 10ஆம் வகுப்புக் கற்பிக்கும் ஆசிரியர்களும் ஆண் ஆசிரியர்களும் 20 முதல் 32 வயதுள்ள ஆசிரியர்களும் தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் பெருமளவில் இக்கருத்தை ஏற்றுள்ளனர்.


**பள்ளியில் மாணவர்கள் சங்க இலக்கியப் பாடல்களைக் படிப்பதால் பண்டைய பாரம்பரியம் பற்றிய பெருமித உணர்வு ஏற்படுகிறது** என்ற கருத்துக்கு 6 மற்றும் 7ஆம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்கள் அதிகமான ஆதரவைத் தெரிவித்துள்ளனர். 33 முதல் 45 வயதுள்ள ஆசிரியர்கள் குறைவான ஆதரவைத் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தைப் பால், அவைிடம், கற்பிக்கும் வகுப்பு அடிப்படையில் கணக்கிடும் போது, அரசு பள்ளி ஆசிரியர்களும் ஆண் ஆசிரியர்களும், 1 முதல் 5 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் கிராமத்தில் உள்ள ஆசிரியர்களும் கருத்துக்கு உடன்படுகின்றனர். ஆசிரியர்களின் இந்த கருத்து தெரிவிப்பிற்குக் கீழ்க்கண்ட கருத்துக்கள் காரணமாக அமையலாம்.

ஆசிரியர்கள் மாணவர்களின் அன்றாட வாழ்க்கையில் கலந்து பழகுவதாலும், கிராமத்தில் இயற்கை சூழல்கள் நிறைந்துக் காணப்படுவதாலும், மாணவர்கள் சங்க இலக்கியப் பாடல்களில் வரும் சூழல்களை நினைவுக்கூறும் வாய்ப்புகள் ஏற்படுகிறது. இதனால், தங்கள் வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்வுகளை சங்க இலக்கிய நிகழ்வுகளோடு ஒப்பிட்டு பார்க்கும் வாய்ப்பும் ஏற்படுகிறது. இதனால், பல ஆசிரியர்கள் இக்கருத்துகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இது போன்று பாடல்களை மாணவர்களுக்கு கற்பிப்பதன் மூலம் நம்முடைய பாரம்பரியம், வாழ்க்கை முறை இவற்றைக் கண்டு மாணவர்களுக்கு ஆச்சரியமும் வியப்பும் ஏற்படும். இதனால் அவர்கள் பெருமிதம் கொள்கின்றனர். இவ்வாறு, சங்க இலக்கியப் பாடல்களில் மீது ஏற்படும் பெருமிதம், அவர்களை மேலும் அவர்களை மேலும், சங்க இலக்கியப் பாடல்களை கற்கத் தூண்டும். அப்போது, பாடநூல்கள் மட்டுமன்றி அதிகப்படியான இலக்கியப் பாடல்களைத் தேடுவர். இவை அனைத்தும் மாணவர்களக்கு மேம்பாட்டைக் கொடுப்பதால் ஆசிரியர்கள் இக்கருத்துகளுக்குப் பெருமளவில் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

## 3.13 சங்கப்பனுவல்கள் கற்பித்தலின் சிறப்பம்சங்கள்

செய்யுள்களில் சங்கப்பனுவல் பெற்றிருக்கும் சிறப்பிடத்தை ஆசிரியர்கள் அறிந்திருக்க வேண்டியது மிக அவசியமானதாகும். சங்க இலக்கியங்களின் சிறப்பம்சங்களை அறிந்து அதை மாணவர்களுக்கும் எடுத்துரைப்பது கற்பித்தலின் சிறப்பாகும். எனவே, ஆசிரியர்கள் சங்கப்பனுவல்களின் சிறப்புகளை அறிந்து வைத்திருப்பது அவசியமாகிறது. இதைத் தொடர்ந்து 5 வினாக்கள் கேட்கப்பட்டன. அதில், சங்க இலக்கியத்தின் சிறப்பு, ஆசிரியர் சிறப்பு, கற்பித்தல் திறன், கற்றல் நேர்த்தி ஆகியவற்றைக் குறித்து வினாக்கள் எழுப்பப்பட்டன. கொடுக்கப்பட்ட வினாக்களுக்குத் தகவலாளர்களிடமிருந்து கிடைத்த தகவல்கள் கணக்கீடுகளுக்கு உட்படுத்தப்பட்டு கருத்துகளுக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் பற்றிய விவரங்களும் அதற்கான காரணங்களும் விளக்கப்பட்டுள்ளன.

**சங்கப்பனுவல்கள் கற்பித்தலில் உள்ள சிறப்பம்சங்கள்**




**சங்கப்பாடல்கள் தனித்தன்மை வாய்ந்தது** என்ற கருத்துக்குத் தனியார் பள்ளி ஆசிரியர்கள் பெரும்பான்மையான ஏற்புடமையைத் தெரிவித்துள்ளனர். 9 மற்றும் 10 வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்கள் எதிர்நிலையில் உள்ளனர். மேலும் இந்தக் கருத்தை பால், அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது, ஆண் ஆசிரியர்களும் 20 முதல் 32 வயதுள்ள ஆசிரியர்களும் 1 முதல் 5 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் நகரத்தில் உள்ள ஆசிரியர்களும் ஆங்கில மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் ஏற்றுள்ளனர்.

**சங்கப்பாடல்கள் கற்பித்தலுக்குக் கூடுதல் திறமை தேவைப்படுகிறது** என்ற கருத்துக்கு 6 முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்கள் பெருமளவில் இசைவு தெரிவித்துள்ளனர். பெண் ஆசிரியர்கள் குறைந்த ஆதரவைத்

தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தை பள்ளி, வயது, கற்பிக்கும் வகுப்பு அடிப்படையில் கணக்கிடும் போது, அரசு உதவிபெறும் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களும் 11 மற்றும் 12ஆம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களும் 20 முதல் 32 வயதுள்ள ஆசிரியர்களும் மாநகரத்தில் உள்ள ஆசிரியர்களும் ஆங்கில மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

**சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் போது மாணவர்களை அக்கால சூழ்நிலைக்கு கொண்டு செல்லுதல்** என்ற கருத்துக்கு பெரும்பான்மையான ஆசிரியர்கள் அதிகமான அளவில் உடன்படுகின்றனர். 1 முதல் 5 வருடங்கள் அனுவமுள்ள ஆசிரியர்கள் எண்ணிக்கையில் குறைவான அளவில் உடன்படுகின்றனர். மேலும் இந்தக் கருத்தை பள்ளி, கற்பிக்கும் வகுப்பு, பால் அடிப்படையில் கணக்கிடும் போது, அரசு உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களும் 6 மற்றும் 7ஆம் வகுப்புக் கற்பிக்கும் ஆசிரியர்களும் ஆண் ஆசிரியர்களும் நகரத்தில் உள்ள ஆசிரியர்களும் மிகுதியான ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

**சங்க இலக்கியங்களில் புலவர்கள் உணர்த்திய கருத்துகளையும் உணர்வுகளையும் சரியான முறையில் மாணவர்களுக்கு எடுத்தியம்ப முடிகிறது** என்ற கருத்துக்கு கிராமத்தில் உள்ள ஆசிரியர்கள் பெருமளவில் ஏற்கின்றனர். அரசுப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தக் கருத்தை பால், அனுபவம் அடிப்படையில் கணக்கிடும் போது, 9 மற்றும் 10ஆம் வகுப்புக் கற்பிக்கும் ஆசிரியர்களும் பெண் ஆசிரியர்களும் 46 முதல் 58 வயதுள்ள ஆசிரியர்களும் 6 முதல் 10 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் அதிகமாக இசைவைத் தெரிவித்துள்ளனர்.

**சங்க இலக்கியப் பாடல்களில் உள்ள விழுமியங்களை மாணவர்கள் சரியான முறையில் ஏற்றுக் கொள்கிறார்கள்** என்ற கருத்துக்கு 6 மற்றும் 7ஆம் வகுப்புக் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஏற்பு தெரிவித்துள்ளனர். மாநகரத்தில் உள்ள ஆசிரியர்கள் ஏற்கவில்லை. மேலும் இந்தக் கருத்தை பள்ளி, பால், பயிற்றுமொழி அடிப்படையில் கணக்கிடும் போது, தனியார் பள்ளி ஆசிரியர்களும் பெண் ஆசிரியர்களும் 20 முதல் 32 வயதுள்ள ஆசிரியர்களும் 1 முதல் 5 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர்களும் ஆங்கில மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களும் அதிகப்படியான ஆதரவைத் தெரிவித்துள்ளனர். ஆசிரியர்களின் இந்த கருத்து வேறுபாட்டிற்கு கீழ்க்கண்டவற்றைக் காரணங்களாகக் கணிக்கலாம்.

சங்கப் பாடல்களைக் கற்பித்தல் என்பது ஒரு பொதுவான செயல் அல்ல. மாறாக, அதன் தனித்துவத்தையும் அதன் உட்கருத்தையும், அதன் ஊடே மாணவர்களின் நற்பண்புகளையும் வளர்க்கும் பல செயல்களுக்கு நடுவில் இக்கற்பித்தல் நடைபெற வேண்டும். இதில் மாணவர்களுக்கு, சங்கப் பாடல்களின் சூழ்நிலையை எடுத்துரைப்பதிலும் அதிலுள்ள கருத்துகள் இக்கால சூழ்நிலைகளுக்கு சற்று மாறுபட்டு இருப்பதாலும் பாடல்களின் விழுமியங்களை மாணவர்களுக்குச் சரியாக எடுத்துரைக்க ஆசிரியர்களுக்குக் கூடுதல் திறமை தேவைப்படுகிறது. எனவே, இக்கருத்துகளுக்குப் பெரும்பாலான ஆசிரியர்கள் ஆதரவு தெரிவிப்பதில் சற்று விலகியுள்ளனர். மேலும், சங்க இலக்கியப் பாடல்களைப் புலவர்களின் உணர்வுகளுக்கு ஏற்ற வகையில் மாணவர்களிடம் கொண்டு சேர்ப்பதிலும் சற்று தடுமாற்றத்தைச் சந்திப்பதால் இக்கருத்துகளுக்கு பெருமளவில் ஆதரவு தெரிவிக்கவில்லை எனக் கருதலாம்.

## 3.14 6 மற்றும் 7ஆம் வகுப்பு பாடநூலில் உள்ள சங்கப்பனுவல்கள்: ஆசிரியர்களின் கருத்துகள்

சங்க இலக்கிய மாணவர்களுக்கு அறிமுகப் படுத்தும் போது அகம் புறம் என்ற இருபெரும் பிரிவுகளை மாணவர்களுக்கு விளக்குதல் வேண்டும். புறநானூறு பற்றிய நூற்குறிப்பைக் கற்பிக்கும் போதும் புறப்பாடல் மற்றும் அகப்பாடல் பற்றி விளக்கம் கொடுத்தல் வேண்டும். சங்க கால மன்னர்களின் பண்புகளையும் மாண்புகளையும் மாணவர்கள் சரியான புரிந்து கொள்ளும் வகையில் கற்பித்தலானது அமைய வேண்டும். அப்போதுதான் போர்கள், படைகள் பற்றிய கேள்விகளும் சந்தேகங்களும் மாணவர்களிடத்தில் எழும்பும். அப்போது, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஏற்ற வகையில் விளக்குவதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

பழங்கால மக்களின் வாழ்க்கை முறை, கலாச்சாரம் போன்றவற்றைப் பற்றி ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்பிக்கும், சங்க இலக்கியங்களின் மேன்மையான கருத்துகளை மனத்தில் கொண்டு கற்பிக்க வேண்டும். பழங்கால மக்களின் வாழ்க்கை பற்றிச் சொந்தமான கருத்துகளையோ புறம்பான கருத்துகளையோ மாணவர்களிடத்தில் கூறுதல் கூடாது. அப்படி கூறினால், சங்க இலக்கியப் பாடல்களின் மீது மாணவர்களுக்கு நல்லெண்ணம் ஏற்படாது. அக்கால புலவர்கள் பாடல்கள் பாடியதன் காரணத்தையும் திறமையையும் அவர்களின் பண்புகளையும் மாணவர்களுக்குச் சரியான முறையில் எடுத்துரைத்தல் அவசியம். அதனால், புலவர்களின் உணர்வுகளை மாணவர்களால் எளிமையாகப் புரிந்து கொள்ள முடியும். இதனால், சங்கப்பாடல்களில் அவர்களின் கருத்துகளை சரியாகப் புரிந்து கொள்ள முடியம்.

சங்கப் பாடல்களைக் கற்பிக்கும் போது, சங்கப் பாடல்களுக்கும் இக்காலப் பாடல்களுக்கும் உள்ள வேறுபாடுகளைக் கட்டாயம் தெரிவிக்க வேண்டும். இதனால், மாணவர்கள் இக்காலக் கவிதையின் செறிவிற்கும், சங்கக் காலப் பாடல்களின் செறிவிற்கும் உள்ள வேறுபாட்டை நன்கு அறிய முடியும். இதனால், கவிதை, செய்யுள் என்பதன் வேறுபட்ட வடிவமைப்பை அறிந்து கொள்ள முடியும். இந்த வேறுபாட்டை உணர்ந்து கொண்டால் மட்டுமே, சங்கப் பாடல்களில் உள்ள பன்முகக் கூறுகளைப் பற்றியும் அதனால் பாடலின் கருத்துக்கு உள்ள தொடர்பை பற்றியும் அறிந்து கொள்ள முடியும். இதனால், அவற்றின் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு எடுத்துக் கூற முடியும். பாடலின் விளக்கத்திற்கும் பாடலின் பன்முகக்கூறுகளுக்கும் முக்கியத்துவம் அளித்து கற்பித்தல் வேண்டும். பாடல் இயற்றிய ஆசிரியர் பற்றிய கதைகளைக் கூறும் போது மாணவர்களிடத்தில் ஆர்வம் மிகுந்துள்ளது. இதனால், ஆசிரியர்கள் பெயர், பிறப்பு என்ற விளக்கங்களைக் காட்டிலும், அவர்கள் வாழ்க்கையில் நடந்த சிறு சிறு சம்பவங்களைக் கதைகளாகக் கூறும் போது மாணவர்களிடத்தில் ஆர்வம் மிகுந்து காணப்படுகிறது.

தமிழர்களின் பழங்கால வரலாற்றைக் கூறுவதில் சற்று இடர்ப்பாடுகள் நிறைந்துதான் காணப்படுகிறது. எதையும் ஆராய்ச்சி நோக்கில் உணரும் இன்றைய மாணவர்களிடத்தில் இதைக் கொண்டு சேர்ப்பது சற்று கடினமாக இருந்தாலும் ஆசிரியர்களின் தன்னம்பிக்கை நிறைந்த கற்பித்தல் மாணவர்களிடத்தில் நம்பிக்கையை வரவழைக்கும். ஆசிரியரின் கற்பிப்பில் சற்று தடுமாற்றம் இருப்பினும், மாணவர்களின் சந்தேகக் கேள்விகள் அதிகமாகி விடும். அது போன்ற நேரங்களில், ஆசிரியர்களால் முழு மனநிறைவோடு பாடம் கற்பிக்க முடியாது. அதனால், கூடுமானவரையில், மாணவர்களின் நம்பிக்கை பாத்திரமாக ஆசிரியர் திகழ வேண்டும் என்பது நிதர்சனமாக உண்மை.

## 3.15 9 மற்றும் 10ஆம் வகுப்பு பாடநூலில் உள்ள சங்கப்பனுவல்கள்: ஆசிரியர்களின் கருத்துகள்

புறத்திணைப்பாடல்களை மட்டுமே படித்து வந்துள்ள மாணவர்களிடத்தில் அகத்திணையை அறிமுகப்படுத்துவதில் சிரமம் உள்ளது. எனவே, முன் வகுப்புகளில் உள்ள ஆசிரியர்கள் அகம் மற்றும் புறம் இரண்டையும் அறிமுகப்படுத்துதல் சிறந்தது. பாடல்களைக் கற்பிக்கும் போது திணை, துறைகளை அறிமுகம் செய்து பாடலைக் கற்பித்தல் வேண்டும். இதனால், பாடலின் கருத்துகளை விளக்கவும் எளிமையாக இருக்கும். அதை மாணவர்களும் எளிதாகப் புரிந்து கொள்வர். கூற்று என்ற சொல்லை முதன் முதலில் மாணவர்களுக்கு அறிமுகம் செய்வதால், கூற்று என்ற சொல்லை

மட்டுமல்லாமல், அது யாரைக் குறிக்கிறது? அவர்களின் சிறப்பு என்ன? ஏன் அவர்களை அவ்வாறு குறிப்பிடுகிறோம்? என்ற பல வகையில் அச்சொல்லை அறிமுகப்படுத்துவது இன்றியமையாததாகிறது. வெறும் சொல்லாக அறிமுகப்படுத்தும் அதன் முக்கியத்துவத்தை மாணவர்கள் உணராமல் போக வாய்ப்பு உண்டு. தோழிக் கூற்று, தலைவிக் கூற்று என்ற அறிமுகத்தின் போது மாணவர்களிடத்தில் இருந்து பல சந்தேகக் கேள்விகள் எழுந்தாலும், ஆசிரியர்கள் தன் நிலையில் இருந்து மாறாமல், மாணவர்களுக்குப் பொறுமையுடன் விளக்கம் சொல்ல வேண்டும். ஏனெனில், இக்காலச் சூழ்நிலையில் இந்த சங்க இலக்கியச் சூழல்களுடைய பாடல்கள் மாணவர்களை வியக்க வைப்பதோடு சற்று சந்தேகத்தையும் ஏற்படுத்தச் செய்யும். அதை முழுமையாகக் களைய வேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும். பழங்கால மக்களின் வாழ்க்கை முறை, கலாச்சாரம், பாரம்பரியம், அறச் செயல்கள், அதற்கான காரணங்கள் என அனைத்தையும் சரியான முறையில் மாணவர்களுக்கு எடுத்தியம்ப வேண்டும். அவ்வாறு விளக்கும் போது அவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு விடை அளிக்கும் திறமையை ஆசிரியர்கள் பெற்றிருப்பது அவசியம். அப்போது மட்டுமே ஆசிரியர்கள் கூறும் அனைத்துச் செய்திகளையும் மாணவர்கள் சரியான முறையில் உள் வாங்க முடியும். சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பிக்கும் போது அவற்றின் தொகுப்புகளைக் கட்டாயம் மாணவர்களுக்கு தெரிவிக்க வேண்டும். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை போன்ற நூல்களையும் அவற்றின் செய்திகளையும் மாணவர்களுக்கு எடுத்தியம்புவது அவசியமாகும். ஒவ்வொரு நூல்கள் இயற்றப்பட்டதன் காரணத்தையும் கதைமாந்தர்களின் பண்புகளைப் பற்றியும் எடுத்துரைப்பது இன்றியமையாதது.

இன்றைய காலக் கட்டத்தில் சங்க காலம், அரசர், ஆட்சி முறை என்பது மாணவர்களுக்குப் பெரிய கேள்விக்குறியாகவே இருக்கும். இருப்பினும் ஆசிரியர்கள், நிதானத்துடன் அவற்றை மாணவர்களுக்கு விளக்குதல் நல்லது. சங்கப்பாடல்களில் உள்ள தமிழ்ச்சொற்களுக்கும் இன்று நாம் பயன்படுத்தும் தமிழ்ச்சொற்களுக்கு உள்ள வேறுபாட்டை மாணவர்கள் அறியும் வண்ணம் விளக்குதல் வேண்டும். மேலும், பழஞ்சொற்களையும் அதன் பொருளையும் தனிப்பட்ட முறையில் மாணவர்கள் அறியும் வண்ணம் விளக்குதல் வேண்டும். சங்கப்பாடல்களில் உள்ள சிறப்பு மாந்தர்களான தலைவன், தலைவி, தோழி ஆகியோரின் பண்புகளை எடுத்துரைத்தல் அவசியம். மேலும், இதில் தலைவன் மற்றும் தோழிக்கு இடையே உள்ள உரையாடல்களையும் அவர்களுக்கு இடையே உள்ள நட்பைப் பற்றி விளக்குதல் வேண்டும். இவ்வாறு சங்க இலக்கியப் பாடலின் சிறப்பியல்புகளோடு, கற்பிக்கும் போது, மாணவர்கள் சங்க

இலக்கியப் பாடல்களை விருப்பத்துடன் கற்பது நிச்சயம். மேலும், மாணவர்களை சங்கப் பாடல்களை மனனம் செய்து சொல்லும் பழக்கத்தை ஆசிரியர்கள் உருவாக்க வேண்டும். இதற்காக மாணவர்கள் தனிப்பட்ட முறையில் ஊக்குவிப்பதோடு, அதற்கான பாராட்டுகளையும் சிறப்புகளையும் வழங்க வேண்டும்.

### 11 மற்றும் 12ஆம் வகுப்பு பாடநூலில் உள்ள சங்கப்பனுவல்கள்: ஆசிரியர்களின் கருத்துகள்

சங்கப்பாடல்களை மாணவர்கள் ஏற்கனவே படித்திருந்தாலும் சங்கப்பாடல்களைக் கற்பிக்கத் தொடங்கும் போது, திணை, துறைகளைப் பற்றிய விளக்கங்களை மாணவர்களுக்குத் தெரிவிப்பது அவசியமாகிறது. மேலும், திணை, துறைகளைப் பற்றிய அறிமுகங்களை மாணவர்கள் அறிந்திருக்கும் சூழ்நிலையில் திணையைப் பற்றிய விளக்கும் போதும் அதன் கருப்பொருள், உரிப்பொருள் பற்றிய விளக்கங்களையும், குறிப்புகளையும் வழங்குதல் இன்றியமையாததாகும். ஐந்திணைகளின் உரிப்பொருள், கருப்பொருள், முதற்பொருள் ஆகியவற்றின் விளக்கங்களை மாணவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

சங்கப்பாடல்களின் ஆசிரியர் குறிப்புகளை மாணவர்களை மனனம் செய்விப்பதைத் தவிர, பாடல் ஆசிரியர்களின் சிறப்புகளை மாணவர்களுக்கு எடுத்தியம்பலாம் அல்லது ஆசிரியரின் வாழ்க்கை நிகழ்வுகளைக் கதைகளாகக் கூறலாம். சங்கப் பாடல்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் போலவே, அவற்றின் நூற்குறிப்பிற்கும் முக்கியத்துவம் வழங்குதல் வேண்டும். சங்கப்பாடல்களின் கருத்துகளுக்கு முக்கியத்தவம் வழங்க வேண்டும். அதே அளவிற்கு, அவற்றின் இலக்கணங்களையும் எடுத்தியம்புதல் வேண்டும். அந்த இலக்கணங்களுக்கேற்ற பயிற்சிகளையும் வழங்குதல் வேண்டும். பொதுவாக, உயர்நிலைப் பாடத்திட்டத்தில் திணை, துறையைப் பற்றிய விளக்கம் இல்லாததால், ஆசிரியர்கள் அதை விளக்குவது அவர்களின் தனிப்பட்ட முயற்சியில் மட்டுமே அமையும். ஆசிரியர்கள் அதை விளக்கவில்லை என்றால், மேல்நிலைக்கு வரும் மாணவர்களுக்குத் திணை, துறைப் பற்றிய அறிமுகமே இல்லாமல் அதைப் படிப்பது என்பது சற்று சிரமாமாக உள்ளது. அதனால், உயர்நிலைப் பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் திணை, துறை பற்றிய விளக்கங்களைக் கட்டாயம் வழங்க வேண்டும்.

பண்டைக் கால அரசின் போர்குணங்களை விளக்குவதால், மாணவர்களிடத்தில் வன்முறை உணர்வு ஏற்படுமோ என்ற ஐயம் சில ஆசிரியர்களுக்கு ஏற்படுகிறது. இவை நம் நாட்டின் பாரம்பரியக் கலைகளில்

ஒன்று என்பதை மாணவர்களுக்குத் தெளிவாக விளக்க வேண்டும். போர்க் குணம் என்பது தனிப்பட்ட ஒருவரின் குணமாகக் கூறாமல், மக்களின் பாதுகாப்புக்காக, மன்னனின் முயற்சியாகக் கூற வேண்டும். வீரன் என்பதன் விளக்கத்தைச் சரியான முறையில் கூற வேண்டும். அப்போதுதான், போர், எதிரிகளை அழித்தல், கொல்லுதல் போன்ற சொற்களின் பலத்தையும் பாதுகாப்பையும் மாணவர்களால் அறிய முடியும். ஆசிரியர் சங்கப்பாடல்களை கற்பிக்கும் போது, பாடல்களை இசையுடன் பாடி நடத்த வேண்டும். மேலும், பாடல்களில் உள்ள சொற்களைச் சீர்பிரித்து படிப்பதில் மாணவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும். சீர்பிரித்து படிக்க மாணவர்கள் கற்றுக் கொண்டால் மட்டுமே, மேலும் பிற பாடல்களைப் படிப்பதில் ஆர்வம் ஏற்படும்.

சங்கப்பாடல்களைக் கற்பிக்கும் போது, மதிப்பெண்ணுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கற்பிக்காமல், சங்கப்பாடலின் சீர் பிரித்தல், சங்கப்பாடல்களின் கருத்துகள், பன்முகக்கூறுகள், விளக்கங்கள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்துக் கற்பிக்க வேண்டும். பின்பு, மாணவர்களால் சங்கப்பாடல்களைச் சீர் பிரித்து படிப்பது மட்டுமல்லாமல், அதற்கான விளக்கத்தையும் கூற முடியும். சங்கப்பாடல்களின் முதற்பொருளைக் கற்பிக்கும் போது அதை இக்காலத்தோடு ஒப்பிட்டுக் கற்பித்தல் அவசியமாகும். வண்ணம், தூக்கு போன்ற செய்யுள் உறுப்புகளைக் கற்பதில் மாணவர்களுக்கு ஆர்வம் ஏற்படும் வகையில் கற்பித்தல் வேண்டும். உள்ளுறை, இறைச்சி போன்ற உத்திகள் பாடப்பகுதியில் உள்ள சங்கப்பாடலில் இடம் பெறுமாயின் அவற்றை சரியான விளக்கத்தோடு மாணவர்களுக்கு எடுத்தியம்ப வேண்டும். இதுபோன்ற செய்யுள் உறுப்புகள் பாடநூலில் இடம்பெறவில்லை என்றாலும் அதற்கான அறிமுகத்தை மாணவர்களுக்கு அளிப்பது இன்றியமையாததாகும். சங்கப்பாடல்களின் மொழிநடையை மாணவர்கள் ஏற்றும் கொள்ளும் வகையில் ஆசிரியரின் கற்பித்தல் இருக்க வேண்டும். சங்கப்பாடல் மொழிநடையை மாணவர்கள் விரும்புகின்றனர்.

### 3.17 ஆசிரியர்களின் கருத்துகள் : மதிப்பீடு

பள்ளிப்பாடங்களில் உள்ள சங்கப் பனுவல்களைக் கற்றல், கற்பிக்கும் முறைகள் பற்றிய கருத்துக்கணிப்பில் அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் உள்ள ஆண் மற்றும் பெண் ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்களை அவர்களின் வயது, அனுபவம், கற்பிக்கும் வகுப்பு, பள்ளிகளின் அமைவிடம், பயிற்றுமொழி ஆகியவற்றின் அடிப்படையில் கருத்துக்களை ஆராய்ந்து அவற்றில் உள்ள வேறுபாடுகளின் அடிப்படையில் இந்த விவாதங்கள் ஆய்வாளரால் விவாதிக்கப்படுகிறது.

**சங்கப் பனுவல்களைக் கற்றல், கற்பிக்கும் முறைகள் பற்றிய கருத்துக்கணிப்பில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களைக் காட்டிலும் தனியார் பள்ளி ஆசிரியர்கள் சிறந்து விளங்கக் காரணங்கள்**

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களைக் காட்டிலும் தனியார் பள்ளி ஆசிரியர்கள் கருத்துக்கணிப்பு எண்ணிக்கையில் அதிகம் உள்ளதால் கருத்துக்கணிப்பில் வேறுபாடு காணப்படலாம்.

பெரும்பாலும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளைக் காட்டிலும் தனியார் பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் உபகரணங்களின் பயன்பாடுகளும் அதற்கான வாய்ப்புகளும் அதிகமாக உள்ளதால், கற்றல் கற்பித்தலில் சிறந்து விளங்க வாய்ப்பு உண்டு.

தனியார் பள்ளி மாணவர்கள் அனைவரும் ஆங்கில வழிக் கல்வி முறையைப் பின்பற்றுவதால், தமிழ் மொழியில் உள்ள ஆர்வத்தை வளர்க்க வேண்டும் என்ற நோக்கில் ஆசிரியர்கள் இலக்கியப் பனுவல்களைக் கற்பிக்கும் போது கூடுதல் கவனம் செலுத்தும் வாய்ப்பு உண்டு.

தமிழ்மொழியில் அடித்தளம் குறைந்து காணப்படுவதாலும் பெரும்பாலும் செய்யுள்களின் மீது உள்ள பயத்தினாலும் கற்றல் மற்றும் கற்பித்தலில் அதிகப்படியான ஈடுபாடும் உழைப்பும் கொடுப்பதால் கற்றல் சிறப்பாக நிகழலாம்.

தனியார் நிர்வாகங்களில் கொடுக்கப்படும் அதிகப்படியான உந்துதல் இதற்குக் காரணமாக அமையலாம்.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளியைக் காட்டிலும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியரின் பெற்றோர், கல்வி நிலையில் உயர்ந்து காணப்படுவதாலும் தமிழ் மொழியில் சிறந்த திறமை பெற்றிருப்பதாலும் கற்றல் கற்பித்தல் சிறக்கும் வாய்ப்பு உண்டு.

தனியார் பள்ளிகளில் பொருளாதாரத்தில் மேம்பாடைந்தவர்களே கல்வி பயில்வதால், வேறு எந்தப் பிரச்சனைகளும் இன்றி தனிப்பட்ட முறையில் இந்த சங்க இலக்கியங்களில் ஆர்வம் காட்ட வாய்ப்பு உண்டு.

தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், தன்னுடைய பணித்திறமையைக் காட்டும் நோக்கில், இலக்கியச் செய்யுள்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து கற்பித்து அதன் மூலம் மாணவர்களிடம் நற்பண்புகளை வளர்க்க முயற்சி செய்ய வாய்ப்பு உண்டு.

இன்றைய தமிழ்மொழி சம்பந்தப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பெரும்பாலும், தனியார் பள்ளிகளே கலந்துக் கொள்வதால் மொழி நிறைவிற்காகவும் சொற்களஞ்சியத்திற்காகவும் சங்க இலக்கியங்களில் ஆர்வம் காட்டும் வாய்ப்பு உண்டு.

**சங்கப் பனுவல்களைக் கற்றல், கற்பிக்கும் முறைகள் பற்றிய கருத்துக்கணிப்பில் பெண் ஆசிரியர்களைக் காட்டிலும் ஆண் ஆசிரியர்கள் சிறந்து விளங்கக் காரணங்கள்**

பெண் ஆசிரியர்கள் பெரும்பாலும் வீட்டிலும் வெளியிலும் வேலை செய்வதால் தொழில் முனையில் முழுஈடுபாடு செலுத்த முடியாமல் இருப்பது காரணமாக இருக்கலாம்.

பெண் ஆசிரியர்களைக் காட்டிலும், ஆண் ஆசிரியர்கள் மாணவ மாணவிகளிடம் இயல்பாகவும் விரைவாகவும் பழகுபவராக இருப்பதால் இந்த வேறுபாடு காணப்படலாம்.

பெண் ஆசிரியர்கள் கற்பித்தலின் போது உணரும் சுதந்திரத்தைக் காட்டிலும் ஆண் ஆசிரியர்கள் கற்பித்தலை அதிக சுதந்திரத்துடன் செய்வதால் அவர்கள் சங்கப் பனுவல்களைச் சிறப்பாகக் கற்பிக்க இயலும் என நம்பலாம்.

பெண் ஆசிரியர்களைக் காட்டிலும் ஆண் ஆசிரியர்கள் கற்பித்தலுக்கான உபகரணங்கள் செய்தல், செய்திகள் திரட்டுதல் ஆகியவற்றை முழு சுதந்திரத்துடன் செய்ய முடிவதால் கற்பித்தல் சிறந்து அமையலாம்.

பெண்களை விட ஆண் ஆசிரியர்களுக்கு நூல்களைக் கற்பித்தலில் மற்றும் தமிழ் இலக்கியங்களில் புலமையை வளர்த்துக் கொள்ள அதிக நேரம் கிடைப்பதால் இலக்கியங்களை விளக்குவதில் மற்றும் கற்பிப்பதில் சிறந்து விளங்கலாம்.

**சங்கப் பனுவல்களைக் கற்றல், கற்பிக்கும் முறைகள் பற்றிய கருத்துக்கணிப்பில் 6,7ஆம் வகுப்புக் கற்பிக்கும் மற்றும் 9, 10ஆம் வகுப்புக் கற்பிக்கும் ஆசிரியர்களைக் காட்டிலும், 11 மற்றும் 12ஆம் வகுப்புக் கற்பிக்கும் ஆசிரியர்கள் சிறந்து விளங்கக் காரணங்கள்**

6, 7, 9 மற்றும் 10ஆம் வகுப்புப் பாடநூல்கள் புதிய சமச்சீர்க்கல்வி பாடத்திட்டமாக இருப்பதால், ஆசிரியர்கள் சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதை சற்று கடினமாக உணரலாம்.

மாணவர்கள் சங்க இலக்கியங்களை ஏற்றுக் கொள்ளும் வயதில் சற்றுக் குறைவாக இருப்பதால் கற்பித்தலில் முழுமைபெற முடியாமல் இருக்கலாம்.

சங்க இலக்கியங்களைக் கற்பித்தலின் தொடக்க நிலையாக இருப்பதால், மாணவர்களிடம் சங்க இலக்கியங்களின் பற்றிய ஈடுபாட்டை வரவழைக்க காலம் எடுக்கலாம்.

சங்க இலக்கியங்களின் மொழி நடையை, மாணவர்கள் ஏற்றுக் கொள்ளும் கற்றல் திறனில் குறைபாடுகள் இருப்பதும் காரணமாக அமையலாம்.

சங்க இலக்கியங்களைப் பற்றிய விளக்கங்கள் பாடநூலில் குறைவாக இருப்பதால் ஆசிரியர்களின் கற்பித்தலில் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தும் வாய்ப்பு உண்டு.

சங்க இலக்கியங்களின் முக்கிய பன்முகக் கூறுகளைப் பற்றிய விளக்கங்கள் ஏதும் இல்லாததால், ஆசிரியரின் கற்பித்தலில் மாணவர்களுக்குச் சந்தேகங்கள் எழும்பினாலும், தெளிவு பெற வாய்ப்பில்லை.

11 மற்றும் 12ஆம் வகுப்பு பாடநூல்கள் பழைய பாடத்திட்டத்தின் படி இருப்பதாலும் சங்க இலக்கியங்கள் முழுமையான விளக்கப்பட்டுள்ளதாலும் மேல்நிலை ஆசிரியர்கள் கற்பித்தலில் சிறந்து விளங்கலாம்.

11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் கற்றல் திறனில் மேம்பாடு அடைந்து இருப்பதாலும், சங்க இலக்கியங்களைக் கற்றுப் புரிந்து கொள்ளும் வயதில் இருப்பதாலும் ஆசிரியர்களின் கற்பித்தல் சிறந்து விளங்கலாம்.

அகம், புறம் என்ற வேறுபாடுகளைப் பற்றி அறிந்து படிக்கவும் புரிந்து கொள்ளவும் மனதளவில் வளர்ச்சியடைந்திருப்பதால் கற்பித்தல் சிறந்து விளங்கலாம்.

வளர்ச்சியடைந்த மாணவர்கள் என்பதால், சங்க இலக்கியங்களைப் பற்றிய செய்திகளை வெகுவிரைவில் எளிமையான கற்பித்தலின் மூலமே விளங்க வைக்க முடியும். அதனால், மேல்நிலை ஆசிரியர்கள் சங்க இலக்கியக் கற்பித்தலில் சிறந்து விளங்கலாம்.

மேல்நிலைப் படிப்பை மாணவர்கள் மதிப்பெண் கண்ணோட்டத்துடன் படிப்பதாலும் ஆசிரியர்களும் அவர்களுக்கு மதிப்பெண்ணிற்காக கற்றுத் தர வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாலும் கற்றல் மற்றும் கற்பித்தலில் சிறந்து விளங்கலாம்.

**சங்கப் பனுவல்களைக் கற்றல், கற்பிக்கும் முறைகள் பற்றிய கருத்துக்கணிப்பில் 20 முதல் 32 வயது வரை மற்றும் 33 முதல் 45 வயது வரை உள்ள ஆசிரியர்களைக் காட்டிலும் 46 முதல் 58 வயது வரை உள்ள ஆசிரியர்கள் சிறந்து விளங்கக் காரணங்கள்**

பொதுவாக இன்றைய சூழ்நிலையில் தமிழ் ஆசிரியர்களின் தமிழ் புலமையை சோதிக்கும் வண்ணம் விளங்கும் சங்க இலக்கியச் செய்யுள்களை நிறைவாகக் கற்பிப்பது சவாலுக்குரியச் செயலாக உள்ளது.

பள்ளிகளில் ஆள் பற்றாக்குறையை சமாளிக்க தமிழ் பாடம் கற்பிக்க வேண்டுமானால் 'தமிழ் மொழியை எழுதப் படிக்கத் தெரிந்தாலே போதும்' என்ற எண்ணத்துடன் மற்ற பாட ஆசிரியர்களே தமிழ்ப் பாடத்தையும் கற்பிக்க அனுமதி வழங்கி விடுகின்றனர். எனவே, தமிழ்ப் பாடத்தில் உள்ள இலக்கியங்கள் மாணவர்களிடம் சரியான முறையில் கொண்டு சேர்க்கப்படுவதில்லை.

தமிழ்த்துறையைத் தேர்ந்தெடுத்துப் படிக்கும் ஆசிரியர்கள் அதைக் குறிக்கோளாகப் படிக்காமல் வேறு வழியின்றி படிப்பதால் இலக்கியங்களின் சிறப்பை அவர்களாலேயே முழுமையான உணரமுடிவதில்லை. அதனால், இன்றைய ஆசிரியர்களிடம் கற்பித்தலுக்கேற்ற இலக்கியப் புலமை குறைந்து காணப்படுகிறது. இதுவும் கற்பித்தலைக் குறைக்கும் வாய்ப்பாக உள்ளது.

33 முதல் 45 வயது உடைய ஆசிரியர்கள் தமிழ் மொழியில் நன்கு புலமைப் பெற்றிருந்தாலும் இன்றைய மாணவர்களின் இயல்புக்கு ஏற்ப அவர்களால் கற்பித்தலில் புதுமையை ஏற்படுத்த முடியவில்லை. இதுவும் கற்றலைக் குறைக்கும் வாய்ப்பாக உள்ளது.

நடுத்தர வயது உடைய ஆசிரியர்களால் ஆங்கில வழியில் படிக்கும் மாணவர்களின் எழுத்துப்பிழைகளை ஏற்க முடிவதில்லை. அதனால், இலக்கியங்களைக் கற்பித்தலில் நம்பிக்கையின்மை காரணமாக இலக்கியங்களை சரிவரக் கற்பிக்க முடிவதில்லை.

அஞ்சல் வழிக்கல்வியில் தமிழ்ப் படித்திருக்கும் ஆசிரியர்களால் முழுமையான தமிழ்ப் புலமையை அடையமுடிவதில்லை. இதனால், உரைநடையைக் கற்பிக்க முடிந்த அவர்களால் சங்க இலக்கியங்களை நெருங்கும் போது தயக்கங்கள் ஏற்படுகிறது.

தமிழ்மொழியில் நன்கு புலமை பெற்றிருந்தாலும் சங்க இலக்கியம் தொடர்பான செய்யுள்கள் மற்றும் கதைகளை அறிந்திருப்பதில் குறைபாடு இருப்பதால் கற்பித்தலில் முழுமையான செய்ய முடியாமல் போகிறது.

46 முதல் 58 வயது வரை உள்ள தமிழ் ஆசிரியர்கள் பெரும்பாலும் தனியார் பள்ளிகளில் பணிபுரிவதில்லை. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மட்டுமே அதிகம் பணிபுரிகின்றனர். அதில் பெரும்பாலும் தமிழ்வழிக் கல்வியே பயன்படுத்துவதால் அவர்களுக்கு இலக்கியம் கற்பித்தல் என்பது சிரமமானதாக இல்லை.

அக்கால ஆசிரியர்கள் பாடநூலையும் மீறி பல வித செய்திகளையும் கதைகளையும் அறிந்து வைத்திருப்பதால் இலக்கியம் தொடர்பான செய்திகளைப் பாடநூலின் துணையின்றி கற்பித்தலில் வெகு சாதாரணமாக கலந்து கூற முடிகிறது. இதனால், மாணவர்களுக்கு இலக்கியம் படிப்பதில் ஆர்வம் ஏற்படுகிறது.

நடுத்தர வயதைக் கடந்த ஆசிரியர்கள் எந்த ஒரு செய்தியையும் மிகுந்த விளக்கமாக விளக்கும் பொருட்டு அதிக செய்திகளை உதாரணமாகக் கூறுகின்றனர். இதனால், மாணவர்களுக்கு எந்த வித சந்தேகங்களும் எழுவதற்கான வாய்ப்புகள் இன்றி சென்று சேர வேண்டிய செய்தி முழுமையாக சென்றடைகிறது.

**சங்கப் பனுவல்களைக் கற்றல், கற்பிக்கும் முறைகள் பற்றிய கருத்துக்கணிப்பில் கிராமம் மற்றும் நகரத்தில் உள்ள பள்ளி ஆசிரியர்களைக் காட்டிலும் மாநகரத்தில் உள்ள பள்ளி ஆசிரியர்கள் சிறந்து விளங்கக் காரணங்கள்**

கிராமம் மற்றும் நகரத்தில் இருக்கும் பள்ளி மாணவர்கள் பெரும்பாலும் தமிழ்மொழியையே பயிற்றுமொழியாகக் கொண்டுக் கல்வி கற்பிப்பதால் தமிழில் நன்கு எழுதப் படிக்க அறிந்திருப்பர். எனவே, அம்மாணவர்களுக்கு, அதிகப்படியான விளக்கம் தேவையில்லை என்று நினைத்து ஆசிரியர்கள் கற்பித்தலைச் சுருக்கமாக முடிக்கும் வாய்ப்பு உண்டு.

மாநகரத்தில் இருக்கும் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் படிப்பில் அதிகப்படியான கவனம் செலுத்துவதால் பெற்றோர்களின் சந்தேகங்களுக்கும் சேர்த்து பதிலளிக்க வேண்டிய கட்டாயம் ஆசிரியர்களுக்கு உண்டு என்பதால் கற்பித்தலில் அதிக கவனம் செலுத்தலாம்.

மாநகரத்தில் ஆங்கில வழிப் பள்ளிகளே அதிகம் இருப்பதால் மாணவர்களுக்குத் தமிழ்மொழியில் அதிக ஊக்குவிப்புத் தேவைப்படுவதால் சங்க இலக்கியங்களில் இருக்கும் பழஞ்சொற்களை விளக்குவதற்கு கூடுதல் ஊக்குவிப்பு தேவை என்ற கட்டாயத்துடன் கற்பித்தலில் அதிக கவனம் செலுத்தலாம்.

கிராமம் மற்றும் நகரப்பள்ளிகளைக் காட்டிலும் மாநகரத்தில் உள்ள பள்ளிகளில் தமிழ்மொழியைத் தேர்ந்தெடுத்துப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையில் குறைவாக இருப்பதால் கற்பித்தலின் போது ஒவ்வொரு மாணவர் கேட்கும் சந்தேகங்களுக்குப் பொறுமையாக விளக்கமாகப் பதிலளிக்க போதுமான நேரம் இருக்கும் என்பதால் கற்பித்தல் சிறந்து நிகழ வாய்ப்பு உள்ளது.

கிராமம் மற்றும் நகரப்பள்ளிகளைக் காட்டிலும் மாநகரத்தில் உள்ள பள்ளிகளில் கணினித்திரை, மொழிப் பயிற்றாய்வுக்கூடம் போன்ற இதர கற்பித்தல் வசதிகள் நிரம்பி இருப்பதால் கற்பித்தல் சிறப்பாக நிகழ வாய்ப்பு உண்டு.

கிராமம் மற்றும் நகரப்பள்ளிகளைக் காட்டிலும் மாநகரத்தில் பெரும்பாலும் தனியார் பள்ளிகளே உள்ளன. இவற்றில், நிர்வாகத்தின் தனிப்பட்ட கவனிப்பால் அவ்வப்போது ஆசிரியர்களின் கற்பித்தல் சோதிக்கப்படுவதால் மாநகரப்பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் கற்பித்தலில் கவனமாக இருக்க வேண்டியுள்ளதால் கற்பித்தல் சிறப்பாக நிகழ வாய்ப்புகள் அதிகம்.

**சங்கப் பனுவல்களைக் கற்றல், கற்பிக்கும் முறைகள் பற்றிய கருத்துக்கணிப்பில் கொடுக்கப்பட்ட வினாத்தாளில் ஆண் ஆசிரியர்களைக் காட்டிலும் பெண் ஆசிரியர்கள் அதிகமாக ‘ஆம்’ என விடையளித்தற்கான காரணங்கள்**

சங்க இலக்கியங்களைக் கற்பித்தலின் போது ஆண் ஆசிரியர்களைக் காட்டிலும் பெண் ஆசிரியர்களே, மாணவர்களுக்கு அவற்றை நன்முறையில் விளக்க வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

பாடத்தைத் தொடங்குவதற்கு முன் அதற்கு ஈடான கதைகளையோ அல்லது செய்திகளையோ கூறித் தொடங்கினால் மாணவர்களிடம் சங்க இலக்கியத்தைக் கற்பிக்கும் போது அதிக ஆர்வம் ஏற்படும் என்று பெண் ஆசிரியர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

ஆண் ஆசிரியர்களைக் காட்டிலும் பெண் ஆசிரியர்கள் இயற்கையாகவே மென்மையான குரல் வளம் பெற்றுள்ளதால் செய்யுள்களைச் சற்று ராகமாக

படித்தாலே அந்தப் பாடலுக்கான இசையுடன் பாடிய திருப்தியை மாணவர்களுக்குக் கொடுக்க முடிகிறது.

சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் போது பாடலைப் படித்துக்காட்டி அதனை மாணவர்களைத் திரும்ப படிக்கச் சொல்லுவதில் ஆண் ஆசிரியர்களைக் காட்டிலும் பெண் ஆசிரியர்களே அதிகமான ஆர்வம் காட்டுகின்றனர்.

பெரும்பாலும் தொடக்கக்கல்வி நிலையில் பெண் ஆசிரியர்களே பாடம் கற்பிப்பிதால் அதைத் தொடர்ந்து கற்று வரும் மாணவர்கள் நடுத்தர வகுப்பிற்கு வரும் போதும் ஆண் ஆசிரியர்களின் கற்பித்தலைக் காட்டிலும் பெண் ஆசிரியர்களின் கற்பித்தலின் மீது அதிக ஆர்வம் செலுத்துகின்றனர்.

சங்க இலக்கியக் கற்பித்தலின் போது அதில் இடம்பெறும் இலக்கணக் கூறுகளை ஆண் ஆசிரியர்களைக் காட்டிலும் பெண் ஆசிரியர்களே சுலபமாகவும் சுருக்கமாகவும் கற்பிக்கின்றனர்.

சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் போது ஆண் ஆசிரியர்களைக் காட்டிலும் பெண் ஆசிரியர்கள் அதிகமாகக் கரும்பலகையை விளக்குதலுக்காகவும் பாடல் அடிகளை எழுதுவதற்காகவும் பயன்படுத்துகின்றனர்.

சங்க இலக்கியங்களுக்கான மனவரைபடம் வரைதல், கற்பனை படம் வரைதல், ஒலிப்பதிவு நாடாவில் பாடலைப் பதிவு செய்து மாணவர்களைக் கேட்க வைப்பதில் பெண் ஆசிரியர்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

சங்க இலக்கியப் பாடல்களை மாணவர்களை மனனமாக கூற வைப்பதிலும் கற்பித்தலின் போது வினாக்கள் எழுப்பி மாணவர்களை ஊக்கப்படுத்துவதிலும் பெண் ஆசிரியர்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

சங்க இலக்கியங்களை மற்ற செய்யுள்களோடு ஒப்பிட்டுப் பார்த்து அதன் சிறப்பு அம்சங்களை உள்வாங்கி அதை மாணவர்களுக்கு எடுத்தியம்புவதில் ஆண் ஆசிரியர்களைக் காட்டிலும் பெண் ஆசிரியர்களே சிறந்து விளங்குகின்றனர்.

11 மற்றும் 12 ஆம் வகுப்பில் சங்க இலக்கியங்கள் அதிகமான அளவு கொடுத்திருந்தாலும் அதை மாணவர்களுக்குத் தெளிவாகவும் சிறந்த முறையிலும் விளக்குவதிலும் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதிலும் ஆண் ஆசிரியர்களைக் காட்டிலும், பெண் ஆசிரியர்கள் சிறந்து விளங்குகின்றனர்.

**சங்கப் பனுவல்களைக் கற்றல், கற்பிக்கும் முறைகள் பற்றிய கருத்துக்கணிப்பில் கொடுக்கப்பட்ட வினாத்தாளில் அதிகப்படியான விடையளித்த பிரிவுகள் மற்றும் அதற்கான காரணங்கள்:-**

சங்க இலக்கியம் கற்பித்தலில் துணைக்கருவிகள் பயன்பாட்டில் கரும்பலகைப் பயன்பாட்டில் மற்றும் கணிப்பொறியைப் பயன்படுத்துதல் போன்றவற்றில் பெண் ஆசிரியர்கள் முதல் தரத்திலும் ஆண் ஆசிரியர்கள் இரண்டாம் தரத்திலும் உள்ளனர்.

சங்க இலக்கியம் கற்பித்தலின் போது இடையிடையே வினாக்கள் கேட்பதில் பெண் ஆசிரியர்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

சங்க இலக்கியம் கற்பித்தலின் போது கரும்பலகைப் பயன்படுத்துவதை முதன்மையாகவும் பாடத்தைத் தொடங்குதல் மற்றும் துணைக்கருவிகளைப் பயன்படுத்துவதை அடுத்தப்படியாகவும் ஆண் ஆசிரியர்கள் முதன்மையான எண்ணுகின்றனர்.

சங்க இலக்கியம் கற்பித்தலின் போது துணைக்கருவிகளைப் பயன்படுத்துவதை முதன்மையாகவும் பாடம் கற்பித்தலின் போது இடையிடையே வினாக்கள் எழுப்புவது மற்றும் அதனை மதிப்பீடு செய்யும் முறையை அடுத்தபடியாகவும் பெண் ஆசிரியர்கள் முதன்மையாக எண்ணுகின்றனர்.

## 3.18 முடிவுரை

கருதுகோள்களின் அடிப்படையில் 24 ஆண் ஆசிரியர்கள் 38 பெண் ஆசிரியர்களிடம் இருந்து பெறப்பட்ட உண்மைத் தரவுகள் இவ்வியலில் பகுப்பாய்வு செய்யப்பட்டதன் மூலம் சராசரி, திட்ட விலக்கம், F-ன் மதிப்பு, t-ன் மதிப்பு ஆகியவற்றைக் கண்டறிந்ததில் கருதுகோள்கள் ஏற்புடையதா? அல்லது ஏற்புடையதற்றதா? என அறிய மற்றும் தொடர்பு கெழுவின் மூலம் மனப்பான்மைக்கும் அடைவிற்கும் இடையே தொடர்பு உள்ளதா? இல்லையா? என சோதித்தறிய முடிந்தது. மேலும் ஆய்விற்கான தீர்வுகளை விளக்குவதற்கும் விவாதம் செய்வதற்கும் அடிப்படையாக அமைந்தது. F-ன் மதிப்பு, t-ன் மதிப்பு சோதனைக்கான விளக்கங்கள் பின்னிணைப்பு 2இல் வழங்கப்பட்டுள்ளன.

அடிக்குறிப்புகள்

1. வீரப்பன் பா., **உயர்நிலை தமிழ் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள்**, ப.59
2. **மேலது**, ப.60
3. லட்சுமி எஸ்., **கல்வியில் புதுமைகள்**, ப.45
4. கணபதி, **நற்றமிழ் கற்பிக்கும் முறைகள்**, ப.166
5. வீரப்பன் பா., **உயர்நிலை தமிழ் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள்**, ப.65
6. திருமலை மா.சு., **தமிழ் கற்பித்தல் (அ) மொழிக் கற்பித்தல்**, ப.63
7. வீரப்பன் பா., **உயர்நிலை தமிழ் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள்**, ப.65
8. கணபதி, **நற்றமிழ் கற்பிக்கும் முறைகள்**, ப182
9. வீரப்பன் பா., **உயர்நிலை தமிழ் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள்**, ப.61
10. கணபதி, **நற்றமிழ் கற்பிக்கும் முறைகள்**, ப.185
11. **மேலது**, ப.165
12. வீரப்பன் பா., **உயர்நிலை தமிழ் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள்**, ப.66
13. **மேலது**, ப.68
14. பழனிவேலு ஞா., **செந்தமிழ் கற்பித்தல் பொதுத்தமிழ்**, ப.95
15. கணபதி, **நற்றமிழ் கற்பிக்கும் முறைகள்**, ப.183
16. வீரப்பன் பா., **உயர்நிலை தமிழ் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள்,** ப.66

இப்பகுதியில் இவ்வாய்வு இயல்களின் தொகுப்புரை, சங்க இலக்கியங்களைக் கற்பித்தல் பற்றிய ஆய்வாளரின் கருத்துகள் மற்றும் தொடர் ஆய்வுக்கான களங்கள் முதலியன இடம்பெற்றுள்ளது.

**தொகுப்புரை**

பள்ளிக் கல்வியில் இடம்பெற்ற சங்க இலக்கியப் பனுவல்கள் மற்றும் அதன் கற்றல் கற்பித்தல் முறைகள் குறித்து நடத்தப்பட்ட இவ்வாய்வு மூன்று இயல்களாகப் பகுக்கப்பெற்றன.

முதல் இயலில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள பாடநூல்களில் உள்ள சங்க இலக்கியப் பனுவல்கள் உள்ளடக்கப் பகுப்பாய்வு அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளன. இதில், சங்கப்பனுவல்கள் 6ஆம் வகுப்பில் அறிமுகப்படுத்தப்பட்டு பின் ஒவ்வொரு வகுப்பிலும் அதன் விகிதமானது அதிகரித்து வருகிறது. 6ஆம் வகுப்பில் 1 பாடல், 7ஆம் வகுப்பில் 1 பாடல், 9ஆம் வகுப்பில் 2 பாடல்கள், 10ஆம் வகுப்பில் 3 பாடல்கள், 11ஆம் வகுப்பில் 3 பாடல்கள், 12ஆம் வகுப்பில் 5 பாடல்கள் என ஆக மொத்தம் 15 பாடல்கள் மட்டுமே இடம்பெறுகின்றன. 8ஆம் வகுப்பில் எந்த சங்கப்பனுவல்களும் இடம்பெறவில்லை.

6 மற்றும் 7ஆம் வகுப்பில் இடம்பெறும் சங்கப்பனுவல்கள் புறப்பாடல்களாக இடம்பெறுகின்றன. அந்தப் பாடல்கள் மாணவர்களின் வயதிற்கும் கற்றல் திறனுக்கும் ஏற்ப குறைந்த அடிகள் கொண்ட பாடல்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களின் மூலம், மாணவர்கள் நாட்டுப்பற்று, மனிதமாண்பு, மனிதராய் பிறந்ததன் நோக்கம், நன்மக்களாய் வாழும் முறை போன்ற சமூகம் சார்ந்த உயர்வான விழுமியங்களை வளர்க்கும் நோக்கில் இப்பாடல்கள் அமைந்துள்ளன.

9 மற்றும் 10ஆம் வகுப்பில் புறப்பாடல்களுடன் அகப்பாடலும் அறிமுகப்படுத்தப்படுகிறது. 9ஆம் வகுப்பில் இடம்பெற்ற புறப்பாடல் நாட்டுப்பற்றை உணர்த்துவதாக அமைந்துள்ளது. அதே போல், 9 ஆம் வகுப்பில் இடம்பெறும் அகப்பாடலும் புறப்பாடலை ஒத்த பாடலாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இப்பாடல் மன்னனின் நற்பண்புகளைப் பாராட்டுவது போல் அமைந்துள்ளது. மாணவர்களிடம் நாட்டுப்பற்று, தலைவனுக்குரிய நற்பண்புகள் போன்ற உயர்வான விழுமங்களை வளர்க்கும் நோக்கில் பாடல்கள் தேர்ந்தெடுத்து வழங்கப்பட்டுள்ளன.

10ஆம் வகுப்பில் இடம்பெறும் புறப்பாடல்கள் மூலம் அக்கால மக்களின் தொழில்முறை, செல்வம் ஈட்டும் முறை, பயன்படுத்தும் முறை போன்ற தனி மனித வாழ்வுமுறை குறித்த விழுமங்களை மாணவர்கள் அறியும் பொருட்டு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அகப்பாடல்களின் மூலம் மாணவர்களின் நட்பு, இருவர் நட்பின் ஆழம், நட்பிற்காக உயிர் துறக்கும் குணம், அன்பு போன்ற மனிதனின் அக வளர்ச்சி சார்ந்த செய்திகளை விழுமியங்களாக மாணவர்கள் அறியும் பொருட்டு பாடல்கள் தேர்ந்தெடுத்து வழங்கப்பட்டுள்ளன.

11ஆம் வகுப்பில் இடம்பெறும் புறப்பாடல் மூலம் மாணவர்கள், அக்கால மன்னனின் மேன்மை, புகழ், வீரம், மக்களைப் பேணிய முறை போன்ற ஆண்மகனின் ஒழுகலாறுகளைக் கற்பிக்கும் பாடலாக அமைகிறது. அகப்பாடல்களில் தோழியின் முக்கியத்துவம், தலைவன் தலைவி அன்பு, பிரிவு, போன்ற அகவாழ்க்கை தொடர்பான செய்திகளை மாணவர்கள் உணரும் வகையிலும், அகம் சார்ந்த விழுமியங்களை வளர்க்கும் நோக்கிலும் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

12ஆம் வகுப்பில் இடம்பெறும் புறப்பாடல் மன்னனின் ஒழுகலாறுகளை நினைவுட்டும் வகையில் அமைகிறது. அகப்பாடல் எண்ணிக்கையில் அதிகரித்துக் காணப்படுவதோடு, அகப்பாடலுக்குரிய மாந்தர்களின் அறிமுகம், அவர்களின் முக்கியத்துவம், அவர்களின் கூற்று, நம்பிக்கை, பிணைப்பு போன்ற அகம் சார்ந்த நிகழ்வுகளின் பிரதிபலிப்புகள் அமையும் வண்ணம் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

ஆனால், பாடநூலில் எந்தப் பகுதியிலும் பாடல் கற்பிக்கப்படுவதற்கான நோக்கமோ அல்லது திணை, துறை போன்ற முக்கியக் கூறுகளின் விளக்கங்களோ, பாடல் மூலம் மாணவர்கள் கற்கும் விழுமியங்கள் பற்றியோ எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. இவை, அனைத்தும் ஆசிரியரின் தனிப்பட்ட விருப்பத்தில் மட்டுமே மாணவர்களிடத்தில் சென்றடையும் ஒரு நிலை இருப்பதாக கருதப்படுகிறது.

இரண்டாம் இயலில் சங்க இலக்கியங்களைக் கற்பித்தல் முறைகளை ஆராய்கிறது. சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் ஆசிரியர், அவற்றைப் பற்றிய செய்திகளை முழுமையாக அறிந்திருத்தல் இன்றியமையாததாகும். எனவே, சங்க இலக்கியங்களின் முக்கியக் கூறுகளான அகம், புறம் சார்ந்த மரபுகள், அவற்றின் பன்முகக் கூறுகள், உத்திகள் பற்றி ஆசிரியர்கள் அறிந்திருக்க வேண்டிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. அடுத்து, சங்க இலக்கியங்களில் ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டிய முக்கியக் கூறுகளான ஓசை, சொல், பொருள், இலக்கியக் கூறுகள், பாடலைப் படித்தல், பாடுதல், இலக்கிய விழுமங்கள் குறித்த செய்திகள் அமைந்துள்ளன. மேலும், சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் உத்திகளும் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில், பாடலை விளக்கும் முறை, பாடுதல், படித்தல், நடித்தல், ஒப்புமைப்படுத்துதல் போன்ற கற்பித்தல் முறைகள் பற்றிய விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன. முடிவில், கற்றல் கற்பித்தல் கோட்பாடுகளோடு இணைந்து, சங்க இலக்கியங்களை எவ்வாறு கற்பிக்கலாம் என்ற நோக்கில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு விளக்கப்பட்டுள்ளது. இதில், தார்ண்டைக், பாவ்லோ, ஸ்கின்னர், கெஸ்டால்ட், பேக்லி போன்ற அறிஞர்களின் கோட்பாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் உத்திகள் ஆசிரியர்களுக்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

மூன்றாம் இயலில், இன்றைய சூழ்நிலையில் பள்ளிகளில் சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் கருத்துகள் களஆய்வின் மூலம் திரட்டப்பட்ட கருத்துகளை ஆராய்கிறது. இவ்வாய்வுக்கான வினாநிரல், சங்க இலக்கியங்களை மாணவர்களுக்குக் கற்பிப்பதன் நோக்கம், கற்பித்தல் முறைகள், துணைக் கருவிகளைப் பயன்படுத்துதல், மதிப்பீடு, கற்றல் வெளிப்பாடு போன்றவை தொடர்பாக ஆசிரியர்களின் கருத்துகளைத் திரட்டும் வகையில் உருவாக்கப்பட்டது. இந்த வினாநிரல் விடைகளைத் தகவலாளர்கள் ஆம் அல்லது இல்லை எனக் குறிப்பிடும் வகையில் அமைக்கப்பட்டது. இதில் ஒவ்வொரு பிரிவிலும் 5 வினாக்கள் கொண்ட 12 பிரிவுகள் அமைந்துள்ள 60 வினாக்கள் இடம்பெற்றுள்ளன. மேலும், இவ்வினாநிரல் சில பொதுவான வினாக்களைக் கொண்டிருப்பதோடு வகுப்பு நிலை சார்ந்து சில சிறப்பு வினாக்களையும் கொண்டுள்ளது. இவ்வகையில் மொத்தம் 95 வினாக்கள் அமைந்துள்ளன. இந்த வினாநிரல் வழி பெறப்பட்ட தரவுகள் பல்வேறு கற்றல் - கற்பித்தல் கூறுகளை பள்ளி அமைவிடம், பயிற்று மொழி, ஆசிரியரின் வயது, பால், அனுபவம் போன்ற காரணிகளையும் உள்ளடக்கி ஆய்ந்து வெளிப்படுத்துகிறது..

பெறப்பட்ட தரவுகள் புள்ளி விவரப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. பகுத்தாய்ந்த விவரங்களிலிருந்து அவற்றிற்கிடையே உள்ள தொடர்பு கெழுவின் அளவு, சராசரி, திட்டவிலக்கம், ஆகியவை முதலில் பெறப்பட்டு அதன் அடிப்படையில் t-யின் மதிப்பு, மாறுப்பாட்டுப் பகுப்பாய்வின் மதிப்பு ஆகியன கண்டுபிடிக்கப்பெற்று கருத்துகள் பரிந்துரைக்கப்படுகின்றன. புள்ளி விவரங்கள் தொடர்பான வரைபடங்களும் ஆங்காங்கே தேவைக்கேற்ப கொடுக்கப்பட்டுள்ளன.

**சங்க இலக்கியங்களைக் கற்பித்தல்: ஆய்வாளரின் கருத்துகள்**

ஆசிரியர்கள் பாடப்பொருளைக் கற்பிக்கும் முன்னர், அதனைக் கற்பித்தலுக்கான நோக்கம், தொடங்கும் முறை, பாடத்தை வளர்க்கும் முறை, விளக்கும் முறை, மாணவர்களை ஊக்கப்படுத்தும் முறை, கற்றலை மதிப்பிடும் முறை ஆகியவற்றை அறிந்திருத்தல் அவசியம். அதிலும், சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இத்தகைய முறைகளையும் அறிந்திருப்பது மட்டுமல்லாமல், சங்க இலக்கியத்தின் மேன்மையையும் கற்பித்தலுக்கான நோக்கத்தையும் அறிந்து இன்றைய மாணவர்களின் மனநிலைக்கு ஏற்றவாறும், விருப்பத்திற்கேற்றவாறும் கற்பிப்பது அவசியமாகிறது.

ஆசிரியர்கள் சங்க இலக்கியச் செய்யுள்களைத் தொடங்கும் போது அதற்கான கற்றல் சூழலை உருவாக்கிக் கற்பிக்கத் தொடங்க வேண்டும். அதாவது, கற்பிக்கப்போகும் சங்க இலக்கியச் செய்யுள்களின் பின்னணிச் செய்திகள், பாடலில் இடம்பெறும் நிகழ்ச்சி போன்றவற்றைக் கூறி மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும். மேலும், பாடல் சம்பந்தப்பட்ட செய்திகள், இடம்பெற்ற நூலின் விளக்கங்கள், ஆசிரியர் பற்றிய குறிப்புகள் ஆகியவற்றைக் கூறியும் தொடங்கலாம். அல்லது பாடலை ஏதேனும் இசையில் பாடி மாணவரை ஊக்குவிக்கலாம்.

பாடலின் ஒவ்வொரு சொற்களையும் படித்துக் காட்டி அதற்குப் பொருள் விளக்கம் கொடுக்க வேண்டும். மேலும் பாடலைப் படித்துக்காட்டி மீண்டும் மாணவரைப் படிக்கச் செய்யலாம். அதாவது, மாணவர்கள் பாடலை உணரும் விதம் ஏற்றத்தாழ்வுடன், உணர்ச்சியுடன் படிக்க வேண்டும். பின் பாடலின் முழுக் கருத்தையும் ஒவ்வொன்றாகக் கூறிய பின்னர் உரைநடைப்படுத்தி மொத்தமாக விளக்குதலும் நல்லது. சங்கப்பாடல்களைக் கற்பிப்பது எவ்வளவு அவசியமோ அதே அளவுக்கு அதிலுள்ள இலக்கணம், உவமை, சொற்சுவை, கற்பனை நயம் ஆகியவற்றையும் கற்பிக்க வேண்டும்.

சங்கப்பாடல்களில் உள்ள பழஞ்சொற்களைப் பொருளுடன் கரும்பலகையில் எழுதி மாணவர்களுக்கு விளக்கலாம். பாடலின் தலைப்பு, பாடல் ஆசிரியரின் பெயர், முக்கியக் கருத்துகள், முக்கிய பாடல் அடிகள் போன்றவற்றையும் கரும்பலகையில் எழுதி விளக்கலாம். முடிந்தவரையில் பாடலின் கருப்பொருளை ஒரு வரைபடமாகவோ, விளக்கப்படமாகவோ, அவரவர் திறமைக்கேற்ப கரும்பலகையில் வரைந்து மாணவர்களுக்கு விளக்குவது சிறந்ததாக அமையும்.

மேலும், சங்கப்பாடல்களை வெறும் வாய்மொழியாக நடத்துவதைக் காட்டிலும், அதற்கு ஏற்றாற்போல் துணைக்கருவிகளைப் பயன்படுத்தி நடத்துவது கற்றலை சிறந்ததாக்க உதவும். பாடலை நல்ல இசையுடன் பாடி ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்து மாணவர்களை கேட்க வைத்துக் கற்பிக்கலாம். மேலும், இன்றுள்ள கணினி உலகத்தில் கணினியையே மிகச்சிறந்தச் துணைக்கருவியாக நம்மால் பயன்படுத்த முடியும். இணையத்தின் வாயிலாக சிறந்த படங்கள், ஒளி, ஒலிப்பேழைகள் போன்றவற்றை பாடலுக்கு ஏற்றவாறு தரவிறக்கம் செய்து மாணவர்களுக்கு காண்பிப்பது கற்றலை இனிமையாக்கும்.

சங்கப்பாடல்களைக் கற்பிக்கும் போது இடையிடையே மாணவர்களிடம் வினாக்கள் எழுப்புவதன் மூலமும் வினாக்களுக்குச் சரியான விடையளித்த மாணவர்களை ஊக்குவிப்பதன் மூலமும் மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டை ஊக்குவிக்க முடியும். மேலும், இவ்வாறு வினாக்கள் கேட்கும் போது பாடலின் கருத்துக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்காமல் பாடலின் வரிகளைப் பிழையின்றி கூறுமாறும் பிழையின்றி எழுதுமாறும் வினாக்கள் கேட்கலாம். இதனால், மாணவர்களைப் பாடலின் கருத்தை மட்டுமின்றி, பாடல் அடிகளையும் படிக்க வைக்க முடியும். சங்கப்பாடல்களைக் கற்பிப்பதோடு தொடர் மதிப்பீட்டையும் ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும்.

மொழிப்பாடங்களில் கொடுக்கப்படும் வழக்கமான வீட்டுப்பாடங்களிலிருந்து சற்று விலகி, மாணவர்களின் சிந்தனையும் செயலும் சங்கப்பாடல்களை ஒட்டி வளரும் வகையில் தொடர்பணி கொடுக்கலாம். அதாவது, பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள சங்கப்பாடலை மனனம் செய்யச்சொல்லலாம். அல்லது அதே போன்று வேறு ஏதேனும் புதிய சங்கப்பாடலைக் கண்டறிந்து எழுதி வரச் சொல்லலாம். அல்லது பாடநூலில்

இடம்பெறும் சங்கப் பாடலின் முக்கிய அம்சங்களான கருத்து வளம், உவமை, பழஞ்சொற்கள், நயம் போன்ற ஏதேனும் ஒன்றைக் கற்பித்தலில் நினைவுகூர்ந்து அதை மீண்டும் பாடலோடு ஒப்பிட்டுப் பார்த்து எழுதி வரச் சொல்லலாம். இவ்வற்றையெல்லாம் செய்வதன் மூலம் மாணவர்கள் பள்ளியில் மட்டுமல்லாது வீட்டிலும் சங்கப்பாடல்களைப் படிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்த முடியும்.

சங்கப்பாடல்கள் பழந்தமிழர்களின் வாழ்க்கை எனக் கூறுவதைக் காட்டிலும் நம் முன்னோர்களின் வாழ்க்கை என்று கூறி அதை இன்றைய மாணவர்கள் பின்பற்றும்படி கற்பித்தல் வேண்டும். அக்கால வாழ்க்கை முறையின் உயர்ந்த பண்பாட்டுக் கூறுகளை எவ்வாறு இக்கால வாழ்க்கையுடன் இணைக்க முடியும் என்பதை மாணவர்களுக்கு உணர்த்த வேண்டும். சங்கப் பாடல்களைக் கற்பிப்பததால் ஆசிரியர் முதலில் பெருமிதம் கொள்ள வேண்டும். அந்த பெருமித உணர்வே பண்டையப் பாரம்பரியத்தை மாணவர்களிடத்தில் கொண்டு சேர்க்கும். மேலும், பல சங்க இலக்கியப் பாடல்களை மாணவர்கள் தேடிப் படிப்பதில் ஆர்வத்தை ஏற்படுத்தும். இலக்கியப் பாடல்களில் ஏற்படும் ஆர்வம் அவர்களின் சொற்களஞ்சியத்திறனை மேம்படுத்தும். இதனால், அவர்களின் படைப்பாற்றல் திறன் படித்தல் மற்றும் எழுதுதல் முறையில் மேம்படும்.

சங்கப்பாடல்களின் தனித்தன்மைகளை முதலில் ஆசிரியர் அறிந்து அனுபவிக்க வேண்டும். ஆசிரியரின் முழு ஈடுபாடு மட்டுமே மாணவர்களின் கற்றலுக்கு வழிவகுக்கும். தொடக்க காலத்தில் இருந்தே ஒவ்வொரு வகுப்பிலும் கற்பிக்கும் ஆசிரியர்கள் சங்க இலக்கியச் செய்யுள்களின் தனித்தன்மையை மாணவர்களுக்கு உணர்த்தி இலக்கியப் பாடல்களைப் படிக்க வைத்து, மாணவர்களின் சொற்களஞ்சியத்தைக் கூட்டி கற்பித்தல் திறனை வளர்க்க வேண்டும். இதுவோ பிற்காலங்களில் மாணவர்கள் கூடுதல் கற்றல் திறனைப் பெறுவதற்கு வழிவகுக்கும்.

சங்கப்பாடல்களை மாணவர்கள் முழுமையாக உணரும் வகையில் நடத்துவதன் மூலம் சங்கப்பாடல்களைப் பாடிய புலவர்கள் உணர்த்திய செய்திகளை அவர்கள் வழியிலேயே மாணவர்களுக்கு விளக்குவதன் மூலமும், மாணவர்களை அக்கால வாழ்க்கைப் பின்னணிக்குக் கொண்டு செல்வதுடன் செய்யுளின் உண்மையான விழுமங்களைச் சரியான முறையில் உணர வைக்க முடியும்.

சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதில் ஆசிரியர்களிடையே ஒத்த அணுகுமுறைக் காணப்படவில்லை. இதனைப் போக்க, ஆசிரியர்களுக்கான கையேட உருவாக்கப்படுவதோடு அதில், சங்க இலக்கியம் கற்பிப்பதற்கான குறிப்புகள், முறைகள், உத்திகள், செயல்பாடுகள், தொடர்பணிகள், மதிப்பிடும் முறைகள் ஆகியன தெளிவாகவும் விரிவாகவும் இடம்பெற வேண்டும்.

**தொடர் ஆய்வுக்கான களங்கள்**

இவ்வாய்வு, பள்ளிப்பாடநூலில் இடம்பெற்றுள்ள சங்கப் பனுவல்களின் உள்ளடக்கப் பகுப்பாய்வு, சங்க இலக்கியக் கற்றல் கற்பித்தல் முறைகள், இது தொடர்பான ஆசிரியர்களிடம் களஆய்வின் வழி திரட்டப்பட்ட செய்திகளின் பகுப்பாய்வு ஆகியவற்றைக் கொண்டது. இதனையொட்டி, கல்லூரிப் பாடங்களில் இடம்பெற்றிருக்கும் சங்கப் பனுவல்கள் குறித்தும் கற்றல் கற்பித்தல் முறைகள் குறித்தும் ஆராய இயலும். சங்கப் பனுவல்களைக் கற்பிப்பதில் பல்லூடகம், இணையம் முதலிய தொழில்நுட்ப பயன்பாடு குறித்தும் ஆராயலாம். கற்றல் கற்பித்தல் கோட்பாடுகளின் அடிப்படையில் சங்க இலக்கியம் கற்றல் கற்பித்தல் முறைகளை விரிவாக ஆராயவும் இயலும்.

# வினாநிரல்

அன்பு ஆசிரியர்களே,

வணக்கம். தமிழ்ப் பாடநூல்களில் செய்யுள் பகுதியில் உள்ள சங்க இலக்கியம் தொடர்பான பாடல்களைக் கற்பித்தல் மற்றும் கற்றல் பற்றிய தங்கள் கருத்துக்களை அறிய விரும்புகிறேன். இந்த கருத்தாய்வு என்னுடைய முனைவர் பட்ட ஆய்வறிக்கைக்காக மேற்கொள்ளப்படுகிறது. தாங்கள் கொடுக்கும் தகவல்கள் சங்க இலக்கிய கற்றல்-கற்பித்தல் திறன்களை மேம்படுத்தத் துணைபுரியும் என்பதால் தயவுகூர்ந்து உண்மையாகவும் வெளிப்படையாகவும் தகவல்களைக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தாங்கள் அளிக்கும் தகவல்கள் யாவும் மறைவிடக்கமாகப் பாதுகாக்கப்படும் எனவும் உறுதியளிக்கிறேன். - ஆய்வாளர்.

**சுய விவரம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பெயர் | (விரும்பினால்) | | | | | |
| பள்ளியின் வகை | அரசு | | அரசு உதவி பெறும் | | தனியார் | |
| கற்பிக்கும் வகுப்பு | 6,7 | | 9,10 | | 11,12 | |
| பால் | ஆண் | | பெண் | | | |
| வயது | 20-32 | | 33-45 | | 46-58 | |
| அனுபவம் | 1-5 | | 6-10 | | 10க்கு மேல் | |
| அமைவிடம் | மாநகரம் | | நகரம் | | கிராமம் | |
| பயிற்று மொழி | தமிழ் | | | ஆங்கிலம் | | |

**வினா நிரல்**

குறிப்பு – எல்லா வினாக்களுக்கும் உங்களுடைய பதிலை ஆம் அல்லது இல்லை எனக் குறிப்பிடவும். இதனை '√' குறியிட்டுக் காட்டவும்.

| எண் | வினாக்கள் | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| | **கற்பித்தலின் நோக்கம்** | | |
| 1 | மொழிக் கல்வியில் செய்யுள் பகுதி அவசியம் எனக் கருதுகிறீர்களா? | | |

| | | | |
|---|---|---|---|
| 2 | செய்யுள் பகுதியில் சங்க இலக்கியச் செய்யுள்களைக் கற்பிப்பது இன்றியமையாதது எனக் கருதுகிறீர்களா? | | |
| 3 | சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதன் மூலம் மாணவர்களின் சொற்களஞ்சியத் திறன் மேம்படுமா? | | |
| 4 | செய்யுள் பகுதியில் உள்ள சங்க இலக்கிய செய்யுள்களுக்கும் மற்ற செய்யுள்களுக்கும் உள்ள வேறுபாட்டை மாணவர்களுக்கு கற்பிப்பது உண்டா? | | |
| 5. | சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதன் மூலம் மாணவர்களுக்குச் சங்க இலக்கியப் புத்தகங்களைப் படிப்பதில் ஆர்வம் ஏற்படுமா? | | |
| **பாடத்தைத் தொடங்குதல்** | | | |
| 1 | சங்க இலக்கிய செய்யுள்களைத் தொடங்கும் போது அதற்கான கற்றல் சூழலை உருவாக்கி கற்பிக்கத் தொடங்குவீர்களா? | | |
| 2 | சங்க இலக்கிய செய்யுள்களைத் தொடங்கும்முன் பின்னணிச் செய்திகளைக் கூறித் தொடங்குவீர்களா? | | |
| 3. | சங்க இலக்கியப் பாடல்களில் இடம்பெறும் நிகழ்ச்சியைக் கூறித் தொடங்குவீர்களா? | | |
| 4 | சங்கப்பாடலை இசையோடு பாடி பாடத்தைத் தொடங்குவீர்களா? | | |
| 5 | ஆசிரியரின் வரலாற்றைக் கூறிப் பாடத்தைத் தொடங்குவீர்களா? | | |
| **கற்றலைத் தொடர்ந்து மேம்படுத்துதல்** | | | |
| 1 | ஒவ்வொரு சொற்களுக்கும் அருஞ்சொற்பொருள் கூறிப் பாடத்தை நடத்துவீர்களா? | | |
| 2 | சங்கப் பாடலைப் படித்துக்காட்டி திரும்ப பாடலைப் படிக்கச் செய்வீர்களா? | | |
| 3 | சங்கப் பாடலின் கருத்தை முதலில் கூறிய பின்னர் பாடலைப் படித்துக் காட்டுவீர்களா? | | |
| 4 | சங்கப்பாடலில் உள்ள உணர்ச்சியை மாணவர்கள் உணரும் வண்ணம் குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்து | | |

| | | | |
|---|---|---|---|
| | காட்டுவீர்களா? | | |
| 5 | சங்கப் பாடலின் பொருள் விளங்கும்படி உரைநடைப்படுத்தி விளக்குவீர்களா? | | |
| **இலக்கணம் கற்பித்தல்** | | | |
| 1 | சங்க இலக்கியப் பாடல்களில் உள்ள இலக்கணக் கூறுகளைக் கற்பிப்பது அவசியம் என எண்ணுகிறீர்களா? | | |
| 2 | சங்க இலக்கியங்களில் உள்ள உவமைகளை விளக்குவீர்களா? | | |
| 3 | சங்கப் பாடலில் உள்ள சொற்சுவையையும் கற்பனை நயத்தையும் விளக்குவீர்களா? | | |
| 4 | சிலேடை நயம் கொண்ட சங்கப் பாடல்களை மாணவர்களுக்கு விளக்கும் போது விதிவருமுறையைப் பின்பற்றுவீர்களா? | | |
| 5 | சங்கப் பாடலில் உள்ள இலக்கணக் கூறுகளைப் பொது இலக்கணத்தோடு தொடர்புபடுத்துவீர்களா? | | |
| **கரும்பலகைப் பயன்பாடு** | | | |
| 1 | தொடர்களைப் பிரித்து எழுதவும் சொற்பொருள் கூறவும் கரும்பலகையைப் பயன்படுத்துவீர்களா? | | |
| 2 | இலக்கியப் பாடல் மற்றும் ஆசிரியரின் பெயர், வரலாற்றைக் கூறும் போது கரும்பலகையைப் பயன்படுத்துவீர்களா? | | |
| 3 | சங்கப்பாடலின் தலைப்பை எழுதவும் கருத்துகளை எழுதவும் கரும்பலகையைப் பயன்படுத்துவீர்களா? | | |
| 4 | சங்கப் பாடல் கற்பித்தலில் படங்கள் வரைய கரும்பலகையைப் பயன்படுத்துவீர்களா? | | |
| 5 | சங்கப்பாடல் அடிகளைக் கரும்பலகையில் எழுதும் பழக்கம் உண்டா? | | |
| **பிற துணைக்கருவிகள்** | | | |
| 1 | சங்கப் பாடல்களைக் கற்பிக்க துணைக்கருவிகளைப் | | |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்துவது அவசியம் என எண்ணுகிறீர்களா? | | |
| 2 | சங்கப் பாடலுக்கேற்ற படங்களைக் கற்பனையாக வரைந்து எடுத்துச் செல்லும் பழக்கம் உண்டா? | | |
| 3 | சங்கப்பாடலை நல்ல இசையுடன் பாடி ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்து மாணவர்களைக் கேட்க வைத்தது உண்டா? | | |
| 4 | சங்கப் பாடல்களைக் கற்பித்தலுக்குக் கணிப்பொறியைப் பயன்படுத்தும் பழக்கம் உண்டா? | | |
| 5 | பிற பாடங்களுக்குப் பயன்படுத்தும் வரைபடத்தாள், மனவரைபடம் போன்றவற்றைச் சங்க இலக்கியக் கற்பித்தலுக்கும் பயன்படுத்துவீர்களா? | | |
| **வினாக்கள் கேட்டல்** | | | |
| 1 | சங்க இலக்கியங்களை விளக்கும் போது இடையிடையே வினாக்கள் கேட்கும் பழக்கம் உண்டா? | | |
| 2 | மனப்பாடப் பகுதியைத் தவிர மற்ற சங்கப்பாடல் பகுதிகளில் இருந்து வினாக்கள் கேட்பதுண்டா? | | |
| 3 | சங்கப் பாடல் அடிகளைப் பிழைமாறாமல் எழுதும் வகையில் வினாக்கள் கேட்பதுண்டா? | | |
| 4 | வினாக்கள் கேட்கும் போது இலக்கியக் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்களா? | | |
| 5 | சங்கப் பாடல் அடிகளைப் பிழையின்றி கூறச் சொல்லிக் கேட்பீர்களா? | | |
| **மதிப்பீடு செய்தல்** | | | |
| 1 | மதிப்பிடலில் படித்தல் திறனுக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்களா? | | |
| 2 | இலக்கியத்திற்குரிய கருத்து சரியாக இருந்து வாக்கியம் பிழையாக இருந்தால் மதிப்பு வழங்குவீர்களா? | | |
| 3 | சங்கப் பாடலை மனனம் செய்து ஒப்புவித்தால் சிறப்பு மதிப்பெண் வழங்கும் பழக்கம் உண்டா? | | |
| 4 | மாணவர்கள் சங்கப் பாடல்களின் அருஞ்சொற்களை | | |

| | | | |
|---|---|---|---|
| | வாக்கியத்தில் பயன்படுத்தினால் சிறப்பு மதிப்பெண் வழங்குவீர்களா? | | |
| 5 | மாணவர்களுக்கு வழங்கப்படும் கூடுதல் திட்டப்பணிகளில் வெளிப்படும் அவர்தம் இலக்கியப் படைப்பாற்றலுக்கு சிறப்பு மதிப்பெண் வழங்குவீர்களா? | | |
| **தொடர்பணி கொடுத்தல் (வீட்டு வேலை)** | | | |
| 1 | சங்கப் பாடலை மனப்பாடம் செய்து எழுதி வருமாறு தொடர்பணி கொடுப்பீர்களா? | | |
| 2 | பாடநூலைத் தவிர்த்து வேறு ஏதேனும் சங்கப் பாடல்களைக் கண்டறிந்து படித்து வருமாறு தொடர்பணி கொடுப்பீர்களா? | | |
| 3 | இலக்கியங்களின் கருத்துணர்தல், நயம் உணர்தல் அடிப்படையில் தொடர்பணி கொடுப்பீர்களா? | | |
| 4 | இலக்கியப் பாடல்களின் மன வரைபடம், வினாக்கள், அருஞ்சொற்பொருள் ஆகியவற்றை மனனம் செய்யச் சொல்லி தொடர்பணி வழங்குவீர்களா? | | |
| 5 | மாணவர்களின் இலக்கியப் படைப்பாற்றலை வளர்க்கும் வகையில் தொடர்பணி வழங்குவீர்களா? | | |
| **கற்றல் வெளிப்பாடு** | | | |
| 1 | சங்க இலக்கியப் பாடல்கள் மாணவர்களுடைய அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படும் வகையில் உள்ளதா? | | |
| 2 | சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பிப்பதால் மாணவர்களுக்கு மேலும் சங்க இலக்கியங்களைத் தேடிப் படிப்பதில் ஆர்வம் வளர்கிறதா? | | |
| 3 | சங்க இலக்கியப் பாடல்கள் உயர்ந்த பண்பாட்டினை மாணவர்களுக்கு வளர்க்கிறதா? | | |
| 4 | சங்க இலக்கிய பாடல்களைப் படிப்பதால் அவர்களின் சொற்களஞ்சியத்திறன் மேம்படுகிறதா? | | |
| 5 | பள்ளியில் மாணவர்கள் சங்க இலக்கியப் பாடல்களைப் படிப்பதால் பண்டைய பாரம்பரியம் பற்றிய பெருமித | | |

| | | | |
|---|---|---|---|
| | உணர்வு ஏற்படுகிறதா? | | |
| **சிறப்பு அம்சங்கள்** | | | |
| 1 | சங்க இலக்கியங்கள் தனித்தன்மை வாய்ந்ததா? | | |
| 2 | சங்க இலக்கியங்களைக் கற்பிக்க கூடுதல் திறன்கள் தேவைப்படுகிறதா? | | |
| 3 | சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் போது மாணவர்களை அந்தக் காலப் பின்னணிக்குக் கொண்டுசெல்ல முடிகிறதா? | | |
| 4 | சங்க இலக்கியங்களில் புலவர்கள் உணர்த்திய கருத்துகளையும் உணர்வுகளையும் சரியான முறையில் மாணவர்களுக்கு எடுத்தியம்ப முடிகிறதா? | | |
| 5 | சங்க இலக்கியப் பாடல்களில் உள்ள விழுமியங்களை மாணவர்கள் சரியான முறையில் ஏற்றுக் கொள்கிறார்களா? | | |
| **தமிழ்ப் பாடத்தேர்வில் சங்கப் பனுவல்களுக்கு மாணவர்கள் பதில் அளிக்கும் விதம்** | | | |
| 1 | தேர்வில் சங்கப் பனுவல் சம்பந்தப்பட்ட கேள்விகளை மாணவர்கள் தவிர்த்து விடுகின்றனரா? | | |
| 2 | சங்கப் பனுவல் சம்பந்தப்பட்ட விளக்கமுறை வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கின்றனரா? | | |
| 3 | சங்கப் பனுவல் சம்பந்தப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கும்போது அதற்கான மையக்கருத்து மாறாமல் இருக்கிறதா? | | |
| 4 | சங்கப் பாடல்களில் உள்ள இலக்கணம் சம்பந்தப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கின்றனரா? | | |
| 5 | சங்கப் பனுவல்களை எழுதச் சொல்லி கேட்கும் வினாக்களுக்கு அடிபிறழாமல் எழுதுகின்றனரா? | | |

## 6,7 மற்றும் 8 ஆம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மட்டும்

| | | | |
|---|---|---|---|
| 1 | புறநானூறு நூற்குறிப்பைக் கற்பிக்கும் போது புறப்பாடல் மற்றும் அகப்பாடல் பற்றி விளக்கம் கொடுத்தீரா? | | |
| 2 | சங்ககால மன்னர்களின் பண்புகளையும், மாண்புகளையும் மாணவர்கள் சரியான முறையில் புரிந்து கொண்டார்களா? | | |
| 3 | படைகள், போர்கள் இதைப்பற்றி மாணவர்கள் ஆர்வமுடன் வினாக்கள் எழுப்பினார்களா? | | |
| 4 | பழங்கால மக்களின் புறவாழ்க்கையைப் பற்றிச் சொந்தமாக ஏதேனும் கருத்தைத் தெரிவித்தீர்களா? | | |
| 5 | அக்கால புலவர்களின் பண்புகளையும் திறன்களையும் மாணவர்கள் சரியாக புரிந்துகொண்டனரா? | | |
| 6 | சங்கப் பாடலைக் கற்பிக்கும் போதும் இக்காலக் கவிதையைக் கற்பிக்கும் போதும் ஏற்படும் கற்றல் வெளிப்பாட்டில் ஏதேனும் வேறுபாடுகளைக் காண முடிகிறதா? | | |
| 7 | பாடலின் பன்முகக்கூறுகளைக் காட்டிலும் பாடலின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தீர்களா? | | |
| 8 | பாடலை இயற்றிய ஆசிரியர் பற்றிய கதைகளைக் கூறும் போது மாணவர்களிடம் ஆர்வம் மிகுந்திருந்ததா? | | |
| 9 | தமிழர்களின் பழங்கால வரலாற்றைக் கூறுவதில் இடர்பாடுகள் இருக்கிறதா? | | |
| 10 | முழு மனநிறைவோடு பாடலைக் கற்பிக்க நேரமில்லை என எண்ணுகிறீர்களா? | | |

## 9 மற்றும் 10ஆம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மட்டும்

| | | | |
|---|---|---|---|
| 1 | அகத்திணையை அறிமுகப்படுத்துவதில் ஏதேனும் சிரமம் இருந்ததா? | | |
| 2 | திணை, துறைகளை அறிமுகம் செய்து பாடலைக் கற்பித்தீர்களா? | | |
| 3 | கூற்று என்ற சொல்லை அறிமுகம் செய்து பாடலைக் கற்பித்தீர்களா? | | |
| 4 | பழங்கால மக்களின் வாழ்க்கை முறை, அறச்செயல்கள் | | |

| | | | |
|---|---|---|---|
| | ஆகியவற்றை மாணவர்கள் சரியான முறையில் உள்வாங்கினார்களா? | | |
| 5 | தோழி கூற்று, தலைவி கூற்று ஆகியவற்றைக் கூறும் போது மாணவர்களிடம் இருந்து வினாக்கள் எழுந்தனவா? | | |
| 6 | பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்கள் எவை எவை என மாணவர்களை அறியச் செய்தீர்களா? | | |
| 7 | இன்றைய பார்வையில் சங்க கால அரசர், ஆட்சிமுறை ஆகியவற்றை மாணவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? | | |
| 8 | சங்கப் பாடலில் உள்ள பழஞ்சொற்களை மாணவர்கள் புரிந்துகொள்ள ஆர்வம் காட்டுகிறார்களா? | | |
| 9 | தலைவன், தோழி இவர்களின் நட்பினை விளக்குவதில் சிரமம் இருப்பதாக எண்ணுகிறீர்களா? | | |
| 10 | உங்கள் கற்பித்தலின் மூலமாக ஒரு மாணவராவது சங்கப் பாடலை மனனமாக கூறும் திறமையைப் பெற்றுள்ளானா? | | |

**11 மற்றும் 12 ஆம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மட்டும்**

| | | | |
|---|---|---|---|
| 1 | சங்கப் பாடல்களில் உள்ள திணை, துறைகளை மாணவர்களுக்குக் கற்பிப்பது அவசியம் என எண்ணுகிறீர்களா? | | |
| 2 | திணைகளில் உள்ள கருப்பொருள்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்களா? | | |
| 3 | ஐந்திணைகளின் உரிப்பொருள்களுக்கு விளக்கமோ அல்லது பொருளோ கற்பித்தது உண்டா? | | |
| 4 | சங்கப்பாடல்களின் ஆசிரியர் குறிப்புகளை மனனம் செய்யச் சொல்லி மாணவர்களுக்கு அறிவுறுத்தியதுண்டா? | | |
| 5 | சங்கப்பாடல்களின் நூற்குறிப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து கற்பித்ததுண்டா? | | |
| 6 | சங்கப்பாடல்களின் கருத்துகளைக் காட்டிலும் சங்கப்பாடலில் உள்ள இலக்கணங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பீரா? | | |
| 7 | உயர்நிலைப் பாடத்திட்டத்தில் திணை, துறை பற்றிய அறிமுகம் இல்லாததால், மேல்நிலையில் சங்கப்பாடலைக் கற்பிப்பத்தில் ஏதேனும் சிரமம் உள்ளதா? | | |

| | | | |
|---|---|---|---|
| 8 | பண்டையக்கால அரசரின் போர்க் குணங்களை விளக்குவதால் மாணவர்களிடம் வன்முறை உணர்வைத் தூண்டுவதாக எண்ணுகிறீர்களா? | | |
| 9 | மாணவர்களால் பாடப்பகுதியில் உள்ள எல்லா சங்கப்பாடல்களையும் சீர்பிரித்துப் படித்து விளக்கம் சொல்ல முடியுமா? | | |
| 10 | சங்கப்பாடலின் பன்முகக்கூறுகளைக் காட்டிலும் பாடலின் கருத்துக்கும் விளக்கத்துக்கும் முக்கியத்துவம் கொடுப்பீர்களா? | | |
| 11 | முதற் கருப்பொருள்களை பற்றிக் கற்பிக்கும் போது அதை இக்காலத்தோடு தொடர்புபடுத்தி கற்பிப்பிக்க முடிகிறதா? | | |
| 12 | வண்ணம், தூக்கு போன்ற செய்யுள் உறுப்புகளைக் கற்பிக்கும் போது மாணவர்கள் அதை கற்பதில் ஆர்வம் காட்டுகின்றனரா? | | |
| 13 | உள்ளுறை, இறைச்சி போன்றவை பாடப்பகுதியில் உள்ள சங்கப்பாடல்களில் இருக்கிறதா? | | |
| 14 | உள்ளுறை, இறைச்சி போன்றவற்றை தனிப்பட்ட முறையில் மாணவர்களுக்கு அறிமுகம் செய்தது உண்டா? | | |
| 15 | சங்க கால பாடல்களின் தமிழ் நடையை மாணவர்கள் விரும்புகின்றனரா? | | |

## சங்க இலக்கியங்கள்: கற்றல் கற்பித்தல் முறைகள்

**2.1 சங்க இலக்கியங்களைக் கற்றல் கற்பித்தல்**

**2.2 சங்க இலக்கியங்களின் பொதுப் பண்புகள்**

2.2.1 அகம் புறத்தைப் பொருளாகக் கொண்டிருத்தல்

2.2.2 அகத்திணைப் பாடல்களின் மரபுகள்

2.2.3 புறத்திணைப் பாடல்களின் மரபுகள்

2.2.4 பன்முகக் கூறுகள் மற்றும் உத்திகள்

2.2.5 யாப்பியல் கூறுகள்

2.2.6 சொற்செறிவும் பொருட்செறிவும்

2.2.7 தனிநிலைச் செய்யுட்களாக அமைதல்

**2.3 சங்க இலக்கியங்களில் கற்பிக்க வேண்டிய முக்கியக் கூறுகள்**

2.3.1 இலக்கியங்களுக்கே உரிய ஓசை நயம்

2.3.2 பொருள் உணர்ச்சிக்கேற்ற குரல் ஏற்றத்தாழ்வு

2.3.3 சரியாக ஒலிக்க இயலாத சொற்களுக்குப் பயிற்சி

2.3.4 சொல்லாட்சித் திறன்

2.3.5 இலக்கியங்களுக்குரிய சொற்களைப் பிரித்துப் படித்தல்

2.3.6 இலக்கியச் சொற்களைத் தொடர்களில் அமைத்தல்

2.3.7 இலக்கியக் கூறுகள்

2.3.8 இலக்கியங்களின் விழுமியங்கள்

2.3.9 தொடர்புடைய பிற பாடல்களை அறிமுகப்படுத்தல்

**2.4 சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் உத்திகள்**

2.4.1 பாடப்பொருளுக்கு ஏற்றவாறு ஆர்வப்படுத்துதல்

2.4.2 பகுதியிலிருந்து முழுமைக்குச் செல்லல்

2.4.3 முழுமையிலிருந்து பகுதிக்குச் செல்லல்

2.4.4 துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல்

2.4.5 இசையுடன் பாடுதல்

2.4.6 குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்தல்

2.4.7 நடித்துக் காட்டுதல்

2.4.8 மாணாக்கரைப் பங்கெடுக்கச் செய்தல்

2.4.9 ஒப்புமைப்படுத்திக் கற்பித்தல்

2.4.10 நினைவூட்டுதல்

2.4.11 தொடர்புடைய செய்திகள், புராண நிகழ்வுகள், வரலாறுகள்

ஆகியவற்றைக் கூறுதல்

2.4.12 எளிய படங்கள் வரைந்து விளக்குதல்

2.4.13 விளையாட்டு முறையில் கற்கத் தூண்டுதல்

2.4.14 நாட்டுநடப்புச் செய்திகளைத் தொடர்புபடுத்திக் கூறுதல்

2.4.15 பள்ளிச் சூழலில் அமைந்துள்ள பொருள்களைப் பயன்படுத்தல்

2.4.16 அறிந்ததிலிருந்து அறியாததற்குச் செல்லுதல்

2.4.17 எளிமையிலிருந்து அருமைக்குச் செல்லுதல்

2.4.18 தெளிவிலிருந்து சிக்கலுக்குச் செல்லுதல்

2.4.19 தொடர்புடைய நூல்களைப் படிக்கச் செய்தல்

2.5 கற்றல் கோட்பாடுகளின் அடிப்படையில் சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் உத்திகள்

2.6 சங்க இலக்கியங்களை கற்பிக்க மேலும் சில வழிமுறைகள்

2.7 சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதில் ஆசிரியரின் பங்கு

2.8 சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதில் உள்ள சிக்கல்கள்

2.9 முடிவுரை

## சங்க இலக்கியங்கள்: கற்றல் கற்பித்தல் முறைகள்

### 2.1 சங்க இலக்கியங்களைக் கற்றல் கற்பித்தல்

கற்காலம் தொடங்கி தமிழினம் இடையறாத வரலாற்றைக் கொண்டு விளங்குகிறது. தமிழர்கள் வாழ்ந்த வாழ்க்கையும் அவர்தம் வாழ்வை எதிரொலிக்கும் இலக்கியங்களும் நம்மை வியப்பினில் ஆழத்துகின்றன. சங்க இலக்கியங்கள் திணை அடிப்படையில் அமைந்த தனித்துவம் வாய்ந்த இலக்கிய மரபைக் கொண்டவை.

அத்தகைய சங்ககால இலக்கியம், நுண்மாண் நுழைபுலம் மிக்க சான்றோர்களின் பட்டறிவினால் விளைந்த விழுமிய கருத்துக்களை நல்குவதால், படிப்போரது உள்ளம் பண்பட உதவுகிறது. பல்லாண்டுகளுக்குமுன் ஒரு இதழில் பேராசிரியர் சரவண ஆறுமுக முதலியார் ‘தமிழ்மொழி இலக்கிய நோக்கம்’ என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி இங்கு குறிப்பிடத்தக்கது.

**“உலகத்தில் நாம் பல்வேறு மக்களோடு பழகும்போது, வயிற்றுப் பிழைப்புக்காக பல துறைகளிலும் கிடந்துழன்று, ஓடி ஆடித் திரிந்து உழைத்து அலுத்துப் போகும் போது தோன்றக்கூடிய வெறுப்பை இலக்கியங்கள் போக்கவல்லன. சிற்றினஞ்சேர்தல், மடி, வீண்காலப் போக்கு, பயனில் சொல் பாராட்டுதல் முதலிய பல குறைகளை நீக்கி. அவற்றினிடத்தில் பெரியோர் கேண்மை, மடியின்மை, காலத்தைப் பயனுறப் போக்கல், பயனுள் சொல் பாராட்டுதல் முதலிய பல நிறைகளை நிறுவ வல்லது இலக்கியப் படிப்பு. பரந்த நோக்கமும் விரிந்த பார்வையும் நல்கும்”[1].**

அற நூல்கள் அனைத்தும் சிறந்த நடத்தை முறைகளைத் தக்க உவமைகள் மூலம் விளக்கிக் கூறுகின்றன. இலக்கியங்கள் நல்லவனவற்றின் நன்மையையும் தீயனவற்றின் தீமையையும் கதைகள் மூலம் எடுத்துக் கூறுகின்றன. சங்க கால நூல்கள் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய உயர் பண்புகளை விரித்துரைக்கின்றன.

சங்க இலக்கியம், இடைக்கால இலக்கியம், தற்கால இலக்கியம் இவற்றிற்கிடையே காணப்படும் சொல் மாறுபாடுகளையும் சொல் பரிமாணங்கள் மற்றும் திரிபு (மாறுபாடு) ஆகியவற்றை நன்றாக விளக்கிக்

கூறுதல் வேண்டும். இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடியாக விளங்கி சமூகத்தின் பல்வேறு பண்பாட்டுக்கூறுகளைப் பதிவு செய்து இளைய தலைமுறைக்கு வழங்கி வருகிறது. எனவே, இதனை பொழுது போக்கிற்காகக் கற்காமல் வாழ்வியலுக்காகக் கற்க வேண்டும்.

பாடநூலில் கொடுக்கப்பட்ட பனுவல்கள், எந்த அடிப்படையில் அமைந்துள்ளன? ஏன் மனப்பாடம் செய்யவேண்டியதாக அமைந்துள்ளது? எளிமை கருதியா, உவமை கருதியா, ஓசை கருதியா, பொருளின் உயர்வு கருதியா, அடிகள் குறைந்திருப்பதாலா, பொருளின் உயர்வு கருதியா, ஆசிரியருடைய அல்லது நூலினுடைய சிறப்பு அப்பாட்டில் இருக்கிறது என்பதாலா, இக்காலத்துக்கு பொருந்துகிற செய்தி என்பதாலா, அரசியல் கொள்கையின் அடிப்படையிலா அல்லது கவிதை அடிப்படையிலா என்பதை அறிந்து கற்பிக்க வேண்டும்.

செய்யுள்களிலும் இலக்கியப் பனுவல்கள் மட்டுமே அக்கால மக்களின் வாழ்க்கை நெறிமுறை, பண்பாடு, கலாச்சாரம், வீரம், நாட்டுப்பற்று, காதல், குடும்பம், நட்பு போன்ற அனைத்து வாழ்க்கைத் தேவைகளும் அடங்கிய பனுவல்களைக் கொண்டது. எனவே, இன்றைய மாணவர்களின் மனநிலைக்கு ஏற்ற பல செய்திகளை இலக்கியங்கள் தன்னகத்தே வைத்துள்ளது. இந்த இலக்கியச் செய்யுள்களை மாணவர்கள் சரியான சூழலில் திட்டமிட்டுக் கற்கும் போது, ஒவ்வொரு மாணவனும் இலக்கியத்தின்பால் ஈர்க்கப்பட்டு, அதன் மூலம் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும். ஆனால், இவை அனைத்தும் மாணவர்களிடம் சரியான முறையில் சென்றடைவது ஆசிரியர்களின் கற்பித்தல் என்ற ஒரு புள்ளியில் இணைகின்றது. எனவே, ஆசிரியரின் கற்பித்தலானது மற்ற எல்லா செயல்களைக் காட்டிலும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. எனவே, இலக்கியங்களைக் கற்பித்தல் எப்படி இருக்கிறது? என ஆராய்வது நமது கடமையாகும்.

## 2.2 சங்க இலக்கியங்களின் பொதுப் பண்புகள்

**"தமிழிலக்கிய வரலாற்றுப் பாதையில் கிடைத்துள்ள முதல் மைல்கல் சங்க இலக்கியம். அன்று தொடங்கி இன்று வரையுள்ள இலக்கியங்கள் பலவற்றிலும் சங்க இலக்கியங்கள் செல்வாக்கு பரவலாக உணரப்படுகிறது. இந்தச் செல்வாக்கின் அடித்தளம் என்பது மாணவர்களுக்கு உணர்த்தப்படல் வேண்டும்"** [2]

இத்தகைய மரபுகளையும் செவ்விலக்கியச் சீர்மைகளையும் உணர்ந்து கொள்வதற்கு ஓரளவு மன முதிர்ச்சி தேவைப்படுகிறது. மாணவர்களால் தற்கால இலக்கியங்களில் உள்ளந்தோய்ந்து நிற்க முடிகின்ற அளவு சங்க இலக்கியங்களை எளிமையாக அணுக முடிவதில்லை. சங்க இலக்கியத்தை அணுகுவதில் உள்ள சிக்கல்களைத் தீர்த்து, அவர்களுக்கு நன்முறையில் சங்க இலக்கியங்களைக் கற்பிக்க வேண்டிய கடமை ஆசிரியர்களுக்கு உண்டு. எனவே, சங்க இலக்கியங்களைப் பற்றிய சிறப்புகளையும் நுணுக்கங்களையும் நுண்மாண் உணர்வுகளையும் முழுமையாக அறிந்து கொள்ள வேண்டிய பொறுப்பில் ஆசிரியர்கள் உள்ளனர். எனவே, சங்க இலக்கியங்களைக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் பொதுவாக, சங்க இலக்கியங்களின் பண்புகளைப் பற்றி அறிந்து கொள்வது இன்றியமையாதாகிறது.

### 2.2.1. அகம் புறத்தைப் பொருளாகக் கொண்டிருத்தல்

பகல், இரவு என பொழுதுகளுக்கு இரண்டு வண்ணங்கள் இருப்பது போல், வாழ்க்கைக்கும் இரண்டு வண்ணங்கள் உண்டு. அவைதாம் அகம். புறம் என்பன. அகம், புறம் என்ற இரண்டு வண்ணங்களின் கலவையாகத்தான் வாழ்க்கை அமைகிறது. இதையே அன்றைய தமிழ்ச் சமூகம் கொண்டாடியது. வாழ்வின் அனுபவங்களை இலக்கியங்களாய் பெயர்த்தெடுத்த புலவர்களும் ஆற்றுக்குக் கரை போடுவது போல, அன்றைய மக்களின் வாழ்க்கை அனுபவங்களை அகம் சார்ந்தும் புறம் சார்ந்தும் பிரித்து, நமக்கான இலக்கியங்களாகக் கொடுத்து வியப்புற வைத்துள்ளனர். அக, புற இலக்கியங்களைப் படைக்கும் போது எப்படிப் படைக்க வேண்டும்? எதை எதைக் கருத்தில் கொள்ள வேண்டும்? என்பதற்கும் விரிவாக விதிகள் வகுத்து வியப்பூட்டியர்வகள் நம் முன்னோர்கள். புற இலக்கியங்களைப் படைக்கும் போது நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறே பாடலாம். அதே சமயம் அக இலக்கியங்களைப் படைக்கும் போது, நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறே சொல்ல முடியாது. அதை நாடக பாவனைகளோடு உலகியல் வழக்கத்தைத் தழுவி உலக ஒழுங்கியல் நெறிகளைப் பின்தொடர்ந்து, பாட்டுடை நாயகர்களை அடையாளப்படுத்தாமல் படைக்க வேண்டும். இப்படி ஒரு நனி நாகரிகத்தை அன்றே கைக்கொண்டிருக்கிறது நம் சங்க இலக்கியங்கள். மேலும் பகுத்தறிவுக்குப் புறம்பான கற்பனையான எந்த ஒரு நிகழ்வையும் சங்க இலக்கியங்களில் காண இயலாது. உள்ளதை உள்ளவாறு கூறுவதோடு,

அதைப் படிப்பவர் உணர்ந்து அனுபவிக்கும் வண்ணம் இயற்றப்பட்டுள்ளது சங்ககாலப் புலவர்களின் திறமையைக் காட்டுகிறது. சங்ககாலப் புலவர்கள் ஓரினத்தவர்களும் அல்லர்; ஓரிடத்தவர்களும் அல்லர்; ஒரே காலத்தவரும் அல்லர். ஆயினும் சங்க இலக்கியங்களுக்கே உரிய தனித்தன்மை மாறாமல் அனைத்துப் பாடல்களும் சிறப்புற அமைந்துள்ளமை வியப்புக்குரியதாகும். சங்க காலத்தில் ஆண்பால் புலவர்கள் மட்டுமல்லாமல் ஔவையார், காக்கைபாடினியார், வெள்ளிவீதியார், நட்செள்ளையார் முதலிய பெண்பால் புலவர்களும் சிறந்த கவிதைகள் இயற்றியிருப்பது அக்காலக் கல்வியின் முயற்சியினையும் பெண் மற்றும் பெண்கல்வியின் பெருமையையும் காட்டுகின்றன. மேலும், அக்காலத்தில் சங்க இலக்கியப்பாடல்களைப் புலவர்கள் மட்டுமன்றி மன்னர்களும் இயற்றியுள்ளனர். இதனால், தமிழ் இலக்கியங்களின் மீதும் இலக்கியங்களின் வளர்ச்சியின் மீதும் சங்ககால மக்கள் கொண்ட ஈடுபாட்டை அறிய முடிகிறது. சங்க இலக்கியங்களின் ஒவ்வொரு பாடலிலும் தமிழ் மக்களின் அக்கால வாழ்க்கை முறைமையும் நிகழ்வுகளும் அவர்களின் நாகரிகங்களும் மிக அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. அதனுடன் ஆழ்ந்த கருத்துகளை நமக்கு எடுத்தியம்புவதோடு, புலவர்களின் கற்பனைத் திறத்தையும் நாம் அறியுமாறு அமைந்துள்ளது. எனினும், புறத்திணைப் பாடல்களைக் காட்டிலும் அகத்திணைப் பாடல்களுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

அகம் புறம் என்ற இரு பிரிவுகளில் நம் வாழ்க்கையின் அனைத்து பரிமாணங்களையும் அடக்கிவிட முடியும். இத்தகைய, சங்கப் பாடல்களை மாணவர்கள் கற்றுணர்வதன் மூலம், எங்கு, எப்படி நடந்து கொள்ள வேண்டும்? என்ற நனிநாகரிகத்தை மாணவர்கள் தானாகவே கற்றுக் கொள்வதோடு, வாழ்க்கையின் முக்கியமான அம்சங்களையும் கற்றுக் கொள்கின்றனர்.

### 2.2.2. அகத்திணைப்பாடல்களின் மரபுகள்

அக உணர்வுகளை விளக்கும் முதல் இலக்கியம் சங்க இலக்கியங்கள் ஆகும். ஒருவனும் ஒருத்தியும் தமக்குள்ளே கண்டு காதலிப்பதும் காதலைத் தோழி மூலம் செவிலித்தாய், நற்றாய் ஆகியோருக்கு மெல்லத் தெரியப்படுத்துவதும் அக்காலத்தில் வழக்கத்தில் இருந்துள்ளன. இவ்வாறு காதலைத் தெரியப்படுத்துவதற்கு அறத்தொடு

நிற்றல் என்ற பெயரும் உண்டு. பெற்றோர் திருமணத்திற்கு ஒத்துக் கொள்ளாத சூழலில் காதலனும் காதலியும் ஊரை விட்டு வெளியூர் சென்று விடுதல் உண்டு. இதற்கு உடன்போக்கு என்று பெயர். அக்காலத்தில் காதலித்த பெண்ணை மணந்து அவளோடு இன்பத்துடன் வாழ்ந்து வரும் தலைமகன் வேறு பெண்களை நாடிச் செல்வதும் பழக்கமாக இருந்துள்ளது. அகப்பாடல்கள் பெரும்பாலும் கற்பனைப் பாடல்களாக இருந்தாலும் அக்கால மக்களின் காதல் வாழ்க்கையை முழுமையாக எடுத்துரைக்கின்றன. இவ்வாறு அகப்பாடல்கள் காதலோடு, அதனோடு தொடர்புடைய உணர்வுகளும் நுட்பமும் ஆழமும் நிறைந்தவை. இவை களவொழுக்கம், இச்செறித்தல், கழங்கு பார்த்தல், கட்டுக்கேட்டல், அறத்தோடு நிற்றல், மடலேறுதல், உடன்போக்கு, கற்பு வாழ்க்கை, பரத்தையிற்பிரிவு போன்ற துறைகளின் கீழ் பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

**“சங்க இலக்கியமான அக இலக்கியங்களில் எந்தவொரு தனிப்பெயரும் கதை மாந்தர்களுக்காக காணப்படுவதில்லை. சங்க இலக்கியங்களில் மாந்தர்கள் முக்கியமல்ல. உணர்வுகளே முக்கியம்”** [3]**.** திருமணத்திற்கு முன்னர் தலைவன் தலைவி ஆகியோரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் களவு வாழ்க்கை எனப்படும். திருமணத்திற்கு பின்பு வரும் வாழ்க்கை கற்பு வாழ்க்கை எனப்படும். குழந்தைப் பருவம், மழலைப் பருவம், சிறார் பருவம் ஆகிய நிலைகளைக் கடந்து பதின்மப் பருவத்தைத் தொடும் ஒருவரின் உடல் இனப்பெருக்கத்திற்கான பக்குவத்தையும் முதிர்ச்சியையும் அடைகிறது. அப்போது ஒருவருக்கு அடுத்த பாலினத்தைச் சேர்ந்த ஒருவர் மீது ஈர்ப்பு ஏற்படுகிறது. அப்போது, அவரைப் பார்க்கவும் அவருடன் பேசவும் பழகவும் ஒரு ஆர்வம் உருவாகும். அப்படி உருவாகும் ஆர்வத்தைத் தடுக்க ஒரு காப்புணர்வு ஒவ்வொருவரின் எண்ணத்திலும் தோன்றும். இதுவே அக ஒழுக்கம் என்பர். இந்த ஒழுக்க நெறிகளையே பாடல்களாக பண்டைய புலவர்கள் பாடியுள்ளனர். தலைவன் தலைவியின் களவு, கற்பு, அதனால் வாழ்வில் ஏற்படும் உணர்வுகளை எடுத்தியம்புவது அக இலக்கியம் ஆகும். அக இலக்கியத்தின் பொருள் தனியொரு மனிதனின் உணர்வுகள் அல்ல. பொதுவான மனிதர்களின் உணர்வுகளே. சங்க இலக்கியங்களை நுணுகி ஆராய்ந்தால் இந்த உண்மை புலப்படும். அன்பின் பரிமாணத்தைக் காட்டுவது. காதலின் அகலம், உயரம் பற்றிக் கூறுவது. எக்காலத்திலும் விரும்பத்தக்க உணர்வுகளைக் கொண்டு விளக்குவது ஆகும். முன்பின் அறிமுகமில்லாத

ஆணும் பெண்ணும் எதிர்பட்டு, சந்தித்து, மனம் கலந்து மகிழ்வதையும் அவர்கள் இருவரும் பிரிவால் வாடுவதையும் அவர்களின் உணர்வுகளையும் நம்மால் மறைத்துக் கூற இயலாது. அதே நேரத்தில், தலைவன் யார்? தலைவி யார்? என்பதையும் வெளிப்படையாகவும் கூற இயலாது என்பதை நன்கு உணர்ந்த நம் சான்றோர்கள், அகம் சார்ந்த நிகழ்வுகளைப் பாடும் போது பாட்டுடை நாயகர், நாயகிகளின் பெயரைச் சுட்டாது, தலைவன் தலைவி என்று பொதுவாக உணர்த்திப் பாடுகின்றனர். **“தனி ஒருவன் அல்லது தனி ஒருத்தியின் நல்ல தீய காதற் களங்களையெல்லாம் வரன் முறையாகத் தொகுத்து மொழிவது அகத்திணையில்லை. மாந்தரிடமும் நிகழும் பல்வேறு காதல் நிகழ்ச்சிகளில் நல்லன என்று தேர்ந்து மேற்கொண்ட தனிக்கூறல் ஒழுக்கங்களைப் புனையும் வரம்புடையது அகத்திணை”** [4]. ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையில் நிகழும் காதலும் காதல் சார்ந்த நிகழ்வுகளும் அவர்களுக்கு மட்டுமே உரித்தானதாகாது. மாறாக, அது ஒரு பொது உணர்வு. இந்த காதல் உணர்வுகளைப் படிக்கும் அனைவரும் அனுபவிக்க முடியும். இவற்றை வெளிப்படையாகக் கூறாமல் உலகியல் முறைப்படி மறைமுகமாகவும் அனைவரும் அனுபவிக்கும் வண்ணமும் பாட வேண்டும். சங்க கால மக்களின் வாழ்க்கையை உள்ளூற உணர்ந்து, அதை அப்படியே நமக்குத் தெரிவிக்கவும் நினைத்து அதே நேரத்தில் தலைவன் தலைவியையும் நேரடியாகச் சுட்டிக்காட்டாமலும் வாழ்க்கை நிகழ்வுகளை எடுத்தியம்புகின்றனர். ஏனெனில், அன்பு, காதல் போன்ற உணர்வுகள் ஒரு தனிமனிதனின் உணர்வாக முடிந்து விடமுடியாது. இது ஒரு பொதுவான உணர்வு. கருவும் கலையாக்கமும் கொண்டு உணர்வு பொங்கும் மனித அனுபவத்தைக் கூறும் கவிதை. புறப்பாடல்களைக் காட்டிலும் அகப்பாடல்களில் அதிகமான உத்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெரும்பாலும் சங்கப்பாடல்களுக்கே உரித்தான திணை, துறை, பா, கூற்று, உள்ளுறை, இறைச்சி போன்ற அனைத்து உத்திகளும் அகப்பாடல்களிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், அகப்பாடல் எடுத்துரைப்பில் மிக முக்கியப் பங்காற்றுவது முதல், கரு, உரிப்பொருட்கள் ஆகும். அகப்பாடல் முழுவதும் பெரும்பாலும், உரையாடல்களே காணப்படுகின்றன. தலைவன், தலைவி, தோழி போன்ற பாத்திரங்களே முக்கிய இடம்பெறுகின்றன. இதனையே, **“கவிதை, கொள்கை என்ற தளநிலை நின்று நோக்கும் போது அகத்துக்கும்**

**புறத்துக்குமிடையே பாடுபவர் நிலையில் வேறுபாடு உண்டு. அகம் ஒரு பாத்திரத்தின் கூற்றாக அமையும். இது ஒரு முக்கியமான வேறுபாடு ஆகும்"** [5]. அகப்பாடல்கள் முழுவதும் உணர்வு வெளிப்பாட்டை மையமாகக் கொண்ட பாடல்கள் ஆகும்.

### 2.2.3 புறத்திணைப் பாடல்களின் மரபுகள்

புறப் படைப்பாக ஒரு மாமன்னனின் வீரத்தைப் பாடும் காலத்தில், அவன் யார்? எந்த நாட்டு மன்னன்? யாரோடு போரில் வென்றவன்? அவன் வெற்றி எத்தகையது? என்றெல்லாம் வெளிப்படையாகப் பாடலாம்; தோல்வியுற்றவனையும் அடையாளப்படுத்தலாம். ஏனெனில், போர்க்களத்தில் கிடைக்கிற வெற்றி, தோல்வி அம்பலத்தில் அரங்கேறும் நிகழ்ச்சி; பொதுவியல் நடப்பு. இதற்கு யாதொரு திரையும் சுவரும் தேவையில்லை. ஏனெனில், அது தனி மனிதனின் வாழ்க்கை நிகழ்வுகளை எடுத்தியம்புவது. மேலும், பண்டைக் கால அரச வாழ்க்கையை புறத்திணைப் பாடல்கள் நமக்கு எடுத்தியம்புகிறது. பண்டைத் தமிழகத்தை ஆண்ட 15 பாண்டிய மன்னர்களையும் 18 சோழ வேந்தர்களையும் 18 சேர அரசர்களையும் சிறப்பித்துக் கூறுகிறது. இமயவரம்பன், சேரன் செங்குட்டுவன், பாண்டியன் நெடுஞ்செழியன், சோழன் கரிகாலன் ஆகிய சிறப்புமிக்க பேரரசர்களின் பெருமைகளைக் கூறுவது புறத்திணைப்பாடல்கள். மேலும் பழனியை ஆண்ட பேகன், பறம்புமலையை ஆண்ட பாரி, குதிரை மலையை ஆண்ட அதியமான், கொல்லி மலையை ஆண்ட ஓரி, பொதியை மலையை ஆண்ட நள்ளி, கோடை மலையை ஆண்ட கடிய நெடுவேட்டுவன் போன்ற மன்னர்களின் வீரத்தையும் வெற்றிப் பெருமிதத்தையும் விளக்குவது புறத்திணைப் பாடல்கள் ஆகும். மேலும், பண்டைய மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளையும் மக்களின் தலைவர்களான மன்னர்களை மக்கள் போற்றிய முறைப் பற்றியும் மக்களுக்காகவும் மக்கள் நலனுக்காகவும் மன்னர்கள் செய்த ஆட்சித் திறமையையும் மக்கள் வாழ்வு முறைகளையும் கொடை, வீரம் போன்ற தனி மனித விழுமிய உணர்வுகளையும் தன்னுள் அடக்கியது. **"ஒரு சமுதாயத்தின் உண்மை நிலையினை நாம் அறிய வேண்டுமெனில் அச்சமுதாயத்தின் நம்பிக்கை, பழக்க வழக்கங்களை நாம் ஆய்வு செய்ய வேண்டும். அச்சமுதாயத்தின் கால ஓட்டத்தில் உருவாக்கப்படுகின்ற இலக்கியங்களில் அச்சமுதாயத்தின் வெளிப்பாடாக பல்வேறு பழக்க**

**வழக்கங்கள் பரவலாகப் பதியப்படுகின்றன."** [6] இந்தக் கூற்றுக்குச் சங்க இலக்கிய புறப்பாடல்களே சான்றாக அமைகின்றன. நாட்டு அரசர்களுக்குப் புலவர்கள் மதிப்புக் கொடுக்கும் பொருட்டு, அவர்களுடைய வீரம், கொடை, ஆட்சித்திறமை, நட்பு போன்றவற்றைக் கொண்டு புகழ்ந்து பாடல்கள் எழுதினர். அதே நேரத்தில், புலவர்களையும், அரசர்கள் மதிக்க மறந்து விடவில்லை. புலவர்களைப் புரவலர்கள் மிகுதியாக மதித்தனர். புலவர்கள் விடைபெறும் போது, புரவலர்களாகிய அரசர்கள், ஏழடிப் பின் சென்று வழியனுப்பினர். அதோடு நான்கு குதிரைகள் பூட்டிய தேரில் வழியனுப்பினர். தார்க்குச்சியில் ஆணி இருந்தால் குதிரைகளின் வேகத்தைப் புலவர்களால் அடக்க முடியாது என்பதால், தார்க்குச்சியில் உள்ள ஆணியை நீக்கிவிட்டு தார்க்கம்பைக் கொடுத்து வழியனுப்பினர். இவ்வாறு கல்வி, வீரம், செல்வம், பதவி என்று வாழ்க்கையில் உயர்ந்ததாக மதிக்கப்படும் அனைத்தும் அக்காலத்தில் சமமாகப் புகழ்ந்து பாடப்பட்டது என்பதற்குச் சான்று இந்த புறப்பாடல்களே ஆகும். எனவே, புறத்திணைப் பாடல்கள் அனைத்தும் புலவர்கள் கூற்றாக அமைந்திருக்கிறது. பொது வாழ்வில் காணப்படும் வீரம், கல்வி, கொடை, புகழ் முதலானவையும் அதன் நிலையாமை குறித்தனவும் புறப்பாடல்களில் இடம்பெறும். இந்தப் பொதுக்கூறுகள் அனைத்தையும் விளக்குவதற்குப் புலவர்கள் பெரும்பாலும் அரசர்களைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டே பாடியுள்ளனர். எனினும் அரசர்கள் என்பதால் அவர்களைப் போற்றி மட்டுமே பாடவேண்டும் என்ற போக்கைப் பின்பற்றவில்லை.

புறப்பாடல்கள் பெரும்பாலும் கற்பனையாகப் பாடப்படவில்லை. இரு அரசர்களுக்கிடையே நடந்த போர்களும் பாடப்பட்டுள்ளன. அரசர்களுக்கிடையே நடந்த போரை புலவர்கள் தடுத்து நிறுத்தியது பற்றியும் பாடப்பட்டுள்ளது. அரசர்கள் புலவர்களுக்கு கொடுத்த மரியாதை நிமித்தமும் கூறப்பட்டுள்ளது. புறப்பாடல்களில் இயற்கைக்கு மீறிய செய்திகள் எதுவும் கூறப்படவில்லை. சங்க கால வரலாற்றைத் தொகுப்பதற்குப் புறப்பாடல்கள் துணைநிற்கின்றன.

### 2.2.4 பன்முகக்கூறுகள் மற்றும் உத்திகள்

**திணை**

அகப்பாடல்களும் புறப்பாடல்களும் மக்களின் வாழ்க்கை முறையையும் வாழும் முறையையும் எடுத்தியம்புவன. இதில் கூறப்படும் உணர்வுகளைப் பொறுத்தும் வாழ்க்கை முறைகளைப் பொறுத்தும் நிகழ்வு நடைபெறும் இடத்தைப் பொறுத்தும்  ஒவ்வொரு பாடலுக்கும் பல பிரிவுகள் உள்ளன. அவை திணை, துறை, கூற்று, முதல், கரு, உரிப்பொருட்கள் என்று பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாடலுக்கும் உயிரூட்டுவனவாக உள்ளன. இதன் மூலம் படிப்பவர்களுக்கு அப்பாடலுக்கான சூழ்நிலை மிக எளிமையாக விளங்குவதோடு, பாடலுக்கான உணர்வை அவர்களால் பெறமுடியும்.

திணை என்பது ஒழுக்கம், வாழ்க்கை நெறி என்பதைக் குறிக்கும். ஒழுகுதல் என்பது நன்னெறிகளோடு வாழ்தல் என்பதைக் குறிக்கும். இதிலிருந்து ஒழுக்கம் என்ற சொல் பெறப்பட்டது. இவ்வாறு நல்ல ஒழுக்கத்துடன் வாழும் நெறியை தமிழர்கள் அகத்திணை புறத்திணை என்று இரண்டாகப் பிரித்தனர். திணை என்பதற்கு இடம், வீடு, குலம், ஒழுக்கம், பிரிவு என்று பல பொருள் உண்டு. இலக்கியங்களில் திணை என்பது ஒழுக்கம், பிரிவு என்றே பொருள் கொள்ளப்படுகிறது. புறத்திணை பாடல்களுக்கும் அகத்திணை பாடல்களுக்கும் ஒரே எண்ணிக்கையில் திணைகள் இடம்பெற்றுள்ளன. ஆனால், அவற்றின் மையக்கருத்துக்கு ஏற்ப வெவ்வேறு வகையாகப் பெயரிடப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன.

**அகம்**

ஆண் மற்றும் பெண்ணின் சொந்த வாழ்க்கையைச் சார்ந்த உணர்வுகள், எண்ணங்கள், செயல்கள் ஆகியவை அக ஒழுக்கங்கள். இயற்கையைச் சார்ந்து வாழ்ந்த அக்கால மக்களின் அகப்புற வாழ்க்கையின் குறியீடுகளாக அமைந்தவையும் பூக்களே ஆகும். எனவே, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற பூக்களின் பெயர்களே நிகழ்வுகளைக் குறிக்கின்றன. இதனுடன் சேர்ந்து, கைக்கிளை மற்றும் பெருந்திணை ஆகியனவும் அகத்திணைகளாகும். இவற்றுள், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை ஆகியவை மட்டுமே சிறந்த திணைகளாகக் கொண்டு அன்பின் ஐந்திணையாக வழங்கப்படுகின்றன. நற்றிணை, ஐங்குறுநூறு, அகநானூறு ஆகிய தொகுப்புகளில் உள்ள பாடல்கள் அனைத்தும், இவற்றில் ஏதேனும் ஒரு திணையில்தான் அமைந்திருக்கும்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற திணைகள் முறையே கூடல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் ஆகிய அனைத்தும் மலை, காடு, வயல், கடல், சுரம் எனும் இயற்கைப் பிண்ணனியில் நிகழ்வதாகக் குறிக்கப்பட்டுள்ளன. தலைவனும் தலைவியும் இன்பத்தின் தோற்றமாகப் புணர்ச்சியை வெளிப்படுத்துவது குறிஞ்சி, அப்புணர்ச்சியால் அன்பைத் தளரவிடாது அகத்தில் கொள்ளுதல் முல்லை, அதன்பின்பு அவ்வன்பின் நிலைபேற்றைக் குறிக்கக் பிரிவது பாலை, இந்த பிரிவின் பயனாய் ஊடலும், கூடலும் ஏற்படுவது மருதம், இந்தப் பேரின்பத்தை அடையும் வழியைக் குறிப்பது நெய்தல் என அகப்பாடல்களில் திணைகள் நிகழ்வுக்கேற்றவாறு பிரிக்கப்பட்டுள்ளது. இந்தத் திணையில் ஒவ்வொரு நிகழ்வுகளும் பல்வேறு காட்சிகளையும் பிரிவுகளையும் கொண்டுள்ளது. அதைப்பொருத்து ஒவ்வொரு பிரிவையும் எடுத்தியம்புவது துறை எனப்படுகிறது. மேலும், இந்த நிகழ்வுகள் நிகழும் காலத்தையும் அந்தந்தத் திணைக்கு ஏற்றவாறு பிரித்துக் காட்ட பெரும்பொழுது, சிறுபொழுது போன்ற காலங்கள் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இந்தப் பாடல்கள் ஒவ்வொன்றும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற பிரிவுகளின் கீழும் பகுத்தாளப்பட்டுள்ளன. திணைப் பாகுபாடு, துறைப் பாகுபாடு, காலப் பாகுபாடு, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற பாகுபாடு போன்று அகத்திணை பாடல்கள் பிரித்தாளப்பட்டிருந்தாலும், அகத்திணைக் கூறுகள், பண்டைத்தமிழர் மரபுகளை ஒட்டியே அனைத்துப் பாடல்களும் பாடப்பட்டுள்ளன பாராட்டுதற்குரியது.

**புறம்**

மக்களின் வாழ்க்கை முறையில் புறவுலகைச் சார்ந்த சிந்தனைகள் புறத்திணையாக அமையும். புறப்பாடல்களின் திணைகள் போர்முறைகளைக் கொண்டே பிரிக்கப்படுகின்றன. மன்னர்கள் போர்புரிந்ததையும் வெற்றி பெற்றதையும் விவரிக்கும் ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு திணையாகப் பிரிக்கப்படுகின்றன. அக்கால மக்கள் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்ததால் அவர்களின் வாழ்க்கை பிரிவுகளையும் மலர்களின் பெயர்களே குறிக்கின்றன. அதாவது, வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை, என்ற எட்டுப் பிரிவுகளாக பகுத்தனர். காலப்போக்கில் புறத்திணைகள் பன்னிரண்டாகப் பிரிக்கப்பட்டது. பண்டைக் காலத்தில் அரசர்கள் போரில் அறநெறியைப் கையாண்டவர்கள். ஒரு

நாட்டைக் கையாள அரசன் முதலில் பகைநாட்டின் பசுக்களைக் கவர்வான். இம்முயற்சி வெட்சித்திணை எனப்படும். இம்முயற்சியில் பகை நாட்டு வீரர் வெட்சிவீரரின் முயற்சியைத் தடுப்பர். தடுக்கும் முயற்சி கரந்தைத் திணை எனப்படும். இவ்வாறு பகை நாட்டின் மீது படையெடுப்பதை வஞ்சித்திணை எனவும், அப்படையெடுப்பை எதிர்த்து நிற்றல் காஞ்சித்திணை எனவும், கோட்டையை முற்றுகையிடல் உழிஞைத்திணை எனவும், கோட்டையுள் இருந்து எதிர்த்தல் நொச்சித்திணை எனவும், கோட்டை வெளியில் நடக்கும் போர் தும்பைத்திணை எனவும், போரில் வெற்றிபெறுதல் வாகைத்திணை எனவும், போரில் வெற்றிபெற்ற அரசரை பாராட்டுதல் பாடாண் திணை எனவும், இதுவரை குறிப்பிட்ட திணைகளுள் கூறாத செய்திகளைக் கூறுதல் பொதுவியல் திணை எனவும் அழைப்பர். மேலும், தலைவன் தலைவி இடையில் ஏற்படும் ஒருதலைக்காதலின் புறக்கருத்துகளை அறிவித்தல் கைக்கிளை எனப்படும். இது ஆண்பாற் கைக்கிளை, பெண்பாற் கைக்கிளை என இருவகைப்படும். இறுதியாக, இருபாலரிடத்தும் தோன்றும் பொருந்தாக் காதலைக் குறிப்பது பெருந்திணை என்பர். இவ்வாறு ஒவ்வொரு நிகழ்வும் ஒவ்வொரு திணைகளாகப் பிரித்துக் காட்டப்பட்டிருக்கும். இந்த ஒவ்வொரு திணையும் பல கூறுகளைக் கொண்டது. இக்கூறுகள் ஒவ்வொன்றும் துறைகள் எனப்படும். இவ்வாறு புறப்பாடல்கள், பன்னிரண்டு திணைகளாலும் பல்வேறு துறைகளாலும் பல்வேறு புலவர்களாலும் காலத்தாலும் பிரிக்கப்பட்டிருந்தாலும் போர் சார்ந்து போரைப்பற்றிய செய்திகள், அரசர்கள் பற்றிய செய்திகள் என்ற நோக்கில் எந்தவித பாகுபாடுமின்றி மிக நேர்த்தியான செய்திகளைப் புலவர்கள் எடுத்துரைத்திருப்பது பாராட்டுதற்குரியது.

**துறை**

திணை என்பதில் ஒரு சிறு பகுதியே துறை எனப்படும். துறை என்றால் இடம், ஒழுங்கு, உதவி என்று பலபொருள் பெற்று தேவைக்கேற்ப பயன்படுத்தப்பட்டுள்ளது. மனிதனின் அகவாழ்வை ஒரு ஆற்றுக்கு ஒப்பிடுவதாகக் கொள்வோம். ஆற்றை நாம் எந்த இடத்திலும் கடப்பதில்லை. ஆனால் சில குறிப்பிட்ட இடங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைத் தனித்தனி பயன்பாட்டுக்கு உட்படுத்துகிறோம். ஆற்றுக்குள் இறங்கும் அந்த இடங்களைத் துறை என்று அழைக்கிறோம். அவ்வாறு, படித்துறை, குளியல் துறை, உண் துறை, சலவைத் துறை என பல பெயர்களில் அழைக்கிறோம்.

இதைப் போலவே, அகப்பாடல்களிலும் எந்தெந்தப் பொருள்களில் பாடலாம் என்பதைப் பாடலாசிரியர்கள் வகுத்துப் பாடியுள்ளனர். அவற்றைப் பாடலுக்கான துறை என்கிறோம். சங்கப்பாடல்கள் ஒவ்வொன்றுக்கும் திணை துறை உண்டு. அதாவது, அது எந்த ஒழுக்கத்தைப் பற்றியது? எந்தக் கருத்தைப் பற்றியது? என்று கூறுவதாகும். பொதுவாக பாடல் எந்த நோக்கத்தில் பாடப்பட்டுள்ளதோ அதுவே பாடலின் துறையாகக் கொள்ளப்படும். இவ்வாறு புறப்பாடலான புறநானூற்றில் மட்டுமே 67 துறைகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு செய்யுளின் கருத்து, நிகழ்வுக்கு ஏற்ப துறைகள் பெயரிடப்பட்டுள்ளதால், துறைகள் எண்ணிக்கையில் அதிகம் உள்ளன.

**கூற்று**

அகப்பாடல்கள் என்பது பல்வேறு சூழல்களைக் கொண்டது. ஒவ்வொரு சூழலிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் நிகழும். அவ்வாறு நிகழும் நிகழ்ச்சிகள் பலவற்றை ஒருங்கு சேர்த்து அகப்பாடலில் பாடுதல் இயலாது. குறிப்பிட்ட ஒரு சூழலில் குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை மட்டுமே அகப்பாடலில் பாட முடியும். அந்நிகழ்ச்சியைப் புலவர்கள் பாடலில் அமைத்துப் பாடும் போது தாம் கூறுவது போல பாடாமல், அகப்பாடல் நிகழ்வுகளைக் கூறுவதற்கென்றே பல மாந்தர்களைப் படைத்தனர். அவர்கள் கூறுமாறே நிகழ்ச்சிகள் பாடப்பெற்றன. அந்நிகழ்வுகளில் ஒருவர் கூறுவதாகவும், ஒருவர் கேட்பதுமாக பாடப்பெற்றன. இவ்வாறு வரையறுத்த மரபுகளைக் கூற்று என்பர். இம்மரபுகளின் வழி நின்று பாடல் அமைத்துப் பாடும் போது, அப்பாடல் ஒரு சிறிய நாடகமாக அமைந்து படிப்பவருக்கு இன்பம் சேர்க்கும். அவ்வாறு கூற்றில் இடம்பெறும் மாந்தர்கள், களவியல் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவர்கள் என்றும், கற்பியல் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவர்கள் என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். தலைவன், தலைவி, தோழி, செவிலி, பார்ப்பான், பாங்கன் ஆகிய ஆறு மாந்தர்களும் களவியல் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவர்கள் ஆவர். பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் ஆகிய ஆறு மாந்தர்களுடன், மேற்குறிப்பிட்ட ஆறு மாந்தர்களுடன் சேர்ந்து மொத்தம் பன்னிரண்டு மாந்தர்களும் கற்பியல் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவர்கள் ஆவர். இவ்வாறு இந்த மாந்தர்கள் கூறுவது போல அகப்பாடல்கள் பாடப்பெற்றுள்ளன.

இந்தக் கூற்று ஒருவர் மட்டும் உரையாடுதல், இருவர் தங்களுக்குள் உரையாடுதல் என இருவகையாகப் பிரிக்கப்படுகிறது. இதில் அகப்பாடல்களில் பெரும்பாலும் ஒருவர் மட்டும் உரையாடுதல் வகை கூற்றே இடம்பெறுகிறது. அதாவது மாந்தர் ஒருவர் பேச மற்றொருவர் கேட்குமாறு அமையும் உரையாடல்களே பெரும்பாலும் அகப்பாடல்களில் இடம்பெற்றுள்ளன. இருவர் தம்முள் மாறி மாறி உரையாடுவது போன்ற கூற்றுகள் அகப்பாடல்களில் கலித்தொகையில் மட்டுமே அமைந்துள்ளன. மற்ற அகப்பாடல்களில் இவ்வகைக் கூற்றுகள் ஒன்றுகூட இடம்பெறவில்லை. கலித்தொகையில் தலைவன்-தலைவி கூற்று, தலைவி – தோழி கூற்று, தோழி-தலைவன் கூற்று என்றவாறு அனைத்துப் பாடல்களும் உரையாடல்களாகவே அமைந்துள்ளன. இப்படி இருவரும் மாறி மாறி உரையாடும் இந்தப் பாடல்கள் படிப்பவரின் கண்முன் ஒரு நாடகமாகவே அரங்கேறி விடுகின்றன. இவ்வாறே, ஒருவர் மட்டும் உரையாடுதல் வகை கூற்று என்பது தலைவன், தலைவி, தோழி முதலிய யாராவது ஒருவருடைய உரையாடலாக மட்டும் அமைந்து வருவதாகும். இதனை ஒரு மாந்தர் கூற்று என்பர். இது முன்னிலை மொழி மற்றும் முன்னிலைப் புறமொழி என இருவகைப்படுகிறது. இதில், எதிர்புறம் இருந்து கேட்பவர், வேறு ஒரு மாந்தராகவோ அல்லது கூற்று நிகழ்த்துபவரின் மனசாட்சியாகவோ அல்லது அஃறிணைப் பொருளாகவோ இருக்கலாம். இதில் அஃறிணைப் பொருட்களாக ஞாயிறு, திங்கள், மரம், பறவை, அறிவு, விலங்கு போன்றவை இடம்பெறுகின்றன. இவ்வாறு சங்க காலத்தில் அகப்பாடல்கள் பாடியவர்கள் இந்த ஒருவர் மாந்தர் கூற்றில் மூன்று முறைகளைக் கையாண்டுள்ளனர். அதாவது ஒருவர் வேறு ஒருவர் கேட்குமாறு கூறுதல், ஒருவர் அவருடைய மனம் (மனசாட்சி) கேட்குமாறு கூறுதல் மற்றும் ஒருவர் அஃறிணைப் பொருள் கேட்குமாறு கூறுதல். இதில் ஒருவர் வேறு ஒருவர் கேட்குமாறு கூறுதல் என்ற வகைக் கூற்றுகளே பெரும்பாலும் இடம்பெறுகின்றன. இதில் ஒருவர் சொல்வதை வேறொருவர் எதிரில் இருந்து கேட்பார். எனவே இது முன்னிலை மொழி எனப்படுகிறது. மேலும், இந்த ஒரு மாந்தர் கூற்றில் மேலும் மூன்று வகைகள் உள்ளன. அவை, ஒருவர் வேறு ஒருவருக்குக் கூறுவது போல மற்றொருவரிடம் கூறுதல், ஒருவர் தன் மனதிடம் பேசுவது போல வேறு ஒருவருக்குக் கூறுதல் மற்றும் ஒருவர் அஃறிணைப் பொருளுடன் பேசுவது போல வேறு ஒருவருக்குக் கூறுதல். இதிலும் முதல் முறையிலேயே பெரும்பாலான பாடல்கள் இடம்பெறுகின்றன. ஆனால் இத்தகு கூற்றில் மூன்று

மாந்தர்கள் இடம்பெறுவர். இந்த வகைக் கூற்றில் ஒருவர் பேசுவார். இருவர் கேட்பார். கூற்றை நிகழ்த்துபவர் ஒருவரை அழைத்துப் பேசுவார். ஆனால், கூற்று நிகழ்த்துபவரின் நோக்கம் தன் கூற்றை எதிரில் இருப்பவர் கேட்க வேண்டும் என்பதற்காக அல்ல. மாறாக அங்கு இருக்கும் மூன்றாமவர் கேட்க வேண்டும் என்பதற்காக மட்டுமே. இதில் மூன்றாமவர் அருகிலோ அல்லது சற்றுத் தொலைவிலோ இருந்து கூற்றைக் கேட்பார். எனவே இவ்வகைக் கூற்று முன்னிலை புறமொழி எனப்படுகிறது. இம்முறையில் அமைந்த பாடல்களில் கூற்று நிகழ்த்துபவர் தமது கருத்தை பெரும்பாலும் குறிப்பாக மட்டுமே புலப்படுத்துவார். கேட்பவரும் அக்குறிப்பை தெளிவாக உணர்ந்து கொள்ளும் ஆற்றல் உடையவராக விளங்குவார். இவ்வாறு முன்னிலை மொழி மற்றும் முன்னிலைப் புறமொழி ஆகிய இருவகைக் கூற்றிலும் பேசுபவருக்கு எதிர் பேச்சு எதுவும் இராது.

### முதல், கரு, உரிப் பொருட்கள்

சங்கப்பாடல் எடுத்துரைப்பில் மிக முக்கியமாகக் கருதப்படுவது முதல், கரு, உரிப் பொருட்களே ஆகும். பெரும்பாலும் இவை அகப்பாடல்களிலேயே இடம்பெறுகின்றன. இவற்றின் சிறப்பும் இதன் வரிசையிலேயே அமைந்துள்ளது. அதாவது, முதற்பொருளை வைத்தே பாடலின் திணை குறிக்கப்படும். முதற்பொருள் இல்லாவிட்டால், கருப்பொருளைப் பொருத்தது திணை. அதுவும் இல்லாவிட்டால், உரிப்பொருளை வைத்து திணையைக் குறிப்பர். இவ்வாறு, அகப்பாடலைப் பொருத்தமட்டில் முதற்பொருள், கருப்பொருளைக் காட்டிலும் உரிப்பொருளுக்கு இருக்கும் முக்கியத்துவத்தை அறியலாம். ஒரு அகப்பாடலில், முதற்பொருள், கருப்பொருள் இல்லாமல் போகலாம். ஆனால் உரிப்பொருள் இல்லாவிட்டால் அது அகப்பாடலாகாது. முதற்பொருளானது திணை, நிலம், பொழுது என வகைப்படுத்தப்படுகிறது. கருப்பொருளானது தெய்வம், மக்கள், நிலம், பறவை, விலங்கு என வகைப்படுத்தப்படுகிறது. சங்கப்பாடல்களில் பாடலின் சூழ்நிலையைப் பொறுத்து முதலில் உரிப்பொருளே அறியப்படுகிறது. உரிப்பொருளை விளக்கும் பொருட்டே அந்நிலத்தின் முதற்பொருள் மற்றும் கருப்பொருள் ஆகியவை விளக்கப்படுகின்றன.

பாடலின் முதற்பொருளானது நிகழ்வு நடைபெறும் இடம், பொழுது ஆகியவற்றைப் பொறுத்து அமைகிறது. நிலத்தை நானிலம் என்று கூறுவது

மரபு. அவை, மலையும் மலை சார்ந்த இடமுமான குறிஞ்சி, காடும் காடு சார்ந்த இடமுமான முல்லை, வயலும் வயல் சார்ந்த இடமுமான மருதம், கடலும் கடல் சார்ந்த இடமுமான நெய்தல் ஆகிய நான்கும் ஆகும். கோடை வெம்மையால் வளம் திரிந்து நீரின்றி வறண்டு தோன்றும் குறிஞ்சியையும் முல்லையையும் பாலை என்பர். அந்தந்த நிலத்திற்கு ஏற்ப அந்தந்தப் பூக்களே சிறப்பாக உள்ளன. அடுத்து ஒவ்வொரு நிலத்திற்கு ஏற்ப பொழுதுகளும் குறிக்கப்பட்டுள்ளன. ஒரு ஆண்டை மழைக்காலம், கோடைக்காலம், குளிர்காலம், பனிக்காலம் என நான்கு பிரிவுகளாக பிரித்து பகுத்திருப்பது போல, நம் முன்னோர் ஒரு ஆண்டை கார்காலம், கூதிர்காலம், பனிக்காலம், வேனிற்காலம் எனப்பிரித்தனர். ஆனால், தமிழகப் பகுதியில் கார்காலம் எனப்படும் மழைக்காலமும், கூதிர்காலம் எனப்படும் குளிர்காலமும் வெகுசில மாதங்களே நீடிக்க, பனிக்காலமும், வேனில் காலமும் நீண்ட காலம் தொடர்வதைக் கண்ட நம் முன்னோர், பனிக்காலத்தை முன்பனிக்காலம், பின்பனிக்காலம் என்றும் வேனில் காலத்தை இளவேனில்காலம், முதுவேனில் காலம் என்றும் இரண்டாகப் பிரித்தனர். இந்த கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் ஆகிய ஆறு காலங்களையும் பெரும்பொழுதாகக் குறித்தனர். நாம் ஒரு நாளை 24 மணிநேரமாகப் பிரித்திருக்கிறோம். அதுபோல, நம் முன்னோர் ஒரு நாளை காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை என்று ஆறு பொழுதுகளாகப் பிரித்தனர். இவையே, சிறுபொழுதுகள் எனப்படும்.

கருப்பொருளானது பாடலைப் புலவர் பயன்படுத்தியிருக்கும் இயல்பு முறை, உவமை, உள்ளுறை ஆகியவற்றைப் பொருத்து விளக்கப்படுகிறது. இதனையே, **“முதற்பொருள் அடிப்படையாய் இருக்கின்றது. கருப்பொருள் பின்னணி அமைக்கின்றது. காதலர் மகிழ்ச்சிக்கு உரிய உரிப்பொருள் கொலுவிருக்கின்றது”**[7] என்று மு.வரதராசன் கூறுகிறார். இந்தக் கருப்பொருளானது, ஒவ்வொரு நிலத்தில் வாழும் மக்கள், வணங்கும் தெய்வம், அவர்களின் உணவுமுறை, விலங்கு, பறவை, பூ, மரம், ஊர், நீர் எடுக்கும் இடம், யாழ், பறை, பண், தொழில் பற்றிய செய்திகளை எடுத்துரைக்கும். ஒவ்வொரு நிலத்திற்கும் கருவாக வளர்ந்தவையே கருவெனப்படும் நிலமும் பொழுதும் ஆகிய இரண்டோடும் கருப்பொருள் பின்னி பிணைந்துள்ளது. பாடலில் மனித மறு உணர்ச்சிதான் முதல் தேவை. இதற்குப் பின்னணியாக வருவது முதற்பொருளும் கருப்பொருளுமாகும்.

உரிப்பொருள் என்பது பாடலுக்குரிய பாடுபொருள், பாட்டுடைத் தலைவனின் மனநிலையைப் பொருத்தது. இந்த மாந்தரின் மனநிலையை ஐந்து வகையாகப் பிரிப்பர். அதாவது, பருவம் வந்த ஆணும் பெண்ணும் விரும்பி பழகும் முதல் நிலை. இது அதிக நாட்கள் தொடர்வதில்லை. காதலைக் கடந்து இல்லற வாழ்க்கையைத் தொடங்குதல். இதில் பொருள் ஈட்டுவதற்காக தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதல். பின் வாழ்க்கையில் வளம் பெற்று, பிள்ளைச் செல்வங்களோடு வாழும் போது பலவிதப் பூசல்கள் ஏற்பட்டு அதைத் தலைவன் தீர்த்து வைத்தல். இதன் நடுவில் சில நேரங்களில் உயிர் இழப்புகள் ஏற்படும். அதுவும், தலைவன் தலைவி ஆகியோரின் இழப்பு மற்றொருவருக்கு நீங்காத் துயரத்தை ஏற்படுத்தும். இவ்வாறு தலைவன், தலைவி குறிஞ்சி நிலத்தில் பழகும் முதல்நிலை புணர்தல் புணர்தல் நிமித்தமுமாகும். முல்லை நிலத்தில் மணம் முடித்து வாழும் நிலை இருத்தல் இருத்தல் நிமித்தமுமாகும். பின் பொருள் ஈட்டுவதற்காக தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதலைப் பாலைநிலமாகச் சித்திரித்து இருத்தல் பிரிதல் பிரிதல் நிமித்தமுமாகும். பின் மருத நிலத்தில் பூசல் ஏற்பட்டு, ஊடலில் இணைதல் ஊடல் ஊடல் நிமித்தமுமாகும். தலைவன் தலைவி இழப்பை காட்டுவதை நெய்தல் நிலத்தில் இரங்கல் இரங்கல் நிமித்தமுமாகக் காட்டப்படுகிறது. இவ்வாறு உரிப்பொருள் அகப்பாடலில் உயிரான பொருள். பாடலில் கூறப்படும் செய்தி என்ன என்பதை நமக்குக் காட்டுவது உரிப்பொருளாகும். பாடலில் உரிப்பொருள் இருந்தாலே போதும் அதைக்கொண்டு திணை முதல் அனைத்தையும் கண்டு கொள்ள முடியும்.

**உள்ளுறை உவமம்**

உள்ளுறை உவமம் என்பது தமிழ் இலக்கியப் பாடல்களில் மிகச் சிறப்பானது. மாந்தர்களின் நுட்பமான குறிப்பினை எடுத்துரைப்பதற்காக சங்கப் புலவர்கள் கண்டெடுத்த ஒரு நாகரீக வழி உள்ளுறை உவமம் ஆகும். எனினும், இந்த உள்ளுறை உவமமானது மிக வலுவான கட்டுப்பாடுகளை உடையது. அகப்பொருளான ஐந்து திணைகளில் மட்டும் பயன்படுத்தப்படும். ஆனால், கருப்பொருள் என்னும் பெயருடன் இயற்கையாகக் காட்டப்படுவதாகும். வெளிப்பார்வைக்கு, மரம், செடி, கொடி, மரம், பறவை, விலங்குகள் கூறுவது போல் இருக்கும். இவ்வாறு, அக நிகழ்ச்சிகளை வெளிப்படையாக எடுத்துக் கூறாமல், இலை மறைவு காய் மறைவாக

எடுத்தியம்புவதற்காகப் புலவர்கள் கையாண்ட உத்தியே உள்ளுறை உவமமாகும். இதன் மூலம் மாந்தர்களின் எண்ணத்தை இலக்கியத்தை படிப்போர் உணரும் வண்ணம் நயம்பட எடுத்துரைப்பர். இந்த இடங்களில் காணப்படும் காட்சிகள், இயற்கைப் பொருட்கள் அனைத்தும், மாந்தர்களின் மன உணர்வுகளை விளக்கும் கருவிகளாகவே செயல்படுகின்றன. மேலும் உள்ளுறை என்னும் சொல்லை உள்+உறை எனப் பிரிக்கலாம். அதாவது பாடலில் உள் கருத்துகள் மறைந்து வருவதைக் குறிக்கிறது. அவ்வாறு மறைந்து நிற்கும் கருத்துக்குப் பயன்படுத்தப்படும் இயற்கைப் பொருட்களையே உவமம் என்கிறோம். இவ்வாறு அகப்பொருள் செய்திகளை, கருப்பொருளை மையமாகக் கொண்டு, வெளிப்படையாகக் கூறாமல், அதைத் தொடர்ந்த வேறு ஒரு செய்தியை மறைமுகமாகக் கூறி விளக்குதல் உள்ளுறை உவமம் எனப்படும்.

**இறைச்சி**

இறைச்சி என்னும் சொல் ‘இறு’ என்னும் சொல்லின் பொருளில் வருகிறது. இதற்குத் ‘தங்குதல்’ என்று பொருள். கவிஞர்கள் தாம் கூறும் சொற்களுக்கு அடைமொழியாக எந்தப் பொருளைக் காட்டுகிறார்களோ, அதனை உணர்ந்து கொள்ளும் நுட்பம் ‘இறைச்சி’ எனப்படும். உள்ளுறை உவமத்திற்கும் இறைச்சிக்கும் கோடு போட்ட எல்லை கிடையாது. இரண்டும் ஒரேமாதிரியான விளக்கம்தான் என்றாலும் பொருள் அளவில் சிறிய வேறுபாடு உண்டு. சில பாடல்களில் இடம்பெறும் நுட்பம் உள்ளுறை உவமமா? அல்லது இறைச்சியா? என்பதில் இன்று வரையில் கருத்து வேறுபாடுகள் உண்டு. உள்ளுறையைப் போலவே இறைச்சிக்கும் கருப்பொருளே அடிப்படையாக அமைகின்றது. ஒரு சொல்லின் பொருள், அதனுடைய குறிப்புப் பொருள், இது இரண்டிற்கும் மேலாக ஒரு நுட்பமான பொருள் விளங்குமாயின் அதுவே இறைச்சி எனப்படும். சங்ககாலப் புலவர்கள் அக உணர்வை மறைமுகமாக குறிப்பாக உணர்த்த உள்ளுறை உவமம், இறைச்சி ஆகிய உத்திகளைக் கையாண்டனர். இவற்றைக் குறிப்புப் பொருள் உத்தி என்றும் அழைப்பர். வெளிப்படையாகத் தெரியும் ஒரு பொருளோடு வேறொரு பொருள் உணர்த்தி வருவது உள்ளுறை உவமம் ஆகும். இவை இரண்டும் மட்டுமல்லாது மேலும் ஒரு நுட்பமான பொருளை உணர்த்துவதானால் அது இறைச்சி எனப்படும். சங்கப் புலவர்கள் தம்

கருத்தை நேரடியாகக் கூறாமல் மறைமுகமாக கூறுவதற்காகவே இது போன்ற உத்திகளைக் கையாண்டுள்ளனர்.

**உத்திகள்**

செய்யுள்களில் இன்றளவும் செறிவும் தொன்மையும் பெற்று விளங்குவதாகப் போற்றப்படுவது சங்க இலக்கியப்பாடல்கள் மட்டுமே. இதற்குக் காரணம், சங்க இலக்கியங்களை எழுதிய புலவர்கள் பயன்படுத்திய உத்திகளேயாகும். சங்க இலக்கியப் புலவர்களின் அடிப்படையில் உத்திகளைப் பகுத்துக் காணும் பொழுது ஒரு புலவனுக்குரிய பண்பு எனக் குறிப்பிட்டுச் சுட்டும் வகையில் பண்புகள் காணப் பெறவில்லை. படைப்புத் தன்மையில் அனைவரது பாடல்களும் ஒரே தன்மையாகக் காணப்படுகின்றன. புலவர்கள் இலக்கியம் படைப்பதற்கெனத் தனிக் கொள்கைகளை வகுத்துக் கொண்டு அவற்றினடிப்படையில் பாடல்களை யாத்த அக்காலத் தன்மை வியப்புக்குரியது. **“ஓர் இலக்கியத்தைப் படிக்கும் போது யாரோ ஒருவர் நமக்கு எடுத்துச் சொல்வது போல் உணர்கிறோம். இலக்கியப் பாத்திரங்கள் பேசுவன அல்லாமல் பின்னால் இருந்து ஒருவர் பேசுவது போல் உணர்கிறோம். அது படைப்பாளனின் குரல். அக்குரலின் வெளிப்பாடே நமது உணர்ச்சியையும் தூண்டுகிறது.”** [8] இதற்குக் காரணம் பாடலில் பயன்படுத்திய உத்திகளேயாகும். சங்க இலக்கியத்தில் பயன்படுத்திய உத்திகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை தொடர்நிலை உத்திகள், வருணணை உத்திகள் மற்றும் பொருளமைப்பு உத்திகள். இதில் தொடர்நிலை உத்திகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். குறிப்பு பொருளையும் உணர்வு நிலையையும் விளக்கும் உத்திகள் மற்றும் குறிப்பு பொருளையும் வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும் உத்திகள் என்பனவாகும். பாடலில் இடம்பெறும், ஒலிக்குறிப்புச் சொற்கள், தனித்தன்மை வாய்ந்த சொல்லாட்சிகள், எதிர்மறைச் சொல்லுணர்வு, சொற்பொருளுணர்வு மாற்றம், புதிர்ச் சொற்கள், குறியீட்டுச் சொற்கள், இரட்டுற மொழிதல் ஆகியவை குறிப்புப் பொருளையும் உணர்வு நிலையையும் விளக்கும் உத்திகள் வகையிலும் பாடலில் இடம்பெறும் வினைமுற்றுத் தொடர்கள், வினையெச்சத் தொடர்கள், உம்மைத் தொடர்கள், தொடரமைப்பு, தொடர் மடக்குத் தொடர்கள், பொருள் மயக்கத் தொடர்கள், மரபுத் தொடர்கள், அந்தாதித்

தொடரமைப்புகள் ஆகியவை குறிப்புப் பொருளையும் வெளிப்படையாக பொருள் உணர்த்தும் வகையிலும் பிரிக்கப்படுகின்றன. இவை இரண்டும் சேர்த்து தொடர்நிலை உத்திகளாகக் கொள்ளப்படுகின்றன. அடுத்து வருணணை உத்திகளும் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்படுகின்றன. அதாவது வெளிப்படையாகப் பொருள் உணர்த்துபவை மற்றும் குறிப்பாகப் பொருள் உணர்த்துபவை. பாடலில் இடம்பெறும் உவமை, உருவகம், மிகை வருணணை, பின்புல வருணணை, உருவக்காட்சி வருணணை மற்றும் பொருள் மடக்கு வருணணை ஆகியவை வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும் வகையிலும் பாடலில் இடம்பெறும் இறைச்சி, உள்ளுறை, படிமக்காட்சி, தொகுநிலைக்கிளவி, இனமொழி, குறிப்பெச்சம், இகழ்ச்சிக்குறிப்பு, மற்றும் குறிப்புமுரண் ஆகியவை குறிப்பாகப் பொருள் உணர்த்தும் வருணணை உத்தியிலும் கொள்ளப்படும். இதில் இறைச்சி, உள்ளுறை, படிமக்காட்சி, தொகுநிலைக்கிளவி ஆகியவை அகப்பாடல்கள் சார்ந்தும், இனமொழி, குறிப்பெச்சம் ஆகியவை புறப்பாடல்கள் சார்ந்தும், குறிப்பெச்சம், இகழ்ச்சிக் குறிப்பு மற்றும் குறிப்பு முரண் ஆகியவை அகம்புறம் சார்ந்தும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அடுத்து பொருளமைப்பு உத்திகளில் ஆற்றுப்படுத்தும் முறை, முன்னிலைப்படுத்தும் முறை, நிகழ்ந்தது நினைத்தல் முறை, நிகழ்வது நினைத்தல் முறை, நிகழ இருப்பது நினைத்தல் முறை, நிகழ்ந்தது கூறல் முறை, சார்ந்தது கூறல் முறை மற்றும் கனவு கூறல் முறை ஆகிய முறைகள் உள்ளன. மேலும் பாடலின் தொடக்கம், முடிவு, யாப்பமைப்பு, பாடலின் நீண்ட அமைப்பு ஆகியவற்றிலும் தனிப்பட்ட உத்திகள் அமைத்து பாடப்பட்டுள்ளன. இவ்வாறு சங்கப்பாடல்களில் சிறப்பான உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. அதிலும் புறம் சார்ந்த பாடல்களைக் காட்டிலும் அகம் சார்ந்த பாடல்களில் மட்டுமே அதிகமான உத்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இது போன்று சங்கப்பாடல்கள் ஒவ்வொன்றிலும் பல்வேறு உத்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை அறிந்து பாடலைப் படித்தால் மட்டுமே பாடலின் செறிவை அறிய முடியும். மேலும், பொதுவாகச் சங்க இலக்கியப் பாடல்களில், கீழ்க்கண்ட உத்திகளைப் புலவர்கள் பயன்படுத்தாமல் இருந்ததில்லை. அவையாவன, பொருளைச் சுருக்கமாகவும் செறிவாகவும் வெளிப்படுத்த வேண்டும். நுட்பமான முறைகளைக் கையாள வேண்டும். பாடுபொருளுக்கும் வெளிப்பாட்டு முறைக்கும் ஒருமைப்பாடு அமைய

வேண்டும். பாடலில் எதனையும் வெற்றாகத் தொகுத்தல் கூடாது. சிறுசிறு தொடரமைப்புகள், இடைச்சொற்கள், ஒலிக்குறிப்புச் சொற்கள், விளிச்சொற்கள், அடைச்சொற்கள், சொல் மடக்கு, தொடர் மடக்கு, உவமை, உள்ளுறை உவமம், தொகுநிலைக் கிளவி ஆகியவற்றை அடிப்படை உத்திகளாகக் கொண்டே ஒவ்வொருப் பாடலையும் பாடியுள்ளனர்.

### 2.2.5 யாப்பியல் கூறுகள்

சங்க இலக்கியங்களில் பெரும்பாலும், அகவல் என்று சொல்லப்படுகிற ஆசிரியப்பா அதிகம் இடம்பெறுகிறது. வஞ்சிப்பா இடையிடையே சில பாடல்களில் மட்டும் இடம்பெறுகிறது. அகவல் என்பது அழைத்தல் எனப் பொருள்படும். அதாவது, மற்றவர்களை அகவிக் கூறும் பண்பைக் கொண்டு வரும் பாடல்கள் அகவல் ஓசை கொண்டது என்பர். தாங்கள் கருதியவாறு வரையாது கூறும் பண்பு இந்த அகவல் ஓசையில் உள்ளது. பூர்வீக பாடலுக்கும் இந்த அகவல் ஓசை வரும். சாதாரண மக்களின் பேச்சு வழக்கிலுள்ள மொழி நடையினையும் ஓசைப் பண்பினையும் கொண்ட பழையப் பாடல்களிலிருந்து வளர்ச்சியுற்று, ஆசிரியப்பாவிலும் இப்பண்புகள் செறிந்து காணப்படுகின்றன. வீரம் பொருந்திய ஆட்டம் கொண்ட பாடல்களும் தூங்கலோசை பெற்று வரும் பாடல்களும் வஞ்சிப்பாவில் அமைந்துள்ளது. இதில் தூங்கலோசை என்பது போரிலே வீரத்துடன் மடிந்தவர்களின் குருதியைத் தொட்டு, பேய் மகளிர் பறையினது ஓசைக்கு ஆடுவதைக் குறிக்கும். இந்த வஞ்சிப்பா சங்கப் பாடல்களின் சில இடங்களில் மட்டுமே இடம்பெறுகின்றன. வஞ்சிப்பா அகவல் என்று சொல்லப்படுகிற ஆசிரியப்பாவின் ஓர் உட்பகுப்பே ஆகும். அகவலடிகளுடன் இடம்பெறும் வஞ்சியடிகள் வேறுபட்ட ஓசையைத் தருமாதலால், வஞ்சிப்பாவாகக் கொள்ளப்படுகிறது. நீண்ட அகவலடிகளுக்கு மாறாகச் சிறிய தூங்கலோசை அடிகள் பாடலுக்கு அழகு சேர்ப்பதாக இருப்பதால் இந்தக் கலப்பு இருந்திருக்கலாம். மேலும், சங்கப் பாடல்களில் வீரம், வேகம் போன்ற பண்புகளை புலப்படுத்த வஞ்சியடிகள் உதவுகின்றன. சங்க இலக்கியங்களில் கலித்தொகை மட்டுமே கலிப்பாவால் ஆனது. இயற்றமிழ் பாவுடன் இசை கலந்தால் அது கலிப்பாவாகக் கொள்ளப்படுகிறது. இருப்பினும், சங்க இலக்கியப் பாடல்களில் கலித்தொகை மற்றும் பரிபாடலில் சிலப்பகுதிகள் தவிர, மீதி உள்ள அனைத்து சங்கப்பாடல்களிலும் பெரும்பகுதியை அகவற்பாவே ஆட்கொண்டுள்ளது.

### 2.2.6. சொற்செறிவும் பொருட்செறிவும்

தமிழ் மொழியின் காலத்தைக் கொண்டு அதன் தூய்மையை நம்மால் மதிப்பிட முடியும். தற்காலத்தில் மட்டுமே தமிழ் மொழியில் பல மொழிச் சொற்களின் கலப்படம் மிகுந்து காணப்படுகிறது. தமிழ் மொழியில், தொல்காப்பியம் முதல் இலக்கண நூல் என்ற பெருமையும், சங்க இலக்கியம் முதல் இலக்கிய நூல் என்ற பெருமையும், பெறுகின்றன. சங்க இலக்கியம் உலக இலக்கியங்களின் இமயம். சங்க இலக்கியம் தோன்றிய காலத்தில் உலக மொழி இலக்கியங்களில் சங்க இலக்கியம் போன்ற பாடல்கள் தோன்றவில்லை. சங்க இலக்கியம் தமிழர் இலக்கியங்களுக்கு அடிப்படையாகவும் வாழ்க்கைக்கு அடிப்படையாகவும் உள்ளதோடு, தமிழ் மொழியின் மேன்மைக்கும் தொன்மைக்கும் அடிப்படையாகத் திகழ்கிறது. மேலும், சங்க இலக்கியத்தில் உள்ள பாடல்களில் பெரும்பாலான பாடல்களைப் பாடியவர் கவிஞர் கபிலர் ஆவார். கபிலரின் மொழிநடையை வைத்தே சங்க இலக்கியத்தின் மொழிநடையை அறிந்து கொள்ளலாம். **‘சங்க இலக்கியத்தில் பயன்படுத்திய பல சொற்கள் இன்று வழக்கத்திலிருந்து மறைந்து விட்டது. சங்க இலக்கியப் பாடல்களை, தமிழ் படிக்கின்றவர்கள், அதாவது, வித்துவான், புலவர், முதுகலை பட்டப்படிப்பு படிக்கின்றவர்கள் மட்டும் படிப்பதற்காக உள்ளது’[10].** அந்த வகையில், சங்க இலக்கியப் பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் அந்த அளவிற்குத் தொன்மை வாய்ந்ததாக உள்ளது. ஆனால், இன்று தமிழ் படிக்கின்றவர்களும் முதுகலைப் படிக்கின்றவர்களும் கூட சங்கப்பாடல்களைப் படிக்கக் கடினப்படுகின்றனர். எனவே, இக்காலத்தில் உள்ள அனைவரும் படிக்க வேண்டும் என்பதற்காகவே அதை எளிமைப் படுத்தி பல அச்சுகள் வெளிவந்துள்ளன. ஆனாலும், சொற்களில் எந்த மாற்றமும் இல்லாமல், சொற்களுக்கிடையே உள்ள புணர்ச்சி விதிகள் மட்டுமே நீக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது. பெரும்பாலும், அந்த வகையான பாடல்களே பள்ளிகளிலும் பயன்படுத்தப்படுகிறது. புதிய சொற்களைக் கண்டறியும் நோக்கில் இருக்கும் பல மொழிகளோடு ஒப்பிடுகையில், எண்ணிலடங்கா பாடல்களில் பெரும்பாலும் தூய தமிழ்ச்சொற்கள் இடம்பெறுகின்றன. அவற்றை மாணவர்கள் படிப்பதன் மூலம் அவர்களின் சொற்களஞ்சியத்திறன் மேம்படும். அதன் மூலம் தமிழின் தொன்மையையும் பழமையையும் அறிந்து கொள்ள முடியும்.

சங்கப்பாடல்களில் பல சிறப்புகளில் இன்றியமையாதது சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதாகும். சங்க இலக்கியத்தில் இடம்பெறும் எந்த ஒரு செய்தியும் தனி ஒரு மனிதனுக்காகவோ அல்லது குறிப்பிட்ட ஒரு பகுதியினருக்காகவோ எழுதப்பட்டது அல்ல. மாறாக, சங்க இலக்கியங்கள் உலகில் உள்ள அனைவருக்காகவும் எழுதப்பட்டது. தமிழ் இலக்கியத்திற்கு அடிப்படையாகவும் வாழ்க்கைக்கு அடிப்படையாகவும் திகழும் சங்க இலக்கியங்கள் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் இரண்டறக் கலந்து இன்றும் வாழ்வதற்கு காரணம் அதன் எளிய வடிவமைப்பேயாகும். சங்க இலக்கியங்களில் மூன்று அடிகளிலிருந்து 782 அடிகள் வரை படிப்படியாக உணரும் வகையில் பாடல்கள் உள்ளன. எளிதில் விளக்கமுடியாத கடினமானச் செய்திகளைக் கூட, மிகக் குறைந்த சொற்களைக் கொண்டு எளிதாக விளக்கும் தன்மை சங்க இலக்கியங்களில் மட்டுமே உள்ளது. சங்க இலக்கியப் பாடல்கள் தமிழ் படித்தவர்கள், வித்துவான்கள், புலவர்கள் மட்டுமே படிப்பதாக இருந்தது என்ற நிலைமாறி, இன்று கற்றோர் யாவரும் சங்க இலக்கியங்களைப் படித்துப் புரிந்து கொள்ளும் அளவிற்கு எளிமைப்படுத்தியும் வழங்கப்பட்டுள்ளன. எனவே, சங்க இலக்கியங்களை தமிழர் அனைவரும், அதாவது அடிப்படைக் கல்வியறிவு கொண்டவர்களும் படித்து புரிந்து கொள்ளும் நிலையில் சொற்கள் எளிமையாகவும் அதே நேரத்தில் தெளிவாகவும் உள்ளது. சங்க இலக்கியத்தில் உள்ள அகப்பாடல் செய்திகளையும் புறப்பாடல் செய்திகளையும் மிகச் சிறப்பாக, எளிமையாக எவரும் புரியும் வண்ணம் விளக்கப்பட்டிருக்கும். பொதுவாக, அகம் சார்ந்த செய்திகளை, படிப்போர்க்கு விளங்கும் வகையில் எழுத நிறைய சொற்கள் தேவைப்படும். ஆனால், குறைந்த சொற்களைக் கொண்டு மிகச் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது புலவர்களின் அறிவுத் திறமையைக் காட்டுகிறது. இவ்வாறு **'சங்ககாலப் புலவர்கள் இனிய இலக்கியங்களை இன்றும் போற்றிப் புகழும் வகையில் இயற்றியுள்ளனர். இவர்கள் இன்றைய உலகப் பெரும்புலவர்களோடு ஒப்பிடத்தக்க புலமையும் பெருமையும் உடையவர்கள். இவர்கள் கல்வியறிவின்பாற்பட்ட தகுதியால் அமைச்சர்களாகவும் தூதுவர்களாகவும் ஆளுநர்களாகவும் மெய்யுணர்வாளர்களாகவும் மக்கள் துயர்போக்கும் சான்றோர்களாகவும் பிறர்க்கென வாழும் பெரியோர்களாகவும் வாழ்ந்து நாட்டுத் தொண்டும் மொழித் தொண்டும் மக்கள் தொண்டும் ஆற்றியுள்ளனர்'**[9].

### 2.2.7 தனிநிலைச் செய்யுட்களாக அமைதல்.

சங்க இலக்கியங்களில் மொத்தம் 2387 பாடல்கள் உள்ளன. அதில் 1877 அகப்பாடல்களும் 510 புறப்பாடல்களும் உள்ளன. இவை 473 புலவர்களால் எழுதப்பட்டது. இதில் ஒவ்வொரு புலவர்களும் வெவ்வேறு காலங்களில் பாடப்பட்ட பாடல்கள் இருந்தாலும், எல்லாப் பாடல்களும் ஒரே தன்மை உடையதாகவும், ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாகவும் இருப்பது இதன் சிறப்பாகும். சங்க இலக்கியங்களில் புலவர்கள் ஒவ்வொரு பாடலுக்கும் பயன்படுத்தும் சிறப்பியல்புகளைக் காணும்போது, புலவர்களின் காலங்களில் மட்டுமே வேறுபாடு உள்ளதே தவிர, பாடல்களில் தன்மையில் எந்த வேறுபாடுகளும் இல்லை. அனைவரது பாடல்களும் ஒரே தன்மையாகக் காணப்படுகின்றன. இலக்கியம் படைப்பதற்கென்று தனிக் கொள்கைகளை வகுத்துக் கொண்டு, அதனடிப்படையிலே, வெவ்வேறு காலங்களிலும் ஒரே தன்மையுடன் பாடல்களைப் படைத்துள்ள புலவர்களின் உத்தி பாராட்டுதற்குரியது. இந்தப் பாடல்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக இருந்தாலும் தனித்தனிப் பாடல்களாகக் கொண்டு பாடநூலில் படிக்கும் போதும் அதன் பண்பில் சிறு குறையுமின்றி சிறப்புடன் அமைவது சங்க இலக்கியப் பாடல்களின் மற்றுமொரு சிறப்பாகும். அதனால், இதில் எந்த ஒரு பாட்டையும் தனியாக படித்தாலும், அதன் சிறப்பு குறையாமல், முழுமையான நிறைவோடு படிக்க இயலும்.

## 2.3 சங்க இலக்கியத்தில் கற்பிக்க வேண்டிய முக்கியக் கூறுகள்

### 2.3.1 இலக்கியங்களுக்கே உரிய ஓசை நயம்

இலக்கியச் செய்யுள்கள் ஒரு வரையறைக்குட்பட்டுப் பாடப்படுகின்றன. கருத்துகளைச் சொல்லுகிற முறையால் அவை உரைநடையினின்றும் வேறுபடுகின்றன. நயம்படச் சொல்லப்படுவதால் அவை மக்கள் மனதை ஈர்க்கின்றன. அந்நயத்தை உணர்ந்து போற்றிப் பயிற்றுதல் வேண்டும். சங்க இலக்கியங்களில் பெரும்பாலும் அகவல் ஓசை உள்ள ஆசிரியப்பாவும், சில இடங்களில் தூங்கலோசை உள்ள வஞ்சியப்பாவும் இடம்பெற்றுள்ளன. பாடத்திட்டத்தில் இடம்பெறும் பாடல்களில் அமைந்துள்ள ஓசையை அறிந்து அதை மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். பாடல்களில், இந்த பா வகையினாலும், பயன்படுத்தப்பட்டிருக்கும் வல்லின, மெல்லின எழுத்துக்களாலும் ஒலிநயம் ஏற்படும். எனவே, பாடலில் உள்ள எதுகை,

மோனை, ஒலி ஆகியவற்றை மாணவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். புலவர்கள், சில இடங்களில் சொற்களை வல்லினமாக்கியும் மெல்லினமாக்கியும் தொகுத்தும் விரித்தும் நயம் அமையும்படிப் பாடுவர். இந்த வகையில், **'இலக்கியச் செய்யுள்கள் அழகிய வடிவம் உடையது. ஒலிநயம் உடையது. எதுகை, மோனை முதலியனவும் அமைந்து உணர்ச்சியின் வெளிப்பாடாகத் தோன்றுவது. கற்பனை நயம் பொருந்தி விளங்குவது. படிக்குந்தோறும் இன்பத்தையளிப்பது'**[12]**.** இவற்றை மாணவர்கள் உணரச் செய்ய வேண்டும். கவிஞர் தாம் உணர்ந்ததையும் தம் அனுபவத்தையும் உணர்வதற்கேற்ற செஞ்சொற்களைப் பயன்படுத்துவர். மிக எளிய சொல்லும் அவர் பயன்படுத்தும் விதத்தால் நயம் பொருந்தியதாகும். சொற்களை அமைத்தலில் ஒலிநயம் தோன்றும். எதுகையும் மோனையும் இயைபும் முரணும் அமைந்து படிப்பதற்கு இன்பம் தரும். மொழி ஆசிரியர் இந்நயங்களைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் மாணவரிடம் இலக்கியச் சுவை உணராற்றலை வளர்க்கலாம்.

வல்லின, மெல்லின எழுத்துக்களின் ஒலி நயத்தினை உணர்வதுடன், மாறி மாறி அடியெடுத்து வைத்து நடக்கும் தாள அமைதியுடைய ஒலி நயத்தையும் பா நயத்தையும் பாடல்களை வாய்விட்டுப் படிப்பதால் மட்டுமே உணர முடியும் என்பதை மாணவர்களுக்கு விளக்க வேண்டும். இயல்பாகவும் வலிந்தும் அமையும் இந்த ஒலிநயங்கள் படிப்பதற்கு இன்பம் தருவதை ஆசிரியர் பாடலை வாய்விட்டுப் படித்தலின் மூலம் உணரச் செய்யலாம். மாணவர்கள் பாடலை வாய்விட்டு படிப்பதால் மட்டுமே பாடலின் முழுமையான அழகை உணர முடியும் என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். இதற்கு, ஆசிரியர் முதலில் பாடலை உரிய ஓசையுடன் மாணவர்களுக்குப் படித்துக் காட்ட வேண்டும். மேலும், மீண்டும் அவர்களைப் படிக்கச் செய்யவும் வேண்டும். இதனையே, பேராசிரியர் கணபதி அவர்கள் **'செய்யுளைச் சந்தத்தோடு மூன்று முறை ஆசிரியர் படித்துக் காட்டி, பின்னர் மாணவரைக் குழுவாகவும் தனித்தனியாகவும் அதே சந்தத்தில் படிக்கச் செய்தல் வேண்டும்.'** [13] என்கிறார்.

### 2.3.2 இலக்கியங்களுக்குரிய சொற்களைப் பிரித்துப் படித்தல்

சங்க இலக்கியப் பாடல்கள் மிகவும் தொன்மை வாய்ந்ததாகவும் தமிழ் கற்றுணர்ந்தவர்களால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும் அளவிற்கு

சொற்களஞ்சியம் மிக்கவையாகவும் இருக்கும். இதில் பல சொற்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து, பாடலின் ஓசைக்காகவும் இசைக்காகவும் விதிக்காகவும் அழகிற்காகவும் தேவைக்காகவும் புணர்ச்சி விதிகளுடன் கலந்து பாடப்பட்டிருக்கும். அவற்றை மாணவர்கள் தாமாகப் படித்துப் பொருளுணர்தல் என்பது சற்றுக் கடினமான செயலாகும். எனவே, ஆசிரியர்கள் பாடலில் உள்ள சொற்களைப் புணர்ச்சி விதிகளிலிருந்து பிரித்து தனித்தனிச் சொல்லாக்கிப் படித்துக் காட்டுதல் இன்றியமையாததாகும். இவ்வாறு, **'படித்துக் காட்டி விளக்கும் போது ஒவ்வொரு சொல்லின் பொருளையும் மாணவர்கள் அறிந்து கொள்வதோடு சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக்கொள்ளும் வாய்ப்பும் ஏற்படும்'** [14] இதனால், சங்கப்பாடல்களைத் தனிப்பட்ட முறையில் எடுத்துப் படிக்கும் ஆர்வமும் ஏற்படும். தற்போது, பெரும்பாலும் பள்ளிகளில் கொடுக்கப்பட்டிருக்கும் சங்கப்பாடல்கள் புணர்ச்சி விதிகள் நீக்கப்பட்டு, தனித்தனிச் சொல்லாக உள்ள பாடல்களாகவே வழங்கப்படுகின்றன. இருப்பினும், மாணவர்கள் அதைச் சரியான ஏற்றத்தாழ்வுடன், சரியான உச்சரிப்புடன் படிப்பதற்கு ஆசிரியர்கள் உதவுதல் வேண்டும். ஆசிரியர்கள் பாடலைப் படித்துக்காட்டி மாணவர்களை மீண்டும் படிக்கச் செய்தல் வேண்டும்.

உலக இலக்கியங்களில் கால வேறுபாட்டிற்கு ஏற்ப அந்தந்த காலக் கட்டத்திற்கு ஏற்ற வகையில், சொல்லிலும் பொருளிலும், சில மாற்றங்களைக் கொண்டு வருவது இயல்பு. சங்க இலக்கியத்தின் பொருளைக் கற்றறிந்த புலவர்களைத் தவிர மற்றவர்கள் உணர்வது அவ்வளவு எளிது அல்ல. இதனைப் பலாப்பழத்திற்கு உவமையாகக் கூறுவர். அதாவது, பலாப்பழத்தை ஒருவர் கையிலே கொடுத்தால் அதை அப்படியே உண்ண முடியாது. முதலில் முள்ளுடைய தோலை நீக்க வேண்டும். அதற்குக் கூர்மையான வெட்டுக்கத்தி வேண்டும். பிறகு, அதன் உள் தோலில் உள்ள தசைத் துண்டுகளில் உள்ள பிசின் போன்ற பொருளை நீக்க வேண்டும். அதன் பிறகுதான், சுவையைச் சுவைத்து உண்ண முடியும். அவ்வாறு **'சங்க இலக்கியத்திலுள்ள ஓர் பாடலை உணர வேண்டுமெனில் அதற்கு இலக்கியப் புலமை வேண்டும். உரை ஆசிரியர்களின் துணை வேண்டும். அவ்வளவு கடினமான இலக்கியத்தை மாணவர்கள் உணரும் வகையில் எளிய வகையில் கற்பிக்க வேண்டும். எனவே, சங்கப்பாடல்களில் உள்ள ஒவ்வொரு சொல்லையும் தனித்தனியாகப் படித்துப் பொருளை விளக்கி**

**அப்பொருள் விளக்கும் கருத்துகளையும் விளக்குதல் வேண்டும்'**[15] மேலும், புலவர்கள் பாடலில் ஒவ்வொரு பொருளையும் பயன்படுத்தியிருக்கும் சிறப்பு பற்றியும் தேவை பற்றியும் விளக்க வேண்டும். சங்கப் பாடல்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் பல சொற்கள் இன்று வழக்கத்தில் இல்லாமல் இருப்பதால், அந்தச் சொற்களை மாணவர்கள் மீண்டும் பயன்படுத்தும் வகையில் அந்தச் சொற்களை விளக்க வேண்டியது ஆசிரியரின் கடமையாகும்.

**ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே;**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;**
**வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;**
**நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே;**
**ஒளிறு வாள் அருஞ் சமம் முருக்கி,**
**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.. (புற.312)**

என்ற புறநானூற்று பாடலில் இடம்பெறும் ஈன்று புறந்தருதல் என்ற சொல் ஒரு தாயைக் குறிக்கிறது. ஏனெனில், ஈனுதல் என்பது பெற்றெடுத்தல் எனப் பொருள்படும். ஈன்று புறந்தருதல் என்றால் நம்மை பெற்று இவ்வுலகிற்காக வழங்குவது நமது தாய். இவ்வுலகம் என்பது நாட்டைக் குறிக்கும். போர்கள் மிகுந்திருந்த சூழலில், வீரர்கள் தங்களுடைய வாழ்க்கையையே நாட்டிற்காக அர்ப்பணித்தனர். அவ்வாறு நாட்டிற்கு ஒருவனைப் பெற்றெடுத்தல் தாயுடைய கடமை என்பதையே இவ்வரிகள் நமக்குச் சுட்டுகிறது. இதை மாணவர்களுக்கு விளக்கமாக எடுத்துரைக்க வேண்டும்.

இது போன்று செய்யுளில் பயன்படுத்தப்படும் பொருட்செறிவுள்ள சொற்களை முழுமையாக விளக்க வேண்டும். இதனால், மாணவர்களின் சொல்லாட்சித்திறன் மேம்படும். இவ்வாறு சங்கப்பாடல்களில் உள்ள சொற்களையும் சொற்கள் பயன்படுத்தியுள்ள கருத்துகளின் உத்திகளையும் மாணவர்கள் அறிந்து கொள்வதன் மூலம், சங்கப்பாடல்களை மீண்டும் மீண்டும் படிப்பதில் மாணவர்கள் ஆர்வம் ஏற்படும்.

### 2.3.3 சொல்லாட்சித் திறன்

இலக்கியத்தைப் படிப்பதன் மூலம் ஒருவர் சொல்வளம் பெறுவதோடு அச்சொற்களைப் பயன்படுத்திப் பேசும் முறையையும் அறிதல் கூடும். என்ன சொல்வது என்பதோடு எப்படிச் சொல்வது என்பதனையும் எடுத்துக்காட்டுவது

இலக்கியமாகும். ஒரு செயலைச் செய்து முடித்து வந்து அதனைப் பற்றிக் கூறும்பொழுது தொடங்கிய நேரத்திலிருந்து நிகழ்ச்சிகளை நிரல்படக்கூறாது – முக்கியச் செய்தியினை முதலில் கூற வேண்டும். இவ்வாறு, செய்தியைக் கூறும் பொழுது கேட்பவர் எதனை எதிர்பார்ப்பாரோ அதனைக் கூற நமக்கு அறிவிப்பது இலக்கியமாகும். சங்கப்பாடல்களில் புலவர்கள் சொல்ல வந்த செய்தியைச் சுருங்கச் சொல்லி விளங்கவைப்பதில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். எந்த சொல்லை, எங்கு, எவ்வளவு நேர்த்தியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதை அறிந்திருந்தனர். மேலும், சங்கப்பாடலில் இடம்பெற்றிருக்கும் சொற்களை அறிந்து கொள்வதால் சொற்களஞ்சியம் பெருகும் வாய்ப்புகள் அதிகம். தேவைக்கேற்ப, சொற்களைப் பயன்படுத்தி சொல்ல வந்த செய்தியை மிக நுட்பமாகவும் அழகாகவும் ஆழமாகவும் விளக்கினர். **‘சங்கப்பாடல்களில் உள்ள கருத்துகளின் ஆழத்திற்கும், அழகிற்கும் முக்கியக் காரணமாகத் திகழ்வது அதில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களின் அழகேயாகும். சங்கப்புலவர்கள் மதி நுட்பத்தை இந்த சொல் பயன்பாட்டை வைத்தே கணக்கிடலாம்.’** [16] நேரடியாகச் சொல்ல வேண்டிய செய்திகளை நேரடியாகவும் மறைத்துச் சொல்ல வேண்டிய செய்திகளை மறைத்தும் புகழ்ந்து சொல்ல வேண்டிய செய்திகளை புகழ்ந்தும் வெளிப்படையாகக் கூற முடியாத செய்திகளை இலை மறைவு காய் மறைவாகவும் விளக்குவதில் சங்கப் புலவர்கள் திறமை ஒப்பற்றது. இன்றைய மாணவர்கள், இத்தகைய சிறப்புமிக்க புலவர்கள் எழுதிய பாடல்களைப் படிப்பதன் மூலம் அவர்களுக்கும் சொற்களைப் பயன்படுத்தும் முறையும், சொற்களின் தேவையைப் பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பும் ஏற்படும். இதனால், ஒரு செய்தியைப் பிறருக்கு எவ்வாறு சுருங்கச் சொல்லி விளக்க வேண்டும் என்ற உத்தியை மாணவர்கள் கற்றுக் கொள்ளும் வாய்ப்பும் ஏற்படும். இதனால், அவர்களின் சொல்லாட்சித் திறன் மேம்படும்.

மொழியின் அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அனைத்துக்கும் இன்றியமையாது தேவைப்படுவது சொற்களஞ்சியம். அதாவது, **‘தெரியாத புதிய வார்த்தைகளும் அறியாத செய்திகளும் மற்றும் நுட்பமான விளக்கங்களும் படிப்பவர்களுக்குத் தாம் படிப்பதைப் புரிந்து கொள்வதில் பிரச்சினையைத் தோற்றுவிக்கின்றன.’** [17] எனவே, பல சொற்களையும் அதன் பொருளையும் அறிந்திருப்பது இன்றியமையாததாகும். அவ்விதச் சொல்வளம் பெறுவதற்கு இலக்கியம்

பெருந்துணையாக அமையும். உயிர்களைப் படைக்கும் பிரம்மாவையும் நூல்களைப் படைக்கும் புலவரையும் ஒப்பிடத் தொடங்கிய புலவர் ஒருவர், ‘கலைமகள் வாழ்க்கை முகத்தது எனினும் மலரவன் வண்தமிழோர்க்கு ஒவ்வான்’ எனப் பாடுகிறார். புலவரை வண்தமிழோர் - செழுமையான சொல்வளமுடையவர் என்று குறிப்பிடுகிறார். எனவே, அவர்தம் பாடல்களைப் படிப்பதாலும் மனப்பாடம் செய்வதாலும் சொற்களஞ்சியம் பெருகும்.

இவ்வாறு சொற்களஞ்சியம் பெருகுவதால் ஒருவருடைய மொழியின் பேச்சு நடையும் எழுத்து நடையும் சிறக்கும். இவ்வாறு, இலக்கியம் மொழிக்கல்வியில் சொற்களஞ்சியம் பெருகுவதற்கும் எழுத்து நடை, பேச்சு நடை சிறப்பதற்கும் வழி வகுக்கின்றது.

### 2.3.4 இலக்கியக் கூறுகள்

கவிஞர்கள் சில இடங்களில் சொற்களை வல்லினமாக்கியும் மெல்லினமாக்கியும் தொகுத்தும் விரித்தும் எதுகை அமையும் படியும் பாடலில் முதலெழுத்துக்களை ஒன்றுள்ளேனும் பலவற்றினுள்ளேனும் ஒலியமைப்பால் ஒன்றுக்கொன்று ஒன்றி வருமாறு மோனை அமையும் படியும் செய்வர். இவ்வாறு இயல்பாகவும் வலிந்தும் அமைக்கும் இவ்வெதுகை மற்றும் மோனை படிப்பதற்கு இன்பம் தரும். தமிழ்ப் பாடல்கள் பலவற்றிலும் இந்த எதுகை மற்றும் மோனை நயத்தினைக் காணலாம். இதனை, மாணவருக்குச் சுட்டிக்காட்ட வேண்டும். அப்போதுதான், பாடலின் நயத்துடன் பாடலைப் படிப்பதில் ஆர்வம் ஏற்படும்.

மேலும், கவிஞர்கள் பாடலின் பொருளுக்கு மற்றும் நடைக்கு ஏற்ப அதில் பயன்படுத்தியுள்ள சொற்களைக் கொண்டு பாடலின் பா வகைகளைப் பிரிக்கலாம். இதில், வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சியப்பா, கலிப்பா என்ற நால்வகைப் பாக்கள் உண்டு. பாடலின் ஓசையைப் பொருத்து இந்த பா வகைகள் பிரிக்கப்படுகின்றன. பா வகையைத் தெரிந்து பாடலைப் படித்தால் மட்டுமே பாடலின் ஓசையை அறிந்து சரியான ஏற்றத்தாழ்வுடன் படிக்க இயலும். எனவே, மாணவர்களுக்கு இந்த ஓசையை அறியச் செய்தல் இன்றியமையாததாகும்.

சங்க இலக்கியப் பாடலுக்கே உரியதான தனித்தன்மையாகக் கருதப்படும் திணை, துறைகளைப் பற்றிய விளக்கங்களை மாணவர்கள்

அறியச் செய்ய வேண்டும். சங்க இலக்கியப் பாடல்கள், பாடப்பட்ட சூழ்நிலை, காலம், பாடுபொருள் ஆகியவற்றைப் பொருத்து இந்தத் திணை, துறைகளில் வேறுபாடுகள் ஏற்படுகிறது. இந்த திணை, துறைகளை கற்பிப்பதன் மூலம், சங்கப் பாடல்களின் தனித்தன்மைகளை மாணவர்கள் அறிந்து கொள்ளும் வாய்ப்புண்டு. இதன் மூலம், சங்கப்பாடல்களின் நுட்பங்களை அறிந்து மேலும் மேலும் சங்கப்பாடல்களைப் படிப்பதில் மாணவர்களுக்கு ஆர்வம் ஏற்படும். எனவே, சங்கப் பாடல் கற்பித்தலில் இந்த திணை, துறை கற்பித்தல் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

### 2.3.5. பொருள் உணர்ச்சிக்கேற்ற குரல் ஏற்றத் தாழ்வு

சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் போது ஆசிரியர்கள் அதைப் படித்து பொருளுணர்த்தியும், பாடல்களில் இடம்பெறும் சொற்களுக்குப் பொருள் விளக்கம் கொடுத்தும் அதில் இடம்பெற்றிருக்கும் சொற்களின் சிறப்புகளையும் விளக்கி பாடலைப் படித்துக் காட்டியும் கற்பிப்பது முக்கியமானதாகும். அதே போல், பாடலைப் படித்துக் காட்டுவதில் முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒன்று, பாடத்தைப் படித்துக் காட்டும்போது ஆசிரியர் பயன்படுத்தும் குரல் ஏற்றத் தாழ்வாகும். பாடலின் உள் நோக்கத்தை மனதில் கொண்டு அதற்கேற்ப பாடலில் இடம்பெறும் சொற்களுக்கிடையே ஏற்ற இறக்கத்துடன் பாடலை மாணவர்களுக்குப் படித்துக்காட்டி அவர்களை மீண்டும் அதேபோல் படிக்க ஊக்குவிக்க வேண்டியது ஆசிரியரின் கடமையாகும்.

### 2.3.6. சரியாக ஒலிக்க இயலாத சொற்களுக்குப் பயிற்சி

பொதுவாக ஆசிரியர்கள் சங்க இலக்கியப் பாடல்களை மாணவர்களுக்குப் படிக்கக் கற்றுத் தரும்போது, அதை மீண்டும் மீண்டும் மொத்தமாகப் படிக்கச் செய்தலே இயல்பான முறையாகும். இந்த முறையில், மாணவர்கள் கடினமான சரியாக ஒலிக்க முடியாத சொற்களை வகுப்பில் குழுவாகச் சொல்லும் போது, தவறாக உச்சரிப்பதற்கும் சொற்களில் கவனம் செலுத்தாமல் மாற்றிச் சொல்வதற்கும் வாய்ப்புகள் அதிகம். எனவே, ஆசிரியர் மாணவர்களுக்குச் சங்கப்பாடல்களைப் படிக்கக் கற்றுத் தரும்போது, கூடுமானவரையில் தனித்தனியாக மாணவர்களைக் கவனிப்பது இன்றியமையாததாகும். மேலும், அவ்வாறு கவனித்து மாணவர்களால் சரியாக ஒலிக்க இயலாத சொற்களுக்குத் தனிப்பட்ட முறையில் பயிற்சிகள்

அளித்து அதைக் கூறச் செய்ய வேண்டும். இந்தப் பயிற்சிகளை இலக்கியம் கற்பிக்கும் போது மட்டும் செய்யாமல் எல்லா கற்பித்தல் வகுப்புகளிலும் நா நெகிழ் பயிற்சி, நா பிறழ் பயிற்சி வாக்கியங்களைக் கொடுத்து பயிற்சி அளிக்கலாம். நா நெகிழ் பயிற்சி என்பது ஒரே மாதிரி ஓசையுடைய சொற்களே மீண்டும் மீண்டும் அமையுமாறு வாக்கியங்களைத் தயார் செய்து, அதை வேகமாகவும் பிழையின்றியும் படிக்கப் பயிற்சி அளித்தல் ஆகும். நா பிறழ் பயிற்சி என்பது, ஒரு சொல்லே மீண்டும் மீண்டும் அமையுமாறு வாக்கியங்களை அமைத்து, அதை வேகமாகவும் பிழையின்றியும் பேச பயிற்சி அளித்தல் ஆகும். இதனால், மாணவர்களின் பேச்சுத்திறன் கூடுவதோடு எந்த ஒரு கடின சொற்களையும் எளிதாக ஆட்கொள்கின்றனர். பின்பு, அந்தச் சொற்களை வழக்கில் பயன்படுத்தவும் தயாராகி விடுவர். இதனால், இலக்கியங்களைப் படிக்கும் போது அதில் உள்ள கடினச் சொற்களை படிக்கும் போதும் இலக்கியப் பாடல்களை இசையோடு பாடும் போதும் எந்த ஒரு தடங்கலும் இல்லாமல் இருக்கும். ஒலிப்புப் பிழை என்பது மாணவர்களின் தொடக்க வகுப்பில் கற்பிக்க வேண்டியது என்ற எண்ணம் நம்மில் பலருக்கு உள்ளது. அதனால், இலக்கியங்களைக் கற்பிக்கும் போது நாம் இதில் அதிக கவனம் செலுத்துவது இல்லை. எனவே, வகுப்பு வித்தியாசமின்றி, எழுத்து பிறப்பு முறையையும் ஒலிப்பு முறையையும் மாணவர்களுக்கு கற்றுத்தர ஆசிரியர்கள் தயாராக இருக்க வேண்டும்.

### 2.3.7 இலக்கியச் சொற்களைத் தொடர்களில் அமைத்தல்

இலக்கியப் பனுவல்களில் இடம்பெறும் பழஞ்சொற்களை மாணவர்களுக்குப் படித்துக் காட்டி பொருள் விளங்க வைப்பதோடு மட்டுமல்லாமல் அதை மாணவர்கள் தொடர்ந்து பயன்படுத்த ஊக்கப்படுத்த வேண்டும். கற்றுக் கொண்ட பழஞ்சொற்களைத் தொடர்ந்து அவர்கள் எழுதும் சொற்றொடர்களில் பயன்படுத்துமாறு ஊக்குவிப்பதோடு அவ்வாறு பயன்படுத்தி இருந்தால் அதற்காகப் பாராட்டவும் செய்ய வேண்டும். இவ்வாறு, தொடர்ந்து மாணவர்களின் படைப்புத் திறன் மற்றும் எழுதுதல் திறனில் இந்த பழஞ்சொற்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்புகளை வழங்குவதோடு அதை மாணவர்கள் தொடர்ந்து பயன்படுத்தும் விதத்தில் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். மேலும், இலக்கியத்தில் காணும் பழஞ்சொற்களை வரிசைப்படுத்தி அதன் பொருளோடு அகராதி ஒன்றையும் தயார் செய்ய ஊக்குவிக்கலாம். இலக்கியத்தின் மூலம் மாணவர்கள் கற்கும் சொற்களை வரிசைப்படுத்தி,

எழுதி வகுப்பறையில் மாணவர்களின் கண்களில் படுமாறு ஒட்டலாம். இதனால், அந்தச் சொற்களை மாணவர்கள் மீண்டும் மீண்டும் காணும் வாய்ப்பு ஏற்படும். பின்பு, அந்தச் சொற்களை மாணவர்களின் மனதில் நீங்கா இடம்பெறுவதோடு அவர்களுடைய எழுத்துப்பணியில் தானாகவே இந்தச் சொற்கள் இரண்டறக் கலக்கும் வாய்ப்பும் உண்டு. இவ்வாறு பழஞ்சொற்களை அதிகமாக மாணவர்கள் படித்தும் பழகியும் வருவதால் இலக்கியப் பாடல்களை ஆசிரியர்களின் துணையின்றி மாணவர்களால் படிக்க முடியும். இதனால், இலக்கியப் பாடல்களின் மீது உள்ள வேற்றுமையுணர்வும் ஐய உணர்வும் நீங்கி மேலும் இலக்கியப் பாடல்களைத் தேடிப் படிப்பர்.

### 2.3.8. தொடர்புடைய பிற பாடல்களை அறிமுகப்படுத்தல்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய காலத்துத் தமிழில் மோசிகீரனார் என்ற புறநானூற்றுப் புலவர் ஒருவர் மிகச் சிறந்த பாடல் ஒன்றை இயற்றியுள்ளார். அப்பாடல் இன்றும் எல்லா நாட்டவரும் எல்லா ஆட்சியாளரும் நன்கு உணர்ந்து பார்க்க வேண்டிய பாடல் அது.

**‘நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே;**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**
**அதனால் யான் உயிர் என்பது அறிகை**
**வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே’ (புற.187)**

ஒரு நாட்டின் குடிமக்கள் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டுமெனில், அங்கே நெல்லும் அதாவது சிறப்பான நெல்விளைச்சல் இல்லையென்றாலும், உயிர் வாழ்வதற்குத் தேவையான குடிநீரும் சிறப்புடன் அமையவில்லையென்றாலும் பரவாயில்லை. மன்னன் செங்கோல் பிறழாமல் சிறப்புடன் விளங்கி நல்லாட்சியை மக்களுக்கு வழங்க வேண்டும். அதுவே, அந்நாட்டு மக்களுக்குச் சிறப்பாகும் என்று கூறப்பட்டுள்ளது.

இதனை மாணவர்களுக்கு எளிதில் விளங்குமாறு கூற வேண்டுமெனில் மக்களாட்சியில் மக்கள் எவ்வாறு சுதந்திரமாக வாழவேண்டுமென விரும்புகிறார்கள் என்பதை நடைமுறைகளைக் கொண்டு விளக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, நாட்டுக்குப் பதிலாக வீட்டை எடுத்துக் கொள்ள வேண்டும். நாடுதான் வீடு. வீடுதான் நாடு என்றுகூற வேண்டும். நாட்டுக்குத் தலைவன் மன்னன். வீட்டுக்குத் தலைவன் அதாவது வீட்டை ஆள்பவன் தந்தை. ஒரு

தந்தை சரியில்லையென்றால் அந்த வீட்டில் எத்தகைய நலம் இருந்தும் அதனால் பயன் எதுவும் கிடையாது.

ஒரு தந்தை தன் மகனுக்கு மூன்று வேளையும் நன்றாக உணவு வழங்குகிறார். உடைகள் வாங்கித் தருகிறார். எல்லாம் நன்றாக செய்கிறார். ஆனால், தினமும் இரவில் குடித்துவிட்டு வந்த அடிக்கிறார். இப்போது சொல்லுங்கள். அந்தத் தந்தையின் மீது இந்த மகனுக்கு அன்பு இருக்குமா? அந்த தந்தையால் அந்தக் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்குமா? என்பதை எண்ணிப் பாருங்கள். இதே நிலைதான் நாட்டிலும் ஏற்பட்டும் என்பதை விளக்கினால் மேற்கண்ட புறநானூற்றுப் பாடல் மிகவும் எளிதில் மனதில் பதியும் என்பதில் ஐயமில்லை. மேலும் இதைத் தொடரந்து, இந்த உலகம் இருப்பதற்குக் காரணம், பலருக்கும் கொடுத்து வாழ்வதுதான். தனியாக உண்பதே இல்லை. வெறுப்போ, சினமோ வாழ்க்கையில் இல்லை. சோர்வு இல்லை. கருமமே கண்ணாக இருந்து தூங்குவதும் இல்லை. பிறர் பழி சொல்லிவிடுவார்களோ என்று அஞ்சிப் புகழ் தருகின்ற காரியத்தை மட்டும் செய்வர். அதற்காக உயிரையும் கொடுப்பவர். பழி என்றால் உலகத்தையே பெறுவதாயினும் அதைச் செய்வதில்லை. அவர்கள் தமக்காக வாழ்வதில்லை. பிறர்க்காக வாழ்ந்தார்கள்; வாழ்வார்கள். அவ்வாறு வாழ்கின்ற மாந்தர் இருப்பதால்தான், இந்த உலகமே இருக்கிறது என்று விளக்கும் பின்வரும் பாடலை தொடர்புபடுத்திக் கூறலாம்.

**‘உண்டால் அம்ம, இவ் உலகம் - இந்திரர்**
**அமிழ்தம் இயைவது ஆயினும், ‘இனிது’ எனத்**
**தமியர் உண்டலும் இலரே முனிவு இலர்**
**துஞ்சலம் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சி**
**புகழ் எனில் உயிரும் கொடுக்குவர் பழி எனில்**
**உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்**
**அன்ன மாட்சி அனையர் ஆகிய**
**தமக்கு என முயலா நோன் தாள்**
**பிறர்க்குஎன முயலுநர் உண்மை யானே’ (புறு.182)**

‘தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்’ என்பது குறள். அதாவது இலக்கியத்தை பயிற்றுவிக்கும் போது அதன் இனிய சுவையை நாம் எவ்வாறு உணருகின்றோமோ அதே

இன்பத்தைக் கற்பவர்கள் உணருகின்ற வகையில் நாம் அதைப் பயிற்றுதல் வேண்டும்.

யாம் பெற்ற இன்பம் பெறு இவ்வையகம் என்பது போல், இலக்கிய நுகர்ச்சியை அறியச் செய்தல் வேண்டும். சங்க இலக்கியங்கள் பாடல்களை அறம், பொருள், இன்பம் என்னும் நீதியை உள்ளடக்கிய கவிதைகளைப் பயிற்றுவிக்கும் போது ஒன்றி உணர்ந்து பயிற்றுவித்தால் மாணவர்களின் உள்ளத்தில் பதியும்.

ஆசிரியரின் இலக்கணம் நன்னூலில் குறிப்பிடப்பட்டது போல, கலைபயில தெளிவு ஆசிரியருக்கு இருத்தல் வேண்டும். இலக்கியத்தை நடத்துகின்ற போது, அதனோடு தொடர்புடைய செய்திகளைப் பல்வேறு இலக்கியங்களிலிருந்தும் எடுத்துக்காட்டிக் கூறுதல் நலம் பயக்கும்.

### 2.3.9 விழுமியங்களை அறியச் செய்தல்

சங்கப்பாடல்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு காலங்களில் எழுதப்பட்டிருந்தாலும் ஒவ்வொரு பாடலும், ஏதேனும் ஒரு காரணத்திற்காகவும் நிகழ்வுக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. அந்தக் காரணத்தையும் நிகழ்வையும் உற்று ஆராய்ந்தால், அதன் மூலம் நம் வாழ்விற்குத் தேவையான அம்சங்களை நம்மால் பெற முடியும். வருங்காலத் தலைமுறையினரிடம் பண்பாட்டையும் பண்பையும் வளர்ப்பதில் முக்கியப் பங்கை வகிக்கும் ஆசிரியர்கள், சங்கப் பாடல்களைப் படித்து பொருள் விளக்கி மாணவர்களைப் படிக்க வைப்பத்துடன் மட்டுமல்லாமல் கொடுக்கப்பட்ட பாடல் பாடப்பட்டதன் காரணம் என்ன? பிண்ணனி என்ன? என்பதை முழுமையாக அறிந்து, அதை மாணவர்களுக்கு எடுத்தியம்புவதோடு அதன் மூலம் பெறப்படும் விழுமியத்தையும் மாணவர்களை அறியச் செய்ய வேண்டும். மேலும், அதை வாழ்வில் பின்பற்றவும் ஊக்குவிக்க வேண்டும். சங்கப்பாடல்கள் அனைத்துமே வாழ்வியலோடு தொடர்புடையவை. புறப்பாடல்களில் புறவாழ்க்கைக்கு ஏற்ற விழுமியங்களும் அகப்பாடல்களில் அக வாழ்க்கைக்கு ஏற்ற விழுமியங்களும் நிறைந்து காணப்படுகின்றன. ஆனால், இவற்றை ஆசிரியர் மாணவர்களுக்குப் புரியும் வண்ணம் எடுத்துரைக்க வேண்டியது இன்றியமையாதது. சங்கப்பாடல்கள் ஒவ்வொன்றும் ஏதேனும் நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்டிருக்கும். அப்பாடல்களை மேலோட்டமாகப் படித்தால் அந்த நிகழ்வை மட்டுமே அறிந்து கொள்ள முடியும். மாறாகப் பாடல்களை

ஆழ்ந்து படிப்பதன் மூலம் அந்நிகழ்வை ஒட்டிய பின்புலச் செய்திகளை நாம் அறிந்து கொள்ள முடியும். அந்த பின்புலச்செய்திகளே வாழ்க்கை விழுமியங்களாகும். எனவே, அவற்றை மாணவர்கள் உணர்ந்து படிக்கும் வண்ணம் சங்க இலக்கியப் பாடல்களை விளக்குதல் வேண்டும். இதனால், எதிர்காலத்தில் நன்மக்களாக வாழ்வதற்கு மாணவர்களைத் தயார் செய்ய முடியும்.

### 2.4 சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் உத்திகள்

கற்பித்தல் என்பது ஒவ்வொரு ஆசிரியரின் தனிப்பட்ட திறமையைப் பொருத்தது. கற்பித்தல் ஒரே மாதிரியாக அமைவதை மாணவர்கள் விரும்புவதில்லை. கற்பித்தலில் ஏற்படும் மாற்றங்களும் புதுமைகளுமே மாணவர்களிடம் கற்றலில் ஈடுபாட்டை ஏற்படுத்தும். அவ்வகையில், கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் சவாலாக அமையும் சங்கப்பாடல்களைக் கற்பிக்கும் போது, ஆசிரியர்களின் தனிப்பட்ட திறனுடன் சில உத்திகளும் சேர்ந்து அமைவது இன்றியமையாததாகும்.

#### 2.4.1. பாடப்பொருளுக்கு ஏற்றவாறு ஆர்வப்படுத்துதல்

ஒரு பாடத்தைக் கற்பிக்கும் முன் பாடம் மாணவர் மனத்தில் பதியவும் மாணவர்களுடைய கவனத்தைப் பாடத்தின்பால் ஈர்க்கவும் மேற்கொள்கின்ற ஒரு முயற்சியே கற்பித்தல் சூழல் எனப்படும். இதனை, ஆசிரியர் செம்மையாகவும் சிறப்பாகவும் சுருக்கமாகவும் செய்து முடிக்க வேண்டும். இந்தப் பகுதியில் நடத்தப்போகும் பாடலின் தலைப்பைக் கரும்பலகையில் எழுதியோ அல்லது நடத்தப்போகும் பாடலின் நூல் விளக்கம், ஆசிரியர், முன் கதை, பாடல் தொடர்பான சுவையான நிகழ்ச்சி போன்ற பகுதிகளை நயமுற குறிப்பிட்டு, பின்னர் பாடலைத் துவங்கலாம். சங்கப்பாடல்கள் அனைத்தும் கவிஞரின் உணர்ச்சியின் அடிப்படையில் தோன்றியவை. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் உருபெற்றிருக்கும். எனவே, அச்சூழ்நிலையை விளக்கிப் பாடலைக் கற்பித்தால் மாணவர்கள் ஆர்வமுடன் கவனிப்பர். மாணவர்களுக்கு ஏற்கனவே அறிமுகமான விருப்பமான கவிஞரால் பாடல் எழுதப்பட்டிருப்பின், ஆசிரியரின் வரலாற்றை அல்லது சிறப்புகளைக் கூறிக் கற்பித்தலைத் தொடங்கலாம். கற்பிக்கவிருக்கின்ற பாடலின் கருத்தினையறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தையெழுப்பிப் பின்னர்ப் பாடலைக் கற்பிக்கத் தொடங்குதலே சிறந்தது. அதற்கான சூழ்நிலையை,

ஒவ்வொரு ஆசிரியரும் தன்னுடைய திறனால் உருவாக்கி பின்னர் கற்பித்தலைத் தொடங்குதலே உகந்தது. இதனால், மாணவர்கள் கற்பிக்கவிருக்கும் பாடலை முழுமையாக கவனிப்பதுடன் பாடலாசிரியரின் உணர்வைச் சரியாக உள்வாங்கிக் கொள்வர். முழுக் கற்பித்தலுக்கு அடித்தளமாக அமைவது இந்த முதல் நிலை. தற்காலத்தில் இல்லாத ஒரு சங்க காலச் சூழலை மாணவர்களின் கண்முன் தோன்றச் செய்வது அசாதாரணமான செயலாகும். ஆனால், சங்கப் பாடல்களின் பின்னணிச் சூழலை உள்வாங்கி, அதை ஆசிரியர் சரியான வகையில் எடுத்தியம்பும்போது இப்பணி மிக எளிதானதாக மாறிவிடுகிறது. எனவே, பாடப்பொருளுக்கு ஏற்றவாறு மாணவனை ஆர்வப்படுத்தினால் மட்டுமே பாடப்பொருள் முழுமையாக மாணவர்களிடத்தில் சென்று சேரும். உதாரணமாக, ஆறாம் வகுப்பில் இடம்பெறும் புறநானூற்றுப் பாடலான, **'நாடாகு ஒன்றோ, காடாகு ஒன்றோ'** என்ற பாடலைத் தொடங்குவதற்கு முன்பு பின்வருமாறு திட்டமிடலாம். மேற்கண்ட பாடலை எழுதியவர் ஔவையார். கவிஞர் ஔவையார் குழந்தைகளுக்கு மிகவும் அறிமுகமானவர். ஆனாலும், ஔவையாரின் கதையை குழந்தைகள் அனைவரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அதனால், அவர் கதையை அல்லது வாழ்க்கை நிகழ்வுகளைக் கூறிப் பாடத்தைத் தொடங்கும் போது மாணவர்களிடத்தில் கற்றல் ஈடுபாடு ஏற்படும். அதன் மூலம் பாடலின் விளக்கத்தையும் அறிந்து கொள்ளவதில் ஆர்வம் காட்டுவர். இவ்வாறு, ஆசிரியர், பாடலைக் கற்பித்தலைக் காட்டிலும் கற்பித்தல் தொடங்குவதற்கு முன் செய்யும் ஆர்வமூட்டல் செயல் மிகவும் இன்றியமையாதது.

### 2.4.2. பகுதியிலிருந்து முழுமைக்குச் செல்லல்

சங்க இலக்கியங்களைப் பொருத்தவரையில் எந்த ஒரு பாடப்பொருளும் குறுகிய நோக்கில் அல்லாது பரந்துபட்ட நோக்கத்தில் மட்டுமே அமைக்கப்பட்டிருக்கும். அவ்வகையில் கொடுக்கப்பட்ட சங்கப்பனுவல் குறைந்த அடிகளைக் கொண்டதாக இருந்தாலும், அந்த பாடல் உணர்த்தும் பொருள், எடுக்கப்பட்ட நூல் என்று பார்க்கும்போது அது மிகவும் அகன்றதாக இருக்கும். எனவே, பாடநூலில் உள்ள பாடப்பகுதியை அதன் பின்புலத்தோடு உணர்த்துவதன் மூலமே, மாணவர்கள் பாடப்பொருள் தொடர்பான அனைத்து செய்திகளையும் அறிந்து கொள்ள முடியும். பாடநூலில் ஒரு சங்கப்பனுவல் தொடர்பான அனைத்து செய்திகளையும்

கொடுப்பது என்பது சாத்தியமாகாது. இருப்பினும், கொடுக்கப்பட்ட கூறுகளைக் கொண்டு அது தொடர்பான அனைத்துச் செய்திகளையும் மாணவர்களுக்கு வழங்குவது ஒரு ஆசிரியரின் கடமையாகும். பாடநூலில் அமைந்திருக்கும் சங்கப்பனுவலின் பொருளை மட்டும் விளக்குவதனால் மாணவர்களின் கற்றல் முழுமையடையாது. எனவே, சங்கப் பனுவலை ஆசிரியர் விளக்கும் போது, அது தொடர்பான அனைத்துச் செய்திகளையும் விளக்குவது இன்றியமையாதாகிறது. மாணவர்கள் பாடப்பொருள் என்னும் புவியிலிருந்து பரந்துபட்ட வானத்தைப் பற்றி அறிய உதவும் தொலைநோக்கியாக ஆசிரியர்கள் செயல்பட வேண்டும். உதாரணமாக, 10ஆம் வகுப்பில் இடம்பெறும் **'பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய'** என்ற புறநானூற்றுப் பாடலை விளக்கும் போது அந்தப் பாடலின் விளக்கத்தை மட்டும் கூறுவது முழுமையாகாது. அதனுடன் சேர்த்து, கோப்பெருஞ்சோழனின் இயல்புகள், கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையாருக்கும் இடையே இருந்த நட்பு, இந்தப் பாடலை எழுதிய புலவர் கணக்கனாருக்கும் கோப்பெருஞ்சோழனுக்கும் இருந்த தொடர்பு போன்ற செய்திகளையும் மாணவர்களுக்கு எடுத்தியம்புவதன் மூலம் பாடல் பாடப்பட்டதன் சூழ்நிலையை முழுமையாக மாணவர்கள் உணர்வர். இவ்வாறு கற்பிக்கும் போது மட்டுமே, சங்க இலக்கியங்களின் ஒவ்வொரு பாடலுக்கும் உள்ள தனித்தன்மையை மாணவர்கள் உணர முடியும். இவ்வாறு, ஒரு புலவரின் பாடலை விளக்கும் போது, புலவரின் திறமையையும் நோக்கத்தையும் மாணவர்கள் அறியும் வண்ணம் கற்பித்தல் வேண்டும். அதனால், மாணவர்கள் குறிப்பிட்ட புலவரின் பாடல்களை மேற்கொண்டுத் தேடிப் படிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் கற்பித்தல் அமைய வேண்டும். சங்கப்பாடல்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு புலவர்களால் வெவ்வேறு சூழ்நிலைகளில் எழுதப்பட்ட பாடல்களாகும். அவ்வாறு, பல தனிப்பட்ட பாடல்களை எழுதப்பட்ட முறைகளுக்கேற்ப தொகுக்கப்பட்ட தொகுப்பே சங்கப்பாடல்கள் ஆகும். எனவே, பாடநூலில் இடம்பெற்றிருக்கும் ஒரே ஒரு சங்கப்பாடலை மட்டும் மனதில் வைத்துக்கொண்டு கற்பிக்காமல் அதைத் தொடர்ந்து மாணவர்கள் சங்கப்பாடல்களைப் படிப்பதில் ஆர்வத்தை ஏற்படுத்துமாறு கற்பிக்க வேண்டும். சங்கப்பாடல்கள் அனைத்தும் நிகழ்ச்சி பின்னணி கொண்ட பாடல்களாக இருப்பதால், பாடநூலில் கொடுக்கப்பட்ட நிகழ்ச்சிக்கு முன் பின் நிகழ்ச்சிகளுக்குரிய பாடல்களை மாணவர்கள்

தேடிப்படிக்கும் வகையில் அது தொடர்பான அனைத்து தகவல்களையும் மாணவர்களுக்குக் கற்பித்தல் மூலம் வழங்குதல் வேண்டும்.

### 2.4.3 முழுமையிலிருந்து பகுதிக்குச் செல்லல்

கற்பித்தல் என்பது ஒரு மதிப்பெண் கூறாக அல்லாது, மாணவனைப் பண்படுத்தும் ஒரு ஊடகமாக திகழ வேண்டும். மொழிப்பாடம் என்பது ஒரு நீதிப்பாடமாக கருதப்படுகிறது. இதில், கொடுக்கப்பட்டிருக்கும் பாடங்கள் அனைத்தும் மாணவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான விழுமியங்கள் நிறைந்ததாகவே இருக்கும். ஆசிரியர் பாடத்தைக் கற்பிக்கும் போது பாடப்பொருளைக் கற்பதனால் மாணவர்கள் பெறப்போகும் விழுமியங்களை உணர்த்தும் வண்ணம் கற்பிக்க வேண்டும். இந்தப் பாடத்தைப் படிப்பது நம் எதிர்கால வாழ்க்கைக்கு எவ்வளவு இன்றியமையாதது என்ற எண்ணம் மாணவர்கள் மனதில் ஏற்படுமாறு கற்பித்தல் அமைய வேண்டும். பாடத்தின் மூலம் விளக்கப்படும் நற்பண்புகளை மாணவர்கள் ஏற்கும் வண்ணம் கற்பித்தல் அமைய வேண்டும். நற்பண்புகளுக்கு மாறான பண்புகளை மாணவர்கள் கொண்டிருந்தாலும் கற்பித்தலுக்கு பின்னர் அதை உணர்ந்து மாற நினைக்கும் அளவிற்கு கற்பித்தல் அமைய வேண்டும். உதாரணமாக, 9ஆம் வகுப்பில் இடம்பெற்றிருக்கும் **'ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்'** என்ற கலித்தொகைப் பாடலைக் கற்பிக்கும் போது, முதலில் பாடல் இடம்பெற்ற நூலான கலித்தொகையின் சிறப்புகளை எடுத்துரைக்க வேண்டும். எட்டுத்தொகை நூல்களுள் செய்யுள் அமைப்பால் பெயர் பெற்ற இரண்டு நூல்கள் கலித்தொகை மற்றும் பரிபாடல் ஆகும். இதையே,

**நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்**
**கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்**
**உரியதாகும் என்மனார் புலவர் (தொல்.999)**


என்று கலித்தொகை மற்றும் பரிபாடல் நூல்களை தொல்காப்பியம் பாராட்டுவதைக் குறித்து விளக்க வேண்டும். இத்தனை பெருமைகள் கொண்ட ஒரு நூலில் உள்ள ஒரு பாடலைத்தான் நாம் இப்போது கற்கப் போகிறோம் என்ற சிந்தனையை மாணவர்கள் மனதில் விதைத்து பின் கற்பித்தலைத் தொடங்க வேண்டும். இதனால் மாணவர்கள் சங்க இலக்கியங்களின் பெருமிதங்களை அறிந்து கற்கும் வாய்ப்புண்டு. இவ்வாறு, பாடநூலில்

இடம்பெறும் சங்கப்பாடலை மாணவர்கள் படிக்கும் பொழுது தனிப்பட்ட ஒரு பாடலைப் படிக்கும் எண்ணம் தோன்றாமல் ஆயிரக்கணக்கில் சிறந்த விழுமியங்களைக் கொண்ட பாடல்களின் தொகுப்பான சங்கப்பாடல்களில் ஒன்றைப் படிக்கப் போகிறோம் என்ற எண்ணத்தை மாணவர்கள் மனதில் விதைக்க வேண்டும். அதற்கு, சங்கப்பாடல்களின் சிறப்புகளை முதலில் எடுத்துரைத்து பின்னரே பாடநூலில் உள்ள பாடலை விளக்க முற்பட வேண்டும். அகப்பாடல், புறப்பாடல் என்று நேர்த்தியாக அமைப்பு முறையை வகுப்பிற்கு ஏற்ற வகையில் தெளிவாக விளக்க வேண்டும். இத்தனை சிறப்புகளைக் கொண்ட ஒரு பகுப்பிலிருந்து நாம் பாடல் கற்கப் போகிறோம் என்ற எண்ணமே மாணவர்களிடத்தில் அந்தப் பாடலின் சிறப்பைக் கொண்டு சேர்க்கும். திணை, துறை போன்ற செய்திகள் பாடநூலில் இல்லாவிட்டாலும், அவற்றைப் பற்றிய செய்திகளை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவது கூடுதல் கவனத்தை ஏற்படுத்தும். இத்தனை சிறப்புகளைக் கொண்ட சங்க இலக்கியத்தின் அறிமுகமே கற்பிக்கப் போகும் சங்கப்பாடலுக்கு ஆர்வமூட்டும் செயலாக அமைந்து விடும்.

### 2.4.4. துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல்

ஆசிரியரின் கற்பித்தல் என்பது பெரும்பாலும் ஆசிரியர் பேசி மாணவர்கள் கேட்கும் நிலையிலேயே அமைகிறது. அதைத் தொடர்ந்து, ஆசிரியர் தனது கற்பித்தலை மேம்படுத்தும் வகையில் பயன்படுத்தும் சில பொருட்களே துணைக்கருவிகள் எனப்படும். இவ்வாறு ஆசிரியர் பயன்படுத்தும் துணைக்கருவிகளின் மூலம் மாணவர்களின் கற்றல் சிறப்புற அமையும். பொதுவாக மாணவனின் கற்றலில் கேட்டல் 100% எனில் நினைவு கொள்வது 20% ஆகவும் காணல் 100% எனில் நினைவு கொள்வது 30% ஆகவும் கேட்டலும் காணலும் 100% எனில் நினைவு கொள்வது 50% ஆகவும் பேசுவது 100% எனில் நினைவு கொள்வது 80% ஆகவும் பேசுவதும் செயல்படுவதும் 100% எனில் நினைவு கொள்வது 90% ஆகவும் அமைகிறது.

ஆசிரியர்கள் பயன்படுத்தும் பல்வேறு கற்பித்தலுக்கான கருவிகள், பொருள்கள் ஆகியவற்றின் பயன் அளவினைக் கருத்தில் கொண்டு எட்கார்டேல் என்னும் கல்வியாளர் இவற்றை ஒரு கூம்பு வடிவில் சித்திரித்துள்ளார்.




கூம்பின் உச்சியில் குறிக்கப்படுவது மிகக் குறைந்த பயனை அளிப்பதாகவும் கூம்பின் அடித்தளத்தில் குறிக்கப்படுவது மிக அதிகப் பயனை அளிப்பதாகவும் உள்ளது. உச்சியிலிருந்து கூம்பின் அடித்தளத்திற்குச் செல்லச் செல்ல, குறிப்பிட்டுள்ள கற்பித்தல் பொருள்கள் முறைகள் ஆகியவற்றின் பயன் அதிகரித்துக் கொண்டு செல்லும்.

எனவே, ஆசிரியர்கள் கற்பித்தலில் பேசுவதைக் காட்டிலும் காட்சிக் கேள்வி துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல் மாணவர்களை செயலாற்றச் செய்தல் போன்ற பல்வேறு முறைகளைக் கையாளலாம்.

கற்பித்தலின் நோக்கம், பாடக்கருத்துகளின் தன்மை, கற்போனது பின்னணி அறிவு, முதிர்ச்சி ஆகியவற்றின் நிலை, கற்பித்தலுக்கு ஒதுக்கப்பட்டுள்ள காலம், பல்வேறு கருவிகளைப் பயன்படுத்துவதில் ஆசிரியரின் திறமை மற்றும் வகுப்பறை வசதிகள் போன்றவற்றைப் பொறுத்து துணைக்கருவிகளைப் பயன்படுத்துவதில் வேறுபாடுகள் இருக்கலாம். சங்கப் பனுவல்களைக் கற்பிக்கும் போது ஆசிரியர்கள் பெரும்பாலும் கரும்பலகையை மட்டுமே துணைக்கருவிகளாகப் பயன்படுத்துவர். இதனால், மாணவர்களின் கற்றலைக் காட்டிலும் மற்ற துணைக்கருவிகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் கற்றல் மேன்மையானதாக இருக்கும். சங்கப் பாடல்களைக் கற்பிக்கும் அந்தப் பாடல்களை ஒரு வரைபடத் தாளில் எழுதிச் சென்று கற்பிக்கலாம். இதனால், பாடலை சீர்பிரித்து

படித்துக்காட்டுவது எளிதாக இருக்கும். மேலும், பாடநூலில் உள்ளது போல் எழுதாமல் நேரடியாக சீர்பிரித்தே பாடலை எழுதிச் செல்வது மிக உதவியாக இருக்கும். அதுபோல, சங்கப் பாடல்களை இசையுடன் பாடி ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்து, மாணவர்களைக் கேட்கச் செய்யலாம். இதனால், பாடல் மாணவர்கள் மனதில் எளிதில் பதியும் வாய்ப்பு உண்டு. பாடல் தொடர்பான படங்களையோ அல்லது பாடல் ஆசிரியரின் படங்களையோ காட்டலாம்.

கணினியில் ஈடுபாடு உள்ள ஆசிரியர்களாக இருந்தால் கற்பித்தலில் கணிணியைப் பயன்படுத்தலாம். கணினியுடன் கூடிய கற்றலுக்கு மாணவர்களிடத்தில் நல்ல வரவேற்பு உண்டு. ஏனெனில், காணலும் கேட்டலும் இணைந்து கற்பிக்கும் போது மாணவர்கள் ஆர்வத்துடன் கற்கின்றனர். தொழில்நுட்பங்களுடன் இணைந்து கற்பிக்கும் போது அதை மாணவர்கள் வழிமொழிகின்றனர். இன்றைய தொழில்நுட்ப உலகில், சங்க இலக்கிய நிகழ்வுகளை நேரடியாக மாணவர்களிடத்தில் கொண்டு சேர்ப்பதற்கு கணினி மிகவும் உறுதுணையாக இருக்கும்.

மாணவர்களுக்கு வயது மற்றும் அறிவுக்கு ஏற்றவாறு சங்கப்பாடல்களைக் கணினியில் படங்களாகத் திரையிடலாம். அல்லது பல்வேறு வலைதளங்களின் உதவியுடன் உயிரூட்ட படங்களாகவும் திரையிடலாம். இதனால், ஆசிரியரின் வேலை வகுப்பறையில் குறைவதோடு மாணவர்களும் பாடங்களை எளிதில் புரிந்து கொள்வர். இன்றைய சூழ்நிலையில், சங்கப்பாடல்கள் தொடர்பான பல படங்கள், செய்திகள், காணொலிகள் போன்றவற்றை நாம் வலைதளங்களின் மூலம் பெற முடியும். அவற்றை படவீழ்த்தியின் உதவியுடன் நாம் மாணவர்களுக்குக் காட்டலாம். தமிழ் இலக்கியங்கள் பற்றி பேச்சு, பட்டிமன்றம், இலக்கிய உரை போன்றவற்றையும் பதிவிறக்கம் செய்து காண்பிக்கலாம். இதனால், கற்றலில் மாணவர்கள் விருப்பத்துடன் ஈடுபடுவர்.

துணைக்கருவிகள் ஆசிரியர்களால் உருவாக்கப்படுவதாகவும் தேடப்படுவதாகவும் உள்ளது. அதற்கு நேரச்செலவும் பொருட்செலவும் செய்ய வேண்டியுள்ளது. அதனால் துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல் கடினம் என்ற எண்ணமும் சில ஆசிரியர்களிடத்தில் உண்டு. துணைக்கருவிகள் என்பது கற்பிப்பதற்கு உதவும் கருவிகளேயன்றி, கற்பித்தல் என்பது

ஆசிரியர்களால் மட்டுமே நிகழ்த்தக்கூடிய அரிய செயல் என்பதை ஆசிரியர்கள் உணர வேண்டும். எனவே, வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்ற பொன்மொழிக்கேற்ப, மேற்கண்ட துணைக்கருவிகள் இல்லையெனினும், ஆசிரியரின் தனிப்பட்ட திறமையினால் கற்பித்தலைச் சிறப்பிக்க முடியும். ஆசிரியர்கள் பாடலைப் படித்துக் காட்டி மாணவர்களை உடனே படிக்கச் செய்யலாம். இசையுடன் பாடக் கூடிய பாடலாக இருந்தால் முன்னதாகவே மாணவர்களை இசையுடன் பாட பயிற்சியளித்து வகுப்பறையில் பாட வைக்கலாம். சங்கப் பாடல் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பவர்களுக்குப் பரிசுகள் வழங்கி வலுவூட்டலாம். இதுபோன்று, ஆசிரியரின் கற்பித்தலுக்கு மாணவனையே துணைக்கருவியாகப் பயன்படுத்தலாம். இது குறித்த விளக்கங்களை பின்வருமாறு காணலாம்.

### 2.4.5 இசையுடன் பாடுதல்

இசை என்பது நம் வாழ்வில் இரண்டற கலந்த ஒன்றாகும். பிறப்பில் தாலாட்டுப் பாடல் கேட்க ஆரம்பித்து, வாழ்வில் எல்லாப் பகுதியிலும் இசையானது நம் வாழ்வில் ஒன்றாக இருந்து வருகிறது. இசையுடன் கூடிய பாடல்கள் நம் மனதில் மிகச் சுலபமாக இடம்பிடித்து விடுவதோடு நீங்கா இடத்தையும் பெற்றுவிடுகிறது. எனவே, பெரும்பாலும் பள்ளிகளில் அனைத்து வகுப்பிலும் இசையுடன் கூடிய காணொலிக் காட்சிகளைக் காண்பித்து கற்பிப்பது அதிகரித்து வருகிறது. இதில், பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இருந்தே, இசையுடன் பாடல்களைப் பாடி மாணவர்களுக்குப் பாடம் கற்பித்த பெருமை நம் தமிழ் மொழிக்கு உண்டு. மற்ற பாடங்களைக் காட்டிலும், தமிழ் பாடத்தில் இந்த இசையானது இன்றியமையாததாகத் திகழ்கிறது. இயல்பாக உரைநடைப் பகுதியைக் கற்பித்தலுக்கும் செய்யுள் பகுதியைக் கற்பித்தலுக்கும் இடையே உள்ள தனித்தன்மையை வேறுபடுத்திக் காண்பிப்பது இசையே ஆகும். இதன் மூலம் மட்டுமே மாணவர்களிடத்தில் செய்யுள் கற்பித்தலில் ஈடுபாட்டை வரவழைக்க முடியும். உதாரணமாக, 6 மற்றும் 7ஆம் வகுப்பில் இடம்பெறும் சங்க இலக்கியப் பாடல்கள் இரண்டுமே ஒரே மாதிரியான இசையை அமைத்துப் பாடக் கூடிய பாடலாக அமைந்துள்ளது. எனவே, 6ஆம் வகுப்பில் உள்ள பாடலை இசையமைத்து ஒரு புதிய ராகத்தில் பாடிக் கற்று தேர்ந்தால், 7ஆம் வகுப்பில் அதே ராகத்தை வைத்து அப்பாடலை மாணவர்களே பாடக்கூடிய வாய்ப்பு கிடைக்கும். இவ்வாறு, சங்க இலக்கியச் செய்யுள்களைக் கற்பிப்பதற்குரிய

சூழ்நிலையமைத்தப் பின்னர், அதனை முதன் முதல் அறிமுகப்படுத்தும்போது இசையுடன் பாடுதல் சிறந்தது. உரைநடையைப் படிப்பது போல் படித்தால் சொற்களின் ஒலி நயத்தினை மாணவர்கள் உணர முடியாது. இசையுடன் பாடுதலில் தகுந்த திறமை தமக்கில்லையென ஆசிரியர் கருதினால் சீர் பிரித்துச் சந்த அமைப்போடு குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்துக் காட்ட வேண்டும். அல்லது இசையுடன் பாடப்பட்ட ஒலிநாடாக் கருவிகளைப் பயன்படுத்தலாம். இசையுடன் கூடிய காணொலிகளையும் பயன்படுத்தலாம். வசதியிருப்பின் மாணவர்களில் ஒருவரைப் பாடச் செய்து ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்து வகுப்புக்குக் கொண்டு வந்து அனைத்து மாணவர்களையும் கேட்கச் செய்யலாம். அப்பொழுதான் உரைநடையினின்றும் அது வேறுபட்டது என்பதனை மாணவர்கள் உணர்வர். இவ்வாறு இரண்டு மூன்று தடவைகள் படித்தல் அல்லது பாடுதல் நன்று. பின்னர், பாடலில் உள்ள கடும் புணர்ச்சிச் சொற்களைப் பிரித்தும் பொருள் விளங்கும் பகுதியில் நிறுத்தியும் படித்துக் காட்டுதல் வேண்டும். சங்கப்பாடல்கள் அனைத்தையும் இவ்வாறு இசை பாடுதல் என்பது சாத்தியமாகாது என்றாலும் பரிபாடல், கலித்தொகை போன்ற பாடல்களை இசையுடன் அமைத்துப் பாடி நடத்துதல் சிறந்தது. **தமிழ்பாக்கள் ஓசை நயம் கொண்டவை. அந்தந்தப் பாக்களுக்கு உரிய ஓசையோடு அவற்றைப் படிக்க வேண்டும். ஆகவே, ஆசிரியர் செய்யுளை இனிய இசை நயத்தோடு படித்துக் காட்டி பின் பாடிக் காட்டி பாடலின் சந்தத்தை அறியச் செய்ய வேண்டும்”**[18] செய்யுளின் கருத்தையும், நயத்தினையும் மாணவர்கள் நன்குணர்ந்த பின்னர் மீண்டும் இசையுடன் பாடிக் காட்டுதல் வேண்டும். மாணவர்களையும் தொடர்ந்து பாடச் செய்தல் வேண்டும். பின்பு அவர்கள் தாமே படித்துப் பாடி மகிழ்வர்.

### 2.4.6 குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்தல்

கற்பிக்கவிருக்கின்ற பாடலின் கருத்தினையறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தையெழுப்பும் அளவிற்கு, ஆசிரியர் அந்தப் பாடலை நன்முறையில் படித்தோ அல்லது பாடியோ காட்ட வேண்டும். ஆனால், இந்த செயல்முறையில் பாடலின் நயம் எவ்விதத்திலும் குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். மாறாக, உரைநடையைப் படிப்பது போல் படித்தால், சொற்களின் ஒலி நயத்தினை மாணவர்களால் உணர முடியாது. இதில், சங்கப்பாடலின் ஓசை, பொருள், எதுகை, மோனை, பா, அணி ஆகிய அனைத்தையும் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

இவை அனைத்தையும் ஆசிரியர் மனதில் கொண்டு பாடலைச் சீர் பிரித்துச் சந்த அமைப்போடு குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்துக் காட்ட வேண்டும். அப்பொழுதுதான், மற்ற செய்யுள் பாடல்களிலிருந்து சங்கப்பாடல் எவ்வளவு வேறுபட்டிருக்கிறது, தனித்தன்மை பெற்றுள்ளது என்பதை மாணவர்கள் உணர முடியும். இந்த திறமை தன்னிடம் இல்லை என ஆசிரியர் கருதினால், மூத்த ஆசிரியர்களைப் படிக்கச் சொல்லிக் கேட்டு அந்த முறையைப் பின்பற்றலாம். இவ்வாறு இரண்டு மூன்று முறை படித்தல் நன்று. பின்னர் பாடலில் உள்ள கடும் புணர்ச்சி விதிகளுக்குட்பட்ட சொற்களைப் பிரித்தும் பொருள் விளங்கும் பகுதியை விளக்கியும் படித்துக் காட்டுதல் வேண்டும். எனினும், குரல் ஏற்றத்தாழ்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பொருட்டு, பாடலைச் சொல்லாகப் பிரித்துப் படித்து விளக்கம் சொல்வதையே முதன்மையான வேலையாகக் கொள்ளுதல் கூடாது. **“பண்டைக்கால முறைப்படி சொல் சொல்லாகப் பிரித்து உரை கூறுவதும், பின்பு அச்சொற்பொருள் அனைத்தையும் சேர்த்துப் பொழிப்புரை கூறுவதும் சிறந்தவையல்ல. செய்யுளின் கருத்துணர்தலுக்கு இவை தேவை எனினும், பதவுரை பொழிப்புரை கூறுவதை மட்டும் முதன்மையாகக் கருதாமல், பாடலின் மற்ற உணர்ச்சிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் பொருட்டு கற்பித்தல் வேண்டும்”** [19]**.** எனவே, பாடலின் கருத்துணர்தல், நயம் அறிதல், சுவையுணர் திறன் வளர்த்தல், உணர்ச்சியில் ஒன்றுபடுதல், படித்து படித்து மகிழ்தல் போன்ற நோக்கங்கள் நிறைவேறும் வண்ணம் கற்பித்தல் வேண்டும். மாணவர்களுக்குப் படிக்கும் முறையைக் கற்பித்தலோடு, குறிப்பிட்ட பாடலில் இடம்பெறும் கடினஒலிப்புச் சொற்களை ஆசிரியர் ஒலித்துக் காட்டி, மாணவர்களை மீண்டும் மீண்டும் ஒலிக்கச் சொல்லிக் கேட்க வேண்டும். நேரமிருப்பின் ஒவ்வொரு மாணவர்களையும் தனித்தனியாகப் படிக்கச் சொல்லி திருத்தலாம். அல்லது ஒலிப்புப் பிழை ஏற்படும் மாணவர்களை மட்டும் படிக்கச் சொல்லித் திருத்தலாம். இதனால், மாணவர்கள் ஒலிப்புப் பிழையின்றிப் படித்துப் பாடலின் பொருளை அறிந்து கொள்வர்.

இன்றைய மாணவர்களில் பெரும்பாலானவர்களிடம் படிக்கும் போது ஒலிப்புப் பிழை ஏற்படுகிறது. இதனால், படிப்பதில் பிழை ஏற்பட்டு பொருள் அறிவதில் குழப்பம் ஏற்படுகிறது. இதனால், படிப்பதில் ஆர்வம் குறைகிறது. மேலும், சங்கப்பாடல்களில் பழஞ்சொற்களும் கடினஒலிப்புச் சொற்களும் மிகுந்து காணப்படுவதால், ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எழுத்துகள்

பிறக்கும் முறையையும் வாயில் எழுத்துகள் நுழைந்து ஒலிக்கும் முறையையும் கற்பிப்பது அவசியமாகிறது. பெரும்பாலும், தொடக்க வகுப்புகளில் மட்டும் இந்தப் பயிற்சியை மேற்கொண்டு பின் கைவிட்டுவிடுகின்றனர். ஆனால், வகுப்புகள் கூடும் அளவிற்கு மாணவர்களின் படித்தல் பயிற்சியும் அதிகரிக்கிறது. இதனால், எந்த வகுப்பாக இருந்தாலும், ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எழுத்துகள் பிறக்கும் இடங்களையும், ஒலிக்கும் முறையையும் மீண்டும் மீண்டும் கற்பித்தல் அல்லது நினைவூட்டுதல் இன்றியமையாதாகும். இதனால், மாணவர்கள் தடுமாறி செய்யும் ஒலிப்புப் பிழைகளும் குறையும் வாய்ப்புண்டு.

### 2.4.7. நடித்துக் காட்டுதல்

சங்க இலக்கியப் பாடல்கள் ஒவ்வொன்றும் நிகழ்ச்சியின் அடிப்படையில் தோன்றிய பாடல்கள் ஆகும். கவிஞரின் ஒரு குறிப்பிட்ட உணர்ச்சியில் உருப்பெற்றிருக்கும். அச்சூழ்நிலையையும் உணர்ச்சியையும் நேரடியாக மாணவர்கள் உணரும் வகையில் அந்தப் பாடல்களைக் கற்பித்தால் மட்டுமே சங்க இலக்கியப் பாடல்களின் தனித்தன்மையை மாணவர்கள் முழுமையாக உணர முடியும். அதற்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட பாடலைக் கவிஞர் எந்தச் சூழ்நிலையில் பாடினாரோ அந்தச் சூழ்நிலைக்கு மாணவர்களைக் கொண்டு சேர்க்க வேண்டும். சங்க இலக்கியப்பாடல்கள் அனைத்தும் கூற்றாகவோ, அல்லது உணர்ச்சியை வெளிப்படுத்துவனவாகவோ அமையும். அகப்பாடல்கள் தனிக்கூற்றாகக் கொண்ட நாடகங்களாக அமையும். மேலும், கலித்தொகைப் பாடல்கள் முழுதும் நாடகங்களாகவே அமையும் பொருட்டு, ஆசிரியர்கள் அவற்றை வாசிப்பதோடு நின்று விடாமல், அந்த கதை மாந்தராகவே மாறி, அந்த கருத்தைக் கூறலாம். அல்லது, பாடம் நடத்திய பின்னர், மாணவர்களுடன் சேர்ந்து அதை நாடகமாக நடத்தலாம். இவ்வாறு, சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பதற்கு இந்த உத்தி மிகச்சிறந்தாகக் கருதப்படுகிறது. இவ்வாறு, ஆசிரியர் கவிஞராகவோ, அல்லது பாடல் பாடப்பட்ட சூழ்நிலையில் உள்ள முக்கிய கதாபாத்திரமாகவோ தனது நிலையை மாற்றி அதற்கேற்ப முழு மனதுடன் பாடலைப் படித்துக் காட்ட வேண்டும். அப்பொழுதுதான், மாணவர்களிடம் முழுமையான ஈடுபாட்டை ஏற்படுத்த முடியும். இதற்கு ஆசியரியரின் நடித்தல் திறன் முக்கிய பங்கு வகிக்கும். ஆசிரியர்களின் நடிப்புத்திறனே சங்கப்பாடலை முழுமையாக மாணவர்களிடத்தில் கொண்டு சேர்க்கும்.

நடிக்கும் திறன் இல்லை என நினைப்பவர்கள் மாணவர்களிலேயே ஒரு சில மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, சூழ்நிலையை விளக்கி அதற்கேற்ப நடிக்கச் சொல்லி ஆசிரியர்கள் அதற்கேற்ப குரல் எழுப்பி பாடலை விளக்கலாம். இது ஒரு சிறந்த முறையாகும். பொதுவாக இம்முறை எல்லா சங்க இலக்கியப் பாடல்களுக்கும் பொருந்தும். இம்முறையைக் கையாள்வதின் மூலம் மாணவர்களுக்குச் சங்க இலக்கியப் பாடல்களில் மட்டுமல்லாது சங்க காலச் சூழ்நிலைகளின் மீதும் ஈடுபாடு ஏற்பட வாய்ப்புண்டு.

### 2.4.8 மாணாக்கரைப் பங்கெடுக்கச் செய்தல்

சங்கப் பாடல்கள் கற்பித்தலின் முழு வெற்றி மாணவர்களை மட்டுமே சார்ந்துள்ளது. எனவே, பெரும்பாலும் மாணவர்களை ஈடுபடுத்தும் பொருட்டே நமது கற்பித்தல் இருக்க வேண்டும். சங்கப்பாடல்களைக் கற்பித்தலில் பயன்படுத்தும் நடித்தல், பாடுதல், பேசுதல் போன்ற உத்திகளுக்கு மாணவர்களில் திறன் மிகுந்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்து கற்பித்தலுக்கு முன்னதாகவே பயிற்சி கொடுத்து வகுப்பில் கற்பித்தலில் அவர்களை பேச வைத்தோ, நடிக்க வைத்தோ கற்பிக்கலாம். இதனால், மாணவர்களுக்கு அதிக ஆர்வம் ஏற்படும். அல்லது கற்பித்தலுக்குப் பின், மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து சங்கப்பாடலின் சூழ்நிலையை நாடகமாக நடித்து பாடலைப் பாடிக் காட்டச் சொல்லலாம். இதனால், சங்கப்பாடல்களின் சூழ்நிலையை மாணவர்கள் நன்கு புரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். பொதுவாகவே பள்ளிகளில் ஆசிரியர்கள் சங்கப்பாடல்களைக் கற்பிக்கும் போது, மாணவர்களின் சிந்தனைக்கு மட்டுமே வேலை ஒதுக்கப்படுகிறது. இதற்கு மாறாக, மாணவர்களின் புலன்களுக்கும் வேலைகளை ஒதுக்க வேண்டும். சங்கப்பாடல்களைக் கற்பிக்கும் போது, பாடலில் இடம்பெறும் பழஞ்சொற்களை மாணவர்களை அடிக்கோடிடச் செய்யலாம். பழஞ்சொற்களுக்கு மீது அதற்கான பொருளை எழுதச் சொல்லலாம். சீர்பிரித்து படிக்கும் போது அதற்கான இடங்களில் கோடிடச் செய்யலாம். கரும்பலகையில் எழுதவோ அல்லது வரையவோ செய்ய மாணவர்களையே பயன்படுத்தலாம். கற்றலுக்குப்பின் மாணவர்களையே அவர்களுடைய சொந்த சிந்தனையில் மனவரைபடம் அல்லது கருத்து வரைபடம் வரையச் சொல்லலாம். பாடலுக்கேற்ற சூழ்நிலையை விளக்கி, மாணவர்களை நாடகமாக நடிக்க வைக்கலாம். இவ்வாறு, கற்பித்தலின் போது ஆசிரியர் தனித்து செயல்படாமல் மாணவர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

இதனால், மாணவர்கள் முழு ஈடுபாட்டுடன் கற்றலில் ஈடுபடுவர். ஆசிரியரின் வேலைப் பளுவும் குறையும். மேலும், கற்பித்து முடித்த பின்னர், மாணவர்களுக்கு வீட்டு வேலைக் கொடுக்கும் போது, பண்டையக் கால முறைப்படி, பாடலைப் பார்த்து எழுதுவதாகவோ வினாக்களுக்கு விடை எழுதுவதாகவோ அமையாமல் பாடலுக்கேற்ற கருத்துப்படம், மனவரைபடம், விளக்கப்படம் வரைதல், அல்லது பாடலுக்கேற்ற நயமுள்ள தொடர்கள், எதுகைத் தொடர்கள், மையக் கருத்து தொடர்கள் எழுதுதல், அல்லது பாடல் சம்பந்தப்பட்ட வேறு பாடல்களைக் கண்டறிதல் போன்று அமையலாம். இந்த வேலைகளை அனைத்து மாணவர்களுக்கும் சமமாகக் கொடுக்காமல் அவரவர் திறமைக்கேற்ப தனித்தோ அல்லது குழுவாகவோ வெவ்வேறு வேலைகளைச் செய்ய அனுமதி வழங்கலாம். **‘தெளிவு, வேகம் பெற வீட்டுப்பயிற்சி உதவவல்லது. தன்னம்பிக்கையும் வளரும் படித்தல் மற்றும் எழுதுதல் திறன் வளரும்’** [20]. தன்னுடைய விருப்பப்படி செய்வதால் மாணவர்களுக்குச் செயலின் மீது தனிப்பட்ட ஈடுபாடு ஏற்படும். இதனால், சங்கப்பாடல்களைக் கற்பது மட்டுமல்லாமல் மேலும் பாடல்களைத் திரட்டிப் படிப்பதிலும் ஆர்வம் ஏற்பட வழி வகுக்கும்.

### 2.4.9. நினைவூட்டுதல்

சங்கப்பாடல்கள் பெரும்பாலும் கருத்தால், ஓசையால், பொருளால், கதை மாந்தர்களால், புலவர்களால் ஒன்றுபட்டு இருப்பதை நம்மால் காணமுடிகிறது. இந்நிலையில், மாணவர்களுக்கு சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் போது, கற்பிக்கவிருக்கும் பாடல் தொடர்பான செய்திகளையோ, பாடல்களையோ மாணவர்கள் ஏற்கனவே அறிந்திருக்கும் வாய்ப்பு இருப்பின், அதை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் நினைவூட்டுதல் இன்றியமையாததாகும். உதாரணமாக, பொருட்சுவையோ அல்லது சொற்சுவையோ உள்ள பாடலைக் கற்பிக்கும் போது, அதே போல சுவை கொண்ட பாடல்களை நினைவூட்ட வேண்டும். அந்த வகையான பாடல்களை மாணவர்கள் முன் வகுப்பிலோ அல்லது வேறு பகுதியிலோ படித்திருக்கும் வாய்ப்புண்டு. இவ்வகையில், 6ஆம் வகுப்பில் இடம்பெறும் சங்க இலக்கியப்பாடலும் 7ஆம் வகுப்பில் இடம்பெறும் சங்க இலக்கியப் பாடலும் இசையால், கருத்தால், படிக்கும் திறனால் பெருமளவில் ஒன்றுபட்டு வருவதை நாம் பார்க்க முடிகிறது. இந்நிலையில் அதை நாம் நினைவூட்டும் போது, அந்தச் சுவையின் சிறப்பை

மாணவர்கள் அறிந்து கொள்வார்கள். இதனால், சங்கப்பாடல்களின் சிறப்பை நன்கு உணர முடியும். மேலும், ஏற்கனவே படித்த பாடல்களை நினைவுக்கூறும் போது, அதே ஆர்வத்தில் இப்போது கற்கவிருக்கும் பாடலிலும் ஒரு ஈடுபாடு ஏற்படும். இதனால், ஆசிரியருக்கும் கற்பித்தல் சுலபமானதாக இருக்கும். அதுபோல, தற்போது கற்கவிருக்கும் பாடலோடு அல்லது கருத்தோடு ஒத்த பாடல்களையோ அல்லது செய்திகளையோ அல்லது கருத்துகளையோ மாணவர்கள் ஏற்கனவே படித்திருக்கும் வாய்ப்பிருப்பின் அதை நினைவூட்டுதல் வேண்டும். மேலும், புறப்பாடல்கள் மற்றும் அகப்பாடல்கள் பற்றிய பொதுக் கருத்துகளை ஒவ்வொரு வகுப்பிலும் நினைவூட்டல் இன்றியமையாததாகும். ஏற்கனவே படித்திருப்பார்கள் என்ற நம்பிக்கையில் விட்டுவிடாமல் அதை மீண்டும் நினைவூட்டுதல் கற்பித்தல் சிறக்க வழிவகுக்கும்.

### 2.4.10. ஒப்புமைப்படுத்திக் கற்பித்தல்

சங்கப்பாடல்கள் அனைத்தும் ஏதோ ஒரு சூழ்நிலையைப் பின்பற்றி வருவதால், இது போன்ற சூழ்நிலைகளையும் இன்றைய வாழ்க்கை முறையோடு ஒப்பிட்டு பாடல்களை நடத்த வேண்டும். பெரும்பாலும், தலைவன், தலைவியாக வரும் கதாபாத்திரங்களை மாணவர்களிடம் திரையிடும் போது, தலைவனைத் தந்தையாகவும் தலைவியைத் தாயாகவும் பாவித்துக் காட்சிப்படுத்தும் போது, பாடலின் கருத்தில் இருந்து மாணவர்களை வெளியேற விடாமல், கற்றலில் முழுமனதைச் செலுத்த முடியும். பாடநூலில் இடம்பெறும் சங்கப்பாடலுக்கும் பாடநூலில் இடம்பெறும் வேறு ஏதேனும் பாடத்திற்கும் ஏதேனும் சிறு ஒப்புமை இருந்தாலும் அதை மிகைப்படுத்திக் கற்பிக்க வேண்டும். இதனால், மாணவர்கள் சம்பந்தப்பட்ட பாடத்தைப் படிக்கும் போதும் சங்கப்பாடலின் நினைவு ஏற்படும். சங்க இலக்கியப் பாடல்கள் அனைத்தும் ஒரு பண்புநலனையோ, ஒரு நிகழ்ச்சியையோ, ஒரு கருத்தையோ மையப்படுத்திப் பாடல்களாக இருக்கும். அவ்வாறு கற்பிக்கும் போது, அரசனின் மேன்மையை விளக்கும் புறநானூற்றுச் செய்யுளாக இருந்தால் அரசனைத் தலைவனாகப் பாவித்து நம் நாட்டில் வாழ்ந்த மிகச் சிறந்த தலைவர்களைக் கருத்துக்கு ஏற்ப ஒப்புமைப் படுத்திக் கற்பிக்கலாம். நிகழ்ச்சிகள் தொடர்பான செய்திகளாக இருந்தால், அதனோடு தொடர்புடைய செய்திகளை ஒப்புமைப்படுத்திக் கற்பிக்கலாம். உதாரணமாக, 6ஆம் வகுப்பில் இடம்பெறும் சங்க இலக்கியப்

பாடல்களைத் தொடர்ந்து கொடுக்கப்பட்டிருக்கும் உரைநடையும் துணைப்பாடமும் தொடர்புடைய பாடங்களாகவே அமைந்துள்ளன. இவற்றை மாணவர்களுக்கு எடுத்தியம்பி கற்பித்தல் வேண்டும். இதனால், சங்க இலக்கியப் பாடங்களைப் பிற பாடங்களுடன் அவர்களே ஒப்புமைப்படுத்தி படிப்பதில் ஆர்வம் ஏற்படும். இதனால் கற்பனைத் திறன் அதிகரிக்கும். சங்கப்பாடல்களோடு மட்டுமல்லாமல், பாடல்களின் கருத்துகளோடு ஒட்டியிருக்கும் வேறு சில பாடல்கள், கதைகள், கருத்துகள், நிகழ்வுகள், செய்திகள் போன்றவற்றை ஒப்புமைப்படுத்தி கற்பித்தல் இன்றியமையாதது. இவ்வாறு ஒப்புமைப்படுத்திக் கற்பிக்கும் போது சங்கப்பாடல்களின் கருத்துகளை ஆழமாக உணர்ந்து கற்பர். இதனால், சங்கப்பாடலின் மீது ஒரு ஈடுபாடு ஏற்படுவதோடு, மேலும் சங்கப்பாடல்களைத் தேடிப் படிக்கவும் படிக்கும் கதைகள், கருத்துகள், செய்திகள், பார்க்கும் நிகழ்வுகளோடு, தான் படித்த சங்கப்பாடல்களை இணைத்துப் பார்க்கும் எண்ணமும் ஏற்படும். பின்பு, சங்கப்பாடல்கள் மாணவர்களின் வாழ்வோடு இரண்டற கலந்துவிடும்.


### 2.4.11 தொடர்புடைய செய்திகள், புராண நிகழ்வுகள், வரலாறுகள் ஆகியவற்றைக் கூறுதல்

சங்கப்பாடல்களில் இடம்பெறும் அரசர் மற்றும் புலவர்களைப் பற்றிக் கற்பிக்கும் போது, பாடலில் இடம்பெறும் செய்திகளை மட்டும் கூறாமல் அதில் இடம்பெறும் கதாபாத்திரங்களைப் பற்றிய பல செய்திகளை மாணவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். மேலும், சங்கப்பாடல் இடம்பெற்றிருக்கும் சூழ்நிலையை மட்டும் குறிப்பிடாமல், அதற்கு முன்பின் உள்ள சூழ்நிலைகளையும் மாணவர்களுக்குத் தெரிவிப்பது அவசியமாகும். எல்லா சங்க இலக்கியப் பாடல்களும் ஏதேனும் ஒரு பின்னணியைக் கொண்டே பாடப்பட்டிருக்கும். அதனால், பாடல் பாடப்பட்ட புலவர்களின் வரலாறு, சங்க இலக்கியத்தில் இடம்பெறும் மன்னர்களைப் பற்றிய செய்திகள், போன்றவற்றை அறிந்திருத்தல் இன்றியமையாதது. உதாரணமாக, 11ஆம் வகுப்பில் இடம்பெறும் **'ஓங்குமலைச் சிலம்பில் பிடவுடன் மலர்ந்த'** என்ற பாடலைக் கற்பிக்கும் போது, அப்பாடலை எழுதிய ஔவையாரைப் பற்றி விளக்கும்போது, அதியமான் நெல்லிக்கனி வழங்கிய நிகழ்ச்சியையும் அதியமானுக்கும் ஔவையாருக்கும் இடையே இருந்த நட்பின் மேன்மையையும் விளக்கலாம். அப்பாடல் அகநானூறு நூலில்

இருந்து இடம்பெற்றுள்ளது. அதனால், அந்நூல் அன்பின் ஐந்திணைகளின் இலக்கணமாக திகழ்வதைப் பற்றியும் நெடுந்தொகை என்று அழைக்கப்படும் பெருமையையும் மணவாழ்க்கையாகவும் மனை வாழ்க்கையாகவும் பெறும் சிறப்பு பற்றியும் விளக்குவது சிறந்ததாக இருக்கும். மேலும், சங்கப்பாடல் எழுதப்பட்ட காலம் மற்றும் வரலாற்றைப் பற்றியும் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு தெரிவிக்கும் தகவல்களில் ஆசிரியர் தெளிவுடன் இருப்பது அவசியமாகும். ஏனெனில், இதில் மாணவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை உடனுக்குடன் தெளிவுபடுத்த வேண்டியது ஆசிரியரின் கடமையாகக் கருதப்படுகிறது. இதில் ஏதேனும் தடுமாற்றம் ஏற்படின் மாணவர்களுக்கு ஆசிரியர் மீது மட்டுமல்லாது, சங்கப்பாடல்களின் மீதும் நம்பிக்கை குறைய வாய்ப்புள்ளது. எனவே, ஆசிரியர்கள் கொடுக்கப்பட்ட பாடநூலில் இடம்பெறும் சங்கப்பாடல்கள் மட்டுமல்லாமல் அது தொடர்புடைய பல பாடல்கள், செய்திகள், வரலாற்று நிகழ்வுகள் ஆகியவற்றை அறிந்து வைத்திருத்தல் சிறந்தது. மேலும், பாடக் கற்பித்தலுக்குத் தயாராகும் போது, அவற்றை எந்த முறையில் மாணவர்களிடத்தில் கொண்டு சேர்க்க முடியும். எப்படி கொண்டு சேர்க்க முடியும் என்பதையும் முன்கூட்டியே சிந்தித்து தயார் செய்து கொள்ளுதல் நல்லது.


### 2.4.12. எளிய படங்கள் வரைதல்

ஆசிரியர்கள் சங்கப்பாடல்களைக் கற்பிக்கும் போது, மாணவர்களின் எண்ணம் சிதைவுறாமல் காப்பது இன்றியமையாததாகும். ஏனெனில், மாணவர்களின் ஈடுபாடு முழுமையாக இருந்தால் மட்டுமே கற்பித்தல் சிறப்படையும். எனவே, ஆசிரியர்கள் மாணவர்களின் எதிர்பார்ப்பைத் தூண்டும் வகையில் கற்றலில் மாற்றங்களைச் செய்துகொண்டே இருக்க வேண்டும். சங்கப்பாடல்களைக் கற்பிக்கும் போது, அதில் வரும் அரசர், புலவர் போன்றவர்களின் பெயர்களை எழுதுவதற்கும் நூல்களின் பெயர்களை எழுதுவதற்கும் கரும்பலகையைப் பயன்படுத்துவது இயல்பாகும். இதிலிருந்து சற்று விலகி, பாடலில் இடம்பெறும் சொற்களுக்கு ஏற்றவாறு படங்கள் வரையவும் கரும்பலகையைப் பயன்படுத்தலாம். மரம், ஆயுதம், மலை, போன்ற சிறு படங்களையும் பாடலுக்கேற்றவாறு வரையலாம். உதாரணத்திற்கு புன்னைமரம் என்ற சொல் இடம்பெறும் போது புன்னைமரம் என்ற சொல்லை மட்டும் எழுதாமல் இணையாக ஒரு மரம் படத்தையும் வரையலாம்.





புன்னைமரம்

இது போன்று மயில், மலை, அரண்மனை, அரசன் போன்ற சிறுசிறு படங்களை வாய்மொழியாக மட்டுமல்லாமல் கரும்பலகையிலும் வரையலாம்.



தலைவன் தலைவி என்று சொற்களால் கூறுவதைக் காட்டிலும், தலைவனையும் தலைவியையும் சிறு சிறு பொம்மைகளாக வரைந்து, அவர்களுடைய உரையாடல்களை மேகக்குறியீட்டினுள் எழுதலாம்.

சிந்தனை எளியதாக இருந்தாலும் அது மாணவர்களிடத்தில் கற்பித்தலில் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தும். மேலும், பாடலின் பொருளுக்கேற்றவாறு மனவரைபடம், கருத்துப்படம் ஆகியவையும் வரையலாம். ஆனால் ஒவ்வொரு வகுப்பிலும் மனவரைபடத்தின் வடிவத்தில் வேறுபாடுகள் இருப்பது நல்லது. இதனால், படிப்பதும் எளிமையடையும். கற்பதிலும் ஆர்வம் ஏற்படும். சிந்தனை சிதைவடையாமல் இருக்கும்.

### 2.4.13 விளையாட்டு முறையில் கற்கத் தூண்டுதல்

பொதுவாக, பள்ளியின் தொடக்க நிலை வகுப்புகளில் விளையாட்டு முறைக் கற்பித்தலை அதிக அளவில் பயன்படுத்துவார்கள். பின்பு, வகுப்புகள் கூடும் அளவிற்கு விளையாட்டு முறைக் கற்பித்தலும் குறைந்து

வருகிறது. இருப்பினும், குழந்தைகளுக்கு விளையாட்டு முறைக் கற்பித்தலில் உள்ள ஆர்வம் குறைவதில்லை. எனவே, இந்த விளையாட்டு முறைக் கற்பித்தலை மாணவர்கள் அதிகம் விரும்புகின்றனர். அதனால், விளையாட்டு முறையில் கற்பித்தலை கருத்துடனும் நம்பிக்கையுடனும் திறமையுடன் கையாண்டால் நல்ல பயனை எதிர்பார்க்கலாம். மற்ற கற்பித்தல் முறைகளைக் காட்டிலும், இந்த விளையாட்டு முறைக் கற்பித்தலை நாம் பயன்படுத்தும் போது மாணவர்கள் அதீத விருப்பத்துடன் கற்றலில் ஈடுபடுவர். **“மாணாக்கர்தம் திறமைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப, ஆசிரியர்கள் பல மொழி விளையாட்டுகளை அமைத்து மாணாக்கர் சொற்களஞ்சியத்தையும் மொழித் திறனையும் வளர்த்தல் வேண்டும்.”[21]** சங்கப்பாடல்களைக் கற்பிக்கும் போது, மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, சங்கப்பாடல்களில் உள்ள பழஞ்சொற்களுக்குப் பொருள் எழுதச் சொல்லலாம். அதிக சொற்களுக்குப் பொருள் எழுதிய குழுவினரைப் பாராட்டலாம். இதே போன்று, பாடலில் இடம்பெறும் ஒரே ஓசையுடைய சொற்கள், ஒரே எழுத்தில் தொடங்கும் சொற்கள், எதுகைச் சொற்கள், மோனைச் சொற்கள் போன்றவற்றையும் எழுதச் சொல்லலாம். கற்பித்தல் முடித்தபின், பாடலின் சூழ்நிலையை நாடகமாக நடித்துக் காட்டச் சொல்லி, சிறப்பாக நடித்த குழுவினரைப் பாராட்டலாம். பாடலையும் பாடல் சம்பந்தப்பட்ட செய்திகளையும் படித்து வரச் சொல்லி பின், இரு குழுவாகப் பிரித்து வினாடி-வினா போன்ற நிகழ்ச்சியை நடத்தி கேள்விகள் கேட்டு, வெற்றி பெற்ற குழுவினரை அறிவிக்கலாம். இதே போன்று, பாடலை சரியான குரல் ஏற்ற இறக்கத்துடன் படித்துக்காட்டுதல், பாடலுக்கு விளக்கம் கூறுதல், பாடலில் இடம்பெறும் முக்கிய சுவைகள், செய்திகளை எடுத்துக் கூறுதல் போன்ற பல வகைகளில் போட்டிகளை வைத்து அதன் மூலம் மாணவர்களை கற்பித்தலில் மேம்படுத்தலாம்.


### 2.4.14 நாட்டுநடப்புச் செய்திகளை அறிந்து கூறுதல்


ஆசிரியர்கள் நாட்டு நடப்பு மற்றும் அன்றாட செய்திகளை உடனுக்குடன் அறிந்து வைத்திருப்பது அவசியமாகும். அறிந்து வைத்திருப்பது மட்டுமல்லாமல், சங்கப்பாடல்களைக் கற்பிக்கும் போது அந்தப் பாடலுக்கு ஏற்ற செய்திகளைக் கலந்து கற்பிக்க வேண்டும். மேலும், இன்றைய நாட்களில் நடந்த நிகழ்ச்சிகளுக்கு ஏற்றவாறு ஏதேனும்

சங்கப்பாடல்கள் இருப்பின் அதையும் மாணவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இதனால், ஆசிரியர்களின் மீது மாணவர்களுக்கு மிகுந்த நம்பிக்கை ஏற்படுவதுடன், சங்கப் பாடல்கள் படிப்பதிலும் மிகுந்த ஆர்வம் ஏற்படும். சங்கப்பாடல் என்பதால், தமிழ் பாடம் சம்பந்தப்பட்ட செய்திகளை மட்டும் கூறாமல் மாறாக, அதோடு சம்பந்தப்பட்ட அறிவியல், பொது அறிவு, விளையாட்டு போன்ற செய்திகளையும் இடையிடையே கற்பித்தலுக்கு ஏற்ப கூறலாம். இவ்வறிவு தமிழாசிரியரிடம் பொதுவாக ஏற்படக்கூடிய தாழ்வு மனப்பான்மை உணர்ச்சியைப் போக்கும். ஆசிரியர்கள், அவ்வப்போது தொலைக்காட்சிகள் பார்த்தல், செய்திதாள்கள் படித்தல், சிறந்த சொற்பொழிவுகள் கேட்டல், நூல்கள் படித்தல் போன்ற செயல்களின் மூலம் தம் பொது அறிவை வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

### 2.4.15. பள்ளிச் சூழலில் அமைந்துள்ள பொருள்களைப் பயன்படுத்தல்

சங்கப்பாடல்களைக் கற்பிக்கும் போது சூழ்நிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தினால் மாணவர்கள் கற்றலில் ஆர்வம் ஏற்படும். எப்போதும் போல், வகுப்பில் மட்டும் ஆசிரியர் பாடம் நடத்துவதை மாணவர்கள் விரும்புவதில்லை. பொதுவாக, இன்றைய மாணவர்கள் கணினித் திரையில் பாடம் நடத்துவதை விரும்புகின்றனர். எனவே, சங்கப்பாடலுக்கு ஏற்ற படப்பதிவுகளை மாணவர்களுக்குக் கணினித் திரையில் போட்டுக் காட்டலாம். இதனால், கற்றல் மாற்றம் நிகழ்ந்து, மாணவர்கள் கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபடுவர். மேலும், மாணவர்களை மகிழ்ச்சியூட்டும் வகையில் சங்கப் பாடல்களின் சூழ்நிலைக்கு ஏற்ப பள்ளியில் உள்ள இடங்களில் வகுப்பறையை மாற்றி, பாடலைக் கற்பிக்கலாம்.





சங்க இலக்கியப் பாடலில் மரத்தின் அடியில் நின்று தலைவன் தலைவி பேசுவதான சூழல் இருப்பின், அன்றைய வகுப்பறைச் சூழலுக்கு பள்ளிகளில் உள்ள மரத்தடிகளைக் கூட இதற்காகப் பயன்படுத்தலாம். இதனால், பள்ளியின் பால் பற்றுதல் ஏற்படுவதோடு கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபடுவர். சங்கப்பாடல் சம்பந்தப்பட்ட நூல்களைப் பள்ளி நூலகத்தில் இருந்து எடுத்து மாணவர்களைப் படிப்பதற்கு ஊக்குவிக்கலாம். இதற்கு, தமிழ் பாடவேளையையும் பயன்படுத்தலாம். இவ்வாறு, பள்ளிகளிலேயே கிடைக்கும் சூழ்நிலைகள் மற்றும் பொருட்கள் போன்றவற்றைக் கற்பித்தலுக்குப் பயன்படுத்த பழக வேண்டும்.

### 2.4.16. அறிந்ததிலிருந்து அறியாததற்குச் செல்லுதல்

இயல்பாகவே, சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பிக்கும் போது, ஆசிரியர்கள் முதலிலேயே சங்கப்பாடல்களை அறிமுகம் செய்வதைத் தவிர்க்க வேண்டும். சங்கப்பாடல்களைக் கற்பிக்கத் தொடங்கும் முன், பாடலுக்குச் சம்பந்தப்பட்ட செய்திகளைப் பற்றி மாணவர்களிடம் கலந்துரையாட வேண்டும். பின்பு, அந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து படிப்படியாக சங்க இலக்கியப் பாடல் கற்பித்தலுக்கு மாணவர்களை அழைத்து வருதல் வேண்டும். உதாரணமாக, 12ஆம் வகுப்பில் **'இறவுப்புறத் தன்ன பிணர்படு தடவுமுதற்'** எனத் தொடங்கும் நக்கண்ணையார் பாடிய பாடலை நடத்தும் போது பெண்பால் புலவர்களில் ஒருவரான நக்கண்ணையாரை மாணவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அதனால், பெண்பாற் புலவர்களில் ஒருவரான ஔவையாரைப் பற்றி மாணவர்களிடத்தில் கேட்டு, அதன்பால் மாணவர்களை ஈர்த்து, அதைத் தொடர்ந்து நக்கண்ணையார் பற்றியும் அவருடைய வாழ்க்கை நிகழ்வுகளையும் எடுத்துக் கூறி, அதன்பின் அவர் பாடிய பாடலைக் கற்பிக்கும் போது மாணவர்களிடத்தில் கற்றலில் ஈடுபாட்டை வரவழைக்க முடியும். இவ்வாறு, நன்கு தெரிந்த ஒரு செய்தியை மாணவர்களிடம் பேசும் போது, அவர்களுக்குள் ஊக்கம் ஏற்பட்டு கற்கவிருக்கும் சங்கப் பாடலில் தெளிவடைகின்றனர். அதன்பின்னர், நாம் கற்பித்தலைத் தொடங்குவது நம் கற்பித்தலை எளிமையாக்குகிறது.

### 2.4.17 எளிமையிலிருந்து அருமைக்குச் செல்லுதல்

பெரும்பாலும், சங்க இலக்கியப் பாடல்கள் பல அருமையான செய்திகளைத் தன்னுள் கொண்டிருந்தாலும், அதைப் படித்துணர்ந்து கொள்வதற்காக மாணவர்களைத் தயார்படுத்த வேண்டியது ஆசிரியரின் கடமையாகும். இவ்வகையில் முன் தலைப்பில் கூறியது போல் தெரிந்த செய்தியை மாணவர்களிடத்தில் தொடங்கும் போது, அதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது ஆசிரியர் தொடங்கும் செய்தி மாணவர்களுக்கு எளிமையானதாகவும் விரும்பத்தக்கதாகவும் இருக்க வேண்டும் என்பதாகும். பாடலுக்கு மட்டும் தொடர்பு இருந்தால் போதுமென்று, மாணவர்களின் விருப்பமற்ற செய்தியையோ அல்லது தேவையற்ற செய்தியையோ முன் கற்பித்தலுக்குத் தொடங்குவது கற்றலை மேம்படுத்தாது. சங்கப்பாடல்களில் இடம்பெறும் மன்னர்களைப் பற்றியும் அவர்களின் போர்த்திறமைகளைப் பற்றியும் மாணவர்களுக்கு விளக்கும் போது, சேர சோழ மன்னர்களையும் அவர்களின் திறமைகளையும் கற்பனையால் மாணவர்களிடத்தில் கொண்டுவர வேண்டும் என்று கட்டாயத்தை விடுத்து, மாணவர்களுக்கு விருப்பாமான நன்கு அறிந்திருக்கக் கூடிய சில செய்திகளை மாணவர்களுக்குக் கூறலாம். உதாரணமாக, சமீபத்தில் வெளியாகிய 'பாகுபலி' என்ற திரைப்படத்தின் மூலம் மாணவர்கள் அரசர்கள், அவர்களின் திறமைகள், போர்த்திறம், கட்டுப்பாடு, வெற்றி, தோல்வி போன்ற அனைத்துச் செய்திகளையும் அறிய முடியும். அப்போது, மாணவர்களுக்கு அது போன்ற திரைப்படங்களையும் உதாரணமாகக் கூறலாம். எல்லையுடன் கூடிய இந்த உதாரணத்தால் மாணவர்கள் எளிதில் பாடங்களைப் புரிந்துகொள்ளும் வாய்ப்பு கிடைக்கும். இவ்வாறு, மாணவர்கள் விரும்பக்கூடியவாறு படத்துணுக்குகள், விளையாட்டுச் செய்திகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், சமீபத்திய நிகழ்ச்சிகள் போன்ற எளிமையான, பிரபலமான செய்திகளைக் கற்பித்தலுக்குப் பயன்படுத்துவது இன்றியமையாதாக இருக்கும்.

### 2.4.18. தெளிவிலிருந்து சிக்கலுக்குச் செல்லுதல்

சங்கப்பாடல்களில் பல செய்திகள் உள்ளுறையாகவும் மறைமுகமாகவும் விளக்கப்பட்டிருக்கும். இதனை ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் புரியும் வகையில் தெரிவிப்பது உன்னதம். இதற்கு

மாணவர்கள் தெளிந்த மனதுடன், கற்றலுக்கான உற்சாகத்துடன் இருப்பது அவசியம். இவ்வகையில், மேற்கண்ட இரு தலைப்புகளில் கூறியது போல முன் கற்பித்தலுக்குச் செய்திகளைக் கூறும்போது, மாணவர்கள் உடனுக்குடன் பதிலளித்து அடுத்த செய்திக்குச் செல்லும் வகையில் நமது வினாக்களோ அல்லது கலந்துரையாடலோ அமைய வேண்டும். அப்போதுதான், மாணவர்கள் ஆசிரியர் குறிப்பிட்ட செய்தியைத் தொடர்ந்து கற்பித்தலுக்கும் நுழைய முடியும். இல்லையெனில், சற்று அதிக வினாக்கள் எழும்பும் அளவிற்கோ, சிந்திக்கும் அளவிற்கோ முன் கற்பித்தல் செய்திகள் அமைந்தால், மாணவர்கள் முன் கற்பித்தல் செய்திகளைப்பற்றியே அதிகம் சிந்திக்கவும் பேசவும் ஆரம்பித்து விடுவர். பின்பு, அதனைத் தொடர்ந்து அவர்களை சங்கப்பாடல் கற்பித்தலுக்குக் கொண்டு வருவது சற்று கடினமாக மாறிவிடும். உதாரணமாக, மேற்குறிப்பிட்டபடி திரைப்படத்தைப் பற்றி மாணவர்களிடம் கேட்பதாக இருந்தால் தேவையான சிறு செய்திகளை மட்டும் கேட்டு, உடனுக்குடன் பாடம் தொடர்பான வினாக்களைக் கேட்க வேண்டும். சமீபத்தில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றி மாணவர்களிடத்தில் கேட்பதாக இருந்தால், உடனுக்குடன் பாடம் தொடர்பான செய்திகளையும் கூற வேண்டும். மாணவர்களுக்கு இதனிடையில் சிந்திப்பதற்கோ, பேசுவதற்கோ அதிக நேரம் ஒதுக்குவதானால் கற்பித்தலில் சிக்கல் ஏற்படும். இதனால், நாம் முன் கற்பித்தல் செய்தியைத் தேர்ந்தெடுக்கும் போது, அது நாம் கற்பிக்கவிருக்கும் சங்கப்பாடலுக்கும் உகந்ததாகவும் அதே நேரத்தில் மாணவர்களுக்குத் தெரிந்த எளிய செய்தியாகவும் இருப்பதும் இன்றியமையாததாகும்.

### 2.4.19. தொடர்புடைய நூல்களைப் படிக்கச் செய்தல்

சங்கப்பாடல்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருப்பதால், பாடநூலில் இடம்பெறும் சங்கப்பாடலைக் கற்பிக்க அதன் முன் பின் பாடல்களை எடுத்தியம்புவது அவசியமாகிறது. சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் போது, சங்க இலக்கிய நூல்களைப் பற்றி முன்னதாக எடுத்துரைத்து அது தொடர்பான செய்திகளைச் சேகரிக்கச் சொல்லலாம். எட்டுத்தொகை நூல்களைப் பற்றிக் கூறுவதானால், எட்டுத்தொகை நூல்கள் என்னென்ன? என்ற ஒரு கேள்வியை மாணவர்கள் முன் வைத்து, அதற்கான தேடுதலில் அவர்களை ஈடுபடுத்துதல் வேண்டும். பதிணென்கீழ்க்கணக்கு நூல்கள் என்னென்ன? என்ற தேடுதலை ஏற்படுத்த வேண்டும். ஆசிரியர்

நேரடியாக நூல்களின் பெயர்களை மாணவர்களுக்கு அறிவிப்பதைக் காட்டிலும், இதுபோன்ற தேடுதலுக்குப் பிறகு, மாணவர்களின் சந்தேகங்களைத் தீர்க்கும் வகையில் ஆசிரியரின் கருத்துகள் அமைய வேண்டும். இதனால், மாணவர்கள் இது தொடர்பான நூல்களைப் படிக்கும் வாய்ப்பு ஏற்படும். இந்நிலையில் ஆசிரியர்கள் சங்க இலக்கியப் பாடல்களுக்கும் அது தொடர்பான பாடல்களுக்கும் தேவையான குறிப்புகளைக் கொடுத்து, அதை மாணவர்களே கண்டறியும் வகையில் பல நூல்களைப் படிப்பதற்கு ஊக்குவிக்க வேண்டும். அதாவது, கற்கவிருக்கும் சங்கப்பாடலின் சூழ்நிலை, மூலநூல், ஆசிரியர், பாடல் இடம்பெற்ற நூல் போன்ற செய்திகளை மாணவர்களிடம் கூறி, பாடலின் முன் பின் பாடல்களைக் கண்டறியச் செய்யலாம். அதன் சூழ்நிலையை விளக்கவும் சொல்லலாம். இதற்கு, மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயல்பட வைக்கலாம். பள்ளி நூலகத்தையும் பயன்படுத்தலாம். இவ்வாறு செய்வதன் மூலம் மாணவர்கள் சங்கப்பாடல் சம்பந்தப்பட்ட நூல்களை அதிகம் படிக்கும் வாய்ப்பு ஏற்படும். இதனால், மேலும் நூல்களைத் தேடித் தேர்ந்தெடுத்துப் படிக்கும் பழக்கம் ஏற்படும். படித்தல் திறன் மேம்படும்.

இவ்வாறு பல உத்திகளைப் பயன்படுத்திச் சங்க இலக்கியப் பாடல்களைப் படிப்பதில் மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவது இக்கால ஆசிரியர்களின் முதன்மையான கடமையாகும். ஆனால், இவை மட்டும் முடிவாகாது. ஆசிரியர்கள் அவரவர் திறமை, நேரம், பொருள் பயன்பாடு, பள்ளியின் ஒத்துழைப்பு ஆகியவற்றிற்கேற்ப, இன்னும் பல உத்திகளைப் பெருக்கி சங்க இலக்கியக் கற்றலைச் செழிக்கச் செய்வது ஆசிரியரின் கடமையாகும்.

### 2.5 கற்றல் கோட்பாடுகளின் அடிப்படையில் சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் உத்திகள்

கற்றல், கற்பித்தல் சார்ந்து பலவகைக் கோட்பாடுகள் கல்வியலாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய கோட்பாடுகளைக் கருத்தில் கொண்டு சங்க இலக்கியங்களைக் கற்பிப்பது மாணவர்களுக்குப் பயனுள்ளதாக அமையும். அவ்வகையில் ஒரு சில கற்றல் கோட்பாடுகளைச் சங்க இலக்கியக் கற்பித்தலுக்குப் பயன்படுத்த முடியும்.

**முழுமைக் காட்சி (Gestalt) என்ற விதிப்படி 'கெஸ்டால்ட்' என்றும் ஜெர்மன்சொல் 'முழுமையான அமைப்பு' அல்லது 'முழுமைக் கோலம்' என்று பொருள்படும். முழுமைக் காட்சிக் கோட்பாட்டின்படி, 'முழுமை' என்பது பகுதிகளின் தொகுப்பை விட அதிகமானது. பகுதிகளைத் தனித்தனியே ஆராயும் போது பொருளற்றுத் தோன்றலாம். ஆனால், எல்லாப் பகுதிகளையும் ஒரு சேரப் பார்க்கும் போது பொருளுடையதாகத் தோன்றும்."**[26]

சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பிக்கும் போது, அவற்றில் காணப்படும் திணை, துறை, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் போன்ற செய்திகளைத் தனித்தனியே கற்பிக்கும் போது, சிரமமாகவோ அல்லது கற்றல் சுமையாகவோ தோன்றலாம். ஆனால், அவை அனைத்தையும் இணைத்து சங்க இலக்கியப்பாடல் ஒன்றில் காணும் போது அதன் உயிரோட்டம் வெளிப்படும். இதனை, மாணவர்கள் அறியும் வண்ணம் எடுத்துரைக்க வேண்டும். ஆசிரியர்கள் பாடலின் திணை, துறை போன்ற கூறுகளைத் தனித்தனியே கற்பிக்காமல் பாடலோடு இணைந்து அதன் முக்கியத்துவத்தை விளக்குதல் வேண்டும். அவ்வாறு விளக்கும் போது சங்க இலக்கியப் பாடலின் முழுமையை மாணவர்கள் அறிய முடியும். உதாரணமாக, பாடநூலில் 12ஆம் வகுப்பில் இடம்பெறும் அகப்பாடலான

**பசைபடுபச்சை நெய்தோய்த் தன்ன**
**சேயுயர் சினைய மாச்சிறைப் பறவை**
**பகலுறை முதுமரம் புலம்பப் போகி**
**முகைவாய் திறந்த நகைவாய் முல்லை**
**கடிமகள் கதுப்பின் நாறிக் கொடிமிசை**
**வண்டினந் தவிர்க்குந்த தண்பதக் காலை**
**வரினும் வாரா ராயினும் ஆண்டவர்க்கு**
**இனிதுகொல் வாழி தோழி யெனத்தன்**
**பல்லிதழ் மழைக்கண் நல்லகம் சிவப்ப**
**அருந்துய ருடைள் அவளென விரும்பிப்**
**பாணன் வந்தனன் தூதே: நீயும்**
**புல்லார் புரவி வல்விரைந்து பூட்டி**
**நெடுந்தேர் ஊர்மதி வலவ**
**முடிந்தன்று அம்மநாம் முன்னிய வினையே. (அக.246)**

என்ற பாடலை விளக்கும் போது, தலைவி தலைவனுக்காக காத்திருப்பதால் இது இருத்தல் இருத்தல் நிமித்தமான பாடல். அதனால் இது முல்லைத்திணையில் வரும் உரிப்பொருளைக் கொண்டுள்ளது. முல்லை நிலம் என்பதால் காடும் காடு சார்ந்த இடத்தை முதற்பொருளாகவும், அதைத் தொடர்ந்து வரும் செய்திகளைக் கருப்பொருளாகவும் கொண்டு இப்பாடல் அமைகிறது. மாலைக்காலத்தில் தலைவன் வருகையை எதிர்பார்த்துத் தலைவி வீட்டில் தனித்துத் துயருடன் ஆற்றியிருக்கிறாள் என்ற செய்திகளைக் கூறிய பின் பாடலின் விளக்கத்தைக் கற்பிக்க வேண்டும். இவ்வாறு பாடலின் கருத்தை விளக்குவதற்கு முன்பே பாடலின் பன்முகக் கூறுகளையும் விளக்கி அதன் மூலம் பாடலை விளக்கினால், அப்பாடலின் முழுமையை மாணவர்களால் உணர முடியும். இவ்வாறு சங்கப்பாடல்களில் உள்ள பகுதிகளைத் தனித்தனியாகக் கற்பிக்காமல், அனைத்தும் சங்கப்பாடலின் ஒரு தொகுதியே என்பதை மாணவர்கள் அறியும் வண்ணம் விளக்குவதற்கு இந்தக் கோட்பாடு சிறந்ததாக அமைகிறது.

**உட்காட்சி வழிக்கற்றல் (Insight Learning) என்ற விதியானது அறிதிறனுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. பெறப்பட்ட விவரங்களிலிருந்து இதுவரை அறியப்படாத புதிய தொடர்புகளைத் திடீரென உணர்தலே 'உட்காட்சி' என்னும் உளச் செயலாகும். உட்காட்சி வழிக்கற்றலில் நமது புலன்காட்சிப் புலத்தை முறைப்படுத்திச் சீரமைப்பதன் மூலம் இதுவரை நமக்குத் தெரிந்திராத புதிய தொடர்புகளையும், அனுபவங்களையும் திடீரென உணர்ந்து, பிரச்சனைக்குரிய தீர்வைப் பெறுதல் நடைபெறுகிறது."** [27]

இக்கோட்பாட்டின்படி, இலக்கியங்களை ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது, மாணவர்களிடத்தில் எழும் திடீர் சந்தேகங்களுக்கு ஆசிரியர் விடை கூறுவதன் மூலம் ஆசிரியரின் கற்பித்தலில் சுயநம்பிக்கை கிடைக்கிறது. மாணவனின் வினாவிற்கு, விடை தெரியாத பட்சத்தில் அதற்கான விடையைக் கண்டறிந்து மாணவனுக்கு விளக்குவதன் மூலம் ஆசியரின் கற்பித்தலில் மாணவனுக்கு நம்பிக்கை பிறக்கிறது. அந்த ஆசிரியரும் மாணவனின் வினாவால் ஒரு புதிய செய்தியை அறிந்து கொள்ளும் சூழ்நிலை ஏற்படும்.

சங்க இலக்கியப் பாடல்களை மாணவர்களுக்கு விளக்கும் போது, புறநானூறு செய்யுளாக இருப்பின் அரசன், போர்த்திறம், புலவர்கள், புகழ், தொடர்பான பலவிதமான சந்தேகங்கள் மாணவர்களிடையே எழும். அதே போல் அகநானூறு செய்யுளாக இருப்பின் தலைவன், தலைவி, தோழி, காதல், நட்பு போன்றவை தொடர்பான பலவிதமான சந்தேகங்கள் மாணவர்களிடையே எழும். இவ்வகையான சந்தேகக் கேள்விகள் ஒரே மாதிரியாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. மேலும், மாணவர்களுக்கு ஆசிரியர்கள் பாடம் நடத்துவதைப் பொறுத்து, வினாக்களில் வேறுபாடுகள் ஏற்படுகின்றன. அவ்வாறு மாணவர்கள் கேட்கும் வினாக்களுக்கு உடனடியான பதிலை ஆசிரியரால் மட்டுமே வழங்க முடியும். இவ்வாறு ஆசிரியர் விளக்கும் இந்த விளக்கங்களால் ஆசிரியரின் கற்பித்தலில் மாணவர்களுக்குத் திருப்தி ஏற்படும். மேலும், மாணவர்கள் கேட்கும் வினாக்களை உடனுக்குடன் விளக்குவதால் ஆசிரியர் கற்பிக்க வேண்டிய பாடலின் பொருளை விரைவாக மாணவர்கள் அறிந்து கொள்ள வாய்ப்பும் உண்டு. மேலும், மாணவர்கள் தன்னுடைய கேள்விகளின் மூலம், அப்பாடல் தொடர்பான பல புதிய செய்திகளை அறிந்து கொள்ளும் முனைவர். அவற்றை ஆசிரியர்கள் சரியாக விளக்கினால் அதனால் சங்க இலக்கியங்கள் பற்றிய பல செய்திகளை மாணவர்கள் அறிந்து கொள்ள முடியும். ஆனால், மாணவர்களின் இந்த வினாக்களுக்கு ஆசிரியரால் பதில் அளிக்க முடியவில்லை என்றாலோ, ஆசிரியர் அளிக்கும் விடையில் மாணவர்களுக்கு திருப்தி இல்லை என்றாலோ அதனால் கற்பித்தல் பாதிக்கக் கூடும். எனவே, ஆசிரியர்கள் சங்க இலக்கியங்கள் பற்றி எல்லா செய்திகளையும் அறிந்திருக்க வேண்டியது இன்றியமையாததாகும். பாடநூலில் உள்ள பாடலை மட்டும் கற்பிக்கும் நோக்கில் ஆசிரியர்கள் தயாராகாமல், அதைத் தொடர்ந்து மாணவர்கள் கேட்கும் அனைத்து சங்க இலக்கியம் தொடர்பான செய்திகளையும் விளக்கும் வகையில் ஆசிரியர்கள் கற்பித்தலுக்குத் தயாராக வேண்டும். எனவே, சங்க இலக்கியக் கற்பித்தலில் இந்தக் கோட்பாட்டினை மனதில் கொண்டு கற்பித்தல் அவசியமாகிறது.

**தார்ண்டைக்கின் முயன்று தவறிக்கற்றல் (Thorndike’s Trial and Error Learning) என்ற விதிப்படி ‘‘எந்த ஒரு செயலினையும் கற்றுக் கொள்ளும் போது பல தடவை முயன்று பல தவறுகளைப் புரிந்து, பின்னர் பயிற்சியின் காரணமாகத் தவறின்றி சரியாகக் கற்றுக் கொள்வதே முயன்று**

**தவறிக் கற்றல் ஆகும். 'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்' என்பதே தார்ண்டைக்கின் நம்பிக்கை."**[22] இந்த வகையில் தார்ண்டைக் மூன்று கற்றல் விதிகளை முன்மொழிந்தார். அவையாவன. ஆயத்த விதி, பயிற்சி விதி மற்றும் விளைவு விதி.

**ஆயத்த விதியின் படி,** ஆசிரியர் பாடப்பொருளைக் கற்பிக்க முற்படுவதற்கு முன் மாணவர்களை ஆயத்தப்படுத்த வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டுகிறது. முன் வகுப்புகளில் கற்பிக்கப்பட்ட தொடர்புடைய பாடங்களை நினைவு கூர்வதன் மூலமும் புதிய பாடப்பொருளைக் கற்பதற்கான ஊக்கத்தை ஆசிரியர் மாணவர்களிடம் தூண்ட முடியும். சிறப்புப் பயிற்சிகளுக்காக மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது, அவர்களின் ஆயத்த நிலையை அறிய நாட்டச் சோதனைகள், ஆர்வப் பட்டியல் ஆகியவைகளைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை இக்கற்றல் விதி நமக்கு எடுத்துரைக்கின்றது.

**பயிற்சி விதியின் படி,** மாணவர்களுக்கு எதைக் கற்பித்த பின்பும் மாணவர்களுக்கு அது தொடர்பான பயிற்சியை போதுமான அளவு கொடுக்க வேண்டும். அதாவது கற்றவற்றை அடிக்கடி நினைவு கூர்தல் வேண்டும். தொடர்ந்து பயிற்சியளிப்பதோடு கூட, பயிற்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் தேர்ச்சி நிலை பற்றிய பின்னூட்டம் மாணவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். தீய பழக்கங்களை நடைபெற விடாமல் செய்வதன் மூலம், அவை, சிறுக சிறுக வலுவிழந்து நாளடைவில் மறைந்து விடும்.

**விளைவு விதியின் படி,** பரிசும் பாராட்டும் கற்றலை மேம்படுத்துவதால், வகுப்பறைக் கற்பித்தலில் இவைகளை ஆசிரியர் பொருத்தமாகப் பயன்படுத்த வேண்டும். கூடியவரை தண்டனையைத் தவிர்த்தல் நல்லது. அதாவது, வெற்றி, மென்மேலும் வெற்றிக்கு இட்டுச் செல்வதால் ஆசிரியர் வீட்டு ஒப்படைப்புகள் அளிக்கும்போது சுலபமானவற்றிலிருந்து கடினமானவைகளை நோக்கி அமையும் வண்ணம் வரிசைப்படுத்தி அளிக்க வேண்டும். அப்போதுதான், ஆரம்ப வேலைகளில் அனைவரும் சுலபமாக வெற்றி பெற்று மிகுந்த தன்னம்பிக்கையுடன் முன்னேறிச் செல்வர். ஆரம்பத்திலேயே தோல்வியடைய நேர்ந்தால் மாணவர்கள் தொடர்ந்து முயற்சி செய்ய மாட்டார்கள்.

**அதே போல் பாவ்லோவின் ஆக்க நிலையிறுத்தம் (Bhawlaw's Classical Conditioning) விதிப்படி 'ஆக்கநிலையிறுத்தம் தொடர்பாக ஐந்து விதிகளை பாவ்லோவ் வெளியிட்டுள்ளார். அவை உருவாதல் விதி, ஆக்கநிலையிறுத்தம் அழிந்துபோதல், பொதுமைப்படுத்துதல், வேறுபடுத்தி அறிதல், இரண்டாம் ஆக்கநிலையிறுத்தம் ஆகும்.'** [23]

**உருவாதல் விதிப்படி,** கற்றலுக்கு முன் கற்றலுக்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அது, இயற்கையாக அமையாவிடினும், செயற்கையான முறையிலாவது கற்றல் சூழ்நிலையை உருவாக்கினால் மட்டுமே கற்றலுக்கான மனப்பான்மை மாணவர்களிடத்தில் ஏற்படும்.

சங்க இலக்கியப் பாடல்களுக்கான கற்றல் சூழ்நிலையை உருவாக்கிய பின்னரே கற்பித்தலைத் தொடங்குதல் வேண்டும். சங்க இலக்கியங்களின் அக்காலச் சூழ்நிலையை இன்றைய காலக்கட்டத்தில் உருவாக்குதல் என்பது சற்று சிரமமான செயலாக இருந்தாலும், மாணவர்களிடத்தில் கேட்கப்படும் கேள்விகள், வகுப்பறைச் செயல்பாடு, கற்பிக்கும் இடம் ஆகியவற்றைப் பொருத்து கற்றல் சூழ்நிலையை உருவாக்கலாம். உதாரணமாக,

**கழியக் காதலர் ஆயினும், சான்றோர்**
**பழியொடு வரூஉம் இன்பம் வெ∴கார்; (அக.112)**

என்ற பாடலைக் கற்பிப்பதாகக் கொண்டால், மாணவர்களிடையே திருமணம் பற்றியும் அதன் செயல்பாடுகள் பற்றியும் கேட்டறியலாம். தமிழரின் திருமண முறை பற்றிய செய்திகளைக் கூறிப் பின்னர் இப்பாடலின் விளக்கத்தைக் கூறலாம். இவ்வாறு கற்றலுக்கான சூழலை ஏற்படுத்த முடியும்.

**ஆக்கநிலையிறுத்தம் விதிப்படி,** கற்றல் சூழ்நிலையை முன்னே தீர்மானித்து மாணவர்களிடத்தில் வெற்றிகரமாகக் கொணர்ந்த பின்னர், அதையொட்டி கற்பித்தலானது வலுவானதாக அமையுமாறு கற்பித்தல் வேண்டும். இல்லையெனில், எவ்வளவு சிறந்த கற்றல் சூழ்நிலையை உருவாக்கினாலும் அதற்கான பயனில்லாமல் போய்விடும்.

இவ்வகையில் சங்கப்பாடலைக் கற்பிப்பதற்கான சூழ்நிலையை எவ்வாறு உருவாக்குதல் வேண்டும் ஆசிரியர் முன்கூட்டியே திட்டமிட்டுச்

செயல்படல் வேண்டும். இவ்வாறு ஒரு கற்றல் சூழ்நிலையை உருவாக்கும் போது, மாணவர்களிடத்தில் எப்படிப்பட்ட வினாக்கள் எழும்பும். அவ்வாறான வினாக்களுக்கு எவ்வாறு பதில் அளித்தல் வேண்டும் என்ற திட்டமும் ஆசிரியரால் செயல்படுத்தப்பட வேண்டும். உதாரணமாக, மேற்குறிப்பிட்ட பாடலில் திருமணத்தைப் பற்றி மாணவர்களிடத்தில் கேட்கும் போது, அவர்களுடைய பதில்களையும் அடுத்து வரும் வினாக்களையும் தான் கற்பிக்கவிருக்கும் சங்க இலக்கியப் பாடலுக்குத் தொடர்பானதாக மாற்றுவது ஆசிரியரின் திறமையாகும்.

**பொதுமைப்படுத்துதல் விதிப்படி,** கொடுக்கப்பட்ட கற்றல் சூழ்நிலையையும் பாடப்பொருளையும் தொடர்புபடுத்துதல் வேண்டும். அப்போது, மாணவர்கள் பாடப்பொருளோடு இரண்டறக் கலந்து கற்றலானது சிறப்படையும். இவ்வகையில், ஆசிரியர் கற்பிக்கவிருக்கும் சங்க இலக்கியப் பாடலையும் அதற்காக ஆசிரியர் உருவாக்கிய கற்றல் சூழ்நிலையையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்த வேண்டும். மாணவர்களிடம் கேட்கப்படும் வினாக்களாலும் ஆசிரியர்கள் அளிக்கும் பதில்களாலும் கற்பித்தலானது பாடப்பொருளை விட்டு விலகும் சூழ்நிலை உண்டு. எனவே, ஆசிரியர் தன்னுடைய பாடப்பொருளுக்குக் கற்றல் சூழ்நிலையையும் தொடர்புபடுத்துமாறு அடுத்தடுத்து வினாக்கள் கேட்க வேண்டும். அதனால், மாணவர்கள் பாடப்பொருளுடன் இரண்டறக் கலந்து கற்கும் வாய்ப்பு ஏற்படும்.

இதையே, **"ஜட் 1908-இல்தான் நடத்திய சோதனைகளின் அடிப்படையில் இக்கோட்பாட்டை முன் வைத்தார். இக்கோட்பாட்டின்படி, பயிற்சி மாற்றம் நிகழ குறிப்பிட்ட அனுபவங்களிலிருந்தோ, கற்கும் பாடங்களிலிருந்தோ, அவற்றில் பதிந்துள்ள பொது விதிகளைக் கண்டறிதல் அவசியம்" [28] என்று பொதுமைப்படுத்தல் (Theory of Generalisation) விதியில் விளக்குகிறார்.**

இதன்படி, பள்ளிப் படிப்பானது வாழ்க்கைக்குப் பயன்படும் வகையில் இருக்க வேண்டும். அப்படியானால், மாணவர்களுக்குப் பல நல்ல செய்திகளைக் கூறுவதன் மூலம் நன்மக்களாய் உருவாக்க முடியும். இது போன்ற, செய்திகளை மொழிப்பாடத்தின் மூலமாக மட்டுமே கொடுக்க முடியும். அதுவும், சங்கப்பாடல்களில் உள்ள பாடல்கள் மூலம், பழந்தமிழர்களின் வாழ்க்கை முறையினை மாணவர்கள் உணர்ந்தாலே

போதும். வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துச் செய்திகளும் கிடைத்துவிடும். உதாரணமாக,

**ஆடுஆமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்**
**கோடை அவ்வளி குழலிசை ஆகப்**
**பாடுஇன் அரவிப் பனிநீர் இன்இசைத்**
**தோடுஅமை முழவின் துதைகரல் ஆகக்**
**கணக்கலை இகுக்கும் கடுங்குரற் தூம்பொடு,**
**மலைப்பூஞ் சாரல் வண்டுயாழ் ஆக,**
**இன்பல் இமிழ்இசை கேட்டுக் கலிசிறந்து,**
**மந்தி நல்அவை மருள்வன நோக்கக்**
**கழைவளர் அடுக்கத்து, இயலிஆ டுமயில்**
**நனவுப்புகு விறலியின் தோன்றும் நாடன் (அக.82)**

என்ற பாடலை விளக்கும் போது, மாணவர்களிடத்தில் இயற்கைக் காட்சிகள் தொடர்பான கேள்விகளைக் கேட்டு அதன் மூலம் வரும் விடைகளை இப்பாடலோடு தொடர்புபடுத்தி விளக்கும் போது கற்பித்தல் இயல்பாகவும் சுலபமாகவும் நடைபெறும். மேலும், இது போன்ற பாடல்களைக் கற்பிக்கும் போது இவ்விதிகள் மிகவும் ஏற்புடையதாக உள்ளது.

**வேறுபடுத்தி அறிதல் விதிப்படி**, எல்லாவிதமான பாடப்பொருளுக்கும் ஒரேமாதிரியான கற்றல் சூழலை, ஊக்குவிப்பைப் பயன்படுத்தாமல், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு பாடப்பொருளுக்கும் வெவ்வேறு விதமான கற்றல் சூழ்நிலை நிலை அல்லது ஊக்குவிப்பை வழங்க வேண்டும்.

பாடநூலில் பெரும்பாலும், புறநானூற்றுப் பாடல்கள் இடம்பெறுகின்றன. அகப்பாடலாக இருந்தாலும் பெரும்பாலும் புறம் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. இச்சூழ்நிலையில் ஆசிரியர்கள் அனைத்து பாடல்களிலும் அரசனின் பெருமைகளையும், மேன்மைகளையும் விளக்கும் சூழ்நிலை உள்ளது. அதனால், எல்லா வகுப்பிலும் ஆசிரியர் ஒரே மாதிரியான கற்றல் சூழ்நிலையையோ, ஊக்குவிப்பையோ, கேள்விகளையோ பயன்படுத்துதல் கூடாது. இது மாணவர்களிடத்தில் சலிப்பை ஏற்படுத்தும். மேலும், வெவ்வேறு வகுப்பாக இருந்தாலும் மாணவர்கள் ஒருவருக்கொருவர் பேசும் பொழுது வகுப்பறைச் சூழலைப் பற்றி கலந்துரையாடும் வாய்ப்புகள் அதிகம். அவ்வாறு கலந்துரையாடும் போது அவர்கள் அறிந்த அதே ஊக்குவிப்பு செயலை

ஆசிரியர் பின்பற்றும் போது, அதனால் பாடத்தின் மீதும் ஆசிரியர் மீதும் மாணவர்களுக்கு நம்பிக்கையின்மை ஏற்படும் வாய்ப்பு உண்டு. எனவே, அரசன் பற்றிய செய்திகளை மாணவர்களுக்கு எடுத்தியம்பும் போது, புறநானூற்றுப் பாடலைப் பொருள், பாடிய புலவர், பாடப்பட்ட அரசர், கொடுக்கப்பட்ட விழுமியங்கள் ஆகியவற்றைப் பொருத்து கற்பித்தல் செயல்பாடுகளில் வேறுபாடுகளைக் காட்டலாம். இதனால், மாணவர்களுக்குப் புதிய சங்க இலக்கியப் பாடலைப் படிக்கும் ஆர்வம் ஏற்படும்.

**இரண்டாம் ஆக்க நிலையிறுத்தம் விதிப்படி**, பாடப்பொருளுக்காக நாம் உருவாக்கிய கற்றல் சூழலால் மாணவன் பாடப்பொருளின் விளக்கங்களை அறிவதோடு, பாடப்பொருட்களையும் மீறி அது சம்பந்தப்பட்ட செய்திகளை அறிந்து கொள்வதற்கு ஆர்வம் கொள்ளுமாறு நமது கற்பித்தல் அமைய வேண்டும்.

இவ்விதியானது நமது சங்க இலக்கியக் கற்பித்தலுக்கு இன்றியமையாததாகும். பாடநூலில் இருக்கும் சங்கப்பாடல்களைக் கற்பித்தால் போதும் என்ற சூழ்நிலை உள்ள இன்றைய நிலையில் இந்த விதியை விவாதிப்பது இன்றியமையாததாகும். பாடநூலில் உள்ள சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பிப்பதன் மூலமும் அதன் கருத்துகளை ஆசிரியர்கள் எடுத்தியம்பும் முறையிலும் சங்கப்பாடலின் தனித்தன்மையை மாணவர்களுக்குக் கட்டாயம் விளக்குதல் வேண்டும். பாடநூலில் உள்ள சங்க இலக்கியப் பாடல்களை விளக்கும் போது, அது தொடர்பான பாடல்களையும் அவை உள்ள நூல்களையும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் அறிமுகப்படுத்துதல் வேண்டும். மேலும், பாடநூலைத் தவிர பிற சங்க இலக்கியம் தொடர்பான நூல்களைப் படிப்பதில் மாணவர்களை ஆர்வமூட்டுதல் வேண்டும். இதன் மூலம் மாணவர்களுக்கு அதைத் தொடர்ந்து மேலும் பல சங்க இலக்கியப் பாடல்களைப் படிப்பதில் ஆர்வம் ஏற்பட வேண்டும். எனவே, ஆசிரியர்கள் இவ்விதியை மனதில் கொண்டு சங்க இலக்கியங்களைக் கற்பிக்க வேண்டும்.

**ஸ்கின்னரின் செயல்படு ஆக்கநிலையிறுத்தம் (Skinner's operant conditioning) ‘‘ஓர் உயிரி பல்வேறு துலங்கல்களை வெளியிடும்போது, அவைகளில் நாம் விரும்பும் ஒரு குறிப்பிட்ட துலங்கல் தோன்றும் போது உடனடியாகப் பாராட்டுதல் அல்லது பரிசளித்தல் போன்ற**

**வலுவூட்டியை அளித்தால், அந்தக் குறிப்பிட்ட துலங்கல் திரும்பத் திரும்ப தோன்றி அதுவே பழக்கமாக மாறிவிடும். எனவே, நாம் விரும்பும் துலங்கலை வலுவூட்டி நடத்தையாக ஆக்குதல் என்பதே ஸ்க்கின்னரின் செயல்படு ஆக்கநிலையிறுத்தத்தின் அடிப்படை சாரமாகும்"** [24]

இக்கோட்பாட்டின் படி, இலக்கியங்களைக் கற்பிக்க நாம் புதுமையான கற்றல் சூழ்நிலையை உருவாக்கிக் கற்பிக்கும் போதும் மாணவர்களிடத்தில் ஏற்படும் சிந்திக்கும் திறனைப் பாராட்டி பரிசுகள் வழங்கும் போதும் இது போன்ற செயல்கள் தொடர்ந்து நடந்தேறி வரும்போது ஒரு நேரத்தில் மாணவர்களிடம் இலக்கியம் பற்றிய இந்தச் சிந்தனை பழக்கமாகவே மாறி தொடர்ந்து இலக்கியங்களைப் படிக்கும் நிலை ஏற்படும் வாய்ப்புண்டு. இலக்கியம் கற்பித்தலில் கொடுக்கப்படும் பரிசுகளானது இலக்கியங்களின் மேலும் கற்றலுக்காக வழங்கப்பட வேண்டும். புதிய இலக்கியப் பாடல்களை மாணவர்கள் கண்டறிதல், சங்க இலக்கியங்கள் பற்றிய செய்திகளை மற்ற நூல்களிலிருந்து சேகரித்தல், பாடநூலில் உள்ள சங்க இலக்கியப் பாடலை மனனமாக சொல்லுதல், குறிப்பிட்ட புலவர்களின் வேறு சில பாடல்களைக் கண்டறிதல், பாடலின் கருத்துகளைத் தொகுத்தல், பாடல் மூலம் பெறப்படும் செய்தியைத் தொகுத்தல், பாடல் மூலம் மாணவர்கள் பெற்ற விழுமியங்களைத் தொகுத்தல் போன்ற செயல்பாடுகளுக்கு மாணவர்களுக்கு வலுவூட்டிகளை வழங்கலாம். இதனால், சங்க இலக்கியப் பாடலை மேலும் கற்கும் ஆர்வம் மாணவர்களிடத்தில் ஏற்படும். இவ்வாறு, தொடர்ந்து வாழ்த்துகளையும் வலுவூட்டிகளையும் சங்க இலக்கியம் கற்பித்தலுக்கு மாணவர்களுக்கு வழங்கும் போது சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பதில் ஆர்வம் ஏற்பட்டு பாடநூலைத் தவிர்த்து மேலும் செய்திகளை அறிந்து கொள்ள ஆர்வம் காட்டுவர். இவ்வாறு வலுவூட்டிகளைப் பயன்படுத்தும் இந்த விதியை சங்க இலக்கியக் கற்பித்தலுக்குப் பயன்படுத்த முடியும்.

**"கற்பித்தலைத் தனியாள் வேற்றுமைகளுக்கு ஏற்ப மாற்றியமைத்தல் திட்டமிட்டுக் கற்றல் அல்லது நிரல்வழிக் கற்றல் யுக்தி, கற்பித்தல் எந்திரங்கள், கணினி கொண்டு கற்பித்தல் ஆகியவைகளின் அடிப்படை ஸ்கின்னரின் செயல்படு ஆக்கநிறுத்தக் கோட்பாடாகும்."** [25]

இவ்விதிப்படி, தொடர்ந்து இலக்கியங்களைக் கற்பிக்க ஆசிரியர் பயன்படுத்தும் புதுமையான முறைகள், மாணவர்களிடம் தொடர்ந்து சென்று

சேரும் போது, ஆசிரியர் மற்றும் மாணவர்கள் அதாவது கற்றல் மற்றும் கற்பித்தல் என்ற இரு நிலைகளிலும் இந்தப் பயிற்சிகள் ஒரு நிலையான பழக்கமாக மாறி, இலக்கியங்களைக் கற்பிக்கும் ஆசிரியரின் திறமை மேம்படுவதோடு இலக்கியங்களைப் படிக்கும் மாணவர்களின் கற்றல் திறனும் மேம்படும்.

சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் போது ஆசிரியர்கள் துணைக்கருவிகளைப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு, துணைக்கருவிகளின் உதவியுடன் கற்பிப்பதையே இவ்விதி உணர்த்துகிறது. சங்கப்பாடல்களுக்கு ஏற்ற வகையில் வரைபடங்கள் வரைந்து எடுத்துச் செல்லலாம். அந்த வரைபடத்தில் பாடலின் புலவர், பாடப்பெற்ற மன்னன், பாடல், பாடலின் கருத்து, பாடலில் உள்ள சொற்களின் பொருள் போன்றவை இடம்பெறலாம். மேலும், திட்டமிட்டுக் கற்றல் என்ற புதிய உத்தியைச் சங்க இலக்கியக் கற்பித்தலுக்குப் பயன்படுத்தலாம். சங்க இலக்கியப் பாடலைக் கற்பித்த பின்னர், அதுக் குறித்த குறிப்பிட்ட வினாக்களை அட்டைகளாகவோ அல்லது சிறு தாள்களாகவோ தயார் செய்து கொள்ள வேண்டும். பின்பு, அதை மாணவர்களிடத்தில் கொடுத்து விடைகளை அறிந்து கொள்ளச் செய்தல் வேண்டும். இதனால், படித்த செய்திகளை மாணவர்கள் மீண்டும் அறிந்து கொள்ள முடியும். ஏதேனும், சந்தேகங்கள் இருந்தாலும் இந்த பயிற்சியின் போது தெளிவு பெறுவர். இவ்வாறு திட்டமிட்டுக் கற்றலானது சங்க இலக்கிய கற்றலுக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும். மேலும் கணினியைச் சங்க இலக்கியக் கற்பித்தலுக்குப் பயன்படுத்துதல் இன்றியமையாததாக கருதப்படுகிறது. வலைதளங்களின் மூலம் படப்பதிவுகளை இறக்கி மாணவர்களுக்குக் காட்டலாம். சங்க இலக்கியம் தொடர்பான செய்திகளைக் கணிணியில் பதிவேற்றி கற்பித்தலுக்கு இடையில் காட்டலாம். மேலும், சங்க இலக்கியப் பாடல்களை இசையுடன் பாடி ஒலிபெருக்கியில் கேட்கச் செய்யலாம்.

**கெஸ்டால்ட் கொள்கையினரது ‘தொடர்புமாற்றம்’ (Theory of Tranposition) என்ற விதிப்படி ‘‘கற்றல் மாற்றம் என்பது பலவற்றிற்குள்ள தொடர்பு ஒற்றுமைகளைக் கண்டறிந்து, இவ்வறிவைப் புதுநிலைகளில் பயன்படுத்தக்கூடிய திறனைப் பொறுத்திருக்கிறது என்று கெஸ்டால்ட் கொள்கையினர் கருதுகின்றனர். பொருளுணர்ந்து கற்றால்தான் பயிற்சி**

**மாற்றம் எழுமே தவிர நெட்டுருச் செய்தால் நிகழாது என்றும் இவர்கள் சோதனைகள் மூலம் கண்டறிந்தனர். 'ஒரு நிலைமையில் காணப்படும் பண்புகளை வேறொரு நிலைமைக்கு மாற்றுதல் பயிற்சி மாற்றத்தின் அடிப்படையாகும் என்றும் கெஸ்டால்ட் அறிஞர்கள் கருதுகின்றனர்."** [29]

இக்கோட்பாடானது, இன்றைய சூழ்நிலையில் சங்க இலக்கியக் கற்பித்தலுக்கு மிகவும் ஏற்புடையதாக அமைகிறது. மாணவர்கள் எதையும் பொருளுணராமல் மனனம் செய்வதால் அவர்களின் எண்ணத்தில் எந்த மாற்றமும் நிகழாது. எனவே, சங்கப் பாடல்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அதைப் பற்றிய அனைத்து விளக்கங்களையும் மாணவர்கள் உணரும் வண்ணம் கற்பித்தல் இன்றியமையாததாகிறது. சங்கப் பாடல்களை அதன் தனித்தன்மையோடு பொருளுணர்ந்து படிக்க மாணவர்களைப் பழக்குதல் வேண்டும். அவ்வாறு, படித்தால் மட்டுமே மேலும் பல சங்க இலக்கியப்பாடல்களைப் படிப்பதற்கு அது உறுதுணையாக இருக்கும்.

**பேக்லியின் குறிக்கோள் (Bagley's Theory of Ideals) என்ற விதிப்படி 'கற்க நாம் கையாளும் முறைகளைக் குறிக்கோள் நிலைக்கு உயர்த்தினால், நாம் எதைக் கற்கத் தொடங்கினாலும் இவை நமக்குப் பயன்படும்' என்று பேக்லி கருதுகிறார். குறிக்கோள்கள் கற்றலில் கற்போரது முழு ஈடுபாட்டிற்கு வழிவகுக்கின்றன.** [30]

எடுத்துக்காட்டாக, ஒழுங்காகச் செய்தல் என்னும் முறையை ஏதோ ஒரு காரியத்தைச் செய்யும்போது மட்டும் மேற்கொள்ள வேண்டிய முறை என்று எண்ணாமல் ஒரு குறிக்கோளாக அதைக் கொள்வேமேயானால், எக்காரியத்தை மேற்கொண்டாலும் நம்மையறியாமலேயே அதனை ஒழுங்காகக் செய்து முடிக்கத் தோன்றும்.

சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பிக்க எத்தனை வழிமுறைகளைக் கையாண்டாலும் ஆசிரியரின் ஈடுபாடு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. எனவே, சங்க இலக்கியப் பாடல்களை மாணவர்களிடத்தில் கொண்டு சேர்ப்பதை ஆசிரியர்கள் இலக்காகக் கொண்டால் மட்டுமே மேற்கண்ட அனைத்து வழிமுறைகளும் சாத்தியமாகும். எனவே, தேர்வுக்காகவோ அல்லது கடமைக்காகவோ சங்க இலக்கியங்களை மாணவர்களுக்குக் கற்பிக்காமல் உள்ளார்ந்த மனநிறைவோடு கற்பிக்க வேண்டும்.

### 2.6 சங்க இலக்கியங்களை கற்பிக்க மேலும் சில வழிமுறைகள்

இலக்கியம் கற்பித்தல் என்ற தொடர் இலக்கியத்தில் கற்பித்தல், இலக்கியத்தைக் கற்பித்தல் என்ற இரண்டு பொருள்களில் கையாளப்படுகின்றது. இலக்கியத்தில் கற்பித்தல் எனும்போது இலக்கியம் ஓர் ஊடகமாகவும் இலக்கியத்தைக் கற்பித்தல் எனும்போது மொழி ஒரு பாடப் பொருளாகவும் அமைகின்றது. தமிழாசிரியர்களின் முதன்மையான பணி இலக்கியத்தைக் கற்பிப்பதே. இலக்கியத்தைக் கற்பிப்பது என்பது வெறுமனே இலக்கியத்தின் இலக்கண விதிகளை, இலக்கிய அமைப்பினைக் கற்பிப்பது மட்டுமன்று. இலக்கியத்தை அதன் பயன்பாட்டு நோக்கில் தொடர்பாடல் கருவியாகப் பயன்படுத்தும் நுணுக்கங்களைக் கற்பிப்பதும் மற்றுமோர் இன்றியமையாத நோக்கமும் உண்டு. அது, இலக்கியம் பேசும் இனத்தை, இனத்தின் வரலாற்றை இனத்தின் பண்பாட்டைக் கற்பது என்பதுமாகும்.

தொல்காப்பியர் காலம் தொட்டு இருபத்தைந்து நூற்றாண்டுகளைக் கடந்து தமிழ்க்கல்வி இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் புதிய சவால்களை எதிர்கொண்டு நிற்கின்றது. இலக்கிய இலக்கணக் கல்வியே தமிழ்க்கல்வி. மனப்பாடம் செய்வதே வெற்றிகரமான கற்கும் முறை என்றிருந்த தமிழ்க்கல்வி வரலாற்றில் இந்நூற்றாண்டின் இணையமும் பல்லூடகமும் பல புதிய கதவுகளைத் திறந்து வைத்துள்ளன. சுவர்களுக்குள் கட்டுப்பட்டிருந்த வகுப்பறைகள் மறைந்து உலகத்தையே வகுப்பறையாக மாற்றிய பெருமை இணையத்திற்குண்டு.

**சித்திரப்பாவையின் அத்தகவு அடங்கிச்**
**செவி வாயாக நெஞ்சு களனாகக்**
**கேட்டவை கேட்டவை விடாது உள்ளத்தமைத்து (நன்னூல்)**

பாடம் கேட்ட மாணவன் உயிர்பெற்று இயக்கத்திலிருந்து ஐம்புலன்களாலும் கற்கும் காலம் கனிந்து விட்டது. தமிழாசிரியர்கள் இலக்கிய இலக்கணக் கொள்கலன்களாக இருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்த காலங்கள் பழங்கதையாகி, நவீன அறிவியல் தொழில் நுட்பத் தேர்ச்சியும் உலகு தழுவிய விசாலப் பார்வையும் கொண்டவர்களாகப் புதிய அவதாரம் எடுத்துள்ளனர்.

கற்பித்தல் என்பது ஒரு கலை. அதிலும் இலக்கியம் கற்பித்தல் என்பதனைத் தனிப்பட்ட ஒவ்வோர் ஆசிரியரின் செய்நேர்த்தியோடு கூடிய

கலையாகவே நாம் கருதுதல் வேண்டும். மொழியாசிரியர் தம் பணியின் தொடக்க காலங்களில் தாம் கற்றுக்கொண்ட ஏதோ ஓர் அணுகுமுறையில் இலக்கியக் கல்வியைத் தொடங்கினாலும் தம் பணியில் அனுபவ முதிர்வு ஏற்பட ஏற்படத் தமக்கான ஒரு கற்பித்தல் அணுகுமுறையினைத் தாமே உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். இத்தகு புதிய அணுகுமுறை அவரவர்க்கு வாய்த்த வகுப்பறைச் சூழல்களின் அடிப்படையில் உருவாக வேண்டும். இலக்கியம் கற்பித்தலின் வெற்றிகரமான பழைய அணுகுமுறைகள் பலவும் தனிப்பட்ட ஆசிரியர்கள் சிலரால் உருவாக்கப்பட்டவைகளே என்பதனையும் நினைவில் கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

ஓவியக் கலைஞனோ, சிற்பக் கலைஞனோ, இசைக் கலைஞனோ எந்த ஒரு கலைஞனும் தன் கலைத்திறமைக்குத் தேவைப்படும் சில அறிவியல் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு தன் கலையை வளர்த்துக் கொண்டாலும் அக்கலைஞனின் வெற்றி அவனது தனிப்பட்ட செய்நேர்த்தியிலும் படைப்பாற்றலிலும்தான் முழுமை பெறுகிறது. அதேபோல் ஆசிரியனும் ஒரு கலைஞனே. அவனது வகுப்பறை ஒரு கலைக்கூடமே. அவனது கற்பித்தல் ஒரு கலை வெளிப்பாடே. ஆசிரியனின் வெற்றியும் அவனது தனிப்பட்ட கற்பித்தல் நேர்த்தியிலும் தகுதியான மாணவர்களை உருவாக்கும் படைப்பாற்றலிலும்தான் முழுமை பெறுகிறது. கற்பித்தல் செய்நேர்த்தி என்பது ஆசிரியரின் ஈடுபாட்டோடு தொடர்புடையது. எத்தனை மேடைகளில் பாடியிருந்தாலும் நடனமாடியிருந்தாலும் அன்றைக்குத்தான் முதல்முறையாக மேடையேறும் கலைஞர்களைப் போல் பாடகர்களும் நடனக் கலைஞர்களும் சாதகம் செய்தோ ஒத்திகை பார்த்தோ தங்களைத் தயார் செய்து கொள்வதைப் போல் ஆசிரியர்களும் ஒவ்வொரு நாளும் கற்பிக்க வகுப்பறைக்குச் செல்வதற்கு முன் முன் தயாரிப்பில் ஈடுபட்டு ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இத்தகைய ஈடுபாடே ஆசிரியர்களின் வெற்றிக்கு முதல்படி.

### 2.7 சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதில் ஆசிரியரின் பங்கு

ஆசிரியருக்கான ஒரு சிறந்த கற்பிக்கும் கருவி பாடநூல். ஆசிரியர் நூலிலுள்ள சங்க இலக்கியப் பாடல்கள் மட்டுமல்லாது, அதனுடன் தொடர்புடைய பிற கருத்துகளையும் கூற வேண்டும். சங்க இலக்கியங்களைக் கற்பிக்க பாடநூலினை ஒரு கருவியாகப் பயன்படுத்த

வேண்டுமேயன்றி பாடநூலை மட்டும் சார்ந்து சங்க இலக்கியங்களை கற்பிக்கக் கூடாது. சங்க இலக்கியங்கள் மாணவர்கள் மனதில் ஆழமாக சென்றடைவதற்கான பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ளதைக் காட்டிலும் சங்க இலக்கியங்கள் பற்றிய அதிகப்படியான செய்திகளை மாணவர்களுக்கு எடுத்தியம்புவதை கடமையாகக் கருத வேண்டும். சங்க இலக்கியப் பாடல்களை மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது அவற்றில் காய்தல், உவத்தலின்றி, வேறு எவ்விதப் பிரச்சினைக்கும் இடம் கொடாமல் புறவயத்தன்மையோடு கற்பித்தல் அவசியமாகும். சங்க இலக்கியப் பாடல்கள், ஒவ்வொரு வகுப்பிற்கும் ஏற்ற வகையில் பாடத்திட்டத்தினையொட்டி தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்டிருப்பதற்கான காரணத்தை ஆசிரியர்கள் உணர்ந்து கற்பிக்க வேண்டும். சங்க இலக்கியப் பாடல்களைப் படித்துக் கற்பிக்கத் தயாராகும் ஆசிரியர் தம்மை மாணவர் நிலையில் வைத்து மாணவர்களுக்குப் புரியும் வகையில் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும். சங்க இலக்கியங்களைப் படிப்பதற்கு முக்கியமான இலக்கண அறிவை மாணவர்களிடம் வளர்ப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். மனப்பாடம் செய்தல் என்ற பண்டையோர் திறமையின் இன்றியமையாமையை மாணவர்களுக்கு எடுத்தியம்பி அவர்களுக்கு மனனம் செய்யும் திறமையை வளர்த்தல் வேண்டும். ஆசிரியரும் மாணாக்கருடன் உடன் இருந்து பயில்வதற்குத் தயாராக இருக்க வேண்டும். அப்போதுதான், ஆசிரியர்களிடம் மாணவர்களுக்கு நம்பிக்கை ஏற்படும். மனப்பாடம் செய்த பகுதிகளின் சொல்லும் பொருளும் எப்போதும் உள்ளத்திலும் காதிலும் ஒலித்துக் கொண்டிருக்க வேண்டுமெனில், அவற்றை அவ்வப்போது நினைவுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டும். கற்றலை இன்பம் தரும் செயலாக மாற்ற வேண்டும். மாணவர் பேசவும் தம் கருத்தை எடுத்துக்கூறவும் வாய்ப்புகளைத் தர வேண்டும்.

### 2.8 சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதில் உள்ள சிக்கல்கள்

சங்க இலக்கியப் பாடல்கள் இயற்கையோடு ஒன்றிணைந்துப் பாடப்பட்டவை. சங்க இலக்கியங்களின் வாழ்வியல் பின்புலங்கள் பாடலின் தனித்தன்மையை எடுத்தியம்புவதாக உள்ளன. இக்காலச் சூழ்நிலையில் சங்க இலக்கியப் பாடலுக்கேற்ற இயற்கை சூழ்நிலையையோ, வாழ்வியல் கூறுகளையோடு மாணவர்களிடத்தில் காட்சிப்படுத்துதல் என்பது சிரமமான

செயலாக உள்ளது. அக்கால மாந்தர்களின் சூழ்நிலையை இன்றைய மாணவர்களிடத்தில் காட்சிபடுத்துவது பெரிய இலக்காக உள்ளது. இன்றைய மாணவர்கள் எந்த ஒரு செய்தியையும் ஆராய்ச்சியின் வெளிப்பாடாகவே நம்பும் சூழ்நிலையில், சங்க இலக்கியங்கள் பற்றிய ஆதாரங்கள், புத்ததகமாக மட்டுமே உள்ளது. இதனால், மாணவர்களிடம் சங்க இலக்கியங்கள் மீது நம்பிக்கை வரவழைப்பது சற்று கடினமாக உள்ளது. இன்றைய நடைமுறையில் இருக்கும் தமிழ் சொற்களுக்கும் சங்க இலக்கிய தமிழ்ச்சொற்களுக்கும் மிகுந்த வேறுபாடு உள்ளதால், சங்க இலக்கியங்களின் மீது ஆர்வம் ஏற்படுவது கடினம். தமிழில் வழக்கில் உள்ள சொற்களைக் கற்பதற்கே மாணவர்கள் சிரமப்படும் சூழ்நிலையில், வழக்கிழந்த சொற்கள் அதிகம் உள்ள சங்க இலக்கியப் பாடல்களைக் கற்கும் போது விரைவில் சோர்வடைந்து விடுகின்றனர். பெரும்பாலும், சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பிக்கும் போது, ஆசிரியர்கள் சங்க இலக்கிய நிகழ்வுகளுக்கும் விளக்கங்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதால் சங்கப்பாடல்களில் அதிகக் கவனம் செலுத்த முடிவதில்லை. இன்றைய கல்விச் சூழ்நிலை மதிப்பெண்ணுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக அமைவதால், வினாத்தாள்களுக்கு ஏற்றவகையில் சங்க இலக்கியங்களையும் ஒரு மதிப்பெண் கூறாகக் கொண்டு ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. அதனால், சங்க இலக்கியங்களின் தனித்தன்மை மாணவர்களிடத்தில் சென்று சேருவதில்லை. மேலும், தமிழ்ப் பாடத்திற்குரிய பாடவேளையில் பாடங்கள் அனைத்தையும் குறித்த நேரத்தில் முடிக்க வேண்டிய கட்டாயத்தில் ஆசிரியர்கள் செயல்படுவதால், அவர்கள் செய்ய நினைக்கும் சில புதுமை நிறைந்த கற்பித்தலுக்கு நேரமில்லாமல் போகிறது. மேலும், பல பள்ளிகளில் நிர்ணயிக்கப்படும் பல கட்டுப்பாடுகளை மீறி ஆசிரியர்களால் கற்பித்தலில் தேவையான உத்திகளைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலையும் ஏற்படுகிறது. சங்க இலக்கியங்கள் என்பது பெரும்பாலும், மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் ஆசிரியர்களுக்கும் ஒரு சவாலான ஒரு பாடமாக இருப்பதால், ஆசிரியர்களின் அனுமதியோடு மாணவர்கள் அதை ஒதுக்கிவிடும் சூழ்நிலையும் ஏற்படுகிறது. இன்று தனியார் பள்ளிகளும் ஆங்கில வழிப் பள்ளிகளும் அதிகமாகிவிட்ட சூழ்நிலையில், தமிழின் தரம் குறைந்து வருவதோடு தமிழ் மீது மாணவர்களுக்கு உள்ள ஆர்வமும் குறைந்து வருகிறது. இச்சூழ்நிலையில் சங்க இலக்கியங்களின் தனித்தமிழை மாணவர்கள் கற்பது கட்டாயப்படுத்த வேண்டிய ஒன்றாக

உள்ளது. இதனால், மாணவர்களுக்கு சங்க இலக்கியங்களின் மீது மிக எளிதாக வெறுப்பு ஏற்பட்டு விடுகிறது. தமிழ் மற்றும் தமிழ் சார்ந்த போட்டிகள், மன்றங்கள், செய்திகள் போன்றவற்றிலும் தமிழ் செய்யுள்களான திருக்குறள் போன்றவற்றிற்கு இடம் அளிக்கப்படுகிறதே தவிர, சங்க இலக்கியங்களுக்கு இடம் அளிக்கப்படுவதில்லை. அதனால், மாணவர்கள் சங்க இலக்கியம் படிப்பதற்கான அவசியம் இல்லை என எண்ணும் சூழ்நிலை ஏற்படுகிறது. இக்காலங்களில் சமகால இலக்கியங்களுக்கு கிடைக்கும் முக்கியத்துவமும் ஈடுபாடும் சங்க இலக்கியங்களுக்குக் கிடைப்பதில்லை. சங்க இலக்கியத்தில் உள்ள சூழலுக்கும் தற்கால சூழலுக்கும் மிகுந்த வேறுபாடு உள்ளதால், மாணவர்கள் அக்கால சூழ்நிலையை ஏற்க வேண்டிய கட்டாயம் இல்லை என எண்ணுகின்றனர்.

### 2.9. முடிவுரை

இவ்வியலில், சங்க இலக்கியங்களில் அறிந்திருக்க வேண்டிய பொதுப்பண்புகள் என்ற தலைப்பில், அகம் புறத்தைப் பொருளாகக் கொண்டிருத்தல், அகத்திணைப் பாடல்களின் மரபுகள், புறத்திணைப் பாடல்களின் மரபுகள், பன்முகக் கூறுகள் மற்றும் உத்திகள், சொற்செறிவும் பொருட்செறிவும், அகவல் வஞ்சி யாப்புகளைக் கொண்டிருத்தல், தனிநிலைச் செய்யுட்களாக அமைதல் ஆகிய துணைத் தலைப்புகளின் கீழ் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. அடுத்து, சங்க இலக்கியங்களில் கற்பிக்க வேண்டிய முக்கியக் கூறுகள் என்ற தலைப்பின் கீழ், இலக்கியங்களுக்கே உரிய ஓசை நயம், இலக்கியங்களுக்குரிய சொற்களைப் பிரித்துப் படித்தல், இலக்கியங்களின் சொற்செறிவு பொருட்செறிவு, சொல்லாட்சித்திறன், எதுகை, மோனை, திணை, துறை போன்ற இலக்கியக் கூறுகள், பொருள் உணர்ச்சிக்கேற்ற குரல் ஏற்றத்தாழ்வு, நாநெகிழ் நாபிறழ் பயிற்சி, இலக்கியச் சொற்களைத் தொடர்களாக்குதல், கருத்தால் ஒத்த பிற பாடல்கள், இலக்கியங்களின் விழுமியங்கள் ஆகிய துணைத் தலைப்புகளின் கீழ் செய்திகள் ஆராயப்பட்டுள்ளன. அடுத்து, சங்க இலக்கியங்களை கற்பிக்கும் உத்திகள் என்ற தலைப்பின் கீழ், பாடப்பொருளுக்கு ஏற்றவாறு ஆர்வப்படுத்துதல், பகுதியிலிருந்து முழுமைக்கு செல்லல், முழுமையிலிருந்து பகுதிக்குச் செல்லல், துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல், இசையுடன் பாடுதல், நடித்துக் காட்டுதல், குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்தல், மாணாக்கரைப் பங்கெடுக்கச் செய்தல், நினைவூட்டுதல், ஒப்புமைப்படுத்திக்

கற்பித்தல், தொடர்புடைய செய்திகள், நிகழ்வுகள், வரலாறுகள் ஆகியவற்றைக் கூறுதல், எளிய படங்கள் வரைதல், மாணவர்-புலன்களுக்குப் பயிற்சி அளித்தல், விளையாட்டு முறையில் கற்கத் தூண்டுதல், நாட்டுநடப்புச் செய்திகளை அறிந்து கூறுதல், பள்ளிச் சூழலில் அமைந்துள்ள பொருட்களைப் பயன்படுத்தல், அறிந்ததிலிருந்து அறியாததற்குச் செல்லுதல், எளிமையிலிருந்து அருமைக்குச் செல்லுதல், தெளிவிலிருந்து சிக்கலுக்குச் செல்லுதல், தொடர்புடைய நூல்களைப் படிக்கச் செய்தல் ஆகிய துணைத் தலைப்புகளின் கீழ் கருத்துகள் கொடுக்கப்பட்டுள்ளன. அடுத்து, கற்பித்தல் கோட்பாடுகளின் அடிப்படையில் சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் உத்திகள் என்ற தலைப்பில், தார்ண்டைக்கின் முயன்று தவறிக் கற்றல் கோட்பாடு, பாவ்லோவின் ஆக்க நிலையிறுத்தக் கோட்பாடு, ஸ்கின்னரின் செயல்பாடு ஆக்க நிலையிறுத்தக் கோட்பாடு, கற்றல் - கற்பித்தலில் ஏற்பட்ட மாற்றம், முழுமைக்காட்சிக் கோட்பாடு, உட்காட்சி வழிக்கற்றல், பொதுமைப்படுத்துதல் கோட்பாடு, கெஸ்டால்ட் தொடர்புமாற்றக் கோட்பாடு, பேக்லியின் குறிக்கோள் கோட்பாடு ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் சங்க இலக்கியங்களைக் கற்பித்தல் முறைகள் விளக்கப்பட்டுள்ளன. அதன் பின்பு, சங்க இலக்கியங்களை கற்பிக்க மேலும் சில வழிமுறைகள், சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதில் ஆசிரியரின் பங்கு, சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதில் உள்ள சிக்கல்கள் ஆகிய தலைப்புகளின் கீழும் கருத்துகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**சங்க இலக்கியங்கள்: கற்பித்தல் முறைகள் மதிப்பீடு** என்ற தலைப்பில் உள்ள மூன்றாவது இயலில் தகவலாளிகளிடமிருந்து வினாநிரல் வாயிலாகப் பெறப்பட்ட தகவல்களை பள்ளி, அமைவிடம், கற்பிக்கும் வகுப்பு, பாலினம், வயது, அனுபவம், பயிற்று மொழி ஆகியவற்றின் அடிப்படையில் பகுத்தாராய்ந்து, அதன் மூலம் பெறப்பட்ட உண்மைகள் ஆராய்ந்து விவாதிக்கப்படுகின்றன.

**அடிக் குறிப்புகள்**

1. சரவண ஆறுமுக முதலியார், **தமிழ்மொழியின் இலக்கிய நோக்கம்**, ப.53
2. இரா.சந்திரசேகரன், **சங்க இலக்கியங்களைக் கற்பித்தல் - கற்றலில் புதிய உத்திகள்**, ப.38
3. கடிகாசலம், சிவகாமி, **சங்க இலக்கியம்**,, ப.62
4. மு. வரதராசன், **பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை**, ப.10
5. கடிகாசலம், சிவகாமி, **சங்க இலக்கியம்**, ப.47
6. க. காந்தி, **தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்** - அணிந்துரைப் பகுதி
7. மு. வரதராசன், **பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை**, ப.18
8. சி.இலக்குவனார், **இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்**, ப.144
9. சி.இலக்குவனார், **இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்,** ப.144
10. ச.மெய்யப்பன், **சங்க இலக்கியம்,** ப.10
11. ரா.சீனிவாசன், **சங்க இலக்கியத்தில் உவமைகள்**, ப.63
12. வி.கணபதி, **நற்றமிழ் கற்பிக்கும் முறைகள்**, ப.154
13. **மேலது,** ப.169
14. **மேலது**, ப.153
15. **மேலது**, ப.169
16. கடிகாசலம், சிவகாமி, **சங்க இலக்கியம்**, ப.56
17. இரா.சந்திரசேகரன், **சங்க இலக்கியங்களைக் கற்பித்தல் - கற்றலில் புதிய உத்திகள்**, ப.36
18. வி.கணபதி, **நற்றமிழ் கற்பிக்கும் முறைகள்**, ப.164
19. **மேலது,** ப.164
20. இரத்தினசபாபதி.பி, **தமிழ் கற்க.. கற்பிக்க..**,ப.96
21. அண்ணாமலை, **தமிழின் புதிய தேவைகளின் பார்வையில் தமிழ் கற்பித்தல்** - இணையக் கட்டுரை (www.keetru.com)
22. நாகராஜன், **கல்வி உளவியல்**, ப.149
23. **மேலது,** ப.157
24. **மேலது,** ப.162
25. **மேலது,** ப.163
26. **மேலது,** ப.166
27. **மேலது,** ப.167
28. **மேலது,** ப.180
29. **மேலது,** ப.181
30. **மேலது,** ப.182

## துணை நூற்பட்டியல்

### தமிழ்


| | | |
|---|---|---|
| அண்ணாமலை மு. | 1998 | **தமிழ்நாட்டில் கல்வி அன்றும் இன்றும்,** அரசு பதிப்பகம், சென்னை. |
| ஆசிரியர் குழு | 2012 | **தமிழ்ப் பாடநூல்கள் (6-12ஆம் வகுப்பு வரை)** தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், சென்னை. |
| ஆசிரியர் குழு | 2013 | **தமிழ் கற்பித்தல்,** தொலைநிலைக்கல்வி இயக்ககம், தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர். |
| இராமானுஜம் சா. | 1991 | **தமிழ்ப் பாடநூல் ஆய்வு (தொகுப்பு)** தமிழகத் தமிழாசிரியர் கழகம், பெரியார் மாவட்டம், ஈரோடு. |
| ஈசுவரமூர்த்தி வ. | 1966 | **கல்வி ஒரு மதிப்பீடு** சிந்தனை பதிப்பகம், சென்னை. |
| ________________ , | 2003 | **தமிழ்க்கல்வி,** அம்சா பதிப்பகம், நங்கநல்லூர், சென்னை – 21 |
| கணபதி வி. | 2004 | **தமிழ் ஐவகை பாடங்களும் கற்பித்தலும்,** சாந்தா பதிப்பகம், சென்னை – 14. |
| ________________ , | 2004 | **தமிழ் இலக்கண இலக்கிய அறிமுகம்,** சாந்தா பதிப்பகம், சென்னை – 14. |
| ________________ , | 2004 | **தமிழ் கற்பிக்கும் முறைகள்,** சாந்தா பதிப்பகம், சென்னை -14. |
| ________________ , | 1964 | **கற்பித்தல் பொது முறைகள்,** சாந்தா பதிப்பகம், சென்னை – 14. |
| ________________ , | 2002 | **நற்றமிழ் கற்பிக்கும் முறைகள்,** சாந்தா பதிப்பகம், சென்னை – 14. |

| | | |
|---|---|---|
| கலைச்செல்வி வெ. | 2007 | **கல்வியியல் தமிழ்,** சஞ்சீவ் வெளியீடு, ஈரோடு. |
| கார்த்திகேயன் | 1970 | **கற்பித்தல் பொதுமுறைகள்,** ஏசியன் பிரிண்டர்ஸ், சென்னை. |
| கருணாகரன் | 1980 | **தமிழ் கற்பித்தல் புதிய அணுகுமுறைகள்,** தமிழ்நாட்டு தொழில்நுட்ப அமைப்புக்கழகம், கோயம்புத்தூர். |
| கோவிந்தராசன் மு. | 2000 | **நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும் முறையும்** திருமலைக் குமரன் பதிப்பகம்,சென்னை – 14. |
| கோவிந்தசாமி நா. | 1979 | **வாசிப்புக் கற்பித்தல்: தமிழ்ப் பள்ளியின் வரலாறு.** இராம் பதிப்பகம், சென்னை. |
| சண்முகம் செ. | 1980 | **தமிழ் மொழிக் கல்வித்திட்டம் சில குறிப்புகள்,** தமிழ்நாட்டு தொழில்நுட்ப அமைப்புக்கழகம், கோயம்புத்தூர். |
| சண்முக செல்வ கணபதி | 2000 | **நன்னூல் தெளிவுரை,** கற்பகம் பதிப்பகம், சென்னை. |
| சந்தானம் எஸ். | 1993 | **கல்விக் கோட்பாடுகளும், தத்துவங்களும்,** சாந்தா பப்ளிகேஷன்ஸ், சென்னை. |
| சரவணஆறுமுக முதலியார் | 2001 | **தமிழ் பயிற்று முறைகள்,** தி எஜிகேஷனல், பப்ளிஷர்ஸ் கம்பெனி, சென்னை -34 |
| சிவத்தம்பி கா | 2007 | **சங்க காலமும், இலக்கியமும் ஆய்வின் மாறும் பரிமாணங்கள், சங்க இலக்கியமும் சமூகமும்,** (பதிப்பாசிரியர்) பத்மநாதன், சி.கொழும்பு. |
| சுப்புரெட்டியார் ந. | 1977 | **கல்வி உளவியல் கோட்பாடுகள்,** இராம் பதிப்பகம், சென்னை. |
| ________________ , | 2000 | **தமிழ் பயிற்று முறை,** மெய்யப்பன் தமிழாய்வகம் வெளியீடு, சிதம்பரம். |

நாகராஜன் கி. 1999 **கல்வி உளவியல்,**
இராம் பதிப்பகம், சென்னை

தண்டபாணி க. 2013 **தமிழ் கற்பித்தல்,**
மீனா பதிப்பகம், சென்னை

திருமலை. மா.சு. 1978 **தமிழ் கற்பித்தல் (அ) மொழிக் கற்பித்தல்**
மணிவாசகர் பதிப்பகம், மேல சன்னதி,
சிதம்பரம்

பரசுராமன் 2007 **பள்ளித் தமிழ் பாடநூல் மதிப்பீடு,**
முத்து பதிப்பகம், புதுச்சேரி.

__________________, 2011 **பள்ளித் தமிழ்,**
முத்து பதிப்பகம், புதுச்சேரி

பரந்தாமனார் அ.கி. 1962 **நல்ல தமிழில் எழுத வேண்டுமா?**
அல்லி நிலையம், 18, முத்து முதலி தெரு,
புரசைவாக்கம், சென்னை – 7.

பாலாஜி லோகநாதன், புனிதா சோ 2009 **சிறப்புத் தமிழ் கற்பிக்கும் முறைகள்,**
N.G.V. Publication, 187/14, 3rd floor,
N.R. Pillai Street, Triplicane, Chennai -5.

__________________, 2009 **நற்றமிழ் கற்பிக்கும் முறைகள்,**
N.G.V. Publication, 187/14, 3rd floor,
N.R. Pillai Street, Triplicane, Chennai -5.

பொன்னப்பன் 1978 **தமிழ் பாடஞ்சொல்லும் முறை,**
தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம்,
முதற்பதிப்பு, சென்னை.

__________________, 1981 **தமிழ்ப்பாடம் சொல்லும் முறை,**
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்,
(இரண்டாம் பதிப்பு) சென்னை.

மகாதேவன் சொ. 2003 **தொடக்கக் கல்வி தமிழ்ப் பாடநூல்கள் ஒரு மதிப்பீடு,** தி பார்க்கர், இராயப்பேட்டை, சென்னை

முரளிதரன் இரா. 2011 **தமிழ்மொழி கற்பித்தல் இன்றைய போக்குகள்,** நியூ விஷன், தஞ்சாவூர்.

முருகையன் க. 1985 **தமிழ் கற்பித்தல் புதிய அணுகுமுறைகள்,** தமிழ்நாட்டுப் பாடநூல் அமைப்புக்கழகம், கோயம்புத்தூர்.

லாவ் டெக் இங் 1975 **கோடிட்ட இடத்தை நிரப்புதல் வழி மௌன வாசிப்புக் கற்பித்தல்,** ஆங்கில மொழி நிலையம், சிங்கப்பூர்.

லெட்சுமி எஸ். 1990 **கல்வியியல் புதுமைகள்,** எம்.வி.கே.டிரஸ்ட் பப்ளிகேஷன்ஸ், சென்னை.

வீரப்பன் பா. 2004 **உயர்நிலை தமிழ் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள்,** வனிதா பதிப்பகம், முதற் பதிப்பு, சென்னை.

**ஆங்கிலம்**

Buch M.B. 1979 **Second Survey of Research in Education,** Baroda.

Gopal Meerabai, 1979 **Diagnostic Test of Reading comprehension skills at secondary school level,** RELC Journal, Singapore.

Clard H. 1986 **Secondary and Middle school Teaching Methods,** Fifth Edition, Macmillan Publishing company, New York.

| | | |
|---|---|---|
| Kothari D.S. | 1970 | **Education and National Development Report of the Education commission,** NCERT, New Delhi. |
| Rastogi K. and others | 1976 | **Preparation and Evaluation of Text Book in Mother-tongue principles and procedures,** NCERT, New Delhi. |
| Sandra Siberstein, | 1994 | **Techniques and Resources in Teaching Reading,** Oxford University Press. |
| Vanaja | 2001 | **Methods of Teaching Mother tongue,** Neelkamal Publication Pvt. Ltd., New Delhi. |
| Wang kim Laf | 1979 | **Measuring Readability of Reading Comprehension Materials in English,** RELC Journal, Singapore. |
| Wendy A. Scott and Lisbeth H. Treberg | 1990 | **English to Children,** Longman. |


**துணை ஆய்வேடுகள்**


| | | |
|---|---|---|
| அய்யாவு வி.கே | 1996 | 'A Study of the common errors committed by Students IX in 'அலகிடுதல்' – Analysis of the Structure in some Tamil poems' - வெளியிடப்படாத எம்.எட்.ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம். |

அர்ச்சுனன கு. 1997 பட்டுக்கோட்டைக் கல்வி மாவட்டத்தில் உள்ள மேல்நிலை வகுப்பு மாணவ-மாணவிகள் தமிழ்ப் பாடம் கற்பதில் ஏற்படும் ஆர்வமின்மை – ஓர் ஆய்வு, வெளியிடப்படாத எம்.பில் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம்.

உமாமகேஸ்வரி உ. 1978 'A Study of the impact of remedial teaching on common spelling erros in Tamil of pupils of standard VIII in selected schools in Madras City' - வெளியிடப்படாத எம்.எட்.ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம்

கவிதா மு. 1997 ஒரத்தநாடு வட்டத்தில் தமிழ் இலக்கண பாடம் கற்பிப்பதில் ஆசிரியர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகள் ஓர் ஆய்வு. எம்.எட். ஆய்வேடு, அரசு கல்வியியல் கல்லூரி, சைதாப்பேட்டை.

கர்ரே டி. 2000 Teaching the mother tongue in secondary schools, வெளியிடப்படாத எம்.பில் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம்

கருப்புசாமி அ. 2005 மேல்நிலைப் பள்ளி தமிழ்த் துணைப் பாடத்தில் சென்னை பெருநகர் மாணவர்களின் ஈடுபாடு பற்றி ஓர் ஆய்வு, வெளியிடப்படாத எம்.பில் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம்.

கிருஷ்ணசாமி இ. 1974 'A Study of the common error in Tamil spelling committed pupils of high school classes in coimbatore district' – வெளியிடப்படாத எம்.பில் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம்.

| | | |
|---|---|---|
| குப்பன் ய. | 1994 | தமிழ்க் கட்டுரையில் மாணவர்கள் செய்துள்ள பிழைகள் - வெளியிடப்படாத எம்.எட். ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம். |
| கோவிந்தராசன் மு. | 1980 | மொழித் திறன்களும் சிக்கல்களும் - வெளியிடப்படாத எம்.எட்.ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம். |
| சோமசுந்தரம் | 2004 | தமிழ் எழுதும் போது ஏற்படும் இலக்கணப் பிழைகள் - வெளியிடப்படாத எம்.எட். ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம். |
| தனலெட்சுமி இரா. | 2015 | பள்ளித் தமிழ் மொழிப் பாடநூல் - ஒரு மதிப்பீடு, முனைவர் பட்ட ஆய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம். |
| தெய்வசிகாமணி பொ. | 2005 | விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ் வழி மற்றும் ஆங்கில வழி பயிலும் ஒன்பதாம் வகுப்பு மாணவர்களிடையே தமிழ் இலக்கண கற்றல் திறன் பெறும் இடம் - ஓர் ஆய்வு, வெளியிடப்படாத எம்.பில் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம். |
| பன்னீர் செல்வம் வ. | 1974 | 'A Study of the common errors committed by students of standard VIII in writing tamil Composition' – வெளியிடப்படாத எம்.எட். ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம். |
| மணிகண்டன் ம. | 2006 | ஒன்பதாம் வகுப்பு மாணவ-மாணவிகளுக்கிடையே தமிழ் இலக்கணத் திறன் பற்றி ஓர் ஆய்வு – வெளியிடப்படாத எம்.எட். ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம். |

| | | |
|---|---|---|
| மாசிலாமணி அ. | 2000 | தஞ்சைக் கல்வி மாவட்டத்தில் தமிழ்ச் செய்யுள் கற்பதில் பத்தாம் வகுப்பு மாணவர்களிடையே ஏற்படும் இடர்ப்பாடுகள் - ஓர் ஆய்வு, வெளியிடப்படாத எம்.பில் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம். |
| மலைவாசன் கி. | 2004 | தமிழ் வழி கற்றல்- கேட்டல் என்னும் தலைப்பில் உயர்நிலைப் பள்ளி மாணவர்களிடையே ஆய்வு, வெளியிடப்படாத எம்.பில் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம் |
| ராஜேந்திரன் சோ. | 1999 | தமிழ்ச் சொற்களை உச்சரிப்பதில் காணப்படுகின்ற பொதுவான பிழைகள் - வெளியிடப் படாத எம்.எட். ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம். |
| வித்யாராணி பி. | 2001 | தமிழ் இலக்கணத்தைக் கற்பித்தலில் ஆசிரியர்களுக்குள்ள குறைபாடுகள் - வெளியிடப்படாத எம்.எட். ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம். |
| ஷீக்லா | 1994 | சுகாமேல்சன் தாய் பல்கலைக்கழக இரண்டாம் ஆண்டு மாணவர்களின் ஆங்கில அடைவுத் தேர்ச்சியைப் பாதிக்கும் காரணிகள் பற்றி ஓர் ஆய்வு, வெளியிடப்படாத எம்.பில் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம். |
| ஹால்ட் டேனியன் | 1998 | ஒன்று சேர்ந்து கற்றலுக்கும் மொழியை அறிதலில் மேல்நிலை, அடை தேர்ச்சி மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கும் உள்ள தொடர்பு பற்றி இடைநிலை மாணவர்களிடம் ஓர் ஆய்வு, வெளியிடப்படாத எம்.பில் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம். |

ஜெரீனா பேகம் அ. 2001 காஞ்சிபுரம் மாவட்டம் செய்யூர் தாலுகாவில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் பயிலும் ஒன்பதாம் வகுப்பு மாணவர்களின் தமிழ் இலக்கணத்திறன் - ஓர் ஆய்வு , வெளியிடப்படாத எம்.பில் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம்.


## இணையக் கட்டுரைகள்

| | | |
|---|---|---|
| 1 | அண்ணாமலை | தமிழின் புதிய தேவைகளின் பார்வையில் தமிழ் கற்பித்தல் *keetru.com/index.php/2014-03-08-04-35-27/.../20038-2012-06-09-02-36-4* |
| 2 | சிவக்குமரன். இரா. | சிங்கப்பூரில் தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலில் கணிணியின் பயன்பாடு http://www.geotamil.com/pathivukalnew/index.php?option=com_content&view=article&id=2160:2014-06-16-10-30-36&catid=42:2011-03-23-18-25-23&Itemid=55 |
| 3 | நற்குணன் .சு. ப. | இணையம் வழித் தமிழ்க் கற்பித்தல் http://thirutamil.blogspot.in/2011/11/4.html |
| 4 | பரசுராமன் | தமிழ்க் கற்பித்தலில் பயிற்சிகள், *keetru.com/index.php/2014-03-08-04-35-27/.../20038-2012-06-09-02-36-4* |
| 5 | திண்ணப்பன் சு.ப. | கணினியும் தமிழ்க் கற்பித்தலும், *keetru.com/index.php/2014-03-08-04-35-27/.../20038-2012-06-09-02-36-4* |

**துணைநின்ற வலைதளங்கள்**

www.dinamani.com

www.nakkeeran.com

www.chennaionline.on

www.senkodi.wordpress.com

www.webdunia.com

www.kalachuvadu.com

www.tamilkurinji.com

www.tamil.darkbb.com

www.muthukamalam.com

www.keetru.com

# சங்கப் பனுவல்:
# கற்றல், கற்பித்தல் முறைகள்

சென்னைப் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்காக
அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்
**ம.உமாமகேஸ்வரி,**
எம்.ஏ., எம்.பில்., எம்.எட்., எம்.பில்.,

நெறியாளர்
முனைவர்.ப.டேவிட் பிரபாகர்

தமிழ்த்துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி,
தாம்பரம், சென்னை—600 059
நவம்பர் - 2017

போதும். வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துச் செய்திகளும் கிடைத்துவிடும். உதாரணமாக,

**ஆடுஆமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்**
**கோடை அவ்வளி குழலிசை ஆகப்**
**பாடுஇன் அரவிப் பனிநீர் இன்இசைத்**
**தோடுஅமை முழவின் துதைகரல் ஆகக்**
**கணக்கலை இகுக்கும் கடுங்குரற் தூம்பொடு,**
**மலைப்பூஞ் சாரல் வண்டுயாழ் ஆக,**
**இன்பல் இமிழ்இசை கேட்டுக் கலிசிறந்து,**
**மந்தி நல்அவை மருள்வன நோக்கக்**
**கழைவளர் அடுக்கத்து, இயலிஆ டுமயில்**
**நனவுப்புகு விறலியின் தோன்றும் நாடன் (அக.82)**

என்ற பாடலை விளக்கும் போது, மாணவர்களிடத்தில் இயற்கைக் காட்சிகள் தொடர்பான கேள்விகளைக் கேட்டு அதன் மூலம் வரும் விடைகளை இப்பாடலோடு தொடர்புபடுத்தி விளக்கும் போது கற்பித்தல் இயல்பாகவும் சுலபமாகவும் நடைபெறும். மேலும், இது போன்ற பாடல்களைக் கற்பிக்கும் போது இவ்விதிகள் மிகவும் ஏற்புடையதாக உள்ளது.

**வேறுபடுத்தி அறிதல் விதிப்படி**, எல்லாவிதமான பாடப்பொருளுக்கும் ஒரேமாதிரியான கற்றல் சூழலை, ஊக்குவிப்பைப் பயன்படுத்தாமல், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு பாடப்பொருளுக்கும் வெவ்வேறு விதமான கற்றல் சூழ்நிலை நிலை அல்லது ஊக்குவிப்பை வழங்க வேண்டும்.

பாடநூலில் பெரும்பாலும், புறநானூற்றுப் பாடல்கள் இடம்பெறுகின்றன. அகப்பாடலாக இருந்தாலும் பெரும்பாலும் புறம் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. இச்சூழ்நிலையில் ஆசிரியர்கள் அனைத்து பாடல்களிலும் அரசனின் பெருமைகளையும், மேன்மைகளையும் விளக்கும் சூழ்நிலை உள்ளது. அதனால், எல்லா வகுப்பிலும் ஆசிரியர் ஒரே மாதிரியான கற்றல் சூழ்நிலையையோ, ஊக்குவிப்பையோ, கேள்விகளையோ பயன்படுத்துதல் கூடாது. இது மாணவர்களிடத்தில் சலிப்பை ஏற்படுத்தும். மேலும், வெவ்வேறு வகுப்பாக இருந்தாலும் மாணவர்கள் ஒருவருக்கொருவர் பேசும் பொழுது வகுப்பறைச் சூழலைப் பற்றி கலந்துரையாடும் வாய்ப்புகள் அதிகம். அவ்வாறு கலந்துரையாடும் போது அவர்கள் அறிந்த அதே ஊக்குவிப்பு செயலை

ஆசிரியர் பின்பற்றும் போது, அதனால் பாடத்தின் மீதும் ஆசிரியர் மீதும் மாணவர்களுக்கு நம்பிக்கையின்மை ஏற்படும் வாய்ப்பு உண்டு. எனவே, அரசன் பற்றிய செய்திகளை மாணவர்களுக்கு எடுத்தியம்பும் போது, புறநானூற்றுப் பாடலைப் பொருள், பாடிய புலவர், பாடப்பட்ட அரசர், கொடுக்கப்பட்ட விழுமியங்கள் ஆகியவற்றைப் பொருத்து கற்பித்தல் செயல்பாடுகளில் வேறுபாடுகளைக் காட்டலாம். இதனால், மாணவர்களுக்குப் புதிய சங்க இலக்கியப் பாடலைப் படிக்கும் ஆர்வம் ஏற்படும்.

**இரண்டாம் ஆக்க நிலையிறுத்தம் விதிப்படி**, பாடப்பொருளுக்காக நாம் உருவாக்கிய கற்றல் சூழலால் மாணவன் பாடப்பொருளின் விளக்கங்களை அறிவதோடு, பாடப்பொருட்களையும் மீறி அது சம்பந்தப்பட்ட செய்திகளை அறிந்து கொள்வதற்கு ஆர்வம் கொள்ளுமாறு நமது கற்பித்தல் அமைய வேண்டும்.

இவ்விதியானது நமது சங்க இலக்கியக் கற்பித்தலுக்கு இன்றியமையாததாகும். பாடநூலில் இருக்கும் சங்கப்பாடல்களைக் கற்பித்தால் போதும் என்ற சூழ்நிலை உள்ள இன்றைய நிலையில் இந்த விதியை விவாதிப்பது இன்றியமையாததாகும். பாடநூலில் உள்ள சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பிப்பதன் மூலமும் அதன் கருத்துகளை ஆசிரியர்கள் எடுத்தியம்பும் முறையிலும் சங்கப்பாடலின் தனித்தன்மையை மாணவர்களுக்குக் கட்டாயம் விளக்குதல் வேண்டும். பாடநூலில் உள்ள சங்க இலக்கியப் பாடல்களை விளக்கும் போது, அது தொடர்பான பாடல்களையும் அவை உள்ள நூல்களையும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் அறிமுகப்படுத்துதல் வேண்டும். மேலும், பாடநூலைத் தவிர பிற சங்க இலக்கியம் தொடர்பான நூல்களைப் படிப்பதில் மாணவர்களை ஆர்வமூட்டுதல் வேண்டும். இதன் மூலம் மாணவர்களுக்கு அதைத் தொடர்ந்து மேலும் பல சங்க இலக்கியப் பாடல்களைப் படிப்பதில் ஆர்வம் ஏற்பட வேண்டும். எனவே, ஆசிரியர்கள் இவ்விதியை மனதில் கொண்டு சங்க இலக்கியங்களைக் கற்பிக்க வேண்டும்.

**ஸ்கின்னரின் செயல்படு ஆக்கநிலையிறுத்தம் (Skinner’s operant conditioning) ‘‘ஓர் உயிரி பல்வேறு துலங்கல்களை வெளியிடும்போது, அவைகளில் நாம் விரும்பும் ஒரு குறிப்பிட்ட துலங்கல் தோன்றும் போது உடனடியாகப் பாராட்டுதல் அல்லது பரிசளித்தல் போன்ற**

**வலுவூட்டியை அளித்தால், அந்தக் குறிப்பிட்ட துலங்கல் திரும்பத் திரும்ப தோன்றி அதுவே பழக்கமாக மாறிவிடும். எனவே, நாம் விரும்பும் துலங்கலை வலுவூட்டி நடத்தையாக ஆக்குதல் என்பதே ஸ்க்கின்னரின் செயல்படு ஆக்கநிலையிறுத்தத்தின் அடிப்படை சாரமாகும்"** [24]

இக்கோட்பாட்டின் படி, இலக்கியங்களைக் கற்பிக்க நாம் புதுமையான கற்றல் சூழ்நிலையை உருவாக்கிக் கற்பிக்கும் போதும் மாணவர்களிடத்தில் ஏற்படும் சிந்திக்கும் திறனைப் பாராட்டி பரிசுகள் வழங்கும் போதும் இது போன்ற செயல்கள் தொடர்ந்து நடந்தேறி வரும்போது ஒரு நேரத்தில் மாணவர்களிடம் இலக்கியம் பற்றிய இந்தச் சிந்தனை பழக்கமாகவே மாறி தொடர்ந்து இலக்கியங்களைப் படிக்கும் நிலை ஏற்படும் வாய்ப்புண்டு. இலக்கியம் கற்பித்தலில் கொடுக்கப்படும் பரிசுகளானது இலக்கியங்களின் மேலும் கற்றலுக்காக வழங்கப்பட வேண்டும். புதிய இலக்கியப் பாடல்களை மாணவர்கள் கண்டறிதல், சங்க இலக்கியங்கள் பற்றிய செய்திகளை மற்ற நூல்களிலிருந்து சேகரித்தல், பாடநூலில் உள்ள சங்க இலக்கியப் பாடலை மனனமாக சொல்லுதல், குறிப்பிட்ட புலவர்களின் வேறு சில பாடல்களைக் கண்டறிதல், பாடலின் கருத்துகளைத் தொகுத்தல், பாடல் மூலம் பெறப்படும் செய்தியைத் தொகுத்தல், பாடல் மூலம் மாணவர்கள் பெற்ற விழுமியங்களைத் தொகுத்தல் போன்ற செயல்பாடுகளுக்கு மாணவர்களுக்கு வலுவூட்டிகளை வழங்கலாம். இதனால், சங்க இலக்கியப் பாடலை மேலும் கற்கும் ஆர்வம் மாணவர்களிடத்தில் ஏற்படும். இவ்வாறு, தொடர்ந்து வாழ்த்துகளையும் வலுவூட்டிகளையும் சங்க இலக்கியம் கற்பித்தலுக்கு மாணவர்களுக்கு வழங்கும் போது சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பதில் ஆர்வம் ஏற்பட்டு பாடநூலைத் தவிர்த்து மேலும் செய்திகளை அறிந்து கொள்ள ஆர்வம் காட்டுவர். இவ்வாறு வலுவூட்டிகளைப் பயன்படுத்தும் இந்த விதியை சங்க இலக்கியக் கற்பித்தலுக்குப் பயன்படுத்த முடியும்.

**"கற்பித்தலைத் தனியாள் வேற்றுமைகளுக்கு ஏற்ப மாற்றியமைத்தல் திட்டமிட்டுக் கற்றல் அல்லது நிரல்வழிக் கற்றல் யுக்தி, கற்பித்தல் எந்திரங்கள், கணினி கொண்டு கற்பித்தல் ஆகியவைகளின் அடிப்படை ஸ்கின்னரின் செயல்படு ஆக்கநிறுத்தக் கோட்பாடாகும்."** [25]

இவ்விதிப்படி, தொடர்ந்து இலக்கியங்களைக் கற்பிக்க ஆசிரியர் பயன்படுத்தும் புதுமையான முறைகள், மாணவர்களிடம் தொடர்ந்து சென்று

சேரும் போது, ஆசிரியர் மற்றும் மாணவர்கள் அதாவது கற்றல் மற்றும் கற்பித்தல் என்ற இரு நிலைகளிலும் இந்தப் பயிற்சிகள் ஒரு நிலையான பழக்கமாக மாறி, இலக்கியங்களைக் கற்பிக்கும் ஆசிரியரின் திறமை மேம்படுவதோடு இலக்கியங்களைப் படிக்கும் மாணவர்களின் கற்றல் திறனும் மேம்படும்.

சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் போது ஆசிரியர்கள் துணைக்கருவிகளைப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு, துணைக்கருவிகளின் உதவியுடன் கற்பிப்பதையே இவ்விதி உணர்த்துகிறது. சங்கப்பாடல்களுக்கு ஏற்ற வகையில் வரைபடங்கள் வரைந்து எடுத்துச் செல்லலாம். அந்த வரைபடத்தில் பாடலின் புலவர், பாடப்பெற்ற மன்னன், பாடல், பாடலின் கருத்து, பாடலில் உள்ள சொற்களின் பொருள் போன்றவை இடம்பெறலாம். மேலும், திட்டமிட்டுக் கற்றல் என்ற புதிய உத்தியைச் சங்க இலக்கியக் கற்பித்தலுக்குப் பயன்படுத்தலாம். சங்க இலக்கியப் பாடலைக் கற்பித்த பின்னர், அதுக் குறித்த குறிப்பிட்ட வினாக்களை அட்டைகளாகவோ அல்லது சிறு தாள்களாகவோ தயார் செய்து கொள்ள வேண்டும். பின்பு, அதை மாணவர்களிடத்தில் கொடுத்து விடைகளை அறிந்து கொள்ளச் செய்தல் வேண்டும். இதனால், படித்த செய்திகளை மாணவர்கள் மீண்டும் அறிந்து கொள்ள முடியும். ஏதேனும், சந்தேகங்கள் இருந்தாலும் இந்த பயிற்சியின் போது தெளிவு பெறுவர். இவ்வாறு திட்டமிட்டுக் கற்றலானது சங்க இலக்கிய கற்றலுக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும். மேலும் கணினியைச் சங்க இலக்கியக் கற்பித்தலுக்குப் பயன்படுத்துதல் இன்றியமையாததாக கருதப்படுகிறது. வலைதளங்களின் மூலம் படப்பதிவுகளை இறக்கி மாணவர்களுக்குக் காட்டலாம். சங்க இலக்கியம் தொடர்பான செய்திகளைக் கணிணியில் பதிவேற்றி கற்பித்தலுக்கு இடையில் காட்டலாம். மேலும், சங்க இலக்கியப் பாடல்களை இசையுடன் பாடி ஒலிபெருக்கியில் கேட்கச் செய்யலாம்.

**கெஸ்டால்ட் கொள்கையினரது 'தொடர்புமாற்றம்' (Theory of Tranposition) என்ற விதிப்படி ‘‘கற்றல் மாற்றம் என்பது பலவற்றிற்குள்ள தொடர்பு ஒற்றுமைகளைக் கண்டறிந்து, இவ்வறிவைப் புதுநிலைகளில் பயன்படுத்தக்கூடிய திறனைப் பொறுத்திருக்கிறது என்று கெஸ்டால்ட் கொள்கையினர் கருதுகின்றனர். பொருளுணர்ந்து கற்றால்தான் பயிற்சி**

**மாற்றம் எழுமே தவிர நெட்டுருச் செய்தால் நிகழாது என்றும் இவர்கள் சோதனைகள் மூலம் கண்டறிந்தனர். 'ஒரு நிலைமையில் காணப்படும் பண்புகளை வேறொரு நிலைமைக்கு மாற்றுதல் பயிற்சி மாற்றத்தின் அடிப்படையாகும் என்றும் கெஸ்டால்ட் அறிஞர்கள் கருதுகின்றனர்."** [29]

இக்கோட்பாடானது, இன்றைய சூழ்நிலையில் சங்க இலக்கியக் கற்பித்தலுக்கு மிகவும் ஏற்புடையதாக அமைகிறது. மாணவர்கள் எதையும் பொருளுணராமல் மனனம் செய்வதால் அவர்களின் எண்ணத்தில் எந்த மாற்றமும் நிகழாது. எனவே, சங்கப் பாடல்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அதைப் பற்றிய அனைத்து விளக்கங்களையும் மாணவர்கள் உணரும் வண்ணம் கற்பித்தல் இன்றியமையாததாகிறது. சங்கப் பாடல்களை அதன் தனித்தன்மையோடு பொருளுணர்ந்து படிக்க மாணவர்களைப் பழக்குதல் வேண்டும். அவ்வாறு, படித்தால் மட்டுமே மேலும் பல சங்க இலக்கியப்பாடல்களைப் படிப்பதற்கு அது உறுதுணையாக இருக்கும்.

**பேக்லியின் குறிக்கோள் (Bagley's Theory of Ideals) என்ற விதிப்படி 'கற்க நாம் கையாளும் முறைகளைக் குறிக்கோள் நிலைக்கு உயர்த்தினால், நாம் எதைக் கற்கத் தொடங்கினாலும் இவை நமக்குப் பயன்படும்' என்று பேக்லி கருதுகிறார். குறிக்கோள்கள் கற்றலில் கற்போரது முழு ஈடுபாட்டிற்கு வழிவகுக்கின்றன.** [30]

எடுத்துக்காட்டாக, ஒழுங்காகச் செய்தல் என்னும் முறையை ஏதோ ஒரு காரியத்தைச் செய்யும்போது மட்டும் மேற்கொள்ள வேண்டிய முறை என்று எண்ணாமல் ஒரு குறிக்கோளாக அதைக் கொள்வேமேயானால், எக்காரியத்தை மேற்கொண்டாலும் நம்மையறியாமலேயே அதனை ஒழுங்காகக் செய்து முடிக்கத் தோன்றும்.

சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பிக்க எத்தனை வழிமுறைகளைக் கையாண்டாலும் ஆசிரியரின் ஈடுபாடு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. எனவே, சங்க இலக்கியப் பாடல்களை மாணவர்களிடத்தில் கொண்டு சேர்ப்பதை ஆசிரியர்கள் இலக்காகக் கொண்டால் மட்டுமே மேற்கண்ட அனைத்து வழிமுறைகளும் சாத்தியமாகும். எனவே, தேர்வுக்காகவோ அல்லது கடமைக்காகவோ சங்க இலக்கியங்களை மாணவர்களுக்குக் கற்பிக்காமல் உள்ளார்ந்த மனநிறைவோடு கற்பிக்க வேண்டும்.

## 2.6 சங்க இலக்கியங்களை கற்பிக்க மேலும் சில வழிமுறைகள்

இலக்கியம் கற்பித்தல் என்ற தொடர் இலக்கியத்தில் கற்பித்தல், இலக்கியத்தைக் கற்பித்தல் என்ற இரண்டு பொருள்களில் கையாளப்படுகின்றது. இலக்கியத்தில் கற்பித்தல் எனும்போது இலக்கியம் ஓர் ஊடகமாகவும் இலக்கியத்தைக் கற்பித்தல் எனும்போது மொழி ஒரு பாடப் பொருளாகவும் அமைகின்றது. தமிழாசிரியர்களின் முதன்மையான பணி இலக்கியத்தைக் கற்பிப்பதே. இலக்கியத்தைக் கற்பிப்பது என்பது வெறுமனே இலக்கியத்தின் இலக்கண விதிகளை, இலக்கிய அமைப்பினைக் கற்பிப்பது மட்டுமன்று. இலக்கியத்தை அதன் பயன்பாட்டு நோக்கில் தொடர்பாடல் கருவியாகப் பயன்படுத்தும் நுணுக்கங்களைக் கற்பிப்பதும் மற்றுமோர் இன்றியமையாத நோக்கமும் உண்டு. அது, இலக்கியம் பேசும் இனத்தை, இனத்தின் வரலாற்றை இனத்தின் பண்பாட்டைக் கற்பது என்பதுமாகும்.

தொல்காப்பியர் காலம் தொட்டு இருபத்தைந்து நூற்றாண்டுகளைக் கடந்து தமிழ்க்கல்வி இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் புதிய சவால்களை எதிர்கொண்டு நிற்கின்றது. இலக்கிய இலக்கணக் கல்வியே தமிழ்க்கல்வி. மனப்பாடம் செய்வதே வெற்றிகரமான கற்கும் முறை என்றிருந்த தமிழ்க்கல்வி வரலாற்றில் இந்நூற்றாண்டின் இணையமும் பல்லூடகமும் பல புதிய கதவுகளைத் திறந்து வைத்துள்ளன. சுவர்களுக்குள் கட்டுப்பட்டிருந்த வகுப்பறைகள் மறைந்து உலகத்தையே வகுப்பறையாக மாற்றிய பெருமை இணையத்திற்குண்டு.

**சித்திரப்பாவையின் அத்தகவு அடங்கிச்**
**செவி வாயாக நெஞ்சு களனாகக்**
**கேட்டவை கேட்டவை விடாது உள்ளத்தமைத்து (நன்னூல்)**

பாடம் கேட்ட மாணவன் உயிர்பெற்று இயக்கத்திலிருந்து ஐம்புலன்களாலும் கற்கும் காலம் கனிந்து விட்டது. தமிழாசிரியர்கள் இலக்கிய இலக்கணக் கொள்கலன்களாக இருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்த காலங்கள் பழங்கதையாகி, நவீன அறிவியல் தொழில் நுட்பத் தேர்ச்சியும் உலகு தழுவிய விசாலப் பார்வையும் கொண்டவர்களாகப் புதிய அவதாரம் எடுத்துள்ளனர்.

கற்பித்தல் என்பது ஒரு கலை. அதிலும் இலக்கியம் கற்பித்தல் என்பதனைத் தனிப்பட்ட ஒவ்வோர் ஆசிரியரின் செய்நேர்த்தியோடு கூடிய

கலையாகவே நாம் கருதுதல் வேண்டும். மொழியாசிரியர் தம் பணியின் தொடக்க காலங்களில் தாம் கற்றுக்கொண்ட ஏதோ ஓர் அணுகுமுறையில் இலக்கியக் கல்வியைத் தொடங்கினாலும் தம் பணியில் அனுபவ முதிர்வு ஏற்பட ஏற்படத் தமக்கான ஒரு கற்பித்தல் அணுகுமுறையினைத் தாமே உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். இத்தகு புதிய அணுகுமுறை அவரவர்க்கு வாய்த்த வகுப்பறைச் சூழல்களின் அடிப்படையில் உருவாக வேண்டும். இலக்கியம் கற்பித்தலின் வெற்றிகரமான பழைய அணுகுமுறைகள் பலவும் தனிப்பட்ட ஆசிரியர்கள் சிலரால் உருவாக்கப்பட்டவைகளே என்பதனையும் நினைவில் கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

ஓவியக் கலைஞனோ, சிற்பக் கலைஞனோ, இசைக் கலைஞனோ எந்த ஒரு கலைஞனும் தன் கலைத்திறமைக்குத் தேவைப்படும் சில அறிவியல் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு தன் கலையை வளர்த்துக் கொண்டாலும் அக்கலைஞனின் வெற்றி அவனது தனிப்பட்ட செய்நேர்த்தியிலும் படைப்பாற்றலிலும்தான் முழுமை பெறுகிறது. அதேபோல் ஆசிரியனும் ஒரு கலைஞனே. அவனது வகுப்பறை ஒரு கலைக்கூடமே. அவனது கற்பித்தல் ஒரு கலை வெளிப்பாடே. ஆசிரியனின் வெற்றியும் அவனது தனிப்பட்ட கற்பித்தல் நேர்த்தியிலும் தகுதியான மாணவர்களை உருவாக்கும் படைப்பாற்றலிலும்தான் முழுமை பெறுகிறது. கற்பித்தல் செய்நேர்த்தி என்பது ஆசிரியரின் ஈடுபாட்டோடு தொடர்புடையது. எத்தனை மேடைகளில் பாடியிருந்தாலும் நடனமாடியிருந்தாலும் அன்றைக்குத்தான் முதல்முறையாக மேடையேறும் கலைஞர்களைப் போல் பாடகர்களும் நடனக் கலைஞர்களும் சாதகம் செய்தோ ஒத்திகை பார்த்தோ தங்களைத் தயார் செய்து கொள்வதைப் போல் ஆசிரியர்களும் ஒவ்வொரு நாளும் கற்பிக்க வகுப்பறைக்குச் செல்வதற்கு முன் முன் தயாரிப்பில் ஈடுபட்டு ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இத்தகைய ஈடுபாடே ஆசிரியர்களின் வெற்றிக்கு முதல்படி.

### 2.7 சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதில் ஆசிரியரின் பங்கு

ஆசிரியருக்கான ஒரு சிறந்த கற்பிக்கும் கருவி பாடநூல். ஆசிரியர் நூலிலுள்ள சங்க இலக்கியப் பாடல்கள் மட்டுமல்லாது, அதனுடன் தொடர்புடைய பிற கருத்துகளையும் கூற வேண்டும். சங்க இலக்கியங்களைக் கற்பிக்க பாடநூலினை ஒரு கருவியாகப் பயன்படுத்த

வேண்டுமேயன்றி பாடநூலை மட்டும் சார்ந்து சங்க இலக்கியங்களை கற்பிக்கக் கூடாது. சங்க இலக்கியங்கள் மாணவர்கள் மனதில் ஆழமாக சென்றடைவதற்கான பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ளதைக் காட்டிலும் சங்க இலக்கியங்கள் பற்றிய அதிகப்படியான செய்திகளை மாணவர்களுக்கு எடுத்தியம்புவதை கடமையாகக் கருத வேண்டும். சங்க இலக்கியப் பாடல்களை மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது அவற்றில் காய்தல், உவத்தலின்றி, வேறு எவ்விதப் பிரச்சினைக்கும் இடம் கொடாமல் புறவயத்தன்மையோடு கற்பித்தல் அவசியமாகும். சங்க இலக்கியப் பாடல்கள், ஒவ்வொரு வகுப்பிற்கும் ஏற்ற வகையில் பாடத்திட்டத்தினையொட்டி தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்டிருப்பதற்கான காரணத்தை ஆசிரியர்கள் உணர்ந்து கற்பிக்க வேண்டும். சங்க இலக்கியப் பாடல்களைப் படித்துக் கற்பிக்கத் தயாராகும் ஆசிரியர் தம்மை மாணவர் நிலையில் வைத்து மாணவர்களுக்குப் புரியும் வகையில் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும். சங்க இலக்கியங்களைப் படிப்பதற்கு முக்கியமான இலக்கண அறிவை மாணவர்களிடம் வளர்ப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். மனப்பாடம் செய்தல் என்ற பண்டையோர் திறமையின் இன்றியமையாமையை மாணவர்களுக்கு எடுத்தியம்பி அவர்களுக்கு மனனம் செய்யும் திறமையை வளர்த்தல் வேண்டும். ஆசிரியரும் மாணாக்கருடன் உடன் இருந்து பயில்வதற்குத் தயாராக இருக்க வேண்டும். அப்போதுதான், ஆசிரியர்களிடம் மாணவர்களுக்கு நம்பிக்கை ஏற்படும். மனப்பாடம் செய்த பகுதிகளின் சொல்லும் பொருளும் எப்போதும் உள்ளத்திலும் காதிலும் ஒலித்துக் கொண்டிருக்க வேண்டுமெனில், அவற்றை அவ்வப்போது நினைவுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டும். கற்றலை இன்பம் தரும் செயலாக மாற்ற வேண்டும். மாணவர் பேசவும் தம் கருத்தை எடுத்துக்கூறவும் வாய்ப்புகளைத் தர வேண்டும்.

### 2.8 சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதில் உள்ள சிக்கல்கள்

சங்க இலக்கியப் பாடல்கள் இயற்கையோடு ஒன்றிணைந்துப் பாடப்பட்டவை. சங்க இலக்கியங்களின் வாழ்வியல் பின்புலங்கள் பாடலின் தனித்தன்மையை எடுத்தியம்புவதாக உள்ளன. இக்காலச் சூழ்நிலையில் சங்க இலக்கியப் பாடலுக்கேற்ற இயற்கை சூழ்நிலையையோ, வாழ்வியல் கூறுகளையோடு மாணவர்களிடத்தில் காட்சிப்படுத்துதல் என்பது சிரமாமான

செயலாக உள்ளது. அக்கால மாந்தர்களின் சூழ்நிலையை இன்றைய மாணவர்களிடத்தில் காட்சிபடுத்துவது பெரிய இலக்காக உள்ளது. இன்றைய மாணவர்கள் எந்த ஒரு செய்தியையும் ஆராய்ச்சியின் வெளிப்பாடாகவே நம்பும் சூழ்நிலையில், சங்க இலக்கியங்கள் பற்றிய ஆதாரங்கள், புத்ததகமாக மட்டுமே உள்ளது. இதனால், மாணவர்களிடம் சங்க இலக்கியங்கள் மீது நம்பிக்கை வரவழைப்பது சற்று கடினமாக உள்ளது. இன்றைய நடைமுறையில் இருக்கும் தமிழ் சொற்களுக்கும் சங்க இலக்கிய தமிழ்ச்சொற்களுக்கும் மிகுந்த வேறுபாடு உள்ளதால், சங்க இலக்கியங்களின் மீது ஆர்வம் ஏற்படுவது கடினம். தமிழில் வழக்கில் உள்ள சொற்களைக் கற்பதற்கே மாணவர்கள் சிரமப்படும் சூழ்நிலையில், வழக்கிழந்த சொற்கள் அதிகம் உள்ள சங்க இலக்கியப் பாடல்களைக் கற்கும் போது விரைவில் சோர்வடைந்து விடுகின்றனர். பெரும்பாலும், சங்க இலக்கியப் பாடல்களைக் கற்பிக்கும் போது, ஆசிரியர்கள் சங்க இலக்கிய நிகழ்வுகளுக்கும் விளக்கங்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதால் சங்கப்பாடல்களில் அதிகக் கவனம் செலுத்த முடிவதில்லை. இன்றைய கல்விச் சூழ்நிலை மதிப்பெண்ணுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக அமைவதால், வினாத்தாள்களுக்கு ஏற்றவகையில் சங்க இலக்கியங்களையும் ஒரு மதிப்பெண் கூறாகக் கொண்டு ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. அதனால், சங்க இலக்கியங்களின் தனித்தன்மை மாணவர்களிடத்தில் சென்று சேருவதில்லை. மேலும், தமிழ்ப் பாடத்திற்குரிய பாடவேளையில் பாடங்கள் அனைத்தையும் குறித்த நேரத்தில் முடிக்க வேண்டிய கட்டாயத்தில் ஆசிரியர்கள் செயல்படுவதால், அவர்கள் செய்ய நினைக்கும் சில புதுமை நிறைந்த கற்பித்தலுக்கு நேரமில்லாமல் போகிறது. மேலும், பல பள்ளிகளில் நிர்ணயிக்கப்படும் பல கட்டுப்பாடுகளை மீறி ஆசிரியர்களால் கற்பித்தலில் தேவையான உத்திகளைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலையும் ஏற்படுகிறது. சங்க இலக்கியங்கள் என்பது பெரும்பாலும், மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் ஆசிரியர்களுக்கும் ஒரு சவாலான ஒரு பாடமாக இருப்பதால், ஆசிரியர்களின் அனுமதியோடு மாணவர்கள் அதை ஒதுக்கிவிடும் சூழ்நிலையும் ஏற்படுகிறது. இன்று தனியார் பள்ளிகளும் ஆங்கில வழிப் பள்ளிகளும் அதிகமாகிவிட்ட சூழ்நிலையில், தமிழின் தரம் குறைந்து வருவதோடு தமிழ் மீது மாணவர்களுக்கு உள்ள ஆர்வமும் குறைந்து வருகிறது. இச்சூழ்நிலையில் சங்க இலக்கியங்களின் தனித்தமிழை மாணவர்கள் கற்பது கட்டாயப்படுத்த வேண்டிய ஒன்றாக

உள்ளது. இதனால், மாணவர்களுக்கு சங்க இலக்கியங்களின் மீது மிக எளிதாக வெறுப்பு ஏற்பட்டு விடுகிறது. தமிழ் மற்றும் தமிழ் சார்ந்த போட்டிகள், மன்றங்கள், செய்திகள் போன்றவற்றிலும் தமிழ் செய்யுள்களான திருக்குறள் போன்றவற்றிற்கு இடம் அளிக்கப்படுகிறதே தவிர, சங்க இலக்கியங்களுக்கு இடம் அளிக்கப்படுவதில்லை. அதனால், மாணவர்கள் சங்க இலக்கியம் படிப்பதற்கான அவசியம் இல்லை என எண்ணும் சூழ்நிலை ஏற்படுகிறது. இக்காலங்களில் சமகால இலக்கியங்களுக்கு கிடைக்கும் முக்கியத்துவமும் ஈடுபாடும் சங்க இலக்கியங்களுக்குக் கிடைப்பதில்லை. சங்க இலக்கியத்தில் உள்ள சூழலுக்கும் தற்கால சூழலுக்கும் மிகுந்த வேறுபாடு உள்ளதால், மாணவர்கள் அக்கால சூழ்நிலையை ஏற்க வேண்டிய கட்டாயம் இல்லை என எண்ணுகின்றனர்.

## 2.9. முடிவுரை

இவ்வியலில், சங்க இலக்கியங்களில் அறிந்திருக்க வேண்டிய பொதுப்பண்புகள் என்ற தலைப்பில், அகம் புறத்தைப் பொருளாகக் கொண்டிருத்தல், அகத்திணைப் பாடல்களின் மரபுகள், புறத்திணைப் பாடல்களின் மரபுகள், பன்முகக் கூறுகள் மற்றும் உத்திகள், சொற்செறிவும் பொருட்செறிவும், அகவல் வஞ்சி யாப்புகளைக் கொண்டிருத்தல், தனிநிலைச் செய்யுட்களாக அமைதல் ஆகிய துணைத் தலைப்புகளின் கீழ் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. அடுத்து, சங்க இலக்கியங்களில் கற்பிக்க வேண்டிய முக்கியக் கூறுகள் என்ற தலைப்பின் கீழ், இலக்கியங்களுக்கே உரிய ஓசை நயம், இலக்கியங்களுக்குரிய சொற்களைப் பிரித்துப் படித்தல், இலக்கியங்களின் சொற்செறிவு பொருட்செறிவு, சொல்லாட்சித்திறன், எதுகை, மோனை, திணை, துறை போன்ற இலக்கியக் கூறுகள், பொருள் உணர்ச்சிக்கேற்ற குரல் ஏற்றத்தாழ்வு, நாநெகிழ் நாபிறழ் பயிற்சி, இலக்கியச் சொற்களைத் தொடர்களாக்குதல், கருத்தால் ஒத்த பிற பாடல்கள், இலக்கியங்களின் விழுமியங்கள் ஆகிய துணைத் தலைப்புகளின் கீழ் செய்திகள் ஆராயப்பட்டுள்ளன. அடுத்து, சங்க இலக்கியங்களை கற்பிக்கும் உத்திகள் என்ற தலைப்பின் கீழ், பாடப்பொருளுக்கு ஏற்றவாறு ஆர்வப்படுத்துதல், பகுதியிலிருந்து முழுமைக்கு செல்லல், முழுமையிலிருந்து பகுதிக்குச் செல்லல், துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல், இசையுடன் பாடுதல், நடித்துக் காட்டுதல், குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்தல், மாணாக்கரைப் பங்கெடுக்கச் செய்தல், நினைவூட்டுதல், ஒப்புமைப்படுத்திக்

கற்பித்தல், தொடர்புடைய செய்திகள், நிகழ்வுகள், வரலாறுகள் ஆகியவற்றைக் கூறுதல், எளிய படங்கள் வரைதல், மாணவர்-புலன்களுக்குப் பயிற்சி அளித்தல், விளையாட்டு முறையில் கற்கத் தூண்டுதல், நாட்டுநடப்புச் செய்திகளை அறிந்து கூறுதல், பள்ளிச் சூழலில் அமைந்துள்ள பொருட்களைப் பயன்படுத்தல், அறிந்ததிலிருந்து அறியாததற்குச் செல்லுதல், எளிமையிலிருந்து அருமைக்குச் செல்லுதல், தெளிவிலிருந்து சிக்கலுக்குச் செல்லுதல், தொடர்புடைய நூல்களைப் படிக்கச் செய்தல் ஆகிய துணைத் தலைப்புகளின் கீழ் கருத்துகள் கொடுக்கப்பட்டுள்ளன. அடுத்து, கற்பித்தல் கோட்பாடுகளின் அடிப்படையில் சங்க இலக்கியங்களைக் கற்பிக்கும் உத்திகள் என்ற தலைப்பில், தார்ண்டைக்கின் முயன்று தவறிக் கற்றல் கோட்பாடு, பாவ்லோவின் ஆக்க நிலையிறுத்தக் கோட்பாடு, ஸ்கின்னரின் செயல்பாடு ஆக்க நிலையிறுத்தக் கோட்பாடு, கற்றல் - கற்பித்தலில் ஏற்பட்ட மாற்றம், முழுமைக்காட்சிக் கோட்பாடு, உட்காட்சி வழிக்கற்றல், பொதுமைப்படுத்துதல் கோட்பாடு, கெஸ்டால்ட் தொடர்புமாற்றக் கோட்பாடு, பேக்லியின் குறிக்கோள் கோட்பாடு ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் சங்க இலக்கியங்களைக் கற்பித்தல் முறைகள் விளக்கப்பட்டுள்ளன. அதன் பின்பு, சங்க இலக்கியங்களை கற்பிக்க மேலும் சில வழிமுறைகள், சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதில் ஆசிரியரின் பங்கு, சங்க இலக்கியங்களைக் கற்பிப்பதில் உள்ள சிக்கல்கள் ஆகிய தலைப்புகளின் கீழும் கருத்துகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**சங்க இலக்கியங்கள்: கற்பித்தல் முறைகள் மதிப்பீடு** என்ற தலைப்பில் உள்ள மூன்றாவது இயலில் தகவலாளிகளிடமிருந்து வினாநிரல் வாயிலாகப் பெறப்பட்ட தகவல்களை பள்ளி, அமைவிடம், கற்பிக்கும் வகுப்பு, பாலினம், வயது, அனுபவம், பயிற்று மொழி ஆகியவற்றின் அடிப்படையில் பகுத்தாராய்ந்து, அதன் மூலம் பெறப்பட்ட உண்மைகள் ஆராய்ந்து விவாதிக்கப்படுகின்றன.